100 ஜெபத்திற்கான ஆச்சரியமான பதில்கள்

ஆக்கியோர்
வில்லியம் J. பீட்டர்சன்
ரேண்டி பீட்டர்சன்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

120/-

100

ஜெபத்திற்கான ஆச்சரியமான பதில்கள்

வில்லியம் J. பீட்டர்சன்
ரேண்டி பீட்டர்சன்

WORD OF CHRIST
CHENNAI, INDIA

100 ஜெபத்திற்கான ஆச்சரியமான பதில்கள்

100 Amazing Answers to Prayer (Tamil)
by William J. Petersen, Randy Petersen

Copyright © William J. Petersen, Randy Petersen

ISBN: 978-93-82134-96-1

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means-electronic, mechanical, photocopying, recording, or otherwise-without the prior written permission of the publisher. The only exception is brief quotations in printed reviews.

Translated into Tamil by Mrs Sweetlin Christopher & Mrs Olive Francis

First Edition - 2013

Published by:
WORD OF CHRIST MINISTRIES
No. 100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road, Kellys
Chennai 600 010 Tamil Nadu, India
Phone: 044 - 2661 3242 / 4264 0111
E-Mail ID: info@wordofchrist.org
Website: www.wordofchrist.org
Printed at Chennai, India.

Price: Rs 120/-

பொருளடக்கம்

1. ஆச்சரியமான நமது கர்த்தர் / 1

2. நெருக்கடியான நேரங்களில் ஜெபம் : முக்கிய நிகழ்வுகள் மத்தியிலே தேவன் எவ்வாறு கிரியை செய்கிறார் / 7

■ காபூல் தாலிபன் சிறைச்சாலையைத் திறத்தல் ■ ஒக்லகாமா நகரம்:– ஜெபத்தை மீறி செயல்பட என்னால் இயலவில்லை ■ கிழக்கு ஜெர்மனி ஏன் குறுக்குச் சுவர் இடிந்து விழுந்தது? ■ பெய்ரூட்– நானும் தேவனும் மட்டும் ■ பேர்ல் துறைமுகம் 'பிதாவே அவர்களை மன்னியும்' ■ மாஸ்கோ: "நாம் எப்படிப்பட்ட தேவனை சொந்தமாகக் கொண்டுள்ளோம் ■ சுரங்கத் தொழிலாளிகளுக்காக ஜெபியுங்கள் ■ கேப்டவுன் நிறவெளியின் முடிவு

3. தேவன் எதிர்பார்க்காதவைகளைச் செய்யும் பொழுது ஆச்சரியம் ஆச்சரியம் / 35

■ விசுவாசத்தினால் ஓர் மலையைப் பெயர்த்தல் ■ ரோதைவின் மிகப்பெரிய பிரமிப்பு ■ ஜெபத்தின் பலனாய்க் கிடைத்த வாழைக்குலை குழுவின் ஜெபத்திற்கு பதில் ■ ரஷ்யாவில் உணவக அறையில் நடந்தபணி ■ ஒரு காற்றாலையை தேவன் சுகமாக்கின பொழுது ■ மர்மமாக டெலிபோன் அறை ■ லீஸ் லெம்கி என்ற சிறுவனின் மறைக்கப்பட்ட தாலந்துகள் ■ பாரசீக வனாந்தரத்தில் ஓர் அற்புதக்கிணறு

4. நீங்கள் ஆரம்பித்ததை நோக்கிப் பாருங்கள் : சில நேரங்களில் சிறிய ஜெபங்களுக்கு மிகப்பெரிய பதில்கள் கிடைக்கின்றன / 57

■ அவர்கள் ஜெபத்தை அறியாதவர்கள் ■ ஹெப்ரைட்சைச் சேர்ந்த இரு பெண்மணிகள் ■ நியூயார்க் நகரத்தில் எழுப்புதலை உண்டாக்கிய மனிதர் ■ ஒலா கல்பெப்பரும் அவளது பார்வை நரம்பு பாதிப்பும் ■ பாதரட்சைகள் அடிப்பாகத்திலிருந்து ஆத்துமாக்கள் வரை ■ ஒய். எம். சி. ஏ.யில் உள்ள 'சி' ■ நம்மால் செய்ய இயலாத மிகப்பெரிய காரியங்கள் ■ வேதாகமமும் காட்டு வான்கோழியும் ■ வைக்கோல் போரில் அவர்கள் கண்டுபிடித்தது

5. நீண்ட தூரமா! தேவனுக்கு அது பொருட்டல்ல / 85

▪ ஐவரி கோஸ்டில் நடந்த ஆள் கடத்தல் ▪ படுத்த படுக்கையாயிருந்த பெண்ணின் ஆவிக்கேற்ற வல்லமை ▪ டைட்டானிக் கப்பலின் மூழ்குதல் ▪ வலையில் தங்கி இரு ▪ வியட்நாமிற்காக ஓர் வேதவசனம்

6. பதில் சரியான நேரத்தில் வருகிறது : காலம் கடந்து விடுமோ என்று எண்ணும் தருணத்தில், ஒரு வினாடிக்கு முன்பு தேவனுடைய பதில் வருகிறது / 99

▪ மேகத்தால் காக்கப்பட்டோம் ▪ ஃபோர்ஜ் பள்ளத்தாக்கில் நடந்த அற்புதம் ▪ லிவிங்ஸ்டனின் சிங்கம் ▪ ஹெர்னியா பட்டணம் மீட்கப்படல் ▪ ரிக்கன் பேக்கரும் கடற்பறவையும் ▪ ரொட்டி செய்பவரால் ஏன் தூங்க இயலவில்லை

7. மிகச் சாதாரண பொருட்களிலிருந்து.... : சாதாரண எளிமையான பொருட்கள் கூட தேவனுடைய கருவிகளாக முடியும் / 119

▪ ஜான் எனக்கு மூன்று பழுத்தத் தக்காளிப் பழங்கள் வேண்டும்
▪ ஏஞ்சல் புட் கேக்குகளைப் பற்றி தேவன் கவலைப்படுகிறாரா?
▪ தேவனே இன்று மதியம் எங்களுக்கு சுடு தண்ணீர் பாட்டிலை அனுப்பியருளும் ▪ ஓர் சிறிய பறவையைப் பின்பற்றிச் செல்லுதல் ▪ நீல மேல் சட்டைகளும் மின்னும் நீல ஒளி விளக்கும் ▪ சரியாக ஐந்து கிலோ உருளைக்கிழங்குகள் ▪ அன்பே, அந்த நீல போனட் மலர்களை வாங்குவோம்

8. எல்லாரும் வானிலை பற்றி பேசுகின்றனர். ஆனால். . . . இயற்கை சூழலில் அற்புதங்கள் / 139

▪ யாத்ரீகர்களின் காலநிலை அறிவிப்பு ▪ ஆஸ்ட்ரூப்புடைய மழை
▪ பிரஞ்ச் நாட்டின் படையெடுப்பு நிகழாமல் நின்றுவிட்டது ஏன்?
▪ கிறிஸ்தவர்கள் குடைகளை எடுத்து வந்தார்கள் ▪ தேவன் எவ்வாறு டி. டே ஜெபத்திற்கு பதில் அருளினார் ▪ மூடுபனியில் ஜார்ஜ் முல்லர்
▪ மே–ஹ்வா தீவில் மெய்க்வா தீவும்

9. காணாமற்போன ஆடுகளும் தேடுகின்ற மேய்ப்பரும் ஜெபத்திற்குப் பதிலளித்து மனம்மாறிய சிறப்பான சம்பவங்கள் / 155

▪ புகைப்பட பகுதியில் கண்ட முகம் ▪ ஆப்பிரிக்கர் சந்ததியினருக்கு உதவும் சங்கமும் இரகசிய இனவெறியாளர் கழகமும் ▪ தாய்மார்கள் ஜெபிக்கும்பொழுது என்ன நிகழ்கின்றது? ▪ சிறிய பிள்ளியின் ஜெபங்கள் ▪ மொர்தெகாய் ஹாம் அடைந்த மனச்சோர்வு ▪ துப்பறியும் நிபுணருக்கு போதிய உடைகள் இல்லை ▪ அவர் ஐம்பத்திரண்டு ஆண்டுகளாக ஜெபித்து வந்தார் ▪ அந்த அற்புதம் நிகழவில்லை ▪ அவர் அதனை முன்பே கேட்டிருந்தார்

10. நீங்கள் அறிந்திருக்கக் கூடிய சில மனிதர்கள் : ஜெபத்திலேயே சார்ந்து வாழும் புகழ் பெற்ற மனிதர்கள் / 181

▪ சகோதரர் ஆன்ரூவின் ஜெபம் ▪ பில் பிரைட்டின் ஜெபம்
▪ அன்னை தெரசாவின் ஜெபம் ▪ பில்லி கிரகாமுடைய ஜெபம்:
▪ பிரான்சிஸ் ஸ்ஹேஃபருடைய ஜெபம் ▪ கேத்தரின் மார்ஷலுடைய ஜெபம்
▪ சி.எஸ். லூயில் அவர்களுடைய ஜெபம் ▪ சார்லஸ் கோல்சனின் ஜெபம்

11. யாருக்கு கோடீஸ்வரராக இருக்க தேவை உள்ளது? தேவன் தாமே அவர்கள் தேவைகளை தந்து ஆதரிக்கின்றார் / 205

▪ இரண்டு வண்டி நிறைய கால்நடைகள் விற்பனையால் காக்கப்பட்ட இறையியல் கல்லூரி ▪ பில்லி பிரேவுக்கு மர அலமாரியை கொண்டு வர உதவியவர் ▪ தீர்மானம் எடுக்கும் வேளைக்காக தீர்மானம் எடுத்த நேரம் ▪ அந்த இரும்பு அடுப்பு ▪ அற்புதங்கள் நிகழாமல் நின்று விட்டனவா? ▪ சிறந்த அஸ்திபாரத்தின் மேல் கட்டுதல் ▪ இயேசுவிடம் அடிக்கடி கேளுங்கள் ▪ சுவை மிக்க தின்பண்டங்கள், 'சிப்ஸ்' வகைகள்.
▪ நான் எப்படி இதற்குள் வந்தேன்?

12. தேவ தூதர்கள் அவ்விதமாக காணப்படுவார்களென்று அறியாமல் இருந்தேன் : விசித்திரமான இடங்களில் செயல்படும் தேவதூதர்கள் / 229

▪ தேவதூதர்களின் பாதுகாப்பில் காவல்துறை அதிகாரிகள்

▪ மறைத்து வைக்கப்பட்ட வேதாகமம் ▪ தேவனுடைய சேனைகளால் காத்துக்கொள்ளப்பட்டவர்கள் ▪ உனக்கு எப்பொழுது பாதுகாப்பு தேவை என்பது உனக்குத் தெரியாது ▪ மேகங்கள் நடுவில் பாடல்கள் ▪ தேவதூதர்களுக்கு ஒப்பான சரியான தூதர்கள் அல்ல இவர்கள்.. ▪ அதிக ஆழமுள்ள மலை ஆற்றோடை

13. எஜமானுடைய கரத்தின் தொடுதல் : தேவன் அற்புத சுகமளிக்கும் போது . . . / 249

▪ விலைமாதர்களுக்காக ஜெபிப்பதில் முனைப்பு ▪ குணப்படுத்தும் நீதிபதி ▪ குதிரைக்காக நீங்கள் ஜெபிப்பீர்களா? ▪ தன் குரலை இழந்த பாஸ்டர் ▪ குணமாக்க தயக்கத்தோடு ஜெபித்தவர் ▪ உன்னால் முடியாது என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவள் செய்தாள் ▪ மரித்த கெவ் சோஎன் உயிரோடு எழுந்த நிகழ்ச்சி ▪ எங்களால் உன்னை விட்டுக்கொடுக்க முடியாது ▪ *"I H O P"* க்கு போ

14. சாலையின் வழிகாட்டும் வரைபடம் கூட குழப்பமாக இருக்கும் பொழுது : உனக்குமுன் பார்க்கும் இடமெல்லாம் மதில்கள் போன்ற தடைகள் இருந்தபொழுது தேவன் எப்படி வாசல்களைத் திறந்தார் / 275

▪ ஒரு சிறிய பெண்ணிற்குப் பெரிய கட்டளை ▪ பெற்றி கிரீனும் அவள் பறக்கும் இயந்திரமும் ▪ பேஸ்பால் அடிக்கும் மட்டை அவர் காரில் இருந்தது ▪ திரும்பி போவதற்கு இதுவா தருணம்? ▪ திருவாளர் சிருஷ்டி கர்த்தாவே! நிலக்கடலையை சிருஷ்டித்தது யார்? ▪ இவை எல்லாவற்றையும் விட்டு விலகவேண்டும் ▪ ரோஸின் உயர்வு ▪ மலைகள் உயிரோட்டமுள்ளவை

1

ஆச்சரியமான நமது கர்த்தர்

சர்வ வல்லமையுள்ள தேவனிடம் சில காரியங்களைக் குறித்து விண்ணப்பிக்கும்பொழுது அவர் நிச்சயமாக நமது விண்ணப்பங்களை நிறைவேற்றுவார். அந்த எண்ணத்தை நாம் எங்கிருந்து பெற்றோம்? வேதாகமத்திலிருந்து தான் நாம் அந்த எண்ணத்தைப் பெற்றோம். எலியாவின் ஜெபத்தினால் வானத்திலிருந்து அக்கினி இறங்கியது. எசேக்கியாவின் ஜெபத்தினால் அவருடைய ஆயுசு நாட்களோடு பதினைந்து ஆண்டுகள் கூட்டப்பட்டது. 'கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்று இயேசு வாக்குப்பண்ணியுள்ளார். 'உங்களது வேண்டுதல்களை விண்ணப்பங்களை தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்' என்று பவுல் கூறுகிறார். "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" என்ற யாக்கோபு கூறுகிறார்.

ஆகவே ஜெபம் கிரியை செய்கிறது. ஜெபம் கிரியை செய்யவேண்டும். இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள நூறு உதாரணங்கள் அந்த உண்மையை நிரூபிக்கும். உங்களுக்கு போதுமான நேரமும் ஆதாரங்களும் கிடைத்தால், இதுபோல ஆயிரக்கணக்கான உதாரணங்களை நீங்கள் கண்டுபிடிக்க இயலும். கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்பொழுது கிரியைகள் நடப்பிக்கப் படுகின்றன. அதிலும் விநோதமான காரியங்கள் நடைபெறுகின்றன. உங்களைச் சிரிக்க வைக்கும் நிகழ்வுகளாக இருக்கும். சில இப்படியும் நடக்க இயலுமா என்று உங்களது உள்ளம் திகைக்க வைக்கும்.

ஜெபம் நிச்சயமாக கிரியை செய்கிறது என்று நாம் கூறும்பொழுது,

மிகவும் ஆபத்தான எல்லைப் பகுதிக்குள்ளாகச் செல்கின்றோம். ஜெபம் என்பது ஏதோ ஓர் மந்திர விளக்கிலிருந்து கிளம்பும் ஓர் தேவதை கேட்பதை எல்லாம் கொடுக்கும் என்று கதையில் நாம் வாசிப்பதுபோல ஜெபத்தையும் நாம் எண்ணினால், ஜெபத்தின் உண்மையான காரியத்தை நாம் தவறவிட்டு விடுகின்றோம். நாம் விரும்புவதைப் பெற்றுக்கொள்வதற்காக மட்டும் ஜெபத்தை பயன்படுத்தக்கூடாது. நமது தேவைகள், விருப்பங்கள் அனைத்தையும் குறித்துக் கரிசனை கொண்ட வரும் நம்மைக் குறித்து உணர்வூட்டும் திட்டங் களையும் வைத்திருக்கிற தேவனோடு நம்மை இணைப்பதே ஜெபமாகும். அவர் மேலும், ஆச்சரியப்படத்தக்க பலத்திட்டங்களை நமக்காக வைத்துள்ளார்.

இந்த நூறு உதாரணங்கள் மூலமாகவும் நீங்கள் அந்த உண்மையைத்தான் அறிந்துகொள்ள இருக்கிறீர்கள். இந்த ஜெபங்கள், தாங்கள் ஆவலோடு விரும்புகின்ற காரியங்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பண்ணப்பட்ட ஜெபங்கள் அல்ல. அந்த ஜெபங்கள் தேவனோடு அடிப்படையாக ஒரு உறவினை உண்டாக்கவும் தொடர்ந்து அதை நடைமுறைப்படுத்துவதற்கும் ஏறெடுத்த ஜெபங்களாகும். நெருங்கிய உறவில் அவர்களுடைய விருப்பமும் தேவையு மெல்லாம் தேவன் என்ன செய்ய விரும்புகிறார். அவர் எதைக் குறித்துக் கரிசனை உள்ளவராக இருக்கிறார் என்பதை அறிந்து செயல்படுத்துவதிலேயே இருந்தது.

தேவாதி தேவனை ஓர் பெட்டிக்குள் நீங்கள் அடைத்து வைக்க இயலாது ஓர் பெட்டி அவரைக் கொள்ளாது. ஓர் பொத்தானை அழுத்தினால் வேலை செய்யக்கூடிய ஓர் எந்திரத்தைப்போல அவரை மாற்ற முயற்சி எடுத்தீர்கள் என்றால், நிச்சயமாக நீங்கள் ஏமாற்றம் அடைவீர்கள். அனைத்து வகை மக்களும் ஊக்கமான ஜெபத்திற்கு ஓர் விளக்கம் கொடுக்க முயன்றுள்ளார்கள். ஜெபிக்கும் பொழுது, நீங்கள் முழங்கால் படியிட வேண்டுமா? கண்களை மூடவேண்டுமா? தலையைக் கவிழ கைகளைக் கட்டிக்கொள்ள வேண்டுமா அல்லது ஜெபத்தின் முடிவில் ‘இயேசுவின்’ நாமத்தில் ஆமேன் என்று சொல்லவேண்டுமா என்ற பல்வேறு கருத்துக்கள் உண்டு. மேலே கூறப்பட்ட காரியங்களைச் செய்வதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் அவைகளைச் செய்வதால், நாம் தேவனுடைய கரங்களை வளைத்து செயல்பட வைக்க இயலாது. தங்களது (வீண் வார்த்தைகளாலும்) தங்களது ஜெபம் கேட்கப் படும் என்று எண்ணின அஞ்ஞானிகளைப்பற்றி இயேசு கூறினார். நாமும் கூட அப்படிப்பட்ட மூடநம்பிக்கையின் மேல் பற்றுள்ளவர்களாகவே காணப் படுகிறோம்.

வல்லமையான ஜெபம் தேவனோடுள்ள நெருங்கிய உறவினை அடிப்படையாகக் கொண்டது. சிலவேளைகளில் பொத்தானை அழுத்தினால், பதில் கிடைக்கக்கூடிய சில ஜெபங்களைப் பண்ணலாம். ஆனால் நாம் வேண்டிக்கொண்டதைவிட மிக அதிகமாகப் பெறலாம். ஏனெனில் தேவன் ஓர் தெய்வீக உக்கிராணக்காரர் அல்ல. தேவன், அவருக்கு விருப்பமான முறைகளில் நேரங்களில் ஜெபங்களுக்கு பதில் அளிக்கிறார். அவர் பதில் அளிப்பதன் மூலம் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார்.

நமது ஜெபம், விசுவாசமுள்ள ஜெபமாக இருக்க வேண்டும் என்று இயேசு அடிக்கடி கூறியுள்ளார். "பெற்றுக்கொண்டோம்" என்று விசுவாசியுங்கள் என்று இயேசு அடிக்கடி நமக்கு நினைப்பூட்டியுள்ளார். சிறிய கடுகு விதையளவு விசுவாசம் மலையையே பெயர்த்துவிடும். அப்படியெனில் நமது ஜெபங்களுக்கு சிலவேளை பதில் கிடைக்காவிட்டால், நம்மில் சிலருக்கு அந்த சிறிய கடுகு விதையளவு கூட விசுவாசம் இல்லை என்று அர்த்தமா? சிலர் அப்படித்தான் என்று கூறுவார்கள். ஆனால் நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

அப்படிப்பட்ட அணுகுமுறை நாம் மிகவும் ஆழமாக விசுவாசித்தால் தான் நமது விண்ணப்பத்திற்கு பதில் கிடைத்தது என்று நம்மை எண்ண வைத்து நமக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக உள்ளது. அநேகக் கிறிஸ்தவர்கள் மன ரீதியாக, ஆன்மீக ரீதியாக பல்வேறு பயிற்சிகள் செய்து தங்களது விசுவாசம், அசைக்கமுடியாத, மிக உறுதியான, சிறிய சந்தேகம் கூட இல்லாத பூரண விசுவாசம் என்று உறுதிப்படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள். ஆனால் தேவன் எப்பொழுதும் தம்முடைய கிருபையின்படி இரங்குகிறார். "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்க எனக்கு உதவி செய்யும்" என்று கேட்டுக்கொண்ட மனிதனுக்கு ஓர் அற்புதத்தை நிகழ்த்தினார்.

விசுவாசம் என்பது ஒரு மின் விளக்கின் ஸ்விட்சைப் போன்றது. விளக்கின ஸ்விட்ச் எப்படி விளக்கை எரிய வைக்கிறது? ஆம், அது விளக்கை எரியவைக்கும் சாதனமாக உள்ளது. ஆனால், அது அந்த விளக்கு எரிய தேவையான மின் சக்தியை உற்பத்தி செய்யவில்லை. மின் சக்திதான் அந்த விளக்கை எரிய வைக்கிறது. அந்த ஸ்விட்சை தட்டினவுடன் அந்த விளக்கு எரிய வேண்டிய மின் சக்தியானது அந்த விளக்குக்குள் சென்று அதை எரிய வைக்கின்றது. இதே முறையில் தான் விசுவாசம். செயல்பட வேண்டிய சூழ்நிலைகளில், தேவனுடைய வல்லமையை செயல்பட வைக்கின்றது. விசுவாசமுள்ள ஜெபம், ஜெபிக்கும் அந்த மனிதரின் ஆவிக்கேற்ற வல்லமை

யினால் கிரியை செய்யவில்லை. அதற்கு மாறாக, தேவனுடைய வல்லமை யினால் கிரியை செய்வதாக உள்ளது. விசுவாசம் ஸ்விட்சை மட்டும் தட்டி விடுகிறது. "விசுவாசத்தினால் கிருபையைக் கொண்டு இரட்சிக்கப் பட்டோம்" என்று பவுல் கூறுகிறார். கிருபை, வல்லமையை அருளுகிறது. விசுவாசம் அதைச் செயல்பட வைக்கின்றது.

வேதாகம அடிப்படையிலான விசுவாசம் தனி மனிதனிற்குரியது. விசுவாசம் என்பது அதை நம்புவதைவிட மேலானது. அது விசுவாசத்திற்குள் பிரவேசிப்பதாகும். ஓர் குறிப்பிட்ட நாற்காலி வலிமையானது என நான் நம்பலாம். ஆனால் அதன்மேல் உட்கார்ந்த பின்பு தான் அதை நம்புவேன். அதுபோல, தேவன், ஜெபத்திற்கு பதிலளிப்பார் என்பதை நான் நம்பலாம். ஆனால், பதில் கொடுக்கும் தேவனின் நன்மையான குணத்தின் மீது நான் நம்பிக்கை உள்ளவனாக இருக்கின்றேனா?

இப்படிப்பட்ட விசுவாசம், நாம் அதைத் திறமையாக கையாளுவதைப் பொறுத்ததல்ல. விசுவாசமுள்ள சில மந்திரங்களை நீங்கள் உச்சரித்த உடனே, உங்களுக்கு பதில் கிடைக்கச் செய்யக்கூடிய ஓர் எந்திரமல்ல, நமது தேவன் நமது ஜெபத்தில், நாம், நமது ஆசை விருப்பங்களை "தேவனே, இதோ இவைகள் தான் என் இருதயத்தில் உள்ளது" என்று அவரிடம் ஒப்படைப்பு செய்வதே உண்மையான ஜெபமாகும்.

இது, மறுபடியும் உறவுக்குள் நம்மை அழைத்துச் செல்கிறது. நமது விண்ணப்பங்கள், துதியோடும், நன்றியோடும், மன்றாட்டோடும், கூடியதாக தேவனோடு நாம் கொள்ளும் நெருங்கிய தொடர்பாக உள்ளன. நமக்கு நெருங்கிய நண்பர்களிடம் நமது வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றிய விசாரங்களை பகிர்ந்துகொள்வதுபோல, உள்ளது. ஆனால் தேவனின் மகாப் பெரிய வல்லமையை உணர்ந்து, நமது வாழ்க்கையில் தேவனே வல்லமையாகக் கிரியை செய்ய வேண்டுகிறோம். நாம் விரும்புகிற விளைவுகள் கிடைக்கவேண்டும் என்று விண்ணப்பிக்கலாம். ஆனால், அவருக்கு நம்மைவிட மிகச் சிறந்த எண்ணங்கள் இருக்கலாம்.

தேவன் நாமே நமது விண்ணப்பங்களை சரிபார்த்து, நமக்கு உண்மையிலேயே எது நன்மையானதோ அவற்றை மட்டும் கொடுக்க நாம் அவரையே சார்ந்திருப்போம். நமக்கு எப்படி வேண்டிக்கொள்ளவேண்டும் என்று சரியாக தெரியாது. ஆனால் தேவனுடைய ஆவியானவர் தாமே நமது

விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களை சிறந்த தன்மையில் மாற்றி அமைக்கிறார் என்று பவுல் அப்போஸ்தலன் அநேக ஆண்டுகளுக்கு முன்பே கூறியிருக்கிறார். ஆகவே ஜெபத்துடன் கூடிய விசுவாசமானது நாம் கேட்டுக்கொண்டதை தேவன் கொடுப்பார் என்ற நம்பிக்கையல்ல, ஆனால், அவர் நமது விருப்பங்களைக் கேட்டு நமக்கு நன்மையானது எதுவோ அதையே நமக்குச் செய்கிறார் என்ற நம்பிக்கையே ஆகும்.

இந்தப் புத்தகத்தில் நீங்கள் வாசிக்க இருக்கும் கிறிஸ்தவர்களின் ஜெபங்களுக்கெல்லாம் தேவனால் பதிலளிக்கப்பட்டது. ஆகவே இவர்களை விசுவாச வீரர்கள் என்று நீங்கள் போற்றுவீர்களா? அப்படியல்ல. இங்கு மிகவும் புகழ்பெற்ற கிறிஸ்தவர்களுடைய ஜெபங்களும் நற்பணியார்கள் கொல்லப்படல், மேலும் அநேக மிகச் சாதாரண மக்களும் சேர்க்கப் பட்டுள்ளனர். உண்மையில் இவர்கள் அனைவரும், மிகச்சிறந்த விசுவாசமுள்ள மக்கள், அவர்கள் தங்களுக்கு பதில் அளிக்கும் ஆண்டவரின் கிருபையையே மையமாக வைத்திருந்தார்களே ஒழிய விண்ணப்பிப்பவர்களின் நற் குணங்களால் தான் பதில் கிடைத்தது என்று எண்ணாதவர்கள்.

மிகவும் தகுதியில்லாத தேவையுள்ளவர்கள், ஆவியில் எளிமையுள்ளவர்கள் ஆகிய இவர்களுக்கு தன் கிருபையை அருளுவதில் தேவன் மகிழ்ச்சி அடைகிறார். உங்களுடைய வாழ்க்கையிலும் உங்களைச் சுற்றி இருக்கிறவர்கள் வாழ்க்கையிலும் தேவனுடைய கிரியைகளைக் காண நீங்கள் மிகச் சிறந்த ஆன்மீக வீரராக இருக்கவேண்டும் என்ற அவசிய மில்லை. நீங்கள் விண்ணப்பிக்க மட்டும்தான் தேவை. எல்லாம் சொல்லி முடித்தபின்பு, நமது ஜெபங்களுக்கு நமது நித்திய பிதா எப்படி பதிலளிக்கிறார் என்று இன்னமும் புரியவில்லை. அவர் பதில் அளிக்கிறார். மறுபடியும் மறுபடியும் அவர் நமது எளிய தாழ்மையான விண்ணப்பங்களை பரலோகத்தி லிருந்து கேட்டு அவைகளுக்கு பதிலளிக்கிறார்.

இது உண்மையிலேயே ஆச்சரியமானது.

2

நெருக்கடியான நேரங்களில் ஜெபம்

முக்கிய நிகழ்வுகள் மத்தியிலே தேவன் எவ்வாறு கிரியை செய்கிறார்

"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத்தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்தில் இருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்"
(2நாளா.7:14).

ஜெபம் உலகத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதா?

தேவனுடைய கிரியை செய்யும் வல்லமையைப் பற்றி எந்தவித சந்தேகமும் கிடையாது. சர்வவல்லமையுள்ள தேவன் சிறிய, பெரிய அற்புதங்களைச் செய்ய வல்லவர்.

மேற்கூறிய பதிலைச் சொல்வதற்கு நாங்கள் மிகுந்த ஜாக்கிரதை உள்ளர்களாக இருக்கிறோம். ஏனெனில், அவர் செய்யாமல் விட்ட அற்புதங்கள் ஏராளம். உலகத்தின் சமாதானத்திற்காக, அநேகர் ஊக்கமாக ஜெபித்தும், தொடர்ந்து உலகின் பல பகுதிகளில் போர் நடந்துகொண்டே தான் இருக்கிறது.

நமக்கு ஏமாற்றம் உண்டாக்கத்தக்கதாக உலகில் சண்டைகளை மக்களை கடத்தும் தொழிலை மேலும் எல்லா விதமான கொடுமையான காரியங்களை மக்கள் செய்வதற்கு தேவன் அனுமதிக்கிறார். ஏன்? அந்தப் பிரச்சனையைப் பற்றி நாங்கள் இப்பக்கங்களில் பேசப்போவதில்லை.

இந்த நிகழ்ச்சிகளின் மத்தியிலும் தேவன் கிரியை செய்கிறவராகவே இருக்கிறார். சில நேரங்களில் மக்களை பாதுகாக்கிறார். ஆறுதல் அளிக்கிறார். நெருக்கத்தில் இருக்கும் மக்களின் வாழ்க்கையை அவர் தொடுகிறார். ஒரு கூட்ட மக்கள் ஊக்கமாக ஒரு மனதுடன் ஜெபிக்கும் பொழுது, தேவனுடைய சத்தியத்தை தங்களுக்குள்ளாக கடந்து செல்ல அனுமதிக்கும்பொழுது, தேவன் தமது வல்லமையான கரத்தை நீட்டி சரித்திரத்தின் போக்கையே மாற்றி அமைக்கிறார். கடந்த சில ஆண்டுகளிலே ஐரோப்பாவில் கம்யூனிச ஆட்சி விழவும், தென் ஆப்பிரிக்காவில் பின்பற்றுப்பட்டு வந்த அடிமைத்தனமான நிறவெறி ஒழியவும் பண்ணினார். அந்த இரு நிகழ்ச்சிகளும், நடக்குமுன்பு, இப்படியும் நடக்குமா என்று யோசிக்கும் அளவிற்கு இருந்தன.

அவை இரண்டு நிகழ்வுகளுமே ஜெபத்தினால் கிடைத்த பலன்.

"உம் சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல, பூமியிலும் செய்யப் படுவதாக" என்று நாம் ஜெபிக்கின்றோம். சில நேரங்களில், உலக சரித்திரத்தில் தேவன் மிக முக்கிய பங்கு எடுக்கிறார். அதே சமயம் இயேசு, "என்னுடைய இராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரியது அல்ல" என்று நமக்கு நினைப்பூட்டுகிறார் (யோவா.18:36) அவர் அநேக தடவைகளில், தனிப்பட்ட இதயங்கள், தனிப்பட்ட ஜெபங்கள் இவற்றை நூலாகக் கொண்டு தனது இராஜ்ஜியத்தை நெய்கின்றார்.

ஓ, தேவனே,
நாங்களாகவே தனித்து நிற்கமுடியும் என்ற எண்ணத்திற்கு
நாங்கள் இடம் கொடுக்காமலிருக்கவும், நீர் எங்களுக்குத் தேவையில்லை
என்ற மனப்பாங்கிற்கும் எங்களை விலக்கிக் காத்துக்கொள்ளும்.

– ஜாண் டோன்

காபூல்

தாலிபன் சிறைச்சாலை திறக்கப்படல்

ஆகஸ்ட் மாதம் 3ம் தேதி 2001ம் ஆண்டு இரண்டு அமெரிக்கப் பெண்கள் தாலிபன்களால் ஆப்கானிஸ்தானத்தில் கைது செய்யப்பட்டார்கள் என்று எல்லாச் செய்தித்தாள்களின் தலையங்கள்களும் கூறின. மக்களின் நெருக்கடியில் உதவி செய்யப்போனவர்களை கிறிஸ்தவ மதத்தை பரப்பினார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டனர். டெக்ஸாஸ் நகரத்தில், வாக்கோவில் உள்ள அந்தியோகிய சமுதாய சபை மக்கள், டயானா கரி, ஹீதர் மெர்செர் ஆகிய இருவரும் சிறையில் அடைக்கப்பட்டதைக் கேள்விப் பட்டார்கள். உடனே இடைவிடாமல், தொடர்ந்து அவர்கள் இருவரின் விடுதலைக்காக ஜெபிக்க ஆரம்பித்தார்கள்.

டயனாவும் ஹீதரும், ஃபேலோர் பல்கலைக்கழகத்தில் மாணவராக படித்துக்கொண்டிருந்தபொழுது, அந்தியோகியா சபையின் உறுப்பினர் களாக இருந்தனர். அவர்கள் இருவரும் ஆப்கானிஸ்தானத்தில் காபூலில் உள்ள 'ஷெல்ட்டர் நவ்' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் சேர்ந்தனர். அந்தியோகிய சபை அந்த இருவரையும், பண உதவியினாலும் ஜெப உதவியினாலும் தாங்கி வந்தது. அந்த இரு பெண்களும், நம்ப இயலாத அளவிற்கு ஆப்கானிஸ்தானின் மக்கள் மேல் ஓர் ஆழ்ந்த பற்று கொண்டிருந்தார்கள். ஆகவே ஆப்கானிஸ்தான் மக்களுக்கு, கல்வி, உடல் ஆரோக்கியம் பற்றி பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தி செயல் முறையில் கற்றுத்தர சென்றுள்ளார்கள். அவர்கள் செய்யும் பணியினைக் குறித்து பெருமைப் படுகிறோம். அவர்களது வாழ்க்கையில் நாங்களும் ஓர் பகுதியாக இருப்பது குறித்து பெருமைப்படுகிறோம்'' என்று போதகர், ஜிம்மி செய்பெர்ட் கூறினார்.

அவர்கள் கைது செய்யப்பட்ட காரணங்கள் தெளிவற்றவையாகவே காணப்பட்டன. ஓர் ஆப்கானிய சிறுவனும் அவன் குடும்பத்தாரும் ஆர்வம் காட்டினபடியினால், கரி அந்தச் சிறுவனுக்கு இயேசுவைப் பற்றிய ஓர் புத்தகம் கொடுத்ததாகவும், கிறிஸ்துவைப் பற்றிய ஓர் படக்காட்சியை அக்குடும்பத்தினருக்கு காண்பித்ததாகவும் ஒப்புக்கொண்டாள். ஆயினும் மதத்தை பரப்புதல் என்பது அங்கு சட்ட விரோதமான காரியம். அந்த "சட்ட மீறுதலுக்கு தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட வேண்டும்'' என்பது தண்டனை முறை. அவ்வாறே அவர்களுக்கு தண்டனை கொடுப்போம் என தாலிபன் களின் தலைமை நீதிபதி கூறினார்.

அவர்கள் கைது செய்யப்பட்ட ஒரு மாதத்திற்குப்பின் அந்த இருவருக்கும் இருந்த வெளியுலகத் தொடர்பு துண்டிக்கப்பட்டது. அவர்களுக்காக வாதாடும் வக்கீல் பாகிஸ்தானில் இருந்தார். ஆகவே அவரை அநேக வாரங்களுக்கு அவர்களால் எந்த விதத்திலும் தொடர்புகொள்ள இயல வில்லை. அவர்கள் முதலில் இருந்த சிறைச்சாலையில் பத்தடிக்கு பத்தடி உள்ள சிறிய அறையில் ஆறு பெண்கள் அடைக்கப்பட்டிருந்தனர். ஆறு படுக்கைகளும் தரையில் விரிக்கப்பட்டிருந்தபொழுது, அவர்களுக்கு அங்கும் இங்கும் நகருவதற்குக்கூட சிறிதும் இடமில்லை. தரையிலிருந்து எறும்புகளையும் தலையிலிருந்து பேன்களையும் எடுத்தனர். குளியல் என்பது மிகவும் குளிர்ச்சியான நீரில் மூழ்கி எழுதலாகும். அவர்களது கழிவறைகள் நாற்பது பெண்கள் பயன்படுத்தக்கூடியது. சில நாட்களில், அருகில் இருந்த அறைகளில் இருந்து இரத்தத்தை உறைய வைக்கும் அவலக் குரல் கேட்கும். வேறு சில நேரங்களில் காட்டுமிராண்டித்தனமாக மற்ற பெண்கள் அடிக்கப் படுவதை பார்க்க நேரிடும்.

சாதாரண பார்வையாளர்களுக்கு அந்த இரு பெண்களின் விடுதலை என்பது நடக்க இயலாத காரியமாகத் தென்படலாம். அதுவும் அக்டோபர் 7ம் தேதி அன்று ஐக்கிய நாடு, தாலிபன்களின் வலுவான இடங்களை குண்டுபோட்டு தாக்கினபின், அவர்களது விடுதலை பற்றி சிந்திக்கவே இயலாத நிலையில் இருந்தது. ஆனால் 'வாக்கோவில் உள்ள திருச்சபை பக்கள் இருபத்து நான்கு மணி நேர சங்கிலித் தொடர் ஜெபத்தைச் செய்ததோடுகூட, இணையதளத்தின் மூலமாக அந்த தேசம் முழுவதும் அந்த இரு பெண்களுக்காக ஜெபிக்கத் தூண்டினார்கள். "தாலிபன் சிறைச் சாலையின் கதவுகளைத் திறக்கும் சாவி" என்று போதகர் செய்பர்ட் அந்த ஜெபத்தைப்பற்றிக் கூறினார். அப்போஸ்தலர் 12ம் அதிகாரத்தில், எருசலேமின் சிறைச்சாலையிலிருந்து பேதுரு ஓர் தூதனின் உதவியினால் விடுவிக்கப் பட்டதுபோல, ஓர் அற்புதம் நிச்சயமாக நிகழும் என்று அவர் எதிர் பார்ப்பதாகக் கூறினார்.

மிகவும் கஷ்டமான சூழ்நிலையிலும், கரியும், மெர்செரும், ஜெபத்தின் விளைவாகவும் அரசியல் தலையீட்டின் விளைவாகவும், இருவரும் சற்று நல்ல முறையில் நடத்தப்பட்டனர். ஐக்கிய நாட்டின், மாநில இலாகாவைச் சேர்ந்த ஓர் அரசியல் அதிகாரி, "அவர்கள் இருவரும் மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கின்றனர். ஏனெனில் உலகம் அனைத்தும் அவர்களைக் கவனித்துக்

கொண்டிருக்கிறது" என்றார். அனைத்துலக நாடுகளும் முயற்சி எடுத்தும் கூட, அந்த இருவரும் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இடத்தில் இருந்தார்கள்.

காபூலை அமெரிக்கக் குண்டுகள் தாக்கினபொழுது, அவர்கள் இருந்த சிறைச்சாலையின் அறைகள் அசைந்தன. "எங்களது சிறைச்சாலை அசைக்கப் படுகின்றது" என்று மெர்சர் கூறினார். "உட்கார்ந்து ஜெபிக்க மட்டும்தான் எங்களால் முடிந்தது" என்று கூறினாள். ஒவ்வொருநாளும் மூன்று மணி நேரம் அவர்கள் ஜெபித்தார்கள் அவர்கள் தங்களுக்காக ஜெபித்தார்கள். ஆனால் அவர்களால் நேசிக்கப்பட்ட ஆப்கான் மக்களுக்காக அதிகமாக ஜெபித்தார்கள்.

ஆப்கானிஸ்தானத்திற்காகவும் அதன் மக்களுக்காகவும் ஜெபிக்கவே, தேவன் அவர்களை காபூல் சிறையில் வைத்துள்ளார் என்று நம்பினார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டதினால், ஆப்கான் மக்களுக்கு நன்மை பிறக்குமானால், "நாங்கள் சிறையிருப்பது நல்லதுதான்" என்று கூறினார்கள்.

நவம்பர் மாதம் 12ம் தேதி தாலிபன் வீரர்கள், இவர்களது அறைக்குள் மிக வேகமாக நுழைந்து, அவர்களது பொருட்களை எடுத்து கட்டுமாறு கட்டளையிட்டனர். தங்களால் எடுக்கக்கூடிய பொருட்களை எடுத்துக் கொண்டு இருக்கும் பொழுதே, ஓர் வண்டிக்குள் தள்ளப்பட்டார்கள். "ராக்கெட் ஏவுகணைக்குள் மேலும், அத்தோடுகூட கையில் துப்பாக்கி ஏந்தியபடி ஓர் ஆப்கான் வீரன் என்னருகில் நின்று கொண்டிருக்கிறார். இப்பொழுது தான் நான் உண்மையிலேயே மிகவும் ஆபத்தில் இருக்கிறோம் என்று நான் முதன் முறையாக உணர ஆரம்பித்தேன்" என்று கரி கூறினாள்.

தாலிபன் வீரர்கள் பயத்தில் ஓடிக்கொண்டிருந்தார்கள். மற்ற வீரர்களும் ஓடிக்கொண்டிருப்பதை மெர்சரும், கரியும் பார்த்தார்கள். உடனே மெர்சர் தனது பையிலிருந்து ஓர் வேதாகமத்தை எடுத்து, வசனங்களை வாசிக்க ஆரம்பித்தாள். உடனே அங்கிருந்த அனைத்துக் கைதிகளும் பாட்டுகளைப் பாடி, சிரித்து மகிழ ஆரம்பித்தார்கள். "உண்மையிலேயே அங்கு தேவ பிரசன்னம் இருந்தது" என்று மெர்செர் கூறினாள்.

பல மணி நேரங்கள் கந்தகார் செல்லும் சாலையில் பயணம் செய்தபின்பு, திடீரென அந்த வாகனம் நின்றது. அனைத்து சிறைக்கைதிகளும் உலோகத்தினால் ஆன ஓர் கப்பல் பெட்டகத்திற்குள் நுழையும் படி முழு

கட்டளையிடப்பட்டார்கள். அந்த இரவையும் வீரர்கள் மத்தியில் செல வழித்தார்கள். அடுத்தநாள், அதிகாலையில் அந்த உலோகச் சிறையின் கதவுகள் திறக்கப்பட்டன. அதன் வாசலின் அருகே தாலிபனின் எதிரிகளைச் சார்ந்த படைத்தலைவர் நின்று கொண்டிருந்தார். அவர், 'நீங்கள் விடுதலை செய்யப்பட்டீர்கள். நீங்கள் விடுதலை செய்யப்பட்டீர்கள். நீங்கள் விடுதலை செய்யப்பட்டீர்கள்' என்று உரத்தக் குரலிலே கூறினார். அடுத்த சில நிமிடங்கள் அங்கே ஒரே குழப்பமும் கூச்சலுமாக இருந்தது. தங்களை காப்பாற்ற வந்து கொண்டிருந்த ஹெலிகாப்ட்டர் எங்கு வந்து இறங்க வேண்டும் என்று அடையாளம் காண்பிக்க, கரியும் மெர்சரும் தங்கள் தலைகளை மூடியிருந்த துணிகளை நெருப்பில் போட்டு எரித்து அடையாளம் காண்பித்தார்கள். அவர்கள் விரைவில், பாதுகாவலான இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். இறுதியில் அவர்கள், தங்களது அன்பானவர் களுடனும், அவர்களது நெருக்கடியான நேரங்களில் அவர்களை ஜெபத்தினால் தாங்கிய சபையாரோடும் இணைக்கப்பட்டார்கள்.

ஓக்லகாமா நகரம்

"ஜெபத்தை மீறி செயல்பட என்னால் இயலவில்லை"

ராணுவ சார்ஜென்ட் ஆர்லீன் ப்ளாஞ்சார்டிற்கு ராணுவத்தில் இருக்க இன்னமும் ஒன்பது நாட்களே இருந்தது. அவளுக்கு ஒக்லகமாவில் இராணுவ அதிகாரியாக தனது பணியை முடிக்க 1995 ஏப்ரல் 19ம் தேதி தான் கடைசி நாள். அன்று அவள் மிகவும் உற்சாகத்துடன் இருந்ததால், மின் தூக்கியை பயன்படுத்தாமல் நாலாவது மாடியில் உள்ள முர்ரா உள்நாட்டு அலுவலகத்திற்கு படிகளின் வழியாக ஏறிச்சென்றாள். அங்கு அவளுக்குப் பதிலாக பொறுப்பெடுக்க வந்துள்ள இராணுவ அதிகாரியை அவரது மனைவி இருபிள்ளைகளுடன் சந்தித்தாள். அறிமுகம் முடிந்தபின், சில பணிகளை முடிப்பதற்காக வேண்டி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றாள்.

"திடீரென அதிக அளவு எடையுள்ள செங்கற்கள் எனது உச்சந்தலையை தாக்கினது போல இருந்தது. அதிக அளவு சக்தி வாய்ந்த மின்சாரம் எனது உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரை பாய்ந்து என் உடல் வழியாக பாய்ந்தது. என் சரீரம் முழுவதும் பயங்கரமாக நடுங்கியது. காரிருளில் மூழ்கிவிட்டேன்.

என்னால் இயன்ற அளவு மிகவும் சப்தமிட்டு அலறினேன்'' என்று சில நாட்கள் கழித்துக் கூறினாள்.

இந்த நிகழ்ச்சி ஆர்லீன் ப்ளாஞ்சாட் வாழ்க்கையில் நடந்த முதல் ஆபத்தான நிகழ்வன்று. அவள் ஏற்கனவே மிகவும் கஷ்டப்பட்டவள். க்ளீவ்பேண்டில் உள்ள காலனி வீடுகளில் வாழ்ந்து வந்தாள். சிறுமியாக இருந்த அக்காலங்களில் அநேக நாட்கள் உணவு உட்கொள்ளாமலேயே படுக்கைக்குச் சென்றிருக்கிறாள். சில சமயங்களில் ஏன்தான் பிறந்தேனோ என்று கூட நினைத்தது உண்டு. கொடுமையும், பொல்லாப்பும் நிறைந்த சூழ்நிலையில் வாழ்ந்ததால், தன்னை எவ்வாறு தற்காத்துக் கொள்ளவேண்டும் என்று அவள் கற்றுக்கொண்டாள். நடமாடும் பயங்கர ஆயுதமாக ஓர் கொலையாளி யாகக் கூட இருக்கவேண்டும் என்பது அவளது கனவுகளில் ஒன்றாகும்.

ஆர்லீன் இராணுவத்தில் சேர்ந்தபின் சில நாட்கள் இத்தாலியில் கழித்து விட்டு, டான் அலங்காவில் நிரந்தரப்பணியில் சேர்ந்தாள். அவ்விடம் வாழ்வதற்கு மிகக் கடினமான இடமாக இருந்ததால், அவள் குடித்து, வெறித்து தன் நாட்களைக் கழித்தாள். ஓர் வார இறுதி விடுமுறை நாட்களுக்குப் பின் ஓர் அதிகாலை தன்னைத் தானே ஓர் முகம் காட்டும் கண்ணாடியில் நோக்கிப்பார்த்தபொழுது, அவள் அடைந்திருந்த அவல நிலையைப் பார்த்து மிகவும் அதிர்ச்சியடைந்தாள்.

மனச்சோர்வுற்று, நம்பிகையற்ற அந்த நிலையில், ஜெபிக்கும் தன் தாயை நினைவுகூர்ந்தாள். ''நான் எவ்வளவு வேகமாக ஓடினாலும் ஜெபத்தை என்னால் மேற்கொள்ள இயலாது'' என்பதை நான் விரைவில் கற்றுக் கொண்டேன் என்று பின் நாட்களில் கூறினாள். அலங்காவில் ஓர் இருண்ட குளிர்ச்சியான நாளில் ஓர் சிறிய ஆலயத்தைக் கண்டாள். ''ஆண்டவருடைய அன்பை மேலும் என்னால் தள்ளி வைக்க இயலவில்லை'' என்று கூறிய அவள் உடனே இயேசுவை தன் வாழ்க்கையில் இரட்சகராக ஏற்றுக்கொண்டாள்.

1995ம் ஆண்டு ஒக்லகாமா நகர நிகழ்ச்சி நடந்தது, அன்று நடந்த பயங்கர குண்டு வெடிப்பில் காரிருள் அவ்விடத்தை சூழ்ந்து கொண்டது. எங்கு பார்த்தாலும் பயங்கர அலறல் சத்தம் ஆர்லீன் 5 நிமிடங்களுக்கு அவள் தன் உணர்வற்று மயங்கிய நிலையில் இருந்தாள். அவளுக்கு நினைவு திரும்பின பொழுது, எழுந்து ஓட நினைத்தாள். ஆனால் எப்பக்கமும் வழியே இல்லை. அந்த அலுவலக முழுவதும், இடிந்து மண்மேடானது. அவளது இடதுபக்கம்

ஒர் திறப்பு இருந்தது. பிற்காலத்தில் அந்தத் திறப்பு அந்தக்குழி என அழைக்கப் பட்டது. அந்த கட்டிடத்தில் ஒன்பது மாடிகளும் ஒன்றின் மீது ஒன்றாக விழுந்து அப்பளம் போல நொறுங்கி விட்டது.

அவள் மறுபடியும் அலறினாள். இந்தப் பயங்கரமான சூழ்நிலையில் இருந்து தப்பித்து விடலாம் என்ற எண்ணம் அவள் மனதில் தோன்றியது. எல்லா விதமான நெருக்கடியான சூழ்நிலைகளிலும் மிகவும் அமைதியாக இருக்க வேண்டும் என்ற பாடத்தை இராணுவத்தில் கற்று இருக்கிறாள். அவள் அதைப்பற்றி நன்கு அறிந்திருந்தும் அவளால் அந்தச் சூழ்நிலையை சமாளிக்க இயலவில்லை.

தன்னை அறியாமலேயே அவள் கரங்களை பரலோகத்திற்கு நேராக நீட்டி, 'இயேசுவே, என் இயேசுவே' என்று கதறத்துவங்கினாள். இயேசு அவளது கரங்களைப் பிடித்துக் கொள்ளவேண்டும் என்று விரும்பினாள்.

இயேசு அவளது வேண்டுதலை நிறைவேற்றினார். அந்த நிமிடத்திலேயே அவரது நாமத்தை நான் உச்சரித்து முடிக்குமுன்பாக, அவருடைய அன்பின் சமாதானம், மென்மையான கம்பளம் போல என்னை மூடி மறைத்தது. உடனே நான் அலறுவதை நிறுத்திவிட்டேன். "அந்த நாளை நான் நினைத்துப் பார்க்கும் பொழுது, அன்று முதன் முதலாக என் கரம் பற்றி என்னைக் காப்பாற்றினவர் இயேசுவே என்பதை நினைவு கூருகிறேன்."

முப்பது நிமிடங்களுப்பின் நான்காவது மாடியில் உயிர் தப்பின ஆர்லீனும் வேறு சிலரும் அந்த இடிந்துபோன கட்டிடத்திற்கு வெளியாக நடந்து வந்தனர்.

அந்த நாளின் அனுபவத்தின் பயங்கரம் அவளை மிகவும் பாதித்தது அதன் விளைவாக, ஆர்லீனிற்கு வயிற்றுப் புண்ணும், இடைவிடாத தலைவலியும், இரவு முழுவதும் தூக்கமின்மையும் ஏற்பட்டு அவள் மிகவும் கஷ்டப்பட்டாள். அவளுடைய வெளித்தோற்றும்கூட மாறிவிட்டது. "இருபத்தி எட்டு வயதான நான் மெத்தூசலாவின் பாட்டியைப்போல ஆகிவிட்டேன்" என்றாள்.

அன்று ஏற்பட்ட குண்டு வீச்சின் விளைவாக நூற்றி அறுபத்து எட்டுப்பேர் இறந்துவிட்டனர். மேலும் அநேகம் பேர் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டனர். ஆனால் அன்று ஆரிலீன் பிளஞ் சாட்டின் கரத்தைப் பிடித்து காப்பாற்றினவருக்கே மகிமை உண்டாவதாக. அதன் விளைவாக ஆரிலீன் பிளாஞ்சார்ட் குண்டு வெடிப்பின் சம்பவத்திலிருந்து

காப்பாற்றப்பட்டு, அதைப்பற்றி பிறருக்குச் சொல்லும்படி உயிரோடு காக்கப் பட்டாள். அதன் விளைவாக அவளும் அவளது கணவர் ஸ்டேனும் சிலுவையும் புறாவும் (Cross and the Dove) என்ற ஓர் ஊழியத்தை ஆரம்பித்து, அவளைப்போல, ஆபத்திலும் துன்பத்திலும் உள்ள மக்கள் தங்கள் வாழ்க்கையில் வெற்றி காண உதவினார்கள்.

கிழக்கு ஜெர்மனி

ஏன் குறுக்குச் சுவர் இடிந்து விழுந்தது

கிழக்கு ஜெர்மானியர்கள் அதை டை வென்டே (Dic Wende) அதாவது 'திருப்புமுனை' என்று அழைப்பார்கள். அது 1989 அக்டோபர் 9ம் தேதி அன்று புராட்டஸ்ட்டான்ட் மறுமலர்ச்சிக்கு அடித்தளமாக இருந்த லிப்ஸிக் என்ற இடத்தில் நடந்தது. உலகத்தையே மாற்றி அமைக்கும் அந்த நிகழ்ச்சி அங்கு நிகழ்ந்தது மிகவும் சரியானதாகும். ஏனெனில் இங்குதான் 16ம் நூற்றாண்டில் மார்ட்டின் லூத்தரால் மத மறுமலர்ச்சி ஏற்பட்டது. 18ம் நூற்றாண்டில் பாக் அவர்களால் இசையில் மறுமலர்ச்சி எற்பட்டது.

1980ம் ஆண்டு முழுவதும் லிப்சிக்ல் உள்ள நான்கு சபைகளும் (பாக்ஸ் அவர்களின் பழைய சபை உட்பட) ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் மாலை 5 மணி அளவில் வார ஜெபக்கூட்டம் நடத்தி வந்தார்கள். அந்த சபைப் போதகர்கள் பழைமையான லூத்தரன் சபைப் பாடல்களைப் பாடி, வேதாகமத்தை ஓர் கையில் வைத்துக்கொண்டு, சபை மக்களுக்கு போதித்து பின் தொடர் ஜெபத்தை ஏறெடுத்து வந்தார்கள். அநேக ஆண்டுகளாக மிகக் குறைவான எண்ணிக்கையிலே தான் கிறிஸ்தவர்கள் கூடி ஜெபித்து வந்தார்கள். ஆனால் 1989ம் ஆண்டு அதன் எண்ணிக்கை திடீரென அதிகரித்தது. மாற்றமும் உண்டானது. '*எதிர்பாராத இடங்களில் தேவனைக் காணுதல்*' என்ற தனது புத்தகத்தில் பிலிப் யான்சி, இந்த நிகழ்வுபற்றி எழுதுகிறார்.

கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் திருச்சபைகளில் மட்டும் மக்கள் கூடி வருதற்கு அனுமதி அளித்திருந்தனர். ஆகவே இந்த ஜெபக் கூட்டங்களில், விசுவாசிகள் மட்டுமின்றி, அரசியல் எதிராளிகள், என்ன நடக்கிறது என்று பார்க்க ஆர்வமுள்ள மக்கள் என பலரும் வர ஆரம்பித்தனர். ஒவ்வொரு

திங்கட்கிழமை மாலை ஜெபக் கூட்டத்திற்கு பின்பும், கைகளில் மெழுகு திரிகளையும், பலகைகளையும் ஏந்திக்கொண்டு, அமைதியாக அந்தப் பழைய நகரத்தின் தெருக்களை வலம் வந்தனர். உண்மையில் இது மிக மிக அமைதியான அரசியல் புரட்சி.

நாளடைவில் மேற்கத்திய நாட்டின் பத்திரிக்கையாளர்கள் இதைப்பற்றி பத்திரிக்கைகளில் பிரசுரிக்க ஆரம்பித்தனர். இதை அறிந்த கம்யூனிஸ்ட் தலைவர்கள் இந்த அமைதியான ஊர்வலத்தை எப்படி நிறுத்துவது என ஆலோசனை நடத்தலானார்கள். சில சமயங்களில் இரகசிய போலீஸ், சபை கூடி வந்த இடத்தை சுற்றி வளைத்து ஊர்வலம் வந்தவர்களைத் தடுத்து நிறுத்தினர். ஆனால் லெய்ப்பிசில் கூடி வந்த கூட்டம் நூறு, ஆயிரம் எனக் கூடி இறுதியில் ஐம்பதாயிரமாக ஆனது.

அக்டோபர் 9ல் "திருப்புமுனை" என்ற அந்த நாளில் கிழக்கு ஜெர்மானிய அரசாங்கம் இதில் தலையிட்டது. காவல் துறையினரும், இராணுவத்தினரும் லெய்ப்சிக்கைத் தாக்கினார்கள். கிழக்கு ஜெர்மானியத் தலைவர் எரிக் கொனேக்கர் அமைதியாக எதிர்த்துப் போராடும் மக்களை சுட்டு வீழ்த்தும்படி கட்டளை கொடுத்தார். ஜெர்மானிய தேசம் ஓர் பெரிய அழிவை எதிர்நோக்க தன்னை ஆயத்தப்படுத்தினது. லெய்ப்சிகின் லுத்தரன் பேராயர், படுகொலை நிகழப்போகிறது என்று எச்சரிப்பு விடுத்தார். அனைத்து மருத்துவ மனைகளும், அவசரச் சிகிச்சைப் பிரிவுக்கென அறைகளை ஆயத்தம் பண்ணினார்கள். ஆலயங்களும், இசை அரங்குகளும், போராளிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதற்காக, தங்கள் கதவுகளைத் திறந்து கொடுத்தனர்.

நிக்கொலாய் ஆலயத்தில், ஆராதனை ஆரம்பமாக வேண்டிய நேரத்தில், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இரண்டாயிரம் உறுப்பினர்கள் தேவாலயத்திற்குள் நுழைந்து அனைத்து இருக்கைகளையும் ஆக்கிரமத்துக் கொண்டனர். ஆலயத்தில் எப்பொழுதாவது திறக்கப்படும் பால்கனி (சாளரங்கள்)களையும் திறந்துவிட்டனர். அதிலும் ஆயிரக்கணக்கான எதிரிகள் வந்து அமர்ந்து கொண்டனர்.

அன்று இரவு அந்தப் போர்ச்சேவகர்கள் ஏன் அவ்வாறு தீவிரமாகச் செயல்பட்டனர் என்று ஒருவருக்கும் தெரியாது. ஆனால் லெய்ப்சிக்கில் செய்த விழிப்பு ஆராதனையின் விளைவுதான் அந்த தற்காலிக மாற்றத்தை ஏற்படுத்தியது என்று அனைவரும் கூறினர். அன்று இரவு 70,000 மக்கள்

லெய்ப்சிக்கின் தெருக்களில் அமைதியாக ஊர்வலம் வந்தனர். அதைத் தொடர்ந்து திங்கட்கிழமையில், 120,000 மக்கள் ஊர்வலம் வந்தனர். ஒரு வாரம் கழித்து 5,00,000 மக்கள் வந்தனர். இறுதியில் ஏறக்குறைய லெய்ப்சிக்சில் வாழ்ந்துவந்த அனைத்து மக்கள் கூட்டமும் அதில் பங்கெடுத்தது.

நவம்பர் மாதத்தின் ஆரம்ப நாட்களில் தலைநகரான கிழக்கு பெர்லினில், ஒரு கோடி மக்கள் பங்கெடுத்த அமைதி ஊர்வலம் நடைபெற்றது. கிழக்கு ஜெர்மனியின் அதிபர் எரிக்கொனேக்கர் மிகவும் கேவலப்பட்டு, தன் பதவியை ராஜினாமாச் செய்தார். அமைதியாகப் போராடும் மக்களைச் சுட்டு வீழ்த்துவதற்காக இடப்பட்ட கட்டளையை செயல்படுத்த காவல்துறையினர் மறுத்துவிட்டனர். நவம்பர் மாதம் 9ம் தேதி அன்று நள்ளிரவில், நடக்கக் கூடாத ஓர் காரியம் நடந்தது. சிலர் ஜெபிப்பதற்குக் கூட அஞ்சின காரியம் அதாவது வெறுக்கத்தக்க பெர்லின் சுவரில் ஓர் பிளவு ஏற்பட்டது. கிழக்கு ஜெர்மானியர்கள் சோதனைச் சாவடிகளைக் கடந்து செல்வதற்கு அனுமதி பெற்றுள்ள காவலர்களைக் கடந்து சென்றனர். மக்கள் கூட்டம் கூட்டமாக கைகளில் மெழுகு திரிகளை ஏந்திக்கொண்டு சென்றபொழுது, ஓர் உயிர் கூட கொல்லப்படவில்லை. அந்த அமைதியான ஊர்வலம் ஓர் அரசாங்கத்தையே கீழே தள்ளியது. ஓர் சில மாதங்களில், உலகமெங்கும் அமைதியான ஓர் புரட்சி பரவியது. போலந்து கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, செக்கஸ்லோவாக்கியா, பல்கேரியா, ருமானியா, அல்பேனியா, யுக்கல்போவியா, மங்கோலியா சோவியத் நாடுகள் இவற்றைச் சேர்ந்த கோடிக்கணக்கான மக்கள் மத்தியில் மிக அமைதியான அஹிம்சை முறையில் புரட்சி நடைபெற்றது.

CNN என்ற ஒளிபரப்பு நிறுவனத்தில் தயாரிப்பாளரும் எழுத்தாளருமான பட் பல்ட்மேன் கீழ்க்கண்டவாறு எழுதினார். "செய்தித்துறை ஊடகத்தின் வாயிலாக சர்வாதிகாரத்தின் சுவர் இடிந்து விழுவதை மிகவும் ஆச்சரியத்துடன் ஒளிபரப்பின் மூலம் பார்த்தோம். அன்று திடீரென நிகழ்ந்த அழிவின் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் அவசரத்தில் அந்த அழிவின் நிகழ்ச்சிக்குக் காரணமாயிருந்த நிகழ்ச்சி சேர்க்கப்படாமல் விடுபட்டுப் போயிற்று. பல்லாயிரக்கணக்கான மக்கள் விடுதலைக்காக எரியும் மெழுகு வர்த்திகளைக் கரங்களில் ஏந்திக்கொண்டு ஜெபிப்பதை எங்களது ஒளிப்படப்பெட்டியில் பதிவு செய்திருந்தோம். ஆயினும் ஜெபித்த அந்த மக்களின் ஆன்மீக மேன்மையையும் தாங்கள் சார்ந்திருந்த மதத்தின் நற்பண்பையும் அதன் விளைவாக ஏற்பட்ட யாராலும் புரிந்துகொள்ள முடியாத அந்த மாற்றத்தை

விளக்கத் தவறி விட்டோம். அதை நேரடியாகக் கண்டோம். ஆனால் அதன் உள்ளான சக்தியைப் பார்க்க இயலவில்லை."

ஆனால் ஒரு சிலர் அதைப் பார்த்தார்கள். கிழக்கு ஜெர்மானியர்கள் அந்த நாட்களைப் பற்றி அது ஓர் அதிசயம். ஓர் அற்புதம் என்று இன்னமும் பேசுகின்றார்கள். "ஜெபம் மலைகளைப் பெயர்க்கிறதோ இல்லையோ, ஆனால் லெய்ப்சிக்கின் மக்கள் கூட்டத்தை அசைத்துவிட்டது." 'எங்களது தேவன் எங்களது வல்லமையான கோட்டை' என்று அவர்கள் பாடும்பொழுது அது உங்களை நம்ப வைக்க போதுமாக உள்ளது" என்று புதிய குடியரசு அறிக்கைவிட்டது.

அக்டோபர் 9ம்தேதி ஏற்பட்ட திருப்புமுனைக்குப்பின், அநேக வாரங்கள் கழித்து லெய்ப்சிக்கின் வீதியில், "திருச்சபையே நாங்கள் உனக்கு எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்" என்ற வார்த்தைகளைத் தாங்கிய மிகப்பெரிய கொடி பறந்தது.

பெய்ரூட்

"நானும் தேவனும் மட்டும்"

நாள்: மே மாதம் 8ந்தேதி 1984. இடம்: லெபனாலில் உள்ள பெய்ரூட். பென்னும்; காரல் பெய்ரும், அப்பொழுது தான் தங்களது அடுக்குமாடிக் கட்டிடத்தைவிட்டு அவர்கள் பணிசெய்யும் நியர் ஈஸ்ட் ஸ்கூல் என்ற வேதாகமக் கல்லூரிக்கு நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் அருகே ஓர் கார் வந்து நின்றது. அதிலிருந்து இரண்டு மனிதர்கள் இறங்கி, பென்னைப்பிடித்து அவர்களது காருக்குள் தள்ளினார்கள். காரல் சப்தமிட்டு அலறினாள். ஆனால் ஒருவரும் அதைக் குறித்து கவனம் செலுத்தவில்லை. காருக்குள்ளாக கருப்புநிறத்தாடி வைத்திருந்த மனிதன். தன் கையில் இருந்த கைத் துப்பாக்கியை பென்னின் தலைக்கு நேராகக் குறிவைத்து பிடித்துக்கொண்டிருந்தான். பென்னை வலுக்கட்டாயமாகக் காரின் பின்பக்க இருக்கையின் தரையில் தள்ள, அவனது தலையின்மேல் ஓர் சாக்கினைப் போட்டு முகத்தை மறைத்தார்கள். உடனே அந்த காரின் வாகன ஓட்டிக் காரை வேகமாக ஓட்டிச் சென்றான்.

பென் "நான் ஓர் பிணைக் கைதியாக பிடி பட்டுள்ளேன். தப்பிக்க எனக்கு

வழியே இல்லை. இந்த மனிதர்களையும் நான் நம்பவில்லை. அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால் அவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். அவர்களால் எட்ட முடியாத ஓர் சார்பிடம் ஒன்று எனக்கு உண்டு; அதுதான் ஜீவனுள்ள தேவன் மீதுள்ள நம்பிக்கை" என்று தன் நிலைமையை நன்குபுரிந்து கொண்டார்.

அவன் கைதியாகத் தன் அறையில் முதல் நாள் இரவைக் கழித்தபொழுது, ஒரு காவலன் உள்ளே வந்து, சுவர் பக்கமாக அவனைத் திரும்பி நிற்கக்கூறி, அவனது கண்களை மூடியுள்ள அந்தச் சாக்கை நீக்கிவிட்டான். பனியில் சறுக்கி விளையாடுபவர்கள் அணியும் பெரிய கறுப்புநிறக் கண்ணாடி பென்னிற்குக் கொடுக்கப்பட்டது. அக்கண்ணாடியில் பார்க்கக் கூடிய துளைகள் ஒட்டக்கூடிய நாடாவினால் ஒட்டப்பட்டிருந்தன. அந்தக் கண்ணாடி பென்னின் தலையில் இறுக்கமாகப் பொறுத்தப்பட்டுள்ளதா என அந்தக் காவலன் சோதித்துப் பார்த்தபின் 'நல்லது,' இப்பொழுது உன்னால் பார்க்க இயலாது என்று கூறினான். பென் காரிருளில் இருந்தார். அவர் தனது நிலைமையை சோர்ந்து போய், தனிமையாக, உதவியற்ற நிலைமையில் தான் இருந்ததாகக் கூறினார்.

அந்தக் காவலன் சென்ற பின்பு, பென் வேதாகமத்தில் யோவான் நற்செய்தி நூலில் உள்ள கீழ்க்கண்ட வசனத்தை நினைவு கூர்ந்தார். "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" (யோவா.15:7). பின்பு, அவர் "தேவனே, நான் உமது வாக்குத்தத்தத்தை நினைவு கூறுகிறேன். அந்த வாக்குத்தத்தம் எனக்கும் உரிமையானதாகும் என எண்ணுகிறேன். நான் இப்பொழுது மிகவும் தேவையில் உள்ளேன். இந்த நிலையிலே நான் உமக்கு உண்மையுள்ளவனாக இருக்க விரும்புகின்றேன். உமது இந்த வேளையில் நீர் எனக்கு உதவிசெய்வீர் என்ற நிச்சயமும், உமது வழி நடத்துதலும் எனக்குத் தேவை. இந்த சிறையிலிருந்தும் இந்த இடத்திலிருந்தும் உமக்குச் சித்தமானால் என்னை விடுவியும்" என்று ஜெபித்தார்.

அவர் கைதியாக இருந்த ஆரம்ப நாட்களில் "தேவனே நான் இங்கே இருக்கிறேன். நான் இருக்கும் இடம் எது என்று எனக்குத் தெரியா விட்டாலும் நான் இங்கே எப்படி வந்தேன் என்பதும், இனி என்ன நடக்கப் போகிறது என்பதும் உமக்குத் தெரியும். என்னைக் கைதியாக வைத்திருப்பவர்கள் யார் என்று எனக்குத் தெரியாவிட்டாலும் உமக்கு அதுபற்றித் தெரியும். நான்

எந்தவிதமான உதவியுமின்றி இருக்கின்றேன். நான் உம்முடைய கரத்தில் இருக்கிறேன் உதவி செய்யும்'' என்று அடிக்கடி ஜெபிப்பார்.

''எனக்கும் தேவனுக்கும் இடையே எதுமே இன்றி, நானும் தேவனும் மட்டுமே இருந்தோம்'' என பென் எப்படி அவர் முழுவதுமாகத் தேவனைச் சார்ந்திருந்தார் என்று கூறுகிறார். ''ஒன்று, இரண்டு மூன்று அல்லேலூயா, ஐந்து, ஆறு, ஏழு, தேவனுக்கே துதி உண்டாகட்டும்'' என்று எண்ணுவதன் மூலம், உடற்பயிற்சி செய்து வந்தார்.

அடுத்த பதினாறு மாதங்களில், பலமுறை பென் பல இடங்களுக்கு மாற்றப்பட்டார். அடிக்கடி அவரது கழுத்தின் பின் பக்கம் துப்பாக்கியை வைத்து அழுத்தி பயமுறுத்தப்படுவார். மேலும் அவர் வைக்கப்பட்டுள்ள இடம் வெடி வைத்து தகர்க்கப்படப்போகிறது என்று பயமுறுத்துவார்கள். மற்ற சிறைக்கைதிகளோடும் சில நேரங்களில் வைக்கப்படுவார். அவர்களை சிறைவைத்துள்ளவர்கள் தங்களது கைதிகளை துன்புறுத்தி கொடுமைப் படுத்துவதை அதிகம் விரும்பினார்கள். ஒருமுறை ஒரு காவலாளி, பென்னின் கன்னத்தில் தனது கைத்துப்பாக்கியை வைத்து நீ உயிரோடு இருக்கவே லாயக்கற்றவன். ஆகவே இதோ உன்னைக் கொல்லப்போகிறேன் என்று பயமுறுத்துவான். எப்பொழுதாவது, ஏதாவது, ஒரு காவலாளி, அவரது அறைக்குள் வந்து, துப்பாக்கியினால், அறையில் உள்ளமற்ற காலியான இடத்தை நோக்கிச் சுடுவார்.

இறுதியாக, பென், ஒரு புதிய ஏற்பாட்டை வைத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டார். சிறிதுநாட்கள் கழித்து முழு வேதாகமத்தையும் வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கப்பட்டது. ஓர் விதவை ஓர் நியாயாதிபதியின் கதவை, தனக்கு நீதி கிடைக்கும் வரை, விடாமல் தட்டிக்கொண்டே, இருந்த வேதாகமக் கதையை அவர் அடிக்கடி வாசிப்பார். அந்த விதவைப் பெண் எப்படி அந்த நியாயாதிபதியிடம் நீதி கிடைக்கும் வரை இடைவிடாமல் கேட்டாளோ, அதுபோல, அவரும் தேவனிடம் ஜெபிப்பதாக உணர்ந்தார்.

அவர் கடத்தப்பட்டு பதினாறு மாதங்கள் கழித்து 1985ம் ஆண்டு செப்டம்பர் மாதம், திடீரென அந்த காவலாளிகளின் தலைவன், விடுதலை பெறும் கைதிகளின் பட்டியலில் பென்னும் உள்ளார் என்று அறிவித்தார். முதலில் பென்னும், மற்றக் கைதிகளும், அந்தக் காவலாளி உண்மை சொல்லுகிறார் என்று எண்ணவில்லை. ஆனால் விரைவில், வெளியே நின்றுள்ள ஓர் காரிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். பின்பக்க இருக்கையில்,

முகம் குப்புற படுத்துக்கொள்ள கட்டளையிடப்பட்டார். இருபது நிமிடம் சென்றபின்பு, அந்த கார் நின்றது. பென், காருக்கு வெளியே வந்து, தனது முகமூடியைக் கழற்றி எறிய அனுமதிக்கப்பட்டார். உடனே அந்தக் கார் விரைவில் எடுக்கப்பட்டு வேகமாகச் சென்று விட்டது. அது நடு இரவு நேரம், ஆனால், அந்தப் பகுதியை அடையாளம் கண்டுகொண்டார். மெதுவாக நடந்து தனது சிநேகிதரின் வீட்டை அடைந்தார். அடுத்த நாள் அவர் அமெரிக்கத் தூதரகத்திற்குச் சென்று, விடுதலை பெற்ற மனிதரானார். தேவன் அவரை விடுவித்தார்.

பேர்ல் துறைமுகம்

"பிதாவே அவர்களை மன்னியும்"

மிட்சூ ப்யூக்கிடா அவர்களின் மனந்திரும்புதல், உண்மையிலேயே, ஜெபத்திற்குப் பதிலாகும். ஆனால் யாருடைய ஜெபத்திற்கு பதில்?

1941 டிசம்பர் 7ம்தேதி முத்துத் துறைமுகத்தை வெடிகுண்டு போட்டு தகர்த்த 360 விமானங்களுக்கு தலைமை விமான ஓட்டியாக இருந்தவர் கமாண்டோ மிட்சு ப்யூக்கிடா அவர்தான். டோரா, டோரா, டோரா என்ற இரகசிய வார்த்தைகளை சப்தமிட்டுக்கூறி அந்த துறைமுகத்தைத் தாக்குவதற்கு கட்டளை கொடுத்தவர். அவர் செங்குத்தாக விமானத்தை இறக்கி இலக்கைத் தவறாமல் குண்டு வீசித் தாக்குவதில் மிகவும் பிரசித்தி பெற்ற ஓர் விமான ஓட்டியாவார். எல்லா ஜப்பானிய விமான ஓட்டிகளை விட மிக அதிக நேரம் பறந்தவர். அவர் ஓர் தேசீயத் தலைவனாகக் கருதப்பட்டு, மாமன்னர் ஹரோகிட்டோவைக்கூட பார்க்க அனுமதிக்கப்பட்டவர்.

1945 ஆகஸ்ட் மாதத்தில் ஜப்பானிய போர் வீரர்களுக்கு காரியங்கள் அவ்வளவு அநுகூலமாக நடைபெறவில்லை. ப்யூக்கிடோ, ஹிரோஷிமா நகரில், பணி செய்து கொண்டிருந்தபொழுது, படைத் தலைமையிடத்திற்கு உடனே வரும்படி உத்தரவுபெற்றார். அவர் அன்று மதியநேரத்தில் ஹிரோஷிமா நகரைவிட்டு வெளியேறினார். அடுத்தநாள், அவர் விட்டுச் சென்ற நகரமாகிய ஹிரோஷிமா, அணுகுண்டு போடப்பட்டு, தகர்க்கப் பட்டது.

யுத்தம் முடிந்தபின், அமெரிக்க ஐக்கிய நாட்டினால் யுத்தக்கைதியாக

பிடிக்கப்பட்ட சிநேகிதர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது, ஜப்பானிய யுத்தக் கைதிகள் சிறந்த முறையில் நடத்தப்பட்டதை அறிந்த ப்யூக்கிடோ மிகவும் ஆச்சரியப்பட்டார். அவரது சிநேகிதர் ஓர் தன்னார்வத் தொண்டரைப் பற்றிக் கூறினார்.

பெக்கி கோவெல் என்ற அந்தத் தன்னார்வத் தொண்டு செய்த பெண்மணி மிகவும் அன்பும், மரியாதையும் உள்ளவர். ஒரு ஜப்பானியக் கைதிகளில் ஒருவர் அவள் ஏன் அவ்விதமாக இரக்ககுணமுள்ளவராக இருக்கிறார் என்று கேட்டார். அதற்கு அவள், "ஏனெனில் ஜப்பானிய போர் வீரர்கள் எனது பெற்றோரைக் கொலை செய்தார்கள்" என்று கூறினாள். யுத்தத்திற்கு முன்பு, அவளது பெற்றோர் ஜப்பானில் மிஷனரி ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வந்தார்கள். ஆனால் யுத்தம் ஆரம்பித்த உடன் பிலிப்பைன்ஸ் நாட்டிற்குத் தப்பி ஓடிவிட்டார்கள். அங்கே அவர்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு வேவுகாரர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டனர். அவர்கள் முழங்கால் படியிட்டு ஜெபித்துக் கொண்டிருந்தபொழுது தலை சீவப்பட்டுக் கொல்லப்பட்டார்கள்.

அமெரிக்காவில் இருந்த பெக்கி அவளது பெற்றோருக்கு ஏற்பட்ட இந்த அகால மரணத்தைப் பற்றி அறிந்தாள். அவர்கள் கொல்லப்பட்ட முறையை அவள் எண்ணிப் பார்த்தபொழுது, அவளது இருதயம் வெறுப்பினால் நிறைந்தது. ஜெபிக்குக்கும்பொழுது கொல்லப்பட்டனர்! பின்பு அவள் அவர்கள் அந்த நேரத்தில் எதை நினைத்து ஜெபித்திருப்பார்கள் என யோசித்தாள். அவர்கள் ஜப்பானியர்களுக்காகத்தான் ஜெபித்திருப்பார்கள். அவர்களை மன்னிக்கும்படி தேவனிடம் கேட்டிருப்பார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஏனெனில் ஜப்பானியர்கள் மத்தியில் அவர்களுடைய ஆன்மீக மேம்பாட்டிற்காக தங்களைத் தியாகம் செய்து மிஷனரி ஊழியம் செய்தவர்கள். ஆகவே பெக்கியும் ஜப்பானியர்களை மன்னிக்கவும், அவள் அவர்களை மன்னித்துவிட்டதை அவர்களுக்கு சேவை செய்வதின் மூலம் அறிவிக்கவும் வேண்டும் என்று தேவன் விரும்புவதை அவள் உணர்ந்தாள்.

இந்தக் கதையைக் கேட்ட ப்யூக்கிடோ மிகவும் ஆச்சரியப்பட்டார். அதன் பின்பு ஓர் நாள் டோக்கியோவில் புகைவண்டி நிலையத்தில் காத்துக் கொண்டிருந்தபொழுது, ஜேக்கப் டிஷாஷர் என்ற அமெரிக்க விமான ஓட்டி ஒருவரால் எழுதப்பட்ட வேதாகமக் கைப்பிரதி ஒன்று அவருக்குக் கொடுக்கப்

பட்டது. அந்த விமானி, ஜப்பானியர்களால் கைது செய்யப்பட்டு, நாற்பது மாதங்கள் சிறைவைக்கப்பட்டிருந்தார். அநேக மாதங்கள் சிறையில் சிறிய தனி அறையில் அடைக்கப்பட்டிருந்தார். ஜப்பானியர்கள் அவரை கொடுமையாக நடத்தின விதத்தைப் பார்த்த அவர் ஜப்பானியர்களை மிகவும் வெறுத்து வந்ததாக அக்கைப்பிரதி கூறினது. ஆனால் அவர் சிறையில் இருந்தபொழுது வேதாகமத்தை வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் விளைவாக அவர் மனம் திரும்பினார். 'உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்' என்ற கட்டளையை ஏற்றுக்கொள்வது டிஷாஷாருக்கு மிகவும் கடினமாக இருந்தது. ஆயினும் அவர் விரைவில் ஜப்பானியர்களுக்காக ஜெபிக்க ஆரம்பித்தார். அந்த விமான ஓட்டி மறுபடியும் ஜப்பானிற்குத் ஓர் மிஷனரியாகத் திரும்பிவந்து கிறிஸ்துவின் அன்பை ஜப்பானியர்களுக்கு அறிவிக்கத் தீர்மானித்ததாக அந்தக் கைப்பிரதி கூறினது.

மறுபடியும் ப்யூக்கிடோ மிகவும் ஆச்சரியப்பட்டார். அவர் தனக்கென ஓர் வேதாகமம் வாங்க வேண்டும் என்று தீர்மானித்தார். அவர் அநேக மாதங்களாக வேதாகமத்தை வாசிக்காவிட்டாலும், "பிதாவே இவர்களுக்கு மன்னியும் இவர்கள் செய்வது இன்னதென்று அறியாததிருக்கிறார்களோ" என்ற, இயேசுவின் வார்த்தைகள் அவர் கண்களில் பட்டது. பெக்கிகோவெலின் பெற்றோர்கள், பெக்கி கோவல், மேலும் அந்த அமெரிக்க விமானம் ஓட்டி அனைவரும் ஜப்பானியர்களுக்காக ஜெபித்தபொழுது மட்டுமில்லாமல், இயேசு சிலுவையில் மரிக்கும்பொழுது, அவரும் தனக்காக ஜெபித்திருக்கிறார் என்பதை ப்யூக்கிடோ அறிந்துகொண்டார்.

ப்யூக்கிடோ, கண்ணீர் விட்டுக் கதறினார். ஓராண்டிற்குள்ளாக, அவர் கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். வெகு சீக்கிரத்தில் அவர் டிஷாஷோர் என்ற அந்த அமெரிக்க விமான ஓட்டியைச் சந்தித்தார். அதன்பின்பு இருவருமாகச் சேர்ந்து ஓர் சில ஆண்டுகளாக அமெரிக்காவிலும், ஜப்பானிலும் மிகப் பெரிய கூட்டங்களில் இயேசுவின் அன்பைப் பற்றி பேசினார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் கிறிஸ்துவிற்கு ஆதாயப்படுத்தப்பட்டார்கள்.

ப்யூக்கிடோ, மனம் திரும்பினது ஜெபத்திற்கு கிடைத்த பிரதிபலனாகும். ஆனால் அது யாருடைய ஜெபத்தினால் என்பது பொருட்டல்ல. ஜெபம் வென்றிருக்கிறது.

மாஸ்க்கோ

"நாம் எப்படிப்பட்ட தேவனை சொந்தமாகக் கொண்டுள்ளோம்"

ஜெரோம் ஹைன்ஸ் தனது இருபத்தி ஒன்றாம் வயதில் "தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிப்பதில்லை. இரண்டு கோடி மக்களின் அன்றாட சாதாரண காரியங்களில் தலையிட்டுக்கொள்ள கடவுள் ஓர் தனிப்பட்ட மனிதர்களுக்கு உரியவர் அல்ல" என்று கூறினார். ஓர் தலை சிறந்த இசை நாடக வல்லுனராகிய ஹைன்ஸ், ஏறெடுக்கப்பட்ட ஜெபத்திற்கு தேவன் பதில் அளித்ததையோ அல்லது ஓர் அற்புதம் நடந்ததையோ தனது வாழ்க்கையில் அனுபவித்தது கிடையாது.

மூன்றாண்டுகள் கழித்து, நியூயார்க்கில் உள்ள மெட்ரோபாலிட்டன் இசை நாடக நிகழ்வில் பங்கெடுக்க ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். வெகு விரைவில், அந்த ஆண்டிற்கான தலை சிறந்த பாடகருக்கான கரூசோ பரிசினைப் பெற்றார். 1950ல் அவர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஹாலிவுட்டிற்கான மெவிஸ்டோ பெலெஸ் என்ற நிகழ்வில் மூன்றுமுறை பங்கெடுத்தார். இப்படியாக வெற்றியானது ஜெரோம் ஹைன்ஸை தேடி வந்தது.

ஹைன்ஸ் ஓர் கிறிஸ்தவராக இல்லாவிட்டாலும், வேதத்தில் உள்ள மலைப்பிரசங்கம் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆகவே அதை ஓர் பாடமாக மாற்ற யோசித்துக்கொண்டிருந்தார். அத்தோடுகூட, உணர்ச்சி மிக்க நாடகமாக நடிக்கக் கூடிய ஓர் சிலுவை நாடகத்தை உருவாக்க விரும்பினார். இவையெல்லாவற்றையும் செய்ய அவர் வேதாகமத்தை வாசிக்க வேண்டியிருந்தது.

ஓர் நாள் இரவு, ஓர் கருப்புநிற புத்தகம் அவருக்கு அருகில் திறந்து வைக்கப்பட்டிருந்ததை ஓர் சொப்பனத்தில் கண்டார். அதில் இரண்டு வரிகள் மிகவும் பிரகாசமாகக் காணப்பட்டன. அதை அவர் வாசிக்க ஆரம்பித்த பொழுது பரலோகத்திலிருந்து ஓர் சத்தம் அவரோடுகூடச் சேர்ந்து, "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" மத்.3:17 என்று வாசித்ததைக் கேட்டார்.

அவர் விழித்து எழுந்தபொழுது, அவரால் அந்த சொப்பனத்தை மறக்க

இயலவில்லை. அவருக்கு இரண்டு விதமான செய்திகள் வெளியாக்கப்பட்டன. அதாவது, இயேசு தேவனுடைய குமாரன் என்பதும், ஜெரோம் ஹைன்ஸ் ஆகிய அவர் தேவனுடைய குமாரன் அல்ல என்பதையும் புரிந்துகொண்டார். "நான், ஜெரோம் ஹைன்ஸ்ஸை மண்ணின் துகளாகக் கண்டேன்" என்று பின்பு நினைவு கூர்ந்தார். நாட்கள் செல்லச் செல்ல, ஹைன்ஸ் தேவனோடு தனிப்பட்ட முறையில் உறவுகொள்ள ஆரம்பித்தார். தனிப்பட்ட தேவன் மீது நம்பிக்கை இல்லாத, ஜெபத்தில் நம்பிக்கை இல்லாத இந்த இசை நாடக வல்லுனர், தேவனோடு ஒழுங்காகவும் தொடர்ச்சியாகவும் தொடர்புகொண்டு அநேக அற்புதங்களை தனது வாழ்வில் அனுபவிக்கலானார்.

1960ல் அவரது புகழின் உச்சக் கட்டத்தில் இருந்தபொழுது பாஸ்ட், போரிஸ் குடோநாவ் என்ற இசை இராகங்களில் பாட ரஷ்யாவில் உள்ள புகழ்பெற்ற போல்ஷி இசை நாடகச் சங்கத்தினரால் அழைப்புப் பெற்றார். அந்தக்காலம் அமெரிக்காவிற்கு ரஷ்யாவிற்கும் இடையே நடந்த பனிப் போரின் உச்ச கட்டமாக இருந்தது. அந்த இரு நாடுகளும் எதிராளி நாடுகளாக இருந்தாலும், இடை இடையே கலாச்சார பரிமாற்றம் செய்து கொண்டனர். ஹைன்ஸின் இசை நாடக நிகழ்ச்சிகள் மிகவும் விரும்பப் படத்தக்கதாக சிறப்பாக இருந்ததினால், அவரது ரஷ்யாவில் தங்கும் அவரது நாட்களை நீடிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். சில வேளைகளில் களைப்பும், தொண்டை வலியும், நிகழ்ச்சியை ரத்து செய்யக்கூடிய அளவிற்கு அவர் தள்ளப்பட்டார். ஆயினும் ஒவ்வொரு முறையும் தேவன் ஆச்சரியமாகப் பெலனும் சுகமும் கொடுத்து, இசை நிகழ்ச்சிகளில் பங்குபெற உதவி செய்தார். அவர் மாஸ்கோவில் நடந்த அவரது இறுதி இசை நிகழ்ச்சியில் பங்கெடுக்க வந்தபொழுது, "தேவனே, உமது அடியானாகிய எனக்கு இன்னமும் ஓர் வேண்டுதலை நீர் நிறைவேற்ற வேண்டும் எனது போல்ஷோய் இசை நிகழ்ச்சிக்கு பதிலாக குருச்சேவ்வை எனக்குத் தாரும்" என்று ஜெபித்தார். அப்பொழுது நிக்கிட்ட குருச்சேவ் ரஷ்யாவின் பிரதமராக இருந்தார்.

ஹைன்சின், மேலாளர், அந்தக் காரியம் செயல்பட முடியாத ஓர் காரியம் என்று கூறினார். உலகளாவிய நாடுகளின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. குருச்சேவ் விருப்பப்பட்டால் கூட ஹைன்சின் இசை நிகழ்ச்சிக்கு வருவதுபற்றி எண்ணிக்கூட இருக்கமாட்டார். ஆயினும் ஹைன்ஸ் தொடர்ந்து ஜெபித்து வந்தார்.

அவரது இறுதி இசை நிகழ்ச்சி நடக்க இருந்த அன்று காலை உணவு அருந்திக்கொண்டிருந்தபொழுது, அமெரிக்க ஐக்கிய நாட்டின் அதிபர் கென்னடி, கியூபா நாட்டிற்கான அரசியல் தடை உத்தரவை பிரகடனப் படுத்தியுள்ளார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டார். "இந்தத் தடையை மீறிச் செல்லும் எந்த ரஷ்யக் கப்பலையும் அவர்கள் தடை செய்வார்கள். அப்படி யென்றால் அது யுத்தத்தின் அறிகுறி என்று அவருக்குச் சொல்லப்பட்டது."

அன்று இரவு அவருடைய இசை நிகழ்ச்சிக்கு வர இருக்கும் பார்வை யாளர்களும் பகைமை உணர்வுடன்தான் வருவார்கள். குருச்சேவைப் பொறுத்தமட்டும், அவர் வருவார் என்று நினைத்துக் கூட பார்க்க இயலாது. ஆனால் ஹைன்ஸ் அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்யும் தேவனோடு கூட தனிப்பட்ட உறவு வைத்திருந்ததால், ஓர் அற்புதம் நிகழ வேண்டும் என்று அவர் தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருந்தார்.

இசை நாடக மேடையின் திரை திறக்கப்படுமுன்பு, திடீரென "குருச்சேவ் வருகிறார்! குருச்சேவ் வருகிறார்!" என்ற வார்த்தைகளைக் கேட்டார்.

ஓ! எத்தனை மகத்துவமுள்ள கடவுள்! நமது கடவுள்! ஓ! எத்தனை மகத்துவமுள்ள கடவுள்! நமது கடவுள் என ஹைன்ஸ் கூறினார்.

நிகழ்ச்சி நிரல் முடிந்தவுடன் 30 கம்யூனிச தலைவர்களோடுகூட ஹைன்ஸ்ற்கும் அவரது மனைவி லூசியாவிற்கும் குருச்சேவினால் அழைப்பு விடுக்கப்பட்டது. அமெரிக்க இசை நாடக மேதை தனக்குத் தெரிந்த சிறந்த ரஷ்ய மொழியில், ரஷ்ய பிரதமரைப் பார்த்து "கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக" என்று கூறினார்.

யுத்த நெருக்கடியான அந்த நாட்களில் ரஷ்ய பிரதமரைப் பார்த்த அமெரிக்கர்கள் ஜெரோம் ஹைன்ஸையும் அவரது மனைவி லூசியாவும் மட்டுமே ஆகும். "அந்த மகாப் பெரிய சரித்திரத்தின் உச்சகட்டத்தில் மண்ணின் துகள்களாக நாங்கள் இருவரும் பங்கெடுத்தோம்" என்று ஹைன்ஸ் கூறினார்! உலகம் யுத்தத்திற்கென ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. ஏவுகணைகளை ஏற்றிச் சென்ற ரஷ்ய கப்பல்கள், கியூபாவை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. அமெரிக்க அதிபர் ஜான் கென்னடியும் ருஷ்ய அதிபர் குருச்சேவும், மிகவும் தங்கள் கோபத்தை பரிமாறிக்கொண்டிருந்தனர். கிறிஸ்தவ இசை நாடகக் கலைஞரை சந்தித்த சில நாட்களில், யுத்தம் துவங்கி விடுமோ என்று எண்ணிக் கொண்டிருந்த நாட்களில் குருச்சேவ்,

கியூமாவிலிருந்து கப்பல்களை திரும்பப் பெறும் குறிப்பிடத்தக்க தீர்மானத்தை எடுத்தார்.

அற்புதங்கள் பெரியவைகளாக இருக்கலாம் அல்லது சிறியவைகளாக இருக்கலாம். நெருக்கடியான எதிர்ப்புகளின் மத்தியில் சமாதானம் உண்டானது. இசை நிகழ்ச்சிக்கு வந்து ஆச்சரியப்படத்தக்க விருந்தாளி, "அற்புதங்கள் இன்னமும் நடை பெறுகின்றன. தேவன் ஒவ்வொரு தனி நபரையும் நேசித்து கண்காணிக்கிற தேவன். அவர் எனக்காக மரிக்கும் அளவிற்கு அவர் என்னை நேசிக்கிறார்" என்று தேவன் இல்லையென்று முன்னொரு காலத்தில் கூறிக்கொண்டிருந்த இசைப்பாடகர் கூறுகிறார்.

சுரங்கத் தொழிலாளிகளுக்காக ஜெபியுங்கள்

ஜூலை 2002ம் ஆண்டில் பென்–சில்வேனியாவில், சோமர்செட் என்ற ஊருக்கு அருகில் உள்ள க்யூக்ரீக் சுரங்கத்தில், ஒன்பது சுரங்கத் தொழிலாளிகள் ஒடு சுவற்றை உடைத்துக்கொண்டு, பல ஆண்டுகள் புயலினால் நிறையப்பட்டிருந்த தண்ணீர் நிறைந்திருந்த செயலிழந்து கைவிடப்பட்ட ஓர் சுரங்கத்திற்குள் சென்றார்கள். அங்கே இருந்த வரைபடமானது உண்மையில் அந்த கைவிடப்பட்ட சுரங்கம், இந்த சுரங்கத் தொழிலாளிகள் இருந்த இடத்திலிருந்து முன்னூறு அடி தள்ளி இருப்பதாகக் காணப்பட்டது. ஆனால் ஏதோ ஓர் தவறு நிகழ்ந்துவிட்டது. அந்தச் சுரங்கத் தொழிலாளிகளின் எந்திரம் அந்தச் சுவற்றை உடைத்த உடன், அறுபது கோடி காலன்கள் உள்ள மிகக் குளிர்ந்த நீரானது வெள்ளமாக பாய்ந்து அந்தச் சுரங்கத் தொழிலாழிகளை மூழ்கடித்தது. அவர்கள்மேல் பாய்ந்த அந்தத் தண்ணீரின் அளவானது ஒலிம்பிக் விளையாட்டில் உள்ள ஏழு நீச்சல் குளங்களுக்கு சமமாக இருந்தது.

இந்த ஒன்பது சுரங்கத் தொழிலாளிகளும் தரைக்குக் கீழாக 240 அடி ஆழத்தில் சிக்கிக்கொண்டார்கள். தண்ணீர் மட்டம் மேலும் மேலும் உயர்ந்து கொண்டே இருந்தது. நவீன சரித்திரத்தில் இதுபோல இரண்டுமுறை மட்டுமே சுரங்கத் தொழிலாளிகள் இப்படிப்பட்ட வெள்ள நீரில் மாட்டி இருக்கின்றனர். அந்த இரண்டு முறையும் ஒருவர் கூட உயிர் பிழைக்க வில்லை. இந்த நிலைமையை இன்னும் மோசமாக்கக் கூடிய அளவிற்கு

இந்தச் சுரங்க விபத்தானது. செப்டம்பர் 11ம்தேதி 2001 ஆண்டு யுனைட்டட் விமானம் 93 என்ற விமானம் கீழே விழுந்து நொறுங்கி அனைத்துப் பயணிகளும் இறந்துபோன இடத்திலிருந்து பத்து மைல்கள் தூரத்தில்தான் இருந்தது.

அந்த சுரங்கத் தொழிலாளிகள் சுரங்கத்திற்குள்ளாக இருந்த உயரமான இடங்களைத் தேடி அதில் தஞ்சம் புகுந்தார்கள். ஆனால் அங்கு தண்ணீர் மட்டம் வெகு வேகமாக உயர்ந்து கொண்டிருந்தது. இருபத்திரண்டு ஆண்டுகள் சுரங்கத் தொழிலில் அனுபவம் நிறைந்த மார்க்க போப்பர்தேக் என்பவர் தான் விபத்து நடந்த அன்று களைப்போடும் கருவியை இயக்கிக் கொண்டிருந்தார். இப்பொழுது அவருக்கும் மற்ற எட்டுப்பேருக்கும் இடையே இருந்த மதில் போன்ற நீர் சூழ்ந்து இருந்ததால், அவர் அந்த நீரைக் கடக்க இயலாமல் தனிப்பட்டு விடப்பட்டார். மரணத்தைப் பற்றிய எண்ணங்கள் உடனே அவரில் ஏற்பட்டபொழுது, அவரால் ஜெபிக்க மட்டும் முடிந்தது. அவரது வாழ்க்கையில் என்றுமே ஜெபித்திராத அளவு அன்று மிக ஊக்கமாக ஜெபித்தார். அவர் தனிமையாக ஜெபித்த அந்த இரண்டுமணி நேரத்திற்குப் பின்பு தண்ணீர் மட்டம் ஓரளவு குறைந்தது. அதனால் அவரது சகத் தொழிலாளர்கள் மண்வாரும் ஓர் லிப்ட்டை இவர் இருக்கும் பக்கம் அனுப்பினார்கள். அதில் ஏறி அவர் அந்த நீரைக் கடந்து மற்றவர்களுடன் போய்ச் சேர முடிந்தது. அவரது ஜெபத்தின் பதிலாகத்தான் அவர் அந்த முறை காப்பாற்றப்பட்டு மற்றவர்களோடு சேர்ந்துகொள்ள முடிந்தது என்று எண்ணினார். இன்னும் அநேக ஆபத்துக்களை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆகவே இன்னமும் அதிக ஜெபமும் தேவைப்படுகிறது என்பதையும் உணர்ந்தார்.

தரைக்கு மேலாக அங்கிருந்த ஸ்தல வெண்டிஸ் என்ற உணவகத்தில் "சுரங்கத் தொழிலாளர்களுக்காக ஜெபியுங்கள்" என்ற அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டன. சொல்லப்போனால் சோமெர்செட் தேசம் முழுவதும், உணவகங்கள் கேஸ் நிரப்பப்படும் இடங்கள், வீடுகள் தெரு முனைகள் அனைத்திலும் 'சுரங்கத் தொழிலாளர்களுக்காக ஜெபியுங்கள்' என்று வைக்கப்பட்ட அறிவிப்புப் பலகைகள்மூலம் அனைவரும் ஜெபிக்கத் தூண்டப் பட்டனர்.

அதே நேரத்தில் பொறியியல் வல்லுனர்கள் அந்த ஒன்பது சுரங்கத் தொழிலாளிகளையும் காப்பாற்றுவதற்காக வெகுவாக முயற்சி எடுத்துக்

கொண்டிருந்தனர். முதலாவது, ஆறு அங்குல விட்டமுள்ள ஓர் குழாயை சுரங்கத்திற்குள் செலுத்தி உள்ளே இருப்பவர்கள் சுவாசிப்பதற்காகக் காற்றை உள்ளே அனுப்பினார்கள். உள்ளே அடைபட்ட அந்தச் சுரங்கத்தொழிலாளிகள் மூச்சுவிடக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த அதே இடத்திற்கு அந்தக் குழாய் செலுத்தப்பட்டது. சில தொழிலாளிகள் அவர்கள் சுவாசிக்கக்கூடிய அந்த காற்று வந்தடைந்ததுகூட அவர்களுடைய ஜெபத்திற்கான பதில் என்று கூறினார்கள். இன்னமும் அநேகக் காரியங்கள் நடைபெற வேண்டி இருந்தது.

அந்தக் குழாயின் வழியாகச் சென்ற காற்றின் அழுத்தமானது தண்ணீர் மட்டத்தைக் கீழே தள்ளினது. இப்பொழுது அந்தச் சுரங்கத் தொழிலாளிகள் தண்ணீரில் மூழ்காமல் காப்பாற்றப்பட சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால், அவர்கள் விரைவாக கண்டுபிடிக்கப்படாவிட்டால், பசியினால் இறந்துவிடக் கூடிய சூழ்நிலை இருந்தது. அப்பொழுது அவர்களுக்கு அருகிலே உணவு அடங்கிய ஓர் வாளி நீரில் மிதந்து வந்தது. அன்றைய மதிய உணவிற்காக, அந்தத் தொழிலாளிகளில் ஒருவர் கொண்டுவந்த உணவு வாளி அது. ஆனால் அது தற்பொழுது, தரையின்கீழ் ஓடும் ஆற்று நீரால் அடித்து வரப்பட்டு, அவர்களுக்குத் தேவையான நேரத்தில் வந்து அவர்கள் கைக்குக் கிடைத்தது. அந்த உணவு வாளியில், மாட்டு இறைச்சியை தன்னிடையே கொண்ட ரொட்டித்துண்டும் ஒரு குப்பியில் மவுண்டன் ட்யூ என்ற பானமும் இருந்தது. அந்த ஒன்பது தொழிலாளிகளும், ஆளுக்கு ஒரு வாய் ரொட்டித் துண்டை கடித்துக்கொண்டு, ஒன்று அல்லது இரண்டு மடக்கு பானத்தைப் பருகினார்கள். இது இரண்டாவது அதிசயம்.

மூன்றாவது அதிசயத்தைப் பற்றி பின்பு தான் அறிந்து கொண்டார்கள். உண்மையாக, அது ஓர் கெட்ட செய்தியாகத்தான் அப்பொழுது தெரிந்தது. மேலே இருந்து துளைபோடும் கருவியின் சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. அது அவர்களுக்கு ஆறுதல் அளித்தது. ஆனால் திடீரென அந்த சத்தம் நின்று விட்டது ஏன்? என்ன தவறு நடந்தது?

சுரங்கத்திற்கு மேலாக, மிகவும் பொறியாளர்கள் தப்பித்துக்கொள்ளத் தோண்டிய குழியில் துளை போட்டுக்கொண்டிருந்த பதினைந்தாயிரம் பவுண்டு எடை கொண்ட துளைபோடும் கருவியின் பகுதி உடைந்து விட்டதாக, மிகச் சோர்வுடன் பொது மக்களுக்கு அறிவித்தார்கள். இப்பொழுது அவர்கள், ஓர் புதிய துளைபோடும் பகுதியை இணைத்து மறுபடியும் துளை

போடுதலை ஆரம்பிக்க வேண்டும். இதனால் சுரங்கத் தொழிலாளிகளைக் காப்பாற்றும் பணி பதினைந்து மணிநேரம் தடைபட்டது. இதற்குள்ளாக அது ஓர் தேசிய செய்தியாக தேசம் எங்கும் பரவிவிட்டது. தேசமெங்கும், உலகமெங்கும் மக்கள் அந்த ஒன்பது சுரங்கத்தொழிலாளிகளுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த காலதாமதமும் ஓர் தடையாக இருந்தது.

பின்பு, பென்–சில்வேனியாவின் ஆளுநர் மார்க் ஸ்வீக்கர் அந்த துளைபோடும் எந்திரத்தின் பகுதி உடைந்தது 'தேவனுடைய செயல்' என்று கூறினார். அவர்கள் துளை போட்டுக் கொண்டிருந்த பகுதியில் அந்த சுரங்கத்தின் செங்குத்தான வழி உடைந்திருந்தால், அதிகமான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அந்தத் தொழிலாளிகள் நீரில் மூழ்கி இறந்திருப்பார்கள். அதற்குப் பதிலாக அந்த காலதாமதமான நேரத்தில் பொறியாளர்கள் நிமிடத்திற்கு இருபதாயிரம் காலன் தண்ணீரை பம்ப் பண்ணி வெளியேற்றினார்கள். அதே சமயத்தில், துளைபோடுவதற்கான வேறு ஓர் புதிய இடத்தைத் தேடிக்கொண்டிருந்தார்கள். தங்களது அனுமானத்தில் துளை போட ஆரம்பித்தார்கள். அந்தத் தொழிலாளிகள் ஒரு சதுர மைல் தூரத்திற்குள் இருப்பார்கள். அந்தத் தொழிலாளிகள் இருக்கக்கூடிய சரியான இடத்தில் துளை போடவேண்டுமே என்று ஓர் அதிகாரி கூறினார். அவர்கள் சரியான இடத்தில் துளை போட்டார்கள். "இது சம்பவிக்காத ஓர் அற்புத நிகழ்ச்சி" என்று ஓர் பாதுகாப்பு நிபுணர் கூறினார்.

எழுபத்தி ஏழு மணி நேரத்திற்குப் பின் தரைக்குக் கீழாக 240 ஆழத்தில் இருந்த அறையை அந்த இரண்டாவது துளைக்கருவி அடைந்தது. முதன் முதலாக பொறியாளர்கள் கேட்டது, அந்தத் தொழிலாளிகள் அனைவரும் கூறிய 'தேவனுக்கு மகிமை' என்ற சத்தமே ஆகும். கடைசியாக வெளி வந்தவர், ஆரம்ப முதல் ஓர் அற்புதம் நிகழ வேண்டும் என்று ஜெபித்துக் கொண்டிருந்த மார்க் பாப்பர்நேக் ஆவார்.

ஆளுநர் ஸ்வீக்கர் 'ஒன்பதிற்கு ஒன்பது' என்று முழு உலகிற்கும் அறிவித்தார். ஒன்பது சுரங்கத்தொழிலாளிகளும், உயிருடனும், சுகத்துடனும் காப்பாற்றப்பட்டனர்.

அன்ட்ரியா உணவகத்தில் 'தேவனே உமக்கு நன்றி' என்ற ஓர் விளம்பரப் பலகை காணப்பட்டது. "எங்களது ஜெபம் கேட்கப்பட்டது என்று நாங்கள் உணர யாரோ ஒருவர் எங்கள் கன்னத்தில் அறைந்து உணர்வு உண்டாக்கியது போல உள்ளது" என்று பெல் உணவகத்தின் பொறுப்பாளர் கூறினார். சோமர்

செட்டைச் சேர்ந்த ஒருவர் "சுரங்கங்கள் நரகமாகக் காணப்படலாம். ஆனால் அங்கேயும் அற்புதங்கள் நடக்கின்றன" என்று கூறினார்.

பென்-சில்வேனியா, முழுவதும் தேசம் முழுவதும், உலக முழுவதும் அந்த ஒன்பது சுரங்கத்தொழிலாளிகள் காப்பாற்றப்பட்டதிற்காக, தேவனைத் துதித்தார்கள். விடாமுயற்சியுடன் அவர்களைக் காப்பாற்றுவதற்காக அநேகர் செய்த முயற்சிகளையும் அந்த ஒன்பது தொழிலாளிகளின் திடமான மன தைரியத்தையும் குறித்து அநேகர் பாராட்டினார்கள். ஆனால் டுடே என்ற செய்தித்தாள் "அநேகர் இது தேவன் செயல்பட்டதால் நடந்தது என்று கூறினார்கள்" என்று எழுதியது.

கேப் டவுன்

நிறவெறியின் முடிவு

"இரத்த ஆறு ஓடப்போகிறது". தென் ஆப்பிரிக்காவில் 1990ல் ஆண்டின் துவக்கத்தில், அங்கு நிலவி வந்த நிறவெறி உடைந்து, அழிந்து போன பொழுது, உலகெங்கும் இருந்த அரசியில் பார்வையாளர்கள் அப்படித்தான் கூறினார்கள். நிறவேறுபாட்டினால், இனவெறியைத் தூண்டி, அடிமை ஆட்சி செய்து வந்த வெள்ளை நிற மக்களின் ஆட்சி முடிந்தது. கருப்பர் இனத்தைச் சார்ந்த நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அநேக ஆண்டுகளாக அடிமைத்தனத்திற்கு உட்பட்ட கருப்பர் இனமக்கள் தங்களது பழிவாங்கும் உணர்வை வெளிப்படுத்த வன்முறையில் செயல்படப் போகிறார்கள் என உலக அரசியல் பார்வையாளர்கள் எண்ணினார்கள்.

அவர்கள் எதிர்பார்த்த இரத்த ஆறு ஓடவில்லை. அமைதியாக நடைபெற்ற ஆட்சி மாற்றத்தைக் குறித்து செய்தித்தாள்கள் 'இது ஆச்சரியம்' என்று குறிப்பிட்டனர். இது எப்படி அமைதியாக நடந்தது? ஒரே பதில் ஜெபம் தான்.

செய்தித்தாள்கள், அமைதியாக இந்த அரசாட்சி மாற்றத்தை மிகவும் ஜாக்கிரதையுடன் கையாண்ட மண்டேலாவைப்பற்றி செய்தித்தாள்கள் புகழ்ந்து பேசினர். ஆனால், இரண்டு ஜெப வீரர்கள், இதற்கு பின்பாக அநேக ஆண்டுகளாக ஜெபத்துடன் செயல்பட்டு வந்தார்கள்.

இதற்கு முன்பே 1984ல் நோபல் பரிசைப் பெற்ற டெஸ்மாண்ட் டுட்டு

1986ல் டூட்டு கருப்பர் இன ஆர்ச் பிஷப்பாக அறிவிக்கப்பட்டார். ஒரு பக்கம் நிறவெறியையும், மறுபக்கம் வன்முறையையும் அவர் எதிர்த்ததால், மிக கடினமான அரசியல் வாழ்க்கை வாழ்ந்தார். "கிறிஸ்தவ சமுதாயத்தில் ஒரு சிலரால் நேசிக்கப்பட்டார். ஒரு சிலரால் வெறுக்கப்பட்டார். ஒரு சிலரால் மதிக்கப்பட்டார். ஒரு சிலரால் இழிவுபடுத்தப்பட்டார். தென் ஆப்பிரிக்காவில் திருச்சபைக்கும், அரசாங்கத்திற்கும் நடந்த அந்த பயங்கரமான எதிர்ப்புகள் மத்தியில் டூட்டு மிக முக்கிய மனிதராக விளங்கினார்" என்று அவரது வாழ்க்கைச் சரித்திரத்தை எழுதின ஆசிரியர் கூறுகிறார்.

டூட்டு வாலிபனாக இருக்கும்பொழுது, அதிகாலையில் நடக்கப் போவதற்கு முன் காலை 5.30 மணிக்கோ அல்லது அதற்கு முன்போ எழுந்து ஜெபிக்கும் பழக்கம் உடையவர் "அந்த அதிகாலை, ஜெபத்தின்மூலம் தேவனோடு உறவு கொள்ளாவிட்டால் எனக்கு ஓர் மன நிம்மதி இருக்காது. அதிகாலை பல் துலக்காத உணர்வைவிட மிக மோசமாக உணர்வேன். வழிகாட்டும் சுக்கான் இல்லாததுபோல் உணருவேன்" என்று கூறுவார்.

ஒரு முறை காவலர்கள் அவரைத் துரத்தி முரட்டுத்தனமாக நடத்திக் கொல்லப்போவதாக பயமுறுத்தினபொழுது, அவர் உயிர் தப்பினதற்காக தேவனைத் துதித்து மகிமைப்படுத்தினார். அவர்கள் அதிகபட்சமாக என்னைக் கொல்லத்தான் முடியும். ஆனால் "மரணம் என்பது ஓர் கிறிஸ்தவனுக்கு நடக்கக் கூடிய மிக மோசமான செயல் அன்று" என்று கூறினார்.

வெள்ளையர்கள் பெரும்பான்மையாக இருந்த அரசாங்கத்தினராலோ அல்லது அவரைச் சார்ந்த கருப்பர் இன மக்களாலோ வன்முறை ஏற்படுவதை அவர் கண்டனம் செய்தார். ஒரு முறை பாதுகாவலிற்கு இருந்த காவலர் ஒருவரால் கொடுமையாக மிருகத்தனமாக கொல்லப்பட்ட ஒரு கருப்பர் இன போராளி ஒருவரின் அடக்க ஆராதனையில், மிகவும் பாதிக்கப்பட்ட உணர்வுகளுடன் அங்கு நின்று கொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்து, "இந்த நாட்டை ஆளுகின்ற தலைவர்களுக்காக, காவற் துறைக்காக, விசேஷமாக சிறைகளில் பாதுகாவலராக இருக்கும் காவற்காரர்களுக்காக, உங்களை ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அவர்களும் மனிதர்கள்தான் என்று அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். தென் ஆப்பிரிக்காவில் இருக்கும் வெள்ளையர்களுக்காக ஜெபியுங்கள்" என்று டுட்டு கூறினார்.

1980ல் நெல்சன் மண்டேலா சிறையில் இருக்கும் பொழுதே எதிர் காலத்தில் நிறவெறி அரசு தள்ளப்பட்டுப்போகும் என்று ஓர் தீர்க்கதரிசனமாக

உரைத்த டுட்டு, "இப்பொழுது நமக்கு நெல்சன் மண்டேலா வேண்டும்" என்று கூறினார். கருப்பர் இன மக்கள் கொதித்து எழாதபடி தடுத்ததோடு டுட்டு நெல்சன் மண்டேலா அதிபராக பொறுப்பெடுக்கும் அந்த நாளில், "கருப்பரும் வெள்ளையரும் இணைந்து நாம் நமது புதிய சமுதாயத்தைக் கட்டுவோம் நாம் அனைவரும் தலை நிமிர்ந்து நடப்போம்" என்று நெல்சன் மண்டேலாவைக் கூற ஊக்கப்படுத்தினவரும் டுட்டுவே.

அனைத்துலக ஆப்பிரிக்கன் எண்டர்பிரைஸ் என்ற நிறுவனத்தின் தலைவரான மைக்கேல் கேசிடி என்ற வெள்ளையரும் இதில் மிக முக்கிய பங்கெடுத்துள்ளார். ஏப்ரல் 1993லிருந்து ஆயிரத்திற்கும் மேலான ஜெபக் குழுக்களை கேசிடி ஏற்படுத்தி, வரப்போகிற தேர்தலுக்காக, சங்கிலித் தொடர் ஜெபங்கள் நடைபெற உதவினார். அப்படிப்பட்ட ஓர் பெரிய ஜெபக் குழுவில் தேர்தலைப் புறக்கணிக்க எண்ணியிருந்த ஓர் கருப்பர் இன அரசியல் தலைவர் தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு, தேர்தலில் பங்கெடுத்தார். தேர்தல் சுமுகமாக நடைபெற அது வழி வகுத்தது என்று அனைத்து செய்தித்தாள்களும் செய்தி வெளியிட்டன. தேர்தலுக்கு சற்றுமுன்பாக தென் ஆப்பிரிக்காவில் தேவனின் சித்தம் என்ன என்பது பற்றி அறிய "இயேசுவின் சமாதானக்கூட்டம்" ஒன்றை கேசிடி ஒழுங்கு செய்தார். நிறவெறிக்கு அப்பாற்பட்டு ஏறக்குறைய முப்பதினாயிரம்பேர் அதில் பங்கெடுத்தனர். அந்த சமாதானக் குழுவின் ஜெபத்தின் விளைவு, அதில் பங்கெடுக்காத ஆயிரக்கான மக்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

தேர்தல் முடிந்து சில வாரங்கள் கழித்து, நெல்சன் மண்டேலா அதிபராக பொறுப்பெடுத்தபொழுது, மதசார்பற்ற நிருபர்கள் கூட இது ஓர் அதிசயம், அற்புதம் என்றார்கள். ஆனால் திருச்சபை முழங்காலில் நின்றதை அந்த நிருபர்கள் பார்க்கவில்லை.

3

தேவன் எதிர்பாராத காரியங்களைச் செய்யும்பொழுது

ஆச்சரியம் ஆச்சரியமே

"எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து, நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்" (மாற்.11:23-24).

தேவன் நம்மை ஊகிக்க வைக்கிறார். அவர் செயல்படும் விதத்தைப் பற்றி நாம் எல்லாம் அறிந்திருக்கிறோம் என்று நாம் எண்ணும்பொழுது, ஏதாவது புதிய காரியத்தைச் செய்து நம்மை பிரமிக்க வைக்கிறார். நாம் கேட்டுக் கொள்வதைவிட, நாம் கற்பனை பண்ணுவதைவிட அதிகமாகத் தேவன் செய்கிறார் என்று அப்போஸ்தலன் கூறும்பொழுது, அவர் இலக்காக உள்ளார். ஒரு காரியத்தை நாம் நிச்சயமாக்க சொல்லமுடியும். நமது தேவன் ஆச்சரியப்படத்தக்கவர்.

சில நேரங்களில், உண்மையாகவே நமது நம்பிக்கையற்ற ஜெபங்களுக்கு பதில் கிடைக்காது என்று எண்ணும்பொழுது நமது ஜெபங்களுக்குப் பதில் கொடுத்து நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறார். "தேவனே இந்த

இக்கட்டிலிருந்து என்னை விடுவியும்'' என்று நாம் அனைவருமே கதறின நேரங்கள் உண்டு. சில நேரங்களில் அப்படியேதான் நடக்கிறது.

சில நேரங்களில் நாம் அற்பமான காரியங்களுக்காகச் செய்யும் ஜெபத்திற்குக் கூட அவர் பதில் அளித்து நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறார். காரை நிறுத்துவதற்கு இடம்: சரியான நிறமுள்ள காலணிகள் அண்ட சராசரங்களையும் ஆளுகின்ற தேவன், இப்படிப்பட்ட அற்பமான காரியங் களைக் குறித்து கவலைப்படுவது தேவையா? அவர் கவலைப்படுகிறார்.

அநேக நேரங்களில், நமது ஜெபத்திற்கு தேவன் பதில் அளிக்கும் முறை ஆச்சரியமாக உள்ளது. தேவனது சரியான செயல் திட்டங்களை நாம் புரிந்துகொள்ள முயன்றால், உண்மையில் நம்மால் புரிந்துகொள்ள இயலாது. நமது விருப்பங்களையும், தேவைகளையும் சிறப்பான முறைகளில் சந்திக்க தேவன் வேறுவழிகளை பயன்படுத்துகிறார்.

அன்பின் தேவனே, ஒழுங்கற்ற எனது வாழ்க்கை, உமது கரத்தினால், ஒழுங்கான உயிரோட்டமுள்ளதாக மாற்றமடைகிறது.

காரல் நாப்

விசுவாசத்தினால் ஓர் மலையைப் பெயர்த்தல்

அந்த இடத்திற்கு சூரிய உதய இல்லம் என்று பெயர். ஓர் பெரிய மலையினால் ஓர் நாளின் அதிகப்படியான நேரம் முழுவதும் ஒரு மலை யினால் மறைக்கப்படாமல் இருந்திருந்தால் அந்த இடத்திற்கு அந்தப் பெயர் பொருத்தமானதாக இருந்திருக்கும். 1930ம் ஆண்டு வரை அந்த இடம் ஜப்பானிய அனாதைப் பெண்களுக்கு ஓர் புகலிடமாக இருந்தது. அநேகப் பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருப்பார்கள்.

ஒரு நாள் ஓர் தாயார் தனது நான்கு பிள்ளைகளுடன் அங்கு வந்தார். கடைசி குழந்தை காச நோயினால் பீடிக்கப்பட்டிருந்தது. அவர்கள் உடமைகள் யாவும் அந்த பூமி அதிர்ச்சியில் அழிந்து போயின. உண்மையில் அந்த சூரிய உதய இல்லமானது குடும்பங்களை வைத்துக்கொள்ளும் வசதி உடையது. ஆனால் அன்று அந்த இல்லத்தை நடத்திவந்த ஐரின் வெப்ஸ்டர் ஸ்மித் என்ற மிஷனரி, இந்த சிறு கூட்ட மக்களை ஏற்றுக்கொள்வதன் மூலம்

அவர்களுக்கு விதிவிலக்கு அளித்தார். அந்தச் சிறு குழந்தைக்கு உடனே மருத்துவ உதவி தேவைப்பட்டது என்பது தெளிவான காரியமாக இருந்தது. ஆகவே உடனே அக்குழந்தையை காசநோய் நிவாரண சுகாதார மையத்திற்கு அனுப்பப்பட்டாள்.

சில வாரங்களுக்குள்ளாக, அந்தக் குழந்தை மிகவும் பெலவீனமடைந்து விட்டது. அந்த சுகாதார மையத்திலிருந்த மருத்துவர் அந்தக் குழந்தை அதன் தாயோடுகூட இருக்கவேண்டும் என்று விரும்பினார். சூரிய உதய இல்லத்தில் உள்ள சுத்தமான காற்று அந்தக் குழந்தைக்கு மிகவும் நல்லது அத்தோடு கூட அதற்கு சூரிய ஒளியும் தேவைப்பட்டது. ஆனால் அங்கிருந்த மலை சூரிய ஒளியை வரவிடாமல் தடையாக இருந்தது. வெப்ஸ்டர் ஸ்மித், அந்த மலை அகன்று போக ஏதாவது வழி உண்டா என யோசித்தார்கள்.

சூரிய உதய இல்லத்தில், உள்ள மற்ற குழந்தைகளிடம் இந்த இக்கட்டான நிலைமையைப்பற்றி, வெப்ஸ்டர் ஸ்மித் கூறினார்கள். அவர்கள் அனைவரும் இதற்கு உதவ முன்வந்தார்கள். அவர்களில் ஒருவர், "நாம் செய்ய வேண்டியது இன்னதென்று எனக்குத் தெரியும்" என்று கூறினாள். "நாமே, மண் வாரியினால், கொஞ்சம் கொஞ்சமாக மண்ணை வாரி அந்த மலையை அகற்றலாம்" என்று கூறினாள். உடனே அனைவரும் செயல்பட்டார்கள். ஆனால் அவர்களது சிறிய மண்வாரியினால் அந்த மலையை வெட்டி நீக்க இயலவில்லை. எப்பொழுதும்போல, பெரியதாகவே தான் இருந்தது.

ஒரு நாள் அவர்களது மிஷனின் தலைவரைப்போய்ப் பார்க்க வெப்ஸ்டர் ஸ்மித் மற்றொரு ஜப்பானிய ஊருக்குச் செல்ல வேண்டியது இருந்தது. அவர்கள் ஊருக்குச் செல்ல இருக்கும் சமயத்திலும், பிள்ளைகள் அந்த மலையை மண்வாரி கொண்டு வெட்டி எடுக்கப்போவதாகக் கூறினார்கள். வெப்ஸ்டர் தான் போகுமுன்பு அந்த மலையைக் குறித்து ஜெபிக்கும்படி பிள்ளைகளுக்கு ஞாபகப்படுத்தினார். சில ஜெபங்கள் நம்பிக்கையூட்டு பவைகளாக இல்லை. ஒரு பெண் சென்ற ஞாயிற்றுக் கிழமை எங்களது ஞாயிறு பள்ளியில், "கர்த்தராகிய இயேசுவே, கடுகுவிதையளவு விசுவாசம் எங்களுக்கு இருந்தால், இந்த மலைகளைப் பெயர்க்கமுடியும் என்று கூறக் கேட்டோம். தேவனே இந்த மலைகள் பெயர்ந்து போக உதவி செய்யும்" என்று ஜெபித்தாள். "அன்பின் தேவனே இந்த மலையைப் பெயர்த்து சமுத்திரத்திற்குள் போட எங்களால் இயலும் என்று கூறினீர் இதோ அந்தக் கடல் சாலைக்கு

மறுபக்கம் தான் உள்ளது. தயவு கூர்ந்து, எங்களது இந்த மலையை அகற்றிக்கொடுப்பீரா?" என்று மற்றொரு பெண் ஜெபித்தாள்.

ஜெப்ஸ்டர் விசித்து எதிர் பார்த்ததைவிட, மிகுந்த வேலையோடு அதிக நாட்கள் செலவழிக்க நேரிட்டது. ஒரு நாள் சூரிய உதய இல்லத்தின் பிள்ளைகளிடமிருந்து ஓர் தபால் வந்தது. "நீங்கள் எப்பொழுது இல்லத்திற்கு வருகிறீர்கள். வேகமாக வாருங்கள். உங்களுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருக்கிறது" என்று அந்தத் தபாலில் பிள்ளைகள் எழுதியிருந்தார்கள்.

அவர் திரும்பி வந்தபொழுது, இல்லத்தின் பிள்ளைகள் அனைவரும் அவரை பின்பக்க வழியாய் அழைத்துச் சென்றார்கள். எட்டிப்பார்க்காதீர்கள் என்று கூறியிருந்தார்கள். அப்படியே அவரை இல்லத்தின் முன் பகுதிக்கு அழைத்து வந்து, "இதோ பாருங்கள்" என்று கூறினார்கள்.

அவர் பார்த்தார் மலையைக் காணவில்லை. மலை மறைந்தே போய் விட்டது. அவரால் நம்ப இயலவில்லை. "என்ன நடந்தது" என்று கேட்டார்.

பிள்ளைகள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டிருந்தபடியினால், வார்த்தை களுக்குமேல் வார்த்தைகள் விழுந்து தெளிவாகப் பேச இயலவில்லை. முந்தின வாரம் ஓர் பெரிய டிரக் வண்டி நிறைய பணியாட்கள் இந்த மலைக்கு வந்தார்கள். ஒரு வார்த்தை கூடக் கூறாமல், அந்த பணியாட்கள் தங்கள் கையில் இருந்த கோடரியினாலும், மண்வாரியினாலும் அந்த மலையில் இருந்த மண்ணைத் தோண்டி அந்த டிரக் வண்டியில் நிரப்பினார்கள். ஒரு டிரக்கிற்குப் பின் மற்றொரு டிரக் என அநேக வண்டிகள் வந்து மலையை வெட்டி மண்ணை எடுத்துச்சென்றனர். இறுதியில் அந்த இல்லத்தில் பணி செய்யும் ஒருவர் என்ன நடக்கிறது என்று கேட்டாள். அந்தப் பணியை கண் காணித்து வந்த கண்காணிப்பாளர், கடலினால் அரிக்கப்பட்டு சேதமடைந்த ஓர் இடத்தை குழந்தைகள் விளையாட்டு மைதானமாக மாற்றுவதற்காக, இந்த மலையினைத் தோண்டி மண் எடுத்துச் செல்கின்றோம் என்று விளக்கினார்.

"தேவன் நிச்சயமாகவே நமது ஜெபத்தைக் கேட்டார்" என்று ஓர் பெண் தன் ஆசிரியரிடம் கூறினாள்.

இப்படியாக அநேகமுறை நடக்கின்றது. தேவன் இதைவிடப்பெரிய காரியங்களைச் செய்கிறார். அந்தப் பெண் பிள்ளைகள் விரும்பின படி, அந்த மலையைத் நீக்கினதுமின்றி, அவர்கள் விளையாட ஓர் விளையாட்டு மைதானத்தையும் தேவன் கொடுத்தார்.

ஓர் சில வாரங்களில் காசநோயினால் பாதிக்கப்பட்டிருந்த அந்தக் குழந்தையானது, சூரிய ஒளி வீசும் சூரிய உதய இல்லத்தில் தன் தாயோடு கூட சேர்க்கப்பட்டாள்.

ரோதையின் மிகப் பெரிய ஆச்சரியம்

கி.பி.43ம் ஆண்டு, எருசலேம் ஆலயத்தின் வடமேற்குப் பகுதியில் இருந்த அந்தோனியா என்ற கோபுரத்தில் இரண்டு காவற்சேவகர்களுக்கு இடையே ஓர் கைதி சங்கிலிகளினால் கட்டப்பட்டவனாக நின்று கொண்டிருந்தான். மேலும் இரண்டு சேவகர்கள் கோபுரக் கதவைக் காவல் காத்துக்கொண்டு நின்றார்கள். சமுதாயத்திற்கு கேடு விளைவிக்கக்கூடிய இந்தக் கைதி யார்? ஒரு கொலைகாரனா? ஓர் தீவிரவாதியா? இல்லை. நசரேயனாகிய இயேசுவை ஆராதனை செய்யும் மக்கள் கூட்டத்தின் தலைவராக இருந்த பேதுருதான் அவர்.

ஆலய வளாகத்திற்கு தென்மேற்கே ஓர் அறைமைல் தூரம் தள்ளி, மேரி அவளது மகன் யோவான் என்ற மார்க் இவர்களின் வீட்டின் மேலறையில், இயேசுவைப் பின்பற்றும் ஒரு கூட்ட மக்கள், கூடி, ஜெபித்துக் கொண்டிருந் தார்கள். கொடுமையான ரோம அரசை கீழே விழத்தள்ள சதித்திட்டம் தீட்டியா அவர்கள் ஜெபித்தார்கள்? இல்லை. அவர்கள் பேதுரு எப்படியாவது விடுதலை செய்யப்பட்ட வேண்டும் என தேவனை நோக்கி வேண்டினார்கள்.

சில நாட்களுக்கு முன்புதான் அகரிப்பா மன்னன் இயேசுவோடு மிக நெருங்கிய தொடர்புகொண்டிருந்த யாக்கோபு என்ற சீஷனை சிரச்சேதம் செய்து கொலை செய்திருந்தான். ஆரம்பகால கிறிஸ்தவ சமுதாயத்தினருக்கு, இந்தத் தலைவனை இழந்தது மிகப்பெரிய இழப்பாக இருந்தது. இதைத்தான் அந்த ஏரோது மன்னனும் விரும்பினான். அடுத்தபடியாக, கொல்லுவதற் கென அடுத்த கிறிஸ்தவ தலைவனாக இருந்த பேதுருவை இவன் சிறைப் பிடித்தான். அது பஸ்கா பண்டிகை காலமாக இல்லாதிருந்தால், பேதுரு உடனே கொல்லப்பட்டிருப்பார். பஸ்கா பண்டிகைக் காலமாக இருந்தபடியி னால் இரவும் பகலும் நான்கு காவலர்கள் பேதுருவை காவல் பண்ணி வந்தனர்.

பதிமூன்று வருடங்களுக்குமுன் இயேசு தமது சீஷர்களுடன் மேரி, மாற்கு இவர்களின் வீட்டில் உள்ள மேலறையில் தான் பஸ்காவை ஆசரித்தார்.

அன்றிலிருந்து அந்த இடம் கிறிஸ்தவர்கள் வழக்கமாக்க கூடும் இடமாக மாறிற்று. பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியினாவர் *சீஷர்களின்* மேல் இறங்கினதால், இயேசு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அன்று ஏற்பட்ட அசைவு காலப்போக்கில் பலம் குன்றிவிட்டது. யாக்கோபின் *சிரைச்* சேதம், சீஷர்களிடையே ஓர் அசைவை ஏற்படுத்தியது. ஆகவே எப்படியாவது பேதுரு விடுவிக்கப்படுவதின் மூலம் ஓர் அற்புதம் நிகழவேண்டும் என மிக விசுவாசத்துடன் ஜெபித்து வந்தார்கள்.

இந்தச் சமயத்தில் அந்தோனியா கோபுரத்தில் ஓர் புதுமையான நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. பேதுரு ஆழ்ந்த நித்திரை செய்து கொண்டிருந்தார். இரு காவலர்களும் நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த காவலர்களுடன் பேதுரு சங்கிலிகளினால் பிணைக்கப்பட்டிருந்ததால் தப்பிச் செல்ல இயலாது. திடீரென அந்த அறையிலே தேவதூதன் தோன்றினான். அந்த அறைமுழுவதிலும், பேதுருவின் முகத்திலும் வெளிச்சம் பிரகாசித்தது. தூதன் பேதுருவை விலாவிலே தட்டி, “எழுந்திரு, வா, வேகமாக வெளியேறுவோம்” என்று கூறினான். தான் கட்டப்பட்ட சங்கிலிகளைப் பற்றியோ அல்லது சிறைச்சாலையை விட்டுத் தப்பிச் செல்வது என்பது நடக்கக் கூடியக் காரியம் அல்ல என்று யோசிக்கும்முன்பே சங்கிலிகள் கழன்று கீழே விழுந்தன. காவற்காரர்களை வேகமாகக் கடந்து, சிறைச்சாலையைவிட்டு, பேதுருவைத் தேவதூதன் வழி நடத்தி வந்தான்.

உண்மையிலே இந்தச் சம்பவங்கள் நடக்கின்றதா அல்லது அது ஓர் சொப்பனமா என பேதுருவிற்குப் புரியவில்லை. எருசலேம் நகரத்திற்குச் செல்லக்கூடிய இரும்புக் கதவுகளை நோக்கி நடந்து வந்தனர். அப்பொழுது கூட அவர் விடுதலை அடைந்தது உண்மையானது என்பதை அவரால் புரிந்துகொள்ள இயலவில்லை. அந்த இரும்புக் கதவுகளின் அருகே வந்தவுடன் அந்தக் கதவுகள் தாமாகத் திறந்தன. தேவ தூதன் பேதுருவைத் தெரு வழியாக சிறிது தூரம் நடத்தி வந்தார். பின்பு திடீரென மறைந்து விட்டார். எருசலேமின் இருள் சூழ்ந்த தெருக்களில் தனிமையாக பேதுரு நின்றபொழுதுதான், நடந்தது கனவல்ல என்றும், உண்மையான நிகழ்வு என்றும் புரிந்து கொண்டார். பேதுருவிற்குத் தெளிவு வந்தபொழுது, நேராக மேலறையை நோக்கி வேகமாக நடந்தார். ஏனெனில் அந்த மேலறையில் *சீஷர்களின்* கூட்டத்தை நிச்சயமாகக் காணலாம் என்று அங்கு சென்றார்.

மேரியின் வீட்டிற்குச் செல்லும் வளாகத்தின் முன் கதவு அடைக்கப்பட்டிருந்தது. ஆகவே பேதுரு, கதவைத் தட்டினார். அங்கு பணி செய்துவந்த

ரோதை என்ற பணிப்பெண் கதவைத் திறக்க வந்தாள். "யார் கதவைத் தட்டுவது?" என்று கேட்டாள்.

"நான்தான் பேதுரு" என்று பதில் கூறினார்.

ரோதையால் நம்ப இயலவில்லை. அவரது விடுதலைக்காகத்தான் ஜெபித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் வீட்டின் முன்பு நிற்கிறார். அவள் மிகவும் ஆச்சரியப்பட்டு பேதுருவிற்கு கதவுகளைக் கூடத்திறக்காமல் உள்ளே ஓடி, பேதுரு வந்திருக்கிறார் என்ற செய்தியைக் கூற வீட்டிற்குள்ளே ஓடிவிட்டாள். தப்புவிக்கப்பட்ட கைதியான பேதுரு வெளியே நின்று, இன்னமும் கதவைத் தட்டிக்கொண்டே நின்றார்.

வாசலுக்கு முன்னே பேதுரு நிற்கிறார் என்று ஜெபித்துக்கொண்டிருந்த சீஷர்களிடம் ரோதை கூறினாள்.

'அவர்கள், நீ பிதற்றுகிறாய்' என்றார்கள். அவருடைய தூதனையோ அல்லது வேறு ஏதோ ஒன்றை அவள் பார்த்திருப்பாள் என்றார்கள். ஆனால் கதவைத் தட்டும் அந்த சத்தம் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தது. ஓர் தூதன் கதவை ஏன் தட்ட வேண்டும் என்று எண்ணி அவர்கள் வாசலுக்கு வெளியே வந்து பார்த்தார்கள். இதோ அவர்கள் ஜெபித்த ஜெபத்திற்கு பதிலாக, விடுதலை அடைந்த பேதுரு அங்கே நின்றார்.

இது ஜெபத்திற்கு பதில் கிடைத்தற்கான ஆச்சரியமான நிகழ்வாகும். தேவனின் அற்புதமான பதிலினால் மட்டுமல்ல, அங்கிருந்த அனைவரையும் தேவன் ஆச்சரியப்பட வைத்ததினால் இது ஓர் ஆச்சரியமான நிகழ்வாகும். பேதுரு தான் ஒரு சொப்பனம் காண்பதாக எண்ணினார். ரோதை முழுவதுமாக மனம் குழம்பி இருந்தாள். ஜெபித்துக்கொண்டிருந்த சீஷர்கள் ரோதை ஏதோ ஓர் தோற்றத்தைக் கண்டதாக எண்ணினார்கள். அவர்களது விசுவாசம் எவ்வளவு குறைவாக இருந்தாலும், தேவனுடைய வல்லமை அனைத்துச் சங்கிலிகளையும் உடைத்தெறிய போதுமானதாக இருந்தது.

ஜெபத்தின் பலனாய்க் கிடைத்த வாழைக்குலை

இரண்டாம் உலகப்போரின்பொழுது, பல்வேறு வியாதிகளால் பீடிக்கப் பட்ட மக்கள் மிக நெருக்கமான பாசறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர்.

அப்பாசறை ஒன்றில் இருந்த டார்லீன் டெய்ப்லர் என்ற பெண்மணி தனது விசுவாசம் மிகவும் சோதிக்கப்பட்டதாகவும், அதே சமயம் பெலப்படுத்தப் பட்டதாகவும் உணர்ந்தாள். அவரும் அவரது கணவர் ரசலும் நியூ கினியாவில் மிஷனரிகளாகப் பணி செய்துகொண்டு வந்தபொழுது, ஜப்பானியர்களால் பிடிக்கப்பட்டனர். அவர்கள் பிடித்து வைக்கப்பட்டிருந்த பாசறையில் ரசல் மரித்துவிட்டார். அவளும் மிகவும் சுகவீனமடைந்து விட்டாள். 'காணப்படாத சாட்சியங்கள்' என்ற தனது சுயசரிதையை எழுதத் தக்கதாக அவள் மரணத்தினின்று காக்கப்பட்டாள்.

அவளுக்கு கொடுக்கப்பட்ட சூப்பில் பூச்சிகளும் புழுக்களும் மிதந்து கொண்டிருந்ததை அடிக்கடி கண்டாள். அது அவளுக்கு மிகவும் அருவருக்கத் தக்கதாக இருந்தாலும், அவள் உயிர் வாழ அந்த சூப்பைக் கட்டாயமாக உண்ண வேண்டிய நிலையில் இருந்தாள். அவளுக்கு வயிற்றுப் போக்கும், வயிற்றிரைச்சலும் உண்டானது. அவளுக்கு சிகிச்சைக்காக அளிக்கப்பட்ட எப்சம் உப்பினாலும் குவினைன் மருந்தினாலும் அவளுக்கு எந்தப் பயனும் ஏற்படவில்லை. அத்தோடுகூட பெரிபெரியினாலும், மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டாள். இறுதியாக, "தேவனே தான் இந்த ஈக்களால் மறுபடியும் மறுபடியுமாக தொடர்ந்து பாதிக்கப்படுகின்றேன். உமக்குச் சித்தமானால் என்னைக் குணப்படுத்தும்" என்று ஜெபித்தாள்.

அவள் ஜெபித்தபின்பு, தேவன் நிச்சயமாகத் தனது வேண்டுதலைக் கேட்டு தன்னைக் குணப்படுத்துவார் என்று நம்பி, அவளுக்குக் கொடுக்கப் பட்டு வந்த எப்சம் உப்பையும் குவினினையும் உட்கொள்ள மறுத்துவிட்டாள். நோயின் அறிகுறிகள் அனைத்தும் நீங்கிவிட்டன.

சிலநாட்கள் கழித்து, அவள் அடைக்கப்பட்டிருந்த அந்த சிறையின் அறையின் ஜன்னல் வழியாகப் பார்த்தபொழுது, தூரத்தில் சில வாழைப் பழங்களை வைத்துக்கொண்டு நின்ற ஒருவரைப் பார்த்தாள். அதைப் பார்த்தவுடன் அந்த வாழைப் பழத்தில் ஒரு கடியாவது கடித்து உண்ணவேண்டும் என்று மிகுந்த ஆவல் உண்டாயிற்று. அந்த வாழைப்பழத்தின் மணத்தையும், ருசியையும் உணர்ந்தாள். அந்த ஆவலை அவளால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. உடனே முழங்கால் படியிட்டு, "தேவனே, ஓர் வாழைக்குலை எனக்குத் தேவை என்று நான் ஜெபிக்கவில்லை. ஒரே ஒரு வாழைப்பழம் மட்டும். ஒரே ஒரு பழம் மட்டும் எனக்குத் தேவை" என்று ஜெபித்தாள்.

ஜெபத்தின் பலனாய்க் கிடைத்த வாழைக்குலை

பின்பு, இப்படி ஜெபிப்பது என்பது எவ்வளவு முட்டாள் தனமான காரியம் என்பதை உணர்ந்தாள். சிறைச்சாலையின் அறைகளைத் தாண்டி, கர்த்தர் எப்படி அவளுக்கு வாழைப்பழம் கொடுக்க இயலும்? "வானத்திலிருந்து நிலவுகூட கீழே விழுந்து விடக்கூட சந்தர்ப்பம் உண்டு, ஆனால், சிறைக் காவலாளிகளில் ஒருவர், அவளுக்கு ஓர் வாழைப்பழத்தை கொடுப்பதற்கு எந்த ஓர் சந்தர்ப்பமும் இல்லை" என்பதை உணர்ந்தாள். தன் தலையை மறுபடியும் தாழ்த்தி தேவனே, எனக்கு ஓர் வாழைப்பழம் கொடுக்க இங்கு யாருமே கிடையாது. உம்மாலும் அதைச் செய்ய எந்த வழிமுறையும் கிடையாது. நீர் எனக்குக் கொடுத்த அரிசிக் கஞ்சிக்கு நான் நன்றியாக இல்லை என்று எண்ண வேண்டாம். ஆயினும் அந்த வாழைப்பழம் பார்ப்பதற்கு மிகவும் ருசியுள்ளதாகவும் ஆவல் மூட்டுவதாகவும் உள்ளது" என்று ஜெபித்தாள்.

'ஆத்துமாவின் உண்மைக் கதைகள்' என்ற தனது புத்தகத்தில் ராபர்ட் J. மார்கன் டார்லீனின் ஜெபம் எப்படிக் கேட்கப்பட்டது என்பதை கீழ்க்கண்ட வரிகளில் விளக்குகிறார்:

அடுத்த நாள் காலை, கான்கிரீட் பதித்த பாதையில் ஓர் காவலாளி நடந்து வரும் சத்தத்தைக் கேட்டாள். அவள் இருந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. அவளுடன் சற்று அன்பாக பழகும் யுத்தக் கைதிகளைக் கண்காணிக்கும் வார்டன் வாசலில் நின்றுகொண்டிருந்தார். அவளது இளைத்துப்போன பலவீனமான சரீரத்தைப் பார்த்தார். ஏதும் பேசாமல், கதவைப் பூட்டிவிட்டு வெளியே சென்று விட்டார். சிறிது நேரம் கழித்து மறுபடியும் காலடிச் சத்தம் கேட்டது. கதவு திறக்கப்பட்டது காவலாளி பெரிய மஞ்சள் நிறப் பொட்டலத்தை அவள் முன் வீசி எறிந்துவிட்டு, "இவை அனைத்தும் உனக்குத்தான்!" என்று கூறிச் சென்றான். அவள் அதை எண்ணினாள். அதில் 92 வாழைப்பழங்கள் இருந்தன!

அவள், அந்த வாழைப்பழங்களை உரித்து சாப்பிட ஆரம்பித்தபொழுது, *"தேவன் நான் வேண்டிக்கொள்கிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின் படியே, நமக்குச் செய்ய வல்லவர்"* என்ற எபே.3:20ல் கூறப்பட்ட வசனத்தை நினைவு கூர்ந்தாள்.

அதன் பின்பு வாழைப்பழங்களை நினைக்காமல் அவர் அந்த வசனத்தை வாசித்தது கிடையாது. ஆம், தேவனுடைய பதில்கள் சில சமயங்களில் கொத்துக்கொத்தாக வருகின்றன.

ரஷ்யாவில் உணவக அறையில் நடந்த பணி

அக்டோபர் மாதம் 1990ல் நடந்த சோவியத் லசேன் கூட்டம் அநேக வகைகளில் அற்புதமானது. ரஷ்யாவின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து ஆயிரக்கணக்கான கிறிஸ்தவத் தலைவர்களை ஒன்று கூட்டி, சோவியத் யூனியன் முழுவதிலும் எப்படி சுவிசேஷத்தைப் பரப்புவது என்று திட்டம் பண்ணுவது என்பது ஓர் சில ஆண்டுகளுக்கு முன்பாக கனவில் கூட நினைக்க முடியாத நிகழ்ச்சியாகும். அந்தக் காலக்கட்டத்தில் அநேக காரியங்களில் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தது. அடுத்த ஆண்டிற்குள்ளாக, சோபியத் யூனியன் உடைந்துவிட்டது.

சர்வதேச வேல்ட் விஷனின் ஓர் பகுதிக்குப் பொறுப்பாளராகச் செயல் பட்டு வந்த ஜான்ராப் என்பவர் அந்த பொதுக்கூட்டத்தில் ஓர் கருத்தரங்கை நடத்தி வந்தார். அவர் எடுத்துக்கொண்ட தலைப்பு இஸ்லாமியரை எப்படி கிறிஸ்துவிற்கென ஆதாயப்படுத்துவது என்பதாகும். ராபுடன் கூட இணைந்து அந்தக் கூட்டத்தை நடத்துவதற்காக ஆயத்தங்களைச் செய்ய உதவி செய்த ரஷியன் மொழிபேசும் பணியாட்களோடு கூட ஓர் இஸ்லாமிய சகோதரனும் இருந்தது ராபிற்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. மேலும் ஆச்சரியப் படத்தக்கதாக, அந்த மனிதர், தானும் ராப் நடத்தும் அந்தக் கருத்தரங்களில் பங்கெடுத்துக் கொள்ளலாமா? என்று கேட்டார். நிச்சயமாக என்றார் ராப்.

கருத்தரங்கை முடித்தபின்பு ராப் தனது அறையைக் காலிபண்ணி, அந்த சாப்பாட்டு விடுதியை விட்டுச்செல்ல ஆயத்தமாகும் நேரத்தில், அந்த இஸ்லாமிய சகோதரன் அவரது அறையின் கதவைத் தட்டினான். அவர் தனது தொழில் சம்பந்தமான சீட்டைக் கொடுத்துவிட்டு வழியனுப்ப வந்திருந்தார். அவரிடம் கொடுப்பதற்காக ஏதாவது கிடைக்குமா என, ராப் தனது அறையைச் சுற்றிப் பார்த்தார். அவர் கொடுத்து முடித்திருந்தார்.

ஏதாவது ஒன்றை அவரிடம் கொடுக்கவேண்டுமே; *"தேவனே ரஷியன் மொழியில் எழுதப்பட்ட ஓர் புதிய ஏற்பாடு இருந்தால் நலமாக இருக்குமே"* என ஜான் ராப் அமைதியாக ஜெபித்தார். அந்த எண்ணமே நம்ப இயலாத கேலிக் கூத்தாக இருந்தது. ரஷ்ய தேசம், கிறிஸ்தவத்திற்குத் தன் கதவுகளை அடைத்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆகவே ரஷ்ய மொழியில் ஓர் புதிய ஏற்பாடு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது நடக்க இயலாத காரியமாகும். ஆனால் ராப் தனது ஒரு வரி ஜெபத்தை முடிக்குமுன்பு, மறுபடியும் யாரோ கதவைத் தட்டு சத்தம் கேட்டது.

அதனிற்கு வெளியே இரண்டு ரஷ்யர்கள் ஓர் தள்ளுவண்டி நிறைய இருக்க புத்தகங்களை வைத்துக்கொண்டு நின்று கொண்டு இருந்தனர். அந்த புத்தகங்கள் அனைத்தும் ரஷ்ய மொழியில் எழுதப்பட்டிருந்த புதிய ஏற்பாடு ஆகும். ராபர்ட் தன் கண்களை நம்ப இயலவில்லை. தனக்கு முன் புதிய ஏற்பாடுகளுடன் நிற்பவர்கள் மனிதர்களா அல்லது தூதர்களா? என எண்ணினார். வண்டி நிறைய புதிய ஏற்பாடுகளை வைத்துக்கொண்டு என்ன செய்கிறார்கள் என யோசித்தார்.

"இந்த உணவகத்தில் உள்ள அறைகளில் வேதாகமங்களை வைத்துச் செல்லும் கிறிஸ்தவர்கள் நாங்கள்" என்று அவர்களில் ஒருவர் விளக்கினார். ஒரு மாதத்திற்கு முன்பாக, மதச் சுதந்திரத்திற்கு எதிராக இருந்த சட்டத்தை, சோவியத் அதிபர் மைக்கேல் கார்பச்சேவ் நீக்கிவிட்டு உத்தரவிட்டார். "இந்த உணவகத்தில் உள்ள அறைகள் ஒவ்வொன்றிலும், ஓர் புதிய ஏற்பாட்டை வைப்பதற்கு இப்பொழுது தான் நாங்கள் அனுமதி பெற்றுள்ளோம்" என்று கூறினார்கள். அவர்கள் இருவருக்கும் ராபர்ட் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துவிட்டு, அவர்களிடமிருந்து ஓர் புதிய ஏற்பாட்டை வாங்கி, தனது இஸ்லாமிய சிநேகிதரிடம் கொடுத்தார்.

மூன்று மாதங்கள் கழித்து, 'இந்தப் புத்தகம் எனது சிந்தனைகளையும், எனது உள்ள தோற்றங்களையும் உடைத்தது. அதை நான் மறுபடியும், மறுபடியும் வாசிக்கிறேன்' என்று ஓர் கடிதத்தின்மூலம் அவர் ராபர்ட்டுக்கு அறிவித்தார். ஆறு மாதங்கள் கழித்து மீண்டும் ராபர்ட் ரஷ்யாவிற்கு வந்தபொழுது, இந்த தனது பழைய சிநேகிதனைச் சந்தித்தார். மாஸ்கோவில் உள்ள ஓர் சிற்றுண்டிச் சாலையில் அவர், அமைதியாக 'நான் என் இருதயத்தில் இயேசுக் கிறிஸ்துவை ரட்சகராக ஏற்றுக்கொண்டேன். என் விசுவாசத்தை அவர் மேல் வைத்து விட்டேன்' என்று கூறினார்.

1991ம் ஆண்டு சோவியத் யூனியன் சிதறுண்டு போனதைக் கண்டு உலகமே வியந்து நின்றது. உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப்பற்றி அறிவிக்க அந்த தேசத்தில் கதவுகள் திறக்கப்பட்டதை அறிந்து, மகிழ்ச்சி அடைந்தார்கள். ஓர் நாள் ராபர்ட் தனது உணவக அறையில் தனது இஸ்லாமிய சிநேகிதருக்கு ஏற்ற ஓர் பரிசு வழங்கவேண்டும் என்றிருந்தபொழுது, உலகில் ஏற்பட்ட இம்மாற்றங்கள் அனைத்தும் அந்த அறையிலே ஒருங்கிணைந்து செயல்பட்டதாக உணர்ந்தார்.

ஓர் காற்றாலையைத் தேவன் சுகமாக்கின பொழுது

கென்யாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள பாலைவனப் பகுதியில் தண்ணீர் தங்கத்திற்குச் சமானமாகும். சில பகுதிகளில் பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரைக் காற்றாலைகள் மூலம் பம்ப் பண்ணி வெளியே எடுப்பார்கள். ஆகவே அந்தக் காற்றாலைகள் அங்கு வாழும் மக்களுக்கு மிக மிக முக்கியமானவை.

லோரன் காலப் என்ற பகுதியில் முகாமிட்டிருந்த டர்க்கானா என்ற நாடோடி இன மக்கள், அந்த முகாமிற்கு அருகில் இருந்த ஓர் காற்றாலையை நம்பி வாழ்ந்து வந்தார்கள். அந்த காற்றாலையிலிருந்து ஏறக்குறைய 625 காபன் தண்ணீர் அனுதினமும் பம்ப் பண்ணப்படும். அது அங்கு வாழ்ந்து வந்த சுமார் நூறு மக்களுக்கும், இரண்டு, மூன்று ஆடு ஒட்டக மந்தைகளுக்கும் போதுமானதாக இருந்தது. டர்க்கானா இனப்பெண்கள் அனுதினமும், இந்தக் காற்றாலை மூலம் கிடைக்கும் நீரை பிளாஸ்ட்டிக் கேன்களில் பிடித்து தலையில் வைத்து எடுத்துக் கொண்டு தங்கள் குடிசைகளுக்கு வருவார்கள். பிரச்சனை என்னவென்றால் அடிக்கடி அந்த காற்றாலையில் உள்ள குழாய் உடைந்துவிடும்.

ராண்டியும் எடிநெல்சனும் அந்தப் பகுதியில் ஒன்பது ஆண்டுகளாக மிஷனரிப் பணியாற்றி வந்தார்கள். அந்தக் காலங்களில் அடிக்கடி உடைந்து போகும் இந்தக் காற்றாலையை பழுது பார்த்து, மறுபடியும் சுழல வைப்பார்கள். 1989 கோடை காலத்தின் ஆரம்பத்தில், காற்றாலைக்கு அருகில் இருந்த தண்ணீர் சேமிப்புத் தொட்டியில் தண்ணீர் மட்டம் மிகவும் குறைவாக இருந்ததை கவனித்தார்கள். 125 அடி குழாயிலிருந்து இரண்டு அங்குலம் அகலம் உள்ள இரும்புக்குழாய் மூலம் தண்ணீர் அந்த சேமிப்புத் தொட்டியில் விழும். ராண்டி அந்தச் சேமிப்புத் தொட்டியின் மூடியைத் திறந்து பார்த்தபொழுது, குழாயிலிருந்து நீர் சொட்டு சொட்டாகமட்டும் சொட்டிக் கொண்டிருந்தது. பின்பு முழுவதும், தண்ணீர் நின்று விட்டது.

ராண்டி, பாப் சேப்மேன் என்ற மிஷனரியை காற்றாலையின் பம்ப்பீபம் இணைந்துள்ள நீர் உறிஞ்சும் பகுதியை பழுது பார்க்க உதவும்படி ரேடியோ மூலம் அழைத்தார். இப்படி அவர்கள் பலமுறை பழுது பார்த்துள்ளனர்கள். ஆனால் இம்முறை அவர்களால் பழுதுபார்க்க இயலவில்லை. பல்வேறு வகைகளில் முயற்சி எடுத்தார்கள். ஆனால் பயனில்லை. ஆகவே, வெளியே

இருந்து உதவி கேட்பதோடு கூட, அந்த உடைந்த பைப்பையும் மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

1980 அந்த காற்றாலையை நிறுவிய மைக்கேரிஸ் என்ற கென்யா ஒப்பந்தக் காரரை, ராண்டி ரேடியோ மூலம் அழைத்தார். உடனே, மைக், தனது உதவியாளர் ஒருவருடன்கூட, கையினால் செயல்படுத்தக் கூடிய பெரிய திருகு உயர்த்தியையும் எடுத்துக்கொண்டு தனது சிறிய விமானத்தின் மூலம் லோரன்ஹால்ட் வந்து சேர்ந்தார். இப்பொழுது நான்கு மனிதர்கள் இணைந்து அந்தக் காற்றாடியின் குழாயைப் பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டனர். இறுதியில் மைக் "அந்த முழுக் குழாயும் மாற்றப்படவேண்டும் என்று கூறினார். தானே ஓர் புதிய குழாய் வாங்குவதற்கு ஒப்புதல் தெரிவித்தார்."

ராண்டியும், பாப்பும் அந்த உடைந்த குழாயை அது இருந்த வண்ணமாகவே திரும்ப அதனதன் இடத்தில் வைத்தார்கள். அப்பொழுது தான், அவர்களால் புதிய குழாயை எப்படி இணைப்பது என்று தெரியவரும். புதிய குழாய்க்காக காத்திருந்தார்கள். புதிய பைப் கிடைக்கவில்லை என்றும், ஆகவே நெல்சன் புதிய பைப் வாங்க நைரோபிக்கு செல்லுவதாகவும் மைக், இரண்டுநாட்கள் கழித்து ராண்டியிடம் தொலைபேசி மூலம் கூறினார். அவ்விடம் விட்டுப் போகு முன்பு, ராண்டி, அந்தக் காற்றாலையைத் தாங்கிக் கொண்டிருக்கும் உலோகத்தால் ஆன தாங்கியின் மேல் ஏறி, பைபர்க்ளாசினால் ஆன அந்த விசிறியின் இறக்கைகள் மேலும் பழுதடைந்து விடாமலிருக்க அதை நிறுத்தி வைத்தார். தண்ணீர் இல்லாமல், அந்தக் கருவி செயல்பட்டால், மிகவும் அதிகமாகப் பழுதடைந்து விடும்.

நைரோபி முழுவதும் முயற்சி பண்ணியும், சரியான குழாய் கிடைக்க வில்லை. ஆகவே ராண்டி, அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து குழாயின் உறிஞ்சும் பகுதியைக் கொண்டுவர இறுதியில் முயன்றார். அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து குழாயின் அப்பகுதி வர அதிக நாட்கள் எடுக்கும் ஆயினும் வேறு வழியே இல்லாததால் ராண்டி அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து வரவழைக்க முயன்றார். டர்க்கானா மக்களுக்கு சில காலத்திற்கு தண்ணீர் கிடைக்காதே என யோசித்தார்.

நெல்சன்ஸ், லோரன்ஹால்ப்பிற்கு திரும்பி வந்தபொழுது, ராண்டி, அந்தக் காற்றாடியின் இறக்கைகள் சுற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். யாரோ சில சிறுவர்கள் அந்த இறக்கைகள் இயங்காமல், சங்கிலியினால்

கட்டப்பட்டிருந்ததை அறுத்துவிட்டு விட்டார்களோ என ராண்டி கவலை அடைந்தார்.

அவர்கள், தங்களது வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தபொழுது, ஓர் மனிதன், "காற்றாலை மறுபடியும் தண்ணீர் எடுக்கிறது" என்ற கத்திக் கொண்டே ஓடி வந்தான்.

நெல்சன்ஸ் மிகவும் சந்தேகப்பட்டார்கள். ஆனால் அந்த மனிதனோ தொடர்ந்து, "நீங்கள் போனபின்பு ஓரிரு நாட்களில், ஓர் சில பெண்கள் கூடி, சுகவீனமானவர்களுக்காக நீங்கள் கற்றுத்தந்த ஜெபத்தைக்கூறி காற்றாலைக்காக ஜெபித்தார்கள். சரீரங்களை தேவன் சுகப்படுத்த இயலு மென்றால், ஏன் உடைந்துபோன காற்றாலையை சுகப்படுத்த இயலாது என்று அவர்கள் எண்ணி ஜெபித்தார்கள்" என்று கூறினான்.

ஒரு கூட்ட டர்க்கானா பெண்கள் அந்த உடைந்துபோன காற்றாலையைச் சுற்றி நின்று, அதன்மேல் தங்கள் கைகளை வைத்து, தேவன் அதைப் பழுது பார்த்து சரிபண்ண வேண்டும் என்று ஜெபித்தார்கள். இரண்டு மணி நேரத்திற்குள்ளாக, ஓர் பலமான காற்று வீசிக் அந்தக் காற்றாலையை வேகமாகத் தாக்கியது. அந்த வேகத்தில் இறக்கைகளை கட்டியிருந்த சங்கிலி அறுந்துபோய், காற்றில் வேகமாகச் சுழல ஆரம்பித்துவிட்டன. ஒருவர் போய் அந்த நீர்ச் சேமிப்புத் தொட்டியில் பார்த்தபொழுது, நல்ல தண்ணீர் வேகமாக குழாய் வழியாகக் கொட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். உடனே அந்தப் பெண்கள் தங்களது விசுவாசமுள்ள ஜெபத்திற்கு ஆச்சரிய விதமாகப் பதில் அளித்த தேவனைத் துதித்துப் போற்றினார்கள்.

நடந்த இந்தக் காரியங்களைக் காணும்படி ராண்டி காற்றாலையைச் சென்று பார்த்தார். சீல் பண்ணப்படாத உடைந்த குழாய் எப்படி தண்ணீரை உறிஞ்சி மேலே அனுப்ப முடிந்தது என்று அவரால் புரிந்துகொள்ள இயல வில்லை. ஆனால் அந்தக் காற்றாலை தொடர்ந்து தண்ணீரை உறிஞ்சி மேலே கொண்டு வந்தது. ஐக்கிய நாட்டிலிருந்து புதிய பம்ப் வந்தவுடன், பழைய பம்ப் செயலிழந்துவிட்டது.

இன்று அந்தப் பகுதியில், அண்ட சராசரங்களையும் ஆள்கின்ற தேவனிற்கு ஓர் உடைந்துபோன காற்றாலையை சுகப்படுத்துவது என்பது இலேசான காரியம் அன்று அறிந்துகொண்ட அநேக ஆயிரக்கணக்கான டர்க்கானா நாடோடி மக்கள் தேவன் மேல் விசுவாசிகளாகி உள்ளார்கள்.

மர்மமான டெலிபோன் அறை

வாஷிங்டனில் உள்ள யாக்கிமாவில் வசித்து வந்த கென் காப் என்பவர் அதே பழைமையான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தபொழுது, அவரது கிறிஸ்தவ வாழ்க்கையிலும் ஊழியப்பாதையிலும் முக்கியமான தீர்மானம் எடுக்கவேண்டிய ஓர் கட்டத்தை அடைந்தார். குடும்பப் பாடகர்களாக விளங்கின பாடகர் கூட்டத்தில் ஒருவராக விளங்கின இவர் பல்வேறு ஊர்களுக்குச் சென்று இசை நிகழ்ச்சிகள் நிகழ்த்தி வருவார். எங்கு சென்றாலும் அதே பாடல்கள், அதே செய்திகள் என செய்தவற்றையே செய்து வந்தார்.

"மற்றவர்களிடம் உங்களது கேள்விகளுக்கு பதில் பெற்றுக்கொள்வீர்கள் என்று கூறுகிற நான் எனக்குத்தானே பெற்றுக்கொள்கிற பதில்கள் என்ன?" என்று காப் தனக்குத்தானே கேட்க ஆரம்பித்தார். "மற்றவர்களுக்கு நான் எப்படி பிரசிங்கப்பது? நான் இப்படி நாடோடிபோல ஓர் இடம் விட்டு மற்றோர் இடம் சென்று வாழ்கின்ற இந்த வாழ்க்கை முறையை விட்டுவிட்டு, ஓரிடத்தில் நிலையாகத் தங்கி, நிலையான ஓர் வேலை செய்து வாழவேண்டும்.

நாங்கள் பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்து கொண்டே இருக்கின்றோம். நாங்கள் எங்கே இருக்கிறோம் என்று கடவுளுக்குக் கூடத் தெரியுமோ என்னவோ?" என்று காப் தனக்குத்தானே கேட்டுக்கொண்டார்.

ஆகவே, தனக்கு ஓர் பதில் கொடுக்கவேண்டும் என்று தேவனிடம், காப் ஜெபித்தார். *"தேவன் உங்கள் எண்ணை வைத்துள்ளார்"* என்ற தமது புத்தகத்தில் அவருக்குக் கிடைக்க ஆச்சரியமான பதிலைப்பற்றிக் கூறுகிறார்.

ஓர் இசை நிகழ்ச்சியை நடத்துவதற்காக, காபின் குழுவினர், ஒகாயா உள்ள ஓர் ஊரில் தங்கினார்கள். அவரது மதிய உணவருந்த வெளியே சென்ற பொழுது காப் மட்டும் தனிமையாக சிந்திக்கவும் ஜெபிக்கவும் விரும்பி, பேருந்தில் தங்கிவிட்டார்.

பெட்ரோல் பங்கிக்கில் உள்ள ஓர் கடையில் பெப்சி வாங்க எண்ணி, தெருவின் மறுபக்கம் நடந்து சென்றார். அவர் அங்கு சென்றபொழுது, தொலைபேசி மணி ஒலித்தது. அந்த பங்க்கில் ஓர் தொலைபேசி அறை இருந்தது. காப் அந்த அறையை அடையும் வரை, அந்த தொலைபேசியின் மணி அடித்துக்கொண்டே இருந்தது. அதுவிடாமல் அடித்துக்கொண்டே

இருந்ததால், காப் அந்த தொலைபேசி அறைக்குள் சென்று, தொலை பேசியையை எடுத்து 'ஹலோ' என்று கூறினார்.

டெலிபோன் நிலையத்தில் பணிசெய்த பணியாள், 'கென் காப் என்பவருக்கு தொலைபேசி அழைப்பு வந்துள்ளது' என்றார். அவரால் நம்ப இயலவில்லை. "அது நடக்க இயலாத காரியம். நீங்கள் ஏதோ உளருகிறீர்கள்" என்று காப் குளறி குளறிப் பேசினார். அடுத்தவினாடி இது ஓர் ஏமாற்று வேலையோ என எண்ணி சுற்று முற்றும் பார்த்தார். ஆனால் ஏதும் அப்படியாக தவறுதலாகத் தெரியவில்லை.

தொலைபேசியின் மறுபக்கம், "இது அவருடைய சத்தம்போல் உள்ளது. அவருடைய சத்தம்போலவே உள்ளது" என்று யாரோ பேசுவது கேட்டது. தொலைபேசி நிலைய இயக்குனர், மறுபடியும், ஹென் காப் இருக்கிறாரா? என்று கேட்டார்.

இன்னமும் அதை நம்பாமல், "ஆம், நான் தான் ஹென் காப்" என்று மெதுவாகக் கூறினார்.

மறுநிமிடம் அவர் தற்கொலை செய்து கொள்ளவேண்டி ஓர் குறிப்பு எழுதி வைத்துவிட்டு, நம்பிக்கை இழந்த நிலையில் இருந்த ஓர் பெண்ணிடம் பேச ஆரம்பித்தார். தான் தற்கொலை செய்துகொள்ளாமல் தப்பிக்க ஏதாவது ஒரு வழி இருந்தால் அதைத் தனக்குக் காண்பிக்கும்படி அந்தப் தேவனிடம் மன்றாடி ஜெபித்துக்கொண்டிருந்ததாகக் கூறினாள். பின்பு அவள் தொலைக் காட்சிப்பெட்டியில் ஓர் கிறிஸ்தவ நிகழ்ச்சியைப் பார்த்ததாகக் கூறினாள். அதில் ஹென் காப் என்பவர் செய்தி கொடுத்துக் கொண்டிருந்தாகவும், அவரது செய்தி நேரடியாக அவளுக்காகவே பேசப்பட்டதுபோலவும் இருந்ததாகக் கூறினாள். ஒருவேளை, அவள் தொடர்பு கொண்டாள், அவளது அந்த நம்பிக்கையற்ற நிலைமையினின்று வெளிவர ஏதாவது உதவி செய்வார் என்று எண்ணினாள். அப்பொழுது அவளது மனதில் எண்களின் தொடர் ஓடியது. உடனே அவள் அவசர அவசரமாக அந்த எண்ணைக் கடற் கரை அலுவலகத்தை கூப்பிடுவதாகக் கருதி, நேருக்கு நேர் காபுடன் பேசுவதற்கு ஒகாயாவில் உள்ள ஓர் தொலைபேசி அறைக்கு அவளது அழைப்பு இணைக்கப்பட்டது.

தேவன் அவனது வாழ்க்கையில் செய்த இந்த அதிசயத்தை காப் அப் பெண்மணிக்கு விளக்கி, அவளது தற்கொலை எண்ணத்திலிருந்து அவள்

வெளிவரத்தக்கதாக அவர் அவளுடன் பேசி அப்பெண்மணியைக் காப்பாற்றினார். அதைத் தொடர்ந்து பல மாதங்களாக ஹென் காபும் அவரது மனைவியும் அந்தப் பெண்மணியோடு தொடர்பு கொண்டு, ஆலோசனைகள் கூறி முழுவதுமாக அந்தப் பெண் தனது தற்கொலை எண்ணத்தைவிட்டுவிட உதவிசெய்தார்கள்.

இன்றும் கூட காபிற்கு அன்று நடந்த அற்புதத்தை நினைவு கூர்ந்து ஆச்சரியப்படுகிறார். பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் அவர் ஓர் பொதுத் தொலைபேசியின் அருகில் கடந்து செல்லும்போது அந்த குறிப்பிட்ட தொலைபேசியின் எண்ணை யாரோ ஒருவர் கூப்பிட வேண்டுமானால் அது எவ்வளவு பெரிய ஆச்சரியம். அது ஒருவேளை தற்செயலாக நடந்த நிகழ்வாக இருக்கலாமோ? அல்லது ஹென் காபின் ஜெபத்திற்கும், மிகத் தொலைவில் உள்ள ஓர் மாவட்டத்தில் வாழ்ந்த நம்பிக்கை இழந்த நிலையிலிருந்த ஓர் பெண்ணின் ஜெபத்திற்கும் கிடைத்த பதிலா?

லெஸ்லி என்ற சிறுவனின் மறைக்கப்பட்ட தாலந்துகள்

நீங்கள் கீழ்க்கண்ட நிகழ்ச்சியில் ஓர் சினிமா பார்த்திருக்கலாம் படமாக அல்லது ரீடர்ஸ் டைஜஸ்ட் என்ற புத்தகத்தில் வாசித்திருக்கலாம். ஆனால் அது மறுபடியும் சொல்லப்படுவதற்கு ஏற்ற ஓர் நிகழ்வாகும்.

தன் பெற்றோர்களால் கைவிடப்பட்டவனாகவும், மூளை வளர்ச்சி குன்றிய சிறுவனாகவும், அவனது கண்களில் ஏற்பட்ட நோயின் காரணமாக, அவனது இரு கண்களும் நீக்கப்பட்டவனாகவும் குழந்தை லெஸ்லி மில்வாக்கி மருத்துவமனையில் இருந்தான். நம்பிக்கையற்றவனாகவும், உதவியற்றவனாகவும், யாராலும் விரும்பப்படத் தகாதவனாகவும் அவன் காணப்பட்டான்.

ஆனால் மேயும் ஜோ லெம்கியும் குழந்தையாகிய லெஸ்லியைத் தங்கள் குடும்பத்தில் இணைத்துக்கொள்ள தீர்மானித்தார்கள். அந்த அனாதைச் சிறுவனுக்குச் செய்யும் உதவி 'இயேசுவிற்குச் செய்யும் சிறிய பணியாக' மே எண்ணினாள். அவள் லெஸ்லி மீது மிகவும் பரிவும் அன்பும் காண்பித்தாள். ஆரம்பத்தில் அவனால், அசைய இயலாது, சாப்பிட இயலாது. பாட்டலில்

உள்ள பாலை உறிஞ்சுக்கூடத் தெரியாது. அடிப்படையான அந்தக் காரியங்களை எப்படிச் செய்வது என்று அவள் அவனுக்கு பொறுமையோடும், ஜெபத்தோடும் கற்றுத் தந்தாள். நம்பிக்கையற்ற அந்தக் காரியத்திற்காக அவள் ஜெபிப்பதைப் பிறர் ஏளனமாக எண்ணினார்கள். ஆனால் மேக்கு அது ஓர் காரியமல்ல அவன் நேசிக்கப்படவும் ஜெபிக்கவும் வேண்டிய ஓர் நபராக இருந்தான்.

அவனால், தானாக நிற்கவோ, நடக்கவோ இயலாது. ஆனால் மே மிகவும் பொறுமையோடு மூன்றாண்டுகள் அவனுக்கு எப்படி நிற்பது என்றும், வேலியைப் பிடித்துக்கொண்டு சிறிதுதூரம் எப்படி நடப்பது என்றும் கற்றுக் கொடுத்தாள்.

லெஸ்லி பன்னிரண்டு ஆண்டுகள் ஆனபொழுது, ஓர் மாற்றம் ஏற்பட்டது. இப்பொழுது மேலெம்கி வேறுவிதமாக ஜெபிக்க ஆரம்பித்தாள். "அன்புள்ள தேவனே, ஒவ்வொருவருக்கும் நீர் ஏதாவது ஓர் தாலந்தைக் கொடுத்துள்ளீர் என வேதாகமம் கூறுகிறது. இந்த அருமையான சிறுவனிடம் உள்ள தாலந்தைக் காண எனக்கு உதவி செய்யும். அவன் ஒரே இடத்தில் அதிக நேரமாக படுத்துக்கொண்டே இருக்கிறான். ஆனால் அவனுக்கு நீர் ஏதாவது ஓர் தாலந்தை கொடுத்திருந்தால், அதைக் கண்டுகொள்ள எனக்கு உதவிசெய்யும் என்று ஜெபித்தாள்.

அவளது ஜெபத்திற்கு தேவன் நிச்சயமாகப் பலனளிப்பார் என்று நம்பி, மேயும் ஜோவும் லெஸ்லி அறையில் ஓர் பியானோவை வைத்து பல்வேறு இசைகளை ரேடியோ மூலம் ஒலிக்கச் செய்தார்கள். ஆனால் பியானோ, பயன்படுத்தப்படாமல் அவனது அறையில் இருந்தது. ரேடியோவைப் பொறுத்த மட்டும் அதனால் உண்டாக்கப்பட்ட இசையை அவன் கவனிக்கின்றானா இல்லையா என்பது அவர்களுக்குத் தெரியவில்லை."

லெஸ்லி பதினெட்டுவயதானபொழுது ஒரு நாள் இரவு, வழக்கம்போலவே, அவனோடு கூடச் சேர்ந்து ஜெபித்துவிட்டு, அவனைப் படுக்க வைத்துவிட்டு வெளியே சென்றாள். அவளது ஜெபம் வழக்கம் போல இருந்தாலும், அன்று ஜெபம் வழக்கம்போல இருந்தாலும், அன்று மிகவும் உள்ளான பாரத்துடனும், வல்லமையுடனும் ஜெபித்தாள். அதிகாலை 3.00 மணிக்கு மேயும் ஜோவும், மிகவும் புகழ்பெற்ற இசை நிபுணரின் 'இன்று இரவு நாங்கள் நேசிக்கிறோம்'

என்ற பியானோ இசை இசைக்கப்படுவதைக் கேட்டு எழுந்தார்கள். அந்த இசை லெஸ்லியின் அறையிலிருந்து வந்து கொண்டிருந்தது.

ஒரு வேளை தொலைக்காட்சி பெட்டியிலிருந்து அந்த இசை வருகின்றதோ அல்லது ரேடியோவிலிருந்து அந்த இசை வருகிறதோ? என்று எண்ணிக் கொண்டு லெஸ்லியின் அறைக்குச் சென்றார்கள். அங்கு ஓர் அற்புதம் நிகழ்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். தனது படுக்கையை விட்டு, தானாக எழு இயலாத, பேச இயலாத லெஸ்லி, மெதுவாகத் தன்னையே இழுத்துக்கொண்டு பியானோவில் அமர்ந்து, பியானோவை இசைத்துக் கொண்டிருந்ததோடு, நம்பவே இயலாதபடி பாடிக்கொண்டும் இருந்தான்.

மே ஒரே சமயத்தில், அழுது கொண்டும், சிரித்துக்கொண்டும் இருந்தாள். "ஓ! இயேசுவே உமக்கு நன்றி, உமக்கு நன்றி. நீங்கள் அருமையான ஓர் தாலந்தை லெஸ்லீக்குக் கொடுத்துள்ளீர்கள். இவ்வுலகத்தில் தேவன் இல்லையென்றோ, இயேசு இல்லையென்றோ ஒருபொழுதும் ஒருவராலும் சொல்ல இயலாது."

இது ஓர் பிரம்மை அல்ல. அன்று முதல், லெஸ்லி அவனுக்குக் கிடைத்த இந்த விசேஷமான தாலந்தை தொடர்ந்து செயல்படுத்தினான். அவன் எந்த ஓர் பாடலையும் ஒரேமுறை கேட்டால் போதும் அது அவனது மனதில் பதிந்துவிடும். அந்தப் பாடலின் வரிகள் ஆங்கிலத்திலோ, பிரஞ்சிலோ, இத்தாலியிலோ, அல்லது வேறு எந்த மொழியில் இருந்தாலும், உடனே அதை அப்படியே மறுபடியும் கூறிவிடுவான். இசை வல்லுனர்கள் எல்லோருக்கும் இது ஓர் புரியாத புதிராகவே இருந்தது. பாடல் திறமையைக் கட்டுப்படுத்தக் கூடிய மூளையின் பகுதி, லெஸ்லிக்கு எப்படியோ தூண்டப்படுகிறது என்று எண்ணினார்கள். விஞ்ஞானத்தால் விளக்கமுடியாத ஒன்றாகவே இருந்தது.

விரைவில் தேசிய செய்தித்தொடர்பாளர்கள், லெஸ்லியின் கதையைப் பற்றி அறிந்தார்கள். நெட் ஒர்க் டெலிவிஷன் ரீடர்ஸ்டைஜஸ்ட் மற்றும் கிறிஸ்டியன் டெலிவிஷன் அனைத்திலும் லெஸ்லீயின் சரித்திரம் ஒலி பரப்பப்பட்டது. "நான் தேவனை எவ்வளவு அதிகமாக விசுவாசிக்கிறேன். ஏதோ ஒன்றை பெற்றுக்கொள்ளப்போகிறேன் என்று எனக்குத் தெரியும்" என்று மே தேவன்மேல் உள்ள தனது ஆழ்ந்த விசுவாசத்தை அறிக்கை யிட்டாள். ஆனால் அவள் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட அற்புதம் அவளால் கற்பனை செய்துகூட பார்க்க இயலாததாக இருந்தது.

பாரசீக வனாந்திரத்தில் ஓர் அற்புதக்கிணறு

மேஜா குருலாக்கிற்கு ஒரு நாளுக்கு பத்தாயிரம் காலன் தண்ணீர் தேவைப்பட்டது. ஒவ்வொரு நாளும் பத்தாயிரம் காலன் தண்ணீர் தேவை.

கடற்படையைச் சார்ந்த மேஜர் ஜெனரல் சார்லஸ் குருலாக், அங்கிருந்த படை வீரர்களுக்கு தண்ணீர் அளிப்பதற்கு பொறுப்பாக இருந்தார். மிக அனுபவம் பெற்ற இவருக்கு பத்தாயிரம் காலன் தண்ணீர் அளிப்பது மிகப்பெரிய பிரச்சனை கிடையாது. ஆனால், இது பாலைவனத்தில் நடந்த வளைகுடாப்போர்.

இந்த யுத்தம் அநேக புதிய சவால்களை உடையதாக மற்ற யுத்தங்களி லிருந்து மாறுபட்டதாக இருந்தது. நேசப் படையைச் சார்ந்த தலைவர்கள். ஒரு வேளை இரசாயன யுத்தம் ஏற்பட்டு விடுமோ என்று எதிர்பார்த்து வந்தனர். அந்த இரசாயனப்பொருட்களை செயல் இழக்க வைக்க அவர்களுக்கு மிக மிக முக்கியமாகத் தண்ணீர் தேவைப்பட்டது. அதிர்ஷ்ட வசமாக, குருலாக்கின் படை அநேகக் கிணறுகள் இருந்த பகுதியில் முகாமிட்டிருந்தனர். தேவைப்பட்டால் அதிக அளவு தண்ணீரை அந்தக் கிணறுகளிலிருந்து அவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஆனால், அவர்கள் இருந்த இடத்திலிருந்து, எழுபத்திநான்கு மைல்கூட மேற்காக இருந்த 'கற்களின் சமவெளி' என்ற இடத்திற்கு இவரது படை செலும்படியாக கட்டளை பெற்றார்கள். அந்தப் புதிய பகுதியில் குருலாக்கின் வீரர்கள், தண்ணீருக்காகத் தரையில் தோண்டினபொழுது மிகவும் ஏமாற்றம் அடைந்தார்கள். ஏனெனில் தண்ணீரிற்குப் பதிலாக வெறும் தூசிதான் கிளம்பியது. தண்ணீரைக் கண்டுபிடிக்கக்கூடிய திறமையாளர்கள் வர வழைக்கப்பட்டனர். அவர்கள் எவ்வளவோ முயற்சி எடுத்தும், தண்ணீர் கிடைக்கக்கூடய மூலத்தை அவர்களால் கண்டுபிடிக்க இயலவில்லை.

பல ஆண்டுகளாக, அனுதினமும் காலையில், குருலாக் தனது படை வீரர்களுடன் இணைந்து ஜெபிப்பது வழக்கம். தரைவழித்தாக்குதலுக்கு சற்றுமுன்பு, தண்ணீரின் அத்யாவசத் தேவையைக் குறித்து, குறிப்பாக ஜெபிக்க ஆரம்பித்தார்கள். பரட அதிகாரிகள் ஜெபித்துக்கொண்டிருந்த பொழுது, ஓர் கானால், இடைமறித்து, "சார் என்னோடுகூட வருகிறீர்களா? இது மிக முக்கியமான காரியம்" என்ற குருலாக்கைக் கேட்டார்.

கடற்படையினரால் போடப்பட்டிருந்த ஓர் சாலை வழியாக காலை, குருலாக்கை அழைத்துச் சென்று, ஓர் குறிப்பிட்ட இடத்தில் நின்று, சாலையைவிட்டு முப்பது அல்லது ஐம்பது கெஜ தூரத்தில், தரையினின்று எம்பி நின்ற குழாயைக் காண்பித்தார். அந்தக் குழாயோடு இணைந்திருந்த குறுக்குக் குழாயோடு சேர்ந்து அது பார்ப்பதற்கு ஓர் சிலுவை போலக் காணப்பட்டது. அந்தக் குழாயின் அடியில், ஒரு பச்சை நிற டீசல் ஜென ரேட்டரும், ஓர் சிவப்பு நிற பம்ப்பும், நான்கு புதிய பாட்டரிகளும் அமெரிக்கப் படையினால் பயன்படுத்தப்படாத ஆயிரம் காலன் கொண்ட டீசல் சேமிப்புத் தொட்டியும் காணப்பட்டன.

இது ஓர் புரியாத இரகசியம். இந்தக் கிணற்றைத் தோண்டியது யாராக இருக்கலாம்? இது ஏன் இதற்கு முன்பாகவே கண்டுபிடிக்கப்படாமல் இருந்தது. ஜெனரல் குருலாக்கிற்கோ, அவரை வந்து அழைத்துச் சென்ற காலலிற்கோ அது குறித்து ஏதும் தெரியவில்லை. ஆனால் குருலாக் அந்த மோட்டாரின் பட்டனை அமுக்கின உடனேயே ஜெனரேட்டர் வேலை செய்ய ஆரம்பித்து, அந்த தூசி படிந்த பூமியிலிருந்து தண்ணீர் பம்ப்மூலம் தண்ணீர் வெளியே வந்து கொட்டினது. அங்கே ஆழத்திலே ஓர் கிணறு இருந்தது. அந்தக் கிணற்றிலிருந்து படையினருக்கு அனுதினத் தேவையான பத்தாயிரம் காலன் தண்ணீர் கிடைத்தது.

என்ன ஆச்சரியம்! இருபதாயிரம் படைவீரர்கள் அந்த சாலையின் வழியே கடந்து சென்றுள்ளார்கள். ஆனால், அந்த ஞாயிற்றுக்கிழமை ராணுவ அதிகாரிகள் கூடி ஜெபித்த பின்பு தான் அந்தக் கிணறு அவர்கள் கண்களுக்குத் தெரிந்துள்ளது. “அந்தக் கிணறும் அதன் அருகில் பல வர்ணங்காளல் பெயிண்ட் அடிக்கப்பட்டிருந்த அந்தக கருவிகளும், அந்தச் சாலையைக் கடந்து சென்றவர்களின் கண்களுக்கு படாமல் இருந்திருக்க சந்தர்ப்பமே இல்லை” என்று பின்னால் பத்திரிக்கை நிருபர்களைச் சந்தித்த குருலாக் கூறினார். உண்மையில் அமெரிக்காவில் உண்மையான விசுவாசத்துடன் பல ஆண்களும், பெண்களும் பண்ணின ஜெபத்தின் பதில்தான் அந்தக் கிணறு. அந்த ஜெபத்திற்கான பதிலுடன் அற்புதங்கள் நின்றுவிடவில்லை.

4

நீங்கள் ஆரம்பித்ததை நோக்கிப் பாருங்கள்

சில நேரங்களில் சிறிய ஜெபங்களுக்கு மிகப்பெரிய பதில்கள் கிடைக்கின்றன.

''நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின் படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக'' (எபே.3:20,21).

வேத ஆராய்ச்சிக் குழுவின் தலைவர், தன் வகுப்பைத் துவங்குகையில், அனைவரையும் பார்த்து, அவர் கூறும் சரியான வேத பகுதிக்குத் திரும்பிக் கொள்ளும்படி கேட்டார். அப்பொழுது அங்கு வந்திருந்தவர்களில் ஒருவர், ''நாம், ஜெபித்தே அதை துவக்க வேண்டாமா?'' என்று கேட்டார்.

''சுய திருப்தியுடன் கூட, வேண்டாம். நான் எப்பொழுதுமே ஜெபத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை'' என்று கூறினார்.

உண்மையில், அவருக்கு, அந்தப் பார்வையாளர், இவரிடம், கூட்டத்தை எப்படி நடத்தவேண்டும் என்று தைரியத்துடன் ஆலோசனை கூறியதை அவர் விரும்பவில்லை. ஆயினும், ஒவ்வொரு வேதாகம வகுப்பும் எப்படி ஆரம்பிக்கப் பட வேண்டும் என்ற குறிப்பிட்ட முறையைப்பற்றி இவர் எதிர்ப்பு தெரிவித்தார். வேதாகம வகுப்புக் கூடுகையை ஓர் ஜெபத்துடன் ஆரம்பிப்பதில் எந்தவித தவறும் இல்லை. ஆனால் அது தேவைதானா?

எல்லாவிதக் கூடுகையையும் துவங்கும்பொழுது ஜெபம் ஒரு ஆரம்பக் குறியீடுபோல பயன்படுத்தப்படுகிறது. நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் மீது

தெ ரிக்கப்படும் மந்திர சக்தியுடையதாக ஜெபம் உள்ளதா? ஆனால், நன்மையான காரியங்கள், தானாக நடைபெறத் தக்கதான ஓர் ஆசீர்வாதமான ஆரம்பமா? அப்படி இருக்கத் தேவையில்லை.

வேதாகமமும் பல நூற்றாண்டுகளான கிறிஸ்தவ அனுபவங்களும், மக்களால் ஜெபத்தோடுகூட ஆரம்பிக்கப்படும் எல்லா நேரங்களில் மிகப் பெரிய காரியங்கள் நிகழ்ந்துள்ளன என்று உறதிப்படுத்திக் கூறுகின்றன. ஜெபம் என்பது மந்திரசக்தி நிறைந்த துகள்கள் கிடையாது. ஆனால் தேவாதி தேவனின் வல்லமையின்மேல் சார்ந்திருப்பதாகும். நமக்கு, எவ்வளவாக அவரது வழிநடத்துதலும், வல்லமையும் தேவை என்பதை உணர்ந்தோமானால் முதலாவது அவரைத் தான் நாம் நாடித் தேடி போவோம். ஏனெனில் தேவனில்லாமல் நாம் ஒன்றுமில்லை.

"கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" என்று சங்கீதக்காரன் சங்.127:1ல் கூறுகிறார். புத்தியுள்ள கட்டுமானப் பணியாளர்கள் தரைத்தளத்திலேயே கர்த்தர் இடைபட வேண்டும் என்று விரும்புங்கள்.

ஓ, தேவனுடைய குமாரனே, ஒவ்வொரு மணி நேரத்திலும்,
உழைப்பிலும், ஓய்விலும் தனிப்பட்டக் காரியங்களிலும்,
கூட்டு நிகழ்வுகளிலும், வெற்றியிலும், தோல்வியிலும்
பரிசுத்தமான காரியங்களிலும், உலகப் பிரகாரமான
காரியங்களிலும், பெரிய காரியங்களிலும், சிறிய காரியங்களிலும்,
என்னுடைய வெறுமையில் நீர் நிறைவாக இருக்கும்படி,
மிக மனத்தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்.
இந்த நாள் சமாதானத்தினால், அன்பினால் உண்மையினால்
உமது ஆவியின் வல்லமையினால் நிறைந்த தெய்வீக
வெற்றி நாளாக இருக்கட்டும்.

H.C.G. மோல்

அவர்கள் ஜெபத்தை அறியாதவர்கள்

அவர்கள் ஜெபத்தை அறியாதவர்கள். பேதுருவும், யாக்கோபும் யோவானும், இயேசுவின் மரணத்திற்கு ஏழு வாரங்களுக்குமுன், இயேசுவோடு கூடச் சேர்ந்து ஜெபிக்க வேண்டியவர்கள். ஆனால் அவர்கள் தூங்கிவிட்டார்கள். "என்னோடு கூட ஒரு மணி நேரம் விழித்திருக்கக் கூடாதா?" என்று இயேசு அவர்களிடம் கேட்டார். அவர்களால் முடியவில்லை. அது அந்த நிகழ்ச்சி கி.பி.30ம் ஆண்டு மார்ச் மாதம் நடந்தது. இப்பொழுது மே மாதம் ஆகிவிட்டது.

அந்த ஏழு வாரங்களில், அநேக காரியங்கள் நிகழ்ந்துவிட்டன. நசரேயனாகிய இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்து அடக்கம்பண்ணப் பட்டு, மூன்றாம் நாள் மரணத்தினின்று உயிர்த்தெழுந்துவிட்டார். அவருடைய சீஷர்களால் அந்தச் செய்தியை நம்ப இயலவே இல்லை. ஆனால் அவர் உயிர்த்தெழுந்துவிட்டார். அந்த வாரங்களில் உயிர்த்தெழுந்த இயேசு, அவர்களுக்கும், மேலும் அநேகருக்கும் அவர் பலமுறை தரிசனமானார். அவர்களுக்கு மிகவும் பிரியமான கலிலேயாக் கடலின் கரையில், உயிர்த் தெழுந்த இயேசு, அவர்களோடுகூட பொரித்த மீன் துண்டங்களையும் சாப்பிட்டார். பின்பு ஒருநாள், அவரது சீஷர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, மேகங்கள் மேல் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவர்களது கண்களுக்கு மறைந்துபோனார். அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இரண்டு தூதர்கள் அவர்கள் முன்தோன்றி, விரைவில் ஒருநாள் இயேசு திரும்ப வரப்போகிறார் என்றார்கள்.

அவர்கள் பிரமிப்படைந்தார்கள். ஒரு நிமிடம், "நாம் இனி என்ன செய்யப் போகிறோம்" என்று எண்ணினார்கள். உடனே இயேசு, கடைசியாகக் கூறின வார்த்தைகளை நினைவு கூர்ந்தார்கள். எருசலேமிற்குத் திரும்பப் போய் பிதா வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்றார். மேலும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்றும் கூறினார். அதனுடைய அர்த்தத்தை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. ஆயினும் அதன்பின்பு நீங்கள் உலகமெங்கும் சாட்சிகளாக இருப்பீர்கள் என்றார்.

ஆம், அது அவர்கள் புரிந்துகொள்ள இயலாத புதிராக இருந்தது. இந்தக் கலிலேயர்களாக சீடர்கள் அவர்கள் நாட்டை விட்டு அதிகமாக வெளியே வந்தது கிடையாது. ஆகவே, அவர்கள் எருசலேமிற்குத் திரும்பி வந்தார்கள். அங்கு ஏழுவாரத்திற்கு முன்பு கடைசி பஸ்காவை ஆசரித்த, அந்த வீட்டின்

மேலறையில் கூடினார்கள். அந்நேரத்தில், இயேசுவைப் பின்பற்றின கூட்டத்தாரில் அவருடைய சீடர்களில் பதினொருபேரும், இயேசுவின் தாயாகிய மரியாளும், வேறுசில பெண்களும் கூடி இருந்தனர். இயேசுவை விசுவாசிக்காத, இயேசுவின் சகோதரர்கள், அவரின் உயிர்த்தெழுதலுக்குப்பின் அவர்கள் விசுவாசிகளாகி விட்டார்கள். ஏறக்குறைய 120 பேர் கூடி இருந்தார்கள்.

அவர்கள் அங்கு என்ன செய்து கொண்டிருந்தார்கள்? ஒருவேளை அவர்கள் பேசிக்கொண்டிருக்கலாம். அல்லது, இயேசுவின் போதனைகளை மறுபடியும் நினைத்து பேசிக்கொண்டிருக்கலாம். ஆனால் நிச்சயமாக ஜெபித்திருப்பார்கள். அதுதான், அவர்களுக்கு இயேசு கூறின கடைசி கட்டளை. பரிசுத்த ஆவி வரும் வரைக்கும் அங்கே ஜெபத்தோடுகூட தரித்திருக்கக் கூடினார்கள். மிகவும் சுறுசுறுப்பாகச் செயல்படக் கூடிய பேதுருவிற்கு, காத்திருந்து ஜெபிப்பது, சற்றுக் கடினமான காரியம். ஆனால் இம்முறை அவர் நிச்சயமாகக் காத்திருந்து ஜெபிக்கப்போகிறார்.

இயேசு பரமேறினபின் பத்து நாட்கள் கழித்து இந்த நிகழ்ச்சி நடந்தது. யூதர்கள் அந்த நாளை பெந்தெகொஸ்தெ நாள் என்று கூறுகிறார்கள். (அதற்கு ஐம்பது என்ற அர்த்தம்) ஏனெனில் அது பஸ்கா பண்டிகை முடிந்து ஐம்பதாவது நாள் வருகிறது. பஸ்கா பண்டிகைக்கு எப்படி ஆயிரக்கணக்கான மக்கள் எருசலேமிற்கு வருவார்களோ, அதுபோல, பெந்தெகொஸ்தெ பண்டிகைக்கும் வருவார்கள்.

விளையாட்டு வீரர்கள் தாங்கள் தங்கும் அறையிலிருந்து வீறு நடை போட்டு குபு, குபு என வெளியேறுகிற கால் பந்து விளையாட்டு வீரர்களைப் போல, மேலறையிலிருந்து, சீஷர்கள் வெளியே வந்திருந்திருப்பார்கள். மக்கள் கூடியிருந்த ஆலய வளாகத்தில் சூறாவளிக் காற்று அடித்ததோ? பயங்கரமான சத்தத்துடன், இதற்குமுன் மக்கள் கேட்டிராத ஒலியுடன் முழக்கம் உண்டானது. அங்கு கூடியிருந்த 120 ஆண்களும் பெண்களும் மிகுந்த சத்தத்துடன் ஆண்டவரைத் துதித்துப் பாடினார்கள். அங்கு கூடி வந்திருந்த மக்கள் கூட்டத்திற்கு முதலில் ஏதுமே புரியவில்லை. அங்கு வாழ்ந்த மக்கள் கலிலேயர் பேசும் முறையை நன்கு அறிந்திருந்தார்கள். ஆனால், இப்பொழுது அவர்கள் பேசின மொழியை அவர்களால் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அங்கு கூடி வந்திருந்த பல்வேறு தேசத்தைச் சேர்ந்த மக்கள் அவர்கள் பேசுவதை நன்கு புரிந்துகொண்டார்கள். மொசபட்டோமியா, ரோம், துருக்கியின் வடபகுதி, எகிப்தின் தென்பகுதி,

லிபியா, ஆப்பிரிக்காவின் வடபகுதி ஆகிய இடங்களிலிருந்து அவர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் அனைவரும், அந்த 120 பேரும் பேசினதை நன்கு புரிந்து கொண்டார்கள்.

பின்பு பேதுரு எழுந்து, கூட்டத்தினரைப் பார்த்து பேச ஆரம்பித்தார். போனமுறை, இந்த தேவாலய வளாகத்தில் தான் இயேசுவை நான் அறியேன் என்று மறுதலித்தான். ஆனால் இப்பொழுதோ, அங்கு கூடியிருந்த பெரிய கூட்டத்தார் மத்தியில், யோவேல், சங்கீதம் போன்ற புத்தகங்களிலிருந்து வசனங்களை மேற்கோள் காட்டிப் பேசிக்கொண்டிருந்தார். உண்மையிலேயே அவரிடம் ஓர் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

உண்மையில் பேதுரு மட்டும் இப்படி மாறவில்லை. ஓர் சில மாதங்களுக்கு முன் மார்ச் மாதம் அனைத்து சீடர்களும் இயேசுவை கைவிட்டு விட்டு பயந்து ஓடி ஒளிந்தவர்கள் தான்.

அதற்குள் இந்த மே மாதத்தில் இப்படி எப்படி மாறினார்கள்? இப்பொழுது எதைக்குறித்தும் பயமே இல்லாததுபோல ஏன் செயல்படுகிறார்கள்? இதோ, உலகம் முழுவதையுமே வெற்றி பெறுவதுபோல ஏன் செயல்படுகிறார்கள்?

கடந்த பத்து நாட்களாக, அவர்கள் பரிசுத்த ஆவியைப்பற்றி அறியாவிட்டாலும், பரிசுத்த ஆவிக்காக ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் வல்லமைக் காக ஜெபித்தார்கள். அந்த வல்லமை எங்கிருந்து வரும் என்றோ அவர்களை எங்கு நடத்திச் செல்லும் என்று அறியாமலேயே பரிசுத்த ஆவியின் வல்லமைக்காக ஜெபித்துக்கொண்டிருந்தார்கள்.

மீன்பிடிக்கிறவர்களாகிய அந்த சீடர்கள் வல்லமையோடு கூடப்பேசின செய்தியானது. அநேகரைத் தொட்டது. ஏறக்குறைய மூவாயிரம் பேர் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாசிகளானார்கள். அன்றைய நாளுக்கு முதல் நாள் இருந்த சீடர்களின் எண்ணிக்கையைவிட அன்று இருபத்தைந்து மடங்கு சீடர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று.

அந்த மேலறையில், சீடர்கள் ஜெபித்தபொழுது, என்ன நடக்கும் என்பதை அறியாதிருந்தார்கள். அவர்களுக்குத் தெரியாதபடி, அவர்கள் அறியாத நாடுகளாகிய ரோமாபுரி, எகிப்து மேலும் மொசபெட்டோமியா, ஆகிய நாடுகளுக்கு அவர்களது செய்தியைக் கேட்டவர்கள் எடுத்துச் சென்றனர். ஆனால் பரிசுத்த ஆவியானவர் வரும்பொழுது, மிகப்பெரிய காரியங்கள் நிகழும்.

ஹெப்ரைட்சைச் சேர்ந்த இரு பெண்மணிகள்

ஒரு கண் தெரியாத பெண்ணிற்கு பார்வை கிடைத்தது. இவ்வாறு தான் துணிச்சலான முழு நிகழ்ச்சிகளும் ஆரம்பமானது. எண்பத்து நான்கு வயதுடைய பெக்கிஸ்மித் தன் கண்பார்வையை இழந்ததால் ஆலயத்திற்கு வர இயலவில்லை. ஆனால் அவரும், ஆர்த்ரைட்டிஸினால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட அவரது சகோதரி கிறிஸ்டைனும், எழுப்புதலிற்காக ஒழுங்காக ஜெபித்து வந்தார்கள். ஓர் நாள் அவ்வாறு அவர்கள் ஜெபித்தபொழுது, அந்தப் பகுதியில் உள்ள அனைத்து திருச்சபைகளும், வாலிபர்களால் நிரம்பப்பட்டு காணப்பட்டதாக பெக்கி ஓர் தரிசனத்தைக் கண்டாள்.

பிரச்சனை என்னவென்றால் சில காலமாக அந்தத் திருச்சபைகளில் வாலிபர்களே காணப்படவில்லை. 1940ம் ஆண்டின் பின் பகுதியில், ஸ்காட்லாண்டின் கடற்கரைப் பகுதியில் இருந்த ஹெப்ரைட்ஸ் என்ற தீவில் திருச்சபைக்கு வரும் மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகக் காணப் பட்டது. அப்பகுதியில் வாழ்ந்த வயது முதிர்ந்தவர்கள், அவர்களது உடல்நிலை நன்றாக இருந்ததால் திருச்சபைக்கு வந்து சென்றனர். ஆனால் இளைய தலைமுறையினர் திருச்சபைக்கு வருவதைத் தவிர்த்துவந்தனர். ஆகவே பெக்கி கண்ட காட்சி, ஒருவேளை அவளது உன்னதத்தின் வாஞ்சையாக இருக்கலாம் என்று எண்ணப்படலாம். ஆயினும் அவள் தனது போதகருக்கு செய்தி அனுப்பி வரவழைத்தாள்.

"*என்றுமில்லா பத்து மிகப் பெரிய எழுப்புதல்கள்*" என்ற தங்களது புத்தகத்தில், எல்மர் டவுன்சும், டக்லஸ் பாட்டரும் இப்படியாக அந்த அதிசய நிகழ்வைப்பற்றி எழுதியுள்ளார்கள். பெக்கியின் அழைப்பை ஏற்றுவந்த போதகர் ஜேம்ஸ் முர்ரே மக்காய், பெக்கி கண்ட வாலிபர்களால் நிரம்பி இருந்த திருச்சபைகளின் தரிசனம், உண்மையில் தேவனால் அனுப்பப்பட்ட செய்தி என்று நம்பினார். அந்த இரு சகோதரிகளும் தங்களது எளிய இல்லத்தை எப்படியாக ஜெபவீடாக மாற்றியிருந்தார்கள் என்று அந்தப் போதகர் நன்கு அறிந்திருந்தார். அவரது மனைவியும் ஒரு சில வாரங்களுக்கு முன்பு அதே கனவைக் கண்டுள்ளார். உடனே போதகர், திருச்சபைத் தலைவர்களை ஜெபக் கூடுகைக்கு வரவழைத்தார். மூன்று மாதங்களாக, ஒவ்வொரு வாரமும் இரண்டு நாட்களுக்கு, அங்கிருந்த வைக்கோல் கிடங்கில் வைக்கோல் போர்கள் மத்தியில், இருந்து எழும்புதலிற்காக

ஜெபித்து வந்தார்கள். போதகர் மக்கேய், தனக்கு உதவி தேவை என்பதை உணர்ந்தார். ஆகவே, ஸ்காட்லாண்டைச் சேர்ந்த தலை சிறந்த எழுப்புதல் பிரசங்கியாரான கேம்ப்பெல் என்பவரை தமது திருச்சபைக்கு செய்தி கொடுக்க அவர் அழைப்பு விடுவிக்க எண்ணினார். அவர் அவ்வாறு கேம்ப்பெல்லை அழைக்கும் முன்பாக, மறுபடியுமாக பெக்கிஸ்மித் அவரைக் காணவேண்டும் என்று அழைப்பு விடுத்தார். அவன் ஜெபித்தபொழுது, தேவன், டங்கன் கேம்ப் பெல்லை அவர்களது திருச்சபையில் செய்தி கொடுக்க அழைக்கும்படி கேட்டார் என்று கூறினாள். 'நமது திருச்சபைக்கு தேவன் எழுப்புதலைக் கட்டளையிடுகிறார். அதற்கு கேம்ப்பெல்லை ஒரு கருவியாகத் தேவன் பயன்படுத்தப் போகிறார்' என்று கூறினாள்.

அது மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்தது. கேம்ப்பெல், ஸ்காட்லாண்டின் ஹைலாண்ட் பகுதியில் வளர்ந்தவர். தடங்கல் ஏதுமின்றி தெளிவாக அந்தத் தீவுமக்கள் பேசும் கேலிக் மொழியைப் பேச வல்லவர். ஆகவே மக்கே, அந்த சுவிசேஷகரை பத்துநாட்கள் நற்செய்திக் கூட்டம் நடத்த அழைத்தார். ஆனால் கேம்ப்பெலிற்கு வேறு நிகழ்ச்சிகளில் பங்கெடுக்க வேண்டியிருந்ததால், மக்கேயின் அழைப்பை ஏற்று வர இயலாது என்று கூறினார். அவரை அவர்கள் விரும்பினால், ஓராண்டு கழித்து வருவதாகக் கூறினார்.

இச்செய்தியை மக்கே பெக்கியிடம் கூறினார்.

"அது மனிதன் கூறும் பதில் ஆனால் தேவன் வேறு விதமாகக் கூறுகிறாரே. ஆகவே மறுபடியும் அவருக்கு எழுதுங்கள்" என்று பெக்கி கூறினாள்.

பார்விஸ்ஸில் உள்ள திருச்சபையில் நடக்கும் நிகழ்ச்சிகளை கேம்ப்பெல் அறியாமல், மக்கேயின் அழைப்பை நிராகரித்தது சரிதானா என்று யோசித்துக் கழித்து, மிகவும் பிரசித்துபெற்ற கெஸ்விக் வேதாகம சங்கக் கூட்டத்தில், முன் வரிசையில் அமர்ந்திருந்த பொழுது, அவருக்குள்ளாக ஏதோ ஓர் கஷ்டமான உணர்வு ஏற்பட்டது. கெஸ்விக்கில் செய்தி கொடுக்க வேண்டும் என்று அவர் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். வாழ் நாளிலேயே மிக அரிதாகக் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்திருந்தது.

ஆனால், அவர் அங்கு அமர்ந்திருந்தபொழுது, அவுட்டர் ஹெப்ரைட்ஸ் என்ற தீவிற்கு உடனே போகும்படி பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டார். அங்கிருந்த மாடரேட்டரைப் பார்த்து, "ஏதோ ஓர் காரியம் என் மனதில்

தோன்றுகிறது, நான் உடனே, இங்கிருந்து போகவேண்டும்'' என்றும் ஆகவே தன்னை மன்னித்து விடும்படியும்'' கூறினார். ஹெப்ரைட்ஸ் தீவிற்குச் செல்லும் படகை உடனே பிடித்து அத்தீவிற்குப் பயணப்பட்டார். அங்குள்ள திருச்சபையில் அவர் பேசினபொழுது உடனடியாக தேவன் கிரியை செய்தார். அந்தக் கட்டிடம் கொள்ளாத அளவிற்கு மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தனர். ''தேவனுடைய வல்லமையான பிரசன்னத்தை உணர்ந்ததாகவும், சந்தோஷத்தின் குரலும், இரக்கத்தின் குரலும் கலந்து அந்த அறை முழுவதும் நிறைந்தது'' என்று ஒருவர் சாட்சி கூறினார்.

இந்த எழுப்பதுல் 'வதந்திகள்' பரவுவதைவிட மிகவேகமாக அருகில் இருந்த அனைத்து மாவட்டங்களிலும் பரவியது. அருகில் இருந்த திருச்சபையில் கேம்ப்பெல்லை நடு நிசி 1.00 மணிக்கு செய்திகொடுக்கும்படி அழைத்தனர். அவர் வந்தபொழுது ஆலயம் முழுவதும் மக்களால் நிரம்பி வழிந்தது. ஆலயத்திற்கு வெளியேயும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. அவுட்டர் ஹெப்ரைட்ஸ் தீவு முழுவதும் ஆவியின் எழுப்புதலினால் நிறைந்து வாலிபர்கள் கூட அநேகர் தொடப்பட்டனர்.

பெக்கி ஸ்மித்தும், கிறிஸ்டைன் ஸ்மித்தும் தங்களது வீட்டில், இருந்து கொண்டு, ''தோல்வியைப் பற்றி எண்ணாத நம்பிக்கை தேவன் மேல் எங்களுக்கு இருந்தது'' என்று கூறினார்கள். ஆகவே இந்த மாபெரும் எழுப்புதல் ஏற்படும் வரை, இரவு நேரங்களில்கூட விடாமல் தொடர்ந்து ஜெபத்தில் போராடி வந்தார்கள். அவர்கள் ஒருக்காலும் ஜெபத்தை கைவிடவே இல்லை. தேவன் அவர்களது ஜெபத்திற்குப் பதில் அளித்தார்.

நியூயார்க் நகரத்தில் எழுப்புதலை உண்டாக்கிய மனிதர்

ஒருவர் கூட அவரது பெயரை ஞாபகத்தில் வைக்கவில்லை. அது ஆச்சரியமாகவே உள்ளது. எரேமியா லேன்ப்பியர் என்பவர். நியூயார்க் நகரத்தில் வாழ்ந்து வந்த ஓர் தொழில்மேதை. அவரது காலத்தில் வாழ்ந்து வந்த ஒருவர், அவரைப் பற்றி அவர் மிகவும் இனிய முகத்துடன் கூடிய உயரமான மனிதர் மிகவும் அன்பானவர். சளைக்காமல் உழைக்கக்கூடியவர், விடாமுயற்சியுடையவர்'' என்று விவரித்தார். சார்லஸ் பின்னியின் சுவிசேஷக்

கூட்டம் ப்ராட்வேயில் நடந்தபொழுது, அந்தக் கூட்டத்தில் அவர் இயேசுவை தமது முப்பத்தி மூன்றாவது வயதில் ஏற்றுக்கொண்டார். அவரது நாற்பத்தி எட்டாவது வயதில் நகர்ப்புறங்களில் சுவிசேஷப்பணியாளராக ஆக வேண்டும் என்ற அழைப்பைப் பெற்றார்.

மான்காட்டன் பகுதியில் புல்ட்டன் தெருவில் இருந்த வட டச்சு சீர்திருத்தத் திருச்சபையில் அங்கத்தினர்கள் குறைந்து கொண்டு வந்தனர். வெளி நாடுகளிலிருந்து குடியேறினவர்கள் ஊரின் கீழ்ப்பகுதியில் வாழ்ந்த வந்தனர். சில திருச்சபைகள் நகரத்தில் மேல் பகுதிக்கு மாற்றிச்சென்று விட்டனர். ஆனால் புல்ட்டன் தெருவில் இருந்த அந்தத் திருச்சபை, லேன்ப்பியரை வரவழைத்து, அந்தத் திருச்சபைக்கு அருகில் நடக்கக்கூடிய தூரத்தில் இருந்த அனைத்து மக்களையும் திருச்சபைக்கு அழைக்கவும், வேதாகமங்களையும் கைப்பிரதிகளையும் விநியோகிக்கும் படியும் கேட்டுக்கொண்டனர். லேன்ப்பியர் ஓர் வேதாகமக் கல்லூரியில் படித்த மாணவன் அல்ல. அவர் ஓர் திருச்சபையின் அங்கத்தினரும் அல்ல. ஆனாலும் தேவனுக்கென்று ஏதாவது செய்யும்படி அவர் மிகுந்த ஆவலுள்ளவராக இருந்தார். ஆகவே அவர் தமது தொழிலை விட்டு விட்டு, வீடுகள் தோறும் சென்று கதவுகளைத் தட்டி வேத பகுதிகளை விநியோகிக்கலானார்.

ஒரு சிலரே அவரை ஏற்றுக்கொண்டனர். தாம் தவறான முடிவு எடுத்து விட்டோமோ என லேன்பியர் யோசிக்கலானார். அவர் ஊழியத்தை ஆரம்பிக்குமுன், அதற்காக ஜெபித்தார். ஆனால் இப்பொழுது அது குறித்து சந்தேகம் வந்துவிட்டது.

ஆயினும், ஜெபவீரானான அவரைப்போல், நியூயார்க் நகரில் உள்ள மற்ற தொழிலதிபர்களும், ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களா என யோசித்தார். "ஒரு நாள் நான் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த பொழுது, பன்னிரண்டு மணிமுதல் ஒரு மணி வரை ஒரு மணிநேரம் ஜெபிப்பது ஒவ்வொரு தொழிலதிபருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற எண்ணம் என்னில் தோன்றியது" என்று அவர் தமது பத்திரிக்கையில் எழுதினார். மெதுவாக இந்த எண்ணத்தைச் செயல்படுத்த ஆரம்பித்தார். ஒரு வாரத்திற்கு ஒரு முறை இப்படியாக ஜெபிக்கலாம் என எண்ணினார். ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் ஒருவர் வந்தால் கூட அது நல்லது. அந்த ஜெபக் கூடுகை 'வால் தெருவில் உள்ள தொழிலதிபர்களுக்கு மட்டுமல்லாது,

எல்லாத் தொழிலைச் செய்யும் பணியாளர்களும் அதில் சேர்ந்து கொள்ளலாம் என எண்ணினார்."

உடனே லேன்ப்பியர் கைப்பிரதிகள் அச்சடித்து விநியோகித்தார். முதல்முதலாக 1859ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ம்தேதி அன்று நண்பகல், மக்கள் ஜெபிக்க வருவார்களா எனக் காத்துக்கொண்டிருந்தார். யாரும் வரவில்லை. முதல் அரைமணி நேரத்திற்குள் ஒருவரும் வரவில்லை. சிறிது நேரம் கழித்து ஒருவர் வந்தார். பின்பு மற்றொருவர் வந்தார். இப்படியாக பகல் ஒரு மணிக்குள்ளாக ஆறு பேர் வந்தனர். அடுத்த வாரம் இருபது பேர் வந்தனர், அதற்கடுத்தவாரம் நாற்பதுபேர் வந்தனர். அனுதினமும் இப்படியாகக் கூடி ஜெபிக்கலாமா எனக் கேட்டார்கள். நான்காவது புதன் கிழமைக்குள்ளாக நூற்றுக்கதிகமானபேர் வந்தனர். விரைவில் ஆலயத்தில் இருந்த மூன்று அறைகளும் நிரம்பிவிட்டன. அருகில் இருந்த யோவான் மெத்தடிஸ்ட் திருச்சபை திறக்கப்பட்டு கூட்டம் சமாளிக்கப்பட்டது.

செப்டம்பர் 23ம் தேதி முதல் கூட்டத்திற்காக அவர் இந்த ஜெபக் கூடுகைப் பற்றி கைப்பிரதிகள் அச்சடித்துக்கொடுத்தபொழுது, இரண்டு நாட்கள் கழித்து பிலடெல்பியாவில் இருந்த பென்சில்வேனியா வங்கி, பொருளாதார நெருக்கடியினால் வீழ்ந்து விடும் என்றோ அதனால் நாடு முழுவதும் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்றோ, லேன்ப்பியர் அறிய வில்லை. விரைவில் நியூயார்க்கின் வர்த்தக சந்தை விழுந்துவிட்டது. இத்தனை நாட்களாக பணத்தையே நம்பி வாழ்ந்தவர்கள். திடீரென நம்பத் தகுந்த வேறு வழியைத் தேட ஆரம்பித்தனர். ஆகவே இந்த ஆண்களின் ஜெபக்கூடுகையில் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே சென்றதால், நகரத்தில் பல இடங்களில் ஜெபக்குழுக்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. ஆலயங்களில் கூட்டம் நிரம்பி வழிந்து இடமில்லாமல் போனதால், அநேக சினிமா தியேட்டர்களை வாடகைக்கு அமர்த்தினார்கள். சேம்பர் தெருவில் இருந்த பர்டன் தியேட்டரில், மக்கள் கூட்டம் கூட்டமாக ஜெபம் துவங்குவதற்கு அரைமணி நேரத்திற்குமுன்பே வந்து கூடிவிட்டதால், அநேகர் வெளியே நிற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 1858ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் நாள் ஹென்றி வார்ட் டீச்சர் என்ற புகழ்பெற்ற சுவிசேஷகர் மூவாயிரம் மக்களை ஜெபத்தில் நடத்தினார் என *நியூயார்க் டைம்ஸ்* என்ற பத்திரிக்கை செய்தி வெளியிட்டது. *'டிரிபியூன்,'* *'ஹெரல்ட்'* என்ற பத்திரிக்கைகள் போட்டி போட்டுக் கொண்டு, மான்ஹாட்டனில் நடந்த நண்பகல் ஜெபக் கூட்டங்களைப் பற்றி

அறிக்கை வெளியிட்டன. ஏப்ரல் மாதம், டிரிபியூன் பத்திரிக்கையின் ஆசிரியரான கோரேஸ் கிரீலி என்பவர் இந்த ஜெபக் கூடுகையினால் ஏற்பட்ட எழுப்புதல்பற்றி தன் முழுப் பத்திரிக்கையிலுமே வெளியிட்டார்.

ஃபுல்டன் தெருவில் நடந்த லேன்ப்பியரின் ஜெபக் கூடுகை உலகப் புகழ் பெற்றதாக மாறினது. ஸ்விட்சர்லாந்து, ஜெர்மனி மேலும், பிரிட்டிஷ் தீவுகளிலிருந்து ஜெப விண்ணப்பங்கள் வந்து குவிந்தன.

இரட்சிக்கப்பட்ட அநேகர் ஆலயத்தை நிரப்பினர். மே மாதம் ஒரு பத்திரிக்கை, ஏறக்குறைய ஐம்பாதியிரம் மக்கள் நியூயார்க் நகரத்தில் மட்டும் இரட்சிக்கப்பட்டார்கள் என்ற செய்தியை வெளியிட்டது. தேசமெங்கும் அனைத்து ஊர்களிலும், பட்டணங்களிலும், ஜெபக் கூட்டங்கள் ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்டன. "சிக்காக்கோ நகரில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஒருக்காலும் நிகழவில்லை" என ஓர் சிக்காக்கோ செய்தித்தாள் அறிவித்தது. மனம் திரும்பினவர்களின் எண்ணிக்கையை குறிப்பிட்டுச் சொல்ல இயலவில்லை. சிலர் ஐம்பாதியிரம் என்றனர். வேறு சிலர் லட்சம் என்றனர்.

டுவைட் மூடியைப் போன்றோ, பில்லிகிராமைப் போன்றோ, எரேமியா லேன்ப்பியரின் பெயர், பிரஸ்தாபமாகவில்லையாயினும், அவரால் ஆரம்பிக்கப்பட்ட அந்தச் சிறிய நண்பகல் ஜெபக்குழு தேச முழுவதும் அக்கினியைப் போலப் பரவியது.

ஓலா கல்பெப்பரும் அவரது பார்வை நரம்பு பாதிப்பும்

1927ம் ஆண்டு சீனாவின் வடகிழக்கு பிராந்தியத்தில் உள்ள பெரிய ஷான்டங் என்ற பகுதியில், கம்யூனிஸ்ட் அரசியல் வாதிகளால் நாட்டின் அமைதி மிகவும் பாதிக்கப்பட்டது. நாடு அமைதியாகும் வரைக்கும் அங்கிருந்த மிஷனரிகளை அமெரிக்க அரசு ஷான்டங்கை (தற்காலத்தில் ஷான்டோங் என்று கூறப்படுகிறது) விட்டு வெளியேறி ஷீப்பூ என்ற சீனத் துறைமுகப் பட்டணத்தில் போய்க் குடியேறும்படி ஆலோசனை கூறியது. ஆதலால் பெர்த்தா ஸ்மித், ஓலா கல் பெப்பர் ஆகிய இரண்டு பாப்திஸ்ட் மிஷனரிகள் கடற்கரைப் பட்டணத்தை நோக்கிச் சென்றார்கள். இவர்களைப் பற்றி ஜாப்ஸ், மற்றும் பெற்றிடாம்ஸாண்டு ஆகிய இருவரும், "எழுப்புதலை உண்டாக்கிய பெண்கள்" என்று விளக்கி உள்ளனர்.

டிப்பூ என்ற கடற்கரை பட்டணத்தில் இருந்த மிஷன் வளாகம் அவ்வளாக வசதியாக இருக்கவில்லை. அங்கிருந்த மிஷன் கட்டிடத்தில் இரண்டு அறைகளே இருந்தன. ஆனால் அங்கு இருபது மிஷனரிகளுக்கு மேலாகத் தங்க வேண்டியிருந்தது. ஷாண்டங்கில் இருந்த அரசியல் குழப்பம் போலவே, நெருக்கமான இடத்தில் ஒன்றும் செய்ய இயலாமல் இருந்த மிஷனரிகள் மத்தியிலும் ஓர் குழப்பம் நிலவியது. அவர்கள் என்ன செய்வது? என்று யோசித்து வந்தனர். இறுதியில், ஓர் ஒழுக்கக்கூட்டம் அங்கே நடத்தலாம் என எண்ணி, நார்வே லுத்திரன் மிஷனைச் சேர்ந்த மேரி மான்செனை அழைத்து, அவர்கள் மத்தியில், அவனது சாட்சியைப் பகிர்ந்து கொள்ளக் கேட்டார்கள்.

"தேவன் உங்களை வல்லமையினால் நிரப்பப்பட வேண்டும் என்றால், நீங்கள் அறிந்துள்ள எல்லாப் பாவங்களையும் தேவனுக்கு முன்பாக அறிக்கையிட்டு, மன்னிப்புப்பெற்று, அவற்றை விட்டுவிடவேண்டும்" என்றும் "தேவன் பரிசுத்தத்தை விரும்புகிறார்" என்று மான்சென் கூறினாள். வேதத்தின் அடிப்படையில் தெய்வீகத்தன்மை என்பது, தேவனுடைய உண்மையான தொடுதலைப் பெறும்படியாக, உள்ளான ஆன்மாவைச் சோதித்துப் பார்ப்பதிலிருந்து ஆரம்பமாகிறது என்று விள்க்கினாள்.

பார்வை நரம்புப் பாதிப்பால் கஷ்டப்படும் ஓலாகல்பெப்பர், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை உணர்ந்தாள். தேவன் அவளைக் குணப்படுத்த விரும்புவதை உணர்ந்தாள். அவளுக்கு ஒரு கண்ணில் அறைகுறைப் பார்வை தான் உண்டு, அத்தோடு கூட அதிக வலியும் உண்டு. உலகப் பிரசித்தி பெற்ற கண் மருத்துவர் கூட அவளைச் சோதித்துப் பார்த்தார். ஆனால் அவராலும் ஏதும் அவளுக்கு உதவிசெய்ய இயலவில்லை.

ஆகவே, ஒரு கூட்ட மிஷனரிகளை தனது கண் சுகமாக ஜெபிக்கும்படி ஓலா கேட்டுக்கொண்டாள். அற்புதம் நிகழ வேண்டுமா? பாப்டிஸ்ட் மிஷனரிகள் பொதுவாக அற்புதங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள். தேவ வல்லமையை அவர்கள் விசுவாசித்தார்கள். ஆனால் துன்ப நேரங்களில் அவற்றைத் தாங்கிக்கொள்ளத் தேவன் பெலன் தருவார் என்று விசுவாசித்தார்கள். துன்பச் சூழலை நீக்கிவிடும்படி தேவனைக் கேட்பது என்பது, குறித்து அவர்கள் கேள்விப்பட்டதே கிடையாது. ஆனால் ஓலா பிடிவாதமாக இருந்தாள். தனது கண் கண்ணாடியை கழற்றி அங்கிருந்த அனலுக்கான தீ அருகில் பாடத்தின் மீது வைத்துவிட்டு,

பன்னிரண்டு மிஷனரிகள் வட்டமாக அவளைச் சுற்றிலும் இருந்தார்கள். அவளது கணவர் வேதத்திலிருந்து ஓர் சில வார்த்தைகளை வாசித்தபின், எண்ணெயை அவள் தலையில் வைத்து அபிஷேகித்தார். அனைத்து மிஷனரிகளும் அவள் தலைமேல் கை வைத்து ஜெபித்தார்கள்.

பெர்த்தா ஸ்மித்தும் தனது கையை ஓலாவின் தலையின்மேல் வைத்தாள். "நான் என் கையை நீட்டின பொழுது, நான் படக் என பின்பக்கமாக இழுத்துக் கொண்டேன். ஏனெனில் எனக்கு முன்பாக செல்வி கார்ட்டுவெல் என்ற மிஷனரி இருந்தார்கள். அவர்களுக்கும் எனக்கும் சற்று மனக்கஷ்டம் இருந்தது" என்று பின்னால் பெர்த்தா கூறினாள். இப்படியாக மற்றொரு மிஷனரியைப் பற்றிக் கசப்பான உணர்வை மனதிற்குள் வைத்துக்கொண்டு, பிறரோடு சேர்ந்து எப்படி ஜெபிக்கமுடியும். அந்நேரத்தில்தானே, அனைவருக்கும் முன்பாக, செல்வி ஹார்ட்வெல்லைப் பற்றிய கசப்பான உணர்வை அறிக்கை யிட்டாள் பின்பு அனைவரும் சேர்ந்து ஓலாவிற்காக ஜெபித்தார்கள்.

அவர்கள் ஜெபித்து முடித்தபொழுது, ஒருவர்மேல் ஒருவர் வெறுப்படைய இரண்டு சீனச் சமையற்காரர்கள் உள்ளே நுழைந்தார்கள். பெர்த்தா ஸ்மித் தன் பாவத்தை அறிக்கையிட்டதை அறிந்த அந்த இருவரும் ஒருவருக் கொருவர் மன்னிப்பு கேட்டுக்கொண்டார்கள். பின்பு மிஷனரிகளிடம் வந்து கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்புவதாகக் கூறினார்கள்.

"அந்த இரு சமையற்காரர்களுடைய இரட்சிப்பைக் குறித்து, ஏற்பட்ட மகிழ்ச்சியில், ஓலாவின் கண்ணைக் குறித்து அனைவரும் மறந்து விட்டோம்" என்று ஓலாவின் கணவர் பின்பு கூறினார். திடீரென அக்கூட்டத்தல் இருந்த ஒருவர், உன் கண்களின் நிலைமை என்ன? என்று கேட்டார்.

"எனது கண்கள் நன்றாக உள்ளது வலி முற்றிலுமாக நீங்கிவிட்டது" என்று ஓலா கூறினாள். அந்த வலி அவளுக்குத் திரும்ப வரவேயில்லை. ஓலா அவளது வாழ்நாள் முழுவதும், அவளது கண்ணாடியை அந்த அனல் தீ இடத்திலிருந்து எடுக்கவே இல்லை.

"நாம் எப்படிப் மிஷனரிகளாக இருக்கின்றோம்?" என்று பெர்த்தா கேட்டாள். அவர்கள் ஒருவொருக்கொருவர் தங்களது பாவத்தை அறிக்கை யிட்டதையும், பின்பு ஓலாவின் கண்களுக்காக ஜெபித்ததையும் ஞாபகப்

படுத்தினாள். ஆனால் அவர்கள், தாங்கள் மிஷனரிகளாக வந்த சீன மக்களின் ஆன்மீகக் கண்கள் திறக்கப்பட ஜெபிக்கவில்லையே என்று கூறினாள்.

இப்படியாக ஷேன்டங் எழுப்புதல் ஆரம்பமாயிற்று. மிஷனரிகள், அவர்கள் பணிசெய்து வந்த சொந்தப் பணித்தளங்களுக்குச் சென்றபொழுது, சீனத் தலைவர்கள் மற்றும் சீன மக்கள் மத்தியில் ஜெபக் குழுக்களை ஆரம்பித்தார்கள். விரைவில் ஜெபக் குழுக்கள் நாடெங்கும் பரவி குழுக்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. அதனால் ஏற்பட்ட எழுப்புதல் மிகவும் ஆழமாக எல்லா இடங்களிலும் பரவியது. அந்த ஜெபக் குழுக்களின் சுவிசேஷத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமல், ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டாலும், அந்த எழுப்புதல், மக்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். அந்த நாள்வரை சீனாவில் இதுபோன்ற மாபெரும் எழுப்புதல் இதற்குமுன் ஏற்பட்டதே கிடையாது.

ஒரு மிஷனரி, தனது பார்வை நரம்பு சுகத்திற்காக மற்ற மிஷனரிகள் ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டதால், இம்மாபெரும் எழுப்புதல் ஏற்பட்டது.

பாதரட்சைகள் அடிப்பாகத்திலிருந்து ஆத்துமாக்கள் வரை

19ம் நூற்றாண்டின் உலகப் புகழ் பெற்ற சுவிசேஷகராகிய டுவைட் எல்.மூடி, சிக்காக்கோவை முதல் முதலாகப் பார்த்தபொழுது, அவர் வாலிபனாக இருந்தார். அவர் ஒருவருடத்திற்கு முன்புதான் கிறிஸ்தவராக மாறினார். அவர் மசாசூட்டை விட்டு வெளியேறி சிக்காக்கோவிற்கு பணம் சம்பாதிக்க வந்தார். அவர் மிட்வெஸ்ட் என்ற ஊரில் தலைசிறந்த பாதரட்சை விற்பனை யாளராக இருந்ததால், சிக்காக்கோவிலும் பாதரட்சை விற்பனையாளராக மாறினார்.

தன் தோழியோடுகூட அவர் வாலிபர்களை மிஷன் ஞாயிறு பள்ளிக்கு வரவழைத்து பேசுவதிலும் தலை சிறந்து விளங்கினார். மூடியின் தலையீட்டால், அந்த ஞாயிறு பாடசாலைக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. மூடி உண்மையான பைட் பைப்பரைப் போன்று, முரட்டு குணமுடைய வசப்படுத்த இயலாத வாலிபர்களைத் தன் வசப்படுத்துவதில்

வல்லவர். ஆயினும் 19ம் நூற்றாண்டின் தலை சிறந்த சுவிசேஷகராகப் போகிறார் என்ற எந்தவித அறிகுறியும் அவரிடம் இல்லை. அவரால் வாலிபர்களை ஞாயிறு பள்ளிக்கு அழைத்துவர முடிந்தது. ஆனால் தேவ ராஜ்ஜியத்திற்குள் வழிநடத்தவில்லை.

"நான் ஒருபொழுதும் அவர்களுடைய ஆத்துமாக்களைப் பற்றிய பேசவேயில்லை. அப்படி ஆத்துமாக்களைப் பற்றிப் பேசுவது சபையின் மூப்பர்களின் வேலை என்று எண்ணினேன். எண்ணிக்கை தான் முக்கியம் என்று எண்ணினேன். ஆகவே அதிக எண்ணிக்கைக்காக நான் முயற்சி எடுத்து உழைத்தேன். பின்பு தேவன் என் கண்களைத் திறந்தார்" என்று மூடி கூறினார்.

மூடி, ஞாயிறு பாடசாலையில் மாற்று ஆசிரியராகப் பணியாற்றினபொழுது, அவருடைய வாழ்வில் ஓர் திருப்பம் ஏற்பட்டது. "ஞாயிறு பள்ளியில் ஓர் வகுப்பில் சில வாலிபப் பெண்கள் இருந்தனர். அவர்களும் வாலிபப் பையன்களைப் போலவே அற்பப்புத்தியுடனும், அலட்சியமான போக்குடனும், காணப்பட்டனர். அவர்களைப் போல நான் இதுவரை வேறே பெண்களைச் சந்தித்தது கிடையாது. ஓர் நாள் அந்த வகுப்பு ஆசிரியர் வரவில்லை. ஆகவே நான் அந்த வகுப்பை எடுக்கவேண்டி இருந்தது. வகுப்பில் நுழைந்தவுடனேயே நேரடியாக என்னைக் கேலிபண்ணி சிரித்தார்கள். கதவைத்திறந்து உடனே அவர்கள் அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டு, மறுபடியும், வகுப்பிற்கு வரக்கூடாது என்று சொல்லவேண்டும் என்று எனக்குத் தோன்றியது" என்று மூடி கூறினார்.

அடுத்த வாரம், அந்த வகுப்பு ஆசிரியருடன் பேசினபொழுது, அந்த ஆசிரியருக்கு குணமாக்கப்படக்கூடாத வியாதி இருப்பதை அறிந்தார். அந்த ஆசிரியர், அவர் மரிப்பதைப்பற்றி அவளுக்குக் கவலை இல்லை, என்றும் ஆனால் அவரது ஞாயிறு பள்ளி மாணவர்களைப் பற்றித்தான் கவலை என்றும் கூறினார். "நான் இதுவரை யாரையும் இயேசுவிடம் வழிநடத்தினது கிடையாது" என்று கூறினார். அவர் மரிக்குமுன்பு அதைச் செய்ய விரும்பினார்.

அந்த வாரம் அந்த ஆசிரியருடன் சேர்ந்து, மூடி அந்த வகுப்பில் படிக்கும் ஓர் மாணவியின் வீட்டிற்குச் சென்றார். அங்கு அந்த மாணவியின் இரட்சிப்பிற்காக ஜெபிக்கும்படி மூடியிடம் அந்த ஆசிரியர் கேட்டார். "ஓர்

வாலிபப் பெண்ணை உடனே இரட்சித்துக்கொள்ளும்படி தேவனிடம் நான் கேட்டதே கிடையாது. ஆனால் நாங்கள் ஜெபித்தோம். தேவன் எங்கள் ஜெபத்தைக் கேட்டுப் பதில் கொடுத்தார்'' என்று மூடி அந்நாளை நினைத்துக் கூறினார்.

பின்பு அவரும், அந்த ஆசிரியரும் அந்த வகுப்பில் இருந்த மற்ற மாணவியரின் வீடுகளுக்குச் சென்று பேசினார்கள். ஜெபத்திற்குப் பின்பு, ஒவ்வொரு மாணவியும் தங்களது வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார்கள். பத்து நாட்களுக்குள்ளாக அனைத்து பிள்ளைகளும் மனம் திரும்பிவிட்டனர். பின்பு, மூடி, அனைத்துப் பெண்களையும், அந்த ஆசிரியரோடு சேர்ந்து ஜெபிக்கும் இறுதி ஜெபத்திற்கு அழைத்தார். அடுத்த நாள் அந்த ஆசிரியர் போகப் போகிறார். மூடியும் அந்த வகுப்பு மாணவியர் அனைவரும் அந்த ஆசிரியர் விரைவில் மரித்துப்போவார் என்பதை அறிந்திருந்தார்கள்.

அனைவரும் சேர்ந்து ஓர் பாடல்பாடி, முழங்கால் படியிட்டு ஜெபித்தார்கள். ''நான் முழங்காலிலிருந்து எழுந்தபொழுது வகுப்பில் இருந்த ஓர் மாணவி மரணத்தருவாயில் இருந்த அந்த ஆசிரியருக்காக ஜெபித்தாள். உடனே அடுத்தடுத்து, பிள்ளைகள் ஜெபிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் முழங் காலிலிருந்து எழுமுன்பு வகுப்பில் இருந்த அனைத்து மாணவியருமே ஜெபித்திருந்தார்கள்'' என்று மூடி கூறினார்.

சிறிது காலத்திற்குள்ளாக, அந்த ஆசிரியர் மரித்துவிட்டார். சுகமளிக்கும் எந்த அற்புதமும் அவர் வாழ்வில் நிகழவில்லை. ஆனால் ஓர் அற்புதம் ஏற்கனவே நிகழ்ந்துவிட்டது. அதாவது அந்தப் பெண்கள் ஜெபிக்க ஆரம்பித்து விட்டார்கள். அத்தோடு கூட டுவைட். L. மூடியின் வாழ்க்கை யிலும் ஓர் அற்புதம் நிகழ ஆரம்பித்தது. அந்த வகுப்பு மாணவியர் அந்த ஆசிரியர் இவர்களோடு மூடிசேர்ந்து ஜெபித்த அந்த ஜெபக் கூட்டம், அவரது வாழ்க்கையின் மையமாக மாறிவிட்டது என்று மூடி பின் காலத்தில் கூறினார். ''அங்கு தேவன் எனது ஆத்துமாவில் அக்கினியைத் தூண்டிவிட்டார். அது என் ஆத்துமாவை விட்டு ஒருக்காலும் நீங்கவில்லை. எனது வாழ்க்கையின் உச்சகட்ட நோக்கம் நான் ஓர் தலைசிறந்த தொழில் அதிபராக மாற வேண்டும் என்பதே. அந்த ஜெபக் கூட்டம் என் ஆவலை எடுத்தும்போடும் என்று அறிந்திருந்தால், அந்த ஜெபக்கூட்டத்திற்கு சென்றிருக்கவே

மாட்டேன். ஆனால் இன்று அந்த ஜெபக் கூட்டத்திற்காக நான் எத்தனையோ முறை தேவனுக்கு நன்றி கூறியுள்ளேன்'' என்று முடி கூறினார்.

அந்த நூற்றாண்டில், ஆத்துமாக்களை ஆதாயம் செய்த மகாப்பெரிய சுவிசேஷகராக மாறினார். அவரது ஊழியத்தின்மூலம், நூறு இல்லை ஆயிரம் இல்லை, இலட்சக்கணக்கானோர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவர்களாக மாறினார்கள். ஏறக்குறைய ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் பேரிடம், தனிப்பட்ட முறையில் இரட்சிப்பைப் பற்றி பேசியுள்ளார். இவை அனைத்தும், சிக்காக்கோவில் உள்ள ஓர் சிறிய அறையில் ஒழுங்கற்ற ஓர் வாலிபப்பெண்ணின் இரட்சிப்பிற்காக அவர் முதல் முதல் திக்கித்திக்கிப் பண்ணின ஜெபத்தின் விளைவாக ஏற்பட்டது.

ஒய். எம். சி. ஏ.யில் உள்ள 'சி'

ஜார்ஜ் வில்லியம்ஸ், வாலிபனாக இருந்தபொழுது இங்கிலாந்தின் மேற்குப் பகுதியில் உள்ள ப்ரிட்ஜ் வாட்டன் என்ற ஊரில் உள்ள ஓர் ஜவுளி விற்பனையாளரிடம் உதவியாளராக இருந்தான். இருபது வயதானபொழுது அவன் தன் நிலைமையை உயர்த்திக் கொள்ள எண்ணி, லண்டன் மாநகருக்கு வந்தான். அங்கு லட்கேட்ஹில் என்ற இடத்தில் உள்ள பெரிய ஜவுளிக் கடையில் பணிசெய்து வந்த 140 பணியாட்களில் ஒருவனாக இருந்தான்.

வில்லியம்ஸ் மற்றவர்களில் இருந்து சற்று மாறுபட்டவராக இருந்தார். "ஜெபமே அவரது வாழ்க்கையின் மையமாக இருந்தது" என்று அவரது வாழ்க்கைச் சரித்திரத்தை எழுதிய ஜான் போலக் எழுதுகிறார். பத்தொன்பதாவது நூற்றாண்டில் வாழும் ஒரு கிராமப் புறத்தைச் சேர்ந்த வாலிபன் இருபதாம் நூற்றாண்டில் லண்டன் மாநகரில் வாழும்பொழுது, ஜெபிக்க வேண்டிய காரியங்கள் அதிகம் இருந்தது. ஆனால் வில்லியம்ஸ் தனக்காக ஜெபிக்காமல் தன்னுடன் பணி செய்யும் மற்ற 139 பேருக்காகத்தான் அதிகமாகச் ஜெபித்தார். அவரது நாட்குறிப்பேட்டில் அவர்களது பெயர்களை எழுதி வைத்து, அவர்களது ரட்சிப்பிற்காகத் தேவனிடம் மன்றாடுவார்.

அவர் அந்தக் கடையில் சேர்ந்தபொழுது அங்கு ஒரே ஒரு கிறிஸ்தவர் மட்டும் பணி செய்து வந்தார். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக

அவருடைய ஜெபத்தினாலும், தனிப்பட்ட தொடர்பினாலும், இருபதுபேர் இயேசுவை ஏற்றுக்கொண்டனர். மூன்றாண்டுகளுக்குள்ளாக, ஜெபக் கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு ஒழுங்காக நடந்து வந்தது. அந்த தொழிற் சாலையின் அதிபர்கூட அக்கூட்டங்களில் பங்கெடுத்தார். பரிட்ஜ்வாட்டரில் இருந்து வந்த வாலிபன் அவர்கள் மத்தியில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தினான்.

வில்லியம்ஸ் அயல் நாடுகளுக்கு மிஷனரியாகச் செல்ல விரும்பினார். ஆனால் அவரது சிநேகிதர்கள், அதை அனுமதிக்கவில்லை. லண்டனில் உள்ள ஜவுளிக்கடைகளிலேயே அவர் செய்யவேண்டிய காரியமும் ஜெபிக்க வேண்டிய காரியமும் அதிகம் உள்ளது என்று அவரது சிநேகிதர்கள் கூறினார்கள்.

அவரோடுகூட மற்றொரு ஜவுளிக் கடை பணியாளும், சேர்ந்து லண்டனில் உள்ள மற்ற ஜவுளிக்கடைகளுக்கு ஜெபிக்கலானார்கள். வில்லியம்ஸ் தனது படுக்கையறையில் பன்னிரண்டு பேரைக் கூட்டிச் சேர்த்து ஓர் சங்கத்தை ஆரம்பித்தார். அந்த சங்கத்தினர் லண்டன் பட்டணத்தில் உள்ள எல்லா ஜவுளிக் கடைகளுக்கும் கடிதம் எழுதி அனுப்பினார்கள். பின்பு அவர்கள் ஜெபக்கூட்டத்தை நடத்துவதற்காக ஓர் காபிக் கடையில் ஓர் அறையை வாடகைக்கு அமர்த்தினார்கள். அந்த அறையும் நிரம்பி வழிந்தபொழுது ஓர் ஹோட்டலில் ஓர் பெரிய அறைக்கு மாற்றிவிட்டார்கள். சுமார் 150 வாலிபர்கள் முதல் நாள் கூட்டத்திற்கு வந்தனர். ஜார்ஸ் வில்லியம்ஸ் அந்த சங்கத்திற்கு **Y.M.C.A** கிறிஸ்தவ வாலிபர் சங்கம் **(Young Men's Christian Association)** என்று பெயரிட்டார்.

அந்தச் சங்கம் ஜெபத்தில் வேரூன்றி இருந்தது. "ஜெபத்திற்கு பதிலாக, ஒருவர் மாற்றி ஒருவர் இரட்சிப்பைப் பெற்றார்கள்" என்று வில்லியம்ஸ் எழுதினார். அந்த இயக்கம் சுவிசேஷப்பணிக்கு மிக முக்கியத்துவம் கொடுக்காவிட்டாலும், ஜெபத்தின் மூலமாகவும், அன்பான சிநேகித மனப்பான்மையை பகிர்ந்து கொண்டதன் மூலமாகவும் அநேகர் இயேசுவை ஏற்றுக்கொண்டனர். சிறிது நாட்களில் மற்ற ஊர்களிலும், பின் மற்ற தேசங்களிலும் **Y.M.C.A** இயக்கம் பரவலாயிற்று. ஒழுங்கான கட்டமைப்பு இல்லாவிட்டாலும், "இயேசு கிறிஸ்துவை வேதத்தின் அடிப்படையிலே அவர்களது சொந்த தேவனாகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு, அவரது சீஷர்களாக வாழ விருப்பமுடையவர்களாகவும் தேவனுடைய இராஜ்ஜியத்தை மக்கள் மத்தியில் பரவச்செய்பவர்களாகவும் இருக்கக்கூடிய

இளம் வாலிபர்களை ஒன்றாக இணைப்பது தான்" இந்தச் சங்கத்தின் நோக்கமாக இருந்து அனைத்து வாலிபர்களையும் இணைத்தது.

வில்லியம்ஸ் தான் செய்துவந்த தொழிலை விட்டுவிடாமல் தொடர்ச்சியாக செய்து வந்தார். அவரது தொழிலிலும் வெற்றி அடைந்தார். ஆயினும் அவரது இதயத்தின் வாஞ்சை எல்லாம் தனது சக ஊழியர்களுக்காக ஜெபித்ததின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட **Y.M.C.A** கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின மீதே இருந்தது. 1894ல் இந்த இயக்கம் தனது பொன் விழாவைக் கொண்டாடினது. விக்டோரியா மகாராணி, வில்லியம்ஸின் சேவையைப் பாராட்டி அவருக்கு "படைவீரன்" என்ற உயரிய கௌரவ விருதை அளித்து கௌரவப்படுத்தினார்.

1905ல் வில்லயம்ஸ் மரணம் அடைந்த பின்பு **Y.M.C.A** வின் ஆவிக்குரிய நோக்கங்கள் பின்னால் தள்ளப்பட்டுவிட்டது. ஆனால் வில்லியம்ஸ் உயிரோடு இருந்த நாட்கள் வரை ஜவுளித்தொழிலகத்தில், அவருடன் பணிபுரிந்த நண்பர்களுக்காக ஜெபித்தபொழுது அவர் கண்ட தரிசனத்தி லிருந்து அவர் விலகவே இல்லை.

நம்மால் செய்ய இயலாத மிகப்பெரிய காரியங்கள்

கிராடி வில்சன், அந்த குழுவில் புதிதாக சேர்ந்தவன். இறுதியில் அந்தக் குழு கலிபோர்னியாவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் என்ற பெரிய நகரத்திற்கு சென்றது. 'நமக்கு செய்ய இயலாத பெரிய காரியத்தில் ஈடுபடுகின்றனர்' என்று கிராடிவில்சன் நினைத்தார்.

அது நடந்த ஆண்டு 1949, சென்ற குழு பில்லிகிரகாமின் சுவிசேஷ ஊழியம் செய்யும் குழுவாகும். அந்நாட்களில், மிட்வெஸ்ட்டிலும் தெற்குப் பகுதியில் இருந்த ஊர்களிலும், தவிர மற்ற இடங்களில் பில்லிகிரகாமின் பெயர் அவ்வளவாக பிரபலமாகவில்லை. ஆயினும், லாஸ் ஏஞ்சல்சைச் சேர்ந்த தொழிலதிபர்கள் சங்கம், அவர்களால் மூன்றுவாரங்கள் நடத்தப்படும் வருடாந்திர சுவிசேஷக் கூட்டங்க்ளில் பேசும்படி அழைத்திருந்தனர். ஏறக்குறைய ஆறாயிரம்பேர் அமரக்கூடிய ஓர் பெரிய கூடாரத்தை ஊரில் காலியாகக் கிடந்த ஓர் நிலப்பகுதியில் கட்டினார்கள். அந்தக் கூட்டங்களைக் குறித்து, நல்ல விளம்பரங்கள் கொடுக்கப்பட்டது. உதவிச் சுவிசேஷகராக அக்குழுவில் சேர்ந்த கிராடி வில்சனிற்கு சந்தேகங்கள் இருந்தன.

"எங்களுக்கு இன்னமும் நிச்சயமாகத் தெரியவில்லை. ஒருவேளை எங்களது விசுவாசம் இன்னமும் அதற்காகப் போதுமான அளவு தூண்டப்படவில்லை" என்று வில்சன் பிற்காலத்தில் எழுதினார்.

ஆனால் ஒரு காரியம் இந்தக் கூட்டங்களை வேறுபடுத்தியது. சுவிசேஷக் கூட்டங்கள் நடத்தப்படுமுன்பாக, அநேக வாரங்களுக்கு முன்பாகவே, ஆயிரத்திற்கும் அதிகமாக ஜெபக் குழுக்கள் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரமுழுவதும் ஒழுங்காக ஜெபித்து வந்தார்கள். நாள் முழுவதற்கும் தொடர் சங்கிலி ஜெபங்கள் நடந்தன. இந்த அளவிற்கு ஜெப வல்லமையை, சுவிசேஷகர் பில்லிகிரகாம் பெற்றது. இதுவே முதல்முறையாகும்.

முதல் இரண்டு வாரங்களுக்கு கூட்டங்கள் மிகச் சாதரணமாகவே நடந்தது. நல்ல கூட்டம் வந்தது. ஆனால் கூடாரம் முழுவதும் நிறையவில்லை. கூட்டங்கள் முடியவேண்டிய நாட்கள் நெருங்கினபொழுது, ஸ்தல மக்கள், இன்னும் ஒரு வாரத்திற்கு கூட்டங்களை நீடிக்குமாறு கேட்டுக்கொண்டனர். கிரகாமிற்கு அதுபற்றி அவ்வளவாக நிச்சயமில்லை. அவர் ஒருக்காலும் கூட்டங்களை நீடித்தது கிடையாது.

ஆயினும் லாஸ் ஏஞ்சல்சில் அநேகர் கூட்டங்களுக்காக ஜெபித்து வந்ததால், அதன் விளைவாக, கூட்டங்களை நீட்டிக்க கிரகாம் ஒத்துக் கொண்டார். அவரும் அவரது உதவியாளர் கிளிவ் பரோஸும் லாஸ் ஏஞ்சல்ஸில் அவர்கள் திட்டமிட்ட நாட்களுக்கு மேலாக அவர்கள் தொடர்ந்து ஊழியம் செய்ய வேண்டுமா என அவர்களுக்குத் தெளிவாகக் காட்டும்படி தேவனிடம் மன்றாடி ஜெபித்தார்கள்.

ஒரு நாள், கடைசி ஜெபம் முடிந்த பின்பு, பின் இரவில், தெற்கு கலிபோர்னியாவில் பிரசித்திபெற்ற வானொலிப் பேச்சாளர் ஸ்ட்டுவர் காம்ப்லென் என்பவரிடமிருந்து ஓர் தொலைபேசி அழைப்பு வந்தது. வானொலி நிகழ்ச்சியில் அவர் கிரகாமோடு பேசி இருக்கிறார் அவரது கூட்டங்கள் சிலவற்றில் பங்கும் எடுத்துள்ளார். கிரகாமின் பிரசங்கம் அவரை நேரடியாகத் தொட்டது. அவரது தவறுதலான வாழ்க்கைமுறையைப்பற்றிக் குத்தப்பட்டார். ஆகவே அவர் வாழ்ந்து வந்த ஊரைவிட்டு வெளியேறத் தீர்மானித்தார். மறுபடியும் அவர் கிரகாமின் செய்தியைக் ஒரு முறை கேட்பதற்காக கூட்டத்திற்கு வந்தார். அவர் செய்தியின் நடுவிலேயே மிகவும் கோபம் அடைந்தவராக, விரைவாக கூட்டம் நடக்கும் இடத்தைவிட்டு

வெளியேறினார். வீட்டிற்கு வரும் வழியில், ஒவ்வொரு மதுபானக் கடையிலும் நின்று குடித்துக்கொண்டே வந்தார். இறுதியில் நள்ளிரவு 2.00 மணிக்கு கிரகாமிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். கிரகாம் அவரைத் தான் தங்கியிருந்த ஹோட்டலிற்கு வரும்படி அழைத்தார். ஒரு சில மணி நேரங்கள் கழித்து காம்ப்லன் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அன்றையதினம் தனது வானொலி ஒலிபரப்பில் "இன்று இரவு பில்லி கிரகாமின் கூட்டங்கள் முடிந்தபின் அவர் பலிபீட அழைப்புக் கொடுக்கும் பொழுது" எனது உலகப்பிரகாரமான வாழ்க்கையை உதறித் தள்ளிவிட்டு என்னை கிறிஸ்துவிற்கு ஒப்புக்கொடுக்கப்போகிறேன்" என்று ஒலி பரப்பினார். அந்த விளம்பரச் செய்தி கலிபோர்னியா முழுவதிலும் ஓர் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியது.

அன்று இரவு கூட்டத்தில் அந்தக் கூடாரம் முழுவதும் மக்களால் நிரம்பி வழிந்தது. மேலும் பத்திரிக்கை நிருபர்கள் போட்டோ கிராபர்கள் என இடம் கொள்ளாமல் போகுமட்டும் கூட்டம் நிரம்பியது. போட்டோ கிராபர்களின் படம் எடுக்கக்கூடிய வெளிச்சம் அங்கும், இங்கும், எங்கும் என கூடாரம் முழுவதும் பளிச், பளிச் என தோன்றிக் கொண்டே இருந்தது. பேசுகிற மேடைக்கு நேராக இருந்து கொண்டு படமெடுத்த ஒரு வரை கிரகாம் சற்று இறங்கி தள்ளி இருக்குமாறு கூட கேட்டுக்கொண்டார். அடுத்த நாள் காலை, லாஸ் ஏஞ்சல்ஸ் ஹெரல்டு எக்ஸ்பிரஸ், எக்ஸாமினர் போன்ற செய்தித் தாள்கள் பெரிய தலையங்கத்தில் இந்த சுவிசேஷக் கூட்டங்களைப் பற்றி செய்தி வெளியிட்டன. வயது முதிர்ந்த பத்திரிக்கை வெளியீட்டரான வில்லியம் ரண்டால்ப் ஹார்ஸ்ட் என்பவர். ஹார்ட்ஸ் பத்திரிக்கையின் நிருபர்களுக்கு "பெருமைக்குரிய கிரகாம்" என்ற இரண்டே வார்த்தைகளில் ஓர் தந்தி கொடுத்தார்.

இப்பொழுது அந்த சுவிசேஷக் கூட்டம் நிச்சயமாக நீட்டிக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டது. பில்லிகிரகாம், கிளிவ் பரோஸ் இருவரின் ஜெபத்திற்கு அங்கு கட்டப்பட்டிருந்த கொடிகளில் எழுதப்பட்டிருந்த வாசகங்கள் மூலம் பதில் கிடைத்தது. அவர்கள் தங்களது ஜெபத்திற்கு சரியான முறையில் பதில் கேட்டார்கள். லாஸ் ஏஞ்சல்ஸ் முழுவதுமே அந்த சுவிசேஷக் கூட்டங்களைப் பற்றியே பேச்சாக இருந்தது. அனுதினமும் மாலையில் கூட்டம் துவங்கு முன்பே ஆயிரக்கணக்கானோர் வந்து இருக்கையில் அமர்ந்து கொண் டார்கள். ஒன்பாதியிரம் பேரைக் கொள்ளத்தக்கதாக அந்தக் கூடாரம் விரிவுபடுத்தப்பட்டது.

அநேக பிரபலமானவர்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். எப்பொழுதெல்லாம் அப்படி மிக முக்கியமான பிரபலமானவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்களோ, அப்பொழுதெல்லாம். பத்திரிக்கைகள் அந்த செய்தியை தலையங்கமாக பிரசுரித்தன. ஒலிம்பிக் விளையாட்டுகளில் ஒரு மைல் ஓட்டப்பந்தயத்தின் வெற்றி வீரரும், அமெரிக்காவின் யுத்தங்களில் பங்குபெற்ற தலைசிறந்த வீரருமான லூயி ஜாம்பெரினி என்ற வீரர்கள் யுத்தகாலத்திற்குப்பின், குடிக்கு அடிமையாகிவிட்டார். கிரகாமின் செய்தியைக் கேட்ட உடன், அவர் ஓர் கிறிஸ்தவரானார். மேலும் ஆச்சரியப்படத்தக்க நிகழ்ச்சி என்னவென்றால், இருமுறை பயங்கரமான குற்றங்களுக்காக தண்டனை அடைந்தவனும், தொலைபேசி செய்திகளை ஒட்டுக்கேட்டு தவறுதலான தொழில் நடத்தி வருவதன் மூலம் தன் பொல்லாத வழிகளுக்கு பெயர் பெற்றவனுமான மிக்கி கோகனின் நெருங்கிய நண்பனுமான ஜிம் வாஸ் என்பவரும் மனம் திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்.

நவம்பர் 20ம் தேதி ஞாயிற்றுக் கிழமை கூட்டங்கள் முடிவு பெற இருந்த அந்த மாலையில் கூடாரம் நிரம்பி வழிந்து, கூடாரத்திற்கு வெளியே வெகு தூரத்திற்கு மக்கள் நின்றார்கள். நான்காயிரம் பேருக்கும் அதிகமானவர்கள் மனம் திரும்பி இரட்சிக்கப்பட்டார்கள். லைப், டைம், நியூஸ்வீக் போன்ற பத்திரிக்கைகள் "வளர்ந்து வருகின்ற இளம் சுவிசேஷகரைப்" பற்றி அதிகமாக செய்திகள் பிரசுரித்தன. "மிகவும் சாதாரணமாக நாங்கள் லாஸ் ஏஞ்சல்ஸிற்குச் சென்றோம். ஆனால் நாங்கள் அதைவிட்டு வரும்பொழுது பரிசுத்த ஆவியானவர் கலிபோர்னியாவில் உள்ள அந்த பட்டணத்தை அதற்கு முன் இல்லாத அளவு அசைத்திருந்தார்" என்று கிரகாம் பின் நாட்களில் நினைவு கூர்ந்தார்.

தேவனை அறியாதவர்கள், வில்லியம் ரண்ட்டால்ப் ஹெர்ஸ்ட் "தமது அறிக்கையில் பெருமைக்குரிய கிரகாம்" என்று வெளியிட்டதினால் தான், கிரகாமின் கூட்டங்கள் மிக வெற்றியாக அமைந்திருந்தன என்று கூறினார்கள். ஆனால், தேவனை அறிந்தவர்களோ, அந்தக் கூட்டங்கள் துவங்குமுன்பே, அந்தக் கூட்டங்களின் ஆசீர்வாதத்திற்காக, குழுக்களாக ஜெபித்து வந்த ஆயிரக்கணக்கானவர்களின் ஜெபத்தைக் கேட்டு திரை மறைவே கிரியை செய்யும் தேவனது வல்லமையினால் இந்த வெற்றி கிடைத்தது என்று நன்கு அறிந்திருந்தார்கள்.

வேதாகமும் காட்டு வான்கோழிகளும்

விஸ்கான்சின்னில் உள்ள பாஸ்க்கோபெல், கிதியோனியர்கள் உருவாக்கப்பட்ட இடமென்றும், உலகத்திலேயே காட்டு வான்கோழிகள் வேட்டையாடுதலுக்கு பிரசித்தி பெற்ற இடம் என்றும் பெயர் பெற்ற ஊராகும்.

விஸ்கான்ஸின் ஆற்றங்கரையில் அந்த ஊர் அமைந்திருந்தபடியினால், அது வான்கோழி வேட்டைக்குச் சிறந்த இடமாக இருந்தது. ஆனால் இந்த உலகமெங்கும் உள்ள அனைத்து பெரிய பெரிய ஹோட்டல் அறைகளிலும் வேதாகமத்தை வைக்கும் கிதியோனிய இயக்கம் இங்கு பிறந்தது. பெரிய ஆச்சரியமாக உள்ளது. அது எப்படி நடந்தது என்பதை அறிந்தால் அது ஓர் பெரிய அதிசயமாகும்.

1898ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ம் தேதி இரவு 9.00 மணியளவில் ஜான் நிக்கல்சன் என்ற விற்பனையாளர் பாஸ்க்கோபெல்லில் இருந்த ஒரே ஹோட்டலான பாஸ்க்கோபெல் சென்ட்ரல் ஹோட்டல் என்ற ஹோட்டலிற்குச் சென்று, தான் அமைதியாக உட்கார்ந்து தனது வியாபாரத்திற்கான காரியங்கள் குறித்து எழுதுவதற்காக ஓர் அமைதியான அறைவேண்டும் என்று கேட்டார். வரவேற்பு மேஜையின் அறையில் அமர்ந்திருந்தவர், அந்த ஹோட்டலில் உள்ள அனைத்து அறைகளும் பதிவு செய்யப்பட்டு விட்டன என்று கூறினார். அந்த அனைத்து அறைகளும் நிரம்பினது ஆச்சரியமான காரியமாக இருந்தது. ஆனால் அந்த குமாஸ்தா, ஜான் நிக்கல்சனின்ற்கு உதவும் வண்ணமாக அறை எண் 19ல் உள்ள ஓர் அறியப்படாத நபரான சாமுவேல் ஹில்லுடன் கூடச் சேர்ந்து இருக்கும்படி ஆலோசனை கூறினார்.

நிக்கல்சனிற்று வேறு வழி இல்லாததினால் அதற்கு ஒப்புக்கொண்டார். அன்று இரவு படுக்கைக்குச் செல்லுமுன்பு நிக்கல்சன் தன் வேதாகமத்தைத் திறந்து வாசித்தார். அவர் அவரது பன்னிரண்டாம் வயதினில், மரிக்கும் தருவாயில் இருந்த அவரது தாயாரிடம், அனுதினமும் இரவு படுக்கைக்குப் போகுமுன்பு வேதத்தை வாசிப்பேன் என்று வாக்குக்கொடுத்தார். பல்வேறு இடங்களுக்கு பயணம் செய்யும் விற்பனையாளரான அவர் தன் தாய்க்குக் கொடுத்த வாக்கின்படியே வேதம் வாசித்தபின் படுக்கைக்குச் செல்வார். அவரோடுகூடத் தங்கி இருந்த அந்த நண்பர், "நானும் ஓர் கிறிஸ்தவன்தான், சத்தமாக வாசியுங்கள்" என்றார்.

நிக்கல்சன் யோவான் 15ம் அதிகாரத்தை வாசித்தார். பின்பு இருவரும் முழங்கால்படியிட்டு ஜெபித்தார்கள். அவர்கள் கற்பனை செய்யாத அளவிற்கு அந்த ஜெபநேரம் நீண்டுவிட்டது. அவர்கள் பொழுது விடியும்வரை, பல்வேறு இடங்களுக்குப் பிரயாணம் செய்துவரும் கிறிஸ்தவ விற்பனையாளர்கள். சந்தித்து வரும் ஆன்மீகப் பிரச்சனைகளைப்பற்றி பேசினார்கள்.

மே மாதம் 31ம் தேதி விஸ்கான்ஸின் உள்ள பீவர் அணைக்கட்டில் இருவரும் எதிர்பாராத விதமாக மறுபடியும் சந்தித்துக் கொண்டனர். அவர்களது இந்த சந்திப்பில், தேவனுடைய சித்தம் ஏதோ இருக்கிறது என்று எண்ணினார்கள். விரைவில் கிறிஸ்தவ விற்பனையாளர்கள் சங்கம் ஒன்று அமைப்பது பற்றிய திட்டத்தை அறிவித்தார்கள். விஸ்கான்ஸில் உள்ள ஜேன்ஸ்வில் என்ற இடத்தில் 1899 ஜுலை 1ம் தேதி முதல் கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்த ஊர், பாங்கேபெல்லைவிட பெரியதாகவும், தலை நகரான மாடிசனிறி மிக அருகிலும் இருந்தது. அதனால், மேலும் அதிக கிறிஸ்தவ விற்பனையாளர்கள் கூட்டங்களில் கலந்துகொள்ள வசதியாக இருக்கும் என்று எண்ணினார்கள். ஆனால் முதல் கூட்டத்திற்கு நிக்கல்சன், ஹில், ஆகிய இவர்களுடன் புதிய நபரான வில் ஜே நைட் சேர்ந்து மூன்று பேர்தான் வந்தார்கள்.

வர்த்தக ரீதியாக பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்யும் கிறிஸ்தவ பயணிகளை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கவும், ஊழியம் செய்யவும் தங்களது இயக்கத்தை ஆயத்தப்படுத்தினார்கள். அவர்களது இயக்கத்திற்குப் பெயர் வைக்க நல்ல பெயரைத் தேடினார்கள். பின் அது குறித்து ஜெபிக்கலானார்கள். முழங்கால்படியிட்டு ஜெபித்து எழுந்தவுடன் வில் ஜே நைட் "நாம் நம்மை கிதியோனியர் என்று அழைத்துக் கொள்வோம் என்றார்" அந்தப் பெயருக்கு மிக ஆழமான அர்த்தம் இருந்தது. வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் கிதியோன் என்ற மனிதன் மிகச் சாதாரண மனிதன் தேவன் அவனிடம் வெற்றிக்கு எண்ணிக்கை முக்கிய மல்ல என்று விளக்கினார். எதிரிகள் எண்ணிக்கையில் மிக அதிகமாக இருந்தபொழுது, கிதியோன் தன்னிடம் இருந்த முன்நூறு மனிதர்களால் எதிராளிகளைத் தோற்கடித்து சிதறடித்தான். ஏனென்றால் அவனோடுகூட தேவன் இருந்தார்.

ஆரம்பகாலத்தில், ஒவ்வொரு ஹோட்டலின் வரவேற்பு மேஜையிலும் ஓர் வேதாகமத்தை வைப்பதே கிதியோனியர்களின் நோக்கமாக இருந்தது.

ஆனால் 1907ற்குப்பின் தங்களது நோக்கத்தை விரிவாக்கி அந்த ஊரில் உள்ள அனைத்து ஹோட்டல்களிலும் உள்ள அனைத்து அறைகளிலும் ஓர் வேதாகமத்தை வைக்கவேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஹோட்டல்கள் வேதாகமம் வைப்பதில் பிரசித்தி பெற்ற கிதியோனியர்கள், இப்பொழுது மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், இராணுவ மையங்கள் சிறைச் சாலைகள் ஆகிய அனைத்து இடங்களிலும் வேதாகமத்தை வைப்பதோடு, விநியோகமும் செய்கின்றனர்.

நிக்கலோஸ், ஹில், நைட் ஆகிய மூன்று பேருடன் ஆரம்பிக்கப்பட்ட கிதியோனியர் சங்கத்தில் இன்று 140,000 அங்கத்தினர்கள் 175 நாடுகளில் 80 மொழிகளில் வேதாகமத்தை விநியோகம் செய்கின்றனர். 56 லட்சம் வேதாகமத்தின் பிரதிகள் அல்லது ஒரு வாரத்திற்கு பத்துலட்சம் என வருடம் முழுவதும் விநியோகிக்கப்படுகிறது.

காட்டு வான்கோழிகள் வேட்டையாடப்படுவதற்கு உலகில் புகழ்பெற்று விளங்கின ஓர் ஊரில் தற்செயலாக சந்தித்த முன்பின் அறியாத இருவரின் சந்திப்பினாலும் ஜெபத்தினாலும் என்றென்றும் நிலைத்திருக்கக் கூடிய ஓர் நிகழ்ச்சி உலகில் நடைபெற்றுள்ளது.

வைக்கோல் போரில் அவர்கள் கண்டுபிடித்தது

பொதுவாக வைக்கோல் போரில் ஊசியைத் தேடுவதுபோல என்பது ஓர் நடைமொழி. அந்த ஊசி, என்பது தேவன் அவர்களை நடத்தும் வழியைக் காண்பிக்கக் கூடிய திசை காட்டும் கருவியில் உள்ள ஊசிக்கு அடையாளமாக இருக்கலாம். வைக்கோல் போர் உண்மையிலேயே வைக்கோல் குவியல்தான்.

1806ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ம் தேதி மேற்கு மசாசூட்டில் காலநிலை மிகவும் சூடாகவும், ஈரப்பதம் நிறைந்ததாகவும் காணப்பட்டது. சாமுவேல் மில்ஸ் தன்னுடன் கூட வில்லியம்ஸ் கல்லூரியில் பயின்று வந்த ஐந்து மாணவர்களை, மேப்பிள் மரங்கள் வளர்ந்துள்ள தோட்டத்தில் உள்ள கலோன்ஸ் புல்வெளிக்கு அழைத்துச் சென்றான். ஜெபிக்கும்படி அவர்களை மில்ஸ் வரவழைத்திருந்தார்.

அவர் மிகவும் அடக்கமானவர், தாழ்மையானவர், அமைதியாக, ஒதுங்கி வாழக்கூடியவராக இருந்தாலும் அவர் ஊர் தலைவராக விளங்கினார் என்பதில் ஐயமில்லை. நாம் ஜெபிப்போம் என்று கூறிய அந்த வேளையிலேயே பயங்கரமான இடி மழை உண்டானது.

மழையில் ஒதுங்குவதற்கு ஓர் பாதுகாப்பான இடத்தைத் தேடினார்கள். அந்த மாணவர்கள் அருகில் இருந்த ஓர் பழைய கட்டிடத்தில் இருந்த வைக்கோல் போரைப் பார்த்தனர். அவர்கள் வேகமாக ஓடிப்போய் அந்த இடத்தில் நீட்டிக் கொண்டிருந்த தாழ்வாரத்தில் தஞ்சம் புகுந்தார்கள். அந்த வைக்கோலில் தங்கள் கால்களை நீட்டி சாய்ந்துகொண்டு, தங்கள் கல்லூரியில் பூகோள வகுப்பில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் அந்த வகுப்பில் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறியாதிருந்த ஆசியாக் கண்டத்தைப் பற்றிப் படித்திருந்தார்கள்.

மின்னல் பளிச்சிட, இடிமுழங்க, அந்த மாணவர்கள், அநேக இஸ்லாமியர்கள் வசிக்கும் ஆசியா கண்டத்திற்கு இயேசுவை அறிவிப்பது பற்றி மிகவும் ஆர்வத்துடன் பேசிக்கொண்டிருந்தனர். உண்மையிலேயே அவர்கள் அவ்வாறு விரும்பினால், நிச்சயமாக அவர்களால் அதைச் செய்யமுடியும் என்று மில்ஸ் மற்றவர்களிடம் கூறினார். இப்படியாக அந்தக் கூட்டம் மிகவும் வல்லமையோடு செயல்படும் கூட்டமாக மாறியது. அவர்கள் எதிர்ப்புகளைச் சந்திக்கவேண்டும் என்று அறிந்திருந்தார்கள். ஆயினும் அவர்கள் தேவனுடைய வல்லமையையும் அறிந்திருந்தார்கள். "வாருங்கள் நாம் இந்தக் காரியத்திற்காக, இந்த வைக்கோல் போரின் அருகில் இருந்து இதற்காக ஜெபிக்கலாம்" என்று மில்ஸ் கூறினார். வானத்தில் மின்னல் பளிச்சிட, "சிலுவைக்கு எதிராக எழும்பக் கூடிய கரங்களை தேவன் தமது பரலோகத்தின் சேனையை அனுப்பி மடங்கடிப்பார்" என மில்ஸ் தனது ஜெபத்தை முடித்தார்.

அந்த வைக்கோல் போரின் அருகில் கூடி ஜெபித்த அந்தக் கூட்டத்தினர் இரண்டு ஆண்டுகளில், 'சகோதரச் சங்கம்' என்ற இரகசிய சங்கமாக வளர்ந்தேறியது. "புற மதத்தினர் மத்தியில் அவர்கள் ஊழியம் செய்ய வேண்டும். ஒவ்வொரு அங்கத்தினரும், எந்த நேரத்திலும், எந்த இடத்திற்கும் சென்று ஊழியம் செய்ய வேண்டும்" என்பதே அந்தக் குழுவின் நோக்கமாகும்.

ஆனால் அவர்களுக்கு ஓர் பிரச்சனை இருந்தது. அவர்களிடம் பணம் இல்லை. ஆகவே, அவர்கள் மசாசூட்டில் இருந்த சபைப் போதகர்களை

உடைய பொதுவான சங்கத்தினரிடம் சென்று, 'ஆலோசனையும், வழி காட்டுதலும், ஜெபமும் தேவை' என்று கூறினார்கள். அதன் விளைவாக அயல் நாடுகளில் சுவிசேஷத்தை அறிவிக்கக்கூடிய அமெரிக்கன் போர்ட் ஆப் கமிஷனர்ஸ் என்ற சங்கம் 1810ல் உருவானது. "சகோதர சங்கத்தினர்" ஆறு பேர் இருந்தார்கள். அந்த ஆறு பேரும் அமெரிக்காவின் முதல் அயல் நாட்டு மிஷனரிகளாக மாறினார்கள். ஆனால் அந்த போர்டினால் ஆறு பேரையும் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

ஆகவே அந்த ஆறுபேரில் இரண்டு பேர் அயல்நாட்டு மிஷனரிகளாக செல்லாமல் உள் நாட்டில் தங்கத் தீர்மானிக்கப்பட்டது. சாமுவேல் மில்ஸ் அமெரிக்க ஐக்கிய நாட்டில் தங்கியிருந்தால், இன்னும் அநேக மிஷனரிகளை ஆயத்தம் பண்ணி அனுப்புவதற்கு உதவியாக இருக்கும் என்று எண்ணினார்கள். அந்தத் திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. ஏனெனில் மில்ஸ் அநேக வாலிபர்களை அயல் நாட்டு மிஷனரிகளாகப் பயிற்றுவித்து தொடர்ந்து அனுப்பிக் கொண்டே இருந்தார். மில்ஸ் அது மட்டுமின்றி இன்னமும் தலை சிறந்த காரியம் ஒன்று செய்தார். கருப்பர் இனத்தவருக்கு என ஓர் பள்ளிக் கூடத்தை நியூ ஜெர்சியில் ஆரம்பித்தார். மேலும் அமெரிக்கன் வேதாகமச் சங்கம் ஆரம்பிக்க உதவினார். பின்காலத்தில், விடுதலை பெற்ற அடிமைகளை மறுபடியுமாக அவர்களது சொந்த ஆப்பிரிக்கா தேசத்தில் குடியேறும்படி செய்தார். இதன் விளைவினால், பின்னால் சுதந்திர லைபீரியா உருவானது.

பர்மாவிற்கு மிஷனரியாகச் சென்ற அதோனிராம் ஜட்சன்தான், முதல் அமெரிக்க, அயல்நாட்டு மிஷனரி என்று கருதப்பட்டாலும், 1812ம் ஆண்டு அயல் நாட்டு மிஷனரிகளாக முதல் முதல் சென்ற நான்கு மிஷனரிகளில் ஒருவர் ஆவார்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில், ஆண்களும், பெண்களுமாக எழுபத்தி ஓராயிரம் பேர் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து, கடல் கடந்து சென்று மிஷனரிப்பணி செய்து வந்தார்கள். இந்த ஊழியம் பலகோடி மதிப்புள்ள டாலர்களாலும், பல்லாயிரக்கணக்கானோருடைய ஜெபத்தினாலும் 177 நாடுகளில் செய்யப்பட்டு வருகின்றது.

வைக்கோல் போரில் இருந்து தேவனுடைய வழி நடத்துதலைத் தேடும் பொழுது, அதன் விளைவு என்னவாக இருக்கும் என்று ஒருக்காலும் உங்களால் அறிந்துகொள்ள முடியாது.

5

நீண்ட தூரமா!

தேவனுக்கு அது பொருட்டல்ல

"தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" (சங்.145:18).

உலகம் சுருங்கிவிட்டது. தற்காலத்தில் பூமியின் மறுபக்கம் நடப்பதைக்கூட செயற்கைக் கோள்களின் மூலம் ஒளி பரப்பப்படுவதால் பூமியின் எந்தப் பகுதியிலிருந்தும் பார்க்க இயலுகிறது. மற்றக் கண்டங்களில் உள்ள உங்களது சிநேகிதர்களுக்கு மின் அஞ்சல் மூலம் உடனுக்குடனாக செய்தியை அனுப்ப இயலுகிறது. உங்களது மடிக்கணிணியின் உதவியுடன் நீங்கள் அனுப்ப விரும்பும் எந்த ரெக்காடுகளையும் அப்படியே உலகில் உள்ள எந்த பகுதிக்கும் அனுப்ப இயலுகிறது.

ஆனால் இவை அனைத்தும் உண்மையான ஓர் கிறிஸ்தவருக்குப் புதிதான காரியமல்ல. ஏனெனில் அவர்கள் பல மைல்களுக்கு அப்பால் உள்ள தேவனோடு எப்பொழும் தொடர்பு கொள்ளுகிறார்கள். தேவன் எல்லா இடங்களிலும் வியாபித்து இருக்கிறார் என்றும், எப்பொழுதும் அவர் நமது ஜெபங்களைக் கேட்கிறார் என்றும் நம்புகிறோம். தேவ ஆவியானவர் நாம் எப்படி, எது குறித்து ஜெபிக்கவேண்டும் என்று நமக்கு கற்றுத் தருகிறார். இவ்வுலகில் உள்ள அனைத்து செய்திப் பரிமாற்றங்களைவிட மிக மிக வேகமாக பரலோகத்திலிருக்கிற தேவனால் செயல்படுத்தப்படுகிறது. இப்பூவுலகில் எந்தப் பகுதியில் உள்ள ஒருவருக்காக நாம் ஜெபிக்கலாம். நிச்சயமாக நமது ஜெபத்தை தேவன் கேட்கிறார்.

சில நேரங்களில் ஜெபங்களுக்கு தேவன் பதிலளிக்கும் விதம் மிகவும் ஆச்சரியமாக உள்ளது.

அன்பின் தேவனே, உமது பிள்ளைகளுக்கு நீர் தூரமானவர் அல்ல. எங்களைவிட்டு வெகு தூரத்தில் இருக்கும் எங்களுக்கு அன்பானவர்களை உமது கரிசனையுடன் கண்காணியும் அவர்களுடைய வழிகளிலும் அவர்களுடைய உள்ளங்களிலும் தங்கி இரும். அவர்களது வலது கரத்தின் பக்கம் அவர்களுக்கு பாதுகாவலாக இரும்.

பாட்ஸ் கார்பெண்டர்

ஐவரி கோஸ்டில் நடந்த ஆள் கடத்தல்

2000ம் ஆண்டின் மே மாதம் 8ம் தேதி அன்று அமெரிக்காவில் உள்ள சதர்ன் பேப்டிஸ்ட்டைச் சேர்ந்த ஆயிரக் கணக்கானோர் டிராவிஸிற்கும், கிம் ப்போர்ச்சதிக்கும் ஜெபித்ததினால் நடந்ததா? அல்லது தேவன் அவர்களுக்காக ஏதோ ஓர் சித்தம் கொண்டிருந்தாரா?

பல்வேறு சபைப் பிரிவினரும், பணித்தள மிஷரிகளும் செய்வதுபோல சதர்ன் பாப்டிஸ்ட் சபையும் வருடாந்திர ஜெப நாளேடு தயாரித்து வருடந்தோறும் ஒவ்வொரு நாளும் ஒரு மிஷனரிக்காக ஜெபிக்கும்படி கேட்டிருந்தனர். அந்த ஜெபக் கையேடைத் தயாரிப்பவர்களை மிஷனரிகளுடைய பிறந்த நாட்கள் அல்லது குறிப்பிடத்தக்க சம்பவங்களின் ஆண்டு நிறைவு நாட்கள் போன்றவற்றைச் சிறப்புப் படுத்தியிருந்தனர். குறிப்பிட்ட அந்த நாள் கிம்போர்தெதின் 2, 30வது பிறந்தநாள். ஆகவே அவளுக்காகவும் அவளது கணவருக்காகவும் விசேஷ ஜெபம் செய்யும்படியான நாள். அந்த நாடு முழுவதும் உள்ள பாப்டிஸ்ட்கள் தங்களது வீடுகளில் படுக்கை அறை, அடுப்பறை, ஹால் போன்ற பகுதிகளில் வைத்திருந்த ஜெபக் கையேட்டைப் பார்த்து ப்போர்சித்ஸ் இருவருக்காகவும் சிறப்பு ஜெபம் ஏறெடுத்தார்கள். அன்று அவர்கள் அனைவரும் பண்ணிய ஜெபம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

அன்று, டிராவிஸ் ப்போர்சித் தனது இரண்டு வயது மகன் நத்தானியேலை தன்னுடன் வைத்துக்கொண்டு டாபாக்காலா என்ற இடத்திற்கு தன்

காரை ஓட்டி சென்று கொண்டிருந்தார். கிம்முடைய கர்ப்பகாலப் பிரச்சனைகள் நிமித்தமாக அவள் தன் கணவருடன் பயணப்பட இயலவில்லை. ஆகவே அவள் தன்னுடைய ஐந்து வயது மகளுடன்கூட தன் வீட்டில் அவளது கணவரது வரவிற்காக ஆவலுடன் காத்துக்கொண்டு, தன்வீட்டில் இருந்தாள்.

அந்த நாளின் பிற்பகுதியில், உணவு உட்கொள்வதற்காக, டிராவிஸ் தன் காரை நிறுத்தினபொழுது, இரண்டு கொள்ளையர்கள் துப்பாக்கி முனையில் காரை பிடித்துக்கொண்டார்கள். காரின் திறந்த கதவில் தொங்கிக்கொண்டு சின்ன மகன் நத்தானியேலை மட்டும் விடுவிக்குமாறு கெஞ்சினார். ஒரு கொள்ளைக்காரன் தனது துப்பாக்சியினால் மிஷனரியை சுட்டு காயப் படுத்தினான். பின்பு அக்கொள்ளையர்கள் குழந்தை நத்தானியேலை பின் இருக்கையில் அமர்த்தி காரை வெகுவேகமாக ஓட்டிச்சென்றுவிட்டனர்.

டிராவிங் ப்போர்சித்திற்கு மார்பில் குண்டுக் காயம் ஏற்பாட்டிருந்தாலும், எப்படியோ சமாளித்து காவற்துறை அதிகாரிக்கு தன் குழந்தை கடத்தப் பட்டதை தொலைபேசி மூலம் அறிவித்துவிட்டார். அத்தோடு சதர்ன் பாப்டிஸ்ட் மிஷனரி தலைவர்களுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கடத்தல் நிகழ்ச்சியைப் பற்றி கூறினார். உடனே அந்தத் தலைவர்கள், கடத்தப்பட்ட குழந்தை நத்தானியலிற்காக ஜெபிக்கும்படி, அமெரிக்காவில் உள்ள ஜெப சங்கிலித் தொடருக்கு மின் அஞ்சல் மூலம் செய்தியை அனுப்பினார்கள். விரைவில் அக்குழந்தையின் பாதுகாவலிற்காக ஜெபிக்கும் ஜெபவீரர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அனைத்து சபைப் பிரிவு களையும் சேர்ந்தவர்களும் இப்பொழுது ஜெபித்தில் கலந்துகொண்டு, அனைவரும் ஊக்கமாக ஜெபித்தார்கள்.

பின்பு நடக்கக் கூடாத அநேக நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடைபெற்றன. அந்தக் காரைக் கடத்திச் சென்றவர்களுக்கு சிறுகுழந்தையைப் பற்றிக் கவலை இல்லை. அவர்களுக்கு வேண்டியது கார்தான். ஆகவே அந்த கொள்ளைக்காரர்கள், நாற்பத்தைந்து நிமிடம் கழித்து குழந்தை நத்தானியேலை ஓர் சிறு கிராமத்தில் காரிருள் சூழ்ந்த ஓர் சாலையில் இறக்கி விட்டுச் சென்று விட்டனர். அந்த இரவு முழுவதும் யாராலும் அக்குழந்தை கவனிக்கப்படாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவனுக்காக ஆயிரக்கணக்கானவர்கள் ஜெபித்துக் கொண்டிருந்தார்களே. எப்படியோ அந்தக் கிராமத்தார் அக் குழந்தையைக் கண்டு ஓர் தாதியின் கையில் கொடுத்து பராமரிக்கக் கூறினார்கள். அந்தத் தாதி அக்குழந்தைக்கு உணவு கொடுத்து, குளிப்

பாட்டி, படுக்கையில் படுக்க வைத்து பராமரித்து பாதுகாத்தாள். இடைப்பட்ட நேரத்தில் கிராமத் தலைவர்கள் காவற்துறை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு குழந்தையின் பெற்றோரைக் கண்டுபிடிக்க முயற்சி எடுத்தனர். மிக விரைவில் அக்குழந்தை தன் பெற்றோருடன் இரவு 1–30 மணிக்கு சேர்க்கப்பட்டான்.

டிராவிஸ் ப்போசித்தைப் பொறுத்தமட்டும் துப்பாக்கிக் குண்டு மார்பின் வலது பக்கத்தில் துளைத்ததாக மார்புப் பகுதியில் உள்ள மிகமுக்கிய உறுப்புகள் எதையும் பாதிக்கவில்லை. இதுவும் ஓர் அற்புதம்.

கிம்மிற்கு இது மறக்கமுடியாத பிறந்த நாளாகும். ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து அநேக மக்கள் ஜெபித்தாலும் அந்த ஜெபத்தின் வல்லமையை ப்போர்சித் குடும்பத்தினர் யாராலும் மறக்க இயலாது.

படுத்த படுக்கையாயிருந்த ஓர் பெண்ணின் ஆவிக்கேற்ற வல்லமை

1860ம் ஆண்டு படுத்தப்படுக்கையாக லண்டனில் இருந்த ஓர் பெண் நான்காயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்த ஒரு மனிதரிடம் ஏதோ சில காரியங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்பினாள். தற்காலத்தில் தொழில் நுட்பங்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள, தந்தி, தொலைபேசி, தொலைதூர செய்தித் தொடர்பு இவற்றின் மூலம் தொலைதூர இடங்களுக்கு தொடர்பு கொள்ள இயலும். ஆனால் மரிஆனி அட்லார்ட் வேறு ஓர் அற்புதமான முறையைத் தன் மனதில் வைத்திருந்தாள். அவளுக்காக தேவனே அச்செய்தியைக் கேட்டு அவர்களுக்கு அனுப்ப வேண்டும் என்று தேவனிடம் வேண்டிக்கொண்டாள்.

G. கேம்ப்பெல் மார்கன் "ஜெபம் செய்யும் பழக்கம்" என்ற தனது புத்தகத்தில், மரிஆனியின் கதையைப்பற்றி எழுதியுள்ளார். சிக்காக்கோவில் மிக மிக வறுமைக்குள் இருந்த பிள்ளைகள் மத்தியில் சுவிசேஷகர் டுவைட். எல். மூடி செய்த ஊழியத்தைப் பற்றி வாசித்திருந்தாள். அவரது வல்லமையான பிரசங்கத்தைக் கேட்ட மக்களது வாழ்க்கை மறுரூபமடைந்தது. தனது திருச்சபையில் உள்ள மக்களும் அப்படிப்பட்ட வல்லமையான செய்தியைக்

கேட்கவேண்டும் என்று அவள் விரும்பினால். கடிதம் எழுதுவதன் மூலம் அவரை நிச்சயம் தொடர்புகொள்ள இயலாது. அவரோடு பேசவும் எந்த ஓர் வழியும் இல்லை. ஆகவே தேவனிடம், "ஆண்டவரே, இந்த மனிதரை எங்களது திருச்சபைக்கு அனுப்பும்" என்று ஜெபிக்கலானாள்.

1870ல் மூடி தனது இரண்டாவது பயணத்தை இங்கிலாந்தில் மேற் கொண்டபொழுது, அவர் எந்த ஒரு பிரசங்கமும் செய்வதற்கு ஒரு திட்டமும் பண்ணவில்லை. சார்லஸ் ஹேடன் ஸ்பர்ஜன், ஜார்ஜ் முல்பர் போன்ற கிறிஸ்தவ தலைவர்களைச் சந்தித்து அவர்களிடமிருந்து வேதத்தை இன்னமும் அதிகமாகக் கற்றுக்கொள்ள விரும்பினார். எப்படியோ, மரிஆனியின் திருச்சபைப் போதகர் மூடியை சந்தித்து, எப்படியாயினும் அவரது திருச்சபையில், ஞாயிற்றுக் கிழமை காலை, மாலை ஆராதனைகளில் செய்தியைப் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்று கேட்டு, வெற்றியும் பெற்றார். அவர் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப மூடி ஞாயிற்றுக் கிழமை ஆராதனையை மரிஆனியின் திருச்சபையில் எடுத்தார். ஆனால் அது அவ்வளவாக எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. அவர் எங்கு பிரசங்கித்தாலும், மக்களின் மனது திறந்து, தேவசெய்தியை வாஞ்சையோடு கேட்டு, தேவ அழைப்பிற்கு செவிகொடுப்பார்கள். ஆனால் அன்று காலையில் அப்படி ஓர் மாற்றம் ஏற்பட வில்லை.

மரிஆனிக்கு அது மிகப்பெரிய ஏமாற்றமாக இருந்தது. அவள் எதற்காக ஜெபித்தாளோ அதற்கு பதில் கிடைத்துவிட்டது. ஆனால் அதனால் எதிர் பார்த்த பயன் ஏதும் ஏற்படவில்லை. ஆயினும் அவள் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே இருந்தாள்.

ஞாயிற்றுக் கிழமை மாலை ஆராதனை நடந்தது. அது நடந்து முடிந்தவுடன் நிலைமை முற்றிலுமாக மாறிவிட்டது. கூட்டத்தின் முடிவில் அங்குள்ளவர்கள் யாராவது தங்களது வாழ்க்கையை இயேசுவிற்குக் கொடுக்க விரும்பு கிறார்களா என்று கேட்டார். நூற்றுக்கணக்கானோர் எழுந்து நின்றார்கள். மூடி மிகவும் ஆச்சரியப்பட்டு, எழுந்து நின்றவர்களை மறுபடியும் அமரும்படி கூறி, தான் சொன்ன காரியத்தை மறுபடியுமாகச் சொல்லி, நன்றாக கவனிக்கும் படி கேட்டுக்கொண்டார். அவர்கள் மறுபடியும் நின்றார்கள். மூடி தனது அமெரிக்கன் ஆங்கிலத்தை அவர்கள் புரிந்து கொள்ளவில்லையோ என எண்ணி உண்மையாகவே மனம் திரும்ப விரும்புவர்கள், ஆலயத்தின் அருகில் உள்ள ஓர் சிற்றாலயத்திற்கு வரும்படி கேட்டார். மக்கள் கூட்டம்

உடனே இடம் கொள்ளாமற் போகுமட்டும், கூடினார்கள். கூடுதலாக இருக்கைகள் போடப்பட்டது. மக்கள் மிக அதிகமாகக் கூடினபடியினால் மூடி அந்த ஸ்தல திருச்சபையின் போதகரிடம் மறுநாள் மாலை, அவர்களிடம் பேசி, உண்மையிலேயே அவர்கள் செய்வதை நன்கு புரிந்து செய்கிறார்களா எனக் கேட்டு பின்தொடர் ஊழியம் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

தன்னுடைய பிரயாணத் திட்டத்தின்படி, அடுத்த நாள் மூடி, டப்ளினிற்குச் சென்றார். அடுத்தநாள் செவ்வாய்க் கிழமை மரிஆனியின் திருச்சபைப் போதகர் "உடனே லண்டனிற்கு வந்து எங்களுக்கு உதவுங்கள்" என்ற ஓர் அவசரச் செய்தியை மூடிக்கு அனுப்பினார். ஞாயிற்றுக் கிழமையைவிட திங்கட் கிழமை மிக அதிகமான மக்கள் வந்து விட்டதால், போதகர், மூடியின் உதவியை நாடினார். மூடி மறுபடியும் மரிஆனினையின் ஆலயத்திற்கு வந்து மேலும் பத்து நாட்கள் கூட்டம் நடத்தினார். அந்த கூட்டங்களில் நானூறுபேர் தங்களை கிறிஸ்துவிற்கென்று ஒப்புக்கொடுத்து, சபையில் அங்கத்தினரா னார்கள்.

மூடிக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. "அங்கு அவ்வாறு மக்கள் கூட்டம் கிறிஸ்துவிற்கு ஒப்புக்கொடுத்தது எப்படி நடந்தது" என்று ஆச்சரியப் பட்டதாக மூடி பின் நாட்களில் கூறினார். அதுபற்றி அவர் விசாரித்த பொழுது, மரிஅனி அட்லார்ட் என்ற படுத்த படுக்கையில் இருந்த ஓர் பெண், "என்னை அவர்களது திருச்சபைக்கு தேவன் கொண்டு வரவேண்டும் என்று ஜெபித்ததை அறிந்தேன்" என்று கூறினார். "தேவன் அவளது ஜெபத்தைக் கேட்டு, கடல் கடந்து நான்காயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்த என்னைக் கொண்டு வந்தார்" என்றார்.

லண்டனில் நடந்த இந்த நிகழ்வை கேள்விப்பட்ட லண்டனில் உள்ள ஊர்களிலிருந்தும், ஸ்காட்லாண்டில் இருந்தும் மூடி தங்களது ஊருக்கு வந்து பேசவேண்டும் என்ற அழைப்பு வந்தது. "மூடி வந்தவுடன் ஸ்காட்லாண்டின் கிறிஸ்தவ பக்தி வைராக்கியம் முற்றில் மாறிவிட்டது" என்று பிரபல பிரசங்கியும் எழுத்தாளருமான ஆன்ட்ரூ முர்ரே கூறினார்.

மரிஆனி அட்லார்ட்டை யாரும் நினைவிற்கொள்ளவில்லை. ஆனால், வெகு தொலைவில் இருந்த மூடியைக் குறித்து அவள் பண்ணின ஜெபமான "தேவனே, இந்த மனிதரை எங்களது சபைக்கு அனுப்பும் என்ற ஜெபத்தை தேவன் கேட்டு பதிலளித்ததை அவளது ஊரில் உள்ள அநேக நூற்றுக் கணக்கான மக்கள் நன்றியோடு நினைவு கூறுகிறார்கள்."

டைட்டானிக் கப்பலின் மூழ்குதல்

அன்று 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் நாள் வெண் நட்சத்திர அமைந்தது பெற்ற 'டைட்டானிக்' என்ற பெரிய கப்பல் இங்கிலாந்தில் உள்ள சௌத்தாம்டன் என்ற இடத்திலிருந்து அமெரிக்காவில் உள்ள நியூயார்க்கை நோக்கி தனது முதல் பயணத்தைத் துவங்கியது. ஆஸ்டர், குகன்கெய்ம், டொபட்னர், ஸ்ட்ராஸ் போன்ற மிக முக்கியமானவர்களும், பிரபலமான அமெரிக்க தொழிலதிபர்களும், உயர் அதிகாரிகளும், அந்தக் கப்பலில் பயணம் செய்தனர். அன்றைய நாட்களில் இருந்த கப்பல்களிலேயே மிகப் பெரிய கப்பலாக இருந்ததோடு அட்லாண்டிக் கடலில் மிக அதிகமாக கப்பல்கள் செல்லும் பாதையில் பயணித்துக்கொண்டிருந்தது.

அந்தப் பெரிய கப்பலுக்கு என்ன நடந்துவிடப்போகிறது? கேனல் ஆர்ச்சி பால்ட் கிரேசி அதுபற்றி ஏதும் கவலைப்படவில்லை. அவர் அப்பொழுது தான் கடலில் இருந்து கடுநீர் குளத்தில் மிக சந்தோஷமாக குளித்து முடிந்திருந்தார். "இதுபோன்று வேறு எந்த நீச்சல் குளத்திலும், இவ்வளவு அதிகமாக பசுமையாக இருந்தது கிடையாது" என்று கூறினார்.

நியூயார்க் நகரில், இருந்த கிரேஸியின் மனைவி ஏதோ ஓர் விநோதமான கனவினால் மனக்கலக்கமடைந்திருந்தாள். அவளால் உறங்க இயல வில்லை. அது சாதாரண தூக்கமின்மை அல்ல. இதற்குமுன் இல்லாத ஏதோ மனக்கலக்கத்தினால் தூங்க இயலாமல் இருந்தாள்.

அவள் படுக்கையைவிட்டு எழுந்தாள், தன் ஜெப புத்தகத்தைக் கையில் எடுத்தாள் முழங்காலில் நின்று ஜெபிக்க ஆரம்பித்தாள். அவள் வழக்கமாக தன் கணவருக்காக ஜெபிக்கும் "கடலில் பயணம் பண்ணுகிறவர்களுக்காக" என்ற பக்கத்தில் அந்தப் புத்தகம் திறந்தது. காலை 5.00 மணிவரைக்கும் தொடர்ந்து கிரேஸி ஊக்கமாக ஜெபித்தாள். பின்பு அவளது மனம் அமைதி அடைந்தது. அதன்பின் படுக்கைக்குச் சென்று காலை 8.00 மணிக்கு அவளது சகோதரி வந்து எழுப்பும்வரை நன்கு தூங்கிவிட்டாள்.

அவளது சகோதரி மிகுந்த பதட்டத்தோடு கையில் அன்றைய செய்தித் தாளுடன் நின்றுகொண்டு "வருத்தமான செய்தி" "துக்கமான செய்தி" என்று கூறினாள். அன்றைய தலையங்கம், டைட்டானிக் கப்பல் கடலில் மூழ்கிவிட்டது என்று பிரசுரிக்கப்பட்டது.

அவளது கணவரான கேனல் ஆர்ச்பால்ட் கிரேஸி, கப்பலில் தனது அறையில் படுத்திருந்தார். திடீரென கப்பலில் ஏற்பட்ட பயங்கரமான அதிர்ச்சியினாலும் பெரிய சத்தத்தினாலும் விழித்துக்கொண்டார். உடனே மிக அவசரமாகத் தன் உடையை உடுத்திக்கொண்டு கப்பலின் தளத்திற்குச் சென்றார். அங்கு சென்றபொழுது, கப்பல் ஓர் பெரிய பனிமலையின் மீது மோதிவிட்டது என்ற செய்தியை அறிந்தார்.

அநேக பெண்களையும் குழந்தைகளையும் உயிர் காக்கும் படகுகளின் மூலம் தப்பிச் செல்ல உதவினார். பின்பு மூழ்கும் கப்பலோடே சேர்ந்து அவரும் கடலில் மூழ்கிவிட்டார். பின்னர் இதைக் குறித்து எழுதும் போது

"நான் கப்பலில் இருந்த ஓர் கம்பிக் கிராதெயைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தபொழுது, சுற்றி சுற்றி அலைமோதும், ஓர் கடற் சூழலில் அகப்பட்டுக்கொண்டேன். கப்பல் கடலின் அடியில் மூழ்கினது. நான் கீழே, மூழ்கிக்கொண்டே இருந்தேன். வெகு நேரமாக நான் மூழ்கிக் கொண்டே இருப்பதுபோலக் காணப்பட்டது. பின் எப்படியோ தண்ணீர் பரப்பிற்கு வந்தபொழுது, டைட்டானிக் கப்பலைக் காணவில்லை. அந்தக் கப்பல் எந்தவித அறிகுறியும் இல்லாமல், முழுவதும் கடலுக்குள் மூழ்கிவிட்டது. கடற்பரப்பிற்கு மேலாக மெல்லிய ஓர் புகைப்படலம்போல் காணப்பட்டது. எந்த ஓர் மனிதனும் கேட்டிராத பயங்கரமான அபயக்குரல்கள் கேட்டன. மரித்துக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கனோரின் அபயக்குரல் அது."

கடல் மட்டத்திற்கு மேலாக தன் தலையை வைத்துக்கொண்டு கிரேஸி அந்த குளிர்ந்த நீரில் சிறிதுநேரம் நீந்தினார். இப்படியாக கப்பல்கள் உடைந்தபொழுது, கப்பலின் கொதிகலன் உடைந்து அநேக கடற்பயணிகள் உடல் கருகி இறந்து போவது பற்றி கிரேஸி திடீரென நினைவு கூர்ந்தார். உடனே அந்தக் கப்பலின் உடைந்த பகுதிகளை விட்டு விட்டு தூரமாகச் செல்ல வேகமாக நீந்திச் சென்றார். அவரது உடல் உறையும் நிலைக்கு வந்து, அவரது உடல் மிகவும் பலவீனமானது. அவர் நீந்தித் தப்பிப்பதை கைவிட்டு விட்ட நிலைக்கு வந்துவிட்டார். அவரது மரணச் செய்தியை அவரது மனைவி கேள்விப்படும்பொழுது, அவள் ஆறுதல் அடைய வேண்டும் என்று ஜெபித்தார். "நாம் மறுபடியும் பரலோகத்தில் சந்திக்கும் வரை உன்னிடம் நான் பிரியா விடை பெறுகிறேன்" என்ற செய்தியை அவரது மனைவியிடம் அறிவிக்கும்படி தேவனிடம் கேட்டுக்கொண்டார்.

திடீரென, அவருக்கு எங்கிருந்தோ அசுர பெலன் வந்தது. கடற்பரப்பிற்கு மேலே வந்தபொழுது, கப்பலின் உடைந்த பகுதிகளோடு மோதிக் கொண்டார். அவரது இடது பக்கத்தில் தலைகீழாகக் கவிழ்ந்து கிடந்த ஓர் உயிர் காக்கும் படகைப் பார்த்தார். ஏறக்குறைய பன்னிரண்டு பேர் அப்படகின் அடிப் பாகத்தை தங்களின் பெலன் கொண்ட மட்டும் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தார்கள். அவர் அந்த படகின் அருகில் வந்தபொழுது அதன்

ஏறக்குறைய 1513 பேர் என்று இரவு கடலில் மூழ்கி மரித்துவிட்டார்கள். அவரது கணவரின் மிக இக்கட்டான நேரத்தில், அவரது மனைவி நியூயார்க்கில் ஜெபித்த ஜெபத்தைத் தேவன் கேட்டு, ஓர் பெரிய அற்புதத்தைச் செய்தார். "ஊக்கமான ஜெபத்தைக் கேட்டு தேவன் இந்த மகாப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டுள்ளார்" என்று தளபதி கிரேஸி கூறுகிறார்.

வலையில் தங்கி இரு

ஜிம் டோசியர் ஞாயிறு பள்ளியில் சிறு மாணவனாக இருந்தபொழுது, அவனது தாயார் "ஜிம், உன்னை ஏதோ ஓர் நோக்கத்திற்காகத் தேவன் படைத்துள்ளார். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு, நீ தேவனோடு கூட மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கவேண்டும்" என்று அடிக்கடி கூறுவாள்.

அவர் இராணுவத்தில் சேர்ந்தபொழுது, 'வலையில் தங்கி இரு' என்ற சொற்றொடர் அவரது மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. வலையில் இரு என்பதன் பொருள், நீங்கள் எல்லைக்கு வெளியில் தளப்பணியில் இருக்கும் பொழுது உங்களது படைத்தலைவரோடு எப்பொழுதும் ரேடியோ மூலம் தொடர்பு இருந்து கொண்டேயிருக்கவேண்டும் என்று அர்த்தமாகும்.

1981ம் ஆண்டு இத்தாலிய சிவப்புப் படைகளால் அவர் யுத்தக் கைதியாகப் பிடிக்கப்பட்டபொழுது, இந்த இரு சொற்றொடர்களும் மிகவும் அர்த்த முள்ளதாக இருந்தது.

ஜிம் டோசியர், தற்பொழுது வட அட்லாண்டிக் உடன்படிக்கை அமைப்பில் போர் நுணுக்கங்களை நன்கு அறிந்து செயல்படுகிற தளபதி, ஜேம்ஸ். L. டோசியராக உதவித் தலைவராக உள்ளார். கிறிஸ்மஸிற்கு ஒருவாரத்திற்கு முன் இத்தாலியில் உள்ள வெரோனா என்ற இடத்தில் உள்ள அவர்களது

வீட்டில் அவரது மனைவி அவர்கள் இருவருக்கான இரவு உணவு தயாரித்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது அவர்களது வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது. வாசலில் வந்து நின்ற இரு மனிதர்கள், தாங்கள் குழாய்களைச் சரிபார்க்கும் தொழிலாளிகள் என்றும், அவர்களது வீட்டில் உள்ள குழாய்களில் ஏதாவது ஒழுகுகிறதா என்று சோதித்துப் பார்க்க வந்துள்ளதாகக் கூறினார்கள். அவர்கள் வீட்டிற்குள் வந்தவுடன், கைத் துப்பாக்கிகளை கைகளில் எடுத்துக்கொண்டு "நாங்கள் செம்படையைச் சார்ந்தவர்கள்" என்று கூறினார்கள். இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள், இத்தாலி தேசம் முவதிலும் ஆட்களை கடத்துவதும், உயர் பதவியிலுள்ள அநேக அரசாங்க அதிகாரிகளையும், பெரிய பெரிய தொழிலதிபர்களையும் கொலை செய்து தேசத்தையே கலக்கிக் கொண்டு இருந்தனர். செம்படை யினால் கடத்தப்பட்ட இத்தாலியின் முன்னாள். பிரதம மந்திரி சில நாட்களுக்கு முன் அவரது காரில் உள்ள பெரிய பெட்டியில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார்.

தனது மனைவியை அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்று டோசியரால் சொல்ல இயலவில்லை. ஆனால் அவரை ஓர் பெரிய இரும்புப் பெட்டியில் திணித்து, மாடியிலிருந்து கீழே இறக்கப்பட்டுக் கொண்டிருந்தார். அது மட்டும்தான் அவருக்குத் தெரிந்தது. பெட்டியோடு கூட ஓர் பெரிய வண்டியில் வைத்து, வெகுதூரம் ஒட்டிச் சென்றனர். பின் ஏதோ ஓர் கட்டிடத்திற்குள் அவர் அடைக்கப்பட்டிருந்த பெட்டியைத் தள்ளினார்கள். பின்பு ஓர் மின் தூக்கியின் மூலமாக மேலே தூக்கப்பட்டு, பின் கீழே இறக்கப்பட்டு, இறுதியில் ஆறு சதுரடி அளவுள்ள ஓர் அறையில் இருந்த ஓர் சிறிய கூடாரத்திற்குள்ளாக இருந்த ஓர் இரும்புக் கட்டிலில் வைத்தார்கள். பின்பு முகமூடி தரித்த இரு மனிதர்கள் அவரைக் கட்டிலில் சங்கிலியினால் கட்டினார்கள். பின்பு அவரது வாயில் அடைத்து வைத்திருந்த துணியையும் கண்களை மூடியத் துணியையும் எடுத்துவிட்டு, அங்கு மூலையில் இருந்த ரசாயன மலஜலாதி அறையைக் காண்பித்தார்கள்.

அவரை எத்தனை நாட்கள் அந்த நிலையில் வைத்திருப்பார்கள் என்று டோசியருக்குத் தெரியவில்லை. ஆனால் உடனடியாக அவரைச் சுடப் போவதாகத் தெரியவில்லை.

தனது மனைவிக்காகவும், வயது வந்த தனது மகனுக்காகவும், மகளுக்காகவும் டோசியர் ஜெபித்தார். ஓர் போர் வீரனாகப் பலவிதமான

ஆபத்தான நேரங்களையெல்லாம் அவர் சந்தித்து இருந்ததால், அவர் மரணத்தைப் பற்றி சிறிதும் அஞ்சவில்லை. பரலோகம் அவருக்குக் காத்திருக்கிறது என்பதை அவர் அறிந்திருந்தார். "வலையில் இரு" "அவரோடு நெருங்கிய தொடர்பு இருந்துகொண்டேயிருக்கட்டும்" என்ற இரு சொற்றொடர்களையும் பற்றி சிந்திக்கலானார். அவரது படைத் தளபதியோடு அவளுக்கு தொடர்பு துண்டிக்கப்பட்டதை அறிந்திருந்தார். ஆனால் தெய்வீகத் தலைவராகிய தேவனோடு அவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதை நன்கு அறிந்திருந்தார். அந்த நிச்சயம் அவருக்கு மிகவும் தேவையாக இருந்தது. அன்று இரவு மிகவும் நன்றாக தூங்கி எழுந்தார்.

அடுத்த நாள் செம்படையினர் வட அட்லாண்டிக் உடன்படிக்கை அமைப்பைப் பற்றியும் அவரது சொந்த அரசியல் கொள்கைகள் பற்றியும் அவரிடம் பல கேள்விகள் கேட்டனர். அவர் கவனமாக யாரையும் பாதிக்காத முறையில் பதில் சொன்னார். அவர் தனது மனைவிக்காக ஜெபிப்பது போல அவரது மனைவியும் அவளுக்காக ஜெபித்துக்கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்தார். ஏதோ ஓர் காரணத்தால், ஓர் மூத்த நிர்வாக அதிகாரி பற்றி மிகத் தெளிவான ஓர் காட்சி மனதில் தோன்றியது. அந்த அதிகாரியும் தனக்காக நிச்சயமாக ஜெபித்துக்கொண்டிருப்பார் என அவர் உள்ளத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. மேலும் வெரோனாவில் உள்ள பள்ளி ஆசிரியர், விசன்சாவில் உள்ள ஓர் மிஷனரி ஆகியோரைப் பற்றியும் அவர் நினைத்துப் பார்த்தார். அவர்களும் அவருக்காக ஜெபித்துக் கொண்டிருப்பார்கள் என எண்ணினார். அமெரிக்காவையும், இத்தாலியையும் சேர்ந்த அரசியல் தலைவர்கள் அவரது விடுதலைக்காக முயற்சி எடுத்துக் கொண்டிருப்பார் கள் என எண்ணினார். ஆயினும் ஜெபத்தைப் போல வல்லமையானது எதுவும் கிடையாது என்பதை அறிந்திருந்தார். அவருடைய இந்த நிலைமை சீரடைந்தால், அது நிச்சயமாக ஜெபத்தின் பதிலாகத்தான் இருக்கும் என்று நம்பினார்.

அவரது, அந்த நிலைமையில் எந்தவிதமான மாறுதலும் இன்றி கிறிஸ்துமஸ் கழிந்தது. அவரது மகளும் மகனும் வெரோனாவிற்கு வந்தது பற்றியும், அவர்கள் ஜிம்மிற்கு கொடுத்த ஓர் பத்திரிக்கையில் அவர் இறந்து விட்டதாக ஓர் வதந்தி பிரசுரிக்கப்பட்டதைப் பார்த்து அறிந்ததை அவருடைய காவலர்கள் அறிந்தார்கள்.

மாதங்கள் கடந்தன. தான் சிறைக் கைதியாக அடைக்கப்பட்டு நாற்பது நாட்கள் ஆகிவிட்டதாக அவர் அனுமானித்தார். பின்பு இரவையும் பகலையும் வைத்துக்கொண்டும் நாற்பது நாட்களைக் கழித்ததை நினைவு கூர்ந்தார். திடீரென தேவன் அவரை தப்புவிக்கப்போகிறார் என்ற விநோதமான எண்ணம் அவர் மனதில் தோன்றியது. எங்கிருந்து அந்த எண்ணம் வந்ததோ?

திடீரென அவரது கூடாரத்திற்கு வெளியே ஏதோ மரத்தை வெட்டிப் பிளக்கிற சத்தம் கேட்டது. அத்தோடு கூச்சலும் குழப்பமாக இருந்தது. அவரைக் காவல் காத்துக் கொண்டிருந்த காவலாளி, அவரை நோக்கி தன் துப்பாக்கியைக் குறி வைத்தான். ஆனால் முகமூடி அணிந்திருந்த ஒரு மனிதன் அந்தக் காவலாளியைக் கீழே தள்ளிவிட்டான். அவன் மயக்க மடைந்து கீழே விழுந்துவிட்டான்.

முகமூடி அணிந்திருந்த மனிதன் எதிர் கட்சியைச் சேர்ந்தவனோ முதலில் அதுபற்றி அவருக்குத் தெரியவில்லை. அந்த முகமூடி மனிதன், தீவிர வாதத்தை எதிர்க்கும் இத்தாலிய படையைச் சேர்ந்த தலைவன் என்பதைப் பின்னால் புரிந்துகொண்டார். ஆராயிரம் இத்தாலிய ஆராய்ச்சியாளர்கள், அமெரிக்கா ஐரோப்பாவின் ரகசியப் படையினரோடு சேர்ந்து ஆயிரக் கணக்கான தடயங்களை ஆராய்ந்து, இறுதியில் வெரோனவிற்கு நாற்பத்தி எட்டு மைல் தூரத்தில் இருந்த பாடுவாவில் இருந்த ஓர் அடுக்கு மாடிக் கட்டிடத்தை வந்து அடைந்தார்கள்.

தீவிரவாதிகளால் நீங்கள் கடத்தப்படாவிட்டாலும் 'வலையில் இரு.' ''அவரோடு தொடர்பு கொண்டிரு'' என்ற இரண்டுமே மிகச் சிறந்த ஆலோசனைகளாகும்.

வியட்நாமிற்காக ஓர் வேதவசனம்

அவர் அதை அவ்வளவாக வாசிப்பதில்லை. ஆனால், அனுதினமும் அதைத் தன்னுடன் எடுத்துச் செல்வார். ஜிம் ஸ்டிகால்ஸ் தனது வேலைக்குப் போகும்பொழுது அவாது சட்டைப் பைக்குள் அந்த கிதியோனியரின் புதிய ஏற்பாட்டைப் பத்திரமாக வைத்துச் செல்வார். வியட் நாமில் நடந்த யுத்தம்தான் அவாது பணி.

ஸ்டிகால் தனது பத்தொன்பதாவது வயதில் வியட்நாமிற்குச் சென்றார். இப்பொழுது அவருக்கு இருபத்தைந்து வயதாகிவிட்டது. வியட் நாம் வாழ்க்கை இலகுவான வாழ்க்கையாக இருக்கவில்லை. அவரோடு கூட இருந்த அவரது சிநேகிதர்களில் பலர் யுத்தத்தில் இறந்து மடிந்தனர். இன்னமும் எத்தனை பேர் யுத்தத்தில் மடிய இருக்கிறார்களோ என அவர் எண்ணிக்கொண்டிருந்தார்.

1968 பிப்ரவரி மாதம் 26ம் தேதி அவருக்கு ஓர் விசேஷமான நாளாகும். அன்று அவர் எப்படியாயினும் அந்த யுத்தத்திற்கு ஓர் முடிவு வரவேண்டும் என மிக ஊக்கமாகச் ஜெபித்திருந்தார். யுத்தம் முடிய வேண்டும் என்று அவர் ஜெபித்திருந்தாலும், அன்று இரவிற்குள் அவர் கொல்லப்படுவோரா என்ற எண்ணமும் அவர் மனதில் தோன்றியது.

ஆகவே அன்றையத் தினம் எதிரிகள் மிகவும் உத்வேகத்துடன் தாக்கினதைக் குறித்து அவர் ஆச்சரியப்படவில்லை. அவரைச் சுற்றிலும் எதிராளியின் ஏவுகணைகள் தாக்கிக் கொண்டிருந்தன. ஓர் ஏவுகனை அவருக்கு நேராக வந்து கொண்டிருந்தது. சரி அதுதான் அவரது முடிவு என்று எண்ணினார்.

அந்த ஏவுகணை அவரைத் தாக்கப் போகும் சமயத்தில், அருகில் இருந்த அவருடைய சிநேகிதரில் ஒருவர், அவரை அருகில் இருந்த சகதி நிறைந்த குழியில் தள்ளிவிட்டான். இருவரும் அந்த ஏவுகணை பலத்த சத்தத்துடன் வெடிக்கப்போகின்றது என்று காத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் எந்த வெடி சத்தமும் கேட்கவில்லை. அதை வெடிக்கவைக்கும் ப்யூஸ் கருவி சரியாக வேலை செய்யாததால், அது வெடிக்கவில்லை. அது தோல்வியில் முடிந்தது.

அடுத்த ஐந்து மணி நேரத்திற்கு ஜிம் அந்தக் குழியிலேயே இருந்தார். நடுங்கிக் கொண்டே, இத்தனை நாட்கள் பயன்படுத்தப்படாமல் இருந்த புதிய ஏற்பாட்டை எடுத்து, மத்தேயுவிலிருந்து வாசிக்க ஆரம்பித்தார். இப்படியாக பதினெட்டு அதிகாரங்களை வாசித்துக்கொண்டிருந்தபொழுது, ஏனெனில் இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்ற (மத்.18:20)ம் வசனத்தை வாசித்தவுடன், வாசிப்பதை நிறுத்திவிட்டார். "அந்த வசனத்தை வாசித்தவுடன், எப்படியாவது நிலைமை சீரடையப் போகிறது என்று உணர்ந்து கொண்டேன்" என்று பிற்காலத்தில் கூறினார்.

இறுதியில் யுத்தத்தில் தப்பி ஜிம் வீடுவந்து சேர்ந்தார். ஐந்து ஆண்டுகள் கழித்து அவரது மனைவியின் பாட்டி திருமதி. ஹேரிஸ் வீட்டிற்கு ஜிம் சென்றார். அங்கு திருமதி ஹேரிஸ் ஓர் ஆச்சரியமான கதையைச் சொன்னார்.

பல ஆண்டுகளுக்கு முன்பாக ஜிம், வியட்நாமில் இருக்கும்பொழுது, ஓர் நாள் இரவு அவர்களுக்கு தூக்கமே வரவில்லை. தூக்கமின்மை மட்டுமல்ல, மனதில் திகில் வேறு. ஜிம் ஏதோ ஓர் பயங்கரமான ஆபத்தில் இருப்பதாகவும், அவருக்கு அவசர ஜெப உதவி தேவையாக இருப்பதாகவும் உணர்ந்தார். அவள் முழங்கால் படியிட்டு ஜெபிக்க விரும்பினாள். ஆனால் அவளது ஆர்திரைட்டிஸ் பிரச்சனையினால் முழங்கால் போட்டு ஜெபிக்க இயல வில்லை. அதற்குப் பதிலாக அவள் தரையிலே விழுந்து, வேதத்தை வாசித்து ஜெபித்து மீதியான இரவைக் கழித்தாள். அடுத்த நாள், காலைத் தியானத்தில், "அல்லாமலும் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப் போகிற எந்தக் காரியத்தை குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் இரண்டுபேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலேயே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலேயே இருக்கிறேன்" என்ற மத்.18:19–20 வசனங்களை வாசித்தார்.

"இரண்டுபேர் பூமியிலே ஒரு மனப்பட்டிருந்தால்" என்ற வார்த்தைகளைப் பார்த்தவுடன், வேறு யாராவது ஒருவரை தன்னுடன் கூட ஜெபத்திற்குச் சேர்த்துக்கொள்ள தீர்மானித்தாள்.

அடுத்த நாள் அதிகாலையில் அவளுடைய ஞாயிறு பள்ளி ஆசிரியரை எழுப்பி அவளோடு கூடச் சேர்ந்து ஜிம்மிற்காக ஜெபிக்க வரும்படி அழைத்தாள்.

மத்.18:19–20 கூறப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களை தங்களுக்கு உரிமையாக்கி இருவரும் ஜிம்மிற்காக ஜெபிக்கலானார்கள்.

ஜிம் மிக ஆச்சரியத்துடன் அக்கதையைக் கேட்டான். ஆனால், அந்த அருமைத் தாயார் தன் வேதாகமத்தைத் திறந்து, அந்த வேத பகுதியைக் குறித்து வைத்திருந்ததைக் காண்பித்ததோடு, மத்.18ல் உள்ள அந்த வசனத்தின் அருகில் "ஜிம் 1968 பிப்ரவரி 28" என்று குறித்து வைத்திருந்ததைப் பார்த்தவுடன் ஜிம்மின் வியப்பு இன்னமும் அதிகமாகியது.

6

பதில் சரியான நேரத்தில் வருகிறது

காலம் கடந்து விடுமோ என்று எண்ணும் தருணத்தில், ஒரு வினாடிக்கு முன்பு தேவனுடைய பதில் வருகிறது

"அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும் போதே நான் கேட்பேன்" ஏசா.65:24.

பத்தே வினாடிகள் மட்டும் தான் இருந்தது. ஆனால் கூடைப்பந்து முக்கிய ஆட்டக்காரர் எந்தவிதமான பதற்றமும் இன்றி அமைதியாக பந்தைத் தட்டிக் கொண்டே அந்த மைதானத்தில் நடந்து கொண்டிருந்தார். அவர் என்ன செய்கிறார்? ஆனால் அவர் ஓர் திட்டம் வைத்திருந்தார்.

ஐந்து, நான்கு, மூன்று, அவர் இருமுறை எதிர் தரப்பு ஆட்டக்காரரை தவிர்த்து, தன் பந்தைக் கூடைக்குள் தூக்கி எறியும் வண்ணமாக உயரக் குதித்தார்.

இரண்டு, ஒன்று, பந்து சரியாக கூடைக்குள் விழுந்தது. மணியும் அடித்தது. வெற்றியும் கிடைத்தது.

அந்த விளையாட்டு வீரர் சிரித்தார். அவர் அந்த வெற்றிக்கான, கடைசி பந்து எறிவதைப் பற்றி தெளிவான திட்டம் கொண்டிருந்தார்.

அவருக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. தேவன் தான் காலத்தை உண்டாக்கினவர் என்றும், அவர் காலத்தை கடந்தவராகவும் இருக்கிறார் என்பதையும் நாம் சில நேரங்களில் மறந்து விடுகிறோம். நமக்கு எப்பொழுது என்ன தேவை என்பதை அவர் நன்கு அறிந்திருக்கிறார். நமது ஜெபத்திற்கு

இறுதி நேரத்தில் அவர் பதில் கொடுப்பதற்காக, அவர் காத்திருக்கும்பொழுது நாம் மிகவும் பதற்றமடைந்து விடுகிறோம். அவர் ஏன் அப்படிச் செய்கிறார்? நம்மைக் கவலைக்குள் ஆழ்த்த வேண்டும் என அவர் விரும்புகிறாரா?

இல்லை நாம் அவரை முழுவதுமாக நம்ப வேண்டும் என விரும்புகிறார். வானத்திலிருந்து மன்னா விழுந்ததை இஸ்ரவேலர்கள் பார்த்த நாளிலிருந்து, மக்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களைச் சேர்த்து வைக்க வேண்டுமென விரும்புகிறார்கள். ஆனால் இன்று வரை மனிதருடைய விருப்பம் பூர்த்தியாக்கப்படவில்லை. சிறிது மன்னாவைச் சேர்ந்து வைத்தால், மழை பெய்யும் நாட்களில் அதை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று எண்ணுகிறோம். ஆனால், அது, மறுபடியும் மறு நாளும் நம்மை தேவனைச் சார்ந்திருக்க வழி நடத்துகிறது.

தேவன், அனுதினமும், ஒவ்வொரு வினாடியாக நம்மை ஆசீர்வதிக்கிறார். அவருடைய "கிருபைகள் காலைதோறும், புதியவைகள்". அவர் "அனுதின மன்னாவால்" நம்மை போஷிக்கிறார். கடைசி வினாடிவரை சில நேரங்களில் அவர் செயல்படாமல் காத்திருக்கிறார் என நமக்குத் தோன்றலாம். ஆனால், இறுதி வெற்றிக்கான திட்டத்தை அவர் வைத்துள்ளார். சந்தேகமே வேண்டாம்.

கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும்,
என் கூப்பிடுதல் உம்மிடத்தில் சேர்வதாக, என் ஆபத்து நாளிலே
உமது முகத்தை எனக்கு மறையாதேயும்.
உம்முடைய செவியை என்னிடத்தில் சாயும்.
நான் கூப்பிடுகிற நாளிலே எனக்குத் தீவிரமாய்
உத்தரவு அருளிச்செய்யும்

(சங்.102:1–2).

மேகத்தால் காக்கப்பட்டோம்

ராணுவ வீரர்கள், தாங்கள் மறைந்திருந்த காட்டுப் பகுதியை விட்டு வெளியே வந்தவுடன் ஜெர்மானியர்களின் எந்திரத் துப்பாக்கிகளிலிருந்து குண்டுமழை பொழிந்தது. ஆயினும் அந்த வீரர்கள் அந்தத் திறந்த வெளியைக் கடந்து செல்ல வேண்டி இருந்தது. மிக அதிக வேகத்துடன் அதைக் கடந்து

செல்கையில் அநேக உயிரிழப்பு நேரிட்டாலும், அவர்கள் அந்தத் திறந்த வெளியைக் கட்டாயமாகக் கடந்து செல்லவேண்டும்.

1945 மார்ச் மாதம், ஐக்கிய அமெரிக்க நாட்டின் 35வது பிரிவின் 137வது காலாட் படையினர் 14 கம்பெனி வீரர்கள் ஆகியோர் ஜெர்மனியில் உள்ள ரைன்லாண்ட் பகுதியில் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதியை கடந்து சென்று கொண்டிருந்தார்கள். ஓசன் பர்க் என்ற பட்டணத்தை அவர்கள் பிடிக்க வேண்டும் என்ற கட்டளையை அவர்கள் பெற்றிருந்தார்கள். அந்தக் காட்டுப் பகுதியை அவர்கள் கவனமாகக் கடந்து சென்று கொண்டிருந்தபொழுது அவர்களுக்குமுன் சென்று கொண்டிருந்த படைவீரர் கூட்டத்தை ஜெர்மானியர்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டதாகக் தகவல் வந்தது. 1ம் கம்பெனி அதற்கு மாற்றாகச் சென்றது.

இருபத்தி நான்கு வயதான ஸ்பென்சர் ஜனவரி என்ற தளபதி கீழ்க்கண்ட கதையைச் சொல்லுகிறார். "என்னுடை கம்பெனி படைவீரர்கள் அந்த இடத்தை அடைந்தபொழுது, அந்த பயங்கரமான காட்சியைக் கண்டு அதிர்ந்தே போய்விட்டேன். அந்தக் காட்டின் எல்லைப் பக்கமாக இருந்த கல்லினால் ஆன ஓர் பெரிய வீட்டின் பின் பக்கம் ஒளிந்திருந்த ஒரு சில வீரர்கள் மட்டும் இரத்தக் காயங்களோடு தப்பி இருந்தனர். ஓசன்பர்க்கிற்குச் செல்லும் வழி முழுவதுமாக வேலி போட்டு அடைக்கப்பட்டிருந்தது." எந்திரத்துப்பாக்கியினால் அவர்கள் அந்த எல்லைக்குள் கட்டுப்படுத்தப் பட்டிருந்தனர். துப்பாக்கியினால் சுடும் வீரர்களையும் அவர்களால் மேற் கொள்ள இயலவில்லை. அந்த ஜெர்மானிய வீரர்கள் ஒளிந்து கொண்டிருந்த இடம் ஒரு மலையினால் சூழப்பட்டிருந்தபடியினால் யாராலும் ஊடுருவ முடியாத இடமாக இருந்தது. அந்தத் திறந்த வெளியை அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தளபதிகள் தாண்டிவிட்டால், அவர்கள் செல்லவேண்டிய ஓசன்பர்க்கை அடையலாம். ஆனால் அது மிகவும் ஆபத்தான செயலாகும். அவர்களில் எத்தனைபேர் எந்திரத் துப்பாக்கி சூட்டின் முன் நிற்க இயலும்? ஸ்பென்சர் ஜனவரி, அந்த இடத்திலிருந்து தப்பித்து அவருடைய மனைவியை யும் அவரது ஐந்து மாத மகனையும் ஒருக்காலும் காண இயலாது என ஸ்பென்சர் ஜனவரி எண்ணினார். நிலைமை மிகவும் மோசமாக இருந்தது.

பின்பு, முன்னேறிச் செல்லும்படி கட்டளை பிறந்தது "தேவனே நீர் ஏதாவது செய்ய வேண்டும். தேவனே தயவு செய்து ஏதாவது செய்யுங்கள்" என்று ஸ்பென்சர் மிக ஊக்கமாக ஜெபித்தார்.

அவர் தன்னுடைய **M.I.** துப்பாக்கியைத் தன் கையில் எடுத்துக்கொண்டு முன்னேறினார். திடீரென ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அதை அவரால் நம்பவே இயலவில்லை. "திடீரென எங்கிருந்தோ மிகப்பெரிய நீண்ட வெண்மை நிறமேகம் வானில் மிதந்து வந்தது". அந்த மேகம் மரங்களுக்கு ஊடாக வந்து, ஜெர்மானியர்கள் ஒளிந்திருந்து துப்பாக்கி சுடும் அந்தப் பகுதியை அப்படியே மறைத்துவிட்டது."

அமெரிக்கப் படைவீரர்கள் காயப்பட்ட தங்களது வீரர்களை இழுத்துக் கொண்டு வெகு வேகமாக அந்தத் திறந்த வெளியைக் கடந்து அடுத்தப் பக்கத்திற்குச் சென்றார்கள். அவர்கள் மரங்கள் அடர்ந்த அந்தப் பகுதியை அடைந்தவுடன் அந்த மரங்களுக்குள் மறைந்து கொண்டார்கள். "கடைசி அமெரிக்க வீரன் உயிர் தப்பும் நோக்கத்துடன் வெகு வேகமாக ஓடி காட்டுக்குள் நுழைந்தான். அடுத்து நடந்ததை என்னால் நம்பவே இயல வில்லை. அந்தக் கடைசி வீரன் பாதுகாப்பான இடத்திற்குள் ஓடிவந்தவுடன், அந்த மேகம் மறைந்து விட்டது. ஒ, அது மறைந்தே போய் விட்டது" என்று ஸ்பென்சன் பிற்காலத்தில் நினைவு கூர்ந்தார். மறுபடியும் சூரியன் பிரகாசமாக உதித்து, அந்த நாள் வெளிச்சமாக இருந்தது. அந்தத் திறந்த வெளியின் மறுபக்கமாக இருந்த காட்டிற்குள் அவர்கள் நுழைந்தவுடன் '*உண்மையாக அது தேவனின் செயல்*' என்று ஸ்பென்சர் நினைத்தார்.

அமெரிக்க வீரர்கள் இன்னமும் அந்த கல்லினால் ஆன வீட்டின் பிறகே ஒழிந்திருக்கிறார்கள் என எண்ணிய ஜெர்மானியர்கள், அமெரிக்கர்கள் இருக்கும் அந்த இடத்தைக் குறித்து தங்களது பீரங்கிப் படையினருக்கு ரேடியோ மூலம் தகவல் அறிவித்தார்கள். ஒரு சில நிமிடங்களில் அமெரிக்க வீரர்கள் ஒளிந்துகொண்டிருந்த அந்தக் கல்லினால் ஆன வீடு பீரங்கிக் குண்டுகளினால் தாக்கப்பட்டு தரைமட்டமானது. இதற்கிடையே அமெரிக்கப் படையினர் பிடிக்க இருந்த அந்தப் பட்டணத்தை நோக்கிச் சென்றார்கள்.

இது ஸ்பென்சர் ஜனவரி செய்த ஜெபத்திற்குப் பதிலா? ஆம், அதே சமயம் மற்றொருவரும் இதற்காக ஜெபித்துக்கொண்டிருந்தார்.

இரண்டு வாரங்கள் கழித்து டல்லாஸிலிருந்த ஸ்பென்சரின் தாயாரிட மிருந்து ஓர் கடிதம் வந்தது. "மார்ச் மாதம் 9ம் தேதி காலையில் நடந்த மிகப்பெரிய சம்பவம் என்ன தெரியுமா? நம்முடைய சபையைச் சேர்ந்த திருமதி. டேங்கர்சிலியை உனக்கு ஞாபகமிருக்கிறதா? அவள் அன்று

அதிகாலையில் என்னை தொலைபேசியில் அழைத்து, அன்று இரவு ஒரு மணிக்கு தேவன் அவளை எழுப்பி," "ஸ்பென்சர் மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் உள்ளான். எழுந்து அவனுக்காக ஜெபி!" என்று கூறினதாகக் கூறினார்கள். ஆகவே அன்று அதிகாலை 6.00 மணிவரை அவர்கள் மணிக்கு போகும் வரைக்கும் அவனுக்காக ஜெபித்தார்கள். அவர்கள் முழங்காலிருந்து ஜெபித்து எழுந்தபொழுது, "தேவனே ஸ்பென்சர் எந்த விதமான ஆபத்தில் இருந்தாலும், அவனை ஓர் மேகத்தால் மூடி மறைத்துக் கொள்ளும் என்று ஜெபித்தார்கள்."

ஸ்பென்சர், திருமதி டாங்கெர்ஸ்லி இருந்த இடத்திறகும் தான் இருந்த இடத்திற்கும் உள்ள நேர வேறுபாட்டைக் கணித்தபொழுது, சரியாக, அவன் அந்த ஆபத்தான திறந்த வெளியைக் கடந்தபொழுதுதான் அவர்கள் ஜெபித்துள்ளார்கள் என்பதை அறிந்துகொண்டான். டல்லாஸிலி காலை 6.00 மணியாகும் பொழுதுதான், நான் எனது படைவீரர்களும் ஓர் மேகத்தால் மூடப்பட்ட நிலையில் எதிராளிகளின் கண்களில் படாமல் தப்பி ஓடினோம். அந்த இறுதி நேரத்தில் தேவன் திருமதி. டாங்கெர்ஸிலியின் ஜெபத்தைக் கேட்டு அந்த மேகத்தைச் சரியான நேரத்தில் அனுப்பி இருந்தார்.

"அந்த வினாடியிலிருந்து எனது ஜெப வாழ்க்கையை அதிகமாய் ஆழப் படுத்தினேன். ஜெபத்தின் வல்லமைக்கு மாற்றாக உலகில் எதுவுமே இல்லை என்பதை அறிந்துகொண்டேன்" என்று ஸ்பென்சர் ஜனவரி எழுதினார்.

ஃபோர்ஜ் பள்ளத்தாக்கில் நடந்த அற்புதம்

1777–1778ன் குளிர்காலத்தில் ஓர் நாள் ஒரு பென்சில்வானியாவைச் சேர்ந்த ஓர் விவசாயி காட்டின் வழியாக நடந்து சென்று கொண்டிருந்த பொழுது, முழங்காலில் நின்ற ஓர் மனிதனைப் பார்த்தார். பயங்கரமான குளிருக்கு பலியாகி, உறைந்துபோன மனிதனின் உடலாக இருக்குமோ என எண்ணினார். இல்லை, அந்த விவசாயி அந்த மனிதனின் அருகில் சென்ற பொழுது, அந்த மனிதன் பேசிக்கொண்டுஇருந்தான். ஆனால் அவனுக்காக அவன் பேசவில்லை. அந்த மனிதன் தனது மனிதர்களுக்கு வழிகாட்டவும் பாதுகாக்கவும் வேண்டுமென தேவனிடம் மன்றாடிக் கெஞ்சிக் கொண்டிருந்தான்.

அந்த விவசாயி முழங்கால் படியிட்டு ஜெபித்துக் கொண்டிருந்த மனிதனை அடையாளம் கண்டு கொண்டான். அது ஜார்ஜ் வாஷிங்டன்.

ஃபோர்ஜ் பள்ளத்தாக்கில் வாஷிங்டனின் படைத்துடுப்புகள் அந்த பயங்கரமான பனிகாலத்தில் தங்கி இருந்தபொழுது, தளபதியான வாஷிங்டன், அடிக்கடி, அந்த ஒதுக்குப்புறத்தில் இருந்த குறுகலான பள்ளத்தாக்கில் வந்து ஜெபிப்பது வழக்கம். அமெரிக்கப் புரட்சியில் அந்த நாட்கள் மிக மிக முக்கியமான நாட்களாக இருந்தது. ஏனெனில் மிகவும், வலுவான, சிறப்பாக பயிற்சி அளிக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் படையினை எதிர்க்க, அமெரிக்க படையினரைக் கூட்டி, பயிற்சி கொடுக்கக வேண்டி இருந்தது. பயங்கரமான குளிரும் அதற்குத் தேவையான பொருட்களின் குறையும் இருந்தாலும், அதன் மத்தியில், தனது படைவீரர்களை உயிரோடே காப்பதற்காக வாஷிங்டன் மிகவும் கரிசனையும் கவலையும் உள்ளவராக இருந்தார். ஆகவே தான் ஜெபத்தில் தேவனைத் தேடினார்.

வாஷிங்டனிற்குத் தெரியாமல் அவரது ஜெபத்தை ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்த ஐசக் பாட்ஸ் என்ற விவசாயி, வாஷிங்டன் போராட்டத்துடன் ஜெபிப்பதைப் பார்த்து, பயத்தோடு கூடிய ஆச்சரியமடைந்தார். பின்பு மெதுவாக அந்த இடத்தைவிட்டு, தன் வீட்டிற்குப்போய் தன் மனைவியைப் பார்த்து, "தேவன் இந்த உலகில் யாருடைய ஜெபத்தையாவது உன்னிப்பாக கவனித்து பதிலளிப்பார் என்றால், நிச்சயமாக அது ஜார்ஜ் வாஷிங்டன் ஜெபமாகத்தான் இருக்கும்" என்று கூறினார்.

வயல் வெளிகளிலும், கடைகளிலுமிருந்து எந்தவித ராணுவப் பயிற்சியுமின்றி கூட்டப்பட்ட ஒழுங்கற்ற கூட்டமாக அமெரிக்க வீரர்கள் இருந்தார்கள் 1777–78ம் ஆண்டின் பனிக்காலம் அவர்களுக்கு ஓர் சோதனைக் காலமாக இருந்தது. ஃபோர்ஜ் பள்ளத்தாக்கு, பிலடெல்பியாவில் இருந்து பதினைந்து மைல்களே இருந்தது. அதனால் எதிராளிகளை இலகுவாக எதிர்க்க வசதியாக இருந்தது. அத்தோடு அந்த பனி காலத்தைக் கழிப்பதற்கு ஏற்றதாகவும் இருந்தது. ஆனால் வாஷிங்கடன் அந்த பனி காலம் மிகக் கடுமையானதாக இருக்கும் என்று எண்ணவு மில்லை, அதைச் சந்திக்க ஆயத்தமாகவும் இல்லை. அவரது படையினருக்கு போதுமான காலணிகள், உடைகள், போர்வைகள், கூடாரங்கள் இல்லை.

குளிர்காலம் தொடர்ந்தபொழுது நிலைமை இன்னமும் மோசமானது

உணவும் பற்றாக்குறை அதிகரித்ததினால் அநேக நாட்கள் வீரர்கள் உணவின்றிக் கழித்தனர். அவர்கள் சாப்பிடுவதற்கு தருணம் கிடைக்கும் பொழுது கால் கப் சாதமும் ஒரு மேஜைக் கரண்டி வினிகருமே அவர்களது உணவாக இருந்தது. ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நான்காயிரத்திற்கு மேலான ராணுவ வீரர்கள், பசியினாலும், பட்டினியினாலும், வியாதியினாலும், சுகாதாரமற்ற சூழ்நிலைகளாலும் பாதிக்கப்பட்டனர். போதிய பாதுகாப்பில்லாத உடையினால் நான்கு பேருக்கு ஒருவராக குளிரினால் இறந்து போனார்கள்.

இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில், வாஷிங்டன் தேவனுடைய பாதுகாவலை நாடினார். "சமயம் கிடைத்த பொழுதெல்லாம், தேவனுடைய ஆசீர்வாதத்தை நாடினார். போதகர் இல்லாத சமயத்தில், அவரே தனது படைத்தலைவர்களை அழைத்து, தன் இருதயத்தை ஜெபத்திலே ஊற்றி விடுவார்" என்று போர்ஜ் பள்ளத்தாக்கில் இருந்த படைத்தலைவர்கள் ஒருவர் வாஷிங்டனைப் பற்றிக் கூறினார்.

அடிக்கடி தன் படைவீரர்களுக்காக ஆகாரத்திற்காக வாஷிங்டன் விண்ணப்பம் பண்ணுவார். "இந்தப் படை பசியினால், மரணத்தினால், அல்லது தங்களைக் காப்பாற்றிக் கொள்ள அடிப்படை தேவைகளைத் தேடி இந்தப் படை நிச்சயமாக அழியப்போகிறது" என பிப்ரவரி மாதத்தில் எழுதினார்.

ஏறக்குறைய ஐந்நூறு குதிரைகள் பட்டினியினால் இறந்து போயின. பூமி உறைந்து விட்டதால், அவற்றின் சடலங்கள் அவர்கள் தங்கியிருந்த இடத்தைச் சுற்றிலுமாக கிடந்து அழுகிக்கொண்டிருந்தன. "படைவீரர்களும், அந்த குதிரைகளின் நிலைமையில் தான் இருந்தார்கள்" என கிறிஸ்டோபர் வார்டு என்ற சரித்திர வல்லுனர் கூறுகிறார். "படையின் ஒரு பகுதி ஒருவார காலமாக எந்த மாமிசமும் இன்றி இருந்தார்கள். மற்றவர்கள் மூன்று நான்கு நாட்கள் அப்படி இருந்தார்கள்" என்று பிப்ரவரியின் மத்தியில் வாஷிங்டன் கூறினார்.

அருகில் உள்ள ஊர்களில் ஆகாரம் கிடைக்குமா என அலசி ஆராயுமாறு நத்தானியேல் கிரீன் என்பவரை வாஷிங்டன் நியமித்திருந்தார். "ஆனால் அவர் சென்ற ஊர்கள் அனைத்தும், காளியாக இருந்தன. அந்தப் பகுதி முழுவதும் சுத்தமாக தானியங்கள் ஏதுமின்றி இருந்தன" என்று கிரீன் வாஷிங்டனிற்கு பதிலளித்தார்.

ஆகாரத்திற்காக வாஷிங்டன் பண்ணின ஜெபத்திற்கு மிக அற்புதமாக

பதில் கிடைத்தது. அமெரிக்கப்புரட்சி என்ற புத்தகத்தில் புரூஸ் லேன்காஸ்டர் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

> மேக மூட்டமான ஓர் நாள் காலையில் ஸ்கைல்கில் ஆறு கொதிப்பது போலக் காணப்பட்டது. பல்லாயிரக் கணக்கான ஷாட் மீன்கள் வழக்கத்திற்கு மாறாக வேண்டிய வழக்கமான காலத்திற்கு முன்பே இடம் பெயர்ந்து தண்ணீரில் நீந்திச் சென்றுகொண்டிருந்தன.
>
> வீரர்கள் தண்ணீரில் மூழ்கி முள் கரண்டிகளினாலும், மண் வெட்டிகளினாலும், மீன்களை வாரி, வாரி கரையிலே எறிந்தார்கள். குதிரை வீரர்கள், தங்கள் குதிரைகளை ஆற்றில் இறக்கி மீன்கள் வெகுதூரத்திற்குச் சென்றுவிடாமல் தடுத்தனர். திடீரென, ஆச்சரியப் படத்தக்கவிதமாக, படை வீரர்கள் அனைவருக்கும் மிக அதிகமான உணவு கிடைத்தது.

"அது வானத்திலிருந்து இறங்கின மன்னாவைப்போல இருந்தது. வீரர்கள் திருப்தியாகச் சாப்பிட்டார்கள். அத்தோடு நூற்றுக்கணக்கான பீப்பாய்களில், உப்பிடப்பட்ட மீன்கள் எதிர்காலத்திற்காகச் சேமித்து வைக்கப் பட்டன" என ஓர் சரித்திர ஆசிரியர் குறித்து வைத்துள்ளார். சரியான நேரத்தில் மீன் அறுவடை கிடைத்தது.

லிவிங்ஸ்டனின் சிங்கம்

குழந்தைகள் தங்களது சிநேகிதர் பாதுகாவலாக இருக்கவேண்டும் என்று விரும்பினார்கள். ஆப்பிரிக்காவைப் பற்றி அறியவேண்டிய அனைத்தையும் அவர்கள் கற்றறிந்திருந்தார்கள். ஆகவே அங்கு வாழ்வது மிகவும் ஆபத்தானது என்று அறிந்திருந்தார்கள். ஆகவே அந்த ஸ்காட்டிஷ் ஞாயிறு பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள், தாங்கள் அனைவரும், ஆப்பிரிக்க தேசத்தின் பூகோள ரீதியான வடிவமைப்பை ஆராயச் சென்றிருந்த மிஷனரியான டேவிட் லிவிங்ஸ்டனுக்கு தாங்கள் அவருக்காக ஜெபிப்பதைப் பற்றி ஓர் கடிதம் எழுதி அத்தோடு சிறிய பண உதவியும் அனுப்பினார்கள். லிவிங்ஸ்டன் அவரைக் கவனித்துக்கொள்ள தனக்கு உதவியாக ஒரு உதவியாளரை நியமிக்கமட்டும் அந்தப் பணத்தை பயன்படுத்தும்படி கேட்டிருந்தார்கள்.

லிவிங்ஸ்டன் தான் பெற்ற பணத்தை செலவளிக்க தனக்கு சுதந்திரம் இருந்தாலும், அந்த ஞாயிறு பள்ளி மாணவர்கள் அவர் மேல் வைத்திருந்த அன்பையும் கரிசனையையும் மதித்தார். ஆகவே மெபால்வ் என்ற ஓர் ஆப்பிரிக்கரை தனக்கு உதவியாளராக நியமித்தார்.

1844 பிப்ரவரி 16ம் தேதி சில ஆப்ரிக்கர்கள் அந்தப் பகுதியில் சிங்கங்கள் நடமாடுகின்றன என்று லிவிங்ஸ்டனிடம் கூறினார்கள். அந்தச் சிங்கங்கள் மிகவும் பொல்லாதவைகள். அவைகள் பகல் நேரத்தில் கூட கால் நடைகளை அடித்துக்கொன்று சாப்பிடும். ஆகவே ஆப்பிரிக்காவில் உள்ள அந்த கிராமமே பயந்து நடுங்கிக்கொண்டிருந்தனர். லிவிங்ஸ்டனும் மெபால்விவும் ஓர் சில ஆப்பிரிக்கர்களுடன் சேர்ந்து சிங்க வேட்டைக்குச் சென்றனர்.

ஓர் சிறிய மலையின் மேல் ஓர் சிங்கத்தைக் கண்டனர். எல்பா ஆப்பிரிக்கர்களும் ஓர் அரைவட்டத்தில் அந்த சிங்கத்தை சூழ்ந்து நின்றார்கள். லிவிங்ஸ்ட்னும் மெபால்வ்வும் மிகவும் எச்சரிக்கையுடன் அந்த சிங்கத்தை நோக்கி நகன்றார்கள். மெபால்வ் முதலில் தன்னுடைய துப்பாக்கியினால் சிங்கத்தை நோக்கிச் சுட்டார். அது அந்த சிங்கம் இருந்த பாறையைத் தாக்கியது. அந்தச் சிங்கம் உறுமிக் கொண்டே, குதித்து எழுந்து, அதைச் சூழ்ந்திருந்த ஆப்பிரிக்கர்களைப் பின் தள்ளி ஓடிவிட்டது.

மேலும் இரண்டு சிங்கங்கள் தென்பட்டன. புதிய வட்டத்தை அவர்கள் உருவாக்கினார்கள். தான் அந்த சிங்கங்களைச் சுட்டால், நிச்சயம் ஒரு ஆப்பிரிக்கர் சுடப்பட்டு விடுவார் என்ற நிலை இருந்ததால், லிவிங்ஸ்டன் அந்தச் சிங்கங்களைத்தாக்க சற்று யோசித்தார். லிவிங்ஸ்டன் அந்த இடத்தைவிட்டு மலையின் மறுபக்கம் வெகுதூரம் சென்று விட்டபடியினால், சிங்கங்களைத் தாக்குவதற்காக வந்திருந்த ஆப்பிரிக்கர்களில் சிலர், தாக்குவதை விட்டுவிட்டார்கள்.

மறுபடியும் அந்த தனிமையான சிங்கத்தை லிவிங்ஸ்டன் கண்டார். லிவிங்ஸ்டன் சரியாக குறிவைத்து தனது இரட்டைக் குழல் துப்பாக்கியினால் அந்தச் சிங்கத்தை நோக்கிச் சுட்டார் அவர் குறி தவறாமல் சிங்கத்தைத் தாக்கினார். ஆனால் அந்தச் சிங்கம் இறந்து போகாமல், காயங்கள் மட்டும் பட்டு தப்பிவிட்டது. அவர் மறுபடியும் தன் துப்பாக்கியில் குண்டுகளைப் போட ஆயத்தமானபொழுது, ஓர் சத்தத்தைக் கேட்டார். அவர் சுற்றிமுற்றி பார்த்த பொழுது அந்தப் பெரிய சிங்கம் அவர் மேல் பாய அவரை நோக்கி வந்தது. அந்த சிங்கத்தின் தாடை லிவிங்ஸ்டனின் இடது தோள் பட்டையில் பதிந்தது.

அவர் தோள் பட்டை எலும்பு நொறுங்கிவிட்டது. ஓர் நாய் ஓர் எலியைக் கவ்வி எப்படி குதறுமோ அதுபோல அந்தச் சிங்கம் லிவிங்ஸ்டனைக் கவ்விக் குதறியது என பின்பு அவர் எழுதினார். நடப்பதெல்லாவற்றையும் அவர் சுய மதியோடு கவனித்துக் கொண்டிருந்தாலும், மன அதிர்ச்சியில் இருந்தார்.

அந்தச் சிங்கத்தின் பாதம் அவரது தலையின் பின் பக்கத்தில் தாக்க ஆயத்தமாக இருந்தது. அந்தச் சமயத்தில், பத்து அல்லது பன்னிரண்டு கெஜ தூரத்தில் நின்றுகொண்டு மெப்பலாவ் அந்த சிங்கத்தை நோக்கி குறிவைத்துக் கொண்டிருந்தான். அவன் அந்த சிங்கத்தைச் சுட்டபொழுது, அந்தச் சிங்கம் லிவிங்ஸ்டனை தாக்குவதை நிறுத்திவிட்டு மெப்பலாவை நோக்கிப் பாய்ந்தது. இறுதியில் அந்தச் சிங்கம் பட்ட துப்பாக்கிக் காயத்தினால் அது இறந்து விழுந்தது. மற்றச் சிங்கங்கள் புதர்களுக்குள்ளாக மெதுவாக மறைந்துவிட்டன.

லிவிங்ஸ்டனிற்கு சிங்கத்தினால் ஏற்பட்டக் காயங்கள் மிகவும் ஆழமாகவும் மிகவும் வலி கொடுப்பதுமாக இருந்தன. அவர் தன் வாழ்நாள் முழுவதிலுமே அந்தக் காயப்பட்ட தோள்பட்டையின் பாதிப்போடுதான் கழித்தார். மெப்பலாவிற்கும் ஸ்காட்லாண்டு நாட்டில் இருந்த ஞாயிறு பள்ளி மாணவர்களின் ஜெபத்திற்கும் மிகவும் நன்றியுள்ளவராக இருந்தார். ஆப்பிரிக்கா தேசம் முழுவதும் மேலும் ஆராய வேண்டிய பொறுப்பு லிவிங்ஸ்டனிற்கு இருந்தது.

சில நேரங்களில், தேவன் நமது ஜெபத்திற்கு நாமே பதிலளிக்க வேண்டுமென விரும்புகிறார். அதாவது நமது ஜெபங்களுக்குத் தேவன் தரும் பதில்களில் நாமும் பங்குபெறவேண்டுமென விரும்புகிறார். ஆம் தேவன் அற்புதங்கள் செய்கிறார். ஆனால் சில நேரங்களில் நம்மூலமாக அதைச் செய்ய விரும்புகிறான். அந்த ஸ்காட்லாண்டு நாட்டுச் சிறுவர்கள் அதை நன்கு அறிந்திருந்தார்கள். லிவிங்ஸ்டனின் பாதுகாப்பிற்காக அவர்கள் ஜெபித்ததோடு, அதற்காக அவர்கள் உதவித் தொகையும் அனுப்பி இருந்தார்கள். சரியான நேரத்தில், தேவன் அச்சிறுவர்களின் ஜெபத்தையும், அவர்களது உதவித்தொகையையும், மிகவும் சுறுசுறுப்புடன் செயல்பட்ட ஓர் உதவி யாளரையும் பயன்படுத்தி, ஆப்பிரிக்க நாட்டின் ஆரம்பகால மிஷனரியைக் காத்துக்கொண்டார். அதன் விளைவாக லிவிங்ஸ்டன் மேலும் முப்பது ஆண்டுகள் உயிரோடு இருந்து, ஆப்பிரிக்கா தேசம் முழுவதும் கிறிஸ்துவின் சுவிசேஷம் பரவ வழிவகுத்தார்.

ஹெர்னியா பட்டணம் மீட்கப்படல்

1987ல் ஐம்பத்தைந்து வயதுடைய டாக்டர் ஹெரால்ட்டு அடால்ப், சிக்காக்கோ நகரத்தின் வெளிப்புறப் பகுதியில் மிகவும் வசதியுடன் செய்து கொண்டு வந்த தனது மருத்துவத் தொழிலை விட்டுவிட்டார். ஏன்? ஏனெனில், சகாராப் பாலைவனத்தின் தெற்கு எல்லையில், போதுமான பணியாட்கள் கூட இல்லாத, சரியான மருத்துவ வசதிகள் அற்ற ஓர் மருத்துவமனையில் பணி செய்ய தேவன் தன்னை அழைப்பதை உணர்ந்தார்.

சூரிய வெப்பத்தினால் சுட்டெரிக்கப்பட்ட நிலையிலும் தூசியினால் நிறைந்த பட்டணமாகிய ஹல்மி நகரில் நூறு படுக்கைகளை உடைய மருத்துவமனையில் அடால்ப் தன்னால் என்னென்ன அறுவை சிகிச்சை செய்ய முடியுமோ அவை அனைத்தையும் செய்தார். முன்பு குறிப்பிட்ட சில அறுவை சிகிச்சைக்கான சிறப்புப் பயிற்சிகள் செய்துள்ளார். ஆனால், இங்கோ அவர் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் அனைத்து அறுவகை சிகிச்சையும் செய்யவேண்டி இருந்தது. ஒரு நாளைக்கு அவர் ஒன்று அல்லது இரண்டு அறுவை சிகிச்சைகள் செய்யவும் மாதத்திற்கு நாற்பது என்று செய்ய பழகியிருந்தார். காட்டராக்ட் நீக்குதல், முது கெலும்பில் எலும்புகளின் இணைவு, குடல் இறக்கம், பெரிய கட்டிகளை நீக்குதல் இன்னும் பல அறுவை சிகிச்சை செய்து வந்தார்.

மெலிந்த, ஆறடி உயரமுடைய ஹெரால்ட் அடால்வ்வும் அவரது மனைவி போன்கி ஜோவும் நிகர் என்ற அந்தப் பட்டணத்தின் மத்திய பகுதிக்கு வந்தபொழுது, அந்தப் பட்டணம் உள் நாட்டுக் கலகத்தினாலும், அரசியல் குழப்பத்தினாலும் பாதிக்கப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல ஹல்மி மருத்துவ மனையில் போதுமான அளவிற்கு பணியாட்கள் இல்லை. இருந்தவர்களும், அதிகச் சம்பளம் கேட்டு, அடிக்கடி வேலை நிறுத்தம் செய்து வந்தனர். அடால்புடன் பணிசெய்து வந்த நான்கு மருத்துவர்களும், ஆறு தாதிமாரும், ஒரு நாளிற்கு சராசரி, நானூறு நோயாளிகளுக்கு சிகிச்சை கொடுத்து வந்தனர். அநேக நோயாளிகள் வெகு தூரம் கால் நடையாக பல நாட்கள் நடந்தோ அல்லது அவர்களது உறவினர்களால் சுமந்து வரப்பட்டோ மருத்துவமனைக்கு வருவார்கள். வேறு சிலர், கழுதையின் மீதோ, அல்லது மாட்டு வண்டியின் மூலமாகவோ, பாலைவனங்களில் செல்லக்கூடிய டாக்ஸிகள் மூலமாகவோ அல்லது ஒட்டகங்கள் மீது ஏறியோ வருவார்கள்.

“அந்த பாலைவனப் பகுதியில் செய்யப்பட்டும் அறுவை சிகிச்சையில், உள்ள கஷ்டம் என்னவென்றால், வெப்பநாடுகளில் ஏற்படும் தொற்று நோய்களால் நோயாளிகள் எளிதில் பாதிக்கப்படுவார்கள். ஆகவே அதற்கான, சிறப்பான அறுவை சிகிச்சை முறையைக் கையாள வேண்டியிருந்தது” என அடால்ப் கூறினார். உதாரணமாக டைபாய்ட் காய்ச்சலால் சிறு குடலில் துளை விழுந்துவிடும், அற்கான அறுவை சிகிச்சை உடனே தேவைப்படும். அது ஏற்ற சமயத்தில் கவனிக்கப்படாததால், அநேக நோயாளிகள் குடல் பின்னலினால் ஏற்பட்ட குடல் இறக்கத்தோடு வருவார்கள். குறைந்த நாட்கள் ஹல்மி மருத்துவமனையில் பணி செய்ய வந்திருந்த மருத்துவர் ஒருவர் ஹல்மி மருத்துவமனையை “குடல் இறக்க மருத்துவமனை” (ஹெர்னியா மருத்துவமனை) என்று பெயரிட்டார். சில சமயங்களில் உடைந்துபோன எலும்புகளை குச்சிகளாலும், கயிறுகளாலும் கட்டி மாந்திரீக மருத்துவர்கள் செய்த தவறுதலான கிசிச்சையைச் சரிசெய்ய உடைந்த எலும்புகளைச் சரியான முறையில் சரிசெய்யும் அறுவை சிகிச்சையை செய்யத் தேவைகள் வரும்.

அடால்ப் வந்த சில மாதங்களுக்குள்ளாக, அந்த மருத்துவமனையை மூடக் கூடிய நிலைமை ஏற்பட்டது. மற்ற பிரச்சனைகளோடு, அந்த மருத்துவ மனையின் தேவைகளைச் சந்திப்பதற்கு அதிக பொருளுதவி தேவைப்பட்டது. போதுமான பணத் தேவையை சந்திப்பதற்கு வேறு வழியே இல்லை.

ஆயினும், எப்படியாவது அந்த மருத்துவமனையை மூடாமல் நடத்தப்படுவதற்கு தேவன் உதவி செய்வார் என அடால்ப் நம்பினார். “புதிதாக கட்டப்பட்டிருந்த மூன்று அறுவை சிகிட்சை அறைகளுக்குள் அப்பொழுது தான் சென்றிருந்தோம். அவைகளின் தேவைகள் சரியான முறையில் சந்திக்கப்படவில்லை. அத்யாவசியத் தேவைகள் அநேகம் இருந்தன” என்று அடால்ப் பின்னால் நினைவு கூர்ந்தார். பழையகாலத்து அறுவை சிகிட்சை மேஜைகளை மாற்றியமைக்கத் தேவை இருந்தது. ஆக்சிஜன் சிலிண்டர்கள், மயக்க மருந்து கொடுக்கும் கருவிகள் தானியங்கு இரத்த அழுத்த மெஷின் என பல வேறு தேவைகள் இருந்தன. இந்தக் கருவிகளை வாங்குவதற்கு எங்களிடம் தேவையான பணம் இல்லை. அங்கு வந்த மக்கள் ஆர்வத்தோடு சுவிசேஷத்திற்கு செவி கொடுத்தார்கள். ஆகவே சாத்தானானவன் எங்களது இந்த வேலையைத் தடைபண்ண எண்ணினான். “நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே. இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக

ஜனங்கள் உண்டு'' என்ற (அப்.18:9–10) வசனங்கள் மூலம் தேவன் என்னோடு கூடப் பேசினார்.

அறுவை சிகிட்சை செய்யுமுன்பு, அந்த நோயாளியோடு கூட இணைந்து ஜெபிக்கும் பழக்கத்தை அடால்ப் அநேக ஆண்டுகளாக பழக்கப்படுத்தியிருந் தார். அந்தப் பழக்கமே, அவரது ஜெபத்திற்ககு மிக ஏற்ற தருணத்தில் பதில் கிடைக்கத்தக்க வழியாக இருந்தது.

அவர் ஆப்பிரிக்காவிற்குச் செல்லுவதற்கு அநேக ஆண்டுகளுக்குமுன் அமெரிக்க ஐக்கியநாட்டில் ஓர் பெண்ணிற்கு பித்தப்பையில் உள்ள ஓர் கல்லை எடுக்க வேண்டியிருந்தது. அடால்ப் அறுவை சிகிட்சைக்கு முன் அந்தப் பெண்ணுடன் கூடச் சேர்ந்து ஜெபித்தார். அடால்ப்பிற்கு அது வழக்கமான ஓர் அறுவை சிகிட்சையாக இருந்தது. ஆனால் அந்தப் பெண்ணிற்கு அப்படியாக இருக்கவில்லை. அவள் நன்கு சுகமானபின்பு, ஒருநாள் தானே செய்த ரொட்டிகளை அடால்ப்பிற்கு நன்றி செலுத்தும் வண்ணமாகக் கொண்டுவந்து கொடுத்தாள். அவள் திருமணமாகாத முன்னாள் கன்னியாஸ்திரீயாகவும் ஓர் பள்ளி ஆசிரியராகவும் இருந்தார். பிற்காலத்தில், அவளது உறவினர்கள் சிலரோடு அவளுக்கு ஏற்பட்ட சில மனக் கசப்புகளால், அவர்களது பெயர்களை தனது உயிலிலிருந்து எடுத்துவிட்டு, தனக்கு மிகவும் பிடித்தமான மருத்துவர் பணி செய்து வந்த ஹைகரில் இருந்த ஹல்மி மருத்துவமனைக்கு தனது மிகப்பெரிய பண்ணையில் பாதியை எழுதி வைத்துவிட்டாள்.

அந்தப்பெண் 1996ல் மரித்துவிட்டாள். இந்த சமயத்தில் தான் ஹல்மி மருத்துவமனை மூடப்படக்கூடிய தருணத்தில் இருந்தது. அவள் உயிலில் ஹல்மி மருத்துவமனைக்காக எழுதி வைத்திருந்த பத்து லட்சம் டாலர் மிகச் சரியான நேரத்தில் அடால்ப்பிற்கு வந்த கிடைத்தது. மருத்துவமனைக்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும் வாங்க அந்தப் பணம் போது மாக இருந்தது. டாக்டர் அடால்ப்பின் ஜெபங்களுக்கும் மிக ஆச்சரியப் படத்தக்க முறையில் பதில் கிடைத்தது. ஹல்மி மருத்துவமனையை திறந்து வைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

தற்பொழுது, ஓய்வு பெற்ற நிலையில் டாக்டர் அடால்ப், வருடத்திற்கு ஐம்பதாயிரம் மைல்கள் பயணம் செய்து பல பகுதிகளுக்கும் சென்று மருத்துவர்கள், மருத்துவ மாணவர்களையும் சந்தித்து, அவர் செய்ததுபோல,

நங்களைக் கர்த்தருக்கென்று ஒப்புவித்து கடல் கடந்து சென்று தேவையுள்ள இடங்களில் பணி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறார். மெல்லிய நகைப்போடு கூட "சம்பளமும் ஓய்வூதியமும் இந்த உலகத்தில் இருந்து கிடைப்பவை" என்று கூறுவார்.

ரிக்கன் பேக்கரும் கடற்பறவையும்

எடி ரிக்கன் பேக்கர் என்ற போர் விமான பைலட் அமெரிக்காவில் உள்ள அனைத்து போர் விமான பைலட்களிலும் தலை சிறந்தவராகத் திகழ்ந்தார். ஒரு காலத்தில் பந்தயக் கார் ஓட்டுவதைத் தன் தொழிலாகக் கொண்டிருந்தார். இருபத்தி ஆறு வயதான அவரை ஆரம்ப நாட்களில் போர்விமானம் ஓட்டுவதற்கு சற்று வயது முதிர்ந்தவர் என தள்ளப்பட்டவராக இருந்தாலும் முதல் உலகப்போரில், இருபத்தி இரண்டு ஜெர்மானிய விமானங்களையும் நான்கு உளவு பலூன்களையும் சுட்டு வீழ்த்தி அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைசிறந்த விமானியாகத் திகழ்ந்தார்.

உலகப்போருக்குப் பின் ரிக்கன் பெக்கர் ஓர் மோட்டார் வண்டி தொழிற்சாலைக்கு சொந்தக் காரரானார். பின்பு ஈஸ்ட்டர்ன் ஏர்லைன்ஸ் என்ற விமானக் கம்பெனியை விலைக்கு வாங்கி அதன் பிரசிடெண்ட் ஆகவும் மேனேஜராகவும் ஆனார். முத்துத் தீவு ஜப்பானியர்களால் தாக்கப்பட்டவுடன் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இரண்டாம் உலகில் ஈடுபட வேண்டியது இருந்தது. போரில் அனுபவமிக்க விமான ஓட்டிகள் மிக அத்யாவசிமாகத் தேவைப்பட்டனர். அப்பொழுது ஐம்பது வயதைத் தாண்டியிருந்த ரிக்கர் பேக்கரும் போரில் சேவை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. உடனே ஐஸ்லேண்டு, இங்கிலாந்து, தெற்கு பசிபிக் நாடுகள் ஆகியவற்றிற்கான சிறப்புப் பொறுப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டது.

1942ல் நியூ கினியாத் தலைமையகமாகக் கொண்டு, செயல்பட்டு வந்த ஜெனரல் டக்லஸ் மெக்கார்த்தர் அவர்களுக்கு மிக முக்கியமான செய்தியை எடுத்துச் செல்ல ரிக்கர்பேக்கர் தெரிந்தெடுக்கப்பட்டார். தெற்கு பசிபிக் தீவுகளின் மேல் விமானம் பறந்து சென்றபொழுது, விமான ஓட்டி தன் பாதையைத் தவறவிட்டுவிட்டார். அதனால் ரேடியோ தொடர்பு எல்லையை விட்டு வெளியே சென்று விட்டார். விமானத்தில் எரிபொருள் குறைய

ஆரம்பித்துவிட்டது. ஆகவே அவர்களது 13–17 என்ற விமானத்தை சமுத்திரத்தில் இறக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மூன்று கட்டு மரங்களில் அந்த விமானத்தில் இருந்த எட்டுப்பேரும் விஸ்தாரமான அந்த பசுபிக் மகா சமுத்திரத்தில் மிதந்து கொண்டிருந்தனர். இரவு நேரங்களில் அவர்களது கட்டு மரங்களை, சுறாமீன்கள் வந்து தாக்கின, பகல் நேரங்களில் அவ்வவ்பொழுது வந்த புயல்களிலிருந்தும் கருமையான சூரிய வெப்பத்தில் இருந்தும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள கட்டு மரத்திலிருந்தவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருந்தனர். எட்டு நாட்களுக்குப்பின், அவர்கள் உயிர் வாழத் தேவையான உணவுப் பொருட்கள் தீர ஆரம்பித்தது. தாகத்தினால் இறந்து போய் விடுமோ என எண்ணினார்கள். அவர்கள் காப்பாற்றப் படுவதற்கு எந்தவித வழியுமே தெரியவில்லை. இப்பொழுது அவர்களைக் காப்பாற்ற ஓர் அற்புதம் நிகழ்ந்தால்தான் அவர்கள் தப்பிக்கலாம்.

ஆகவே, அவர்கள் ஜெபிக்க ஆரம்பித்தார்கள். கேப்டன் செர்ரி ஓர் ஜெபப் புத்தகம் வைத்திருந்தார். அதிலிருந்து அவர் ஒவ்வொரு நாள் மத்தியான வேளையிலும் ஆராதனை நடத்தி வந்தார். ஆனால் அந்த கடுமையான வெப்பம் நிறைந்த பசிபிக் கடல் காற்று, கட்டு மரத்தில் இருந்தவர்களை மிகக் களைப்படைய வைத்தது. அனைவரும் மிகவும் மனம் தளர்ந்து சோர்ந்து போனார்கள். நாட்கள் வாரங்களாக மாறின.

பிற்காலத்தில், சார்கண்ட ஜான்னி பார்டெக் அந்த நாட்களில் அவர்கள் கடந்து சென்ற மிகப் பயங்கரமான அனுபவங்களை நினைவு கூர்ந்தார்.

> கடவுளுடைய இரக்கத்தையே நம்பி, கட்டு மரங்களில் இருந்த நாங்கள், இனிமேல், கடவுளிடமிருந்து எந்த உதவியும் பெறத் தகுதியான நிலையில் நாங்கள் இல்லை என்பதை உணர்ந்தோம். ஒவ்வொரு நாளும் எங்களது பாவங்களை ஒருவரிடம் ஒருவர் அறிக்கையிட்டோம். தேவனிடமும் அறிக்கையிட்டோம்.
>
> பின்பு ஜெபித்தோம் தேவன் பதில் கொடுத்தார். அது மிகவும் உண்மை. எங்களுக்கு தண்ணீர் தேவையாக இருந்தது. தண்ணீருக் காக ஜெபித்தோம். எங்களுக்குத் தேவையான தண்ணீர் கிடைத்தது. மீன் கேட்டோம். மீன் கிடைத்தது.

பின்பு அவர்கள் இறைச்சிக்காக ஜெபித்தார்கள். மீட்கப்படுவதற்காக வில்லியம் செர்ரி ஜெபித்து முடித்தவுடன், அவர்கள் ஓர் ஸ்தோத்திரப்

பாடலை பாடினார்கள். இந்த நிலைமையிலும் அந்த மக்கள் தேவனைத் துதித்துப் பாடினதைக் குறித்து ரிக்கன் பேக்கர் ஆச்சரியப்பட்டாலும், அவர்களோடு சேர்ந்து பாடலானார். பாடலிற்குப்பின் அவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருந்தபொழுது, ரிக்கன் பேக்கர் தனது தொப்பியை இழுத்துவிட்டு தனது கண்களை மூடிக்கொண்டு உறங்க ஆரம்பித்தார். தேவன் விரைவில் ஏதாவது செய்யவேண்டும் அல்லது நாம் அனைவரும் மரித்துவிடுவோம் என தனக்குள் சொல்லிக்கொண்டார். அதை அரை குறையான ஜெபம்.

திடீரென தன் தலைமீது ஏதோ கனமாக இருப்பதை உணர்ந்தார். அது அவரது தலையைச் சுரண்டியதுபோல இருந்தது. அவளுக்கு பயித்தியம் பிடித்துவிட்டதோ என எண்ணினார். இல்லை, ஓர் கடற்பறவை என் தலையின் மேல் வந்து உட்கார்ந்ததோ என எண்ணினார். கடற்பறவையா? அதுவும் நடுச்சமுத்திரத்திலா? இருக்கவே இருக்காது. கடற்பறவைகள் கடற்கரையில் வாழும் பறவைகளாகும். "நடுக்கடலில் வாழ்வதற்கு அவை தகுதி இல்லாதவைகள், ரிக்கன் பேக்கர் தனது தொப்பியைத் தூக்கிவிட்டு விட்டு கூர்ந்து பார்த்தபொழுது, அருகில் இருந்த ஒருவர் இவரை முனந்துப் பார்த்தார். இல்லை அந்தப் பறவையைப் பார்த்தார். அந்தப் பறவை வேகமாகப் பறந்து போகுமுன்பு அதைப் பிடிக்கவேண்டும் என்பதை அறிந்தார். தனது விரல்களை நீட்டி, தன் கரங்களால் மிக வேகமாக அந்தப் பறவையைப் பிடித்தார். அந்தக் கடற்பறவை தன்னைத் தப்புவித்துக்கொள்ள அதிகமாக முயன்றது. ஆனால் ரிக்கன்பேக்கர் அதை சிறுகப்பிடித்துக் கொண்டார். அந்தக் கட்டுமரம் இங்கும் அங்கும் ஆடியது அவருக்கு அருகில் இருந்த மனிதர்களும் அந்தப் பறவையைப்பிடிக்க முயன்று கொண்டிருந்தார்கள். ஒரு சில வினாடிகளில் க்ரீச்சிட்டு கத்தின அந்தப் பறவையைப் பிடித்து கட்டுமரத்திற்குள் போட்டார்கள். அந்தப் பறவையை அவர்கள் உணவாக உண்டு, அதன் குடற்பகுதிகளை மீன்களைப்பிடிக்கும் பொறியாக வைத்துக்கொண்டார்கள்."

"கடற்பறவைகள், மனிதர்களின் தலையில் அமர்ந்து, மக்கள் அதைப்பிடித்துக் கொள்ள ஒருக்காலும் காத்திருக்காது!" என்று மிக மிக ஆச்சரியத்துடன் சார்ஜண்ட் ஜோனி பார்டுடன் எழுதினார்.

ஆனால் அந்த பறவையின் இறைச்சியை விட அந்த நிகழ்ச்சி அவர்களது உள்ளான ஆவியை உற்சாகப்படுத்தியது. தேவன் அவர்களது ஜெபத்தைக்

தேவன் பதில் அளித்தார் என்பதை அறிந்தார்கள். தேவனால் அனுப்பப் பட்டிருக்காமல், ஓர் தனிமையான கடற்பறவை நடுக்கடலிற்கு வந்திருக்க வாய்ப்பில்லை. இருபத்திமூன்று நாட்கள் பசிபிக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த எடி ரிக்கன் பேக்கரும் அவருடன் இருந்த கப்பல் பணியாட்களும், சரியான நேரத்தில் காப்பாற்றப்பட்டனர்.

இரண்டாவது உலகம் போரின்போது, இதுபோன்ற அநேக ஜெபங்களுக்கு மிக ஆச்சரியமான பதில்களும் கிடைத்த சம்பவங்கள் அநேகம் உண்டு. ஆனால் பசிபிக் மகா சமுத்திரத்தின் நடுக்கடலில் கேப்டன் ரிக்பேக்கரின் தலையின்மேல் உட்கார்ந்த கடல் பறவையின் சம்பவத்திற்கு இன்று வரை ஒருவருமே விளக்கம் அளிக்கவில்லை.

ரொட்டி செய்பவரால் ஏன் தூங்க இயலவில்லை

நீங்கள் ஆலிவர் டுவிஸ்ட் பற்றி வாசித்திருந்தாலோ அல்லது அதைப் பற்றிய சினிமாப்படம் பாத்திருந்தாலோ, பத்தொன்பதாம் நூற்றாண்டில், இங்கிலாந்தில் வ்ாழ்ந்த அனாதைப் பிள்ளைகளின் மிக மோசமான நிலைமையைப் பற்றி சிறிது அறிந்திருப்பீர்கள். வறுமையின் கொடூரமான பிடியில் அகப்பட்ட அப்பிள்ளைகள் தங்களது வாழ்க்கையை தொழிற் சாலைகளில் கழித்தார்கள். அநேகர் பயங்கரமான குற்றங்கள் புரிந்து வந்த கூட்டங்களில் வாழ்ந்து வந்தார்கள். சார்லஸ் டிக்கன்ஸ் என்ற ஆசிரியர் அக்காலத்தில் வாழ்ந்துவந்த அநேகருடைய கண்களைத் திறக்கக்கூடிய அந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு ஓராண்டிற்கு முன்பே ஜார்ஜ் முல்லர் இங்கிலாந்தில் உள்ள பிரிஸ்டல் என்ற ஊரில் அநாதைப் பிள்ளைகளுக்கென ஓர் இல்லத்தை ஆரம்பித்து நடத்தி வந்தார். முல்லருடைய அந்தப்பணி ஜெபத்தினால் வல்லமை பெற்றதாக இருந்தது.

1836ல் அந்த இல்லம் துவங்கப்பட்டபொழுது, அதில் முப்பது குழந்தைகள் இருந்தனர். இரண்டாம் ஆண்டு அது அறுபதானது. இப்படியாக அநாதை இல்லம் வளர்ந்துகொண்டே இருந்தது. முல்லரும் இல்லம் நடத்தப் படுவதற்குத் தேவையான பணஉதவி கிடைக்க வேண்டும் என்று தொடர்ந்து ஜெபித்துக்கொண்டே இருந்தார். தேவனும் இல்லத்தின் தேவைகளைச் சந்தித்துக்கொண்டே இருந்தார். ஜெபத்தினாலும், மிக ஆழமான

விசுவாசத்தினாலும் அவருக்குத் தேவையான பண உதவி பற்றி மனிதர்களிடம் யாரிடமும் கூறாமல், தேவனிடம் மட்டுமே கூறி அநேக அநாதை இல்லங்களை முல்லர் கட்டினார். 1875ம் ஆண்டுவரை இரண்டாயிரம் பிள்ளைகளுக்கு அடைக்கலம் கொடுத்து, அவர்கள் மகிழ்ச்சியாக வாழ உதவிசெய்து அவர்களை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார். சில சமயங்களில் பிள்ளைகளுக்குத் தேவையான அடுத்த உணவு எங்கிருந்து வரும் என்று அங்கு பணிசெய்து வந்த பணியாட்களுக்குத் தெரியாது. இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்கு கற்பித்த பரமண்டல ஜெபத்தில், நாளைய அப்பத்தைப் பற்றி எதும் கூறாமல், தேவன் 'இன்றைய அப்பத்தைத்' தருகிறார் என்று முல்லர் தமது உடன் பணியாட்களுக்கு ஞாபகப்படுத்துவார்.

கடைசி நிமிடங்களில் முல்லரின் தேவைகளைத் தேவன் சந்தித்தது பற்றி அநேக கதைகள் உண்டு.

ஓர் நாள் அவரது சிநேகிதரின் மகள் அவரைப் பார்க்க வந்தபொழுது "உங்களது ஜெபத்தைக் கேட்டுத் தேவன் பதிலளிப்பது போல என்னுடைய ஜெபத்திற்கும் பதிலளிக்க வேண்டும் என விரும்புகிறேன்" என்று கூறினார். "நிச்சயமாக அவர் செய்வார்" என்று முல்லர் பதிலளித்தார். "நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அது அவைகள் உங்களுக்கு உண்டாகும்" என்ற (மாற்.11:24)ம் வசனத்தை அவளுக்கு மேற்கோள் காட்டினார்.

ஒரு நாள் காலை, அவளது கரத்தைப் பிடித்துக்கொண்டு, அந்த அநாதை இல்லச் சிறுவர்கள் உணவிற்காகக் காத்துக்கொண்டிருந்ததை ஹாலுக்கு அழைத்துச் சென்றார். அங்கு அந்தப் பிள்ளைகளுக்குக் கொடுக்க உணவு எதும் இல்லை. மேஜையின்மேல் காலியான பாத்திரங்களே இருந்தன.

"அன்புள்ள பரம பிதாவே, நாங்கள் உட்கொள்ளுவதற்கு வேண்டிய உணவை கொடுக்கப் போவதற்காக உமக்கு நன்றி" என்று முல்லர் மிகச் சத்தமாக ஜெபித்தார். ஆயினும் அங்கு எதும் உணவு இல்லை.

அப்பொழுது, யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் தட்டினது ஓர் ரொட்டி தயாரிப்பாளர். அவர் முல்லரை நோக்கி "திரு. முல்லர் நேற்று இரவு என்னால் தூங்கவே இயல இல்லை. உங்களது இல்லத்திற்கு

காலை உணவு இல்லை என்பதை தேவன் எனக்கு வெளிப்படுத்தினார். அத்தோடு உங்களுக்கு ரொட்டிகளைக் கொடுக்க வேண்டும் என தேவன் விரும்பினார். ஆகவே நான் அதிகாலை இரண்டு மணிக்கே எழுந்திருந்து புது ரொட்டிகளைச் செய்து உங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று கூறினார்.

முல்லர் ரொட்டி தயாரிப்பான நன்றி கூறிவிட்டு, அந்த ரொட்டிகளை உள்ளே எடுத்துக்கொண்டு சென்று உடன் பணியாட்களிடம் கொடுத்தார். பின்பு, சாதாரண ரொட்டியல்ல, அப்பொழுதுதான் செய்த புதிய ரொட்டிகளைத் தந்த தேவனைத் துதிக்க ஆரம்பித்தார்.

பின்பு, இரண்டாம் முறையும் கதவு தட்டப்பட்டது. இந்த முறை கதவைத் தட்டினது ஓர் பால்க்காரர். அவரது பால் வண்டி, அநாதை இல்லத்திற்கு முன்பு வந்து கொண்டிருந்த பொழுது, வண்டி பழுதடைந்து விட்டது. அவர் பழுதடைந்த அவரது வண்டியை பழுது பார்ப்பதற்கு வண்டியிலுள்ள பாலைக் காலிபண்ண வேண்டியது இருந்ததால், அந்த புதுப்பாலை அநாதை இல்லச் சிறுவர்களுக்குக் கொடுத்து விட்டார்.

ஜார்ஜ் முல்லரின் பல ஜெபங்களுக்கு மிக ஆச்சரியமான முறைகளில் பதில் கிடைத்து வந்ததை நேரில் கண்ட அச்சிறுபெண் தனது ஜெபங்களின் முடிவை மாற்றிக்கொண்டாள். தேவனே இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் பதில் கொடுங்கள் என்று கேட்பதற்குப்பதிலாக, ஜார்ஜ் முல்லரின் ஜெபத்திற்குப் பதில் கொடுத்ததுபோல, தேவனே எனது ஜெபங்களுக்கும் பதில் கொடுக்க வேண்டும் என்று ஜெபிக்க ஆரம்பித்தாள்.

7

மிகச் சாதாரண பொருட்களிலிருந்து...

சாதாரண எளிமையான பொருட்கள் கூட தேவனுடைய கருவிகளாக முடியும்.

"உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்கு பாம்பைக் கொடுப்பானா? ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத்.7:9–11)

சில சமயங்களில் தேவனின் சிறிய பதில்கள் மிகப்பெரிய பதில்களைவிட மிக ஆச்சரியமாக இருக்கும். நீங்கள் உண்மையாகவே தேவனை விசுவாசத்தால், அவரது வல்லமையை விசுவாசிப்பதற்கு தடை ஏதும் இல்லை. ஏனெனில் அவரே சர்வத்தையும் சிருஷ்டித்த சர்வ வல்லவர். அவர் விரும்பினால் இயற்கையின் விளைவுகளைக் கூட மாற்றி அமைக்க வல்லவர். அவரே நம்மை உண்டாக்கினவர். ஆகவே நமக்கு வேண்டிய சுகத்தைக் கொடுக்க வல்லவர். தமது வாழ்க்கையில் நம்மை வழி நடத்த வல்லவர்.

அவரால் என்ன செய்ய இயலும் என்பது கேள்வி அல்ல. ஆனால் அவர் என்ன செய்வார் என்பதே கேள்வியாகும். நமது அன்றாட அப்பம் போன்ற மிகச் சாதாரண காரியங்களைக் குறித்து அவர் ஏன் கவலைப்பட வேண்டும்? ஓர் அடைக்கலான் குருவி கீழே விழுந்தால் கூட அதைத் தேவன் அறிவார் என்று இயேசு கூறினார். ஆமாம், அதைப்பற்றி அறிந்துகொள்ளும் ஆற்றல்

அவருக்கு உண்டு. ஆனால் அவர் ஏன் அதுபற்றி கவலைப்படவேண்டும்? அவரது தெய்வீக ஆற்றலை சாதாரண நிகழ்வுகளுக்கு கவனத்தை செலுத்துவதை விட மிக முக்கியமான நிகழ்வுகளுக்கு கவனம் செலுத்தலாமே?

மிக மிகச் சாதாரண ஜெபங்களுக்கு கிடைத்த பதில்களைப் பற்றி வாசிக்க இருக்கிறீர்கள். மகத்துவமான தேவனிடம் இப்படி அற்பமான காரியங்களுக்காக மக்கள் எப்படி தைரியமாக ஜெபித்தார்கள் என்று நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள். ஆயினும், சிறு குழந்தைகள் இயேசுவிடம் வராமல் தடுத்த சீஷர்களை நினைவில் கொள்ளுங்கள். தற்காலத்தில் உள்ள புகழ்பெற்ற பிரசங்கிமார் போன்று, அவர்கள் இயேசு மிக முக்கியமான காரியங்களுக்கு மட்டும் கவனம் செலுத்தும்படி விரும்பினார்கள். ஆனால் அவர்களைக் கடிந்து கொண்டார். சிறு குழந்தைகள் அவருக்கு மிக மிக முக்கியம். சிறு குழந்தைத் தனமான, எளிய நமது விண்ணப்பங்களும் அது போலவே முக்கியமானவைகள் ஆகும்.

> *தேவனே, உமது வாக்குத்தம் செய்த பூமியிலே உயர்ந்த இடங்களில் ஏறி நிற்பதற்கு எங்களுக்கு மான்களின் கால்களைத் தாரும் உமது வலது கரத்தினால் எங்களைத் தாங்கும்.*
>
> *உமது தேவ பர்வதத்திலிருந்து இறங்கி நீர் நியமித்திருக்கும் ஒவ்வொரு பாதையிலும் நாங்கள் சென்று கடமைகளை நிறைவேற்ற பெலன்தாரும். எங்களது வாழ்க்கையின் இறுதி நாட்கள்வரை உம்மையே நாங்கள் சேவிக்க கிருபைதாரும்.*
>
> – யாரோ

ஜான், எனக்கு மூன்று பழுத்தத் தக்காளிப்பழங்கள் வேண்டும்

மிகவும் அதிகமான காய்ச்சலினால், சித்தப்பிரமை அடைந்த் நிலையில் இருந்த மீனா, ஜானை நோக்கி, ஜான் எனக்கு மூன்று பழுத்தத் தக்காளிப் பழங்கள் வேண்டும் என்று அலறினாள். அவளுக்கு காய்ச்சல் மிக அதிகமாக இருந்ததால், இறந்து போகக் கூடிய தருவாயில் இருந்தாள். அந்த நேரத்தில் மூன்று பழுத்த தக்காளிப் பழங்களைப்பெற இயலாது என்று அவளது கணவர்

ஜான் அவளுக்கு விளக்க முற்பட்டார். ஆனால், அவளோ, அதைப் புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை.

ஜானும், மீனா க்ளார்க்கும், ஆப்பிரிக்க உள்நாட்டு மிஷனில் சேர்ந்து ஆப்பிரிக்காவின் வட கிழக்குப் பகுதியில் மிகவும் பின்தங்கிய பெல்ஜியன் காங்கோ என்ற பகுதியில் மிஷனரிகளாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அது இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியாக இருந்தது. ஆகவே அக்காலத்தில் மிஷனரிகளுக்குத் தேவையான மருந்துகளை ஒரு சிலமணி நேரங்களுக்குள்ளாக எடுத்துச் செல்வதற்கான எந்த விமானப் போக்கு வரத்து வசதிகள் கிடையாது.

'எனக்கு மூன்று பழுத்த தக்காளிப் பழங்கள் வேண்டும்' என்று மீனா மறுபடியும் மிகவும் ஆவலுடன் கேட்டாள். அவளை எப்படி, ஜான் அமைதிப் படுத்துவது? காங்கோ நாட்டில் ஒருவர் கூட தக்காளிப் பழத்தைப் பற்றிக் கேள்விப்பட்டது கூட கிடையாது. முழங்கால் படியிட்டு ஜெபிக்கமட்டும் தான் அவரால் முடிந்தது. அவர் தனது ஜெபத்தில் ஏதேதோ சொல்லி நீண்ட நேரம் ஜெபித்தார். பொதுவாக அவரது ஜெபம் அர்த்தமில்லாமல் தான் இருந்தது. தனது இருதயத்தின் ஆழத்திலிருந்து ஏதோ உளறி உளறி ஜெபித்தார். ஆனால் அவரது உள்ளத்தின் வாஞ்சையை தேவன் அறிந்திருந்தார். அவர்கள் இருக்கும் அந்தக் காட்டுப் பகுதிக்கு ஓர் மருத்துவரை அனுப்பி மீனாவை குணமாக்க வேண்டும் என்று அவர் தேவனிடம் கேட்டார். ஆனால் அவர்கள் இருக்கும் காங்கோவின் அந்தக் காட்டுப்பகுதிக்கு ஒரு வைத்தியர் வருவதற்கு குறைந்தது ஒரு வாரகாலமாக ஆகும். ஆம் அத்தோடு தக்காளிக் காகவும் அவர் ஜெபித்தார்.

அடுத்த நாள் அங்கு வாழ்கின்ற ஓர் மலை வாழ் மனிதன் க்ளார்க் வீட்டின் கதவைத் தட்டினார். அவரோடுகூட அவர்களது அருகில் வசிக்கும் மற்றொரு இனத்தைச் சார்ந்த ஓர் பெண்மணி நின்று கொண்டிருந்தார். அவளது கரத்தில், வாழை இலைகளால் மூடப்பட்டிருந்த ஓர் கூடையை வைத்திருந்தாள். பொதுவான காரியங்களை சிறிது நேரத்திற்குப் பேசின பின், அந்தப் பெண்மணி தான் வந்த காரியத்தைக் கூறினாள். ஒரு மாதத்திற்கு முன்பு, ஜான் க்ளார்க் அவளது இனமக்கள் வாழ்ந்த இடத்திற்குச் சென்றார். ஓர் அந்நிய நாட்டினராக, அவர் அவருக்கு உதவி செய்ய இயலும் என எண்ணி வந்திருந்தார்.

அவளது பிரச்சனை என்ன?

சில காலத்திற்கு முன்பு, நாங்கள் வாழும் இடத்திற்கு வந்திருந்த ஓர் பயணி எங்களிடம் சில விதைகளைக் கொடுத்துச் சென்றார். அதை நான் பயிரிட்டேன். அந்த விதைகள் முளைத்து அந்தச் செடிகள் இப்பொழுது, கனி தர ஆரம்பித்துள்ளன. ஆனால் அவற்றை உண்ண எனக்கு பயமாக உள்ளது. ஏனெனில் அந்தப் பழங்கள் விஷமுள்ளவையா அல்லது விஷமற்றவையா என எனக்குத் தெரியவில்லை'' என்றாள்.

ஜான் க்ளார்க், அக்கூடையை மூடியிருந்த வாழை இலையை அகற்றின பொழுது, அவரால் நம்ப இயலாத அதிசயமான காரியத்தைக் கண்டார். அவர் கண்டது, நன்றாக பழுத்த சிவப்பு நிற தக்காளிப் பழங்கள் சரியாக மூன்று இருந்தது.

மிஷனரியில் மகிழ்ச்சியைக் கண்ட அந்த பெண்மணி, நீங்கள் இப்பழங்களை வைத்துக்கொள்ளுங்கள். எனது வீட்டில் இன்னமும் மிக அதிகமான பழங்கள் உண்டு'' என்று கூறினாள்.

அந்தப் பெண்மணிக்கு, ஜான் க்ளார்க் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துவிட்டு, அப்பழங்களை எடுத்துச் சென்று மீனாவிடம் கொடுத்தார். எதிர்பார்த்ததிற்கு மேலாக மிகக் குறுகிய காலத்தில் மருத்துவரும் அங்கு வந்து சேர்ந்தார். விரைவில் மீனா உடல் நலம் தேற ஆரம்பித்தாள். மருத்துவரின் வைத்தியமா அல்லது அந்த அற்புதமான தக்காளிப்பழங்களின் விளைவா எதன் மூலம் மீனா உடல் நலம் பெற இயன்றது என ஜானிற்குத் தெரிய வில்லை. எதுவாக இருந்தாலும், தனது ஜெபத்திற்கு தேவன் தந்த அற்புதமான பதிலை தந்தார் என்பதை அறிந்திருந்தார்.

இந்த நிகழ்ச்சிகளின் அடிப்படையில் ஜான் சிந்தித்தபொழுது, அதைவிட மிக அதிசயமான காரியங்களைப் பற்றி உணர்ந்தார். அதாவது, தேவன் இது குறித்து மிக நீண்ட நாட்களுக்கு முன்பே திட்டம் தீட்டியிருக்க வேண்டும். வெகு காலத்திற்கு முன்பே யாரோ ஓர் பயணி அந்த ஆப்பிரிக்க பெண் மணியிடம் அந்த விதைகளைக் கொடுத்தபொழுதே எல்லாவற்றையும் பற்றி தேவன் அறிந்திருந்தார். அந்த பெண்மணி எப்பொழுது அந்த விதைகளைப் பயிரிட வேண்டும் எப்பொழுது அந்த தக்காளிப் பழங்கள் பழுக்க வேண்டும் என்பதைத் தேவன் நன்கு அறிந்திருக்கவேண்டும். மூன்று பழுத்த தக்காளிப் பழங்களுக்காக அவர் ஜெபித்த அன்று, அந்த ஆப்பிரிக்கப் பெண்மணி, மூன்று தக்காளிப் பழங்களோடு மிஷனரியின் வீட்டிற்கு வருவதற்கு தேவன்

வழி நடத்தி இருந்திருக்கிறார். அதனால் தான் கிடைக்கக்கூடாத வகையில் மூன்று பழுத்த தக்காளிப் பழங்கள் ஜானிற்கு கிடைத்தது.

இது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்!

ஏஞ்சல் புட் கேக்குகளைப் பற்றி தேவன் கவலைப்படுகிறாரா?

உடைந்து, நொருங்கி, உருவம் ஏதும் இல்லாமல் கிடந்த ஜெல்லி, உருண்டைகள் லினியின் கண்களுக்கு முன்பாகக் கிடந்தன. அவைகள் அவளை திகிலடையச் செய்தன.

ஆரம்பத்தில் அந்த வேலை மிக இலகுவாகத் தோன்றியது. திருச்சபையின் வருடாந்திர கிறிஸ்மஸ் தேனீர் விருந்திற்கு 220 சிறிய ஏஞ்சல் புட் கேட் சுருள்கள் செய்ய வேண்டியது இருந்தது. வாஷிங்டனில் உள்ள பெல்லிவியூவில் உள்ள க்ராஸ்ரோட் பாப்டிஸ்ட் திருச்சபைக்கு லினிஹால் புதிய அங்கத்தினராக சேர்ந்திருந்தாள். ஆகவே அவள் ஆரம்பத்திலேயே தன்னைப்பற்றி நல்ல ஓர் அபிப்பிராயத்தை ஏற்படுத்த விரும்பினாள். அவள் இந்த கேக் செய்வதைப் பற்றி ஓர் சமையல் குறிப்பு புத்தகத்தில் வாசித்திருந்தாள். அத்தோடு செய்து முடிக்கப்பட்ட கேக் சுருள்களின் மிக அழகான புகைப்படங்களும் அத்தோடு இருந்தன. அதற்குத் தேவையானது முப்பது ஏஞ்சல் புட் கேக் துண்டுகளாகும். அவற்றை வெட்டி, பின் ஜாம் தடவி, சுத்த வேண்டியதுதான்.

ஆகவே லினி ரொட்டிக் கடையில் கேக்குகளை வாங்குவதற்கு ஒழுங்கு செய்தாள். அவள் கேட்டுக்கொண்டபடி கேக்குகள் வந்தவுடன் அவைகளை ஜெல்லி சுருள்களாக மாற்றுவதற்காக தன் வீட்டிற்கு எடுத்துச்சென்றாள். அதுவரை எல்லாம் ஒழுங்காகவே நடந்தது. ஆனால் அந்த ரொட்டிக் கடையிலிருந்து இவள் கேட்டுக் கொண்டபடி கேக்குகள் வரவில்லை. அவைகளின் நடுவில் அவை வேகாமல் காணப்பட்டன. அவற்றிற்கு மாற்றாக லினி வேறுசில கேக்குகளை வாங்கினாள். ஆனால் அவைகளும் சரியாக இல்லை. நொருங்கிப்போன உடைந்த உருவமற்ற அந்த ஜெல்லி சுருள்களை அவள் நிச்சயமாக ஆலயத்தில் நடைபெறும் தேனீர் விருந்திற்கு எடுத்துச் செல்ல இயலாது.

நம்பிக்கையற்ற நிலையில் அவள் அந்தப் பகுதியில் இருந்த அனைத்து ரொட்டிக் கடைகளுக்கும் சென்று விசாரித்தாள். அவள் கேட்டதைக் கொடுப்பதற்கு அவர்களுக்கு நேரமில்லை என்ற பதிலையே அனைத்துக் கடைக்காரர்களும் கூறினார்கள். அடுத்த நாள் தேனீர் விருந்து.

கண்களில் கண்ணீர மல்க, அந்தப் பகுதியில் இருந்த கடைசி ரொட்டிக் கடைக்கும் தன் காரை ஓட்டிச் சென்றாள். அவள் ஜெபிக்க ஆரம்பித்தாள். லினி ஒரு சில நாட்களுக்கு முன்புதான் கிறிஸ்தவளாக ஆனதினால், 'ஜெபிப்பது என்பது அவளுக்கு ஓர் புதுவித அனுபவம்' என்பதை ஒத்துக் கொண்டாள். "மிகப் பெரிய காரியங்களுக்கு மட்டும் தான் தேவனைத் தொந்தரவு பண்ணவேண்டும். மிகச் சிறியகாரியங்களுக்கெல்லாம் ஜெபிப்பது அவசியமில்லை" என்று இதற்குமுன் எண்ணியிருந்தாள். ஜெல்லி சுருளைப் பற்றி தேவனக்கென்ன கவலை? ஆனால் நிச்சயமாகத் தேவன் அவள் மேல் கரிசனை உள்ளவராக இருக்கிறார் என்பதை அறிந்திருந்தாள். ஆகவே மிகச் சாதாரண சமையலைப் பற்றிய நெருக்கடியைத் தேவனிடம் கூறினாள்.

அவள் தனது காரை அந்தக் கடைசி ரொட்டிக் கடைக்கு ஓட்டிக் கொண்டே "அன்புள்ள தேவனே, இந்தக் கடையிலாவது ஏஞ்சல் புட் கேக்குகள் கிடைக்க வேண்டுமே" என ஜெபித்தாள். அந்த ஜெபம் மிக மிக அற்பமான காரியத்தைப் பற்றியது என்பதை அவள் அறிந்தாலும் ஜெபித்தாள். தேவனே குழல்வடிவ கேக்குகள் வேண்டாம். துண்டு வடிவ கேக்குகளே வேண்டும் என ஜெபித்தாள் அத்தோடு "தேவனே, தயவு செய்து தேவனே இந்த கிறிஸ்மஸ் தேனீர் விருந்து உமக்காகத்தான்" என்று ஜெபித்தாள்.

ரொட்டிக் கடைக்குள் நுழைந்தவுடன் அவளுக்கு நேராக வரிசை வரிசையாக ஏஞ்சல்புட் கேக்குகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. குழல் வடிவமல்ல, அவள் விரும்பின துண்டு வடிவ கேக்குகளே இருந்தன. "அவைகள், மிக இலேசான, மிருதுவான, அழகான ஏஞ்சல் புட் கேக்குகளாக இருந்தன. அவற்றைப்போல நான் இதுவரை பார்த்ததே இல்லை" என்று பிற்காலத்தில் லினி நினைவு கூர்ந்து கூறினாள். அவள் அவற்றை எண்ணினாள். சரியாக பதினேழு இருந்தன. "நன்றி ஆண்டவரே" என அமைதியாக தனக்குள்ளே கூறிக்கொண்டாள். இதுபோல கேக்குகள் வைத்துள்ளீர்களா? என்று கேட்டாள்.

'ஆம் எங்களிடம் மேலும் இதுபோன்ற கேக்குகள் உள்ளன என்று பதில் கிடைத்தது. 'பொதுவாக இதுபோன்ற' கேக்குகளை நாங்கள் வைப்பது கிடையாது. ஆனால் ஓர் சில நிமிடங்களுக்கு முன்புதான் இவை வந்தன.

இப்பொழுதுள்ள இந்த பதினேழு கேக்குகளை வைக்கத்தான் எனக்கு நேரம் கிடைத்தது. இன்னமும் உள்ளவைகளை உங்களுக்குத் தருகிறேன்' என்றார்.

லினி அவளது கார் முழுவதையும் ஏஞ்சல் புட் கேக்குகளால் நிறைத்தாள். வீட்டிற்கு வந்தபுடனே தனது வேலையை ஆரம்பித்தாள். இரவு பத்து மணிக்கு தன் வேலையை முடித்தாள். அதன்பின் அவைகளை எண்ண ஆரம்பித்தாள். சரியா 220 ஏஞ்சல் புட் ஜெல்லி சுருள்கள் இருந்தன. 'ஒன்று கூட கூடவும் இல்லை, ஒன்று கூட குறையவுமில்லை' என்று மிகுந்த ஆச்சரியத்துடன் கூறினாள்.

உண்மையாக, கிறிஸ்மஸ் தேனீர் விருந்தைவிட தேவனிற்கு கவனிக்க வேறு பல மிக முக்கியமான காரியங்கள் உண்டு. இந்த உலகம் முழுவதும் மிக முக்கியமான தேவைகளால் நிறைந்து காணப்படுகிறது. ஆனால் நமது தேவன் சிறிய அடைக்கலாம் குருவியைக் கூட கண்காணிக்கிறவர். நமது தலையில் உள்ள முடிகளை எண்ணியிருக்கிறார். தேவன் மிகப்பெரிய காரியங்களுக்கும் தேவனாக இருக்கிறார். மிகச் சிறிய காரியங்களுக்கும் தேவனாக இருக்கிறார் என்று வேதம் நமக்கு விளக்குகிறது. புதிதாக விசுவாசியான லினி ஹாலை தேவன் நேசிக்கிறார் என்று உறுதிப் படுத்தினதே இந்த நிகழ்வில் நடந்த மிகப்பெரிய அற்புதமாகும்.

"தேவனே பரலோகத்திலிருந்து அந்த ஏஞ்சல் புட் கேக்குகளை அனுப்பும்" என்று அவள் கேட்டாள். "எல்லா அற்புதங்களிலும் தேவன் ஈடுபடுவதுபோல, என்னுடைய காரியத்திலும் தேவன் ஈடுபட்டார். என்னுடைய பழைய வாழ்க்கையினின்றும் முற்றிலுமாக நான் மாறி புதியவளாகி விட்டேன். தேவனால் மட்டுமே அருளப்படக் கூடிய சமாதானத்தினால் என் வாழ்க்கை நிரம்பியுள்ளது. மிக மிகச் சிறிய காரியங்களிலும் தேவனுடைய அன்பை நாம் காணலாம்" என்று லினி கூறுகிறாள்.

தேவனே இன்று மதியம் எங்களுக்கு சுடு தண்ணீர் பாட்டிலை அனுப்பியருளும்

ஹெலன் ரோஸ்வியருக்கு கேம்பிரிட்ஜ்ஜிலிருந்து காங்கோ நாட்டிற்கு வருவது என்பது அவளது வாழ்க்கையில் மிகப் பெரிய காரியமாகும். இங்கிலாந்தில் உலகப் புகழ் பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில்

மருத்துவத் துறையில் பயிற்சி எடுத்தவுடன் ஹெலன் மத்திய ஆப்பிரிக்காவில் செயல்பட்டு வந்த கிறிஸ்துவிற்காக உலகளாவிய சுவிசேஷப்பணி (WEC)யில் இணைந்து மத்திய ஆப்பிரிக்காவில் ஓர் மருத்துவ மையத்தை துவங்கு வதற்காக 1953ம் ஆண்டு சென்றாள். அவள் வசித்த அந்த இடம் பெல்ஜியன் காங்கோ என்று அழைக்கப்பட்டது. பின்பு அது சைரே என்று பெயர் மாற்றப்பெற்றது இறுதியில் காங்கோ என்று மட்டும் அழைக்கப்பட்டது. அந்தக் காலத்தில் காங்கோ, சண்டைகள் புரட்சிகள், வறுமை, வியாதிகள் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டிருந்தது. மருத்துவர், ரோஸ்வியரே இங்கிலாந் தில் பெற்ற உயர்ரக மருத்துவ பயிற்சி, காங்கோ நாட்டில் நிலவி வந்த கடுமையான எதிர்ப்புகளை சந்திப்பதற்கு அவளை சரியாக ஆயத்தப்படுத்த வில்லை.

ஓர் நாள் இரவு பிரசவத்திற்கென வந்த ஓர் இளம் தாயையையும், வயிற்றில் முதிர்ச்சி அடையாத அவளது குழந்தையையும் காப்பாற்ற கடுமையாக முயன்று கொண்டிருந்தார். டாக்டர் ரோஸ்வியர் எவ்வளவோ முயன்றும் அந்த இளம் தாயைக் காப்பாற்ற இயலவில்லை. அவள் மரித்துப் போனாள். அக்குழந்தை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. அத்தோடு கூட அக்குழந்தையின் இரண்டு வயது சகோதரியையும் அவர்கள் கவனிக்க வேண்டியிருந்தது. அந்த சிறிய மருத்துவமனையில் மின் வசதி ஏதும் இல்லையாதலால், பருவத்திற்கு முன் பிறந்த அச்சிறு குழந்தையை வைத்துக் காப்பாற்ற வெப்பப் பெட்டி ஏதும் அங்கு இல்லை.

அந்த நாட்களில் இரவு மிகவும் குறைந்த வெப்ப நிலையை அடைந்து குளிர் அதிகமாகிவிடும். ஆகவே, அச்சிறு குழந்தையை எப்படியாவது அவர் வெப்பமாக வைக்க வேண்டும் என்பதை மருத்துவர் நன்கு அறிந்திருந்தார். ஓர் தாதியை அழைத்து, நெருப்பைத் தூண்டி, ஓர் சுடு தண்ணீர் பாட்டலை சுடு நீரால் நிரப்பி வருமாறு அனுப்பினாள். அந்த தாதிப்பெண் திரும்ப வந்த பொழுது. அவளது முகத்தில் தெரிந்த உணர்வுகளைப் பார்த்தவுடனேயே ஏதோ தவறு நடந்து விட்டது என மருத்துவர், ரோஸ்வியரே புரிந்து கொண்டார். "நம்மிடம் இருந்த அந்த கடைசி சுடு தண்ணீர் பாட்டிலும் வெடித்துவிட்டது" என்று அந்த தாதி கூறினாள்.

அன்று இரவு, நெருப்பிற்கு அருகிலே அந்தக் குழந்தையை ஒட்டி நெருக்கமாக படுத்துக்கொள்ளுமாறு அந்த தாதியை மருத்துவர், ரோஸ்வியரே

தேவனே இன்று மதியம் எங்களுக்கு சுடு தண்ணீர் பாட்டிலை அனுப்பியருளும் கேட்டுக்கொண்டார். நெருப்பிற்கு மிக நெருக்கமாக இருக்கவேண்டாம். கதவு, ஜன்னல்கள் வழியாக வரும் குளிர் காற்று குழந்தையின் மேல் படாதபடி காத்துக் கொள்ளக் கூறினாள். அந்த இரவு குழந்தை பிழைத்துக் கொண்டது. ஆயினும் அதன் நிலைமை இன்னமும் மோசமாகவே இருந்தது.

அடுத்த நாள் மருத்துவர் ரோஸ்வியரே, வழக்கம் போல மருத்துவ மனையைச் சார்ந்த அனாதை இல்லத்தில் உள்ள குழந்தைகளை வேதபாட வகுப்பிற்கும் ஜெபத்திற்கும் கூடி வரச் செய்தாள். அந்த சிறு குழந்தைக்காக, பிள்ளைகளை ஜெபிக்கும்படி கேட்டதோடுகூட ஓர் சுடு தண்ணீர் பாட்டில் ஒன்று கிடைக்க வேண்டும் என்று ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டாள். அந்தக் குழநதையை வெப்பமாக வைக்காவிட்டால், குளிரினால் சீக்கிரமாக அது இறந்துவிடும் என்று கூறினாள்.

ஜெப நேரத்தில் பத்து வயது நிரம்பிய ரூத் என்ற சிறுமி, "தேவனே எங்களுக்கு ஓர் சுடு தண்ணீர் பாட்டலை உடனே அனுப்புங்கள், நாளைக் கல்ல தேவனே, நாளைக்கு நீர் அப்பாட்டிலை அனுப்பினால் அக்குழந்தை இறந்துவிடும். ஆகவே இன்று மதிமே எங்களுக்கு அந்த சுடு தண்ணீர் பாட்டிலை அனுப்ப வேண்டும். அதை அனுப்பும் பொழுது அக்குழந்தையின் சகோதரியை நீர் நேசிக்கிறீர் என்பதை அவள் அறிந்துகொள்ள அவளுக்கும் ஓர் பொம்மையை அனுப்பும்" என மிக ஊக்கமாக உண்மையான பாரத்துடன் ஜெபித்தாள்.

அச்சிறுமியின் ஜெபத்திற்கு 'ஆமென்' என்று சொல்லவா அல்லது வேண்டாம் என சொல்லவா என மருத்துவர் ரோஸ்வியரேவிற்குத் தெரிய வில்லை. தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கிறார். உண்மைதான் ஆனால் அந்த சிறுமியின் ஜெபம், கேலிக் கூத்தாக இருந்தது. "அந்தக் குறிப்பிட்ட ஜெபத்திற்கு தேவன் பதிலாளிக்க வேண்டுமென்றால், அவளது சொந்த ஊரான இங்கிலாந்தில் இருந்து ஓர் பார்சலை அனுப்பினால்தான் முடியும். நான் ஆப்பிரிக்காவில் ஏறக்குறைய நான்கு ஆண்டுகள் இருந்துள்ளேன். ஆனால் இதுவரை எனது சொந்த ஊரிலிருந்து எனக்கு எந்த ஓர் பார்சலும் வந்தது கிடையாது. சரி யாரோ ஒரு பார்சல் அனுப்புவதாக வைத்துக் கொண்டாலும், யார் ஓர் சுடுதண்ணீர் பாட்டிலை அனுப்புவார்கள்? ஏனெனில் நான் வெப்பம் நிறைந்த பூமத்திய ரேகைப் பிரதேசத்தில் வசித்து வருகிறேன் என மருத்துவர் ரோஸிவியரே எண்ணினார்கள்."

அன்று மதியம் தாதியருக்கான பயிற்சி அறையில் அவர்களுக்கென அவள் பாடம் கற்பித்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது, அவளது வீட்டிற்கு முன்பு ஓர் கார் வந்து நிற்பதாக அவருக்கு செய்தி வந்தது. அவள் தன் வீட்டிற்குப் போனபொழுது, கார் அங்கே இல்லை. போய்விட்டது. ஆனால் வீட்டின் முன் தாழ்வாரத்தில் இருபத்திரண்டு பவுண்டு எடையுள்ள ஓர் பார்சல் இருந்தது.

அவளால் அதை நம்ப இயலவில்லை. உடனே தனது அனாதை இல்லத்தில் தங்கியுள்ள சில சிறுமியரை, அந்தப் பார்சலை திறப்பதற்கு வந்து உதவுமாறு அழைத்தாள். அந்தப் பெட்டியில் பல்வேறு பொருட்கள் வைக்கப்பட்டிருநத்ன. ஒவ்வொரு பொருளை எடுக்கும்பொழுதும் பிள்ளைகள் அந்தப் பெட்டியைச் சூழ்ந்துகொண்டனர். கையினால் வுல்லன் நூல் வைத்து பின்னப்பட்ட சட்டைகள், குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பயன்படுத்தக்கூடிய கையினால் பின்னப்பட்ட பாண்டேஜ்கள், பல்வேறு இனிப்பு மிட்டாய்களால், கிறிஸ்மஸ் பழங்களால் நிரப்பப்பட்ட பெட்டிகள் இருந்தன. பின்பு அந்த மருத்துவர் தன் கையை பெட்டிக்குள் விட்டு, அடுத்த பொருளை எடுத்தாள். ஆமாம் .. அது ரப்பரினால் ஆன புத்தம்புதிய சுடு தண்ணீர் பாட்டில்!

மருத்துவர் கண்கள் குளமாயின. தேவன் அதைச் செய்வார் எனறு அவள் நம்பவில்லை. அதற்காக ஜெபித்த பத்து வயது ரூத் அந்தப் பெட்டியின் அருகில் நின்று கொண்டிருந்தாள். அவள் அந்த பாட்டிலுக்காக திருப்தி அடையவில்லை. “தேவன் பாட்டிலை அனுப்பி இருந்தால், நிச்சயம் அந்தக் குழந்தையின் சகோதரிக்கு ஓர் பொம்மையையும் அனுப்பியிருப்பார்” என்றாள்.

ஆகவே மருத்துவர் ரோஸிவியரே தன் கைகளை பெட்டிக்குள் விட்டு துளாவினாள். இறுதியில் பெட்டியின் அடியிலிருந்து சிறிய அழகான உடையினால் அலங்கரிக்கப்பட்டிருந்த ஓர் பொம்மையை எடுத்தாள்.

அந்தப் பார்சல் ரோஸிவியரே லண்டனில் இருக்கும்பொழுது, எடுத்த ஞாயிறு பள்ளி மாணவ மாணவியர்களால் ஐந்து மாதங்களுக்கு முன்னால் அனுப்பட்டது. அது சரியாக ரூத் ஜெபம் பண்ணி முடித்த இரண்டு மணி நேரத்திற்குள்ளாக சரியான நேரத்தில் அவர்களுக்குக் கிடைத்தது. வெப்பப் பிரதேசமான, பூமத்திய ரேகைப் பிரதேசத்திற்கு யார் சுடு தண்ணீர் பாட்டிலை அனுப்பக்கூடும். நிச்சயமாக, யாரோ ஒருவர், தேவன் அவளுடன் பேசினதிற்கு செவி கொடுத்ததினால் அதை அனுப்பியிருக்கிறார்கள்.

ஓர் சிறிய பறவையைப் பின்பற்றிச் செல்லுதல்

போங்கள் என்று அர்த்தம் கொண்ட கோபோர்த் என்ற பெயரையுடைய அவர்கள் மிஷனரிகள் ஆக வேண்டியிருந்தது. ஜோனத்தான், ரோசலின் கோபோர்த் ஆகிய இருவரும் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் சீனா மஞ்சூரியா, மேலும் கொரியா போன்ற இடங்களில் மிஷனரிகளாகப் பணியாற்றினார்கள். சீனாவில் மிகப் புகழ்பெற்ற மிஷனரி சுவிசேஷகர் என ஜோனத்தான் அழைக்கப்பட்டார். கோபோர்த் செய்த மிஷனரிப் பணியினால் ஆவிக்கேற்ற பெரிய எழுப்புதல் ஏற்பட்டு, மேற் கூறப்பட்ட தேசங்களில் சுவிசேஷப்பணி ஆழமாக வேரூன்றியது. இன்றைய நாள் வரை கொரியாவின் திருச்சபைகளில் ஏற்பட்டுள்ள ஜெப வாழ்க்கையின் வல்லமை, பக்தி வைராக்கியம் அனைத்தும் கோபோர்த் அவர்கள் செய்த சுவிசேஷப் பணியினால் தான் வந்துள்ளது என்பதாக சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

ரோசலிண்ட் கோபோர்த் ஜெப ஊழியத்திற்கு பெயர் பெற்றவராவார். 'தேவன் எப்படி ஜெபத்திற்கு பதில் அளிக்கிறார்' என்ற அவர் எழுதிய சிறிய புத்தகத்தில், அவர்களது ஊழியத்தில் தேவன் எப்படியாக ஆச்சரியமாக பதில் கொடுத்துள்ளார் என்று அநேக சான்றுகள் உள்ளன.

ஜெபத்தின் மீது அவளுக்கு எப்படி ஆவல் வந்தது? சீனாவின் உள்நாட்டு மிஷனை நிறுவிய நிறுவனர் ஹட்சன் டெய்லர் என்ற மிஷனரியின் மூலமாகத் தான் ஜெபத்தின் மீதான ஆவலைப் பெற்றாள். ஜோனத்தானை அவள் திருமணம் பண்ணுமுன்பாக, ஹட்சன் டெய்லர் எழுதின ஓர் புத்தகத்தை வாசித்தாள். அதில் அவர் தேவன் எவ்வாறாக அவரது ஜெபத்திற்கு பதில் அளித்தார் என்பதைபற்றி எழுதியிருந்தார். அந்த செய்தி ரோசலின்ட் மனதில் மிக ஆழமாகப் பதிந்துவிட்டது. டெய்லருடைய ஜெப வாழ்க்கையின் சிறப்பு அம்சம் என்னவென்றால், அவருடைய தேவைகளைப் பற்றி தேவ னிடமே அன்றி வேறு மனிதர்கள் யாரிடமும் அவர் கூறமாட்டார். தேவனும் ஆச்சரியமான வகைகளில் அவருடைய தேவைகளைச் சந்தித்து வந்தார்.

ரோசலிண்ட் தனது திருமணத்திற்கு ஆயத்தமானபொழுது, அவளுக்கு ஐம்பது டாலர் கடன் இருந்தது. ஆகவே வரப்போகிற தன் கணவர் மீது அக்கடன் சுமையைச் சுமத்துவதற்கு அவளுக்குப் விருப்பமில்லை. "இந்தச் சிறிய காரியத்திற்கு தேவனை நம்பவில்லையென்றால், நீ ஓர் மிஷனரியாக

ஆவதற்கு வாய்க்கா?" என அவள் தன்னைத்தானே கடிந்து கொண்டாள். அவளுக்கு எந்த ஒரு பணவுதவியும் கிடைக்காத சூழ்நிலையில், மற்ற மனிதர்களிடம் அதுபற்றி கூற ஓர் ஆவல் தோன்றியது. ஆனால் அவள் தனது தேவைகளைப்பற்றி யாரிடமும் கூறவில்லை. அவளது திருமண நாளிற்கு முந்தின நாள் இரவு அவளுடன் பணி புரியும் சிநேகிதர்கள் ஓர் பர்ஸை அவளுக்கு வெகுமதியாகக் கொடுத்தார்கள். பர்ஸை திறந்தபொழுது அதில் ஐம்பது டாலருக்கான காசோலை இருந்தது. அது தேவன் அவளது வாழ்க்கையில் பதித்த முத்திரை என்பதை ரோசலின்ட் உணர்ந்தாள்.

ஜெபத்திற்கு வல்லமை உண்டென்ற நம்பிக்கை ரோசலின்டின் சிறு வயதிலேயே உண்டாயிற்று. அது அவளது தாத்தாவைப் பற்றி அவளது தாயார் கூறிய நிகழ்ச்சியினால் ஊன்றக் கட்டப்பட்டது. அவளது தாத்தா சிறுவனாக இருந்த பொழுது, அடர்ந்த காட்டினருகே வசித்து வந்த அவரது உறவினர்களின் வீட்டிற்குச் சென்றார். ஓர் நாள் அவரும் அவரது மாமாவின் பிள்ளைகளும் காட்டுக்குள் சென்று காட்டுப் பூக்களை பறிக்கச் சென்ற பொழுது, நடுக்காட்டில் வழி தப்பிவிட்டார்கள். சிறிது நேரம் சரியான வழியைக் கண்டுபிடிக்க முயற்சி எடுத்தார்கள். ஆனால் அவர்களால் சரியான வழியைக் கண்டுபிடிக்க இயலவில்லை. அதினால் சிறுவர்கள் அனைவரும் அழ ஆரம்பித்து விட்டார்கள்.

அவர்களில் வயதில் மூத்தது ஓர் பெண்பிள்ளை. அவள், "தமது தாயார் மரிக்குமுன்பாக, எந்த ஒரு பிரச்சனை வரும்பொழுதும், அதைப் பற்றி இயேசுவிடம் கூற வேண்டும், என்று கூறியுள்ளார்கள். ஆகவே நாம் அனைவரும் முழங்கால் படியிட்டு, நம்மை வீட்டிற்கு சேர்க்குமாறு இயேசுவிடம் கூறுவோம்" என்றாள்.

ஆக அந்த மூன்று குழந்தைகளும் நடுக்காட்டில் முழங்கால்படியிட்டு ஜெபிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் கண்களைத் திறந்தபொழுது, அவர்களில் ஒரு குழந்தை, அவர்களுக்கு மிக அருகில் மிகவும் அமைதியான ஓர் சிறிய பறவை நிற்பதைக்கண்டாள். அக்குழந்தைகள் தொடக்கூடிய அளவில், அது அவர்களுக்கு மிக அருகில் இருந்தது. ஓர் குழந்தை அப்பறவையைத் தொட முயன்றபொழுது, அது தத்தித் தத்தி சற்று தூரத்தில் போய் நின்றது. குழந்தைகள் இப்படியே அப்பறவையைப் பின்பற்றினார்கள். அந்தச் சிறிய பறவை அக்குழந்தைகளுக்கு முன்பு கொஞ்ச நேரம் தத்தியும், பறந்ததும் சென்றது. திடீரென அந்தப் பறவை பறந்து வானில் மறைந்து

விட்டது. அக்குழந்தைகள் கண் ஏறிட்டுப் பார்த்தபொழுது அவர்கள் காட்டின் எல்லைக்கு வந்து விட்டதை அறிந்தார்கள். சற்று தூரத்தில் அவர்களது வீடு தெரிந்தது.

தனது தாத்தாவைப் பற்றிய இந்தக் கதையை ரோசலிண்டால் ஒருக்காலும் மறக்க இயலாதிருந்தது. அவளும் அவளது கணவரும் 1900ம் ஆண்டுகளில் சீனாவில் நடந்த பாக்ஸர் புரட்சியில் மிகவும் கஷ்டப் பட்டார்கள். மேலும் மஞ்சூரியா கொரியா ஆகிய தேசங்களிலும் மிகவும் மோசமான சவால்களை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. அப்படிப்பட்ட நெருக்கடியான நேரங்களில், தனது தாத்தாவை வழி நடத்தின அந்தச் சிறிய பறவையின் கதையை அவள் மறக்கவே இல்லை.

"மிகச் சிறிய பிள்ளையாக இருந்தபொழுதே கஷ்டங்கள் வரும்பொழுது இயேசுவிடம் சொல்லவேண்டும் என்று நான் கற்றுக்கொண்டதில் ஆச்சரிய மில்லை" என்று ரோசலிண்ட் கோபோர்த் எழுதியுள்ளார்கள். இயேசுவிடம் கூறிவிட்டு, ஆச்சரியமான பதில்களை அவள் தேவனிடம் எதிர்பார்த்தாள்.

நீல மேல்சட்டைகளும் மின்னும் நீல ஒளி விளக்கும்

டென்வர் நகரை குளிர்காலம் நெருங்கி வந்தது, அதன் பொருள் என்ன வென்றால் அதைத் தொடர்ந்து உறைந்த பனியும் குளிரும் வரப்போகிறது என்பதுதான்.

லின் பெஹ்ரன்ஸ் அப்பொழுதுதான் தென் காலிபோர்னியாவிலிருந்து வந்திருந்தார். ஆசிரியையான அவர் சில ஆராய்ச்சிகளை செய்வதற்காக தனது விடுமுறை நாட்களில் டென்வருக்கு வந்தார். அவருக்கு இரண்டு மகள்கள் இருந்தனர். கையில் பணம் மிக குறைவாக இருந்தது. இரண்டு மகள்களுக்கும் அந்த குளிரை தாங்கிக்கொள்ள அணிவதற்கு வெப்பம்தரும் மேல் சட்டைகள் தேவை.

தன்னால் முடியும் பொழுதெல்லாம், லின் கடைகளுக்கு அவர்களை அழைத்துச் சென்று குளிர்காலத்தில் அணியக் கூடிய மேல்சட்டைகளை வாங்க சென்றார். ஆனால் குறைந்த விலையில் அவர்கள் அளவுக்கான

சட்டைகள் கிடைக்கவில்லை. டென்வரில் முதல் பனித்தூறல் வந்தது. உடனடியாக மகள்களுக்காக ஏதாகிலும் வாங்கிவிட வேண்டும் என எண்ணினார். அந்த நகரிலுள்ள தென்பகுதியில் ஒரு பெரிய கடை இருந்தது. அங்கு ஏதாகிலும் குறைந்த விலைக்கு வாங்க இயலும் என அங்கே சென்றனர். அங்கே சிறுவர்களுக்கான பகுதியில் அவர்கள் விரும்பிய மேல் சட்டைகள் இருந்தன. எல்லா குளிர் நிலைகளுக்கான மேல் சட்டைகள், நீல நிறம், உள்ளே மெல்லிய கம்பளித்துணி, அதுவும் இரண்டு மகள்களுக்கும் ஏற்ற அளவுகளில் இருந்தன. தேவனே, உமக்கு நன்றி.

அதற்கான விலையை பார்த்ததும் துதி செலுத்திய லின்னுக்கு பயம் ஏற்பட்டது. ஆனால் அந்த மேல்சட்டைகள் மிகவும் அதிக விலையுள்ளவை. அவற்றில் ஒன்றைத்தான் வாங்க பணம் இருந்தது. அதனால் எந்த மகளோனும் மேல்சட்டை இல்லாமல் குளிரில் நடுங்க வேண்டிவரும்?

வேறு வழியின்றி, கண்களில் நீர் மல்கியது. லின் மற்றொரு கடைக்கு சென்றார். அங்கேயும் ஒன்றும் கிடைக்கவில்லை.

திரும்பி காரில் வரும்பொழுது தேவனண்டையில் ஜெபம் செய்தார்.

"தேவனே, நான் என்ன செய்வேன்? இந்த பிள்ளைகளுக்கு மேல்சட்டை மிகவும் தேவையாக உள்ளது. அது ஆடம்பரமல்ல, அது ஒரு தேவை" தன் மனதில் கடந்த மாதங்களில் நடந்த சம்பவங்களையெல்லாம் சிந்தித்தார். ஒருவேளை அது தவறா? அவளுடைய விடுமுறை நாட்களை இங்கே ஆராய்ச்சி செய்ய வேண்டியிருந்தது. அல்லவா? தான் சுயநலமாக முடிவெடுத்து விட்டேனோ? லின் சந்தேகமும் போராட்டமும் அடைந்தார்.

ஏமாற்றத்துடனும் கவலையுடனும் லின் வீட்டுக்கு திரும்பினார். வேறு என்ன செய்யமுடியும்? திரும்பும் வழியில், அந்த பெரிய கடையை கடந்து செல்லும்பொழுது, கார்கள் நிறுத்துமிடத்தில் தன் வண்டியை நிறுத்தினார்? இந்த நேரத்தில் மகள்கள் இருவரும் மறுபடியும் கடைக்குள் போவதை விரும்பவில்லை. "வீட்டுக்கு போகலாம்" எனக் கூறினர். ஆனால் லின் வண்டியை அங்கே நிறுத்தி ஜெபம் செய்தார். அப்பொழுது மல்கியாவிலிருந்து ஒரு வசனம் நினைவுக்கு வந்தது. மல்கியா மூன்றாம் அதிகாரத்தில் அந்த வாக்குதத்தம் இருக்கின்றது. ஒருவன் கர்த்தருக்கு தசமபாகங்களை கொடுப்பதில் உண்மையாக இருந்தால் "வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கப்

...னை மாட்டேனோ?'' என்று கர்த்தர் சொல்லுகிறார். லின் தனது வரு...னம் குறைவாக இருந்தாலும் கொடுப்பதில் உண்மையாக இருந்தார். ...ர்த்தருடைய அந்த வாக்குத்தத்தை உரிமையாக்கி ''வானத்தின் பலகணி...களை திறக்கும்படியாக'' ஜெபித்தார்.

கர்த்தர் என்ன செய்வார் என அறியாதிருந்தும் அவர்கள் மறுபடியும் அந்த கடையினுள் சென்றனர். அவர்கள் உள்ளே நுழைந்ததும் சிறுவர்கள் ...குதியில் ஒலி பெருக்கியில் ஒரு அறிவிப்பு வந்தது. ''ஒரு புதிய நீல ஒளி–...சிறப்பு விற்பனை.'' அந்த மின்னும் நீல ஒளிவிளக்கு – அந்த மேல்சட்டைகள் ...இரண்டுமணி நேரத்துக்கு முன்பு அவர்கள் பார்த்த நீலமேல் சட்டைகள் மேல் ...மின்னியது. ஒரு மேல்சட்டையின் விலையில் இரண்டு மேல்சட்டை வழங்கப் ...படும். ''என! உடனே அவர்கள் இரணடு மேல் சட்டைகளை எடுத்துச்சென்ற ...பணம் செலுத்தினர். அவர்கள் வாங்கியவுடன் அந்த 'ஐந்து நிமிட நீல ஒளி ...களுருபாடி விற்பனை' முடிவு பெற்றது.''

லின்னும் அவரது மகள்கள் இருவரும் தேவனுடைய அற்புதமான செயலை ...யும், தங்கள் வாழ்வின் சாதாரண தேவைகளை கவனித்து அவர் உதவுவதை ...யும் கண்டு வியந்து துதித்தனர்.

இவையெல்லாம் 1981ம் ஆண்டு நிகழ்ந்தவை. பின்பு சில ஆண்டுகள் கழிந்தபின் B. லின் பெஹரன்ஸ் காலிபோர்னியாவிலுள்ள லோமா லின்டா பல்கலைக் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

சரியாக ஐந்து கிலோ உருளைகிழங்குகள்

கென்னத், சுசி வேர் தம்பதிகளிடம் கொஞ்சமும் பணமில்லாத நிலைமையில் மிகவும் நொடிந்து போயிருந்தனர். ஆனால் அவர்கள் இன்னும் ஒன்றாகவும் உயிருடனும் இருந்ததே பெரிது.

இரண்டாம் உலகப்போர் மூண்டபொழுது அவர்கள் பிரான்சு நாட்டில் இருந்தனர். கென்னத், வேர் ஒரு சுவிசேஷகராக நாடெங்கும் அறிமுக மானவராக இருந்தார். சுசி ஓவியம் வரைபவர், அவள் வரைந்த படங்கள் லாரே நகரில் இருந்தன. நாசி படைகள் அவர்கள் நாட்டில் புகுந்தபொழுது யூத அகதிகளுக்கு கென்னத் வேரின் இல்லம் அடைக்கலமாக இருந்தது.

ஆனால் அவர்கள் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருந்ததால் அவர்களை நாசிகள் நன்கு கண்காணித்து வந்தனர்.

சுசீக்க ஒரு ஆண்குழந்தை பிறந்த பொழுது, அந்த குழந்தையின் பாதுகாப்புக்காக அவர்கள் நாட்டை விட்டு வெளியேற முயன்றனர். அப்பொழுது கென்னத் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டார். ஆனால் ஒரு ஜெர்மானிய அதிகாரி, அவர் போதகர் என அறிந்ததால் அவரை விடுதலை செய்தார். அவர்கள் செப்டம்பர் மாதம் லூசேன் நகருக்கு வந்து சுவிட்சர் லாந்தில் இருந்தனர். ஆனால் கையில் பணமில்லை.

அந்த செப்டம்பர் மாத சனிக்கிழமை காலை நேரத்தில் சுசீ செய்த ஜெபத்தை என்றுமே மறக்கவில்லை. "தேவனே, எனக்கு ஐந்து கிலோ உருளை கிழங்குகள், இரண்டு கிலோ மாவு, ஆப்பிள்கள், காலிபிளவர், காரட் மற்றும் ஞாயிற்றுக் கிழமைக்காக கறி தேவையாக உள்ளது". அது ஒரு நீண்ட பட்டியல்தான், அவர்களிடமிருந்த மிக குறைவான பணத்திற்கு! அன்று மதிய நேரம் அவர்கள் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டடது. வெளியே ஒரு மனிதர் கூடைநிறைய மளிகை சாமான்களுடன் நின்றார். அவர் யாரென்று தெரியவில்லை. ஆனால் முப்பதிலிருந்து நாற்பது வயதுக்குட் பட்டவராக நீல மேல் சட்டை அணிந்தவராக வேலையாட்களின் உடையுடன் இருந்தார்.

"திருமதி, வேர்" என பெயர் சொல்லி "நீங்கள் கேட்ட சாமான்களை எடுத்து வந்துள்ளேன்" எனக் கூறினார். அவர் பிரஞ்சு மொழியில் பேசினார். அங்குள்ள லாகேன் மக்கள்போல சுவிஸ் மொழி தொனியில் பேசவில்லை.

சுசி குழப்பத்துடன் "நான் எதையும் அனுப்பச் சொல்லி கேட்கவில்லை" ஏதாகிலும் விலாசத்தில் தவறு இருக்கலாம்" என்றாள்.

தனது கணவரை அழைத்தபொழுது கென்னத் வந்தார். "இந்த இடத்தில் இருபத்தைந்து வீடுகள் உள்ளன. ஐயா, இதுதான் நீங்கள் தேடிய சரியான இடம் என நிச்சயமாக அறிவீர்களா?" எனக்கேட்டார். அந்த பொருட்களை எடுத்து வந்தவர், "திருமதி வேர், நீங்கள் கேட்டதை நான் கொண்டு வந்துள்ளேன்" எனக்கூறி உள்ளே சென்று சமையல் அறையிலுள்ள மேஜையில் அவற்றை வைத்தார்.

சுசியை திகைப்படைய செய்தது என்னவென்றால் அந்த மேசையில் இருந்த பொருட்கள் அனைத்தும் காலையில் அவள் ஜெபம் செய்தபொழுது

[illegible] மேலும் சரியாக அதே கேட்ட அளவில் இருந்தன. உதாரணமாக ஐந்து கிலோ உருளைக் கிழங்குகள்! கூசியால் ஒன்றுமே பேச இயலவில்லை. அந்த மனிதர் சென்றதும் அவர்கள் அவர் கட்டடத்தில் இருந்து இறங்கி எப்படி செல்கின்றார்? சிறிய லாரியிலா, அல்லது சாமான் கொண்டு வரும் வண்டி ஏதாவது கீழே நிற்கிறதா என சன்னல் வழியாக பார்த்தனர். ஆனால் அவர் இறங்கி செல்வதை காண முடியவில்லை. கட்டடத்திற்கு முன்னே வண்டியும் இல்லை.

போர் முடிந்த பிறகு அவர்கள் மறுபடியும் பாரிஸ் சென்றனர். அகதிகளுக்காக ஊழியம் செய்தனர். அவர்களுக்கு உணவளித்தனர். உடைகள் அளித்தனர். ஆயிரக்கணக்கான மக்களுக்கு சுவிசேஷம் அறிவித்தனர். எப்பொழுதும் அன்று லாசேனில் அவர்களுக்கு மளிகை பொருட்கள் கொண்டு வந்த மனிதரை தேடிக்கொண்டேயிருந்தனர். ஆனால் காண முடியவில்லை.

அந்த நீல போனட் மலர்கள்

ஜென்னியும் மாருட்டஸ் மில்லியும் தங்கள் முப்பதாவது திருமண நாளை கொண்டாட விரும்பினர். அதற்காக தங்கள் இல்லத்தில் குளிர்காய அனல் அடுப்புள்ள மேடையின் மேல் சுவற்றில் அழகான வண்ண ஓவியம் வைக்க விரும்பினார்? என்ன விதமான ஓவியம்? அவர்கள் டெக்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். டெக்காஸ் மாநிலம் நீலபோனட் மலர்களால் நிறைந்தது. ஆனால் நீலநிற போனட் மலர் நிறைந்த ஓர் வயல் வெளியின் வண்ண ஓவியம் முற்றிலும் பொருத்தமானது.

அந்த விருப்பம் அவர்கள் மாநிலத்தைக் குறித்த பெருமை அல்ல. கடினமான துயரங்கள் நிறைந்ததாக இருந்தன. அவற்றின் மத்தியில் தேவன் எவ்வாறு நடத்தி வந்தார் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளவே. அந்த ஆண்டுகளில் தேவன் அவர்களைவிட்டு, வெகு தொலைவில் சென்று விட்டதுபோல காணப்பட்டது. மிக இருளான இரவுகளை ஆத்துமா கடந்தது போல போராட்டத்தில் இருந்தனர். இப்பொழுது எல்லாம் சிறப்பானதாக மாறியுள்ளன. தேவனுடைய நன்மையும் கிருபையும் தொடர்வதில் மிக மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அவர்கள் திருமண ஆண்டு விழா நாளில் 'ஞாபகார்த்த பொருட்கள்' விற்கும் கடைக்கு சென்றனர். அங்கே ஒரு சித்திரத்தை பார்த்தனர். மாரூட்டலஸ் ஜென்ஸியின் விருப்பத்தை அறிந்தவரானதால் அதைவிட சிறந்த ஒரு ஓவியத்தை தெரிந்தெடுக்க "கலைப் பொருட்கள்" விற்பனை செய்யும் இடத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே டெக்சாஸ் மாநில பிரசித்தி பெற்ற ஓவியர் W.A. ஸ்லாட்டா என்பவர் வரைந்த 'நீலபோனட்' வண்ண ஓவியம் காணப்பட்டது. இருவரும் அதை விரும்பினர். ஆனால் அது அவர்கள் திட்ட மிட்ட விலையைவிட மிக அதிக விலைகொண்டது.

அதனால் அவர்கள் ஆண்டுவிழா அன்று ஓவியம் எதுவும் வாங்க வில்லை. ஸ்லாட்டர் ஓவியத்திற்கு ஒப்பாக வேறு எதுவும் இல்லை.

பின்பு அந்த ஆண்டு முழுவதும் மறுபடியும் துயர நிலை தொடர்ந்தது. ஜென்னியின் அம்மா மரித்து விட்டார்கள். கவலை அளிக்கும் சில சம்பவங்கள் நேர்ந்ததால் தேவன் வெகுதொலைவில் இருப்பதுபோன்று உணர்ந்தனர்.

ஆயினும் அவர்கள் நினைவில் அந்த ஓவியம் இருந்தது... தங்கள் முப்பத்தாராவது ஆண்டு நிறைவை நெருங்குகையில் அதைப்பற்றி சிந்தித்தனர். அவர்கள் அதை வாங்கலாம். ஆனால் தங்களுக்காக அவ்வளவு பெரிய தொகையை செலவிடுவது முக்கியமற்றதாக காணப் பட்டது. அவர்கள் மகள் ஜூன் அதை வாங்கி அளிக்க விரும்பினாள். அவளும் அவளது கணவரும் அந்த ஓவியம் அதிக விலையானதால் அதை வாங்க பெற்றோரின் அனுமதியை விரும்பினர்.

மறுபடியும் வேறொரு ஊரிலுள்ள கடையில் ஸ்லாட்சர் வரைந்த ஓவியங்களை பார்த்தனர். அவையும் விலை கூடியவை.

அந்த இரவில், "தேவனே நான் அந்த ஓவியத்தை வாங்க என் அம்மா அப்பாவும் அனுமதிக்கும்படி செய்யும்" என ஜெபித்தாள். அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லையெனில் தேவன்தாமே நடத்தவேண்டும் என விரும்பினர்.

மறுநாள் அந்த கடைக்கு திரும்பிவந்து 'ஒரு மிக அழகிய போனட் மலர் ஓவியத்தைக் கண்டனர்' அருகிலிருந்த காபி கடையில் அமர்ந்து 'என்ன செய்யலாம்' என சிந்தித்தனர். அங்கே ஜீன் அவளது அப்பாவின் பழைய நண்பர் ஒருவரை சந்தித்தாள். அநேக ஆண்டுகளாக அவரை சந்திக்க வில்லை. அவரிடம் அந்த 'நீல போனட் மலர் ஓவியம்' பற்றி கூறினர். அவரும்

தனது வாழ்க்கைப்பற்றி கூறினார். முடிவாக ஜீன் எழுந்து திரும்பி வந்த பொழுது அதை வாங்கலாம் என முனைத்து இன்னும் சற்று தயங்கினாள். தேவன் திட்டவட்டமாக அதை காட்டவேண்டும் என கருதினாள்.

அவர்கள் அந்த காபி கடையிலிருந்து வெளியே வரும்பொழுது தன் அப்பாவின் பழைய நண்பருக்கு வந்தனம் செய்தனர். அவர் ஜீனுடைய கரத்தை தன் கையில் எடுத்து கூறினார், "அந்த நீல போனட் மலர்களை போய் வாங்குங்கள். உங்கள் அம்மாவையும் அப்பாவையும் அது மிகவும் மகிழ்ச்சியாக்கும்" என்றார். அதுதான் ஜீன் விரும்பின சம்மதம். இது எதிர்பார்க்காத ஒன்றா? அல்ல. ஜீன் இவ்வாறாக உணர்ந்தாள். "வயல் வெளிகளிலுள்ள லீலி மலர்களையும் நீலநிற போனட் மலர்களையும் கவனித்து காக்கும் தேவன் தனது வயது முதிர்ந்த பிள்ளைகளுக்கும் அவர்கள் இன்னலின் மத்தியிலும் மகிழ்ச்சி தர வாஞ்சையாக இருக்கின்றார்?"

8

எல்லாரும் வானிலை பற்றி பேசுகின்றனர். ஆனால்...

இயற்கை சூழலில் அற்புதங்கள்

"எலியா என்பவன் நம்மைப்போல பாடுள்ள மனுஷனாயிருந்தும் மழைபெய்யாதபடிக்கு கருத்தாய் ஜெபம் பண்ணினான். அப்பொழுது மூன்று வருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம் பண்ணினான். அப்பொழுது வானம் மழையை பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது" (யாக்.5:17–18).

எல்லாரும் வானிலை குறித்து பேசுகின்றனர். ஆனால் யாரும் அதற்காக எதுவும் செய்வதில்லை. அது ஒரு பழங்கால அறிவுரை. ஆனால் அதற்கு விலக்குகள் உண்டு, அதை நாம் பார்க்கப்போகிறோம். கால நிலைகளை உருவாக்குகின்ற ஒருவரிடம் உறவாடி பேசும் அளவுக்கு சிநேகிதமாய் இருந்தால் சில வேளைகளில் நீங்கள் ஏதாகிலும் செய்யக்கூடும். திகைப்பூட்டும் உண்மை.

இங்கே நாம் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். பந்து விளையாடுபவனுக்கு மகிழ்ச்சி தருவது. ஆனால் உழவனுக்கோ அது கேடாக இருக்கலாம். ஞாயிறுபள்ளி சுற்றுலாவுக்காக தெளிந்த வானம் வேண்டும் என ஜெபம் செய்தால் அன்று பயிர்கள் காய்ந்து போகக் கூடும். மழைக்காக ஜெபித்தால் நீங்கள் மீன் பிடிக்க செல்வது தடையாகும். போர் நடக்கும் இடங்களில் மழை பெய்வதால் வரும் கடினங்களைப் பற்றி நீங்கள் இங்கே படிக்கலாம். கர்த்தர் யார் பக்கமாக இருப்பார்? மக்களை கோடிக்கணக்கில்

கொன்று குவித்த நாசி படையினருக்கு எதிராக செயல்பட்டார். ஆனால் பிரஞ்சு தேசத்தவரும் உண்மையில் அவ்வளவு தீமை செய்ய முயன்றனரா?

இதில் உள்ள அநேக சம்பவங்கள் எலியாவை உற்று நோக்கி செய்கின்றன. கார்மேல் மலையில் எலியா தீர்க்கதரிசி விக்கிர ஆராதனைக்காரருக்கு சவாலிட்டதை நீங்கள் நினைவில் கொள்ளலாம். அது ஒரு தலைச்சிறந்த காட்சி. வெற்றி பெற்றவன் எல்லாவற்றையும் சுதந்தரிக்கிறான். எந்த கடவுள் மழையை பெய்யப்பண்ண இயலும்? நம் தேவன் தம்மை நிருபிக்க அற்புதங்களை செயல்படுத்துகின்றார். அவர் அதை எலியாவின் நாளில் செய்தார், இன்னும் செய்கிறவராக இருக்கின்றார். திகைப்பூட்டும் விந்தை, ஆனால் உண்மை.

> *"வல்லமையுள்ள தேவனே, வாழ்வின் எல்லா புயல்கள், போராட்டங்களின் மத்தியில் நாங்கள் உம்மில் இளைப்பாற செய்யும் எல்லாம் உம்முடைய கரத்தின் கவனிப்பில் உள்ளன. உம்முடைய சித்தத்தின்படி ஆளுகை செய்கின்றன. உம்முடைய அன்பால் பாதுகாக்கப்படுகின்றன. அமைதியான உள்ளத்துடன் நாங்கள் உம்மில் மகிழ்வோம். இருளும் ஒளியும் உமக்கு ஒன்றுபட்டவை..."*
>
> ஜார்ஜ் தாசன்

யாத்ரீகர்களின் காலநிலை அறிவிப்பு

காலநிலை அறிவிப்பு நன்மையானதாக இல்லை, பல வாரங்களாக அவ்வாறே இருந்தது.

அது 1623ம் ஆண்டு, யாத்ரீகர்கள் தங்கள் புதிய உலகத்தில் (அமெரிக்க) மூன்றாவது கோடை காலத்தை எதிர் நோக்கினர். இரண்டாவது கோடை காலத்தில் அவர்கள் போதுமான அளவு பயிரிடவில்லை. அதனால் பின் இலையுதிர் காலத்திலும் குளிர்காலத்திலும் பாதிக்கப்பட்டனர். அதனால் இந்த ஆண்டு கடந்த முதல் ஆண்டைவிட இரண்டு மடங்கு அதிக அறுவடை தேவை என அறிந்தனர். அதனால் யாத்ரீகர்களின் தலைவர்கள் அங்கே குடியேறியுள்ள யாவரிடமும் மறுபடியும் பயிரிடும்படியாக கூறினர்.

இரண்டாம்முறை பயிரிட்ட பிறகு அங்கே ஒரு மழையற்ற நிலை காணப்

பட்டது. வறட்சி ஏற்பட்டது. ஒவ்வொரு வாரமும் மழையை எதிர்பார்த்து அவர்கள் பன்னிரண்டு வாரங்கள் காத்துக்கொண்டிருந்தனர். மழை வரவில்லை. அமெரிக்காவிலேயே பிறந்து வளர்ந்திருந்த மிக முதியவர்களும் அப்படிப்பட்ட நிலைமையை கண்ட ஞாபகம் இல்லாமல் இருந்தனர்.

யாத்ரீகர்களின் தலைவர் எட்வர்ட் வின்ஸ்லோ அந்த மக்கா சோளப் பயிர்களின் நிலைமையை இப்படி விவரித்துள்ளார். "செடிகளின் இலையும் தண்டு பகுதியும் வாடி தலையை தொங்கவிட்டதுபோல கிடந்தன. நிறமும் மாறிவிட்டது. எல்லாமே மரித்ததுபோல இருந்தன... எங்கள் நம்பிக்கை அற்று போயிற்று. நாங்கள் மிகுந்த கவலையடைந்தோம். எங்கள் மகிழ்ச்சி துயரமாக மாறி விட்டது... ஏனென்றால் இதுவரை எங்கள் கேடகமும் ஆதரவுமாக இருந்த தேவன் கோபத்தினால் எதிர்ப்பதுபோல உணர்ந்தோம். அந்த பஞ்சமும் வறட்சியும் தனிப்பட்ட ஒவ்வொருவரும் தேவனுடன் தன் உறவு எப்படி உள்ளது என ஆராய்ந்து பார்க்க செய்தன. மேலும் அவர்கள் எல்லாரும் ஒன்றாக கூடி தேவனுக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தவும் அதற்காக உபவாச ஜெபம் செய்யவும் முன் வந்தனர். ஒரு நாளை நியமித்து அதில் யாரும் வேலை செய்யக்கூடாது என அறிவித்தனர்."

அதனால் கிருபையுள்ள தேவன் நாங்கள் கூப்பிடுமுன் செவி கொடுக்க ஆரம்பித்துவிட்டார்! காலையில் நாங்கள் வந்தபொழுது வானம் தெளிவாக அந்த வறண்ட நிலை தொடருவது போலவே இருந்தது. ஆனாலும் எட்டு அல்லது ஒன்பது மணிநேரம் ஜெபங்கள் ஏறெடுக்கப் பட்டன. நாங்கள் அந்த இடத்தைவிட்டு கலைந்து செல்லும் முன் எல்லா பக்கங்களிலுமிருந்து மேகங்கள் சூழ்ந்தன. மறுநாள் காலைக்குள் குளிர்ச்சியான, மென்மையான மழை பெய்ய ஆரம்பித்தது. பதிநான்கு நாட்களுக்கு தொடர்ந்து வந்தது. காலநிலை மிகவும் அருமையாக மாறியது. எங்களுடைய காய்ந்த மக்காசோள பயிர்களும் உடனே உயிர் பெற்றன. குன்றிப்போன எங்கள் மன நிலையும் எழுப்புதல் பெற்றது. தேவனுடைய நன்மையும் கிருபைகளும் அப்படிப்பட்டவை

யாத்ரீகர்களின் ஜெபத்திற்கு பதிலாக இரண்டு வாரங்கள் தொடர்ந்து மழை பெய்தது! மற்றொரு யாத்ரீகர் தலைவரும் இவ்வாறு எழுதியி ருக்கின்றார், "பெருங் காற்றோ, இடியோ, அல்லது எந்த தீங்குமின்றி, மெதுவாக மழை வந்தது. பூமி நன்கு நனைந்து ஈரமாகுமட்டும் பரிபூரணமாக வந்தது. மக்காச் சோள பயிற்களும் மற்ற கனி செடிகளும் உயிர் பெற்றன.

அமெரிக்காவின் பூர்வீக குடி மக்கள் அதைப்பார்த்து வியப்படைந்தனர். மேலும் அந்த பூர்வீக குடிமக்கள் தேவன் இவ்வாறாக நன்மை செய்ததைப் பார்த்து அதிசயப்பட்டு மகிழ்ச்சி அடைந்தனர். இவ்வளவு விரைவாக தேவன் பதில் தருகின்றாரே! அவர்கள் மழைக்காக செய்யும் மந்திர வழிபாடுகள், வீணான செயல்கள் என்ற வித்தியாசத்தை உணாந்து கொண்டனர்.

அந்த ஆண்டின் அறுவடை மிகவும் அதிகமாக இருந்தது. அதனால் யாத்ரீகர்கள் அந்த குளிர் காலத்தில் வடக்கே வசித்த அமெரிக்க பூர்வீக குடிமக்களுக்கு சரியான விளைச்சல் இல்லாததால் அவர்களுக்கு மக்காச் சோளத்தை தந்தனர். இரண்டு வருடங்களுக்கு முன் முதல் அறுவடையின் போது நன்றி அறிவிக்கும் ஸ்தோத்திர ஆராதனையை கொண்டாடும் பொழுது அங்கிருந்த பூர்வீக குடிமக்களையும் அழைத்தனர். இப்பொழுது மறுபடியும் கொண்டாடினார்கள். பூர்வீக குடிமக்களின் தலைவன் மாசாவாயிட் என்பவரை கௌரவ விருந்தினராக அழைத்தனர். அவர் தமது மனைவி யையும், மூன்று மற்ற தலைவர்கள் மற்றும் 120 வாலிபர்களையும் அழைத்து வந்தார். மான் வான் கோழி ஆகியவற்றைக் கொண்டுவந்தனர்.

இந்த இரண்டாவது ஸ்தோத்திர ஆராதனை, முன்பு நடந்த முதல் ஆராதனையை விட அதிக மகிமையாக இருந்தது".

ஆஸ்ட்ரூப்புடைய மழை

எலியாவுக்கு ஏற்பட்ட சவால்தான் இது, ஊழியரான அவர் மழையை வருவிக்கக்கூடுமா?

ஜான் ஆஸ்ட்ரூப், ஆப்பிரிக்காவின் ஜூலுஸ் மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தார். அந்த பகுதியிலே ஒரு திருச்சபையையும், பற்றிக்கூட்டமும் உருவாக்க பல ஆண்டுகளாக முயன்று வந்தார். ஆனால் அந்தப் பகுதியை ஆண்டு வந்த அரசின் அதற்கு அனுமதி அளிக்கவில்லை. கிறிஸ்தவத்தை நிந்தையாக எண்ணிய அந்த ஜூலு அரசன் தங்கள் மந்திரவாதிகள் தனக்கு போதும் என்றான்.

பின்பு 1904ம் ஆண்டு ஒரு பயங்கரமான வறட்சி ஏற்பட்டது. டுகெலா நதியின் அந்த பள்ளத்தாக்கிலே வெப்பநிலை 145 டிகிரி மட்டும் எட்டியது.

மரங்களின் இலைகள் சாய்ந்து சருகாயின. பயிர் நிலங்கள் வெப்பத்தால் வெந்து வெடித்தன. பயிர்கள் கருகிவிட்டன. அப்பொழுது அந்த மந்திர வாதிகள் நடனம் ஆடினர். துள்ளிப் பாய்ந்து தாளமடித்து பயங்கர ஓசை எழுப்பினர். வானத்திலிருந்து மழையை அவர்களால் வருவிக்க முடிய வில்லை.

இறுதியாக அந்த ஜுலு அரசன் ஒரு குழுவினரை ஊழியர் ஆஸ்ட்ருப்பிடம் அனுப்பினான். அவர் வந்து தன்னுடைய தேவனிடம் ஜெபம் செய்வாரா? மழைக்காக? அவர் ஒப்புக்கொண்டார். எல்லா பழங்குடி மக்களும் அந்த ஜெபத்திற்காக கூடி வரவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அடுத்த நாள் அதிகாலையில், ஆஸ்ட்டுப் அந்த பள்ளத்தாக்கின் 250 அடிகள் ஆழத்தை இறங்கி கடந்தார். செடிகளில் நிறைய பாம்புகள் இருந்தன. தண்ணீரற்ற டுகெலா ஆற்றினை கடக்கும் பொழுது பள்ளங்களில் ஆங்காங்கே பசியுள்ள முதலைகள் இருந்தன. அந்த கிராமத்தில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஜுலு மக்கள் கூடி வந்திருந்தனர். அவர்கள் முகங்களில் பசியாக இருப்பதன் களைப்பை அவர் கண்டார். தான் ஜெபம் செய்யப் போவதாக அவர் கூறியதும் அந்த இரண்டாயிரம் மக்களும் அப்படியே கீழே மண்ணில் முகங்குப்புற விழுந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். ஆஸ்ட்டுப் பின்பு தேவனை நோக்கி வேண்டினார். அந்த ஜீலு மக்கள் மிகுந்த கஷ்டமான சூழ்நிலயையில் இருப்பதால் தேவன் மழையை அனுப்பி அவர்களுக்கு உதவும்படியாக ஜெபம் செய்தார். அவர் தமது ஆராதனை நேரங்களில் செய்வதுபோல ஜெபத்தை முடித்ததும் கர்த்தருடைய ஜெபத்தை ஏறெடுத்தார். அப்பொழுது தரையிலிருந்து அந்த ஜுலு மக்கள் மெதுவான சத்தத்தில் அந்த ஜெபத்தின் வரிகளை திரும்ப திரும்ப சொல்வது அவருக்கு கேட்டது. அவர் ஆச்சரியடைந்தார்.

ஒன்றும் நடக்கவில்லை, மழை வரவில்லை. மேகங்கள் இல்லை. ஆஸ்ட்டுப் அவர்களுக்கு வந்தனம் சொல்லிவிட்டு திரும்ப மலையின் மேல் ஏறினார். சிறிது நேரம் இளைப்பாறுவதற்காக நின்றார். அப்பொழுது அவருக்கு பின்பாக இடி இடிக்கும் ஓசை கேட்டது! திரும்பி பார்த்த பொழுது ஆஸ்ட்டுப் ஒரு அற்புதமான காட்சியைக் கண்டார். அந்த அரசன் குடியிருந்த இடத்திலும் ஜுலு மக்கள் வீடுகள் இருந்த பகுதியிலும், கருமையான மேகங்கள் சூழ்ந்தன. மின்னல்கள் மின்னின, மழை பெய்ய ஆரம்பித்தது. பின்பு கன மழையாக பொழியத் துவங்கியது.

ஆனால் அரசன் இறந்து விட்டதாக அறிவித்தனர். அவருடைய மகன் இப்பொழுது பொறுப்பெடுத்திருப்பதாகவும், அவரும் ஜூலு மக்களும் மழையை ஆச்சரியமான விதமாக தந்த தேவனுக்கு எப்படி நன்றி செலுத்த வேண்டும் என தங்களுக்கு வந்து சொல்லும்படியாக கேட்டுக் கொண்டனர்.

ஆஸ்ட்டுப் நன்றி செலுத்தும் ஸ்தோத்திர ஆராதனையை நடத்தி அந்த கிராமத்துக்கு வந்தார். அப்பொழுது புல் நான்கு அடிகளுக்கும் மேலாக வளர்ந்திருந்தது. சிறு செடிகளில் மலர்களையும் மரங்கள் மறுபடியும் துளிர்விடுவதையும் காண முடிந்தது. அந்த நிலத்தில் அவை மட்டும் வளரவில்லை. அடுத்த வாரமே அங்கே ஒரு திருச்சபையும், பள்ளிக்கூடமும் துவங்கப்பட்டன!

பிரஞ்சு நாட்டின் படையெடுப்பு நிகழாமல் நின்றுவிட்டது ஏன்?

அமெரிக்காவின் 1740ம் ஆண்டு துவங்கி எழுப்புதல் அனலாக தேசமெங்கும் பரவியது. ஜார்ஜ் வைட் பீல்டு ஒரு புயலைப்போல போதகம் செய்து வந்தார். அவர் செல்லும் இடமெங்கும் மக்கள் மனமாற்றம் பெற்றனர். யோனத்தான் எட்வர்ட்ஸ் தனது மசாஸ்செட் நகர் பிரசங்க மேடையிலிருந்து மனந்திரும்பும்படியாக மக்கள் அழைப்பு கொடுத்துக்கொண்டிருந்தார். வரலாற்று ஆசிரியர்கள் அதனை மகிமையான விழிப்பு உணர்ச்சி என குறிப்பிடுகின்றனர்.

மற்ற சில சம்பவங்களும் நடந்து வந்தன. அமெரிக்காவில் இருந்த இங்கிலாந்து மக்களின் குடியேற்றப் பகுதிகளை தாக்கி அழிக்க பிரஞ்சு படைகள் முயன்றன.

1746ம் ஆண்டு ஜுன் மாதம் பிரஞ்சு வீரர்கள் படையினர் 70 கப்பல்களில் எட்டாயிரம் போர் சேவகருடன், டியுக் அன்வில் என்பவர் தலைமையின் கீழ் வந்தனர். அவர்கள் பிரிட்டிஷ் வீரர்களின் தடைபகுதியை தந்திரமாக கடந்து அமெரிக்க குடியிருப்புகளை நோக்கி விரைந்தனர். இங்கிலாந்திலிருந்து வந்து குடியேறிய யாவரையும் அழித்துவிட அவர்கள் தீர்மானித்திருந்தனர்.

அங்கேயிருந்த கிறிஸ்தவர்கள், ஆபத்து வருவதை அறிந்தனர். தேவனை நோக்கி அந்த படையெடுப்பிலிருந்து தங்களை காப்பாற்றும்படியாக

வேண்டினர். கடலோர பகுதிகளில் எல்லாம் இருந்த திருச்சபைகளில் தேவனுடைய பாதுகாப்புக்காக ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. ஒருவேளை பத்து ஆண்டுகளுக்கு முன்பு இந்நிலை வந்திருந்தால் இப்படி இருந்திருக்காது. ஆனால் இந்த மகிமையான விழிப்புணர்ச்சியில் உள்ள மக்கள் தேவனிடம் திரும்பி சார்ந்திருக்க கற்றுக்கொண்டனர்.

பின் என்ன நடந்தது?

முதலில் காற்றுகளை உதவிக்காக எதிர்பார்த்த பிரஞ்சு படையினர் மிக அமைதியான வானிலையால் தாமதமாக நேர்ந்தது. பின்பு காற்றடிக்க ஆரம்பித்ததும் அது பயங்கர புயலாக மாறியது. பயங்கரமான மின்னலும் அடித்ததால் பல கப்பல்கள் உடைந்தன. அடுத்து கப்பல் மாலுமிகள் மற்றும் போர் வீரர்களுக்கு ஒரு கொள்ளை நோய் வந்து பாதித்தது. பதிமூன்றாயிரம் பேர்கள் அதில் மரணம் அடைந்தனர். இன்னும் அதிக புயல்கள் வந்தன. முழு கப்பல் படையையும் சிதறடித்தன. ஆகஸ்ட் மாத இறுதியில் ஐம்பத்து மூன்று கப்பல்கள் தான் மீதியாக இருந்தன. பின்பு இன்னொரு சூறாவளி காற்று சாபுல் தீவினிடம் வரும்பொழுது அநேக கப்பல்கள் அடித்து செல்லப்பட்டன.

அதனால் கப்பல் படைகளின் ஒரு பகுதிதான் ஹாலிபாக்ஸ் என்னுமிடத்திலுள்ள நோவா ஸ்காட்டியா நகரை அடைந்தது. அங்கே டியுக் அன்வில் பிரஞ்சு நாட்டின் இன்னொரு படையினர் வருவார்கள் என எதிர்பார்த்தார். ஆனால் பலவாரங்களுக்கு முன்பே அங்கே வந்திருந்த அந்த பிரிவினர் டியுக் அன்வில்லின் படைகள் வந்து சேராமல் இருந்ததால் திரும்பி சென்றுவிட்டனர்.

ஹாலிபாக்ஸ் என்ற இடத்தில் வந்ததும் அந்த நம்ப இயலாத சூழ்நிலையால் டியூக் அன்வில் மனச் சோர்வினால் பாதிக்கப்பட்டார். அவருடைய கப்பல்கள் காணாமல் போயின, மீதியிருந்த போர் வீரர்கள் சுகவீனமாகவும் மரிக்கும் தருவாயிலும் இருந்தனர். டியுக்கும் வியாதிப்பட்டு செப்டம்பர் 10ம் நாள் இறந்துவிட்டார். அவருக்கு அடுத்த தலைவர் தற்கொலை செய்து கொள்ள முயன்றார்.

இவ்விதமாக தீமைகள் தொடர்ந்தன. ஆயினும் அந்த பிரஞ்சு படையினர் அந்த சூழ்நிலையிலும் தாக்குதல் நடத்த முயன்றனர். செப்டம்பரில் இன்னும் ஆயிரம் வீரர்கள் மரித்தனர். ஒரு புதிய தலைவன் வந்து அக்டோபர் 13ம் தேதி படையெடுப்பை நடத்தவேண்டும் என உத்தரவிட்டான்.

இதை அறியாமலே இங்கிலாந்திலிருந்து குடியேறிய மக்கள் அக்டோபர் 16ம் தேதியை உபவாசத்துக்கும் ஜெபத்துக்கும் நியமித்து விட்டிருந்தனர். கடலில் தூரத்தில் கப்பல்கள் வருவதை அவர்கள் காண முடிந்தது. அவர்களுடைய புதிய இங்கிலாந்து போதகர் இவ்வாறாக விவரித்து எழுதியிருக்கின்றார். "இதைப் போன்ற ஊக்கமான ஜெபம் என்றுமே நடந்ததில்லை. ஜெபத்தைக் கேட்கும் தேவன்தாமே தமது வல்லமையுள்ள கரங்களை நீட்டி அற்புதம் செய்தார். பார்வோனையும் அவனது சேனைகளையும் சிவந்த சமுத்திரத்தில் கவிழ்த்து போட்டதைப் போன்றே நடந்தது.

அக்டோபர் 15ம் நாள், அந்த உபவாச ஜெபத்திற்கு முந்தின நாள் மற்றொரு பயங்கரமான புயல்காற்று பிரஞ்சு படைகளை தாக்கி அதன் கப்பல்களை அடித்துச் சென்றது. பதினாறாம் நாள் வானம் சற்று தெளிவாயிற்று. பிரஞ்சு படைகள் மறுபடியும் தங்கள் கப்பல்களை ஒன்று திரட்ட முயன்றனர். அது அன்று மாலை இன்னொரு புயல்காற்று மிக வேகமாக கப்பல்களை தாக்கியது. மீதியான கப்பல்கள் தங்கள் திட்டத்தை விட்டு விட்டனர். தள்ளாடி பிரான்சு நாட்டை நோக்கி பின்வாங்கி சென்று விட்டனர்."

கிறிஸ்தவர்கள் குடைகளை எடுத்து வந்தார்கள்

யாராலுமே மழையை பெய்யப் பண்ணக் கூடாத ஓர் சூழ்நிலை.

வட நைஜீரியாவில், 1900 வருடத்தின் துவக்கத்தில் கோடைகாலத்தில் மழையேயில்லாததால் எல்லா பயிர்களும் அழியும் தருவாயில் இருந்தன. பட்டினி கிடக்கும் நிலை நிச்சயமாக இருந்தது.

அங்கிருந்த பழங்குடியினர் வானத்திலிருந்து மழையை வருவிக்க தங்களுக்கு தெரிந்தவற்றையெல்லாம் செய்தார்கள். தங்கள் மேளங்களை பலமாக அடித்தார்கள், தங்கள் ஊதும் கருவிகளால் பலமான சத்தம் எழுப்பினர். தங்கள் தேவர்களை நோக்கி உரத்த சத்தமாக கூப்பிட்டு கூக்குரலிட்டனர். அந்த வார இறுதியில் அவர்கள் ஒரு கன்றுக்குட்டியை பலியிட்டு அதன் இரத்தத்தை குடித்து பச்சையாக மாமிசத்தை புசித்தனர். ஆனாலும் மழை வரவில்லை.

கிறிஸ்தவர்கள் குடைகளை எடுத்து வந்தார்கள்

அடுத்தபடியாக அங்குள்ள முஸ்லீம்கள் மழைக்காக வேண்டுதல் செய்தனர். மிக நம்பிக்கையுடன் அவர்கள் பழங்குடி தலைவரிடம் "நாங்கள் மழை பெய்ய செய்வோம்" என்றனர். பேரோசையானது வானங்களை விழப்பண்ண கூடுமானால் அவர்கள் சத்தத்தில் வானம் வாழ்ந்திருக்கும். அவர்கள் கூக்குரலிட்டு மூன்றுமுறை பகலிலும் மூன்று முறை இரவிலும் வேண்டினார்கள். உபவாசம் இருந்து பின்பு ஒரு ஆட்டை பலிசெலுத்தினர். ஆனாலும் மழை இன்னும் வரவில்லை.

ஒரு ஞாயிறு ஆராதனைக்குப்பின், ஒரு ஆப்பிரிக்க போதகர் அங்குள்ள ஊழியர் தாமஸ் டிகோம் என்பவரை சந்தித்தார். அந்த ஊழியர் சூடான் உள்நாட்டு பணி குழுவினரால் முதலாவதாக அனுப்பப்பட்டவர். அந்த போதகர் கேட்டார். இது நாம் ஜெபிக்க வேண்டிய நேரம் அல்லவா. நமது மக்கள் பார்க்கவும் கேட்கவும் பேசவும் இயலாத விக்கிரகங்களிடம் வேண்டினர். அவைகள் உதவவில்லை. முஸ்லீம்கள் அல்லாவிடமும் முகமது விடமும் ஜெபித்தனர். முகமது மரித்து விட்டார். அல்லாவும் முகமதுவும் உதவி செய்யவில்லை. ஆனால் இயேசு கல்லறையிலிருந்து வெளியே வந்தார். "சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றார். ஆம்: அதனால் இது நாம் ஜெபிக்க வேண்டிய நேரம் என எண்ணுகிறேன் என்றார்.

ஆனால் அடுத்த நாள் இரவில் ஊழியர் தாமஸ் டிகோம், அந்த போதகர் இருவரும் மழைக்காக ஜெபிக்க கூட்டத்தை அழைத்தனர். ஆலய மணி அடித்ததும் அங்கு ஆராதிப்பவர்கள் யாவரும் வந்தனர். வானத்தில் ஒரு மேகமும் இல்லை.

டிகோம், திருச்சபைக்குள் வந்து அங்கே அமர்ந்திருந்தவர்களைப் பார்த்ததும் புன்னகை செய்தார். ஒரு பக்கம் முஸ்லீம்களும், மரித்த மூதாதையர்களை வணங்கும் பழங்குடியினரும் உட்கார்ந்திருந்தனர். அடுத்த பக்கம் கிறிஸ்தவர்கள் எல்லாரும் அமர்ந்திருந்தனர். எல்லா கிறிஸ்தவர்களும் திறந்த குடையை தங்கள் மேல் பிடித்தவர்களாக காணப்பட்டனர்!

குடைகள்? அந்த ஊழியர் கேட்டுமுன்னமே அந்த கிறிஸ்தவர்கள் பதிலளித்தனர்: "நாங்கள் மழைக்காக ஜெபம் செய்ய வந்துள்ளோம். தேவன் ஜெபத்திற்கு பதில் அளிக்கிறார் என விசுவாசிப்பவர்கள் மட்டுமே ஜெபிக்க வரவேண்டும் என நீங்கள் கூறினீர்கள். எங்கள் தேவன் ஜெபத்திற்கு பதில்

தருவார் என விசுவாசிப்பதற்கு அடையாளமாக நாங்கள் எங்கள் தலைகள் மேல் குடைபிடித்து வந்திருக்கிறோம்.''

அந்த கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும் நேரம் வந்தபொழுது: "ஆண்டவரே," எங்களுக்கு மழை தேவை என்று ஊக்கமாக ஒருவர் பின் ஒருவராக ஜெபித்தனர். உடனே வளைவான மேற்கூரையில் மழைத்துளிகள் விழத்துவங்கும் ஓசை அவர்களுக்கு கேட்டது.

ஊழியர் டிட்கோம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. நைஜீரியவிலிருந்த அந்த புதிய கிறிஸ்தவர்கள் விசுவாசத்தின் உண்மை பொருளை அவர் என்றுமே மறக்க இயலாத வண்ணமாக கற்பித்து விட்டனர்.

நீ மழைக்காக ஜெபிக்க செல்கையில் குடை கொண்டுபோக மறவாதே.

தேவன் எவ்வாறு D. Day ஜெபத்திற்கு பதில் அருளினார்...!

அதுதான் உலக வரலாற்றிலேயே மிகப் பெரிய அளவில் நடந்த படையெடுப்பு. 250,000 காலாட் படையினர் 1400 விமானங்கள் 3,300 தாக்கும் கப்பல்கள் 6 போர் கப்பல்கள், எண்ணிமுடியாத அழிக்கும் சாதனங்கள் ஐரோப்பாவுக்குள் ஊடுருவ ஆயத்தமாக நின்ற நேரம். அந்த நாள் ஜுன் 6, 1944. அந்த நாளில் வாழ்ந்த சிலருக்கு அது மறக்க இயலாதது.

அந்த D. Day படையெடுப்பு இரண்டாம் உலகப்போரின் விளைவுக்கு மிக முக்கியமானது. அதனை வென்றே ஆக வேண்டும்.

எல்லாரும் அந்த படையெடுப்பு தவிர்க்க முடியாதது, நிச்சயமாக நிகழும் என அறிந்திருந்தனர். ஆனால் எந்த நேரத்தில் எந்த இடத்தில் என்பது யாருக்கும் தெரியாது. அதிபர் பிராங்க்லின் D. ரூஸ்வெல்ட் அமெரிக்கர்களை ஜெபிக்கும்படியாக அழைத்தார். சிலர் ஒரு நாள் முழுவதும் ஜெபம் செய்யலாமா என கேட்டபொழுது அவர், "இந்த பாதை மிக நீளமானது. விருப்பம் மிக பெரியது. எனவே மக்கள் தொடர்ந்து ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும்'' என கேட்டுக்கொண்டார்.

மன்னர் ஜார்ஜ் VI பிரிட்டிஷ் தேசங்கள் அனைத்தும் ஜெபம் செய்யும்

படியாக அழைப்பு விடுத்தார். "நாம் கடந்த காலத்திலும் இப்பொழுதும் செய்கிற குற்றங்களைப் பற்றி சிந்தியாமல் இருக்கலாகாது. தேவனிடம் அவர் நமது சித்தத்தின்படி செய்ய கேட்காமல், தேவனுடைய சித்தத்தின்படி நாம் செயல்படுகிறவர்களாய் ஆக வேண்டும் என ஜெபிப்போம்."

அந்த நாள் நெருங்கியபொழுது, ஜெனரல் ஜார்ஜ் டேம்ஸ்சே, பிரிட்டிஷ் மற்றும் கனடா இராணுவ தலைவர், இங்கிலாந்தின் போர்ஸ்டௌன் என்னும் இடத்திலுள்ள திருச்சபையில் நானூறு துணை அலுவலர்கள் மற்ற மனிதர் களுடன் ஒரு மணி நேரம் ஜெபித்தார். அதனை அவர் "தன் வாழ்வின் மிகப் பிரதானமான மனம் தொடப்பட்ட அனுபவம்" என்றார்.

அந்த முக்கியமான படையெடுப்பு D. Day ஜூன் 5ம் நாள் துவங்க இருந்தது. ஆனால் மிக ஆபத்தான புயல் வரும் என தெரிந்ததால் சற்று தாமதமாக்கினர். ஜெனரல் ட்வைட் D. ஐசன் ஹோவர் அன்று என்ன நடந்தது என்பதை பின்பு விவரமாக கூறினார்.

"இறுதி கூட்டத்தில் தாக்குதலின் நேரம் ஜூன் 5ம் நாள் காலை 4.00 மணி என நிர்ணயிக்கப்பட்டது. முதலாவது தாக்கும் படைகள் கடலில் இறங்கி விட்டன. ஜூன் 4ம் தேதி காலை மிகவும் மனமடியச் செய்யும் செய்தி வந்தது." மேகங்கள் இறங்கி விட்டன. சூறாவளி காற்றுகள் வீசும், அலைகள் வேகமாக எழும்புவதால் அடுத்தகரை செல்ல முயல்வது ஆபத்தானது. வானிலை அறிவிப்பாளர்கள் விமான படை உதவி செய்வது இயலாது. கப்பற் படையும் துப்பாக்கியை உபயோகிப்பது கடினம், சிறிய படகுகளை கட்டுப் படுத்துவதும் இயலாத காரியம்" என கூறினர்.

அடுத் நாள் காலை 3:30க்கு எங்களது சிறிய கூடாரம் சூறாவளி புயல் காற்றினால் வெகுவாக அசைந்து ஆடியது. அப்பொழுது இந்த கால சூழ் நிலைகளால் எதையும் சிந்தித்து திட்டமிட முடியவில்லை... ஒரு வேளை நாங்கள் ஜூன் 5ம் தேதி கரை இறங்க முயற்சி செய்திருந்தால் மிகப்பெரிய அழிவு ஏற்பட்டிருக்க கூடும்.

ஒன்றிணைந்த நேசநாடுகளின் கால அறிவிப்பாளர் ஜூன் 6ம் நாள் துவங்கி முப்பதத்தாறு மணி நேரம் நல்ல காலசூழல் ஏற்படும் என்றும் அதற்குப் பின் மறுபடியும் ஆபத்தான காலநிலை வரக்கூடும் என்றும் அறிவித்தனர். ஐசன்ஹேவர் உடனே ஜூன் 6ம் நாள் தாக்குதலை செய்ல படுத்த தமது முடிவை தெரிவித்தார்.

ஜூன் 6ம் நாள் அதிகாலை நேரம் நெருங்கி வரும்பொழுதும் புயல் போன்ற வேகமுள்ள காற்றுகள் வீசிக்கொண்டிருந்தன. அவ்விதமான காற்றுகளின் நடுவில் தாக்குதல் துவங்குவது தோல்வியாகவும் முடியலாம்.

ஐசன் ஹோவர் பின்பு நினைவு கூர்ந்தது: "என் வாழ்வில் மிக வேதனையான தீர்மானத்தை எடுக்கும் நேரம் அது. நாம் இன்னமும் தாமதம் செய்ய வேண்டுமா? அப்படியானால் மறுபடியும் இந்த கடல் அலைகள் அமைதியாகி படையெடுப்பை நடத்த இரண்டு வாரம் ஆக கூடும். அவர் முன்னேறி சென்று விட முடிவெடுத்தார்." "சர்வ வல்லமையும் இரக்கமுமுள்ள தேவன் இருக்கின்றார் என்பதை நிரூபிக்க என் வாழ்வில் அதுவரை ஒன்றுமில்லையென்றாலும், அடுத்த இருபத்து நான்கு மணி நேரங்களில் ஏற்பட்ட நிகழ்வுகள் நிரூபித்தன."

திடீரென காலநிலை மாறியது, அந்த D.Day படையெடுப்பு ஐரோப்பாவில் ஊடுருவியது, ஆனால் எதிர்பார்த்ததை விட குறைவான அளவே உயிர் சேதம் ஏற்பட்டது.

ஐரோப்பாவில் நாசி படை தலைவர்களும் தங்கள் காலநிலை அறிவிப்பாளர்களிடம் கருத்தை கேட்டனர். இவ்விதமான புயல் காலநிலைகளில் ஒரு படையெடுப்பு துவங்குவது கூடாத காரியம் என ஜெர்மானிய படை தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதன் விளைவாக தலைமை பொறுப்பில் இருந்த ஜெர்மானிய உயர் இராணுவ அதிகாரிகளும், ஜெனரல் இர்வின் ரம்மல் உட்பட எல்லாரும், ஒரு பிறந்தநாள் விழாவுக்கு சென்றுவிட்டனர்.

நேச நாடுகள் வென்றன. ஒருவேளை அவர்கள் ஜூன் 18 வரை படையெடுப்பை ஆரம்பிக்க காத்திருந்தார்களென்றால் 80 ஆண்டுகள் வரை இல்லாத மிக கடுமையான பனிப்புயலை சந்தித்திருப்பார்கள்.

மூடுபனியில் ஜார்ஜ் முல்லர்

யாரோ ஒருவர் உங்கள் கதவை தட்டி "உங்களுக்கு ஏதாகிலும் பணம் வேண்டுமா?" என கேட்கிறார் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

பிரிஸ்டல், இங்கிலாந்தில் இருந்த ஜார்ஜ் முல்லருக்கு அவ்வாறு சம்பவித்தது. இருபத்தைந்து வயதான இளம் வாலிபராக இருந்தாலும், தனது

தேவைகளுக்காக தேவனிடம் மட்டுமே கேட்கவேண்டும், மற்றவர்களிடத்தி லல்ல என அவர் விசுவாசித்தார்.

இந்த அவரது கொள்கை சோதனைக்குட்படுத்தப்பட்டது. அவரும் அவரது மனைவியும் மனமுடையும் நிலையிலும் அதற்காக ஜெபம் செய்தார்கள். நான்கு மணிநேரம் கழித்து ஒரு பெண்மணி அவரது கதவை தட்டி அந்த தொகைகளை கொடுக்க வந்தார்.

முல்லர் தனது பண தேவைகளைப் பற்றி தேவனிடம் மாத்திரம் சொல்வேன் என உறுதி செய்திருந்தபடியால், இப்பொழுது கதவருகே உள்ள அந்த பெண்மணிக்கு என்ன பதில் கூறுவார்?

ஆனால் அந்த பெண் விடாமுயற்சியுடன் “ஆனால் தேவன் என்னிடம் உங்களுக்கு பணம் தரும்படியாக சொன்னார்” என அறிவித்தார்.

அதனால் தனது ஜெபங்களுக்கு பதில் என கருதி முல்லர் அந்த உதவியை பெற்றுக்கொண்டார். அந்த நேரத்தில் சில வருடங்களுக்குப்பின் அவரும் அவருடைய மனைவியும் திக்கற்ற பிள்ளைகளுக்காக ஒரு இல்லம் துவங்கி இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்களைக் காத்து உணவளிக்க வேண்டும். அதுவும் யாரிடமும் பண உதவி கேட்காமல் தினமும், அதனை நடத்த வேண்டும் என்பதை அவர் அறியாதிருந்தார். தேவன் மேல் முல்லர் கொண்டிருந்த விசுவாசம், அவரது தேவைகளை தேவன் வியத்தகு வண்ணமாக சந்தித்த நிகழ்ச்சிகள் யாவரும் அறிந்ததாகும்.

இன்னும மற்ற சில பகுதிகள் நமக்கு அறிவிக்கப்படவில்லை. அவருக்கு எழுபது வயதான பின் அவர் உலகின் பல நாடுகளில் பயணமாக சென்று தேவன் உண்மையிலேயே மகத்தான செயல்களை தனக்கும் தான் நடத்திய அனாதை சிறுவர்கள் இல்லத்துக்கும் செய்தார் என்பதை சாட்சியாக செய்தி அளித்தார். ஒரு முறை அவர் அட்லாண்டிக் கடலை கடந்து சென்ற பயணத்தில் அவர் சென்ற கப்பல் மிக அடர்ந்த பனி மூட்டத்தை எதிர்கொண்டது. பின்னர் அந்த கப்பலின் தலைவர் அச்சம்பவத்தை கதையாக கூறினார்.

“தேவனுடைய மனிதரான ஜார்ஜ் முல்லர் எங்களுடன் கப்பலில் இருந்தார். நான் கப்பலை ஒட்டும் இடத்தில் இருபத்திரண்டு மணிநேரம் இருக்கிறேன். அந்த அறையைவிட்டு அகலவேயில்லை. யாரோ எனது தோளில் கரம் வைத்து லேசாக விரல்களால் தட்டுவதைப் போல உணர்ந்து வியப்புற்று திரும்பி பார்த்தேன். அவர் ஜார்ஜ் முல்லர்.”

"கேப்டன், நான் கியு பெக்கில் சனிக்கிழமை மதியம் கட்டாயமாக இருக்க வேண்டும். உங்களிடம் அதை சொல்லத்தான் வந்தேன்".

"அது சாத்தியமே அல்ல" என நான் கூறினேன்.

"நான் கடந்த ஐம்பது ஆண்டுகளில் எனது எந்த ஒரு நிகழ்ச்சியையும் கலந்துகொள்ளாமல் இருந்ததில்லை" என அவர் கூறினார்.

"எனக்கும் அது விருப்பம்தான், ஆனால் நான் உதவியற்ற நிலையில் இருக்கிறேன். நாம் மூடுபனிக்குள் இருக்கிறோம்" என பதில் அளித்தேன்.

"நாம் கீழே தேச படங்கள் உள்ள அறையில் சென்று ஜெபம் செய்வோம்" என ஜார்ஜ் முல்லர் சொன்னார்.

நான் அவரை ஏறிட்டு பார்த்து, என் மனதில் எனக்குள் நினைத்தேன். 'இவர் ஏதாகிலும் மனநல மருத்துவமனையில் இருந்து வந்திருப்பாரோ? இப்படி ஒன்றை கேள்விப்பட்டதில்லையே?'

"திரு. முல்லர் அவர்களே, இந்த மூடுபனி எவ்வளவு அடர்த்தியாக உள்ளது என்று உங்களுக்கு தெரியுமா? எனக் கேட்டேன்."

"இல்லை" என பதில் சொன்ன அவர், "என் கண் இந்த மூடுபனி எவ்வளவு அடர்த்தியானது என்பதையல்ல என் வாழ்வின் எல்லா சூழ்நிலைகளையும் ஆளுகை செய்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நோக்கி பார்க்கிறது" என்றார். உடனே முழங்கால் படியிட்டு மிக எளிமையான ஒரு ஜெபம் செய்தார். "தேவனே இது உமக்கு சித்தமானால் தயவுசெய்து இந்த மூடுபனியை ஐந்து நிமிடத்திற்குள் நீக்கி விடும். நீர் எனக்காக ஆயத்தப்படுத்திய கியூபெக் மாநில நிகழ்ச்சிகளுக்கு நான் சனிக்கிழமை போகவேண்டும் என நீர் அறிவீர். அது உம்முடைய சித்தம் என நான் நம்புகிறேன்..."

அவர் முடித்ததும் நான் ஜெபம் செய்ய துவங்கினேன், ஆனால் முல்லர் என் தோள்மேல் தம் கரத்தை வைத்து "நீங்கள் ஜெபிக்க வேண்டாம். ஏனெனில் முதலில் அவர் செய்வாரென நீங்கள் நம்பவில்லை. இரண்டாவது அவர் பதிலளித்து விட்டார் என நிச்சயமாக நம்புகிறேன்" என்றார்.

அந்த கேப்டன், முல்லர் ஜெபத்தில் கேட்டுக்கொண்டபடி அந்த மூடுபனி முற்றிலும் விலகி விட்டதைக் கண்டார். அந்த நாளில் "அந்த தட்ப நிலை மாறியது மட்டுமல்ல அந்த நிகழ்ச்சி என் முழு வாழ்க்கையும் முழுமையாக மாற்றி அமைத்துவிட்டது" என கப்பல் தலைவர் அறிவித்தார்!

மே-ஹ்வா தீவில் வாட்ச்மன் நீ

மிகுந்த அதிகாரத்துடன் செயல்பட்ட கம்யூனிஸ்ட் ஆட்சியின் வாட்ச்மன் நீ கோடிக்கணக்கான சீன கிறிஸ்தவர்களுக்கு மன எழுப்புதலை உருவாக்கினார். அவர் 1952ம் ஆண்டு கைது செய்யப்பட்டு சிறையிலேயே 1972ம் மரித்தாலும், அவரது 'சிறு மந்தை' என்ற இயக்கம் ஆயிரக்கணக்கான இல்ல சபை கூடுகைகளை சீனா முழுவதும் ஏற்படுத்திவிட்டது! இன்று உலக முழுவதும் வாட்ச்மன் நீ எழுதிய தியான நூல்கள் "**கிறிஸ்தவ புனித வாழ்க்கை,**" "**உட்காரு, நட, நில்**" போன்றவைகளால் நினைவு கூரப்படுகின்றார்.

அவர் பதினேழு வயது வாலிபனாக இருக்கும் பொழுது மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டவுடன் வாஞ்சையுள்ள இளம் கிறிஸ்தவருடன் மே. ஹ்வா என்கிற மீன்பிடிக்கும் கிராமம் அமைந்த தீவுக்கு சென்றார். அந்த கிராமம் முழுவதும் கிறிஸ்துவினுடையதாக மாற்றவேண்டும் என அந்த வாலிப ஊழியர்கள் கடினமாக முயற்சி செய்தனர். ஆனால் யாரும் இரட்சிப்புக்குள் வரவில்லை.

ஒவ்வொரு வருடமும் ஜனவரி 11ம் நாள் அந்த தீவில் வழிபடும் கடவுளுக்கு பெரிய பண்டிகை நடக்கும். அந்த கிராம மக்கள் மிகுந்த பெருமையுடன் கடந்த 286 வருடங்களாக அந்த பண்டிகை நாளில் மழை பெய்ததில்லை என அந்த கிறிஸ்தவ ஊழியரிடம் கூறினர். இதைக்கேட்டதும் வாட்ச்மன் நீயுடன் வந்த ஒரு உடன் ஊழியரான வாலிபன் கியோசிங் லீ சற்றும் சிந்தியாமல் சவால் விடுத்தார், "நான் உறுதியாக கூறுகிறேன். எங்கள் தேவனே, உண்மையான தேவன். அவர் இந்த ஜனவரி 11ம் நாள் மழை வரச் செய்வார்" என!

அந்த மக்கள் அவனைப்பார்த்து நகைத்தனர். "ஆனால் மழை வந்தால் நாங்கள் உங்கள் வார்த்தைகளை ஏற்றுக்கொள்வோம்" என்று கூறினர்.

கியோச்சிங் செய்தது வாட்ச்மன் நீயிடம் அறிவிக்கப்பட்டபொழுது அவர் சற்று திகைத்தார். உண்மையில் அந்த உடன் ஊழியரிடம் "ஏன் இப்படி செய்தாய்?" என கேட்கலாமா என நினைத்தார். ஆனால் உடனே அதைப் பற்றி ஜெபம் செய்ய துவங்கனிார். "அப்பா, நாங்கள் எங்கள் எல்லையை மிஞ்சுவிட்டோமோ என்று எண்ணுகிறேன். ஆனாலும் உம்முடைய நாமத்திற்கு அவதூரு ஏற்பட்டுவிடக்கூடாது. நாங்களும் இந்த கிராமத்தை விட்டு போய் விடக் கூடாது" என்று ஜெபித்தார். அப்பொழுது அவருக்கு பழைய ஏற்பாட்டு

ராஜாக்கள் புத்தகத்தில் உள்ள ஒரு வாக்கியம் நினைவுக்கு வந்தது. "எலியாவின் தேவன் எங்கே?" கர்மேல் பர்வதத்தில் எலியாவுக்கும் பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கும் நடந்த போராட்டம் பற்றிய நினைவால் தேவன் அதைப்போலவே இந்த மே. ஹ்வா கிராமத்திலும் செயல்பட சித்தம் கொண்டுள்ளாரோ என சிந்தித்தார்.

கியேச்சிங்கை கடிந்து கொள்ளாமல், வாட்ச்மன் நீ தனது உடன் ஊழியர் அனைவரையும் இந்த கிராம மக்கள் எல்லாரிடமும் அந்த சவாலை அறிவிக்க சொன்னார். எலியாவின் தேவன் ஜனவரி 11ம் நாள் மழை பெய்யும்படி செய்வார். கிராமம் முழுவதும் அந்த செய்தியை கேட்டபொழுது அந்த பகுதி வியப்பில் ஆழ்ந்தது.

ஆனால் ஜனவரி 11ம் தேதி காலை வாட்ச்மன் நீ எழுந்தபொழுது கிறிஸ்தவர்களுக்கு நலமாக முடியும் என கருத இயலாத அளவு சூரியன் வெளிச்சமாகவும் வானத்தில் மேகங்கள் இல்லாமலும் காணப்பட்டது. காலை உணவு நேரத்தில் வாட்ச்மன் நீயும் அவரது உடன் ஊழியரும் ஜெபம் செய்தனர். "பிதாவே, இந்த ஜெபத்தை ஒரு சிறிய நினைவூட்டுதலாக ஏற்றுக் கொள்ளும்" என்று நீ ஜெபம் செய்து முடிக்குமுன் சில மழை துளிகள் கூரையில் விழ ஆரம்பித்தன. சீக்கிரமாகவே மழை கொட்ட ஆரம்பித்தது.

அந்த மழை புயல் நின்றதும் அந்த கிராம பகுதியின் பூசாரி தான் தவறான நாளை பண்டிகைக்கு அறிவித்த விட்டதாகவும் அந்த பண்டிகை ஜனவரி 14ம் தேதிதான் கொண்டாடப் படவேண்டும். 11ம் தேதியல்ல என அறிவித்தான்.

அடுத்த மூன்று நாட்களும், அந்த ஏழு கிறிஸ்தவரும் ஜெபித்துக் கொண்டிருந்தது மட்டுமின்றி கிறிஸ்துவின் செய்தியை அறிவிக்கவும் செய்தனர். அந்த மூன்று நாட்களுக்குள் முப்பது பேர்கள் அந்த கிராமத்தில் கிறிஸ்துவினுடையவர்களாக மாறினர்.

ஜனவரி 14ம் நாளும் 11ம் தேதியைப் போலவே காலசூழ்நிலை மாறி காலையில் புயலும் மழையும் பலமணிநேரம் தொடர்ந்தன. அதன் பின் வந்த சில வாரங்களுக்குள் அந்த தீவில் ஒரு திருச்சபை உருவாகிவிட்டது. பழைய பக்தியின் பிடி முறிந்தது.

வாட்ச்மன் நீ, கியூச்சிங் லீ, மற்ற அந்த ஊழியக் குழுவினர் எலியாவின் காலத்தில் இருக்கிறார் என்பதை நிரூபித்ததை நேரடியாக கண்டு அறிந்தனர்.

9

காணாமற்போன ஆடுகளும் தேடுகின்ற மேய்ப்பரும்

ஜெபத்திற்குப் பதிலளித்து மனம்மாறிய சிறப்பான சம்பவங்கள்

> மேலும் உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத் தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய் பெருகவும், தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகின்ற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமா யிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன் (பிலி.1:9–11).

மனமாற்றம் என்றால் என்ன? அந்த சொல் தனக்குள் ஒரு திருப்பத்தை, மாற்றத்தை, ஒரு புதிதான மறுரூபத்தை அடைதலை குறிக்கின்றது. இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவனோடு நெருங்கி சேரும் ஒரு உறவுக்கு துவக்கமான வார்த்தையாக கிறிஸ்தவர்களாகிய நாம் 'மனமாற்றம்' என்ற சொல்லை பயன்படுத்துகிறோம். ஒரு தனி மனிதன் 'இரட்சிக்கப்படுகிறான்' அல்லது 'கிறிஸ்துவுக்காக ஒரு தீர்மானம் எடுத்துள்ளான், என பல சொற்கள் உள்ளன. இறையியல் படி இதனில் மீட்பு நீதிமானாக்கப்படுதல், ஒப்புரவாக்கப்படுதல் என்பவை உள்ளடங்கியுள்ளன. வேதாகமம் இதனை இந்த எல்லா சொற்களையும் கொண்டு விளக்குகின்றது. எளிமையாக கூறும் பொழுது' 'கிறிஸ்துவுக்குள்' உள்ள ஒரு மனிதன் 'ஒரு புதிய சிருஷ்டி' பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின (2 கொரி.5:17).

இந்த நேரத்தில் சரியான தன்மையைக் குறித்து ஒரு சில கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இரட்சிப்பிற்காக ஜெபிப்பதற்கு சில எளிய

தத்துவங்கள் தேவைப்படுகிறதா? எப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மீட்பு உண்டாகிறதா அல்லது சில நேரங்களில் மக்கள் படிப்படியாக மெதுவாக மீட்கப்படுகிறார்களா? உண்மையில் நீங்கள் கிறிஸ்துவை கண்டு கொண்டீர்களா? அல்லது கிறிஸ்து உங்களை கண்டு மீட்டுக்கொண்டாரா? சிறந்த கல்வியாளர்கள் அதைப்பற்றி அலசி ஆராய விட்டுவிடுவோம். ஆனால் மக்கள் இயேசுவைப் பற்றி அறிந்துகொள்வதற்கு நாம் ஜெபிப்பது தலைசிறந்த காரியம் என அறிந்திருக்கிறோம்.

தேவன் மக்களுடன் இடைபட்டு மக்கள் தம்மிடம் உறவு கொள்வதை விரும்புகிறார் என்ற நம்பிக்கையுடன் நாம் ஜெபம் செய்யலாம். தேவனுடைய ஆவியானவர் மக்கள் மனதில் அசைவு கொடுத்து பாவத்தை குறித்து உணரச் செய்து மனந்திரும்புதலை அடைய செய்ய நாம் ஜெபிக்கலாம். தேவன் பல நேரங்களில் நம்முடைய ஜெபத்திற்கு பதில் தர நம்மை பயன் படுத்துகிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களுடைய அயலகத் தாரை இரட்சிக்கும்படியாக நீங்கள் தேவனிடம் ஜெபிக்கும்பொழுது அதற்காக நீங்கள் எவ்வாறு அம்மனிதரை அணுகி ஏதாகிலும் செய்யலாம், உரையாடலாம் என்பதை சிந்தியுங்கள்.

இயேசுவே என்னில் எதனைக்கண்டு
இவ்வளவு அன்பாக நடத்தி என்னை மீட்டுக்கொண்டீர்?
நீர் தரும் ஆனந்தம் எவ்வளவு பெரியது
இந்த நம்பிக்கை சிந்தனைக்கு மேலானது!

ஹென்றி கோலின்ஸ்

புகைப்பட பகுதியில் கண்ட முகம்

ஸ்டேவ் டேவிஸ் பல ஆண்டுகளாக ஜெபிக்கவேயில்லை. இப்பொழுது அவருக்கு ஜெபம் செய்ய நேரமும் கிடையாது. அவருக்கு சொந்தமாக மூன்று விமானங்கள், விமானம் ஒட்ட பயிற்சி தரும் பள்ளி வைத்திருக்கிறார். அவர் அதிலே விமானம் ஒட்ட பயிற்சி அளிப்பவராக இருந்தார். இன்னும் அவருக்கு வயது இருபத்து மூன்றுதான்.

பல ஆண்டுகளுக்கு முன் கிறிஸ்தவம் அவருக்கு உண்மையாகக் காணப்

பட்ட காலத்தில் அவர் ஜெபிப்பவராக இருந்தார். ஆனால் அது இப்பொழுது வெகு தூரத்தில் சென்றுவிட்டது.

இப்பொழுது மிக துக்கமான ஒரு உணர்வு அவரை பற்றிக்கொண்டது. ஒருவேளை அவருடைய விசுவாச குறைவு அவரை துயரத்தில் ஆழ்த்தியிருக்கலாம். அதனால் பல ஆண்டுகளுக்குப்பின் முதல் முறையாக அவர் ஜெபித்தார். அவருடைய ஜெபம் இப்படியிருந்தது: "ஆண்டவரே, ஒரு நிமிடம் இதை கேளும். எனக்குள் ஏதோ ஒன்று தேவன் இல்லை எனக் கூறுகிறது. நான் உண்மையில் முன்பு இருந்ததுபோல உம்மை அறிய விரும்புகிறேன். முன்பு எனக்கு இருந்ததைப் போன்ற விசுவாசம் இப்பொழுதும் இருக்க விரும்புகிறேன். நான் சிறு வயதிலிருந்து வளர்ந்த பொழுது அறிந்ததை கண் மூடித்தனமாக ஏற்கமாட்டேன். நீர் உண்மையாக ஜீவகின்றீர் என்பதை எனக்கு காட்டினால் நான் உமக்கு ஊழியம் செய்வேன். ஆனால் எனக்கு நிச்சயமாக தெரியவேண்டும். நான் அறிந்ததுபோல நடிக்கமாட்டேன்."

அந்த ஜெபத்திற்குப் பின் எதுவும் விசேஷமாக நடந்துவிடவில்லை. உண்மை யிலேயே தேவன் இருப்பாரானால், அவர் என்னைக் குறித்து கரிசனை உடையவராக இருப்பாரானால் வழக்கு மாறான ஏதேனும் நடந்திருக்க வேண்டும்.

ஸ்டெவ் டேவிஸ் மெக்சிகோவில் வளர்ந்தவர். அவரது தந்தை சுவிசேஷ ஊழியர்களுக்காக விமானம் ஓட்டுபவர் அவரது தந்தைமேல் மிகவும் மதிப்பும் அன்பும் கொண்டவர். தானும் விமானம் ஓட்ட விரும்பினார். உண்மையில் ஸ்டெவ் தான் பெரியவனானதும் தனது தந்தையைப் போல் ஊழியத்திற்கு என விமானம் ஓட்ட விரும்பினார்.

அவரது பெற்றோர்கள் "மகிமையின் வாசல்கள் வழியாக" (Through gates of Splendor) என்ற புத்தகத்தை அவருக்கு படிக்க தந்தனர். அதனை எழுதியவர் திருமதி. எலிசபெத் எலியட் 1956ல் ஈக்வடார் பகுதியில் ஊழியத்திறகாக சென்று அங்குள்ள ஆவுக்கா இனத்து மக்களால் கொல்லப்பட்ட 5 மிஷனரிகள் தொடர்பான சம்பவங்கள். அந்த புத்தகத்தில் எழுதப் பட்டிருந்தன. அவர்களில் ஒருவரான நேட் செயின்ட் என்பவரது வாழ்க்கை ஸ்டெவ்வின் மனதை கவர்ந்தது. நேட் செயின்ட், அந்த விமானத்தை ஓட்டிச் சென்றவர், மற்றவர்களுடன் அவரும் உயிரிழந்தார். அவர் சிறுவனாக இருக்கும்பொழுது ஸ்டெவ் தான் நேட் செயின்ட் எனவும் தென் அமெரிக்க காடுகள்மேல் விமானம் ஓட்டுவதுபோலவும் கற்பனை செய்ததுண்டு.

ஆனால் அவர் வாலிபனான பொழுது கிறிஸ்தவத்தைப் பற்றி சில சந்தேகங்கள் ஏற்பட்டதால் அதைப் பற்றி சிந்திக்க மறந்தார். அவரது உலகப் பிரகாரமான வாழ்க்கையில் முன்னேறினார். ஆனால் தனக்குள் ஒரு வெறுமையை உணர்ந்தார். அந்த நேரத்தில் அவர் மறுபடியும் ஜெபம் செய்ய முயன்றார். ஆனால் அதில் வெற்றி பெறவில்லை.

பின்பு ஒரு நாள் தனது பழைய புத்தகமான *"மகிமையின் வாசல்கள் வழியாக"* என்பதைக் கண்டார். அந்த புத்தகத்தை திறந்தபொழுது அதன் மத்தியில் புகைப்படங்கள் அடங்கிய ஒரு பகுதியைக் கண்டார். அதில் ஒன்று நேட் செயின்டினுடைய மகனின் புகைப்படம் அந்த சிறுவனின் படத்தைப் பார்க்கையில் அவனுடன் இனம் புரியாத ஒரு உறவை தனக்குள்ளதாக உணர்ந்தார். அவர்கள் இருவருமே விமானம் ஒட்டிச்சென்று ஊழியம் செய்பவர்களின் மகன்கள். அப்படியே கணக்கிட்டுப் பார்த்தால் நேட் செயின்டின் மகனும் தன்னுடைய வயதே உள்ளவனாக இருக்கக் கூடும் என நினைத்தார். அந்த நேரத்தில், அந்த பழைய புத்தகத்தை பார்த்துக் கொண் டிருக்கும்பொழுது அவருக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டது. "ஒரு வேளை நேட் செயின்டின் மகனும் தனது விசுவாசத்தை இழந்திருப்பாரோ?"

ஒரு நாள் அவர் தனது விமான பயிற்சியை நடத்தும் இடத்தில் இதைப் பற்றி சிந்தித்தவராக நின்றார். அப்பொழுது ஒரு விமானம் வரும் சத்தம் கேட்டது. அப்பொழுது அதிகமான மழை பெய்ய ஆரம்பித்தது. அந்த சிறிய செஸ்னா 172 விமானம் தரையை தொட்டு அந்த ஒரு பாதையில் இறங்கியது. பின்னர் அதிலிருந்து இரண்டுபேர்கள் மழையில் நனைந்தபடி வந்தனர். அருகில் தங்குமிடம் உள்ளதா? எனக் கேட்டனர்.

அங்கிருந்த ஸ்பெயின் நாட்டு அலுவலர்களிடம் ஸ்டெவ் இதை மறுபடியும் கேட்டபொழுது அந்த விமானம் ஒட்டி வந்தவர் ஸ்பானிய மொழியில் பேச துவங்கினார்.

"எங்கே இவ்வளவு அருமையாக ஸ்பெயின் நாட்டு மொழியை பேச கற்றுக் கொண்டீர்கள்?" என ஸ்டெவ் கேட்டார். அப்பொழுது அந்த விமானி "எனது பெற்றோர் ஈக்வடாரில் ஊழியம் செய்தனர். நான் அங்கேதான் வளர்ந்தேன்" என்று பதிலளித்தார்.

ஈக்வடார்? ஸ்டெவ் உடனே "மகிமையின் வாசல் வழியாக" என்ற புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள ஐந்து இரத்த சாட்சிகளான ஊழியர்களைப் பற்றி கேள்வி

பட்டதுண்டா?'' எனக் கேட்டார். அந்த விமானத்தில் வந்தவர் மிக மெதுவாக பதிலளித்தார். "அவர்களில் ஒருவர் எனது தந்தை''

ஆம்! அந்த விமானி நேட் செயின்டினுடைய மகன், ஸ்டெவ் டேவிஸ் சிறுவனாக அந்த புகைப்படத்தில் பார்த்தாரே அதே சிறுவன்தான் இப்பொழுது! வாலிபராக வந்துள்ளார். அவரது பெயரும் ஸ்டெவ்!

இது ஒரேவிதமாக சம்பவித்தது எவ்வாறு? தேவன் ஆச்சரியமான வகையில் தன் ஜெபத்திற்கு பதில் தருகிறாரா? ஸ்டெவ் டேவிஸ் அறிய முடியவில்லை. ஆனால் அவர் ஸ்டெவ் செயின்டையும், அந்த உடன் பயணியையும் தன்னுடன் தங்கும்படியாக அந்த இரவில் அழைத்தார். அதனால் வெளியே தங்கும் செலவும் அவர்களுக்கு இராது.

அவர்கள் இரவில் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தனர். ஸ்டெவ் டேவிஸ்க்கு நிறைய கேள்விகள் இருந்தன. ஆனால் அவை அனைத்துக்கும் நேட் செயின்டின்மகன் பதில் கூறினார். "தேவன் எனது ஜெபத்திற்கு மிகவும் தனிப்பட்ட அரிய விதமாக, மிக அன்பாக பதில் தந்தார்'' என ஸ்டெவ் டேவிஸ் சாட்சியாக அறிவித்து தனக்குள் மறுபடியும் பேரானந்தம் இருப்பதை உணர்ந்தார்!

ஆப்பிரிக்கர் சந்ததியினருக்கு உதவும் சங்கமும் இரகசிய இனவெறியாளர் கழகமும்

"நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நான் உங்களை நேசிப்பேன், உங்களுக்காக ஜெபம் செய்வேன்''.

இதுதான் வேட் வாட்ஸ் என்பவரது சவால். அவர் ஒக்லஹாமைவை சேர்ந்த ஆப்பிரிக்க சந்ததியினருக்கு உதவும் சங்க தலைவர். அவர் ஜானி லீ கிலேரி என்ற அதே மாவட்ட இரகசிய இன வெறியாளர் கழக தலைவனிடம் பேசிக்கொண்டிருந்தார்.

அது 1979ம் ஆண்டு, ஒரு வானொலி ஸ்தாபனம் அவர்கள் இவரையும் விவாதம் செய்ய அழைத்திருந்தது. அந்த நிகழ்ச்சிக்கு முன் வாட்ஸ் தனது கையை நீட்டினார். கிலேரி கை குலுக்க மறுத்துவிட்டார். வாட்ஸ் ஒரு கருப்பு மனிதர், அவரது கையில் அதிகமாக பயன்படுத்தப்பட்டதால் பழமையானதாக

ஆகிவிட்ட ஒரு வேதாகமம் இருந்தது. கிலேரிக்கு 20 வயதுதான், ஆனால் அந்த மாநில இனவெறியாளர் கழகத்தில் தீவிர உறுப்பினர் அவர்கள் தங்களை "சிறந்த வலுசர்ப்பம்" என்று அழைத்துக் கொள்வார்கள்.

வாட்ஸ் இரண்டாவது முறை தனது கரத்தை நீட்டினார், அவரே கிலேரியின் கரத்தைப் பற்றி குலுக்கினார். "ஹலோ Mr. க்லேரி" என வாழ்த்தி மிக அன்புடன் 'நான் போதகர். வாட்ஸ், நான் உங்களை நேசிக்கிறேன், இயேசு உங்களை நேசிக்கிறார்' என உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன் என்றார்.

பின் வாட்ஸ் சில வேத வசனங்களை கூறி க்லேரியிடம் அவரது தனிப்பட்ட விசுவாசத்தைப் பற்றி கேட்டது அந்த வானொலி விவாத நிகழ்ச்சி முற்று பெற்றது. ஏனெனில் க்லேரி அந்த நிகழ்ச்சியை நிறுத்தி "இதற்குமேல் நான் எதுவும் கேட்க தயாராக இல்லை" எனக் கூறி அந்த இடத்திலிருந்து எழுந்து சென்று விட்டார்.

அவர் அந்த கட்டடத்தை விட்டு வெளியே செல்லும் பொழுது க்லேரியும் வாட்ஸ்சும் மறுபடி சந்தித்தனர். க்லேரி தனது வழியில் நின்ற அவரைத் தள்ளி செல்ல முயன்றபொழுது, வாட்ஸின் கைகளில் சிறிய குழந்தை ஒன்று இருந்தது. "இது என் மகள் டியா" என வாட்ஸ் கூறினார், "நீங்கள் எல்லா கருப்பு இன மக்களையும் வெறுப்பதாக கூறுகின்றீர்கள். இந்த குழந்தையையும் கூட நீங்கள் வெறுக்க முடியுமா?".

க்லேரி மறுபடியும் அந்த அழகான குழந்தையை ஒரு முறை பார்த்துவிட்டு கடந்து போய்விட்டார். அவர் போகும் பொழுது அந்த போதகர் சொல்வதைக் கேட்டார். "நான் உங்களை நேசிக்கிறேன், உங்களுக்காக ஜெபிக்கிறேன். நீங்கள் விரும்பினாலும் அல்லது விரும்பவில்லை என்றாலும்,"

அடுத்து பத்து வருடங்களில், க்லேரி என்னென்னவோ செய்து வாட்ஸ் தன்னை வெறுக்கவும், தனக்காக ஜெபம் செய்வதை நிறுத்திவிடவும் முயற்சி செய்தார். க்லேரியின் மனிதர்கள் வாட்ஸ்க்கு தொலைபேசியில் பயமுறுத்தினர். அவருடைய வீட்டு சன்னல்களை உடைத்தனர். அவரது வீட்டுக்கு வெளியே கொடும்பாவி கட்டி எரித்தனர்.

அவரது சபை கட்டிடத்துக்கு தீ வைத்தனர். அவரது பிள்ளைகளை பயமுறுத்தனிர். அதனால் காலையில் பாதுகாப்பு ரோந்து வரும் காவலர்கள் வாட்ஸின் பிள்ளைகளுக்கு பாதுகாப்பாக பள்ளிவரை சென்றனர். ஆனால் போதகர் வாட்ஸ் தொடர்ந்து ஜெபிப்பார்.

க்லேரியும் தனது கழகத்தில் வளர்ந்து 'வியத்தகு ராஜரீகத் தலைவன்' எனப் பெயர் பெற்றான். ஆனால் அவனது தனிப்பட்ட குடும்ப வாழ்க்கை உடைந்து போனது. அவனது மனைவி விவாக ரத்து செய்தாள். சிறு குழந்தையான தன் மகளை வளர்க்க அவனுக்கு அனுமதி கிடைக்கவில்லை.

விரக்தியில் ஆழ்ந்து போனான். பின்பு அவன் இவ்வாறு மக்களை வெறுக்கும் எல்லா குழுக்களையும் ஒன்று சேர்க்க முயற்சி செய்தான். கொடூரமான இளைஞர்கள், பிற இனத்தை அழிக்கும் புதிய நாசி கொள்கையினர், கருப்பானவர்களை வெறுப்பவர்கள் வெறுப்பினால் மேற்கொள்ளப்படுவதை கண்டபோது அவனால் அதை புரிந்துகொள்ளவே முடியவில்லை. விஷம்போல அது அவனுக்கு வியாதியை உண்டுபண்ணுவதாக கண்டான். அந்த கழகத்திருந்த தனது பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டான். தனது நிலை குலைந்த வீட்டிற்கு சென்றான். துப்பாக்கியை எடுத்து தனது தலையில் வைத்து எல்லாவற்றிற்கும் முடிவு காண விரும்பினான்.

ஆனால் அங்கிருந்து அலமாரியில், ஒரு பழைய வேதாகமத்தை பார்த்தான். அதைப்போல ஒன்றை போதகர் வாட்ஸ் தனது கையில் வைத்திருந்ததை, அநேக ஆண்டுகளுக்குமுன் தான் கண்டது நினைவுக்கு வந்தது. அவன் அந்த வேதாகமத்தை எடுத்து திறந்தபொழுது அதில் கெட்ட குமாரனின் உவமை உள்ள வேதபகுதி வந்தது. அதை படித்தான், மூன்றுமுறை படித்துவிட்டு அப்படியே முழங்கால் படியிட்டு விழுந்தான்.

தன்னை யாருக்கும் அறிமுகப்படுத்திக கொள்ளாமல், எல்லா இனத்தவரும் கூடுகிற ஒரு திருச்சபை ஆராதனைக்கு செல்ல ஆரம்பித்தான். இரண்டு வருடங்கள் கடந்தபின் அவன் போதகர் வாட்ஸ் இடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டான்.

"போதகர் வாட்ஸ்?"

அந்த கருப்பு போதகர் உடனே அவனது சத்தத்தை அறிந்துகொண்டார். "ஹலோ, ஜானி லீ" என்றார்.

அப்பொழுது ஜானி லி க்லேரி அவரிடம் கூறினான். "இரண்டு ஆண்டுகளுக்கு முன் இயேசுவுக்கு என் இதயத்தை கொடுத்தேன்."

"தேவனுக்கு ஸ்தோத்திரம்" என வாட்ஸ் மிகுந்த சத்தமாக துதித்தார். "நான் உங்களுக்காக ஜெபிப்பதை நிறுத்தவேயில்லை."

அந்த உரையாடல் முடியுமுன் வாட்ஸ் தனது திருச்சபையில் பேசும்படியாக கிலேரியை அழைத்தார். கிலேரி அப்படியே செய்தார். தேவன் எவ்வாறு வெறுப்பினால் நிறைந்திருந்த தனது இதயத்தை அன்பாக மாற்றினார் என சாட்சி பகர்ந்தான். அந்த ஆராதனையின் முடிவில் ஒரு வாலிப பெண் முன்னால் ஒடி வருவதைக் கண்டான். க்லேரி அப்பொழுது வாட்ஸ் கண்ணீர் வடிப்பதைக் கண்டான். "ஜானிலீ, இவள் யாரென்று உங்களுக்கு தெரியவில்லையா? இதுதான் டியா. எனது குழந்தை மகள்!"

தாய்மார்கள் ஜெபிக்கும் பொழுது என்ன நிகழ்கின்றது?

பேரறிவுள்ள மேதை, பேராசிரியர், அரசியல் தலைவர், மிகப் புகழ் பெற்றவராக, பவுல் அப்போஸ்தலருக்குப் பின்பு கருதப்பட்டவர். கிறிஸ்தவத்தின் இரண்டாயிரம் வருட வரலாற்றில் அகஸ்டின் என்பவரது பெயரைப் போல பிரகாசமாக காணப்பட்டவை ஒரு சில பெயர்கள்தான் கத்தோலிக்கரும் புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவரும் அவரை கனம் பண்ணுகின்றனர். ஆதி திருச்சபைகளில் 'அகஸ்டினின் முறைமை' என்ற ஆராதனையின் நடைமுறை அவரது பெயரில் இருந்து உருவானது. புராட்டஸ்டன்ட் புரட்சியாளர்களில் லுத்தரும் கல்வீனும் அகஸ்டினுடைய கருத்துகளை வேதாகமத்திற்கு அடுத்ததாக மதித்தனர்.

ஆனால் தனது தாயாருடைய ஜெபங்கள் இல்லாவிட்டால் அகஸ்டினுடைய வாழ்க்கை எவ்விதமாக முடிந்து விட்டிருக்கக்கூடும் என நீங்கள் அறியும் பொழுது வியப்படைவீர்கள். அவருடைய தாயாரின் பெயர் மோனிக்கா.

வட ஆப்பிரிக்காவின் டாகெஸ்ட் என்னும் சிறிய நகரில் கி.பி.354ம் ஆண்டில் அகஸ்டின் பிறந்தார். தனது கல்விக்காக கார்ட்டோஜ் எனப்பட்ட ஊருக்கு அனுப்பப்பட்டார். அந்த ஊரின் வாழ்க்கை அவரை சிற்றின்பங்களுக்கும் ஒழுங்கற்ற செயல்களுக்கும் கொண்டு சென்றது. அவரது மிகுந்த அறிவினால் வந்த பெருமை அவரை மதபேதங்களுக்கும் கடவுள் இல்லை என்ற கருத்துகளுக்கும் வழி நடத்திற்று. அகஸ்டின் திருமணம் செய்யாமலே ஒரு பெண்ணுடன் வாழ்ந்து அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது.

அவருடைய தேவ பக்தி மிகுந்த தாயார் மனமுடைந்து வருந்தினார்கள்.

அகஸ்டின் அந்த ஊரைவிட்டு ரோமாபுரிக்கு சென்றது. அவரது தாயார் மோனிக்காவின் ஜெபங்கள் பதில் பெறாமல் போய்விடுமோ என்பதுபோல காணப்பட்டது. அஞ்ஞானம், தீய ஒழுக்கம் ஆகியவற்றுக்கு பேர் பெற்றதாக ரோமாபுரி நகரம் நான்காவது நூற்றாண்டில் இருந்தது. தனது மகன் அங்கே போவதையே மோனிக்கா விரும்பவில்லை. ஆனால் அவர்கள் நம்பிக்கை இழக்கவில்லை. மிகச் சிறந்த இலக்கியமாக கருதப்படும் அவரது சுய சரிதையில் பாவ அறிக்கையில் அகஸ்டின் இவ்வாறாக நினைவு கூர்ந்து எழுதியிருகின்றார்: " என் அம்மா எனக்காக மிகவும் அழுதார்கள். மரித்த சிறு குழந்தைகளுக்காக அழும் தாய்மாரை விட அதிகமாக அழுதார்கள். அதை நீர் கேட்டீர், என் தேவனே, நீர் கேட்டருளினீர்."

அகஸ்டின் இன்னும் எழுதியிருகின்றார்: "ஒன்பது ஆண்டுகள் அங்கே கடந்துவிட்டன, நான் ஆழமான சேற்றிலும், குழியிலும் பொய்யான வாழ்க்கையிலும் புரண்டு கொண்டிருந்தேன். அதிலிருந்து எழுந்திருக்க முயன்றால் அதைவிட ஆழமாக விழுந்தேன். ஆனால் அந்த நாட்களின் நேரங்களிலெல்லாம் தூய்மையான தேவ பக்தியுள்ள என் விதவை தாயார் எனக்காக மன்றாடி ஜெபம் செய்து கொண்டிருந்ததை நிறுத்தவில்லை."

அவரது அம்மா ஒரு பேராயரிடம் தனது மகனிடம் பேசி விவாதிக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் அந்த பேராயர் அகஸ்ட்டினை பார்த்த பொழுது அவர் மிகுந்த அழுத்தமான அபிப்பிராயங்கள் உடையவராக இருப்பதைக் கண்டுகொண்டார். அதனால் அவர் மோனிக்காவிடம், "அவரை இப்படியே விட்டு விடுவோம். அவருக்காக தேவனிடம் ஜெபம் மட்டுமே செய்ய இயலும். அவரே, வேதத்தைப் படிப்பதனால் எது தவறு, தேவபக்தியற்ற வாழ்க்கை எவ்வளவு கொடியது, என அறிந்துகொள்வார்" எனக் கூறினார்.

ரோமாபுரியில் அகஸ்டின் அங்குள்ளவர்களுக்கு 'அழகாக பேசும் திறன்' பற்றி போதித்தார். பின்பு இன்னும் ஒரு நல்ல வேலைக்கு சென்றார். அங்கே அவர் மிலான் நகரத்து பேராயர் அம்புரோஸ் என்பவரது நெருங்கிய நண்பரானார். அம்ரோஸ் அவர்களின் உபதேசங்களும், வேதாகம வியாக்கியானங்களும் அகஸ்டினை மிகவும் கவர்ந்தன. முடிவில் அவர் மனந் திரும்பினார். அவர் தனது அம்மாவுக்கு அந்த இரட்சிப்பின் செய்தியை சொன்னபொழுது "அவர்கள் மகிழ்ச்சியினால் துள்ளி" நாங்கள் வேண்டு

கிறதற்கும் கேட்கிறதற்கும் மிகவும் அதிகமாக செய்ய வல்லவராக இருக்கிற தேவனே, உமக்கு ஸ்தோத்திரம் என துதித்தார்கள். கி.பி.387ம் ஆண்டு உயிர்த்தெழுந்த பண்டிகையின் ஞாயிறு அன்று, மிலான் நகரத்தின் அருமை யான பேராலயத்தில் அகஸ்டினுக்கு அம்ரோஸ் ஞானஸ்நானம் கொடுத்தார். அதை பார்த்த தாயார் மோனிக்காவின் கன்னங்களில் ஆனந்த கண்ணீர் தாரைதாரையாக வடிந்தது.

“ஒவ்வொரு நாளும் விசுவாசத்துடன் நான் கெட்டுப்போகக் கூடாது என ஜெபம் செய்து வந்த என் அம்மாவுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்” என அகஸ்டின் தம் குறிப்பில் எழுதினார்.

பின்பு, அகஸ்டின் தமது தாயாரை மறுபடியும் வட ஆப்பிரிக்காவுக்கு அழைத்துச்சென்று விட்டபொழுது அவர்கள் மிகவும் வியாதிப்பட்டார்கள். “மகனே, எனக்கு இந்த வாழ்வில் இனியும் சந்தோஷமானது எதுவும் இல்லை, என்னுடைய நம்பிக்கைகள் யாவும் நிறைவேறின. ஒன்றே ஒன்றுக் காகத்தான் நான் இதுவரை வாழ விரும்பினேன். நாம் மரிக்குமுன்பு உன்னை கிறிஸ்தவனாக காண வாஞ்சையாக இருந்தேன். அதை எனக்காக பரிபூரண மாக கர்த்தர் நிறைவேற்றினார். இப்பொழுது அவருடைய ஊழியனாக உன்னை காணச் செய்தார்” என அம்மா கூறினார்கள்.

திருச்சபையின் மிகப் பெரிய வேதாகம புலமை பெற்றவராக அகஸ்டின் உருவானார், விசுவாசத்திற்காக போராடினார். மிகப் பெரிய எழுத்தாளராக, போதகராக இருந்தார். கிறிஸ்தவர்களாகிய நாம் அவருடைய பணிகளுக் காக நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். முக்கியமாக அவருடைய தாயார் மோனிக்காவுக்காக நன்றி செலுத்துவோம்.

“சிறிய பில்னியின் ஜெபங்கள்”

அவர் மார்ட்டின் லூத்தர் அல்லது ஜான் கால்வின் போன்றவர் அல்ல. சொற்பொழிவு ஆற்றும் திறமையுள்ளவர் அல்ல, வலிமையான ஒரு தலைவர் அல்ல ‘ஆனால் சிறு பில்னி’ மற்றவர்களுக்காக மிக வாஞ்சையுடன் ஜெபித்ததற்கான புகழ் பெற்று விளங்குகிறார்.

இது அவருடைய கதை.

பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், தாமஸ் பில்னி என்பவர் கேம்பிரிட்ஜ் பல்கலை கழகத்தில் படித்துகொண்டிருந்தபொழுது தனது வாழ்க்கையைக் குறித்து திருப்தியற்றவராக இருந்தார். “என் ஆத்துமா வியாதிப்பட்டிருந்தது. நான் சமாதானத்துக்காக ஏங்கினேன், எங்குமே அதைக் காணமுடியவில்லை... இறுதியில் இயேசுவைப் பற்றி கேள்விப் பட்டேன்” என அவர் எழுதியிருக்கிறார். தன்னிடமிருந்த பணத்தையெல்லாம் கொடுத்து லத்தீன் மொழியில் புதிய ஏற்பாடு ஒன்றை வாங்கினார். பின்பு அவர் இவ்வாறாக எழுதியிருக்கின்றார். “நான் அந்த புத்தகத்தை வாங்கி னேன் லத்தீன் மொழிக்காக அல்ல. தேவனுடைய வார்த்தை என்பதனால் அதன் பக்கமாக ஈர்க்கப்பட்டேன். அப்பொழுது தேவனுடைய வார்த்தையின் பொருள் தெரியாது. பின்பு அந்த ஒளி வந்தது” எனக் கூறுகின்றார்.

நான் முதலாவதாக அதைப்படிக்கும்பொழுது, இந்த வசனங்கள் என் முன் வந்தன. “பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது. அவர்களில் பிரதான பாவி நான்.” அந்த ஒரு வாக்கியம், தேவன் எனக்குள் கிரியை செய்ததால், எனது நொருங்கிய எளிய ஆவியை தூக்கி எடுத்தது. எனது எலும்புகளும் ஆனந்தத்தினால் மகிழ்வினால் துள்ளி எழும்பின. அது ஒரு நீடிய இருள் நிறைந்த இரவுக்குப்பின் பகலின் ஒளி திடீரென வெளிப்பட்டதைப் போல இருந்தது.

சிறு பில்னி மனந்திரும்பினார்.

அந்நாட்களில் ஹக் லாட்டிமர் என்பவர் புகழ்பெற்ற போதகராக சொற் பொழிவாற்றும் திறன் உள்ளவராக, புராட்டஸ்டன்ட் சீர்திருந்த மறுமலர்ச்சி யின் வலுவான எதிரியாக இருந்தார். சிறிய பில்னி தான் மனந்திரும்பியது போல லாட்டிமரும் மனமாற்றம் பெறுவதைக் காண விரும்பினார். அது எதிர் பார்க்க இயலாத அளவு கடினமாக தோன்றிற்று. அதனால் அவர் ஜெபம் செய்தார். “தேவனே, நான் சிறு பில்னிதான், நான் உமக்கென்று எந்த பெரிய காரியமும் செய்ய இயலாதவன், ஆனால் அந்த ஹக் லாட்டிமருடைய ஆத்துமாவை எனக்குத் தாரும். உம்முடைய பரிசுத்த நாமத்திற்கென்று அவர் அரிதானவற்றை செய்வார்.”

பின்பு ஒரு நாள் லாட்டிமர் தனது போதகத்தை முடித்துக் கொண்டு பிரசங்க பீடத்திலிருந்து இறங்கி நடந்து வந்தார். அவர் பில்னியைக் கடந்து சென்ற பொழுது பில்னி அவரை நிறுத்தி, “தந்தை லாட்டிமர் அவர்களே, எனது பாவ அறிக்கையை கேட்பீர்களா?” என மெதுவாக கூறினார்.

லாட்டிமர் அருகிலிருந்த சிற்றாலயத்தை சுட்டிக்காட்டி அங்கு சென்றார். அங்கே சிறு பில்னி தான் லத்தின் மொழி புதிய ஏற்பாட்டை வாங்கியதையும் அதில் கண்ட வசனம் தன் வாழ்வை மாற்றம் பெறச் செய்ததையும் கூறினார். இதைச் சொல்லும்பொழுது அவர் பாவ அறிக்கைக்காக முழங்கால் படியில் இருந்தார். முடிவில் அவர் தனது சட்டைப்பையில் இருந்து புதிய ஏற்பாட்டை எடுத்து தான் மிகவும் விரும்பும் அந்த வசனம் இருக்குமிடத்தைக் காட்டினார். "நான் என் பாவ சுமையை சுமந்திருந்தேன்" ஆனால் "கிறிஸ்து இயேசு பாவி களை இரட்சிக்க இவ்வுலகத்தில் வந்தார். அவர்களில் பிரதான பாவ நான் (1 தீமோ.1:15) என்பதைக் கண்டுகொண்டேன். என் சுமை நீங்கிற்று.. என்றார்."

பில்னியின் உண்மையான அறிக்கையால் லாட்டிமர் அசைக்கப்பட்டார். இன்னும் அதிகமாக அவர் அந்த வேத வசனத்தினால் தொடப்பட்டார். உடனடியாக மறுபிறப்பின் அனுபவத்தை பெற்றார். அதனை உணர்ந்தார்.

தாமஸ் பில்னி தொடர்ந்து தான் பெற்ற விசுவாசத்தைப் பற்றி அறிக்கை செய்தார். ஆனால் ஹென்றி VIII அரசனின் ஆட்சியில் கைது செய்யப்பட்டு ஒரு கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டு எரித்துக்கொல்லப்பட்டார். 1531ம் ஆண்டில் இது நடந்தது.

மறுபுறம் லாட்டிமர் நீண்டகாலம் தேவ பணியை செய்து வந்தார். அவர் அச்சமின்றி வேத வசனங்களை தெளிவாக போதித்து வந்ததால் அந்த பதினாராம் நூற்றாண்டின் அரசர்களுடன் தொடர்ந்து போராட நேர்ந்தது. ஹென்றி VIII அவரை பேராயராக நியமனம் செய்தார். ஆனால் அதே அரசன் அவரை கைது செய்து லண்டன் கோபுரத்தில் வைத்தார். அரசன் எட்வர்ட் அவருக்கு தற்காலிக விடுதலை கொடுத்து அரசாங்கத்தில் போதகராக ஆக்கினார். ஆனால் ராணி மேரி பதவி ஏற்றதும் மறுபடியும் கைது செய்யப்பட்டார். கம்பத்தில் கட்டி எரிக்கப்பட்டார். அந்த நெருப்பு சுவாலைகள் அவரைச் சுற்றி எரியும்பொழுது லாட்டிமர் தனது இறுதி வார்த்தைகளை கூறினார்: "தேவனுடைய கிருபையினால் இந்த நாளில் இந்த மெழுகுவர்த்தியை கொளுத்துகின்றோம். அது என்றுமே அணைந்து போகாமல் இருக்கும் என நான் நம்புகிறேன்".

உங்களிடம் யாராவது அரசன் ஹென்றி இங்கிலாந்தில் புராட்டஸ்டன்ட் சீர்திருத்தத்தை துவங்கினார் எனக் கூறக் கேட்டால் அது சிறு பில்னியின் ஜெபங்களில்தான் துவங்கியது என அவர்களுக்கு சொல்லுங்கள்.

மொர்தெகாய் ஹாம் அடைந்த மனச்சோர்வு

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, மொர்தெகாய் ஹாம் தென்பகுதியில் ஒவ்வொரு நகரத்திலும் அனலான, அறிவூட்டும் சுவிசேஷ செய்திகளை போதித்து வந்தார். மூன்று லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு இரட்சிக்கப்பட்டு திருச்சபைகளில் அங்கமாக பங்கேற்றனர். அடிப்படையான வேத சத்தியங்களை வல்லமையுடன் போதிக்கும் அவர், கம்யூனிசம், பரிணாம கொள்கை, சாராய விற்பனை ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து செய்தி அளித்தார்.

சிலர் அவருடைய செய்திகளை ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் யாராலும் அவரது தனிப்பட்ட தூய்மைக்கு, வியாபாரங்களுக்கு குறை எதுவும் சொல்ல இயலவில்லை.

ஆனால் அவர் வட கரோலினா நகருக்கு சென்றபொழுதெல்லாம் W.O சான்டர்ஸ் என்னும் செய்தித்தாள் ஆசிரியரால் கடுமையாக தாக்கி எழுதப்பட்டார். சான்டர்ஸ் என்பவர் மனிதனால் கடவுளை அறிந்து கொள்ள முடியாது என்னும் கொள்கை உடையவர். அவர் 'சுதந்திரம்' (Thr independant) என்கிற செய்தித்தாளை அச்சிட்டு வெளியிடுபவர். அதில் மொர்தேகாய் ஹாமைப் பற்றி இவ்வாறாக எழுதினார். "இந்த போதகர் அகந்தையுள்ளவன், இரக்கமில்லாத பிரசங்கி, வெறுப்பை உபதேசிப்பவன், மகிழ்ச்சியை கொல்பவன், மக்களது பயங்களையும், தனி விருப்பங்களையும் பலவீனங்களையும், கொடூரமாக சித்தரித்துக் காட்டி பேசுபவன். தான் பிரசங்கிக்கும் நகரங்களிலெல்லாம் நடக்கும் வியாபாரங்களை நிலைகுலைய செய்பவன். இவனது உபதேசத்தினால் தன்னில்தான் திருப்தி அடைபவரை, அகந்தை உள்ளவர்களை, மூடபக்தியுள்ள மக்களை, பக்தியுள்ளவர்களைப் போல நடிக்கிறவர்களை, வீண் பிடிவாதமுள்ள மனிதரை உருவாக்குகிறான்." இந்த மனிதர்கள் தாங்கள் என்றுமே கண்டிராத ஒரு ஆட்டுக்குட்டியின் இரத்தம் இவர்களை பனிக்கட்டியிலும் வெண்மையாக ஆக்குகின்றது என நினைக்கிறார்கள் எனவும் எழுதினான்.

சுவிசேஷகர் ஹாம் ஒரு ஜெபக்குறிப்பு ஏடு வைத்திருந்தார். அவர் வட கரோலினா சென்ற பொழுதெல்லாம் சான்டர்ஸ் பற்றி குறிப்பிட்டு ஜெபித்து வந்தார். அது இவ்வாறாக இருந்தது: "தேவனே, இந்த சான்டர்ஸின்

ஆதிக்கத்தை அகற்றும்,'' ''பிதாவே, சான்டர்ஸ் என்ன திட்டமிட்டாலும் ஒன்று மில்லாமல் போகச் செய்துவிடும்.'' ''தேவனே, சான்டர்ஸ் பாவத்துக்காக மனஸ் தாபப்பட்டு இரட்சிப்பை அடைய உதவும்,'' அவரை இரட்சித்துக் கொள்ளும்.

1934ம் ஆண்டு சுவிசேஷகர் ஹாம் வடகரோலினாவில் உள்ள சார்லட் என்னும் மிகப்பெரிய நகரில் முதலாவது சுவிசேஷக் கூட்டங்களை நடத்தினார். அவர் மற்ற பதினாறு நகரங்களில் இதுவரை பிரசங்கம் செய்திருந்தார். சார்லட் நகரில் இதுதான் முதல் முறை சான்டர்ஸ் அந்தக் கூட்டங்கள் நடைபெறுமுன்பே தன் வேலையை செய்ய துவங்கிவிட்டார். அந்த நகரின் தினசரி செய்தி தாள்களில் தவறாக எழுதினார். அங்குள்ள வியாபாரிகள் தலைவரை பல திருச்சபை போதர்களையும் கூட அணுகி தவறாக எண்ணும்படி செய்தார். ஹாம் தன் வாழ்க்கை சரிதையில் ''சார்லட்டில் நடந்த கூட்டம் விநோதமாக கடினமாக இருந்தது. தேவன் அங்கிருந்த செய்தித்தாள் நடத்துபவர்கள், திருச்சபைதலைவர்கள், சாதாரண மக்கள் அனைவரும் மனந்திரும்ப கிரியை நடப்பிக்க வேண்டிய தாக இருந்தது'' என எழுதியுள்ளார்.

ஹாம் மிகவும் மனச்சோர்வடைந்தார், உற்சாகம் இழந்தார். செய்திதாள் கள் தினமும் அவரைப்பற்றி குறைகூறி எழுதின. அங்குள்ள சபைகளின் போதகர்களும் அவருக்கு விரோதமாக பேசினார்கள். இதுவரை எதிர் கொண்டிராத பலத்த எதிர்ப்புகள் அவர் முன் வந்தன. அவர் தங்கியிருந்த ஒட்டல் அறையில் தனியாக ஜெபம் செய்து இவ்வாறாக எழுதினார்.

> ''அன்பான பிதாவே, இந்த நகரத்தில் உள்ள எல்லா மக்களின் நடக்கை யையும் நீர் அறிந்திருக்கின்றீர். எப்படி அந்திகிறிஸ்து தனது பலத்தை இங்கே உணரச் செய்கிறான்? இங்குள்ள போதகர்கள் எவ்வளவு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்?... தேவனே, இந்த செய்திதாள்களுடன் இடைபடும், இயேசுவைப் பற்றிய சாட்சி இந்த நகரத்தில் என்ன விதமாகவெல்லாம் தடுக்கப்படுகின்றது?... தேவனே, இந்த இடத்தில் பெந்தெகொஸ்தே நாளில் நடந்தது போன்ற அற்புதத்தை கட்டளையிடும். அந்த நாத்தீகனாகிய சான்டர்ஸ் அடிபடச் செய்யும். என் தேவனே தயவாக நீர் வந்து உமது ஊழியனாகிய எனக்கு உதவிசெய்யும். அன்பான தகப்பனே, இந்த கூட்டம் இதுவரை பாராத மகிமையுடன் நடக்க நாங்கள் காணும்படி செய்யும்.. அன்பான தேவனே, உமது அடியானாகிய எனக்கு உமது பெலன் தேவை... அவரது நாமத்தில்'' ஆமென் M.F. ஹாம்.

தேவன் இந்த ஜெபத்திற்கு பதில் அளித்தாரா? ஆம், ஒரு எதிர்பாராத வழியில் பதில் தந்தார்.

சுவிசேஷகர் ஹாம், பெக்கான் அவன்யூவில் இருந்த அந்த பெரிய கூடாரத்தில் நடந்த மாலை கூட்டத்தில் நற்செய்தியால் மீட்கப்படுவதற்கு அழைப்பு கொடுத்தபொழுது, பதினாறு வயதுடை ஒரு இளம்வாலிபன் முன்னால்வந்து முழங்கால் படியில் நின்று தேவனிடம் இரட்சிப்புக்காக ஜெபம் செய்தான்.

சுவிசேஷகர் ஹாம் 'இதுவரை நாங்கள் கண்டிராத அளவுக்கு இந்த கூட்டத்தை மகிமையுள்ளதாக்கும் என ஜெபித்திருந்தார். தேவன் தரும் பெலன் பெற கெஞ்சி கேட்டிருந்தார். அவரது ஜெபம் கேட்கப்பட்டது, அந்த நேரத்தில் அவர் அதனை அறியவில்லை. அந்த இளம் வாலிபன் இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த சுவிசேஷ போதகரே ஊழியம் செய்திடுவான் என்பதை அவர் அறியவில்லை. அந்த இளம் வாலிபனின் பெயர் பில்லி கிரஹாம்.'

துப்பறியும் நிபுணருக்கு போதிய உடைகள் இல்லை

சார்லஸ் ஸ்மெட்லிக்கு உண்மையில் எப்பொழுதுமே கிறிஸ்தவர்களை கண்டால் விரும்புகிறதில்லை. இதுவரை அவர் மாலுமி, சவ அடக்கம் செய்பவர், சமையல்காரர், குழாய் சரி செய்பவர், வாகனம் ஓட்டுபவர், காவல்துறை பணியாளர் என பல விதங்களில் அவரது வாழ்க்கையில் பணியாற்றியுள்ளார். இப்பொழுது, பிங்கர்டன் எனும் நிறுவனத்தில் துப்பறியும் நிபுணராக இருக்கின்றார். அவருக்கு சுற்றியுள்ள மக்களுக்கு எப்படி உத்தரவிடலாம் என தெரியும். யாராவது கிறிஸ்தவர்கள் சுவிசேஷ செய்தியை சொல்ல வந்து அவரது வீட்டுக் கதவை தட்டினால் அவர்களை துரத்திவிடுவார்.

ஒரு நாள் அவர் தனது வீட்டுக்குள் அவரது மகளுடைய ஞாயிறுபள்ளி ஆசிரியை வர அனுமதித்தபொழுது அவரது குடும்பத்தினர் அதிர்ச்சி அடைந்தனர்.

ரூத் டல்லி, என்ற அந்த ஞாயிறுபள்ளி ஆசிரியை ஞாயிற்றுக் கிழமையுடன் தன் பணியை நிறுத்திக் கொள்வதில்லை. தான் போதிக்கும் குழந்தைகளின் குடும்பங்களையும் சந்திக்க விரும்பினாள். 1950ம் வருடம் ஒன்பது வயதுள்ள லாரா ஸ்மெட்லி ஞாயிறன்று அந்த வகுப்புக்கு வந்தபொழுது ரூத் டல்லி குடும்பத்தார் அனைவரும் ஸ்மெட்லி அந்த ஆசிரியையை உள்ளே பேச அழைத்தபொழுது வியப்படைந்தனர். கிறிஸ்துவின்மேல் உள்ள தன் விசுவாசத்தைப் பற்றி ரூத் சொல்லும்பொழுது அந்த பெற்றோரும் நான்கு பிள்ளைகளும் கவனித்து கேட்டனர்.

திருமதி. ரூத் டல்லி இறுதியில் அந்த குடும்பத்தினரை ஞாயிறன்று ஆலயத்திற்கு வந்து ஆராதனையில் பங்குபெறும்படியாக அழைத்தார். ஸ்மெட்லி சிரித்துக்கொண்டு "எனக்கு சபைக்கெல்லாம் அணிந்து வருவதற்கு தக்க உடைகள் இல்லை" என பதில் அளித்தார். அதனால் அந்த உரையாடல் அதோடு முடிவடைந்துவிடும் என நினைத்தார்.

ஆனால் அந்த ஞாயிறு பள்ளி ஆசிரியை, "உங்களுக்கு ஒரு ஒரு நல்ல உடை இருந்தால் வருவீர்களா?" எனக் கேட்டார்.

அவர் இன்னும் நகைத்துக்கொண்டு, "நிச்சயமாக வருவேன்" என்றார். தன்னால் ஒரு கோட், பேன்ட் வாங்க இயலாது என அவர் அறிவார்.

"நல்லது எனக்கூறிய அந்த ஞாயிறு பள்ளி ஆசிரியை" தேவனிடம் உங்களுக்கு ஒரு நல்ல உடை அனுப்பித்தரும்படியாக ஜெபிப்பேன் எனக் கூறினார்.

"நல்லது, இது ஒரு தீர்வு காண உதவும்" என ஸ்மெட்லி கூற ரூத் டல்லி அங்கிருந்து சென்றுவிட்டார்.

ரூத் தனது வீட்டுக்கு சென்ற ஜெபம் செய்ய ஆரம்பித்தார். திரு. ஸ்மெட்லிக்கு அநேக பிரச்சனைகள் இருந்தன. அவருக்கு அணிவதற்கு நல்ல உடைகள் இல்லை. மிகுந்த கடன் பட்டிருந்தார். ஏனெனில் அவருக்கு ஒரு வேலையில் தொடர்ந்து பணிபுரிய இயலவில்லை. அதிகமாக குடிப்பதனால் போதைக்குட்பட்டதால் தன் வேலைகளை இழக்க நேர்ந்தது. அவரும் அவரது மனைவியும் மது விற்பனை செய்யும் கடைகளுக்கு ஒன்றாக சென்று குடித்தனர். அவர்கள் அதிகமாக மது குடித்துக்கொண்டேயிருந்து தங்கள் பிள்ளைகளை சினிமா பார்க்க அனுப்பி விடுவார்கள். அவர்கள் அணிவதற்கு நல்ல ஆடைகள் இல்லை.

ஆனால் திருமதி. ரூத் டல்லி வந்து சென்றதற்கு அடுத்த நாள் அவர் அவருக்கு தபாலில் எதிர்பாராத ஒரு காசோலை வந்தது. ஸ்மெட்லி உடனே அதை எடுத்துக்கொண்டு மதுவிற்கும் கடையில் சென்று மகிழலாம் என நினைத்தார். ஆனால் அவரது மனைவி அவரை தடுத்து நிறுத்தி "நாம் உடைகள் வாங்குமளவுக்கு அற்புதமாக பணம் கிடைத்தால் ஆலயத்திற்கு உதவுவதாக திருமதி. ரூத் டல்லியிடம் வாக்களித்தோம் அல்லவா?" எனக் கூறினாள்.

ஊக்கத்துடன் சார்லஸ் ஸ்மெட்லி ஒப்புக்கொண்டார். புதிய ஆடைகள் வாங்கினார். தன் குடும்பத்தாருடன் ஆலய ஆராதனைக்கு சென்றார். அங்குள்ள போதகர் "சபையார் யாராவது உங்களுக்காக ஜெபம் தேவை என நினைக்கின்றீர்களா?" எனக் கேட்டபொழுது திரு. ஸ்மெட்லி கை உயர்த்தினார். அடுத்த ஞாயிறன்று போதகர் இரட்சிக்கப்பட விரும்புபவர்கள் முன்னால் வர அழைத்தபொழுது ஒன்பது வயதுள்ள லாரா ஸ்மெட்லி எழுந்து முன்னால் சென்றாள். உடனே சார்லஸ் ஸ்மெட்லியும் தனது இருக்கையிலிருந்து எழுந்து முன்னால் சென்று ஒப்புக்கொடுத்தார்.

ஸ்மெட்லியின் இல்லம் முற்றிலுமாக மாற்றம் பெற்றது. இல்லம் மட்டுமல்ல, ஸ்மெட்லி தனது பழைய குடிபழக்கமுள்ள நண்பர்களிடம் தனது விசுவாசத்தைப்பற்றி சாட்சியாக அறிவிக்கத் துவங்கினார். சீக்கிரமே அங்கே அதிசயமான மனமாற்றங்கள் ஏற்பட்டன. ஸ்மெட்லியின் உறவினர்கள் அவரது மூத்த மகள் மார்டி உயர்நிலைப்பள்ளியில் கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியை பகிர்ந்து கொண்டு, தனது மூன்று சிநேகிதிகளை கிறிஸ்துவிடம் வழி நடத்தினாள்.

புகழ்பெற்ற கிறிஸ்தவ நூல் ஆசிரியர் ஜேம்ஸ் ஹெப்லே இந்த நிகழ்வுகளைப் பற்றி *'ஜீவிக்கும் அற்புதங்கள்'* என்ற புத்தகத்தில் எழுதினார். அவர் இந்த கதைகளையெல்லாம் நன்கு அறிந்திருந்தார். ஏனெனில் மார்டி ஸ்மெட்லியை அவர் திருமணம் செய்தார். மார்டி அவரது இலக்கிய எழுத்துப் பணியில் உதவி செய்கிறாள்.

ஒரு ஞாயிறு பள்ளி ஆசிரியை தேவையுள்ள ஒரு குடும்பத்துக்காக ஜெபித்தார். அதன் விளைவாக அந்த குடும்பமே மறுரூபம் அடைந்தது. அடுத்த பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து பார்க்கும்பொழுது அந்த குடும்பத்தின் மனமாற்றம் வேறு எழுபது பேர்களை இரட்சிப்புக்குள் நடத்திற்று!

அவர் ஐம்பத்திரண்டு ஆண்டுகளாக ஜெபித்து வந்தார்

ஜார்ஜ் முல்லர் அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஒரு சிறு குழுவான மனிதருக்காக ஜெபம் செய்து வந்தார். ஐம்பத்திரண்டு வருடங்களாக அவர் ஜெபித்தார். இன்னும் அவர்களில் சிலர் கிறிஸ்தவர்களாக மாறவில்லை. முல்லர் விசுவாசத்தை மட்டும் சார்ந்து திக்கற்ற பிள்ளைகளுக்காக பராமரிக்கும் இல்லங்கள் நடத்தி வந்ததில் பேர் பெற்றவர். அவர் தேவனிடம் செலவுகளுக்கான பணம் கேட்டு ஜெபம் செய்தபொழுது, தேவன் அனுப்பினார். சில சமயங்களில் அந்த ஜெபங்களுக்கான பதில்கள் மிகச் சரியான நேரத்தில் கிடைத்தன. (6ம் அதிகாரத்தில் "ரொட்டி செய்பவரால் ஏன் தூங்கமுடியவில்லை" என்ற தலைப்பிலான செய்தியைப் பார்க்கவும்). ஆனால் சில மனிதர்களின் இரட்சிப்புக்காக அவர் செய்த ஜெபங்கள் அவ்விதமாக உடனே பதில் அளிக்கப்படவில்லை.

முல்லர் எல்லாவற்றுக்கும் சரியான பதிவேடுகள் எழுதுவதில் மிகவும் கவனமாக இருப்பார். அவருடைய ஜெபக்குறிப்புகள் எழுதிய நோட் புத்தகத்தில் இரண்டு பக்கமும் பதிவுசெய்வார். ஒரு பக்கம் அவருடைய வேண்டுதல்கள், அதற்கு எதிர் பக்கத்தில் தேவன் அருளிய பதில்களை எழுதுவார். அதற்கு அருகே அவர் அந்த தேதியையும் குறிப்பிட்டு எழுதுவதால் யாரும் தேவனது பதில்களை குறித்துக் கேள்வி கேட்க இயலாது. அவர் தனது வாழ்க்கையில் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது ஐம்பதாயிரம் வேண்டுதல்களுக்கு பதில் கிடைத்ததாக எழுதப்பட்டுள்ளது.

ஆனாலும் அவர் ஜெபித்த ஐந்து மனிதர்களில் எந்தவித மாற்றமுமின்றி அப்படியே இருந்தனர். அதைக் குறித்து இவ்வாறு கூறுகிறார்.

1844ம் ஆண்டு நவம்பர் மாதம் நான் ஐந்து தனி நபர்களின் இரட்சிப்புக்காக ஜெபம் செய்ய ஆரம்பித்தேன். தினமும் தவறாமல் வியாதியாக இருந்தாலும் சுகமாக இருந்தாலும், தரை வழிப் பயணங்களிலும், கடல் வழிக் கப்பல் பயணத்திலும், எவ்வளவு வேலைகளின் அழுத்தங்கள் இருந்தாலும் ஜெபம் செய்து வந்தேன்.

பதினெட்டு மாதங்கள் கழிந்த பின்னர் அவர்களில் முதலாவதாக ஒருவர் இரட்சிக்கப்பட்டார். அதற்காக தேவனுக்கு நன்றி செலுத்தி மற்றவர்களுக்

ஆக ஜெபித்து வந்தேன். ஐந்து ஆண்டுகள் கடந்தவின் இரண்டாவது நபர் மனமாற்றம் பெற்றார். நான் அந்த இரண்டாம் நபரின் இரட்சிப்புக்காக நன்றி செலுத்தினேன். ஒவ்வொரு நாளும் நான் தொடர்ந்து மற்ற மூவர்களுக்காக ஜெபித்தேன், ஆறு ஆண்டுகள் முடிந்தபின் மூன்றாவது நபரும் இரட்சிக்கப் பட்டார்.

அந்த மூன்று நபர்களுக்காக தேவனைத் துதித்து மீதியாக உள்ள இரண்டு பேர்களுக்காகவும் ஜெபித்தேன். தேவன் தமது மிகுந்த கிருபையின் ஐசுவரியத்தின்படியே பதினாயிரம் பதில்களுக்கு மேலாக அளித்திருந்தார். சில சமயங்களில் ஜெபித்த அதே மணி நேரத்திலோ அல்லது அதே நாளிலோ பதில் கிடைத்தன. ஆனால் முப்பத்தாறு வருடங்கள் இந்த இரண்டுபேருடைய இரட்சிப்புக்காக ஜெபித்தும் அவர்கள் மனந்திரும்பவில்லை. ஆனால் நான் தேவனிடத்தில் நம்பிக்கையாக இருந்தேன். பதில் கிடைக்கும் என நோக்கி ஜெபித்தேன். அவர்கள் இன்னும் இரட்சிப்படையவில்லை. ஆனால் ஒரு நாள் நிச்சயமாக இரட்சிக்கப்படுவார்கள்.

அந்த முப்பத்தாறு வருடங்களுக்குப் பின்பும் அவர் தொடர்ந்து ஜெபித்த தாக எழுதியிருக்கின்றார். 1898ம் ஆண்டு முல்லர் மரித்தார். ஜம்பத்திரண்டு ஆண்டுகளாக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. முல்லர் மரிக்கும்பொழுதும் அந்த இரண்டு மனிதரும் மனந்திரும்பவில்லை. இருந்தாலும் இன்னும் இரண்டு வருடங்கள் ஆன பின்பு இந்த இரண்டு மனிதர்களும் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். இறுதியாக, முல்லரின் ஜெபங்கள் கேட்கப்பட்டு பதில் அளிக்கப்பட்டுவிட்டன.

முல்லருக்கு அவருடைய ஜெபக்குறிப்பில் அந்த இரண்டு மனிதரின் பெயரையும் பதில் கிடைத்த பகுதியில் எழுத இயலவில்லை. ஆனால் தேவன் அவர்களது பெயர்களை தமது ஜீவ புஸ்தகத்தில் எழுதிவிட்டார் என்பதனை நீங்கள் உறுதியாக நம்பலாம்.

அந்த அற்புதம் நிகழவில்லை

"தீய ஆவி அவளை இங்கும் அங்குமாகக் குத்துகிறது" என அந்த பெண் தனது சிறு மகளுடைய வயிற்றையும் வலதுகாதின் மேலும் காட்டினாள்.

பிரேசில் நாட்டின் மக்கஜாய் நதியின் சேறு நிறைந்த பகுதியில் உள்ள

குடிசையில் தங்கி அதையே சிறிய மருத்துவமனையாகவும் பயன்படுத்தி தேவ ஊழியர் பிராங்க் ஏபலும் அவரது மனைவி இசபெல்லும் பணியாற்றி வந்தனர். அங்குள்ள ஹிரிஷனா என்ற பழங்குடி மக்கள் மத்தியில் அவர்கள் வந்து எட்டு மாதங்களே ஆகியிருந்தன. பிராங்க் ஒரு ஆசிரியர் மற்றும் மொழி பெயர்ப்பாளர். ஆனால் இந்த பின்தங்கிய பகுதியில் அவரும் அவரது மனைவி இசபெல்லும் தங்களுக்கு தெரிந்த அளவு மருந்துகளை மக்களுக்கு தந்து உதவினார்கள்.

இப்பொழுது ஒரு பெண் தனது வியாதிப்பட்ட தன் சிறு குழந்தையை கொண்டு வந்திருந்தாள்.

சோதித்து பார்த்தபின் மோடிட் என்ற அந்த சிறு பெண்குழந்தையின் காதின் பின்புற எலும்பில் ஏற்பட்ட வலியாலும் வயிற்றுவலியாலும் பாதிக்கப் பட்டிருப்பதை கண்டுபிடித்தனர். பிராங்க், இசபெல் இருவரும் அதற்கான மருந்துகளை தந்து அந்த குழந்தையை சுகமாக்க இயன்றவரை முயற்சி செய்தனர். ஒரு வாரமாக அவளை தொடர்ந்து பார்த்து அவளுடைய சுகத் துக்காக ஊக்கமாக ஜெபம் செய்தனர். ஆனால் மோடிட் இன்னும் நலம் பெறவில்லை.

முடிவில் அவளது தாய் "உங்களது மருந்து மிக மெதுவாக வேலை செய்கின்றது" எனக் கூறி அங்குள்ள நதியைக் கடந்து சிறிய படகில் தன் மகளை எடுத்துக்கொண்டு அங்குள்ள திருவிழாவில் வந்திருந்த ஆதிவாசி களின் மந்திரம் செய்யும் பூசாரியை சந்திக்க போய்விட்டாள்.

ஒரு வாரம் கழித்து அந்த அம்மா மறுபடியும் மகளை அழைத்துக் கொண்டு ஏபலிடம் வந்தாள். அந்த சிறுமியின் தலையிலும், கைகளிலும், கால்களிலும் வெட்டுக் காயங்களுடன் கொண்டு வந்தாள். தீய ஆவிகளை விரட்டுவதாக நினைத்து அப்படி செய்திருக்கின்றான்.

பிராங்க் அந்த காயங்களுக்காக பெனிசிலின் மருந்தை தந்தார். சில நிமிடங்கள் கழித்து யாரோ 'மோடிட் இறந்து விட்டாள், மோடிட் இறந்து விட்டாள்' என்று அழும் சப்தம் கேட்டது. பிராங்க் ஒடிப்போய் அந்த சிறுமியின் உயிர் பிழைக்க முதலுதவிகள் செய்தார். ஆனால் ஒன்றும் பலன் தரவில்லை.

அந்த தாய் தன் விரலை அந்த ஊழியர்களுக்கு நேராக காட்டி 'நீங்கள் தான் மோடிட் இறந்துபோகச் செய்தீர்கள்' எனக் கூறினாள். அவளது உறவினர்கள் வந்து குழந்தையின் உடலை எடுத்துச் சென்றனர்.

அந்த சிறிய குடிசையில் அந்த ஊழியர்கள் தங்கள் முழங்காலில் நின்று ஜெபம் செய்தனர். "தேவனே, நீர் சிறு மோடிட்டை ஏன் எடுத்துக்கொண்டீர் என அறியோம். ஆயினும் இந்த மரணத்திலும் உமது நாமம் மகிமைப்பட வேண்டுமென" என வேண்டினர்.

அன்று மதியம் அந்த பழங்குடி மக்களின் தலைவன், ஒரு கூட்டம் மனிதருடன் தங்களை சந்திப்பதற்காக அந்த காட்டு பாதையில் வந்து கொண்டிருக்கின்றான் என கேள்விப்பட்டனர். இந்த பிரேசில் காடுகளின் இன்னொரு பகுதியில் பணிபுரிந்த ஊழியர்களையும் அவர்களது மகளையும் அங்குள்ள பழங்குடி மக்கள் பயங்கரமாக அடித்து கொலை செய்துவிட்ட நிகழ்ச்சியை அவர்கள் அறிந்திருந்தனர். ஏன் இந்த தலைவன் இப்பொழுது அவர்களை பார்க்க வருகின்றான்?

அந்த தலைவனும் அவனது மனிதர்களும் ஏபேலுடைய குடிசை அருகே உள்ள முற்றத்தில் வந்து உட்கார்ந்தனர். பிராங்கும் இசபெல்லும் அமைதியாக இருந்தனர். தலைவனும் வெகு நேரம் அமைதியாக இருந்து விட்டு இறுதியாக

"நீங்கள் இந்த இடத்தைவிட்டுப் போய் விடுங்கள்" என்றான்.

"இல்லை" பிராங்க் பதில் அளித்தார், "நாங்கள் இங்கிருந்து போக விரும்பவில்லை. நாங்கள் உங்களை நேசிக்கிறோம். நாங்கள் போய் விடுவதை உண்மையிலேயே நீங்கள் விரும்புகின்றீர்களா?" எனக் கேட்டார்.

சற்று நேரம் அமைதியாக இருந்தபின் அந்த தலைவன் தொடர்ந்து பேசினான். "நீங்கள் நல்லவர்கள், நீங்கள் அந்த நல்ல ஆண்டவரைப் பற்றி எங்களுக்கு இன்னும் அதிகமாக சொல்லுங்கள்" என்றான். பின்பு அந்த தலைவரும் அவனுடைய மனிதரும் காட்டுக்குள் சென்றுவிட்டனர்.

ஏபேல் தம்பதியினர் ஒருவரையொருவர் வியப்புடன் பார்த்தனர். அந்த மனிதர்கள் காட்டுக்குள் சென்றதும் "நமது ஜெபம் நினைவில் இருக்கின்றதா" எனக் கேட்டார் இசபெல். பிராங்க் தலை அசைத்து "ஆம், தேவன் இந்த சிறிய மோடிட்டின் மரணத்திலும் அவரது மகிமை விளங்கச் செய்யும்படியாக ஜெபித்தேன்" என்றார்.

அது ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அதன்பின் வெகு விரைவில் அந்த தலைவனுடைய மகன் கிறிஸ்துவை விசுவாசிக்கவும், அவனைத்

தொடர்ந்து வேறு ஐந்து பழங்குடி மனிதர்களும் விசுவாசத்தில் வரவும் துவங்கினர். அப்பொழுது அந்த தலைவன் அந்த முழு கிராம மக்களும் ஆற்றுக்கு இந்த கரையில் வந்துவிடவும் அந்த தேவ ஊழியர்களுக்கு அருகில் வாழவும் உத்தரவு கொடுத்தான்.

தேவன் விசித்திரமான வழிகளில் கிரியை செய்கின்றார். ஒரு அற்புதமான சுகம் கிடைப்பதால் பழங்குடி மக்கள் தேவனுடைய வல்லமையை உணர்ந்து பின்பற்ற செய்யமுடியும் என நீங்கள் நினைக்கலாம். ஆனால் எவ்விதமாகவோ அந்த வியாதியுற்ற குழந்தை இறந்ததும் அந்த ஊழியர் களுக்கு அக்குழந்தை மேல் இருந்த அன்பும் அக்கறையும் இன்னும் வல்லமையுள்ளதாக விளங்கின.

அவர் அதனை முன்பே கேட்டிருந்தார்...

ஜாக் லக்கே அவை எல்லாவற்றையும் முன்பே கேட்டு அறிந்தவர். தெய்வ பக்தியுள்ள குடும்பத்தில் வளர்ந்து கிறிஸ்தவ கல்லூரி ஒன்றின் நிழலிலே வாழ்ந்த அவருக்கு எல்லா பதில்களும் தெரியும். அவர் இளம் வாலிபனாகும் பொழுதே நூற்றுக்கணக்கான பிரசங்கங்களையும் இரட்சிப்படைய முன்னால் வரச் சொல்லும் அழைப்புகளையும் கேட்டும் அவை ஒன்றினாலும் தொடப் படவில்லை. மிக ஊக்கமான மனதை ஈர்க்கும் போதகங்களாலும் அவர் மாறவில்லை. பின் அவர் எதிர்ப்பு தெரிவிக்க துவங்கினார். தேவனைப் பற்றிய யாவற்றையும் மறக்க முயன்றார். அவருக்கு அவை யாவும் தேவை இல்லை. ஜெபம், விசுவாசம், வேதாகமம் முழு கிறிஸ்தவமும் வேண்டாம். ஞாயிறு பள்ளி குழந்தைகளுக்குள்ளே களங்கமில்லா ஆர்வம் முற்றிலுமாக நீங்கிவிட்டது. தேவனைப் பற்றிய கருத்துக்கள் யாவும் பகுத்தறிவுக்கு ஒவ்வாததாகக் காணப்பட்டது. கிறிஸ்தவத்தைப் பற்றிய உணர்வற்று போய் விட்டார்.

ஜாக் பின்பு தன் கல்லூரியில் படித்த கமில்லா என்ற பெண்ணை திரு மணம் செய்தார். கமில்லாவும் திருச்சபையிலே நல்ல விதமாக வளர்ந்தவள். ஆனால் அதைவிட்டு விலகி செல்ல ஆரம்பித்தவள். அப்படியிருந்தும் எட்டு ஆண்டுகளுக்குப்பின் கமில்லா திருச்சபைக்கு செல்ல ஆரம்பித்தாள். வேதாகமத்தை வாசித்து தன் கணவனுக்காக ஜெபம் செய்ய துவங்கினாள்.

ஜாக்குடைய கடுமையான நாத்தீகம் சோதனைக்குட்பட்டது. இரண்டு ஆண்டுகளாக அவள் ஜெபம் செய்து வந்தாலும் எதிர்ப்பவராகவே இருந்தார். கடமையுள்ள கணவனைப்போல காட்டிக் கொள்வதற்காக சில சமயங்களில் அவளுடன் எபிஸ்கோப்பல் சபைக்கு சென்றார். அதன் ஆராதனைகள் சற்று வித்தியாசமாக இருக்கும். ஜாக் முன்பு சென்ற முகாம்களில் நடக்கும் கூட்டங்களில் செய்திகளும் பின்பு ஒப்புக்கொடுப்பதற்காக முன்வரும்படி சொல்லும் அழைப்புகளும் இருக்கும். அதனால் தனது எதிர்ப்பு நிலைமையை காத்துக்கொள்ளலாம் என நினைத்தார். கமில்லா திருவிருந்தில் பங்குபெற எழுந்து முன்னால் செல்லும்பொழுது எழுந்து கூட செல்லுவார். ஆனால் அங்கிருந்து பந்தி அருகே செல்லும் பொழுது அவர் மெதுவாக திரும்பி இடது பக்கமாக உள்ள ஒரு கதவு வழியாக வெளியே வந்து புகை பிடிக்க ஒரு சிகரெட் எடுத்துக்கொள்வார்.

"உண்மையாகவே ஒரு கடவுள் இருந்தால்... அவர் இப்படி செய்திருக்க கூடும்..." என ஜாக் அடிக்கடி சொல்ல ஆரம்பித்தார். "கடவுள் இருந்தால் சில குறிப்பிட்ட சம்பவங்களில் இப்படி செய்திருக்கக்கூடும். ஆனால் செய்ய இல்லை" என நினைப்பது தனது கடவுள் இல்லை என்ற கொள்கையை உறுதிப்படுத்துவதாக கருதினார். அப்படியிருந்தும் உண்மையில் செயல்படுகின்ற கடவுள் ஒருவர் உண்டு என்பது மெதுவாக அவருக்குத் தெரிய ஆரம்பித்தது. அது ஒரு சவால்தான்... தேவன் அதனை எடுத்துக்கொண்டார்.

1982ம் ஆண்டு ஒரு சனிக்கிழமையன்று கமில்லாவின் வேதாகமம் காணாமல் போய்விட்டது. ஜாக் அதை தேடுவதற்கு உதவி செய்தார். வீடு முழுவதும் தேடியும் கிடைக்கவில்லை. ஜாக் வீட்டின் பின்புறம் சென்றார். "உண்மையாகவே கடவுள் என்று ஒருவர் இருந்தால், அவர் கமில்லாவுக்காக கவலைப்படுபவராக இருந்தால், அந்த "ஒன்றுமேயில்லாத" வேதாகமத்தை இப்பொழுது காட்டவேண்டும்" எனச் சொல்லிக் கொண்டே சென்றார். அங்கேயிருந்த ஒரு வாளியை அவர் காலால் தட்டியபொழுது அந்த வேதாகமத்தைக் கண்டார். வேதாகமம் எப்படி அந்த வாளிக்குள் வந்து... என்ன செய்கிறது?

மறுநாள் கமிலாவுடன் திருச்சபைக்குச் சென்றார். அவருக்கு அந்த வேதாகமம் கிடைத்த விதம் இன்னும் மனதில் தோன்றியது. சபையார் திருவிருந்துக்காக முன்னால் சென்றபொழுது அவரும் கமில்லாவுடன் எழுந்து சென்றார். ஆனால் இந்த முறை அவர் மனம் நொந்த போய்விட்டது.

அவர் வெளியே சென்று புகைபிடிக்க வேண்டுமா அல்லது திருவிருந்தில் பங்குபெற வேண்டுமா? அப்பொழுது அவர் சிறுவயதில் சென்ற சபையில், இவ்வாறு திருவிருந்தில் பங்குபெற முன்னால் செல்கையில் "நான் பாவிதான், ஆனாலும் நீர்..." என்ற பாடலை பாடுவார்கள் என நினைவுக்கு வந்தது. "இந்த எபிஸ்கோப்பில் சபையினர் ஒரு வேளை அந்த பாடலை கேட்டேயிருக்க மாட்டார்கள்" என அவர் சிந்தித்தார். உடனே அவர் தனக்குள் கூறினார். "உண்மையாகவே கடவுள் இருந்தால் இப்பொழுது அவர்கள் "நான் பாவிதான் ஆனாலும் நீர்" என்ற அந்தப் பாடலை பாடவேண்டும். இவ்விதமாக, நடக்க சாத்தியமில்லாத அது சம்பவித்தால் நானும் திரு விருந்தில் பங்குபெறுவேன்" என்று! சில கணங்களுக்குப்பின் சபையின் பாடகர் குழுவினர் "நான் பாவிதான் ஆனாலும் நீர் மாசற்ற இரத்தம் சிந்தினீர்" என் அருமையான பாடலை இசைக்க ஆரம்பித்தனர்.

ஜாக் முன்னால் நடந்து சென்றார். அப்பொழுது தேவன் தன்னிடம் பேசுவது போல கேட்டது: "ஜாக், நான் இங்கே இருக்கின்றேன் என உனக்குத் தெரியும். இப்பொழுது நீ என்ன செய்யப்போகின்றாய்? நீ இடதுபுறமாக திரும்பி அந்த கதவு வழியாக வெளியே சென்றுவிடலாம். நானும் உன்னை விட்டுவிடுவேன், அல்லது வலதுபுறமாக வந்து இந்த திருவிருந்து பந்தியில் வந்து என்னண்டை சேரலாம்."

ஜாக் வலதுபுறமாக திரும்பினார்.

அதற்கு அடுத்த நாளே ஜாக், மூன்றாவது முறை "கடவுள் இருந்தால்" இப்படி செய்யவேண்டும் என்ற ஜெபத்தை செய்தார். ஜாக் தினந்தோறும் தனது இருசக்கர வாகனத்தில் அலுவலகம் உள்ள வாஷிங்டன் D.C வரை சென்று திரும்பி வருவார், அவரது இல்லம் வர்ஜீனியாவில் உள்ள அலெக் சான்டிரியாவில் இருந்தது. அன்று பகல் வெளிச்சம் சீக்கிரமாக முடிந்து இருள் சூழ ஆரம்பித்துவிட்டது. அவர் தனது இருசக்கர வண்டியின் விளக்கை போட முயற்சித்தார். அது செயல்படவில்லை. சுற்றிலும் மிக அதிகமான வாகனங்கள் மத்தியில் இரவில் விளக்கில்லாமல் செல்வது மிக ஆபத்தானது. ஆனால் அவர் என்ன செய்ய இயலும்? அவரால் ஜெபம் செய்ய முடியும்.

அது மற்றொரு "இதை செய்வீரென்றால்" எனக்கேட்டும் ஜெபமாக இருந்தது. "தேவனே, நீர் உண்மையாகவே என்னை நேசித்தீரென்றால் எனக்கு இந்த விளக்கு வெளிச்சம் தர உதவும்" என ஜெபம் செய்தார். அவர்

முனால் கைவைத்து அந்த விளக்கை போட்டதும் அது பிரகாசமாக எரிந்து ஒளி தந்தது. அவர் தனது வீடு வரை வந்து சேர்ந்தபிறகு அந்த விளக்கு எரியவில்லை. அந்த விளக்கு எரியும் சக்தி ஒரு சிறிய இயந்திரத்திலிருந்து (ஜெனரேட்டர்) வந்தது. ஆனால் சில மாதங்களுக்கு முன்பு அதிலிருந்து சில பகுதிகளை தான் அகற்றிவிட்டது. ஜாக்கின் நினைவுக்கு வந்தது. அவர் அதை மறுபடியும் பொருத்த வேண்டும் என நினைத்திருந்தார். ஆனால் அதனை பொருத்தவில்லை. அவர் அந்த ஜெனரேட்டரை திறந்து பார்த்த பொழுது அந்த பகுதிகள் அதில் இல்லை என கண்டு கொண்டார். அந்த இருசக்கர வண்டியின் விளக்கு வெளிச்சம் தர எந்தவித சாத்தியமும் அதில் இல்லாதிருந்தது. ஆனால் தேவன் அது இயங்கத் தக்கதான சக்தியை தந்திருக்கிறார். அவர் வீடு வந்துசேர உதவினார் என்பதை ஜாக் அறிந்து கொண்டார்.

ஜாக் எக்கே அந்த வார இறுதி நாட்களில் தான் செய்த மூன்று இருந்தீரென்றால்" எனக் கேட்டு ஜெபித்த நிகழ்ச்சிகளை இன்னும் நினைவு கூருகின்றார். "இதோ, இந்த வானம் பூமி யாவற்றையும் உருவாக்கிய தேவன் இங்கே இருக்கின்றார். நான் மிகக் கடினமான உள்ளம் கொண்ட நீசனாக இருந்தாலும் அவர் தாம் இங்கே இருப்பதை நிரூபித்து காட்ட நேரம் எடுத்துக் கொண்டார்" எனச் சாட்சி அளிக்கிறவராக மாறினார்.

10

நீங்கள் அறிந்திருக்கக் கூடிய சில மனிதர்கள்

ஜெபத்திலேயே சார்ந்து வாழும் புகழ் பெற்ற மனிதர்கள்

> "தானியேலோவென்றால், அந்த பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும் தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பல கணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்து வந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற் படியிட்டு ஜெபம்பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான்"
>
> (தானி.6:10).

மிட்டாய் தயாரிக்கும் ஒருவர், ஒரு இளம் விதவை, மிக அறிஞரான ஒரு நாத்திகர், வெள்ளைமாளிகையின் ஒரு வக்கீல். இவர்கள் யாவருக்கும் பொதுவாக என்ன இருந்தது? அவர்கள் ஜெபித்து தேவனண்டையில் திரும்பி வந்தனர். தேவன் அவர்களை பல்லாயிரக்கணக்கான மக்கள் தொடப்பட்டு பலனடைய பயன்படுத்தினார்.

"புகழ்பெற்ற கிறிஸ்தவர்கள்" என்பதைப் பற்றி பேசும்பொழுது நாம் கவனமாக இருக்கவேண்டும். நமது உலகம் புகழை ஒரு விக்கிரகமாக செய்து விட்டது. நாம் அடிக்கடி புகழ்பெற்ற மனிதர்கள் நம்மைவிட நல்லவர்கள் அல்லது அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என நினைக்கிறோம். இதைப் போன்ற ஒரு புத்தகத்தில், "அவர்கள் சாதாரணமானவர்கள், பின்பு அவர்கள் ஜெபம் செய்தார்கள். அவர்களை தேவன் புகழ்பெற்றவர்களாக மாற்றி பதிலளித்தார்" என கூறும்படி சோதிக்கப்படுகிறோம்.

ஆனால் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்பும் முக்கியமானது அதுவல்ல.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளரான யாக்கோபு பழைய ஏற்பாட்டில் புகழ்பெற்ற எலியாவை, ஜெபம் செய்வதற்கு மாதிரியாக காட்டி எழுதினார். "எலியாவும் நம்மைப் போலவே இருந்தார். அவரைப்பற்றி சிறப்பாகக் கூற ஒன்றுமே யில்லை. ஆனாலும் அவர் ஜெபித்தார். அதிசய சம்பவங்கள் நிகழ்ந்தன. தேவனுடைய வல்லமை அதிசயங்களை நடப்பித்தது, எலியாவினால் அல்ல."

அதைப்போலவே இதில் புகழ்பெற்றவர்களாக காணப்படும் எல்லாருடைய வாழ்க்கையும்! பில்லி கிரஹாம், பில் பிரைட், பிரான்சிஸ் ஹேபர் ஆகிய எல்லாருமே தங்களுடைய அழைப்பையும் விசுவாசத்தையும் குறித்து முடமாக்கத்தக்க சந்தேகங்களை எதிர்கொள்ள நேர்ந்தாலும் ஜெபம் செய்தபொழுது தேவன் பதிலளித்தார். அன்னை தெரேசா தனது கடைசி ரூபாயையும் அளித்துவிட்டார், கேத்தரின் மார்ஷல் ஒரு பயங்கரமான வியாதியினால் பாதிக்கப்பட்டார். அவர்கள் ஜெபித்தனர் தேவன் தமது வல்லமையை காண்பித்தார். நாம் அவர்களைப்பற்றி வியப்புடன் உயர்வாக எண்ணுகிறோம். ஆனால் நாம் அவர்களை வணங்குவதில்லை. உண்மை என்னவென்றால் நீங்களும் அதே வல்லமையை தொடர்புகொள்ள இயலும், ஒருவேளை இப்பொழுது நீங்கள் புகழ்பெற்ற ஒருவராக இருந்தாலும் அல்லது இப்பொழுதும் ஒருக்காலும் பேர் பெறவில்லையென்றாலும் தேவன் உங்களுக்காக இருக்கின்றார். ஒருவேளை நீங்கள் பொருளாதார குறை வினால் பாதிக்கப்பட்டவராகவோ, அல்லது காலையில் கண்விழித்ததும் படுக்கையிலிருந்து எழுந்து நடக்க முடியாத பலவீனமுள்ளவராகவோ இருக்கலாம். தேவனிடத்தில் அதைப்பற்றி பேசுங்கள். அவர் தமது வல்லமையை உங்களிடத்திலும் உங்கள் மூலமாகவும் காட்ட ஆயத்தமாக இருக்கின்றார்.

தேவனே, உறுதியான இருதயத்தை எனக்குத் தாரும்
தகுதியற்ற அன்பெதுவும் என்னை கீழே இழுக்காதபடி காத்துக் கொள்ளும்.
எந்த துன்பத்தாலும் மேற்கொள்ள முடியாத
இருதயத்தை எனக்குத்தாரும்.
எந்த தகுதியற்ற நோக்கமும் திசை திருப்ப முடியாத
நேர்மையான இருதயத்தை எனக்குத் தாரும்.

தாமஸ் ஆக்கினாஸ்

சகோதரர் ஆன்ரூவின் ஜெபம்

"தேவனே, இந்த பார்வையுள்ள கண்கள் காணாதபடி செய்யும்"

இவர் ஒரு திறமையுள்ள கடத்தல்காரராக, சில நாடுகளில் தடைசெய்யப்பட்டிருந்தவற்றை அதன் எல்லைகளுக்குள் ஆயிரக்கணக்கில் எடுத்துச் சென்றார். இரும்பு திரையுள்ள நாடுகளுக்கு மறுபடியும் மறுபடியும் கடந்து சென்றார். எல்லை பாதுகாப்பு சேவகரை கடந்து தடைசெய்யப்பட்டிருந்த பொருட்களை எடுத்துச்சென்றார். அந்த ஆபத்தான 'பொருட்கள்' என்ன? வேதாகமங்கள்.

மிக அதிகமாக விற்பனையான "தேவனுடைய கடத்தல் காரர்" என்ற புத்தகத்தில் சகோதரர் ஆன்ரூ தான் பல நாத்தீக கொள்கை உள்ள நாடுகளுக்கு, அங்குள்ள மக்களுக்கு தருவதற்காக தேவனுடைய வார்த்தையை ஆபத்தான சூழ்நிலைகளில் கொண்டு சென்றபொழுது நடந்த அற்புதங்களையும் ஜெபங்களுக்கு கிடைத்த அதிசய பதில்களையும் பற்றி கூறியிருக்கிறார்.

சகோதரர் ஆன்ரூ நெதர்லாந்தில் உள்ள சிறிய நகரத்தில் பிறந்தார். அவர் பதினேழு வயதாக இருக்கும்பொழுதே டச்சு போர் வீரர்களுடன் இந்தோனேஷியாவில் நடந்த யுத்தத்திற்கு செல்ல நேர்ந்தது. அந்த யுத்தத்தின் கொடூரம் அவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையை உணர்ச்சியற்றதாக செய்தது. ஆனால் அவர் ஒரு மருத்துவ மனையில் இருந்தபொழுது தேவன் அவரை பற்றிபிடித்து மீட்டுக்கொண்டார்.

அவர் இங்கிலாந்திலுள்ள ஒரு வேதாகம பள்ளிக்குச் சென்றார். பின்பு கம்யூனிஸ்ட்கள் போலந்து நாட்டில் நடந்த ஒரு இளைஞர் கூட்டத்திற்கு அவரை அழைத்தார்கள். கிழக்கு ஐரோப்பாவில் உள்ள மக்களின் ஆவிக்குரிய பசி தாகத்தைக் கண்ட அவர், அதற்காக ஏதாகிலும் செய்யவேண்டுமென்று தீர்மானம் செய்தார். அவர் போலந்து நாட்டின் திருச்சபை ஆராதனைகளில் பங்குபெறும்பொழுது ஒரு விசித்திரமான நிகழ்வை காண நேர்ந்தது. போதகர் வேதாகம பகுதியை வாசிப்பதற்காக அறிவிப்பு தந்தவுடன் சபையார் அனைவரும் இங்குமங்கும் விலகி அங்கே வேதாகமத்தைக் கையில் வைத்திருந்த ஒரு சிலரிடம் நெருங்கி சென்று சுற்றி நின்று கொள்வார்கள். முக்கியமான ஒன்று தெளிவாக தெரிந்தது. அவர்களுக்கு இன்னும் வேதாகமங்கள் தேவை.

1957ம் ஆண்டு சகோதரர் அன்ரூ, இருபத்தைந்து வயதுக்குட்பட்டவராக இருந்தார். அப்பொழுது இன்னொரு கம்யூனிச நாடான யூகோஸ்லேவியாவுக்கு செல்ல விசா கிடைத்தது. ஆம்ஸ்டர்டாம் நகரில் தேடிப்பார்த்து ஸ்லேவிக் மொழியிலுள்ள கிறிஸ்தவ புத்தகங்கள், கைப்பிரதிகளை எடுத்துக் கொண்டு அவர் யூகோஸ்லேவியாவின் எல்லைப்பகுதியை நோக்கிச் சென்றார். முன்பெல்லாம் அவர் ஒரு குழுவினருடன் சேர்ந்துதான் பயணம் செய்வதுண்டு. இப்பொழுது முதல் முறையாக அவரது வாழ்வில் தனியாக ஒரு கம்யூனிச நாட்டுக்குள்போகத் துணிந்தார்.

அங்கிருந்த அபாயங்கள் அவருக்குத் தெரியும். சிறிது நாட்களுக்கு முன்புதான் யூகோஸ்லேவிய அரசாங்கம் "அங்கே வரும் பயணிகள் தங்கள் சொந்த உபயோகத்திற்கென்று மட்டுமே பொருட்கள் எடுத்து வரவேண்டும். மற்ற எதையும் புதியதாகவோ அதிக அளவிலோ கொண்டு வரக்கூடாது. வெளிநாட்டில் அச்சடிக்கப்பட்ட எதையும் கொண்டு வரக்கூடாது, அது அந்நிய நாட்டு பிரச்சாரம் என கருதப்படும்" என உத்தரவிட்டிருந்தது. சகோதரர் ஆன்ரூ ஒரு புதிய வோல்ஸ்வேகன் வண்டியை ஒட்டி வந்தார். அது முழுவதும் கைப்பிரதிகள், வேதாகமங்கள், வேதாகம பகுதிகளாகிய புத்தகங்கள் ஆகியவற்றால் நிறைந்திருந்தது. எப்படி அவர் அந்த எல்லையை தாண்டி எடுத்துச் செல்ல இயலும்?

அவர் அங்கே நின்று ஜெபம் செய்தார். அந்த ஜெபத்தை அவர் மறுபடியும் அநேக முறைகள் தொடர்ந்து வந்த ஆண்டுகளிலும் திரும்ப செய்தார். இது தான் அந்த சாதாரணமான ஜெபம்: தேவனே, இந்த எல்லைக்கு அப்பால் வாழ்கிற உம்முடைய பிள்ளைகளுக்காக வேதாகமங்களை தர நான் விரும்பி அவற்றை கொண்டு வந்துள்ளேன். நீர் இந்த உலகத்தில் இருந்தபொழுது, குருடரின் கண்கள் பார்வையடையச் செய்தீர். ஆண்டவரே, இப்பொழுது அடியேன் ஜெபிக்கின்றேன். பார்வையுள்ள கண்கள் குருடாகும்படி செய்வீராக. இங்குள்ள காவலர்கள் என்னுடைய இந்தப் பொருட்களைக் கண்டு பிடிக்காதபடி செய்யும்".

மனதில் இந்த ஜெபத்துடன் அவர் தன் வண்டியை அந்த எல்லையில் சோதனையிடும் இடத்தில் ஒட்டிச் சென்றார். அங்கிருந்த இரண்டு காவலரும் நெதர்லாந்து நாட்டினவர் ஒருவரை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைந்ததுபோல காணப்பட்டது. சகோதரர் ஆன்ரூ ஜெர்மானிய மொழியில் அவர்களுடன் பேசினார். அவர்கள் அந்த வண்டியை சுற்றிலும் நடந்து அவரது சூட்கேஸ்

ஒன்றை திறந்து காட்டும்படி கேட்டார்கள். அவர்கள் அதிலிருந்த சட்டைகளை தூக்கி பார்த்தபோது சிறிய கைப்பிரதிகள் காணப்பட்டன.

"நீங்கள் ஏதாகிலும் சொல்லவேண்டுமா?" என ஒரு காவலர் கேட்டார்.

"ஒரு சில சிறிய பொருட்கள்தான்" என சகோதரர் ஆன்ரூ பதில் அளித்தார். ஆம், அந்த கைப்பிரதிகள் மிகச் சிறியதாக இருந்தன.

"அதனால் சங்கடம் ஒன்றும் இல்லை" என அந்த காவலர் கூறினார். ஆன்ரூ அந்த சுட்கேஸை மூடியவின், அவருடைய பாஸ்போர்ட் கொடுக்கப்பட்டது. அவர் அங்கிருந்து சக்ரேம் என்ற நகருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அவர் பெல்கிரேட் நகரில் சென்றபொழுது, அவர் அங்கிருந்த சபையாரிடம் ஜெபிக்கும்படியாகவும் வேதம் வாசிக்கும்படியாகவும் கேட்டுக்கொண்டார். அவர்கள் பதில் அளிக்கவில்லை. அப்பொழுது அங்கிருந்த போதகர் விவரித்து சொன்னார், "ஜெபம் நாங்கள் தினமும் செய்யமுடியும். ஆனால் வேதம் தினமும் வாசிக்க இயலாது. இந்த மக்களில் ஒரு சிலரிடம்தான் வேதாகமம் இருக்கின்றது".

அன்றிரவு சகோதரர் ஆன்ரூ கூறினார். "எனக்குள் ஒரு திடமான தீர்மானம் பிறந்தது" "எனக்குக் கிடைக்கும் வேதாகமங்களை மனிதனால் கட்டப்பட்டுள்ள இந்த சுவருக்குப் பின்னால் உள்ள விசுவாச பிள்ளைகளுக்கு கொண்டுவந்து தருவேன்" என தேவனிடம் வாக்களித்தார்.

சகோதரர் ஆன்ரூ அநேக முறைகள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை கடந்து வந்தார். ஒவ்வொரு முறையும் எல்லையைக் காக்கும் காவலரின் கண்பார்வையை மறைத்து தேவன் சகோதரர் ஆன்ரூவை காத்துக் கொண்டார். இவ்விதமாக மிகத் தேவையில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு வேதாகமத்தை தர உதவினார்.

பில் பிரைட்டின் ஜெபம்

தேவனே, தரிசனத்தை உறுதிப்படுத்தும்

பில் பிரைட் புரட்சிகரமான கருத்துகளை சிந்தித்து செயல்படுவதை என்றுமே நிறுத்தவில்லை. 'காம்பஸ் குருசேட்' என்ற கிறிஸ்தவ இயக்கத்தை உருவாக்கின அவர் கல்லூரிகளில் நடைபெறும் சுவிசேஷ ஊழியங்கள்

புரட்சிகரமாக அமையச் செய்தார். காம்பஸ் குருசேட் இன்றைய உலகில் மிகப் பெரிய விசுவாச அருட்பணி ஸ்தாபனமாகவும், கல்லூரி மாணவரை சந்திப்பது மட்டுமின்றி இன்னும் அதிகமான பணிகளிலும் முனைந்து செயல்படுகின்றது. பில் பிரைட்டுடைய சிறந்த கருத்து ஒன்று சுவிசேஷ செய்தியை நான்கு அடிப்படை முக்கியமான விதிகள்போல அறிவித்து எளிமையாக விளங்க வைப்பது. "நான்கு ஆவிக்குரிய சட்டங்கள்" என அறியப்பட்டுவரும் அந்த கைப்பிரதி உலகின் பலபகுதிகளிலும் அநேகருக்கு விநியோகிக்கப்பட்டது. பின்பு 'இயேசு' என்ற திரைப்படத்தை காம்பஸ் குருசேட் உலகிற்குள் கொண்டு வந்தது. முந்நூற்றுக்கும் மேலான சுவிசேஷ ஸ்தாபனங்கள் அதனை பயன் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். உலகின் 10 சதவீதம் மக்கள் அதனை பார்த்துள்ளதாகக் கணக்கிடப்படுகின்றது.

1951ம் ஆண்டு தேவன் பிரமிக்கத்தக்க விதமாக பில் பிரைட் செய்த ஒரு ஜெபத்துக்கு பதில் அளித்திராவிடில் தனது மிட்டாய் தயாரிக்கும் தொழிலுக்கு பில் திரும்பி போயிருக்க நேர்ந்திருக்கும்.

அவர் பிரைட் மிட்டாய்கள், பிரைட் உணவுகள், ஆகியவற்றை தயாரித்து செய்த தொழில் நன்றாக இருந்தது. வியாபாரம் பிரபலமாக இருந்தது. அமெரிக்காவின் பிரதான கடைகளில் அவரது உணவு பொருட்கள் அலங்காரமாக அடுக்கி வைக்கப்பட்டு காணப்பட்டன. அவர் மற்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தார். தான் ஒரு "மகிழ்ச்சியுள்ள அஞ்ஞானி" யாக இருந்ததாக அவர் ஒப்புக்கொள்கிறார்.

பில் மனந்திரும்பிய பின் வேதாகம கல்லூரியில் இணைந்து படிக்கச் சென்றார். ஒரு நாள் இரவில் அவர் எபிரேய மொழி தேர்வுக்காக படித்துக் கொண்டிருந்த பொழுது அவருக்கு விவரிக்க முடியாத தரிசனம் ஒன்றை கண்டார். "தேவனை நான் சந்தித்தேன் என்று மட்டுமே என்னால் சொல்ல இயலும்... அதிலிருந்து நான் என்றுமே முன்பிருந்ததுபோல இல்லை" என்றார். குறிப்பிட்ட விதமாக இன்றைய கல்லூரிகளிலே கிறிஸ்துவுக்காக மாணவரை சந்திக்கவும். நாளைய உலகினை கிறிஸ்துவுக்காக சந்திக்கவும் தான் அழைக்கப்பட்டதாக அவர் கூறினார்.

அவரது மனைவி சந்தேகப்பட்டாலும் கூட அவர் தயங்காமல் வேதாகம கல்லூரியிலிருந்து விலகி கல்லூரி ஊழியங்களுக்காக ஆயத்தங்களை செய்தார். ஒரு திட்டம் அமைத்து கிறிஸ்தவ தலைவர்கள் பலரை அதில்

எடுத்து உரைக்க அழைத்தார். ஆனால் மனசஞ்சலம் தரும் ஒரு காரியம் இருந்தது. அவர் இதுவரை பல இடங்களில் கல்லூரி மாணவர் கூடுகையில் செய்தி அளித்திருந்தபோதும் அவரது ஊழியத்தின் பலனாக ஒரு மாணவனும் மனந்திரும்பியதை அவர் காணவில்லை.

அவர் தனது தரிசனத்தை தவறாக புரிந்து கொண்டாரா? உண்மையாகவே அவர் கல்லூரி மாணவர் மத்தியில் ஊழியம் செய்ய வேண்டுமென தேவன் விரும்புகின்றாரா? அவர் ஒக்லஹாமா கல்லூரியில், பயின்றார். இப்பொழுது லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் இருக்கின்றார். ஒருவேளை இங்குள்ள மாணவர்கள் கிறிஸ்தவ செய்தியை ஏற்காத கடினம் உள்ளவர்களா? எப்படியிருந்தாலும் அவரது ஊழியத்தின் விளைவாக மாணவர்கள் கிறிஸ்துவண்டை வருவதைக் காணாவிடில் கல்லூரிகளில் நற்செய்தி அறிவிக்கும் பணியில் அவர் எவ்வாறு ஈடுபட இயலும்?

கப்பா அல்ஃபா பெண்கள் பொதுநலத் தொண்டு நிலையம் என்ற இடத்தில் அவரும் அவரது மனைவி வானெட் இருவருமாக மாணவியருக்கு கூட்டங்கள் நடத்தினர். பில் மிகுந்த நடுக்கத்துடன் இருந்தார். அவர் ஜெபம் செய்தார், "தேவனே, தயவாக இந்தக் கூட்டத்தில் ஒரே ஒருவராவது ஒப்புக்கொடுப்பதால் நீர் எனக்கு தந்த தரிசனத்தை உறுதிப்படுத்தும்" என வேண்டினார்.

பின்பு அவர் இயேசுவைப் பற்றியும் எப்படி தனிப்பட்ட விதமாக அவர்கள் அவரை அறிந்துகொள்ள முடியும் என்பதைப் பற்றியும் செய்தி அளித்தார். கிறிஸ்துவை தங்கள் ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ள விரும்புபவர்கள் முன்வந்து தன்னுடன் பேசலாம் என இறுதியில் கூறினார். அவர் முடிவு ஜெபம் செய்தபொழுது அவர் முன் ஒரு வரிசை உருவாகியது. அந்த கூட்டத்திலிருந்த அறுபது மாணவிகளில் பாதிக்கும் மேற்பட்டோர் அங்கே வரிசையில் வந்து நின்ற எப்படி இயேசுவை ஏற்றுக்கொள்ளலாம் என அறிய வாஞ்சை காட்டினர். அடுத்த ஆறுமாதங்களுக்குள் அதைப் போன்ற கூட்டங்களில் 250 மாணவர்கள் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். அவர்களில் மாணவர் தலைவரும், மாணவர் செய்தித்தாள் ஆசிரியரும் தலைமையாய விளையாட்டு வீரரும் இருந்தனர்.

பில் பிரைட்டின் ஜெபம் கேட்கப்பட்டது. அவருடைய தரிசனம் உறுதிப்படுத்தப்பட்டது. காம்பஸ் குருசேட் என்ற இயக்கம் உருவாகியது.

இன்றைய தினத்தில் காம்பஸ் குருசேட் இயக்கம் அறுபது விதமான

ஊழியங்களை செய்கின்றது. பதினேழாயிரம் முழுநேர ஊழியர்களும், இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட பயிற்சி பெற்ற தன்னார்வ ஊழியர்களும் உள்ளனர். "நான்கு ஆவிக்குரிய சட்டங்கள்" என்ற கைப்பிரதி புத்தகம் 2.5 நூறு கோடிகளுக்கும் மேலாக மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. 'இயேசு' திரைப்படம் பார்த்த மக்கள் 450 லட்சங்களுக்கும் மேற்பட்ட தொகை மக்கள். பில் பிரைட்டின் ஊழியத்தின் மூலமாக எவ்வளவு பேர்கள் கிறிஸ்துவைப்பற்றி அறிந்துகொண்டனர்? லட்சங்களுக்கு மேற்பட்டோர்.

ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் பில் 'ஒரே ஒருவரை தாரும்' என ஜெபித்தார்!

அன்னை தெரேசாவின் ஜெபம்

"நீர் மாத்திரம் போதும்"

கொல்கொத்தாவின் சேரி வீதியில் நின்ற அந்த பெண்மணிக்கு, தங்க இடமில்லை, கூட யாரும் இல்லை, உதவ யாரும் இல்லை, பணம் இல்லை, வேலை இல்லை, வாக்குறுதி இல்லை, எந்த பாதுகாப்பும இல்லை.

அல்பேனியாவைச் சேர்ந்த அந்த சிறிய பெண்மணி ஆக்னஸ் கொன்ஸா பொஜாக்ஸு, கொல்கொத்தாவின் லொரேட்டா கான்வென்டில் சந்நியாசினி ஆசிரியையாக இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இருந்தார். ஆனால் இப்பொழுது அந்த வசதியான கான்வென்ட் வாழ்க்கையைவிட்டு வந்து விட்டார். ஏனெனில் அங்குள்ள "ஏழைகளிலும் வறிய ஏழைகளுக்கு" பணி செய்யும்படியாக தேவன் தன்னை அழைப்பதாக உணர்ந்தார். லொரேட்டா வில் அவர் மிகுந்த மகிழ்ச்சியான சந்நியாசினியாக இருந்ததாக குறிப்பிடுகி றார். தனக்கு எல்லாமாக இருந்த அந்த இடத்தைவிட்டு வருவது மிக கடினமானதாக இருந்ததாகவும் கூறுகின்றார். அவரது குடும்பத்தாரையும் நாட்டையும் பிரிந்து கன்னி மடத்தில் வாழ்க்கையை ஏற்றதைவிட கடினமாக உணர்ந்தார்.

லொரேட்டாவில் அவருக்கு பொருளாதார நன்கு இருந்தது. உணவு, மருந்து, உடைக்காகவோ பாதுகாப்புக்காகவோ கவலைகள் இல்லை. ஆனால் இப்பொழுது கொல்கொத்தாவின் வீதிகளில் தன்னந்தனியாக நிற்க நேர்ந்தது.

லொரேட்டா கான்வென்ட் உயர்ந்த சுவர்களால் சுற்றி மறைக்கப்பட்டிருந்தது. வெளியேயிருந்த சேரி பகுதிகள் பற்றி தெரிய வாய்ப்பில்லை. அங்கே அருமையான புல்தரை மைதானங்கள் சமாதானம் நிலவும் தோட்டங்கள், மஞ்சள் நிறமுள்ள அழகிய தெரேசாவிடம் படித்த மாணவியர் பலரும் மிகுந்த செல்வந்தரான குடும்பத்தை சேர்ந்தவர்கள். ஆயினும் வாரத்தின் இறுதி நாட்களில் மருத்துவமனைகளை சென்று பார்த்துவரும் மாணவிகள் அங்குள்ள ஏழைகளைப் பற்றியும், தெருக்களில் மிகவும் ஏழைகளும், வியாதிப்பட்டவரும் வாழ்வதையும் பற்றி கூறினார்கள். அன்னை தெரேசாவும் அதை கண்டிருந்தார்கள். தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பிச்சை எடுப்பதையும், பசியினால் வாடும் குழந்தைகள், சாலைகளில் மழைய சாக்குகளால் மறைத்துக்கொண்டு வாழும் மக்கள் பலரும் சுற்றிலும் இருந்தனர்.

ஒரு முறை லொரேட்டா கான்வென்ட் எவ்வளவு இனிமையாக உள்ளது என தனது அம்மாவுக்கு கடிதம் எழுதியபொழுது, இவ்வாறு பதில் வந்தது. "எனது அன்பான மகளே, நீ அங்கு வாழும் ஏழை மக்களுக்கு உதவி செய்வதற்காகவே சென்றாய் என்பதை மறந்துவிடாதே" என எழுதியிருந்தார்கள்.

பின்பு ஒரு முறை இமயமலையின் அடிவாரங்களில் ரெயில் வண்டியில் பயணம் சென்றபொழுது அமைதியாக தெரேசா ஜெபம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவர்களுக்கு "அவரது அழைப்புக்குள் ஒரு அழைப்பு" கிடைக்கப்பெற்றதாக குறிப்பிடுகிறார். "அந்த செய்தி மிகவும் தெளிவாக இருந்தது" என்பதை பின்னர் கூறினார். "நான் கான்வென்டில் இருந்து வெளியே சென்று விட வேண்டும். அந்த ஏழை மக்களின் நடுவில் இருந்து அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். அது ஒரு நியமம்" என்பதே அந்த முடிவு

தேவனிடத்திலிருந்து அழைப்பை பெறுவது ஒன்று, கான்வென்ட் சபையைவிட்டு வெளியே சென்றுவிட மேல் அதுவகை அனுமதியை பெறுவது மற்றொன்று. ஆனால் கடைசியில் அதுவும் வந்தது. அந்த கான்வென்டின் கதவுகள் அவருக்குப் பின்னால் அடைக்கப்பட்டன. அன்னை தெரேசா தனித்து பணிபுரிய வெளிவந்தார்.

நல்லது, அப்படியும் சுயமாக அவர் தனியே இல்லை. அன்னை தெரேசா இவ்வாறு ஜெபம் செய்தார். "என் தேவனே, நீர் நீர் மாத்திரம் போதும், நான் உமது அழைப்பை நம்புகிறேன். நீர் தந்த ஊக்கமளிக்கும் உள்ளுணர்வை நம்புகிறேன். நீர் என்னை கைவிடமாட்டீர்."

தேவன் ஒரு நாளும் கைவிடமாட்டார் என்ற விசுவாசத்துடன் "நான் இந்த இடத்திலே இருக்கும்படியாக தேவன் விரும்பினார் என்பதை நிச்சயமாக அறிவேன்" என கூறினார்.

கொல்கொத்தாவின் வீதிகளில் முதல் நாள் நடந்து சென்றபொழுது தெரேசாவிடம் ஒரு மதகுரு தனக்கு ஏதாகிலும் தானம் தரும்படியாக வேண்டினார். நடக்க துவங்கியபொழுது அம்மையரிடம் ஐந்து ரூபாய்தான் இருந்தன. அவற்றில் நான்கை ஏழைகளுக்கு அளித்துவிட்டார். மீதமிருந்த ஒரு ரூபாயை தயக்கத்துடன் அந்த மதகுருவுக்கு தந்துவிட்டார். இப்பொழுது கையில் ஒன்றுமேயில்லை.

ஆனால் அன்றைய தினம் மதிய நேரம் அதே மதகுரு மறுபடியும் வந்து ஒரு காகித உறையைத் தந்தார். ஒரு மனிதன் தன்னிடம் அந்த உறையை தந்து உங்களுக்கு தரும்படியாக கேட்டுக்கொண்டார் என அவர் கூறினார். அந்த மனிதன் தெரேசா என்ன தொண்டுசெய்யப்போகிறார் என அறிந்து உதவி செய்ய விரும்பினார். அந்த உறைக்குள் பார்த்தபொழுது ஐம்பது ரூபாய்கள் இருந்தன.

அன்னை தெரேசா முதலாவது அங்கிருந்த பொது இடத்தின் பூங்கா ஒன்றில் குவிந்திருந்த குப்பைகளை அகற்றி சுத்தம் செய்தார். அங்கிருந்த சிறுவர்களை ஒன்றுகூட்டி அவர்களுக்கு எழுத்துகளை படிக்கச் சொல்லிக் கொடுத்தார். அந்த சிறுவர்களின் வீடுகளைச் சந்தித்தார். தேவையானவர்களுக்கு மருந்துகளும், உணவுகளும் தன்னால் முடிந்தவரை கொடுத்து உதவினார். சில சமயம் அவரிடம் ஒன்றுமில்லாதபொழுது மற்றவர்களிடம் வேண்டி கேட்டு பிச்சை எடுத்து அதையெல்லாம் கொண்டுபோய் கொடுத்தார்.

ஒரு நாள் இரவு அவரது கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. அங்கே மெலிந்த தோற்றமுடைய ஒரு பெண் நின்று "அம்மா, நானும் உங்களுடன் இணைந்து கொள்ள விரும்புகிறேன்" எனக் கூறினாள்.

அன்னை தெரேசா தேவனை நோக்கி அவரோடு நன்றி செலுத்தினார். "அன்பான இயேசுவே, நீர் எவ்வளவு நல்லவர் நீர் எனக்குச் செய்த வாக்குறுதியை நிறைவேற்றினீர். கர்த்தராகிய இயேசுவே, நீர் தந்த நன்மைக்காக நன்றி" என ஜெபித்தார். அந்தப் பெண் அன்னை தெரேசா

வுடன் "ஆதரவற்றோருக்கு கருணை காட்டும் ஊழியத்தில் இணைந்த முதல் ஊழியர் ஆனாள். பின்பு அநேகர் வந்தனர்."

பல வருடங்கள், ஏழை மக்களுக்கு ஊழியம் செய்ததற்காக 1979ம் ஆண்டு அன்னை தெரேசாவுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

தேவன், அன்னை தெரேசாவின் மூலமாக செய்தது என்னவென்றால் அந்த எளிமையான ஜெபத்திற்கு ஆச்சரியமான பதில் அருளியதே. "என் தேவனே, நீர், நீர் மாத்திரம் நான் உமது அழைப்பை நம்புகிறேன். நீர் தந்த ஊக்கமளிக்கும் உள்ளுணர்வை நம்புகிறேன். நீர் என்னை ஒரு நாளும் கைவிடமாட்டீர்."

பில்லி கிராமுடைய ஜெபம்

"தேவனே, என்னை கொஞ்சம் பயன்படுத்தும்"

அல்டூனாவில் நடந்த கூட்டங்கள் முற்றும் தோல்வியாக முடிந்தன. சந்தேகங்கள் அவரை சூழ்ந்துகொண்டன. 1949ம் ஆண்டு சுவிசேஷகப் பில்லிகிரஹாம் அடுத்து என்ன செய்வதென்று அறியாமல் இருந்தார்.

அல்டூனா, பென்சில்வேனியா ஆகிய நகரில் நடந்த கூட்டங்கள் சுவிசேஷகராகிய தனக்கு வெற்றியாக இல்லையென்றால் இனி ஏன் இதில் ஈடுபடவேண்டும்? நற்செய்தி அறிவிக்கும் பணியை விட்டு விலகிவிட நினைத்தார். அவருக்கு முப்பது வயதாகும். அந்த ஆண்டில் அவர் ஒரு சிறிய கிறிஸ்தவ கல்லூரியின் தலைவராக இருந்தார். ஆனால் உயர்ந்த பட்டங்கள் இல்லாததால், மறுபடியும் படிக்கச் சென்று **Ph.D** பட்டம் பெறலாமா...?

ஆனால் அவருக்கு இருந்த பிரச்சனையில் பெரியது அவருக்குள் எழும்பின கேள்விகள்தான். "எனது விசுவாசமே முற்றுகையிடப்பட்டதாக உணர்ந்தேன்" என பின்பு கூறினார்.

அவருடன் நெருங்கிய நண்பராக இருந்த சார்லஸ் டெம்புள்டன், சுவிசேஷ கூட்டங்கள் நடத்த உதவுபவர். வேதாகமத்தைப் பற்றி ஐயம் கொள்ள ஆரம்பித்தார். பில்லிகிரஹாம் பல இறையியல் வல்லுநர்களின்

புத்தகங்களைப் படித்தார். அவருக்குள் பல கேள்விகள் வந்தன. பில்லி கிரஹாம் எப்பொழுதுமே கிறிஸ்துவின் தெய்வீக தன்மை குறித்தோ சுவிசேஷங்களின் உண்மைக் கருத்தைக் குறித்தோ சந்தேகப்படவில்லை. ஆனால் சில எதிர் மாறானவை காணப்படுவதால் வேதாகமம் முழுவதையும் நம்பலாமா? அவற்றிற்கு பதில் அளிக்க இயலவில்லையென்றால் தான் இப்பொழுது செய்து வரும் ஊழியத்தைத் தொடர்ந்து எவ்வாறு செய்ய இயலும்?

வேதாகம சத்தியங்களை முற்றிலுமாக நம்புகின்ற வேதம் ஒரு குறைவும் அற்ற பூரணத் தன்மையுள்ளது என விசுவாசிக்கும் வேத பாடசாலையை அவர் நடத்தி வந்தார். அதன் தலைவராக அவர் தொடர்ந்து எப்படி பணி யாற்றமுடியும்? நற்செய்தி அறிவிப்பாளராக பணி செய்ய விரும்பும் அவர், "வேதாகமம் கூறுகின்றது...," என எப்படி சொல்லமுடியும்? அவருக்கு மனதில் சில சந்தேங்கள் உள்ளதே? நான் ஒரு மாயமாலக்காரன்போல உணர்ந்தார்.

அவர் வேதாகமம் முழுவதையும் படிக்க ஆரம்பித்தார். வேதாகம உண்மைகளைப்பற்றி வேதாகமமே கூறுவது என்ன? ஒவ்வொரு கருத்தையும் எல்லா திசைகளிலும் இருந்து கூர்ந்து படித்தார். இயேசு வேத வாக்கியங்களைப்பற்றி கூறியவற்றை பார்த்தார் ஒரு நாள் மாலை, "கர்த்தர் இவ்வாறு கூறுகின்றார்" என்ற சொற்றொடர் வரும் எல்லா பகுதிகளையும் படித்தார்.

ஜூலை மாதம் மிச்சிகன் நகரில் நடந்த கூட்டங்களின்பொழுது இன்னும் மனதில் சந்தேகத்துடன் உழன்ற பொழுதும் இரண்டு போதகர்களுடன் ஜெபம் செய்தார். "ஆண்டவரே, எப்படியாகிலும் என்னை கொஞ்சம் பயன்படுத்தும்..."

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பெரிய விதமாக சுவிசேஷக் கூட்டங்களுக்கு ஏற்பாடு நடந்து வந்தது. பில்லிகிரஹாம் தனக்குள் இத்தனை கேள்விகளுடன் எப்படி செய்தி கொடுக்க முடியும்? என திகைத்துக் கொண்டிருந்தார். ஒரு வேளை அந்த நிகழ்ச்சிகளிலிருந்து விலகிக்கொள்ளலாமா, அல்லது ரத்து செய்துவிடலாமா? என நினைத்தார்.

பின்பு காலிபோர்னியாவில் கூட்டங்கள் நடந்தபொழுது ஒரு நாள் மாலை பில்லிகிரஹாம் சான் பர்னாடினோ மலைக்கு அருகே நடந்து சென்றார்.

மரங்களின் நடுவே ஒரு அடிமரத்தை கண்ட அவர் அங்கே முழங்கால்படியிட்டு, தனத வேதாகமத்தை அந்த மரத்தின் சமனான புறத்தில் திறந்து வைத்து மங்கலான நிலா வெளிச்சத்தில் அங்கே அவர் ஜெபம் செய்வார்.

பின்னர் அவர் எழுதியுள்ள "நான் இருக்கிற வண்ணமாகவே" என்ற சுய சரிதையில் அந்த ஜெபம் இவ்வாறு செய்ததாக எழுதியுள்ளார். "தேவனே, இந்த புத்தகத்தில் அநேக விஷயங்கள் எனக்கு புரியவில்லை. அவற்றிற்கு விளக்கம் கூறவும் இயலவில்லை. சில தத்துவ ரீதியான, மன சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு என்னால் பதில்கூற இயலவில்லை. ஆனால் என் அருமை ஆண்டவரே, விசுவாசத்தினால் இது உமது வார்த்தை என ஏற்றுக்கொள்கின்றேன்".

அவர் முழங்காற் படியிலிருந்து எழுந்து நின்றபொழுது, அநேக மாதங்களாக கண்டிராத தேவ சமூகத்தையும் தேவ வல்லமையையும் உணர்ந்ததாக கூறியிருக்கின்றார். ஒரு பெரிய அகன்ற பாலத்தை அவர் கடந்து சென்றுவிட்டார்.... ஆவிக்குரிய போர் ஒன்றில் போராடி வெற்றி கிட்டியது.

லாஸ் ஏஞ்சல்ஸ் கூட்டங்களும் அட்லூனா கூட்டங்கள் போல வெற்றி பெறாமல் போய்விடுமோ என தோன்றியது. ஆனால் அப்பொழுது வியத்தகும் விதமாக செய்திதாள்கள் தலைப்பு செய்திகளாக சிறப்பாக வெளியிட்டன. டைம் பத்திரிக்கை ஒரு பெரிய கட்டுரையை வெளியிட்டது. ஒரே ஆண்டுக்குள் 'நியூஸ் வீக்' என்ற தலையாய செய்தித்தாள் "அமெரிக்காவில் இன்றைய தலைச்சிறந்த நற்செய்தியாளர் பில்லி கிரஹாம்" என அழைத்தது.

இப்பொழுது பில்லிகிரஹாம், "வேதாகமம் கூறுகின்றது—" என செய்தி அளிக்கும்பொழுது தன் உள்ளத்திலிருந்து பேச முடிந்தது. அந்த இரவு ஜெபத்தில் தேவனுடைய வார்த்தைக்கு தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்ததனால் புதிய வல்லமையையும் அதிகாரத்தையும் அவருடைய செய்திகள் பெற்றன. வேதாகமத்தின் மேலுள்ள முழு நம்பிக்கையும் சத்தியத்தின் மேலுள்ள உண்மை விசுவாசமும் சுவிசேஷராக தேவனால் வெற்றி பெற உதவின.

உண்மையில் தேவன் அவரை "கொஞ்சம் அதிகமாகவே" பயன்படுத்தினார்!

பிரான்சிஸ் ஸ்ஹேஃபருடைய ஜெபம்

"பிதாவே, நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதைக் காட்டும்"

அவர்கள் மூடுபனிக்குள் வாழ்வதைப்போல உணர்ந்தார்கள். 1950ம் ஆண்டிலிருந்து 1955 வரை ஹேஃபர் தம்பதியினர் பல சோகமான சம்பவங்களால் அசைக்கப்பட்டனர். அவற்றை எப்படி தாங்கிக்கொள்வதென்றே தெரியவில்லை. "நாங்கள் என்ன செய்வதென்றே அறியாமலிருந்தோம்" என திருமதி. ஈடித் ஸ்ஹேஃபர் "சித்திர அலங்கார தொங்கு திரைகள்" என்ற நூலில் எழுதினார்.

அந்த ஆண்டுகளில், ஈடித்திற்கு குறை பிரசவம் ஏற்பட்டது. சிறு குழந்தையாயிருந்த மகனுக்கு போலியோ வியாதியினால் பாதிப்பு ஏற்பட்டது. மகள் மிகவும் ஆபத்தான வியாதிக்குட்பட்டாள். ஸ்ஹேஃபர் தம்பதிகள் சுவிட்சர்லாந்து நாட்டில் சுவிசேஷ ஊழியராக இருந்தனர். ஆனால் அவர்களை ஆதரித்து அனுப்பிய நிறுவனத்தில் ஒரு பிளவு ஏற்பட்டது. அதனால் திருச்சபைகள் பணம் அனுப்புவதை நிறுத்திக்கொண்டது. நெடுநாள் நண்பர்கள் கூட தங்கள் முகத்தை திருப்பிக்கொண்டனர்.

இந்த சோதனைகளுடன் கூட, அல்லது அவற்றின் விளைவாக பிரான்சிஸ் ஸ்ஹேஃபர் தன் விசுவாசத்தில் பெரும் போராட்டத்தைச் சந்தித்தார். இந்த மிஷன் ஊழியம் தேவைதானா? எந்த ஊழியத்தையும் உதவியின்றி எவ்வாறு செய்ய இயலும்?

இருந்தும் அந்த கடினமான ஆண்டுகளில் ஸ்ஹேஃபர் தம்பதியார் ஜெபத்தைப் பற்றி அதிகம் கற்றுக்கொண்டார்கள். "ஜெபம்" என்பது ஏதோ பொத்தானை அழுத்தியதும் குளிர்பானமோ அல்லது காப்பியோ கிடைப்பது போன்ற இயந்திரமும் அல்ல, பூமியையும் தேவனுடைய சிங்காசனத்தையும் இணைக்கும் இயந்திரமும் அல்ல. ஜெபிப்பதினால் நம்முடைய எல்லா கஷ்டங்களிலிருந்தும் விடுதலையைப் பெற்றுக்கொள்வோம் என்ற வாக்குத்தத்தமும் அல்ல. ஆனால் நம்முடைய மாம்சத்திலுள்ள முள்ளின் வேதனையைச் சகித்துக் கொள்வதற்கான போதிய கிருபையையும், நம்முடைய வேதனையில் ஆறுதலும் நம்முடைய ஜெபங்களுக்கு பதிலும் கிடைக்கின்றன என்ற வாக்குத்தத்தம் நமக்கு நிச்சயமாக இருக்கிறது" என்று ஈடித் தான் எழுதிய புத்தகத்தில் குறிப்பிடுகிறார். பல வழிகளில் தேவைகள் சந்திக்கப்

படுகின்றன. வெவ்வேறு விதமான, வாழ்க்கைச் சூழ்நிலைகளில் வித்தியாசமான நேரங்களில் பதிலைப் பெற்றுக்கொள்ளுகிறோம்."

அவர்கள் ஐக்கிய நாடுகளுக்கு விடுமுறையில் சென்றபொழுது அந்த திருச்சபைகளுக்கும் ஊழியர்களை அனுப்பும் நிறுவனத்துக்கும் இடையே ஏற்பட்டிருந்த இக்கட்டான பிரச்சனைகளை கண்டறிந்தனர். பொருளாதார உதவி எதுவுமின்றி அவர்கள் ஊழியராக இருக்கவேண்டுமா? என்ற கேள்வி அவர்களுக்குள் இருந்தது. இருப்பினும் அவர்கள் ஐரோப்பாவிற்குத் திரும்பச் செல்ல ஒரு கப்பலில் பயண இடங்களுக்கு முன்பதிவு செய்திருந்தார்கள். பிரான்சிஸ் சில இடங்களில் பேசுவதற்காக சென்றிருந்தார். ஈடித்தும் பிள்ளைகளும் அவர்களுடைய சூழ்நிலைக்காக ஜெபம் செய்தனர். தேவன் அவர்கள் திரும்ப ஐரோப்பாவுக்கு செல்வதை விரும்புவாரானால் ஜூலை 29க்கு முன்பாக, தங்களுக்கு தேவையான பணத்தை அவர் அனுப்பவேண்டும் என ஜெபத்தில் கேட்டனர். பிள்ளைகள் உணவருந்தும் அறையில் ஒரு பெரிய வெப்பமானி படம் ஒன்றை வரைந்து சுவரில் ஒட்டினர். வெகுமதிகள் வரும்பொழுது அவர்கள் ஒரு சிவப்புநிற பென்சிலால் அந்த வெப்பமானியில் வெப்பம் உயரும் அளவில் கோடிட்டு வந்தனர். ஒருநாள் அந்த வெப்பமானியில் சிகப்பு நிறம் மிகவும் மேல்வரைக்கும் உயர்ந்தபொழுது "பிள்ளைகள் குதித்த சத்தமிட்டு" மகிழ்ந்ததாக ஈடித் எழுதியிருக்கின்றார்.

கப்பலில் செல்லும்பொழுது இவ்வளவு பிரச்சினைகள் இருந்தும் ஏன் அவர்கள் திரும்ப ஐரோப்பாவுக்கு செல்கின்றார்கள் என விவரித்தனர். "ஜெபத்தின் உண்மை அடிப்படையை ஆதாரமாக கொண்டு வாழவும் ஒவ்வொரு கண நேரமும் தேவன் தமது பலனால் அவர்களை காத்துக் கொள்ளவும் நான் திரும்ப செல்கின்றோம்." தங்கள் சுவிட்சர்லாந்து தேச மலைச்சரிவில் உள்ள குடிசை இல்லத்திற்கு '*எல் அப்ரி*' என பெயர் வைக்கலாம் என பிரான்சிஸ் கூறினார். 'எல் அப்ரி' என்றால் பிரஞ்ச மொழியில் 'புகலிடம்' என பொருள்படும். சீக்கிரமாகவே பிரான்சிஸூ ஈடிந்தும் தங்கள் இல்லம் ஒரு நல்ல பாதுகாப்பான ஆவிக்குரிய புகலிடமாக அமைக்கப்பட்டு அதிலே நிறைய வாலிபர்கள் வந்து காபி, டீ அருந்தி அவர்களுள் எழும் கேள்விகளுக்கு பதில் பெற்று செல்லும்படி செய்யவேண்டுமெனவும் திட்டமிட்டார்கள்.

சுவிட்சர்லாந்துக்கு திரும்பி வந்த பின்பும் அவர்களுடைய பிரச்சினைகள் தொடர்ந்தன. ஆனால் ஸ்ஹேஃபர் தம்பதியினர் ஜெபித்துக் கொண்டே இருந்தார்கள். "பிதாவே நாங்கள் என்ன செய்யவேண்டுமென காட்டும்,

பிதாவே நாங்கள் என்ன செய்யவேண்டுமென காட்டும், பிதாவே நாங்கள் என்ன செய்ய வேண்டுமென காட்டும், பிதாவே நாங்கள் என்ன செய்ய வேண்டுமென காட்டும்'' ஒவ்வொரு கடினமான இயலாத காரியமும் அற்புதமான பதிலாக ஜெபத்தினால் சந்திக்கப்பட்டது. அவர்களுடைய சிறிய மகன் போலியோ வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்த பிரசங்கி நல்ல சுகம் அடைந்தான். இயங்காமல் இருந்த அங்கங்கள் இயங்கின. அவர்கள் 'எல் அப்ரி' க்காக புதிய இடத்தை தேட வேண்டியபொழுது இறுதி நேரத்தில் ஒரு புதிய இடம் கிடைதத்து. அதற்கான பணம் செலுத்தவேண்டிய தேவையை, பல இடங்களிலிருந்து வெகுமதிகள் கிடைத்தன. மொத்தம் 156 பேர்களிடமிருந்து வந்த தொகை போதுமானதாக இருந்தது. முடிவாக 1955ம் ஆண்டு மே மாதம் வார இறுதியான 6–9 தினங்களில், எல் அப்ரி பிறந்தது.

''அந்த முதல் வார இறுதி நாட்களுக்குப்பின், யாராகிலும் பல கேள்விகளுடன் வந்து கொண்டேயிருந்தார்கள் என ஈடித் எழுதியிருக்கிறார். விரைவில் உலகமெங்கிலுமிருந்து வாலிபர்கள் 'எல் அப்ரிக்கு' அவர்களுடன் பேசி பகிர்ந்துகொள்ள வந்தனர்.'' தாங்கள் ஏன் வாழ்கிறோம், என பல தத்துவ நீதியான கேள்விகள் கேட்கும் அதிலே போராட்டம் கண்டும் திகைக்கிற இளம்வாலிப மாணவர்களுக்கு 'ஆவிக்குரிய குருவாக' ஸ்ஹேஃபர் 20ம் நூற்றாண்டில் விளக்குகிறார்'' என தனியார் பத்திரிக்கை ஒன்று குறிப்பிட்டு எழுதியது. தேடுவோர்களுக்கும், சிந்திக்கிற விசுவாசிகளுக்கும் நல்ல பாடங்கள் கற்கும் இடமாக, கூட்டங்கள் நடத்த, ''எல் அப்ரி'' திகழ்ந்தது. பின்பு அதைப்போன்ற அமைப்புகள் மற்ற நான்கு நாடுகளில் உருவாகின.

ஜெபம் அந்த மூடுபணியை விலக்கிவிட்டது. இப்பொழுது ஸ்ஹேஃபர் தம்பதியர் தேவன் அவர்கள் என்ன செய்யவிரும்பனார் என அறிந்துகொண்டார்.

கேத்தரின் மார்ஷலுடைய ஜெபம்

"நான் அடிக்கப்பட்டேன், நான் காயப்பட்டேன். என் வாழ்வின் இறுதி இதுதான். இனி என்னால் எதுவும் செய்ய இயலாது."

ஒரு இளம் விதவை தனக்கும் தனது சிறிய மகனுக்கும் ஆதரவை பெற ஒரு வழியைத் தேட வேண்டியிருந்தது. அவள் எழுத முயற்சி செய்தாள், அது

நல்ல தெரிந்தெடுப்பு, அவள் இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெயர் பெற்ற கிறிஸ்தவ எழுத்தாளர்களில் ஒருவராக உயர்ந்தாள்.

ஐக்கிய நாடுகளின் செனெட் அமைப்பிலும் நியூயார்க் நகரின் பிரஸ்பிட்டரியன் சபையிலும் போதகராக இருந்த பீட்டர் மார்ஷல் நல்மதிப்பு பெற்றவர். திடீரென 1949ல் இறந்துவிட்டார். அவரது மனைவிக்கு வயது முப்பத்தைந்துதான். மிகுந்த சோகத்துடன் உடைந்த வாழ்க்கையை துவங்கிய கேத்தரின் தனது கணவருடைய பிரசங்க குறிப்புகளை கவனமாக எடுத்து சேர்த்தாள். அந்த பிரசங்க குறிப்புகளை புத்தகமாக வெளியிட்டபொழுது ஒரு கோடிக்கும் மேலாக விற்பனையாயிற்று. இன்னும் எழுத துவங்கி அவருடைய வாழ்க்கை சரிதையான '*பேதுரு என்னும் பெயருள்ள மனிதர்*' என்ற புத்தகத்தையும் எழுதினாள். அது பின்பு ஹாலிவுட்டில் திரைப்படமாக உருவாகியது.

அவள் எழுதிய 'கிறிஸ்டி' என்ற புத்தகமும் மிக நன்றாக விற்றது. அது தொலைக்காட்சியில் நாடகமாக காட்டப்பட்டது. கேத்தரின் மார்ஷல் எழுதின மற்ற புத்தகங்கள், "*துணிவான ஜெபம்,*" "*ஒவ்வொரு திருப்பத்திலும் தேவனை சந்தித்தல்,*" "*நமக்கு அப்பால் உள்ள உயர்ந்த மேலானவை*" ஆகிய புத்தகங்கள் கிறிஸ்தவ வாழ்க்கைப்பற்றிய உயர்வான சிந்தனையையும் உண்மையையும் வெளிப்படுத்துவதாக அமைந்தன.

'*வழிகாட்டி*' என்ற பத்திரிக்கையில் 1972ம் ஆண்டு "விசுவாசத்தினால் சுகம் பெறுவது என்பது எனக்கு புதிராகவே இருக்கின்றது". ஆனால் ஒரு இளம் மனைவியாக, தாயாக இருந்தபொழுது மிக அற்புதமானவிதமாக சுகமாக்கப்பட்டேன். பீட்டர் மார்ஷல் முதல்முறை மாரடைப்பினால் தாக்கப்பட்டபொழுது மரணத்தில் விளிம்பிலிருந்து திரும்பி கொண்டு வரப்பட்டார். ஆனால் மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு மறுமைக்குள் பிரவேசித்தார். நாங்கள் எல்லாரும் ஊக்கமாக ஜெபம் செய்திருந்த போதும் எங்கள் மகன் பீட்டர் ஜான், மருமகள் ஈடித்தினுடைய குழந்தை ஆறு வாரங்கள் மட்டுமே இவ்வுலகில் இருந்தான்? ஏன்?"

அவளது தனிப்பட்ட குணமாகுதல் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அவளது கணவர் வாஷிங்கடனில் மிக அதிகமாக உழைப்பில் ஈடுபட்ட பொழுது கேத்தரின் ஷயரோக வியாதியினால் பீடிக்கப்பட்டாள். தேவனிடத்தில் தன்னை சுகப்படுத்தும்படியாக வேண்டினார். அவளது கணவருக்கு உதவி தேவை, குழந்தையாயிருக்கும் மகனுக்கு தாய் தேவை,

அந்த திருச்சபைக்கும் அவள் தேவை, அவை அனைத்துமே நல்லவைதான். ஏன் ஆண்டவரால் அவள் பார்க்கும் விதமாக அதனை பார்க்க முடிய வில்லை?

மாதங்கள் கடந்தன. அவள் சுகமடையவில்லை. ஒரு நாள் அவளது கணவர், சீனாவில் பணிபுரியும் ஒரு ஊழியரின் அனுபவம் பற்றிய ஒரு கைப் பிரதியை அவளிடம் கொடுத்தார். அந்த தேவ ஊழியத்தின் பிரச்சினையும் இதைப்போன்றே இருந்தது. அவரது ஜெபமும் அவளது ஜெபம்போல இருந்தது.

அந்த கைப்பிரதியை படித்தபின், அவளது விசுவாசம் எவ்வளவு ஆழ மில்லாமல் வெறுமையாக இருந்தது என்பதை அறிந்தாள். தான் மிகவும் சுய நலத்துடன் மற்றவரைப்பற்றி அக்கறை இன்றி இருப்பதையும் உணர்ந்தாள். கிறிஸ்து இயேசுவிலிருந்த அன்பும் மன உருக்கமும் தன்னிடம் இல்லை என அறிந்தாள்.

பின் இறுதியாக இவ்விதம் ஜெபம் செய்தாள். "தேவனே, என்னால் இயன்ற தையெல்லாம் செய்து விட்டேன். ஆனால் அவை அவ்வளவு நன்மையானதாக இல்லை. உமது சித்தத்திற்கு எதிராக போராடுவதை விரும்பவில்லை. நான் வேண்டுவதை தரும்படியாக முயற்சி செய்யப்போவதில்லை. நான் அடிக்கப் பட்டேன். நான் காயப்பட்டேன். என் வாழ்வின் இறுதி இதுதான். இனி என் னால் எதுவும் செய்ய இயலாது. என் வாழ்க்கையின் முடிவுவரை வியாதிப்பட்டு பலமிழந்தவளாக இந்த படுக்கையில் மரணம் வரை காத்திருக்க வேண்டும் என நீர் விரும்பினால் நான் ஆயத்தமாக இருக்கிறேன். உமது விருப்பத்தின் படி எனக்குச் செய்வீராக."

இந்த வேளையில் தேவன் இடைபட்டார். மிக விரைவாக சுகம் கிடைத்தது. தன் முழுபலத்துடனும் ஜீவனுடனும் முழு விசுவாசத்துடனும் கேத்தரின் மறு படியும் வாழ ஆரம்பித்தாள். அவள் அடைந்த அந்த அனுபவத்தினால், மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்து கடந்து சென்றதால், எண்ணற்ற அநேக மக்களுக்கு ஆறுதலைத் தருபவராக ஆக முடிந்தது.

"அவருடைய ஆவியானவர், சில நேரங்களில் நம்மை திகைக்கச் செய் கின்றார். பிரம்மிக்கத்தக்கதாக வழிநடத்துகின்றார். எதிர்காலத்தில் மகிழ் வையும் ஆச்சரியமான முழு நிறைவையும் தருகின்றார்" என பின்பு கேத்தரின் எழுதினாள்.

சி. எஸ். லூயிஸ் அவர்களுடைய ஜெபம்

அவர் வேட்டைக்காரர், நான் மானாக இருந்தேன்.

சி. எஸ். லூயிஸ் ஒரு நாத்தீகராக இருந்தார். அதற்காக பெருமை படுபவராக இருந்தார். மிகவும் ஞானமுள்ளவராக கல்வியில் சிறந்து ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் முதல்நிலை பட்டாதாரியாக தேர்ச்சிப் பெற்றார். ஆக்ஸ்போர்டின் மக்டலன் கல்லூரியில் ஆசிரியரானார். இவர் இருபது வயதை கடந்து வந்த ஆண்டுகளில் தேவன் இவரை நெருங்கி தொட ஆரம்பித்தார்.

"தேவனை தேடும் அனுபவம் எனக்கு இருந்ததேயில்லை" என பின்பு லூயிஸ் எழுதினார். ஆனால் முற்றிலும் மாறான வழியில் தேவன் என்னைத் தேடினார் என்று தான் நினைக்கிறேன். அவர் வேட்டைக்காரராக வந்தார் நான் அவர் தேடும் மான்போல இருந்தேன். அவர் அமைதியாக என்னை பின்தொடர்ந்து வந்தார்... முற்றிலும் தவறாமல் குறிவைத்த எய்து, என்னை இலக்கு வைத்து வீழ்த்தினார்."

பொதுவாக இளம் லூயிஸ் யாரும் தன் வழியில் குறுக்கிடுவதை விரும்ப வில்லை. "என் ஆத்துமா என்னுடையது என்பதில் வைராக்கியமாயிருந்தார்" என்றார். ஆனால் அவருடைய நெருங்கிய நண்பர்கள் "தேவன் ஒருவர் இருக்கிறார்" என நம்புவதாக கூறியபொழுது அவருடைய நாத்தீக கொள்கை உடைந்து விழ ஆரம்பித்தது. "1926ம் வருட துவக்கத்தில் மிக கடின இதயமுள்ள நாத்தீகர்களான எனது நண்பர்கள் என்னுடன் குளிர் போக்கும் அனல் அடுப்பண்டையில் உட்கார்ந்திருக்கும்பொழுது கூறினார்கள்." "சுவிசேஷத்தின் உண்மை நிகழ்ச்சிகள் வரலாற்றுப் பிரகாரமாக நிரூபிக்க கூடியவைகள்" என்பதை நினைவு கூருகின்றார்.

லூயிஸ் அதிர்ச்சி அடைந்தார். எதிலும் குற்றங்களையே கூறி நம்பிக்கை களில் முதன்மையாய் விளங்கிய இந்த நண்பரே விசுவாசத்துக்கு கீழ்ப்படிபவ ராக ஆகிவிட்டார் என்றால் க்லைவ் ஸ்டேப்புள் லூயிஸுக்கு என்ன நடக்கக் கூடும்? "ஒரு இளம் நாத்தீகன் தனது நம்பிக்கையை காத்துக்கொள்ள முடியாது. எல்லாம் பக்கங்களிலுமிருந்து ஆபத்துகள் வரும்."

இரண்டு கிறிஸ்தவ எழுத்தாளர்கள். G. K. செஸ்ட்டர்டன் மற்றும் ஜார்ஜ் மக்டனாஸ்ட் ஆகியோர் லூயிசின் மனங்கவர்ந்தவர்கள். (G. K. செஸ்ட்டர்டன் மிக அறிவுள்ள மனிதர் என லூயிஸ் கருதினார். ஆனால் அவருடைய

கிறிஸ்தவ விசுவாசத்தை ஏற்கவில்லை). அவர்களுடைய கருத்துகள் அடங்கிய புத்தகங்கள் இளம் லூயிஸை வெகுவாய் கவர்ந்தன. தெய்வீக வேட்டைக்காரர் தொடர்ந்து அவரது இருதயத்தை குறி வைப்பதையே இலக்காக கொண்டிருந்தார்.

பின்பு அவர் ஆக்ஸ்வர்ட் கல்லூரியில் தத்துவ சாஸ்திரத்தை போதிக்கும் பொழுது லூயிஸ் தனக்கு திருப்தி தரக்கூடியவிதமாக தத்துவ விடைகள் காணமுடியாமல் போராட்டத்தில் இருந்தார். முடிவாக அவர் கடவுளுக்கென்று ஒரு திறந்த இடத்தை தர முடிந்தது. தத்துவ ரீதியாக தேவன் அல்லது அவருக்கு குறைவான ஒன்று இருக்கலாம். ஆனால் "அவருடன் நாம் தனிப்பட்ட உறவு கொள்ள வழியே கிடையாது" என கருதினார்.

அவர் அதைப்பற்றிய ஒரு முடிவு எடுக்க வேண்டிய கட்டாய நிலையிலிருந்தார். தத்துவ ரீதியாக கடவுள் ஒருவர் உண்டு. என சிந்திப்பது எளிது. ஆனால் தேவன் அவரை அந்த நிலையில் விட்டுவிடவில்லை. "முற்றிலும் ஒப்புக்கொடுத்தல்," "இருளில் யாதும் அறியாமல் தாவி குதிப்பது போன்ற" திடமான முடிவு எதிர்பார்க்கப்பட்டது "அது அரைகுறையானதாக அல்ல" முற்றிலுமாக இருந்தது.

பின்பு 1929ம் ஆண்டு, தனது முப்பத்தொன்றாம் வயதில் லூயிஸ் தனது கொள்கையை 'விட்டுவிடுகின்றேன்' எனக் கூறி தேவன் உண்மையில் தேவனாக இருக்கின்றார் என ஏற்றுக்கொண்டார். முழங்கால் படியிட்டு ஜெபம் செய்தார். அந்த ஜெபத்தில் அவர் என்ன கூறினார் என்பது தெரியாது. ஆனால் அது இப்படித்தான் இருந்திருக்க வேண்டும். "தேவனே; நான் எனது கொள்கையை விட்டுவிட்டேன். நீர் உண்மையாகவே இருக்கின்றீர்." லூயிஸ் தன்னைப்பற்றி கூறும்பொழுது, "மிகவும் விசனமடைந்த மிகவும் தயங்கிய நிலையில் மனந்திரும்பிய ஒருவனாக இருந்தேன். இந்த முழு இங்கிலாந்திலும் இப்படி யாரும் இருந்திருக்கமாட்டார்கள். என்னைப்போன்ற ஒருவனது மனந்திரும்புதலை ஏற்றுக்கொண்ட தேவனுடைய தெய்வீக தாழ்மை இப்பொழுது எனக்கு தெளிவாக பிரகாசமாக விளங்குகின்றது. ஆகையால் அன்று நான் அறியவில்லை" என எழுதியிருக்கின்றார்.

தேவன் அவ்வித ஜெபத்திற்கு எவ்வாறு பதில் அளிக்க இயலும்? அதில் எந்தவித வேண்டுதலும் இல்லை. சற்று சிறிய துவக்கம் தான் உறவு கொள்வதற்கு! "விருப்பமின்றி மிக தயக்கத்துடன் தேவனிடம் மனமாற்றத்துடன் வந்து தலைகுனிந்து வல்லமையுள்ள அவரை பணிந்தபொழுது, "உம்முடைய சித்தத்தின்படி எனக்கு செய்யும்" என்ற பொழுது அவரை மிக நெருக்கமான

உறவுக்கு இழுத்து அரவணைத்துக் கொண்டதால் தேவன் பதில் அருளினார். லூயிஸ் தான் திரும்பி வந்ததை கெட்ட குமாரனுக்கு ஒப்பிட்டார். "அவன் தான் என்ன சொல்வதென்று சிந்தித்து வைத்திருந்தால்," என்னை உம்முடைய கூலிக்காரனாக வைத்துக்கொள்ளும் " என கூறு முன்பு அவன் தகப்பன் அணைத்துக் கொண்டதால் எதுவுமே சொல்ல இயலவில்லை!".

இந்த ஜெபம்தான் லூயிசுடைய மனமாற்றத்தின் முதல்படியாக அமைந்தது. தேவன் இருக்கின்றார் என்ற பொதுவான நம்பிக்கையை அவர் ஏற்றுக் கொண்டார்; ஆனால் இன்னும் வேதாகமத்தில் உள்ள கிறிஸ்தவத்தைப் பற்றி அறியவில்லை. இதிலும் அவருக்கு போராட்டம் இருந்தது. ஆனால் அதுவும் நடந்தது. விசித்திரமாக, அவர் ஒரு மிருக காட்சி சாலைக்கு சென்றபொழுது லூயிஸ் மறுபடியும் இந்த நிகழ்ச்சியைப்பற்றி தெளிவாக எழுதவில்லை. "நாங்கள் அங்கே புறப்பட்டு போனபொழுது" நான் இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என விசுவாசமில்லாமல் இருந்தேன். நான் அந்த மிருக காட்சி சாலைக்குள் சென்றதும் விசுவாசித்தேன். என எழுதியிருக்கின்றார். இந்த வேளைகளில் அவரது முழு வாழ்க்கையிலும் மாற்றம் ஏற்பட்டது. அடுத்த முப்பது ஆண்டுகள் மிக அரிய பலன்தரும் காரியங்களை செய்பவராக மாறினார். கற்பனை கதைகள், விசுவாசத்தை முற்றிலும் ஆதரித்து விளக்கும் புத்தகங்கள், சீடத்துவம் பற்றி புத்தகங்கள் நிறைய எழுதினார்.

ஆக்ஸ்போர்டு மற்றும் கேம்பிரிட்ஜ் கல்லூரிகளில் லூயிஸ் தொடர்ந்து பணியாற்றினார். உலகமெங்கும் அவரது பேரறிவு புகழ்பெற்றது. இருபதாம் நூற்றாண்டின் மிக அருமையான கிறிஸ்தவ எழுத்தாளர் ஆக விளங்கினார். அவரது விசுவாசத்தின் எளிய ஜெபம் தேவனது வல்லமையான உண்மை பதிலை பெற்றார்.

சார்லஸ் கால்சனின் ஜெபம்

"எப்படியாகிலும் என்னை உமக்குத் தர விரும்புகிறேன்"

அது 1973ம் ஆண்டு, வாட்டர் கேட் அவதூறு வெளிவர ஆரம்பித்தது. ஐக்கியநாடுகளின் தலைவருடைய வக்கீல் மிகுந்த பிரச்சனையில் ஆழ்ந்திருந்தார். நிக்சன் அரசாங்கத்தில் சார்லஸ் கால்சன் ஒரு கடினமான மனிதர், ஆனால் இப்பொழுது அவரது காலடியிலுள்ள தரை நொருங்கி கீழே விழுவதுபோல உணர்ந்தார்.

ரேத்தியன் கார்ப்பரேஷன் தலைவராக டாம் பிலிப்புவுக்கு அவர் தொலை பேசியில் அழைப்புக் கொடுத்துத் தன்னை சந்திக்கும்படியாக கூறினார். ஏன் பிலிப்பை சந்திக்க வேண்டும்? கடந்த முறை சந்தித்தபொழுது பிலிப்ஸ் "நான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு என் வாழ்வை அவருக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறேன்" எனக் கூறினார். அதற்கு என்ன பொருள் என கால்சனுக்கு புரியவில்லை, என்றாலும் டாமுடைய தன்மை அது மிக உண்மை என கால்சனுக்கு உணர்த்திற்று.

அவர்கள் சந்தித்தபோது, பிலிப்ஸ் "கால்சன் நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள விரும்புகிறீர்களா?" எனக் கேட்டார். கால்சன் அதை மறுத்து விட்டார். அவர் இராணுவத்தில் இருந்ததால் ஆபத்தான போர்முனையில் குண்டுகளுக்கு மறைய குழிகளில் செல்லும்பொழுது கடவுளை நோக்கி கூப்பிடும் அனுபவம் மாத்திரம் இருந்தது. ஆனால் எளிதாக தப்பித்துக் கொள்ள கடவுளிடம் திரும்புவதை விரும்பவில்லை. "எனக்கு அறிவு பூர்வமாகச் செய்ய வேண்டிய அநேக காரியங்களுண்டு என்று" கூறினார்.

சி. எஸ். லூயிஸ் எழுதிய "*கிறிஸ்தவம் மாத்திரமே...*" என்ற புத்தகத்தை பிலிப்ஸ் அவரிடம் கொடுத்து, "இந்த புத்தகத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என எனக்கு தெரியப்படுத்துங்கள்" எனக் கூறினார்.

இருளான இடத்தில் கால்சன் அழத் துவங்கினார். தனது காரை ஓட்டத் துவங்கினார். உணர்ச்சி வசப்பட துவங்கியதற்காக தன்னையே நிந்தித்துக் கொண்டார். "இது என்ன பலவீனம்?" என்று தன்னையே நொந்துகொண்டு காரை ஓட்டிச்சென்றார். ஆனால் சற்று தூரம் சென்றதும் காரை நிறுத்தினார். தன்னைக் கட்டுப்படுத்த முடியாத அளவு ஏங்கி அழுதார்.

தனது வாழ்வின் முதல் உண்மையான ஜெபத்தை ஏறெடுத்தார். "தேவனே, உம்மை எப்படி கண்டடைவது என்பதை அறியேன். ஆனால் முயற்சிக்க விரும்புகிறேன். இதுவரை உம்முடைய வழியில் இல்லை. எப்படியாகிலும் என்னை உமக்குத் தர விரும்புகிறேன்" என்று சொன்னபிறகு என்ன செய்வதென அறியாமல் எளிமையாக இரண்டு சொற்களை மறுபடியும் மறு படியும் கூறினார். "என்னை ஏற்றுக்கொள்ளும், என்னை ஏற்றுக்கொள்ளும், என்னை எடுத்துக்கொள்ளும்".

என்ன நடந்ததென்பதை அவர் அறியவில்லை. அவர் எதனை ஒப்புக் கொடுக்கின்றார்? இவை யாவும் எதைப் பற்றியவை? எதுவாக இருந்தாலும்

அவரது வாழ்வில் முதல் முறையாக தான் இனி தனியாக இல்லை என உணர்ந்துகொண்டார்.

மறுநாள், மறுபடியும் என்ன நடந்தது என சிந்தித்தார். அவர் தன்னை யாருக்கோ, அல்லது எதற்கோ ஒப்புக்கொடுத்துள்ளார். ஆனால் அது என்ன என்பது நிச்சயமாக தெரியவில்லை. அவர் சி.எஸ். லூயிஸ் எழுதிய "கிறிஸ்தவம் மாத்திரமே" என்ற அந்த புத்தகத்தை எடுத்து படிக்கத்துவங்கினார். அவர் சுகிலாக இருந்ததால் அருகில் ஒரு தாளில் தன் படிப்பதை குறிப்பெடுக்க ஆரம்பித்தார். அதில் முதலாவதாக எழுதப்பட்ட சொற்றொடர். "கடவுள் என்று ஒருவர் இருக்கின்றாரா?"

அவருடைய மஞ்சள் நிற குறிப்பேட்டின் ஒவ்வொரு பக்கமாக எழுதுகையில் அவருடைய மனதிலும் லூயிஸ் போலவே அதே கேள்வி எதிர்கொண்டது. இயேசு கிறிஸ்து மனநிலை குன்றியவரா அல்லது தெய்வ மைந்தனாக பிறந்தவரா? இந்த இரண்டைத் தவிர வேறு தெரிந்தெடுப்புக்கு ஒன்றும் இல்லை. இயேசு கிறிஸ்து உண்மையில் கடவுள் என்றால் அவர் என் வாழ்க்கையை ஆளும் தேவனாக இருக்க வேண்டும். அதனை தான் விசுவாசிக்கவேண்டும் அல்லது நம்பக்கூடாது. வேறு வழி இல்லை.

அந்த நேரத்திலே, கால்சன் சில நாட்களுக்கு முன்பு "என்னை ஏற்றுக் கொள்ளும். என்னை ஏற்றுக்கொள்ளும்" என வேண்டிய பொழுது தான் என்ன செய்தார் என்பதை உணர்ந்து கொண்டார். அப்பொழுது கால்சன் இந்த வார்த்தைகளைக் கூறி ஜெபித்தார். "கர்த்தராகிய இயேசுவே, நான் உம்மை விசுவாசிக்கின்றேன். உம்மை ஏற்றுக்கொள்கிறேன். தயவு செய்து என் வாழ்வில் வந்தருளும். என்னை உமக்கு ஒப்புக்கொடுக்கின்றேன்."

அவர் டாம் பிலிப்ஸுக்கு எழுதி தனது முடிவை அறிவித்தார். தனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார். கால்சனுக்கு ஜெபம் தேவை.

வாட்டர்கேட் விவகாரத்தில் அவருக்கு இருந்த தொடர்பினால் கால்சன் ஏழு மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் விடுதலை பெற்று வெளியே வந்தபொழுது அவர் உண்மையில் மனமாற்றம் அடைந்தவரா என அநேகர் சந்தேகிப்பதை எதிர்கொள்ளை நேர்ந்தது! ஆனால் சிறைக் கைதிகளின் மேல் மன உருக்கம் கொண்டதனால் "சிறைபட்டோருக்காக ஊழியர் ஐக்கியம்" துவங்கினார். நீதிக்காக, கைதிகளை சீர்திருத்த, சுவிசேஷம் அறிவிக்க பணி புரிந்தார். அப்பொழுதிலிருந்து மிக அதிகமான

விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களை எழுதினார். நற்செய்தியை பறைசாற்றும் திருச்சபைகளின் நம்பிக்கை பெற்ற சிந்தனை திறன் உள்ள செய்தியாளராக திகழ்ந்தார். 1993ம் ஆண்டு "மத முன்னேற்றப் பணிக்கான" டெம்ப்புள்டன் பரிசு அவருக்கு அளிக்கப்பட்டது.

அநேக ஆண்டுகளுக்கு பின்பும் கால்டன், "என்னை ஏற்றுக்கொள்ளும், ஏற்றுக்கொள்ளும், ஏற்றுக் கொள்ளும் என வேண்டியபொழுது உண்மையாக உணர்ந்து சொன்னார் என்பதை மறுக்க இயலாது! அவரது ஜெபம் மிக அற்புதமான விதமாக பதிலளிக்கப்பட்டது."

11

யாருக்கு கோடீஸ்வரராக இருக்க தேவை உள்ளது?

தேவன் தாமே அவர்கள் தேவைகளை தந்து ஆதரிக்கின்றார்

"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படியே உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலி.4:19).

பணம். அதைப்பற்றிதான் கிறிஸ்தவர்களாகிய நீங்கள் எப்பொழுதும் சிந்திக்கிறீர்கள்.

இதுதான் கிறிஸ்தவர் அல்லாதோருக்கு பொதுவான அபிப்பிராயமாக இருக்கின்றது! அது முழுவதாக தவறானது அல்ல. அதைப்பற்றி நாம் எப்பொழுதும் சிந்திப்பதில்லை. தேவனுடைய கிருபையை குறித்தும் உலகத்தின் இரட்சிப்பைக் குறித்தும் நோக்கமாக கொண்டு அதிக நேரம் செலவிடுகின்றோம். ஆனால் சில தொலைக்காட்சி அல்லது வானொலி நிகழ்ச்சிகளை கவனிக்கும்பொழுது, சில திருச்சபைகளுக்கு செல்லும்பொழுது, கிறிஸ்தவ ஊழிய நிறுவனங்களிலிருந்து பண உதவி கேட்டு வரும் அநேக கடிதங்களை படிக்கும்பொழுது நீங்களும் அந்த அபிப்பிராயத்தை ஏற்க கூடும். நாம் அதிகமாக பணத்தைப்பற்றி பேசுகிறவர்களாக இருக்கிறோம்.

ஆனால் அது எல்லாமே தீமையானது அல்ல.

பணம் வாழ்க்கைக்கு தேவையானதாக இருக்கின்றது. எல்லாரும் அதை விரும்புகிறார்கள். சிலர் வீணாக்குகின்றார்கள், சிலர் அதிகமாக சேர்த்து வைக்கிறார்கள், சிலர் அதற்காக சண்டை போடுகின்றார்கள். கிறிஸ்தவர்கள் பணத்தைப் பற்றி பேசுகின்றனர். ஏனென்றால் நாம் அதை பகிர்ந்து

கொள்கிறோம். கொடுக்கின்றோம். பயன்படுத்துகிறோம். தியாகம் செய்கிறோம். உண்மையில் ஒரு சில பேராசையுள்ள கிறிஸ்தவர்கள் உண்டு. சிலர் ஜெபம் என்ற பெயரில் தங்களது பொருளாதார உயர்வை உருவாக்கி கொள்ளுகின்றனர். (மற்றவர்களுக்கும் இதை செய்ய போதனை செய்கின்றனர்) அவர்களுக்கு ஐயோ. ஆனாலும் இந்த அதிகாரத்தில் நீங்கள், அநேக கிறிஸ்தவர்கள் தாழ்மையுடன் தேவனைச் சார்ந்து தங்கள் தினசரி வாழ்வின் தேவைகளை ஊழியத் தேவைகளைப் பெற்றதைக் காண்பீர்கள்.

பணம் வல்லமையுடையது என சிலர் கூறுகின்றனர். தேவன் தம்முடைய வல்லமையை பல வழிகளில் இவ்வுலகில் விளங்கச் செய்கிறார். சில வேளைகளில் நாம் செய்யும் நற்செயல்களுக்கு தேவையான பணத்தை தந்தருளுகின்றார்.

"தேவனே, எனது தேவையை நீர் கவனித்துக் கொள்கின்றீர், உமது அலுவலை நான் செய்துமுடிப்பேன்"

ஜான் ஆஜ் ரைஸ்.

இரண்டு வண்டி நிறைய கால்நடைகள் விற்பனையால் காக்கப்பட்ட இறையியல் கல்லூரி

அந்த பள்ளியின் நிறுவனர் அதன் எதிர்காலத்தைக் குறித்து பெரிய கனவுகளை கண்டார். ஆனால் அதே நேரத்தில் அதற்கு எதிர்காலம் இருப்பதுபோல் தோன்றவில்லை.

1924ம் ஆண்டில் இறையியல் வல்லுநர் லூயிஸ் ஸ்பெரி சாஃபர் ஒரு வேதாகம கல்லூரியை துவங்கி அதற்கு 'சுவிசேஷ வேதாகம கல்லூரி' என பெயரிட்டார். பிற்காலத்தில் அது டல்லாஸ் வேதாகம கல்லூரி எனப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மிக சிறந்ததாக கருதப்பட்டது. ஆனால் அதன் முதல் வகுப்பில் சேர்ந்து படிக்க பதிமூன்று மாணவர்கள் வந்த பின்பு, அது சில நடைமுறை காரணங்களால் பணம் இல்லாமல் திவாலாகியது. அதற்கு கடன் கொடுத்தவர்கள் பணத்தைத் திருப்பிக் கேட்டனர். பள்ளியின் கருவூலம் காலியாக இருந்தது.

கடன் கொடுத்தவர்கள் தங்களுக்கு உடனே திருப்பிதரவில்லையெனில்

ஒரு குறிப்பிட்ட நாள் மதியம் பன்னிரண்டு மணிக்கு பள்ளியை மூடிவிட வேண்டும் என பள்ளி அலுவலர்களுக்கு அறிக்கை அனுப்பினர். அந்த நாளில் தலைவரின் அறையில் பள்ளி இயக்குநர்கள் யாவரும் ஜெபம் செய்யக் கூடி வந்தனர்.

அந்த மனிதர்கள் யாவருமே அந்த வேதாகம பள்ளியை துவங்குவது தேவனுடைய சித்தம் என கருதினர். அதனால் அதனைத் தொடர்ந்து நடத்த தேவன் உதவி செய்வார் என நம்பாமல் இருக்க இயலவில்லை. ஆனால் நிமிடங்கள் கடந்தன. அது இயலாத காரியமாக தோன்றியது.

அங்கு ஜெபிக்க வந்தவர்களில் ஹாரி அயன்சைட் என்பவர் இருந்தார். அவர் யாவருமறிந்த வேத போதகர், பின்பு சிகாகோவின் மூடி மெமோரியல் ஆலயத்தில் பல ஆண்டுகள் போதகராக பணிபுரிந்தார். அவர் பிரசங்கம் செய்வது ஜெபிப்பதும் மிகவும் எளிமையாக இருக்கும். அவர் மிக உண்மையாக எளிமையாக இவ்வாறு ஜெபம் செய்தார். "தேவனே, இங்குள்ள மலைகளிலுள்ள ஆயிரமாயிரம் ஆடுமாடுகளெல்லாம் உம்முடையவை தயவாக அவற்றில் சிலவற்றை விற்று அந்த பணத்தை எங்களுக்கு அனுப்பித்தாரும்."

அந்த ஜெபத்தின் சீரிய தன்மை அங்குள்ளவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆயினும் அவர்கள் 'ஆமென்' என்றனர். அவர்களுக்கு அப்பொழுது, அதே நேரத்தில், ஒரு உயரமான மனிதன் டெக்சாஸ் நகரை சேர்ந்தவர், நல்ல காலணியும் திறந்த காலர் சட்டையும் அணிந்தவராக அந்த வேதாகம பள்ளியின் அலுவலகத்துக்குள் வந்து கொண்டிருப்பதைக் கவனிக்கவில்லை.

"எப்படி இருக்கின்றீர்கள்" என அந்த மனிதர் அலுவலக செயலரிடம் கேட்டார். பின்பு "நான் இப்பொழுதான் போர்ட்வர்த் நகரில் இரண்டு வண்டி நிறைய கால்நடைகளை கொண்டுவந்து விற்றேன். மற்றுமொரு வியாபாரம் செய்ய முயன்றபொழுது அது சரியாக நடைபெறவில்லை. தேவன் இந்த பணத்தை இந்த வேதாகம பள்ளிக்கு நான் தந்து விடும்படியாக விரும்புகிறார் என அறிவேன், இந்த காசோலையைப் பெற்றுக்கொள்ளுங்கள்" எனக் கூறினார்.

அந்த செயலர் காசோலையை இரண்டுமுறை பார்த்து விட்டு 'மிக்க நன்றி' என சொல்லி அதனை தலைவருடைய அறைக்கு எடுத்துச்சென்றாள். அவளுக்கு அந்த ஜெபக்கூட்டத்தில் இடையே சென்று பேச தயக்கமாக

இருந்தது. மிகப் பெரிய போதகர்கள் வேத வல்லுநர்கள் அங்கே இருந்தனர். இருந்தாலும் அந்த மணி நேரத்தின் முக்கியமான தன்மையை உணர்ந்ததால் மெதுவாக கதவை தட்டினாள்.

தலைவர் லூயிஸ் ஸ்பெரி சாஃபர் வந்து நின்றார். ஜெபத்தின் இடையில் வந்ததற்கு வருத்தம் தெரிவித்து அவள், ஒரு மனிதர் இப்பொழுது தான் வந்து இந்த காசோலையை தந்ததாகவும் அதனை உடனே அவரிடம் அளிக்க விரும்பியதாகவும் கூறினாள்.

சாஃபர் அதன் மேலிருந்த பெயரை கண்டதும் அது அந்த பகுதியிலுள்ள யாவருமறிந்த கால்நடை வளர்த்து ஆடுமாடுகள் விற்பவர் என் அறிந்து கொண்டார். அவர் அதிலிருந்த பணத்தொகையை கண்டதும் திகைத்து பிரம்மித்தார். அது அந்த கடன் கொடுத்தவர்கள் கேட்ட சரியான தொகை யாக இருந்தது.

அவர் அயன்சைட்டை பார்த்துக் கூறினார். "ஹாரி, நீங்கள் கேட்ட கால்நடைகளை தேவன் விற்றுவிட்டார்."

பில்லி பிரேவுக்கு மர அலமாரியை கொண்டு வர உதவியவர்

தனது மரணம் படுக்கையில் இருந்த பில்லி பிரே, மருத்துவரை நோக்கி "உண்மையை கூறுங்கள். எனது உடல்நிலை எப்படியுள்ளது எனக்கேட்டார்"

மருத்துவர் "நீங்கள் மரிக்கப் போகிறீர்கள்" என்றார்.

பிரேவினுடைய பதில் ஒரு ஆரவாரமான துதியாக இருந்தது. "மகிமை, தேவனுக்கு மகிமை, நான் சீக்கிரமாகவே மோட்சத்தில் இருப்பேன்" என துதித்தார்.

அந்தவிதமான மனிதர்தான் பில்லிபிரே. இங்கிலாந்தில் உள்ள கார்ன் வால் என்னுமிடத்தில் நிலக்கரி சுரங்கத்தில் வேலை செய்தார். ஆனால் அவர் சுரங்க தொழிலாளி போல இருக்கமாட்டார். சுரங்க வேலை இல்லாத நேரங்களில் எங்காகிலும் சென்று சிறிய ஆலயங்களை கட்டுவார். வேறு எங்காகிலும் போய் உபதேசம் செய்வார். என்ன செய்தாலும் அவர் அதிகமான

துதி செலுத்துபவராக இருந்தார். அவர் அவ்வளவு துதி செலுத்தும்படியாக என்ன இருந்தது என மக்கள் கருதலாம். அவருடைய குடும்பம் மிகவும் ஏழ்மையானது. அவரைவிட குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு உதவி செய்வார்.

சிறிய ஆலயங்களை கட்ட பில்லி பிரேவுக்கு பணம் தேவையாக இருந்தது. தன்னால் இயன்றதை தேவனுக்கென்று செய்து ஆலயம் கட்ட தேவையான பணமும் பொருட்களும் எப்படியாவது தேவன் தருவார் என நிச்சயமாக நம்பினார்.

ஒரு முறை கெர்லி டௌன்ஸ் என்கிற இடத்தில் ஒரு சிறு ஆலயத்தைக் கட்டினார். ஆனால் பிரசங்க பீடம் வாங்க பணமில்லை. அப்பொழுது பில்லிபிரே பழைய மரச்சாமான்கள் ஏலம் விடப் போவதைப்பற்றிய அறிவிப்பை பார்த்தார். அதில் மூன்று முனைகள் உள்ள ஒரு சாமான்வைக்கும் அலமாரி இருப்பதைக் கணடார். அப்பொழுதே அந்த மூன்று புறம் முனை உள்ள மர அலமாரியை மாற்றி அமைத்து ஒரு பிரசங்க பீடமாகச் செய்யலாம் என சிந்தனை செய்தார்.

பில்லிக்கு கட்டடம் கட்டுவதைப் பற்றி அநேக காரியங் கள் தெரியும். ஆனால் ஏலம் எடுக்கும் முறை பற்றி ஒன்றும் தெரியாது. அதற்காக ஜெபித்தபின் தன் சட்டை பையில் கொஞ்சமும் பணம் இல்லை யென்றாலும் அவர் அந்த ஏலம் விடப்படும் இடத்துக்குச் சென்றார். அங்கே போனபின்பு அவர் அங்கிருந்த ஒரு மனிதரிடம் அந்த மர அலமாரி என்ன விலைக்கு விற்கப்படும் எனக் கேட்டார். “ஆறு ஷில்லிங் ஆக இருக்கலாம் எனக்கூறிய அந்த மனிதர்,” “நீங்கள் அந்த சிற்றாலயங்கள் கட்டுபவர் அல்லவா?” எனக்கேட்டார். பதில் அளித்த பில்லி தனக்கு எதற்காக அந்த அலமாரி வேண்டும் என கூறியபொழுது அந்த மனிதர் ஆறு ஷில்லிங்கை அவரிடம் கொடுத்து அதனை அந்த சிறிய ஆலயத்திற்கு நன்கொடையாக தருவதாக கூறினார். பின்பு அங்கே அந்த ஏலம் கூறுதல் துவங்கியது. பில்லி உடனே ஆறு ஷில்லிங்’ எனக் கூறினார். தனக்கு உடனே அந்த அலமாரியை தந்து விடுவார்கள் என நினைத்தார். அவருக்கு பின்னால் நின்ற ஒரு மனிதர் ‘ஏழு ஷில்லிங்’ எனக்கூறியதும் அவருக்கு அது கிடைத்துவிட்டது. பில்லிக்கு பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது.

பில்லி பிரேவுக்கு வியப்பாக இருந்தது. தேவன் அந்த் சிறிய ஆலயத்துக்

காக அந்த மர அலமாரியை தனக்கு கிடைக்கும்படி செய்வார் என நிச்சயமாக பில்லி நினைத்தார். "ஆனால் பிதா மிகச் சிறந்ததை அறிவார்" எனக்கூறி, "எப்படியும் நான் இந்த ஆறு வில்லிங்கை அந்த மனிதரிடம் திருப்பி தந்துவிட வேண்டும்" எனக்கருதி அவரை தேடினார். அந்த மனிதர் அங்கு இல்லை. பில்லி அந்த பிரசங்க பீடம் இல்லாத சிறிய ஆலயத்திற்குத் திரும்பி வந்தார். அந்த சூழ்நிலைக்காக ஜெபம் செய்ய முயன்றபொழுது 'தேவன் தனது மனதில் என்ன சிந்தித்திருப்பார்?' என்ற எண்ணம் ஏற்பட்டது.

பில்லி ஜெபம் செய்துவிட்டு அந்த சிறிய ஆலயத்திலிருந்து வெளியே வந்தபொழுது அவரது விசுவாசம் புதுப்பிக்கப்பட்டிருந்தது. தேவன் வேறொரு திட்டம் வைத்திருக்க வேண்டும் என உணர்ந்தார். அந்த பாதையின் இரு பக்கங்களிலும் அவர் பார்த்து தேவன் மறுபடியும் என்ன செய்வார் என சிந்தித்துப் பார்த்தார். அப்பொழுது அங்கேயுள்ள மலை வழியே ஒரு வண்டி வருவதைக் கண்டார்... அந்த வண்டியில் அந்த மர அலமாரி இருந்தது. ஆவலுடன் அதை பின் தொடர்ந்து சென்றார். "அந்த மர அலமாரியை ஒரு வீட்டுக்கு எடுத்துச் சென்று அதை உள்ளே கொண்டுபோக முயற்சித்தனர். ஆனால் அது மிகப் பெரிதாக இருந்ததால் அந்த கதவுக்குள் நுழைக்க இயல வில்லை. அவர்கள் அதை திருப்பி, வேறு திசையில் இழுத்து, தள்ளி அழுத்தி நுழைக்க முயன்றனர். ஆனால் பயனில்லை" என கூறக் கேட்டார்.

அந்த மர அலமாரியை வாங்கியவர் வெறுப்படைந்தார். "எவ்வளவு குழப்பமாகிவிட்டது. இதற்காக ஏழு ஷில்லிங் கொடுத்து வாங்கினேன், இப்பொழுது அதை வெட்டி விற்காகத்தான் பயன்படும் என எடுத்துச் செல்கிறேன்" என்றார்.

பில்லி ஓரடி முன் சென்று தனது கரத்தை அந்த மனிதனின் தோளில் வைத்து, "எனது சிறிய ஆலயத்திற்கு அதைக் கொண்டுவந்து தந்தால் ஆறு ஷில்லிங் அளிப்பதாக" கூறினார். அந்த மனிதர் மிக மகிழ்ச்சியுடன் பில்லியின் விருப்பத்தை ஏற்றுக்கொண்டார்.

"தேவனுக்கு துதி உண்டாவதாக" என பில்லி ஆனந்தமாய் துதித்தார். "இது அவருடைய செயல்தான், என்னால் தனியாக இந்த மர அலமாரியை தூக்கி சுமந்து வர இயலாது என அறிந்த தேவன் இந்த மனிதன் எனக்காக அதனை எடுத்து வர உதவினர்!"

தீர்மானம் எடுக்கும் வேளைக்காக தீர்மானம் எடுத்த நேரம்

தொண்ணூற்றிரண்டு ஆயிரம் டாலர்கள் என்பது மிக அதிகமான தொகையாக இருந்தது. அது மிக அதிகமான பணம்தான். குறிப்பாக சிறிய நகர் புறங்களில் ஊழியராக இருந்து தேசிய புகழை நாடு பலருக்கு அது மிக பெரிய தொகைதான். ஒலிபரப்பக்கூடிய பில்லி கிரஹாமிற்கு ABC வானொலியில் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் பதிமூன்று வாரங்கள் ஒலிபரப்ப ஆகும் செலவு தொண்ணூற்றிரண்டு ஆயிரம் டாலர்கள். எப்படி அவர் அவ்வளவு பெரிய தொகையை சேகரிக்க முடியும்?

1950ம் ஆண்டு மத செய்திகள் ஒலிபரப்புகளுக்கு மைய ஆண்டாக இருந்தது. துவக்கத்தில் வானொலி செய்தி தருவதில் முன்னோடிகளாக இருந்த ஊழியர்கள் தங்கள் ஊழியத்தின் இறுதி கட்டத்துக்கு வந்து விட்டனர். இருபது மில்லியன் மக்களுக்கு மேல் கவனித்து கேட்டு வந்த, வால்ட்டர் A மேயர் என்பவரது செய்தி 'லுத்தரன் மணி நேரம்' என்ற நிகழ்ச்சியாக வந்து கொண்டிருந்தது. அந்த ஆண்டில் தனது ஐம்பத்தேழாவது வயதில் அவர் மறுமைக்குள் பிரவேசித்தார். அதைப் போலவே மிக பலமான 'பழைய நடைமுறை மறுமலர்ச்சி நேரம்' என்ற வானொலி நிகழ்ச்சியின் செய்தியாளர் சார்லஸ் F. ஃபுல்லர் ஒய்வுபெறும் வயதை நெருங்கிவிட்டார். அப்பொழுது தேசிய மதப் பிரச்சார ஒலிபரப்பு அமைப்பில் புதிதாக தலைமை பதவி ஏற்ற தியோடர் எல்ஸனர் கவலையாயுள்ளார்.

இந்த வானொலி நிகழ்ச்சிகளில் செய்தி தரும் முன்னோடிகள் கடந்து சென்றபின் யார் அந்த இடத்தை எடுத்து நடத்துவார்கள்? தொலைக்காட்சி அப்பொழுது சில ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் ஆரம்பமானது. அந்த புதிய ஊடகம் மூலமாக இன்னும் எந்த போதகரும் பேசவில்லை. வானொலி இன்னும் பலமுள்ளதாக முன்நிலை வகித்தது. தேவனுடைய மகிமைக்கென்று அதை பயன்படுத்த எந்த போதகர் முன் வருவார்?

சுவிசேஷகர் பில்லிகிரஹாம்தான் அந்த இடத்தில் போதகராக வரமுடியும் என எல்ஸனர் நம்பினார். சிகாகோ நகரில் வானொலி அமைப்பில் செய்தி கொடுத்த அனுபவம் பில்லிகிராஹாமுக்கு இருந்தது. லாஸ் ஏஞ்சல்ஸ் கூட்டங்களில் வெற்றிகரமாக எழுப்புதல் ஏற்பட்ட பின் அவர் தேசமெங்கிலும்

அறிமுகமாகிவிட்டார். அவர் இயல்பாகவே நல்ல பொருத்தமானவர். எல்ஸ்னர் அவரை அணுகியபொழுது கிரஹாம் மறுத்துவிட்டார். அவருக்கு எல்லா நகரங்களிலும் நற்செய்தி கூட்டங்கள் ஏற்கனவே அதிக அளவில் ஏற்பாடு செய்யப்பட்டு விட்டன. வானொலி நிகழ்ச்சியில் ஈடுபட்டால் ஒவ்வொரு வாரமும்பலமணி நேரங்கள் அதற்காக ஒதுக்க வேண்டிவரும்.

ஒரு மாதம் கழித்து எல்ஸ்னர் வானொலி போதக நிகழ்ச்சிகளுக்கு நேரம் நியமித்துக் கொடுப்பதில் தேறிய இரண்டு பேர்களை பில்லிகிராஹாமிடம் அனுப்பினார். ஒருவர் பெயர் வால்ட்டர் பென்னட் மற்றவர் ஃப்ரட் டினர்ட், அவர்கள் வானொலி விளம்பர துறையில் பணிபுரிபவர்கள். ஞாயிறு மதிய நேரங்களில் 'ஒரு சிறிய நேர நிகழ்ச்சியில் அவர் தெரிந்தெடுக்கும் நேரங் களில் செய்தி கொடுக்கக்கூடிய வாய்ப்புகள் விரைவில் ஏற்பாடு செய்யலாம் என அந்த வானொலி அலைவரிசை பற்றி கூறினர். சுவிசேஷத்திற்கு என்ன அருமையான வாய்ப்பு! கிரஹாம் இந்த நிகழ்ச்சிகளில் பங்குபெற சாத்தியமாக இருக்கும் என சிந்தித்தார். ஆனால் அதற்கான செலவு தொகை 92000 டாலர்கள்.'

அந்த மாதம் முழுவதும் அந்த விளம்பர பணியாளர் தொடர்ந்து அழைத்தனர். ஒவ்வொரு வார நிகழ்ச்சிக்கும் ஏழாயிரம் டாலர்கள் மட்டும் தேவை என விவரித்தனர். அதனை சேகரிக்க அவ்வளவு கடினம் இல்லை. பில்லி கிரஹாம் முதலில் இருபத்தைந்து ஆயிரம் டாலர்கள் சேகரித்து தந்து விட்டால், அந்த வானொலி நிலையம் அவருடைய செய்திகளை ஒலிபரப்ப ஆரம்பித்து விடும். பின்பு அந்த வானொலி செய்தியை கேட்பவர்கள் ஒவ்வொரு வாரமும் நன்கொடைகள் அனுப்பத் துவங்கி விடுவார்கள். அதனால் தொடர்ந்து வருகின்ற வார நிகழ்ச்சிகளின் செலவு சந்திக்கப்படும் என்று அவர்கள் கூறினர்.

மறுபடியும் கிரஹாம் ஏற்க மறுத்தார். ஏற்கனவே அவருக்கு அதிக சுமை இருந்தது. ஆதரவு தரும் சிலர் வானொலி நிகழ்ச்சிக்கென இரண்டாயிரம் டாலர்கள் தந்து சேகரிக்க துவங்கிய பொழுது பில்லிகிரஹாம் உறுதியாக 'முடிவான தீர்மானம் தன்னுடையது அல்ல தேவனுடையது' எனக் கூறினார். அதே ஆவியில் அவர் பென்னட் மற்றும் டினட்டுடன் முழங்கால்படியிட்டு ஜெபம் செய்தார். தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்தும்படியாக வேண்டினார். அந்த நாளின் நள்ளிரவுக்குள் இருபத்து ஐந்தாயிரம் டாலர்கள் திரட்ட முடியுமானால் தேவன் அந்த வழியில் நடத்துகின்றார் என திடமாக விசுவாசிக்கலாம் என முடிவு செய்தார்.

தேவன்தாமே ஒரு அற்புதத்தை செய்யவில்லையென்றால் அந்த விஷயம் மற்றுபெறும் என நிச்சயமாக இருந்தார். அப்பொழுது வரை கிரஹாமுக்கு கிடைத்த வெகுமதிகளில் மிகப் பெரிய தொகை ஐநூறு டாலர்கள். அந்த இரண்டு விளம்பர பணியாளரும் கிரஹாமின் நிபந்தனை குறித்து மனவருத்த மடைந்தனர். அவ்வளவு குறைந்த நேரத்தில் மிகப்பெரிய தொகையை பெறுவது முடியாத காரியம் என அவர்களுக்கு தெரிந்தது.

அது 1950ம் ஆண்டு ஜுலை மாதம். கிரஹாம் போர்ட்லாந்தில் உள்ள ஓரிகான் என்ற இடத்தில் கூட்டங்கள் நடுவே இருந்தார். இதுவரை காணாத மிகப்பெரிய வெற்றியுடன் நடந்த தொடர் கூட்டங்கள் அவை. அதற்கென்று சிறப்பாக உருவாக்கப்பட்ட பெரிய கூடாரத்தில் பதினெட்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஒவ்வொரு இரவும் கூடி வந்தனர். அன்று மாலை தனது செய்தியை துவங்குமுன் பெருங்கூட்டமாக இருந்த அந்த மக்களிடம் தேசிய அளவில் வானொலி வேதாகம செய்தி ஒலிபரப்ப உள்ள வாய்ப்பை பற்றியும், தொடர்ந்து அவர் அதனை ஏற்க இயலாமைக்கு காரணம் மிக அதிகமான செலவு என்றும் தேவன் தாமே இந்த ஊழியத்திற்கு சித்தம் கொண்டால் அதில் செயல்படலாம் எனவும் அறிவித்தார். "ஆனால் நீங்கள் யாரும் இதில் பங்கெடுக்க விரும்பினால், இந்த இரவில் ஆராதனை முடிந்ததும் பின்புறம் உள்ள அலுவலகத்தில் என்னை வந்து சந்திக்கலாம்" என்றார்.

ஆராதனை நேரம் முடிந்தபின், கிரேடி வில்சன், பின்புறம் உள்ள அலுவலகத்தில் ஒரு பழைய அட்டை பெட்டியை ஏந்தி நின்றார். அதில் பணமும் வாக்குறுதிகளும் சேகரித்தார். இதாஹோவை சேர்ந்த மரம் வெட்டுபவர் 2500 டாலர்கள் தருவதாக வாக்குறுதி செய்தார். மக்கள் பல தொகைகளுள்ள நோட்டுகள் தந்தனர். சிறு காகிதங்களில் தாங்கள் தர விரும்பும் தொகையை எழுதி போட்டனர். ஏரிகானைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர், தனது முழு சேமிப்பான 1000 டாலர்களை அளித்தார். இதைவிட 'நல்ல முதலீடு எதுவுமில்லை' எனக்கூறினார். எல்லாவற்றையும் எண்ணியபொழுது 23,500 டாலர்கள் இருந்தன. எல்லாரும் 'இது ஒரு அற்புதம்!' என்றனர். ஆனால் பில்லிகிரஹாம் உறுதியாக நின்றார். பிசாசு கூட அப்படி செய்ய முடியும். "நான் வானொலி ஊழியத்தை செய்வதை தேவன் விரும்பினால் அதனை குறிப்பிட்டு சுட்டிக் காட்டும்படியாக 25000 டாலர்கள் கேட்டிருந்தேன்" என பில்லிகிரஹாம் கூறினார்.

பின்பு அவர்கள் தங்கிய உணவகத்துக்கு வந்தபொழுது வில்சன் அங்கு கிரஹாமுக்கு வந்திருந்த கடிதங்களை எடுத்துச் சென்றார். ஒரு காசோலையில் 1000 டாலர்கள் எழுதப்பட்டு ஒரு உறை இருந்தது. மற்ற உறைகளில் ஒவ்வொன்றிலும் 250 டாலர்கள் காசோலை இருந்தன. மொத்தம்: 25000 டாலர்கள் ஆயின! "இப்பொழுது" "இது அற்புதம் என ஏற்றுக்கொள்கிறேன்" என கிரஹாம் ஒப்புக்கொண்டார்.

அந்த இரும்பு அடுப்பு

அந்த ஆண்டு ஹட்சன் டெய்லருக்கு நன்மையாக இல்லை. அவருக்கு இருபத்தாறு வயது ஆகியிருந்தது. நான்கு ஆண்டுகளாக சீன நாட்டில் ஊழியராக இருக்கின்றார். ஆனால் மற்ற ஊழியர்கள் அவரை புறக்கணித்தனர். ஏனெனில் அவர் சீன நாட்டின் மக்கள் போலவே உடை அணிய ஆரம்பித்தார். தனது தலைமுடியையும் அவர்களைப் போலவே ஒத்திருக்கத்தக்கதாக அமைத்துக்கொண்டார். அந்நாட்களில் இதைப்போல எங்கும் கேள்விப்பட்டதில்லை. ஆனால் ஹட்சன் டெய்லர் சுவிசேஷத்தை நன்கு அறிவிக்க இவை முக்கியமான வழிகளாக உதவும் என நினைத்தார்.

ஹட்சன் டெய்லர் மரியா என்ற இருபது வயது பெண்ணை விரும்பினார். அவர்களுடைய உறவும் சரியாக அடையவில்லை. மரியாவின் பெற்றோர் மரித்துவிட்டனர். அவளை கவனித்து வந்த திருமணமாகாத ஒரு அம்மையார் அவர்கள் சந்திப்பதையோ திருமணம் செய்து கொள்வதையோ விரும்பவில்லை.

இன்னொரு ஊழியர் வைசூரி நோயினால் பாதிக்கப்பட்டார். டெய்லர் அவருக்கு உடன் இருந்து கவனித்தார். அவருக்கும் அந்த நோய் வந்து வியாதிப்பட்டோர். நவம்பர் மாதம் அவர் நலம் பெற்று சற்று தேறினார். ஆனால் அவருக்கும் அவரது உடன் ஊழியர் ஜான் ஜோன்ஸ் என்பவருக்கும் பணம் இல்லாததால் கவலைக்குள்ளாயினர். அவர்கள் வைத்திருந்த பணத்தை ஏழை மக்களுக்கு உணவு பொருட்கள் வாங்கித் தர செலவளித்து விட்டனர். இப்பொழுது அவர்கள் பட்டினியாக இருக்கும் நிலை வந்து விட்டது. அவர்களுடைய வீட்டிலிருந்து வரும் உதவித் தொகைகள்தான் அவர்களது வருமானம். ஆனால் தபால்கள் மிக மெதுவாக வந்தன அவற்றை

நம்ப இயலவில்லை. அடுத்த மாதம் வரை மற்றொரு தபாலுக்காக காத்திருக்க வேண்டும். அவர்களுக்கு இப்பொழுது உணவு வேண்டும்.

அந்த இரண்டு ஊழியக்காரரும் தங்கள் வீட்டிலுள்ள பொருட்கள் எதை யாகிலும் விற்கலாமா என பார்த்தனர். அந்த கடிகாரம் அங்கிருந்த சீன வியாபாரியிடம் அதை எடுத்துச் சென்றனர். அவர் அதை வாங்குவதாக கூறினார். ஆனால் ஒருவாரம் வரை தன்னிடம் வைத்திருந்து அது சரியாக நேரத்தை காட்டுகிறதா என பார்த்தபின் வாங்குவேன் என்றார்.

அந்த இரண்டு ஊழியக்காரர்களும் பின்பு தங்களது அடுப்பை பார்த்தனர். அது ஒன்றுதான் எஞ்சியுள்ள மதிப்புள்ள பொருள். அதை அவர்கள் நதிக்கு அப்புறம் எடுத்துச் சென்றால் இரும்பு உருக்கும் வியாபாரியிடம் விற்க முடியும்.

அதனால் 1858ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம் தேதி அன்று டெய்லரும் ஜோன்சும் தங்கள் வீட்டின் அலமாரிகளில் எந்த உணவுப் பொருளுமே இல்லாததால் தங்கள் அடுப்பை விற்றுவிட முடிவு செய்தனர். அவர்கள் வீட்டிலிருந்து புறப்படுமுன் கர்த்தருடைய ஜெபத்தை ஏறெடுத்தனர். "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்" என்ற வாக்கியம் சற்று அதிக அழுத்தமாக கூறப்பட்டது. "நமது பரமபிதா நம்மை மறக்கமாட்டார்" என அங்கிருந்த தங்கள் சீன உதவியாளரிடம் கூறினர். ஆனால் டெய்லர் "நம்முடைய விசுவாசம் இம்மட்டும் சிறு சோதனைக்கும் உட்படவில்லை" என்றார்.

ஜெபத்திற்குப்பின் அந்த இரும்பு அடுப்பை எடுத்துக்கொண்டு சென்றனர். அங்கே ஆற்றின் அருகே சென்றபொழுது அதன்மேல் மரங்களால் கட்டி அமைக்கப்பட்டிருந்த மிதக்கும் பாலம் கடந்த இரவில் ஏற்பட்ட கடும் புயலினால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டதை அறிந்தனர். அங்கே கடப்பதற்கு ஒரு சிறிய படகு இருந்தது. ஆனால் அதில் பயணம் செய்வதற்கு தர வேண்டிய பணம் இவர்களிடம் இல்லை. டெய்லரும் ஜோன்சும் ஒருவரை யொருவர் பார்த்தனர். பின்பு அந்த அடுப்பை திரும்ப வீட்டுக்கு எடுத்து வந்தனர்.

வீட்டில் அவர்கள் உள்ளறையில் படிக்கும் இடத்தில் சென்று "தங்கள் பிரச்சனைக்காக கண்ணீருடன் ஜெபித்தனர். அவர்களுடைய சீன உதவி யாளர் ஓடி வந்தார், அப்பொழுதும் தங்கள் முழங்கால்களில் இருந்தனர். "போதகரே, போதகரே! இதோ கடிதங்கள்" என அவர் கூறினார். அதிக

நாட்களுக்குப் பிறகு வருவதாக எதிர்ப்பார்த்த கடிதங்கள் முன்பதாகவே வந்துவிட்டன. அந்த கடிதங்களில் டெய்லருக்கும் ஜோன்ஸூக்கும் வேண்டிய பண வெகுமதிகள் இருந்தன!"

அன்று டெய்லர் தான் மணம்புரியவிருந்த பெண்ணிடம் சென்று தனது பொருளாதார குறைகளைப் பற்றி கூறினார். தனக்கு எப்பொழுதும் அவளுக்கு தேவையானவற்றை வாங்க பிரச்சனை இருக்கும் என்று மரியாவும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்குத்தான் தனது குறைவுகளைச் சொன்னார். "நம்முடைய வாழ்க்கை எவ்வளவு கடினமாக இருக்கக்கூடும் என்பதை நீ காண்கிறாயா?" என நேரிடையாகவே கூறினார். "நீ ஒருவேளை மறுத்துப் பின் வாங்கிவிட்டாலும் நான் என்னுடைய வார்த்தையில் பின் வாங்க மாட்டேன்" என்றார்.

"உங்களுக்கு நினைவிருக்கிறதா?" மரியா பதில் அளித்தாள். "பல ஆண்டுகளுக்கு முன் அநாதையாக விடப்பட்டேன். ஆனாலும் தேவன் எனது தந்தையாக இருந்து இந்த ஆண்டுகளிலெல்லாம் என்னை நடத்தி வந்தார். இப்பொழுது நான் அவரை நம்புவதற்கு பயப்படுவேன் என நீங்கள் நினைக்கின்றீர்களா?" என்றாள்.

இரண்டு வாரங்களுக்குப்பின் ஹட்சனும் மரியாவும் திருமணத்தில் இணைந்தனர்.

அற்புதங்கள் நிகழாமல் நின்று விட்டனவா?

டேவிட் வில்க்கர்சனுக்கு அங்குள்ள குற்றவாளிக் கும்பலோடு இடைபட்டு அவர்களை ஒழுங்குபடுத்துவது எளிதான காரியமாக இருந்தது. ஆனால் வங்கிகளுடன் தொடர்பு கொள்வதில் சற்று கடினமான சூழ்நிலை ஏற்பட்டது. அவரது ஊழியம் நடந்துவரும் கட்டிடம் புரூக்லினின் இருந்தது. அதனை அடகு வைத்த தொகையை செலுத்தி முடிக்க பதினைந்தாயிரம் டாலர்கள் தேவை. அவரது வங்கி கணக்கில் பதினான்கு டாலர் மட்டுமே இருந்தது.

கடந்த மூன்று ஆண்டுகளாக வில்கர்சன் நியூயார்க் பகுதிகளில் ஊழியம் செய்து வருகின்றார். அநேக அற்புதங்கள் நிகழ்ந்தன. மிக அதிகமான பிரதிகள் விற்பனையான அவருடைய புத்தகம் "*சிலுவையும் கூரிய கத்தி*

ளையும்" என்பதில் அவர் இந்த அற்புதங்களைப் பற்றி விவரமாக எழுதியுள்ளார். அதனை திரைப்படமாகவும் உருவாக்கினர். பென்சில்வேனியாவில் இருந்த ஒரு சிறிய திருச்சபையிலிருந்து அந்த பெரிய நகரத்திலுள்ள கொடூரமான வாலிபர் குழுக்கள் மத்தியில் பணிபுரிய தேவன் நடத்தி வந்தார். அந்த சமூக விரோத குழுக்களைச் சேர்ந்த அநேக இளம் வாலிபர்கள் கிறிஸ்துவுக்குள் வந்தனர். அவரது ஊழியம் பரவிற்று.

ஆனால் இந்த அடகுதொகையை செலுத்துவது இயலாத ஒன்றாக காணப்பட்டது. அதைச் செலுத்தவேண்டிய இறுதி நாள் ஆகஸ்ட் 28, 1961ம் ஆண்டு. தேவன் பெரிய அளவில் அற்புதமாக செயல்பட்டு அந்த கட்டிடத்தை காப்பாற்ற உதவுவார் என வில்கர்சன் எதிர்பார்த்தார். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. அந்த குறிப்பிட்ட இறுதிநாள் வந்தது. அவர்களிடம் செலுத்த பணம் இல்லை. 'புருக்லினில் இருந்த அந்த வாலிபர் மறுவாழ்வு பெறும் நிலையம்' என்ற கட்டிடத்தை மூட வங்கி அதிகாரிகள் ஆயத்தமாக இருந்தனர். "அற்புதங்கள் நிகழ்வது நின்றுவிட்டதா?" என வில்கர்சன் கவலையில் ஆழ்ந்தார்.

ஒருவேளை இன்னும் தான் முயற்சி செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ என எண்ணிய வில்கர்சன், தனது வக்கீலிடம் பணம் செலுத்த இன்னும் சற்று கால அவகாசம் தரும்படியாக கேட்க வங்கிக்கு அனுப்பினார். அன்று மதியம் முழுவதும் அவர் பேசி சில நாட்களை நீடித்து தந்தனர். புதிய கால வரம்பு நாள செப்டம்பர் 10. ஆனால் அதுதான் முடிவான தினம்.

அப்பொழுது அந்த வக்கீல் "பணத்துக்காக என்ன செய்யப் போகின்றீர்கள்" எனக் கேட்டார். "அதற்காக நான் ஜெபம் செய்யப்போகிறேன்" என வில்கர்சன் பதலளித்தார்.

தேவனிடம் இன்னொரு அற்புதம் செய்யும்படியாக வேண்டினார். பின்பு அந்த நிலையத்துக்குள் பணிபுரிபவர்களையும், எல்லா வாலிபர்களையும் வரவழைத்தார். அவர்கள் முன்பு போதை பொருட்களுக்கு அடிமையாகவும் சமூக விரோத குழுக்களிலும் இருந்தவர்கள். அவர்களிடம் 'இந்த நிலையம் காப்பாற்றப்பட்டுவிட்டது' என அறிவித்தார்.

மகிழ்ச்சியான ஆரவார சத்தத்தால் அந்த அறை நிரம்பிற்று. "நாம் சிற்றாலயத்தில் சென்று தேவனைத் துதித்து நன்றி செலுத்துவோம்" எனக்

கேட்டுக்கொண்டார். எல்லாரும் சென்று அந்த பணம் கிடைத்தற்காக துதி செலுத்தினர். யாரோ ஒருவர் முடிவில் "அந்த பணம் எங்கிருந்து கிடைத்தது?" எனக் கேட்டனர்.

வில்கர்சன் தன தலையை அசைத்து, "ஓ... அது இன்னும் வரவில்லை. ஆனால் செப்டம்பர் 10ம் தேதிக்குள் வந்துவிடும். ஆயினும் அது வருவதற்கு முன்பே தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என நினைத்தேன்.

செப்டம்பர் மாதத்தின் துவக்க நாட்களில் பெரிய தொகை உள்ள காசோலைகள் எதுவும் வரவில்லை. மணிக்கணக்காக வில்கர்சன் தொலைப் பேசியில் என்ன செய்யலாம் என பலரிடம் பேசினார். ஆனால் உடனடியாக எதுவும் வருவதாக இல்லை. அவரால் எதையும் புரிந்து கொள்ள முடிய வில்லை. இளவேனில் காலத்தில் வாலிபர் மத்தியில் செய்த ஊழியம் அதிசயமான விளைவுகளை தந்தது. இரு நூற்றைம்பது வாலிபர்களின் வாழ்க்கை தேவ வசனத்தால் தொடப்பட்டது. அவர்களில் பன்னிரண்டு பேர்கள் இப்பொழுது ஊழியத்திற்ககு ஆயத்தமாக பயின்று வருகின்றனர்."

அவருடைய நிர்வாக குழுவினரும் அந்த நிலையத்திற்காக தங்கள் நண்பர்களிடம் பேசினர். ஆயினும் குறைவான தொகையே கிடைத்தது. நிர்வாகிகளில் ஒருவர் சிகாகோவில் இருந்த நன்கொடையாளர் ஒருவரை அணுகினார். கடந்த நாட்களில் அவர் மிக அதிகமாக அவர் அனுப்பி உதவியவர். ஆனால் அவருடன் தொடர்புகொள்ள இயலாததால் அவருடைய மகனுக்கு செய்தி அனுப்பி அவர் தந்தைக்கு அறிவிக்கும்படியாக கேட்டுக் கொண்டார்.

எட்டாம், ஒன்பதாம் நாட்களிலும் தபாலில் குறிப்படத்தக்க விதமாக ஒன்றும் வரவில்லை. சில சில்லறைகளே கிடைத்தன.

செப்டம்பர் 10ம் நாள் காலைத் தபால் வந்தது. சில உறைகளில் சிறுவர் களால் அனுப்பட்ட சிறு நாணயங்கள் இருந்தன. அவற்றிற்காக வில்கர்சன் தேவனிடம் நன்றியை ஏறெடுத்தார். ஆனால் அவருக்கு பதினைந்தாயிரம் டாலர்கள் தேவை.

அவர்களுடைய காலை ஆராதனை துவங்கியது, ஜெபத்துடனும் பாடல்களுடனும், யாருவம் இன்னும் வராத தொகைக்காக கவலைபட்டனர். சில வாலிபர்கள் அது இன்னும் வரவில்லையென்றாலும் விசுவாசத்தால் நிறைந்தவர்களாக பதினைந்தாயிரம் டாலர்களுக்காக நன்றி செலுத்திக்

கொண்டிருந்தனர். அப்பொழுது அந்த ஆராதனை வேளையின் இடையில் வில்கர்சன் கதவருகே வரும்படி அழைக்கப்பட்டார். ஒரு குறிப்பிட்ட தனி நபரால் மூலமாக ஒரு கடிதம் வந்தது. அதில் சிகோகோ என முத்திரை இருந்தது. அதை அவர் திறந்தபொழுது சரியாக பதினைந்தாயிரம் டாலர்களுக்கு ஒரு காசோலை இருக்கக் கண்டார்.

அவர் திரும்பியபொழுது வில்கர்சனால் பேச வயவரவில்லை. அமைதியாக தன் கரத்தினை உயர்த்தினார். அனைவரும் உடனே அமைதியாக இருந்தனர். பொருளாளரிடம் அந்த காசோலையை அவர் தந்தவர், பொருளாளர் தன் பக்கத்திலிருந்த வாலிபனிடம் அந்த காசோலையை தந்து அனைவருக்கும் காட்டும்படி கூறினார்.

அந்த காசோலை எல்லாருடைய கரங்களிலும் கடந்து சென்று வில்கர்சனிடம் வந்தது. அவர்களில் பலர் பழைய சமூக விரோத குழுவை சேர்ந்தவர்கள், போதை மருந்துக்கு அடிமைகள், மற்றும் வாலிபர் மறுவாழ்வு பணியாளர்கள் ஆவர்.

"உண்மையில் இருபத்துநான்கு வாலிபர்களின் கைகளில் சென்று முடிவதில் அந்த காசோலை சற்று மங்கி காணப்பட்டது. அவர்கள் விசுவாசிப்பது என்றால் என்னவென்று கற்றுக்கொண்டனர். அதன்மேல் சில கண்ணீர் துளிகளும் விழுந்ததை காணமுடிந்தது" என்று வில்கர்சன் "*சிலுவையும் கூறிய கத்திமுனையும்*" என்ற புத்தகத்தின் இறுதி பக்கங்களில் எழுதியிருக்கின்றார்.

சிறந்த அஸ்திபாரத்தின் மேல் கட்டுதல்

தேவன் நம்முடைய ஜெபங்களுக்கு நாம் விரும்பும் நேரத்தில் பதில் அளிக்கவில்லையென்றால், பலமுறை நாம் ஒரு புதிய வியக்கத்தகும் விதத்தில் தேவனை அனுபவத்தில் அறிந்துகொள்ள ஏதுவாகின்றது. இந்த திறனுள்ள சொற்றொடர் ஹென்றி பிலேக்கபி என்பவர் எழுதிய "*தேவனை அனுபவத்தில் அறிதல்*" என்ற புகழ்பெற்ற புத்தகத்தில் காணப்படுகிறது.

கனடாவில் சாஸ்கட்வன் பகுதியில் உள்ள சாஸ்கட்கேவான் என்னுமிடத்திலுள்ள முதல் பாப்திஸ்து திருச்சபையின் போதகராக இருந்த பிலேக்கபி

ஒரு பிசரச்சனையை எதிர்கொண்டார். அவருடைய சபை மக்கள் எண்ணிக்கை வளர்ந்து வந்தது. இடம் பற்றாக்குறை ஏற்பட்டது. இது ஒரு போதகருக்குள்ள நல்ல பிரச்சனைதான். சற்று பெரிய கட்டடிடம் கட்டப்படவில்லையெனில் மக்கள் வேறு வசதியுள்ள திருச்சபைகளுக்கு போக வேண்டிவரும்.

அவர்களிடமிருந்த கட்டிடநிதி தொகை 749 டாலர்கள் மட்டும் தான். புதிய கட்டிடத்திற்கான தொகையை திட்டமிட்டபொழுது அதற்கு 220,000 டாலர்கள் தேவையாக இருந்தது. ஆனால் பிலேக்கபி நமது உள்ளத்தில் தேவன் ஒன்றை வைத்தால் அதை நிச்சயமாக செய்யவேண்டும் என எண்ணினார். "விசுவாசமில்லாமல் தேவனக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்" என எபி.11ம் அதிகாரத்திலிருந்து எடுத்துக்கூறினார். அதனால் மக்களிடம் ஜெபிக்கவும் தேவன் யாவும் தருவார் என நோக்கிப் பார்க்கவும் கேட்டுக்கொண்டார். நம்மை நடத்திவருகின்ற தேவன் அதனை எப்படி செயல் படுத்துவது எனக்காட்டுவார் என பிலேக்கபி திடமாக நம்பினார்.

அவர்கள் சொந்தமாக தாங்களே வேலை செய்து கட்டத் துவங்கினால் என்ன? அது கட்டுமான செலவை சற்று குறைக்க உதவும் அல்லவா? கட்டுமான பணியை துவங்கியபின் தேவன் அதற்கு வேண்டிய பொருட் களுக்கான பணத்தை தருவார். எனவே கட்டிடம் கட்ட துவங்கினர். சபை மக்களே எல்லா வேலைகளையும் செய்தனர். தேவன் அவர்களுக்கு தேவை யான தொகையை தந்தருளினார். அவர்கள் கட்டி முடிக்கும் நேரத்தில் இன்னும் அறுபதாயிரம் டாலர்கள் தேவைப்பட்டன.

ஒரு டெக்சாஸ் நிறுவனம் அவர்களுக்கு பணம் அனுப்புவதாக வாக் களித்தது. ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி உடனே வரவில்லை. தாமதமாகிக்கொண்டே இருந்தது. தேவன் ஏன் இந்த தாமதத்தை அனுமதிக் கிறார் என பிலேக்கபிக்கு விளங்கவில்லை. மக்களையெல்லாம் நம்பிக்கை வைக்கும்படியாக கூறிய அவர் திகைத்தார். *ஏன்? தேவனே ஏன்?*

பின்பு ஒரு நாள் கனடா நாட்டின் அந்நிய செலாவணி நிலை வரலாறு காணாத அளவு குறைந்த நிலைக்கு வந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் டெக்சாஸ் நிறுவனம் அன்றைய தினம் அந்த பணத்தொகையை சாஸ் கட்டூனுக்கு அனுப்பியது. அதைக்குறித்து பிலேக்கபி. "அதனால் என்ன ஆனது என உங்களுக்கு தெரியுமா? நாங்கள் எதிர்பார்த்த, நாங்கள் பெற வேண்டிய தொகையை விட அறுபதாயிரம் டாலர்கள் அதிகமாக கிடைத்தது"

என்று எழுதுகின்றார். அதற்கு மறுநாளே கனடாவின் டாலர்களுக்கு மறுபடியும் உயர்வு வந்தது.

"அந்த அனுபவத்தின் மூலமாக புதிய விதமாக தேவனைப் பற்றி அறிந்து கொண்டோம்." தேவன் ஒரு தனிப்பட்ட திருச்சபையின் தேவைகளை பொறுப்படுத்துக்கொள்கிறார் என மக்கள் அதிசயப்பட்டனர். கனடா நாட்டின் பொருளாதார உயர்வுகளையும் தாழ்வுகளையும் மேற்பார்வையில் அவர் அறிபவராக இருக்கின்றார். நீங்கள் தனிப்பட்ட விதமாக அவரை அனுபவத்தில் அறிவதை தேவன் அதிகமாக விரும்புகின்றார். அவர் மக்கான ஒரு வேலையை எந்த நேரத்திலும் செய்ய வல்லவர். அவர் என்ன விரும்புகிறார்? நீங்களும் இந்த உலகமும் அவரை இன்னும் அறிந்து அனுபவிப்பதை விரும்புகின்றார்!

இயேசுவிடம் அடிக்கடி கேளுங்கள்

அலாஸ்காவில் உள்ள அனியாக் ஒரு சிறிய கிராமம். அதிகமாக அந்தக் கிராமத்தைக் குறித்தும் யாருக்கும் தெரியாது. ஆனால் ஒரு கடுங்குளிர் காலத்தில் தேவன் இந்த இடத்தை நன்கு அறிந்திருந்தார் என காட்டினார்.

ஆங்கரேஜ் மற்றும் நோம் என்ற இடங்களுக்கு நடுவில் உள்ள கஸ்கோக்விம் நதியருகில் அனியாக் இருந்தது. எப்பொழுமே அங்கே இருநூறு பேர்களுக்கு உட்பட்ட மக்களே வாழ்ந்தனர். குளிர் காலத்தில் தட்பநிலை ஐம்பது டிகிரிக்கு குறைந்ததாக ஆகும்பொழுது மக்கள் தொகை இன்னும் குறைந்து விடும்.

"கஸ்கோக்விம் இல்லம்" என்ற பெயரில் அனியாக் கிரமாத்தில் கைவிடப்பட்ட அநாதை குழந்தைகளுக்காக அந்த இல்லம் துவங்கப்பட்டது. அது பெயர்பெற்ற ஒரு ஊழிய திட்டம் அல்ல. அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த சில சபைகளும் அலாஸ்காவின் ஒரு நிறுவனமும் அதனை ஆதரித்தனர். அலாங்கா ஒரு மாநிலமாக மாறியது.

வேரா பாட்டர் எனும் பெண்மணி அந்த இல்லப் பொறுப்பாளராக இருந்தார். தேவன்தான் இதனை பொறுப்பேற்று நடத்துகின்றார் என அவள் கூறுவதுண்டு. ஏனென்றால் ஒவ்வொரு மாதமும் விசுவாசத்தினாலேதான் வாழ வேண்டியதிருந்தது.

அலாஸ்கா நிறுவனத்திலிருந்து அநேக மாதங்களாக எந்த உதவியும் வரவில்லை. செலவு தொகை அதிகமாயிற்று. தொடர்ந்து அந்த இல்லத்தை 'அனல் படுத்தி' குளிர்காலத்தை கடக்க முடியுமா என சந்தேகம் வந்தது. உணவுப் பொருட்களை வாங்கியதற்கு பணம் தரவில்லை. கையிலுள்ள உணவுகளும் சீக்கிரமாக முடியும் நிலை வந்தது. தேவன் மாத்திரமே அவளுக்கு உதவி செய்ய இயலும்.

அதனால் இல்லத்திலுள்ள சிறுபிள்ளைகளையெல்லாம் கூடி வரச்செய்து அவர்கள் எல்லாரும் ஜெபம் செய்யவேண்டுமென கூறினாள். அவர்கள் மனதில் பயத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. ஆனாலும் தேவன் அவர்களுக்கு பணம் அனுப்பவில்லையெனில் இல்லம் மூடப்பட வேண்டியதாகும். குழந்தைகள் அனைவரும் முழங்கால்படியிட்டு ஊக்கமாக ஜெபம் செய்தனர். "இயேசுவே எங்களுக்கு உதவிசெய்யும், நீர் இப்பொழுது எங்களுக்கு உதவி அனுப்பவேண்டும்" என்றான்.

அடுத்தநாள் மதிய உணவுக்குப் பின் வேராவும் சில பிள்ளைகளும் பாத்திரங்களை கழுவிக் கொண்டிருந்தனர். அப்பொழுது கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. ஒருவர் உள்ளே வரக்கண்டனர். அனியாக்கில் உள்ள எல்லாரையும் வேராவுக்கு தெரியும். ஆனால் இவர் ஒரு அந்நியர்.

அந்த மனிதர், "இங்குதான் இந்த கிராமத்து குழந்தைகள் பராமரிக்கப் படுகின்றார்களா?" எனக்கேட்டார். வேரா 'ஆம்' என பதிலளித்தவுடன் அவர் மேஜையின் மேல் பணக்கற்றையை வைத்து விட்டு சென்றார். அவர் நடந்து சென்று அங்கிருந்த சிறிய விமானங்கள் இறங்கும் இடத்தில் சென்று அங்கிருந்த ஒரு விமானத்தில் ஏறினதும் அது பறந்து சென்றதை அவர்கள் கண்டனர்.

அந்த விமானம் சென்றபின்பு வேரா அந்த மேஜையருகே வந்து அந்த பணத்தை எண்ணிப் பார்த்தாள். அது அவர்களது தேவைக்கு அதிகமாகவே இருந்தது. தேவன் அற்புதவிதமாக தங்கள் தேவைகளை சந்தித்தார் என அந்த குழந்தைகளிடம் வேரா கூறினாள்.

அப்பொழுது ஒரு சிறிய எஸ்கியோ சிறுவன் "வேரா ஆன்ட்டி, நாம் அடிக்கடி இயேசுவிடம் பணம் கேட்கலாம்! இல்லையா என்றான்"

அந்த அந்நிய மனிதர் யார்? எங்கிருந்து வந்தார் என வேரா கண்டுபிடிக்க இயலவில்லை. தங்கள் ஜெபங்களுக்கு தேவன் பதில் தருகின்றார் என அந்த சிறு குழந்தைகள் கற்றுக்கொண்டதே வேராவுக்கு போதுமானதாக இருந்தது.

சுவை மிக்க தின்பண்டங்கள், 'சிப்ஸ்' வகைகள்

ஒருவகையில் அது குப்பைகள் சேகரிக்கும் நாள். அன்றைய நாள் கிறிஸ்மஸ் தினமாகவும் இருந்தது. மெக்சிகோவின் எல்லை புறத்திலுள்ள ஒரு சிறிய ஊரில் நீங்கள் கற்பனையிலும் காணமுடியாத அளவு மகிமையுள்ள அன்பின் விருந்து அன்று நடந்தது!

புதிய மெக்சிகோ நகரின் மெஸ்குவிட் எனும் ஊரில் ஜெசுவிட் அமைப்பை சேர்ந்த தந்தை ரிச்சர்ட் தாமஸ் என்பவர் 'கர்த்தருடைய பண்ணை' என்பதை அமைத்து ஊழியம் செய்தார். அவருடைய திருச்சபையார் லூக்கா 14ம் அதிகாரத்தை வேத பாடமாக பயின்று வந்தனர். வசனம் 12யையும் படித்தனர். "நீ விருந்து பண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய். அவர்கள் உனக்கு பதில் செய்யமாட்டார்கள். நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்கு பதில் செய்யப்படும் என்றார்" (லூக்.14:13–14).

கர்த்தருடைய பண்ணையில் அநேக மக்கள் ஆதரிக்கப்பட்டார்கள். ஆனால் கிறிஸ்துவானவர் உரைத்த அரிய காரியங்களை செய்ததாக தந்தை தாமஸ் உணரவில்லை. அதனால் அதிகநேரம் ஜெபம் செய்தபின் மிக முற்போக்கான திட்டம் ஒன்றை செய்தார். 1972ம் ஆண்டு கிறிஸ்மஸ் நாளில் அவரும், அவருடன் வரவிரும்பும் சபையினரும், ஜாரேஸ் என்கிற எல்லைக்கு அப்பால் நகரின் குப்பைகளை கொட்டுகிற இடத்தில் அவற்றிலிருந்து உணவு சேகரித்து உண்டு வாழும் மக்களுக்கு ஏதாகிலும் செய்யவேண்டும் என விரும்பினர். அந்த குப்பைமேடுகளின் அருகே ஏறக்குறைய 120 பேர்கள் வசித்து வருவதாக அவர் கேள்விப்பட்டார்.

கிறிஸ்மஸ் தினமும் வந்தது. ஒருவர் 'பொலோங்னா' என்ற கறி உணவு வைத்த ரொட்டிகள் 25 கொண்டுவந்தார். சபையின் பெண்கள் சிப்ஸ் வகைகளும் தின்பண்டங்களும் கொண்டுவந்தனர். தந்தை தாமஸ் சில உணவுகளும், சபையார் சின்ன பைகளில் கிறிஸ்மஸ் இனிப்புகள் எடுத்து வந்தனர். ஜெபம் செய்தபின்பு அவர்கள் கார்களில் சிறிய லாரிகளில் எல்லைப் புறத்திலிருந்த ஜாரேஸ் குப்பை மேடுகளுக்கு சென்றனர்.

அவர்கள் நினைத்த நேரத்துக்கு முன்பே அங்கு வந்துவிட்டனர். அங்கே குப்பை குவியல்களின் வாடை இருந்தது. அங்குள்ள வியாதிப்பட்ட மக்கள்

அப்பொழுதும் அங்கே குப்பைகளிலிருந்து உண்பதற்கு ஏதாகிலும் கிடைக்குமா என பார்த்துக்கொண்டிருந்தனர். குப்பையிலிருந்து மக்கள் உணவு தேடும் காட்சியை அதுவரை தந்தை தாமஸ் பார்த்ததே இல்லை. சபை அங்கத்தினர் ஒருவர் கொரியாவில் யுத்தம் நிகழ்ந்தபொழுது பார்த்த காட்சியிலும் இது கொடுமையாக உள்ளது எனக்கூறினார்.

தந்தை தாமசும் மற்ற மக்களும் மடக்குமேசைகளை அங்கே போட்டு அதன்மேல் உணவு பொருட்களை வைத்தார்கள். முதலில் ஒரு சிலர் அங்கே வந்தனர். சற்று அதிகமாக மக்கள் வர ஆரம்பித்தனர். நூறுபேர்கள் மட்டுமல்ல. நானூறுக்கும் அதிகமான மக்கள் அந்த குப்பை குவியலுக்கு அருகேயிருந்து அந்த அருமையான வாசனை உள்ள திம்பண்டங்களை பெற்றுக்கொள்ள வந்தனர்.

அப்பொழுது அந்த பாதிரியார் அவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சனையை உணர்ந்தார். மிக அதிகமான மக்கள், ஆனால் தேவையான உணவு இல்லை. “நம்மிடம் இருப்பதை நாம் பகிர்ந்து தருவோம். அவ்வளவுதான் நாம் இப்பொழுது செய்ய முடியும்” என அவர் கூறினார். சிலர் இறைச்சி துண்டு ஒன்றை அளித்தபொழுது “எல்லாருக்கும் போதாது” என அவர் கூறினார். ஆனால் அந்த துண்டை அளித்த அங்கத்தினர் “நிறைய இருக்கின்றது” என்றார். தந்தை தாமஸ் சுற்றிலும் பார்த்தபொழுது எல்லாருடைய கைகளிலும் இறைச்சி துண்டுகளும் மிட்டாய் பைகளும் இருக்கக் கண்டார். அங்கிருந்த சிறுவர்களுடைய கரங்களில் இரண்டு அல்லது மூன்று மிட்டாய் பைகள் இருந்தன. மிட்டாய் பைகளை கொடுத்துக் கொண்டிருந்த அம்மா விடம் அவர் கூறினார். “ஜீன் நீ எச்சரிக்கையாக பார்த்து தரவில்லை யென்றால் மிட்டாய் பைகள் முடிந்து விடும்.” ஆனால் அவர்களால் ஏதும் செய்ய இயலவில்லை.

சிலர் சாக்கு பைகளை கொண்டு வந்து அதனை தின்பண்டங்களால் நிரப்பி வீட்டில் கொண்டு வைத்துவிட்டு, மறுபடியும் எடுத்துப்போக வந்தனர். அது எப்படி ஆனது என்றே புரியவில்லை.

மிக அதிசயமான இந்த கிறிஸ்மஸ் விழாவில் நடந்ததை தந்தை தாமஸ் புகைப்படம் எடுத்தார். யாராலும் இயலாத அற்புதம் ஒன்று அங்கே நிகழ்ந்து கொண்டிருந்தது.

“அது முடியும்வரை எங்களுக்கு அற்புதம் என விளங்கவில்லை” என

ஸ்யாளர் ஒருவர் கூறினார், "நாங்கள் என்ன கொண்டு வந்தோம், அளவு பகிர்ந்து கொடுத்தோம் என்பதை பின்பு அறிந்தோம்" பின்புதான் வர்கள் அவ்வளவு நிறைய பேர்களுக்கு உணவு அளித்த பின்பும் மிகுதியான வைகள் மீதமாக இருப்பதை கண்டபொழுது அது அற்புதம் என உணர்ந்தனர். ங்கிருந்த ஏழை மக்கள் தாங்கள் விரும்பியதை எல்லாம் உண்டு முடிந்த டம் இரண்டு "திக்கற்றவர்கள் காப்பகத்துக்கு" எடுத்துச் செல்லும் வுக்கு தின்பண்டங்கள் இருந்தன.

ந்தை தாமஸ் குழுவினருடன் வந்த பிராங்க் ஆலர்சன் என்பவர் அந்த ண்டங்கள் மிக அதிகமாய் பெருகிய அற்புதத்தைக் கண்டு தொடப் ார். தனது எஞ்சிய வாழ்வையும் அவரது ஓய்வு ஊதியம் அனைத்தையும் த குப்பைமேடுகளில் வாழ்ந்த மக்களுக்காக அர்ப்பணித்தார். அந்த ின் எல்லையை கடந்து குப்பை குவிக்கும் இடத்தில் வசிக்க ஆரம்பித் ன்று, அந்த கிறிஸ்மஸ் தினத்தன்று மேசைகள் வைத்து மக்களை ைத்த இடத்தில் ஒரு குழந்தைகள் காப்பகம், ஒரு மருத்துவர் அலுவலகம், ல் மருத்துவர் இல்லம் மற்றும் ஒரு கூட்டுறவு மளிகை கடை ஆகியவை மைந்துள்ளன. அந்த கூட்டுறவு மளிகை வழங்கும் கடை பிராங்க் ர்சனால் நடத்தப்படுகின்றது. பிராங்க் ஆலர்சன் அங்கே ஓர் ஒரு றை உள்ள வீட்டில் மண்தரையில் தனது படுக்கை அமைத்து எளிமையாக ந்து வருகின்றார்.

"அந்த கிறிஸ்மஸ் தினத்துக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்" து என் வாழ்க்கையை மாற்றிவிட்டது" என பிராங்க் கூறுகின்றார்.

நான் எப்படி இதற்குள் வந்தேன்?

ருக்லினில் கூடாரத்தில் நடந்த ஆராதனைக்கு அந்த ஞாயிறு சுமார் ம்பைந்து பேர்கள் வந்தனர். போதகர் ஜிம் சிம்பாலா பிரசங்கம் செய்து ண்டிருந்த நேரத்தில் சபையார் அமர்ந்திருந்த மர இருக்கை உடைந்து ழுந்தது.

சிம்பாலா தான் அந்த சபைக்காக நியமிக்கப்பட்டவர் அல்ல வேறு எந்த பைக்கும் பொறுப்பானவரும் அல்ல. உண்மையில் அவர் கூடைப் பந்து ளையாட்டில் தேறினவராக அதில் அதிக உற்சாகமுள்ளவராக இருந்தார்.

ரோட் ஐலண்ட் குழுவினருடைய தலைவராக சிறப்பாக விளையாடி தேசிய அளவில் நடக்கும் போட்டிகளுக்கு தான் உயர்நிலைப்பளிள்ளியில் இருக்கும் மாணவர்களை நடத்திச் சென்றார்.

சிம்பாலா வேதாகம பள்ளிக்கோ அல்லது கல்லூரிக்கோ சென்று பயில வில்லை; ஆனால் அவருடைய மாமனார் 'புரூக்லின் கூடாரம்' என்ற அந்த சபையில் செய்தி கொடுக்கும்படியாக கேட்டுக்கொண்டார். அந்த சபை அமைந்திருந்த பகுதிக்கு நகரின் மற்ற மக்கள் வர தயங்குவார்கள். "அந்த மக்களுக்கு உதவி வேண்டும்" என அவர் அறிந்தார். அவர் அங்கே வந்து பார்த்தபொழுது உண்மையில் அவர்களுக்கு எவ்வளவு உதவி தேவை என உணர்ந்தார்.

மர பெஞ்ச், இருக்கை உடைந்து விழுந்த சம்பவத்திற்கு பின்பும் அந்த மக்கள் சிம்பாலாவை தங்கள் போதகராக இருக்கும்படி விரும்பி கேட்டனர். தான் அதற்குள் செல்கிறோம் என அறியாமல் அவர் சம்மதித்தார்.

அவர் முதல் மாதம் அங்கே பணிசெய்து கொண்டிருக்கும்பொழுது அந்த சபை மிகப்பெரிய பொருளாதார பிரச்சனையில் இருப்பதை கண்டார். அடமான தொகையாக ஒவ்வொரு மாதமும் 232 டாலர்கள் செலுத்த வேண்டியிருந்தது. அவர்களது கையில் 160 டாலர்கள்தான் இருந்தது.

ஒரு திங்கள் கிழமையில், சிம்பாலா, "தேவனே, நீர் எனக்கு உதவி செய்ய வேண்டும். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நாங்கள் இந்த அடமான தொகையை உடனே செலுத்த வேண்டியுள்ளது" என ஜெபம் செய்தார். எளிமையான விசுவாசத்துடன் செவ்வாய்க்கிழமை 'தேவன் ஒரு காசோலையை அனுப்புவார்' என நம்பி சபையில் சென்று பார்த்தார். ஒன்றும் வரவில்லை. மறுபடியும் சற்றுநேரம் ஜெபம் செய்தார். பின்பு அவருக்கு அந்த சபை இருந்த சாலையின் மறுபுறத்தில் உள்ள தபால் நிலையத்தில் சபைக்கான ஒரு தபால் பெட்டி இருப்பது நினைவுக்கு வந்தது. உடனே அவர் அந்த சாலையை கடந்து சென்று, அந்த பெட்டிக்குள் பார்த்து உள்ள கையை வைத்தார். இல்லை அங்கே ஒன்றுமேயில்லை. மனம் தளர்ந்து மறுபடியும் அந்த சாலையை கடந்து சபைக்குள் வந்தார். அவர் கதவின் தாழ்ப்பாளை திறந்து உள்ள வந்தபொழுது அங்கே தரையில் ஒரு வெண்மைநிற கவர் கிடந்தது. அதில் முகவரி இல்லை. முத்திரையும் இல்லை. உள்ளே இருநூற்றைம்பது டாலர்கள் இருப்பதைக் கண்டார். அது அடமான தொகை

செலுத்த போதுமானது. அந்த பணம் எங்கிருந்து வந்தது என்பதை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவரும் அவருடைய மனைவி காரலும் தொடர்ந்து அந்த சபையில் ஊழியம் செய்தனர். சிறிய அளவு வளர்ச்சியை கண்டனர். ஆனால் சிம்பாலா மனச்சோர்வு அடைந்து வந்தார். எல்லாமே அதேவித பழமையாக இருந்தன. அவர் சில ஞாயிறுகளில் அங்கே வரவிரும்பவில்லை.

ஒரு முறை குளிரில் பாதிக்கப்பட்டு மிகவும் இருமலில் தொடர்ந்து கஷ்டப் பட்டபொழுது, "தேவனே, எப்படி ஒரு வெற்றியுள்ள போதகராக நான் இருக்க முடியும் என தெரியவில்லை" என ஜெபம் செய்தார். அப்பொழுது தேவன் இடைபட்டு சில வார்த்தைகளை கூறியது போன்றிருந்தது. "சிம்பாலாவும் அவரது மனைவியும் ஜெபத்தின்மேல் அந்த சபையை கட்டினால் அவர்களுக்கு ஒன்றும் குறைவுபடாது, பல பிரச்சனைகளுள்ள இந்த சிறிய புருக்லின் கூடாரம் ஜெபத்தின்மேல் கட்டப்பட வேண்டும்" என்பதே. மறு வாரம் முதலாவது நாள் அவர் பிரசங்க பீடத்துக்கு வந்தபொழுது சபை யாரிடம் "இன்று முதல் ஜெபக்கூட்டங்கள் என்ற உயர்ந்த நிலைமை அடையப்போகிறோம்" என அவர் அறிவித்தார்.

விரைவில் எல்லா நாட்டு மக்களும், பலதரப்பட்டவர்களும் அங்கே வரத் தொடங்கினர். அந்த சிறிய சபையில் அவ்வளவு மக்களுக்கு இடமில்லை. அதனால் 1977ம் ஆண்டு YWCAவின் மண்டபத்தில் ஐநூறு பேர்களுக்கு இடமிருந்ததால் அங்கே ஆராதனை நடத்தினார். பின்பு 1979ம் ஆண்டு மண்டபமும் இடம் போதவில்லை. அதனால் ஆயிரத்து நானூறு பேர்கள் அமரக்கூடிய ஒரு அரங்கத்தை வாங்கினார்கள். அது பிலாட்புஷ் அவென்யுவில் இருந்தது. பின்பு கொஞ்சம் கொஞ்சமாக ஆராதனைகளை அதிகமாக்கி, கிளைச் சபைகளில் ஊழியம் செய்தனர்.

காரல் பாடகர் குழுவை அமைத்து நடத்த துவங்கினார். பெரும்பான்மை யான பாடகர்களுக்கும் காரலுக்கும் அந்த சங்கீத சுருவியை படிக்க இயலாது. ஆனால் விரைவிலேயே புருக்லின் கூடார பாடகர் குழுவினர் இனிய பாடல் நிகழ்ச்சிகளை கார்நகி அரங்கம், வானொலி நகர் சங்கீத அரங்கம், மாடின் தோட்டம் போன்ற இடங்களில் நடத்த துவங்கினர். அந்த பாடகர் குழுவின் பாடல்கள் பதிவு செய்யப்பட்டு அதிகமாக விற்பனையாயின.

அந்த சபையாரின் வெற்றிக்கு ரகசியம் என்ன? அந்த பாடகர் குழுவினரின் பாடல்களில் இவ்வாறாக ஒரு சொற்றொடர் அமைந்துள்ளது "தேவனே நீர் எதையும் பயன்படுத்தவல்லவர் எனில் என்னை பயன்படுத்தும்". தேவனே நீர் என்னையும் பயன்படுத்த முடியும்". அதுதான் அந்த திறவுகோல். ஜிம் சிம்பாலா தனது இயலாமையை அறிக்கையிட்டார். தேவன் அவரது ஏங்கலை கேட்டு அந்த சமுதாயத்தினர் மத்தியில் தேவனது ஊழியத்தை செய்ய தேவையான வழிநடத்துதலை தந்து பதில் அருளினார்.

12

தேவதூதர்கள் அவ்விதமாக காணப் படுவார்களென்று அறியாமல் இருந்தேன்

விசித்திரமான இடங்களில் செயல்படும் தேவதூதர்கள்

> உன் வழிகளிலெல்லாம் உன்னைக்காக்கும்படி உனக்காக தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னை தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் (சங்.91:11–12).

வேதாகமத்தில் தேவ தூதர்களைப்பற்றி போதுமான அளவுக்கு கூறப் பட்டுள்ளது. இன்னும் அதிகமாக அவர்களைப்பற்றி நாம் அறிந்துகொள்ள விரும்புகிறோம். அவர்கள் தேவனுடைய இரகசியமான பணியாளர். அவர் கட்டளையிடுவதை நிறைவேற்ற இங்கும் அங்கும் செல்வார்கள். செய்திகளை அறிவிப்பார்கள். பாதுகாத்து நிற்பார்கள். இடறிவிழுபவர்களை தாங்கி பிடித்துக் கொள்வார்கள். நமக்கு ஊழியம் செய்யும்படிக்கு அனுப்பப்படும் 'பணிவிடை ஆவிகள்' என பெயர் பெற்றவர்கள்.

தூதர்கள் பல நேரங்களில், வெளிச்சத்தோடு தொடர்புள்ளவர்கள். செட்டைகள், மற்றும் பிரகாசமான ஆடையுடன் காணப்பட்டதாக இருந்தாலும் அவர்கள் ஆவிகள். பொதுவாக மக்களுக்கு ஆபத்துகளைக் குறித்தும் வருங் காலத்தைக் குறித்தும் முன்னறிவித்து எச்சரிக்கிறவர்களாயும், அஞ்சக் கூடிய சூழ்நிலைகளில் தூதர்கள் தோன்றி "பயப்படாமல் இருங்கள்" என கூறுகிறவர்களாகவும் இருக்கின்றனர்.

கடந்த எல்லா நூற்றாண்டுகளிலும், தூதர்கள் அநேகருடைய கற்பனைகளை கவர்ந்திருக்கின்றனர். பலவிதமான வகையில் தூதர்களை சித்தரித்துள்ளனர்.

சிறு குழந்தைகள்போல அழகுள்ள முகம் கொண்ட கேருபீன்களையும், செட்டைகள் உள்ள தூதர்களையும் சித்திரங்களில் காண்கிறோம். இவை கற்பனைகள்தான். நாம் சில கேள்விகள் எழும்பொழுது பதில் பெறமுடிய வில்லையென்றாலும் வேதாகமத்தின் போதனைகளை மட்டும் சார்ந்திருக்க வேண்டும்.

முக்கியமான ஒன்று என்னவென்றால் நாம் தேவ தூதர்களை பணிந்து கொள்ளக்கூடாது. நம்மைப்போலவே அவர்களும் தேவனை பணிந்து ஆராதிப்பவர்கள். நாம் அறிந்துகொள்ள வேண்டிய இன்னொரு உண்மை என்னவெனில் தூதர்கள் தேவனால் அனுப்பப்படுகிறார்கள் அவர்களை நாம் அழைக்க இயலாது. தேவன் தாம் விரும்பும் நேரத்தில் தூதர்களை அனுப்பு கின்றார். நமக்கு உதவும்படியாக நாம் அவர்களை அழைக்கக்கூடாது. இயேசுவானவரே, தமக்கு தேவையான சூழ்நிலையில் தூதர்களை உதவிக்கு அழைக்க மறுத்துவிட்டார். வேதாகமத்தின் முறை என்னவென்றால் தேவனிடம் நேரடியாக உதவிகேட்டு ஜெபிக்க வேண்டும். சில வேளைகளில் அவர் தூதர்களை அனுப்பி உதவி செய்கின்றார்.

ஆயினும் நமக்கு பக்கமாக இருந்து பாதுகாக்க பரம பாதுகாப்பாளர் களின் சேனை உள்ளது என்பதை நாம் அறிந்துகொள்ளும் போது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

தேவனே, அந்த பரம சேனையின் திரளுக்காக உமக்கு நன்றி.
இராஜாதி ராஜாவிடமிருந்து நேரடியாக
எங்களை தங்கள் கரங்களில் தாங்கி தங்கள்
செட்டைகளின் நிழலில் காக்க அவர்கள் வருகின்றார்களே.

எங்கள் கண்கள் காணாதிருந்தும்
தூதர்கள் செய்யும் மகத்தான செயல்களுக்காக நன்றி.
மகிழ்வுடன் எங்களை இரட்சிக்க
அக்கினி சூழல் நடுவிலும், பாதுகாத்து நடத்த
தூதாக்ள் வருவதற்காக நன்றி.

'சகோதரர்கள்' பாடல்கள்: 1886ல் இருந்து எடுக்கப்பட்டது.

தேவதூதர்களின் பாதுகாப்பில் காவல்துறை அதிகாரிகள்

போதை மருந்துகளை விற்கும் பயங்கரமான கும்பலைபிடிக்க சாதாரண உடை அணிந்து துப்பறிய செல்ல இரண்டு காவல்துறை அதிகாரிகள் திட்டமிட்டனர். அதனால் அவர்கள் முதலில் ஜெபம் செய்தனர். அது தங்களை பாதுகாக்க இன்னும் அதிக காவலர்களை அழைத்தது போலாயிற்று. அதற்கான பதில் இவ்வுலகத்திற்குரியதாக இராமல் விண்ணிலிருந்து வந்தது.

"அங்கே தூதர்கள் சஞ்சரிக்கின்றனர்" என்ற புத்தகத்தில் ஜோன் வெஸ்டர்ன் ஆண்டர்சன் இந்த இரண்டு காவல்துறை அதிகாரிகளைப் பற்றிய வியப்பூட்டும் நிகழ்ச்சியை எழுதியிருக்கிறார். ஸ்டீவ் மற்றும் ஃபில் என்ற அந்த அதிகாரிகள் நியூஜெர்சியின் நட்லி என்ற பகுதியில் பணி புரிந்தார்கள். ஒவ்வொரு நாளும் தங்கள் பணிக்கு செல்லுமுன் அவர்கள் ஜெபம் செய்து. வேதம் வாசித்து செல்வார்கள். அடிக்கடி அவர்கள் 91ம் சங்கீதம் வாசிப்பார்கள். அதில் தேவனுடைய பாதுகாப்பைப் பற்றியும் எப்படி தூதர்கள் காப்பாற்றுவார்கள் என்பதைப்பற்றியும் கூறப்பட்டுள்ளது.

நியூயார்க் நகரின் எல்லையில் நட்லி நகரும் ஹட்சன் நதியும் அமைந்துள்ளன. அங்கே போதை மருந்துகள் விற்பனை பிரச்சனையாக உருவெடுத்து வந்தது. காவல் துறையினரால் அதை தடுக்கவே இயலவில்லை. ஸ்டெவ்வும் ஃபில்லும் வாலிபர்களாக இருந்தபடியால் சாதாரண உடையணிந்து போதை பொருள் வாங்கவரும் வாலிபர்கள் மத்தியில் சென்று துப்பறிய அவர்கள் நியமிக்கப்பட்டனர். சீக்கிரமே அவர்கள் மரங்களால் சூழப்பட்டு தனிப்பட்ட ஒரு இடத்தில் போதை மருந்துகளை வாங்க வாலிபர்கள் செல்வதை கண்டுபிடித்தனர். அவர்கள் கண்ட காட்சி அவர்களை அதிர்ச்சி கொள்ள செய்தது. "நாங்கள் ஏதோ சில வாலிபர்கள் தவறாக சிற்றின்பங்களை அனுபவிப்பதை தடுக்க செல்லவில்லை. சில பயங்கரமான கட்டுப்படுத்த இயலா கொடூரமானதுள்ள குற்றவாளிகள் அங்கே இருப்பதை உணர்ந்தோம்" என ஸ்டீவ் கூறினார். அந்த போதை மருந்துகளை கொண்டு வந்து விற்ற மனிதன் பிக் என பெயருள்ளவன்.

மறுநாள் தேவனுடைய பாதுகாப்பிற்காகவும் வழிநடத்துதலுக்காகவும்

அதிகமாக ஜெபம் செய்து ஸ்டெவ், ஃபில் இருவரும் அந்த மரங்கள் அடர்ந்த பகுதிக்கு வந்தனர். அதிலிருந்த பாதையில் தொடர்ந்து சென்று குகை போன்ற மறைக்கப்பட்ட இடத்தை கண்டனர். அங்கே போதை மாத்திரைகள், ஆபாச திரைபடங்கள். மரிஜூனா, சாராயம் இவற்றை விற்பதில் ஈடுபட்டிருந்த னர். ஆயினும் அவர்கள் பிக்கையும் அவனது உதவியாளர்களையும் பிடிக்க போதிய ஆகாரத்தைத் தேட வேண்டியதிருந்தது. அதற்காக மாலை நேரம் வரை காத்திருக்க முடிவு செய்தனர்.

மிகவும் போதையேறிய நிலையில் உள்ள இளம் வாலிபர்கள் சூழ்ந்துகொள் வார்கள் என உணர்ந்த அவர்கள் தலைமை அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு இன்னும் காவலர்களை அனுப்பும்படியாக கேட்டுக்கொண்டனர். ஆனால் அவர்கள் கேட்டபடி அனுப்பாமல் 'நீங்களே முயற்சி செய்யுங்கள்' என சொல்லி உதவிதர மறுத்துவிட்டனர். அவர்கள் மறுபடியும் ஜெபம் செய்து 91ம் சங்கீதத்திலுள்ள வாக்குத்தத்தங்களை நினைவில் கொண்டனர்.

ஒரு சிறிய கும்பலாக நின்றிருந்த வாலிபர்கள் அவர்கள் வருவதை கவனித்தனர். ஒரு பெண், "காவல்துறையினர்" என சத்தமாக கூறத் துவங்கினாள். அந்த வாலிபர்கள் ஓடத் துவங்கினர். மற்றவர்கள் அந்த குகைக்குள் இருப்பார்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். அந்த இடத்திற்கு சென்றதும் வாசலில் நின்று ஸ்டீவ் "யாரும் அசையாதீர்கள்" என கட்டளையிட்டார். எல்லாரும் அசையாமல் நின்றார்கள். ஏறக்குறைய 12 பேர்கள் அங்கே இருந்தனர். பிக்கும் இருந்தார்.

ஃபில் அவரை நோக்கி கையில் வைத்திருந்த போதைபொருட்களை கொண்ட பையை தரும்படியாக கேட்டபொழுது பிக் உடனே தந்து விட்டார் அங்கிருந்தவர்களை பின்னால் கைகளை வைத்து தரையில் குனிந்து படுக்க உத்தரவிட்டபொழுது அனைவரும் எதிர்ப்பின்றி குனிந்தனர். காவல் துறையினர் இருவரும் அங்கிருந்த தடயங்களை எடுத்துக்கொண்டு அவர்களை கைது செய்வதற்கான ஆயத்தங்களை செய்து காவல் துறையினரின் வண்டி வருவதற்காக காத்திருந்தனர்.

அவர்கள் அப்படி காத்திருந்த பொழுது இவ்வளவு எளிதாக எந்த எதிர்ப்பு இல்லாமல் எப்படி மேற்கொள்ள முடிந்தது என அதிசயித்தனர். அந் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட வாலிபர்கள் இரண்டே இரண்டு காவல்து அதிகாரிகளை எளிதில் எதிர்த்து போராடியிருக்கக் கூடும்! பிக்கிடம் ஸ்டீ

அவரை காவல்துறை வண்டியில் ஏற்றியபொழுது "எப்படி என்னை கைது செய்யவிட்டீர்கள்" எனக் கேட்டார்.

"நான் புத்தி தடுமாறினவன் என நினைக்கிறீர்களா? இருபத்தைந்துக்கும் மேற்பட்ட மனிதர்கள் நீலநிற உடையில் உங்கள் பின்னால் நின்று கொண்டிருந்தார்கள்" என அவன் பதில் அளித்தான். பின் மற்றொரு கைதியிடம் லின்டா, அந்த அறைக்குள் எத்தனை காவல் துறையினர் வந்தனர் எனக் கேட்டான். "இருபத்தைந்துக்கும் மேற்பட்ட காவலர்கள்" என அவள் கூறினாள்.

உடனே ஸ்மைல் சங்கீதம் 91ல் இருந்த வசனங்களை மனதில் நினைத்துக் கொண்டார். "இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கு பயப்படாதிருப்பாய். உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காக தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார்" சங்.91:5,11.

அடுத்து வந்த ஒன்பது மாதங்களில் ஸ்மைல், சீலின் இருவரும் சேர்ந்து 250 பேர்களை கைது செய்தனர். போதை மருந்து விற்பனையில்லாமல் சமூக விரோதிகள் இல்லாமல் நட்லி நகர் தூய்மையாக விளங்க செய்தனர்.

மறைத்து வைக்கப்பட்ட வேதாகமம்

டச்சு நாட்டில் கடிகாரம் தயாரிக்கும் காரிடென்பூம் ஐம்பத்திரண்டு வயதாக இருந்தபொழுது கெஸ்டப்போ என்னும் ஜெர்மானிய இரகசிய படையினரால் கைது செய்யப்பட்டு நாஜிக்களின் வன்கொடுமை முகாமிற்கு அனுப்பப்பட்டார். அவர் கைது செய்யப்படும் நாளின் முந்தின இரவில் அவளது குடும்பத்தினர் ஒன்றாக சேர்ந்து சங்கீதம் 91ஐ வாசித்து ஜெபம் செய்தனர். "உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காக தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார்" என்ற வசனம் அதில் இருக்கின்றது.

இரண்டு வெவ்வேறு சிறைகளில் இருந்த பின் கோரியை கப்பலில் ஏற்றி ஜெர்மனியில் உள்ள ரேவன்ஸ்பர்க் என்ற இடத்துக்கு கொண்டு சென்றனர். அது மிகவும் பயங்கரமானதென்றும் அங்கே சென்ற யாரும் திரும்பி வந்தது இல்லை எனவும் கூறப்பட்ட சிறை. இதுவரைக்கும் தனது வேதாகமத்தை கோரி அம்மையார் மறைத்து வைத்திருந்தார். யாரும் வேதாகமம் வைத்திருக்கக் கூடாது என உத்தரவு இருந்தது. கழுத்தில் சிறிய கயிறுபோல

அணிந்து அதின் முனையில் சிறிய பை ஒன்றை கட்டி அதற்குள் வேதாகமத்தை கொரி மறைத்திருந்தார். அந்த பை அவரது முதுகில் படும்பொழுது மிகுந்த ஆறுதலாக இருந்தது.

ரேவன்ஸ்புர்க்கில் எல்லா உடை பைகளும் பறிமுதல் செய்யப்படும். தேவன் ஒரு அற்புதத்தை செய்யவில்லையென்றால் தனது வேதாகமத்தை கொரி இழக்க நேரிடும். உடைகளையெல்லாம் நீக்கி பொருட்களை தேடும்பொழுது காரியின் பெயர் வந்த நேரத்தில் தான் குளியலறைக்கு செல்ல காரி அனுமதி கேட்டார். அங்கே தனது வேதாகமத்தை ஒரு சிறிய உடையில் சுற்றி மறைத்து வைத்தார். அவர்கள் கொரியை தொட்டு தேடிப்பார்த்தபின் வேறு உடைகள் அணியக் கொடுத்தனர். அப்பொழுது கொரி மறுபடியும் வந்து மறைத்து வைத்த வேதாகமத்தை எடுத்துக்கொண்டார். அது லேசாக வெளியே தெரிந்தது. அதனை சரியாக மறைத்துவைக்க இயலவில்லை. இன்னும் அவர்களை தொட்டு தேடும் நிலை ஏற்பட்டது.

கொரி ஜெபம் செய்தார். *"ஆண்டவரே உம்முடைய தூதர்கள் என்னை சூழ்ந்து நிற்க செய்வீராக"* பின் கொரி தூதர்கள் ஆவியைப்போல இருப்பார்கள். அந்த காவலர்கள் தன்னை ஊடுருவி பார்க்க முடியும் என சிந்தித்தார். அதனால் அவர் மறுபடியும் இவ்வாறு மாற்றி ஜெபம் செய்தார். *"ஆண்டவரே, இன்று அந்த காவலர்கள் என்னை ஊடுருவி பார்க்காதபடி அந்த தூதர்கள் காப்பாற்றும் படி செய்யும்"* இந்த ஜெபத்தை செய்தபின் கொரி மிகவும் சமாதானம் அடைந்தார்.

அந்த காவலர்களை கடந்து செல்கையில் கொரியை அவர்கள் தொட்டு பார்த்து தேடவில்லை. அந்த வரிசையில் சென்ற ஒவ்வொருவரையும் முன்னாலும் பின்னாலும் இடது புறமும் உள்ள சட்டை பைகளை தொட்டு தடவி தேடிப் பார்த்தனர். காரிக்கு முன்னால் நின்றிருந்த ஒரு பெண் தன் சட்டைக்குள் ஒரு கம்பளி ஆடையை மறைத்து வைத்திருந்தாள். அதை பறிமுதல் செய்தனர். கொரிக்கு பின்னால் நின்றிருந்த பெட்சியை முழுவதுமாக தேடிப்பார்த்தனர். ஆனால் கொரியை அவர்கள் பார்க்காததுபோல இருந்தனர். கொரி கடந்து சென்றுவிட்டார்.

அந்த வாசலுக்கு வெளியே கதவருகே இரண்டாவது வரிசை காவலர்கள் நின்றிருந்தனர். அவர்களும் கைதிகளை முழுவதுமாக தொட்டு தேடிப்

[illegible] அந்த நேரத்தில் [illegible] பாதுகாப்பு [illegible] கௌரி உணர்ந்தார். "[illegible] இன்னும் என்னை [illegible] காவலர்கள் என்னை [illegible]" என்று [illegible]. [illegible] கடந்து செல்லும்போது அமைதியாக "[illegible] [illegible] கேட்கின்றீர். நான் [illegible] [illegible] இருப்பேன்" என ஜெபம் செய்தார்.

[illegible] இருக்க முடிந்தது

[illegible] கௌரியின் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] இருந்த [illegible] பகுதியை '[illegible] இடம்' என குறிப்பிட்டார்கள். [illegible] [illegible] கௌரியையும் [illegible].

[illegible] கௌரியின் பெயரை சொல்லி அழைத்தார்கள். அது இன்னும் [illegible] [illegible] என கௌரி வியந்தார். ஆனால் கௌரி [illegible] அறிவித்தனர். [illegible] [illegible] சிறு தவறு என [illegible].

கௌரி [illegible] [illegible] [illegible] [illegible] செய்தியை அறிவித்தார். [illegible] "மறைந்துகொள்ளும் இடம்" என்ற [illegible] [illegible] கௌரி இந்த செய்தியை [illegible] [illegible] [illegible]"

தேவதூதர்களால் காத்துக் கொள்ளப்பட்டவர்கள்

உலகின் பல பகுதிகளிலும் தேவ பணிக்காக சென்ற ஊழியர்கள் தூதர்களால் பாதுகாக்கப்பட்ட சம்பவங்கள் கதைகளாக கூறப்படுகின்றன.

மருத்துவமனை செய்து ஊழியமும் செய்த ஒருவரது குடும்பத்தைப் பற்றி கேள்விப்பட்டதாக கூறுகிறார். ஒரு நாள் அவர்கள் தங்கள் பணி முடிந்து வீடு திரும்பும் பொழுது மிகவும் தாமதமாகிவிட்டது. அதனால் அவர்கள் அந்த மலைப்பாதையின் அருகே இரவில் முகாமிட்டு தங்கினர். அந்த பகுதியில் கொள்ளைக்காரர்கள் அதிகம் இருப்பதை அவர்கள் அறிந்திருந்தனர். ஆனாலும் மிகுந்த களைப்படைந்ததால் ஓய்வு தேவையாக இருந்தது. அதனால் தேவனை நோக்கி தங்களை பாதுகாக்கும்படி ஜெபம் செய்துவிட்டு தூங்கிவிட்டனர்.

சிறிது நாட்கள் கழித்து அந்த ஊழியர்கள் நடத்தும் மருத்துவமனைக்கு ஒரு நோயாளி வந்தான். அவன் அந்த மருத்துவ ஊழியர்கள்தான் மலைப் பாதையில் இரவில் தங்கியவர்கள் என்பதை விளங்கிக்கொண்டு அவர்களிடம் தான் அந்த மலைப்பகுதியில் உள்ள கொள்ளைக்கார கும்பலை சேர்ந்தவன் என்று சொன்னான். பின்பு அவன் "அன்றிரவில் உங்களை சுற்றி ஆயுதம் தாங்கிய வீரர்கள் நின்றிருந்தார்களே, அவர்கள் யார்? அன்று உங்களை கொள்ளையிடுவதற்காக வந்திருந்தோம். ஆனாலும் உங்களைச் சுற்றி பாதுகாப்பாக நின்றிருந்த வீரர்களைக் கண்டு பயந்து திரும்பி போய் விட்டோம். இருபத்தேழு வீரர்கள் நின்றிருந்தார்கள் அவர்கள் யார்" எனக் கேட்டான்.

அந்த ஊழியர் தனது விடுமுறை நாட்களில் தன் சொந்த தேசத்துக்கு வந்தபொழுது தனது ஊழியத்துக்கு ஆதரவு தரும் திருச்சபை ஒன்றில் இந்த சம்பவத்தை அறிவித்தார். சபையிலுள்ள ஒருவர் சபையின் நிகழ்ச்சி பதிவேடுகளை தேடிப்பார்த்தார். அந்த சம்பவம் நடந்த அன்று இரவு அங்கே நடந்த ஜெபத்தில் இருபத்தேழு பேர்கள் வந்து ஜெபம் செய்ததாக எழுதப் பட்டிருந்தது.

கொரி டென் பூம் அம்மையாரும் இவ்விதமான ஒரு உண்மையாக நடந்த கதையினை கூறியிருக்கின்றார். கலகம் செய்யும் எதிர்ப்பாளர்கள்

ஆப்பிரிக்காவில் ஊழியர் ஒருவர் நடத்திவரும் பள்ளிக்கூடத்தில் சென்று அங்குள்ள இருநூறு மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொன்றுபோட திட்டமிட்டனர். இதைப்பற்றி அறிந்த மாணவர்களும் ஆசிரியர்களும் ஜெபம் செய்து தேவனுடைய பாதுகாப்புக்காக வேண்டினார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட கலகக்காரர்கள் அந்த பள்ளிக்கூடத்தை நெருங்கி வந்தனர். அப்பொழுது அவர்கள் எதையோ கண்டு பயந்தவர்களாக ஓடி விட்டனர். இந்த சம்பவம் இரண்டாவது இரவிலும், மூன்றாம் முறையும் நடந்தது. அந்த கலகக்காரர்களில் ஒருவன் காயம் பட்டதால் கிறிஸ்தவர்கள் நடத்தும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்டான். அவனிடம் "ஏன் அப்படி திரும்பி ஓடிப்போய் விட்டீர்கள்?" எனக் கேட்டார்கள். "நூற்றுக் கணக்கான வெண் உடைதரித்த வீரர்கள் உங்களை சுற்றி நின்று கொண்டிருந்ததை நாங்கள் கண்டு பயந்து விட்டோம்" என அவன் பதில் அளித்தான்.

சீனா நாட்டின் ஹோனான் பகுதியில் ரோசலின்ட் கோபோர்த் தம்பதியினர் ஊழியம் செய்தனர். அவர்கள் வாழ்க்கையில் நடந்த உண்மை சம்பவம் இது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் அவர்கள் அங்கே பணியாற்றினர். அந்தப் பகுதியிலிருந்த இரண்டு கிறிஸ்தவர்கள் வீட்டில் கொள்ளைக்காரர்கள் வந்து அவர்களுடைய பணம் பொருட்கள், ஆடைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டனர். அந்த கிறிஸ்தவர்கள் அப்பொழுது தேவனை நோக்கி ஜெபித்தனர்.

அந்த கொள்ளைக்காரர்கள் அந்த வீட்டிலிருந்து வெளியேறும் நேரத்தில் திடீரென்று அந்த குடும்பத்தினரின் நண்பர் ஒருவர் வந்தார். அப்பொழுது அந்த கொள்ளையர்கள் "நிறைய மனிதர்கள் வருகின்றனர்" என சத்தமிட்டு ஓடிவிட்டனர். தாங்கள் எடுத்த எல்லா துணிகள், பணம் பொருட்களை கீழே போட்டுவிட்டு ஓடி விட்டனர்.

அந்த கொள்ளையர்கள் மற்றவர்களிடம் இதைப்பற்றி கூறினர். அவர்கள் ஒரு நண்பர் வருவதை மட்டும் அல்ல. அநேக மனிதர்கள் கூட வந்து நிற்பதை கண்டனர். ரோசலின்ட் கோபோர்த் இவ்வாறாக எழுதியிருக்கின்றார். "இந்த சீன கிறிஸ்தவர்கள் ஜெபம் செய்த பொழுது அவர்கள் ஜெபத்திற்கு பதிலாக தேவன் அவர்களை காத்துக்கொண்டார். அந்த சமயத்திலிருந்து கிறிஸ்தவ பணிகளுக்கு ஏற்பட்டிருந்த கடுமையான எதிர்ப்பு நீங்கிவிட்டது."

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் இந்தோனேஷியாவின் ஒரு

பகுதிக்கு ஊழியம் செய்ய சென்றார். அந்த பகுதியில்தான் அமெரிக்க நாட்டிலிருந்து வந்திருந்த இரண்டு ஊழியர்கள் அங்குள்ள மக்களால் கொல்லப் பட்டனர். மனித மாம்சத்தை உண்ணும் பழக்கமுள்ள அந்த மக்கள் அந்த ஊழியர்களையும் கொன்று தின்றுவிட்டனர். அவர் இவ்வாறாக எழுதி யிருக்கின்றார். "நாங்கள் விரோதிக்கின்ற மனிதர்கள் மத்தியில் வாழ்கிறோம் என்பது மட்டுமல்ல. அடிக்கடி தெளிவாக சொல்லமுடியாத, விவரிக்க இயலாத பயம் ஏற்பட்டது. அந்தகாரத்தின் சூழலில் அந்த பயத்தினால் நாங்கள் இரவில் எழுந்து முழங்கால்படியிட்டு ஜெபம் செய்து வேத வசனங்களை வாசித்து அதனால் பாதுகாக்கப்பட்டோம்."

இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு அவர்கள் கிறிஸ்தவ உபதேசங்களை ஏற்றுக்கொள்ள வாஞ்சையாக இருந்த மற்றொரு பழங்குடி மக்கள் மத்தியில் பணி செய்ய அங்கிருந்து சென்றுவிட்டனர். ஆனால் வெகு சீக்கிரத்தில் அவர்கள் முன்பு தங்கியிருந்த பகுதியில் இருந்த கிராமத்தின் பழங்குடியின் மனிதன் ஒருவன் அவரைப் பார்க்க வந்தான். அவன் அந்த ஊழியரிடம் "உங்கள் காவல்காரர்களைப் பார்க்க விரும்புகிறேன்" எனக் கேட்டுக் கொண்டான்.

"எந்த காவலர்கள்? என்னிடம் காவல் காப்பவர்கள் யாரும் இல்லையே" என அவர் கூறினார்.

அந்த மனிதன் "உங்களுக்கு காவலர்கள் இருக்கின்றனர். நீங்கள் அவர்களை இரவில் உங்கள் வீட்டைச் சுற்றிலும் நிற்க வைத்து உங்களுக்கு பாதுகாப்பாக செய்தீர்கள்" எனக் கூறினான்.

அந்த பழங்குடி மனிதனுக்கு என்ன சொல்லியும் விளங்கவைக்க முடிய வில்லை. அவன் அந்த ஊழியரின் கட்டிலின் கீழ் அலமாரிகளுக்கு உள்ளே மற்றும் வீட்டின் எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தான். அவன் திரும்பிச் செல்லுமுன் இவ்வாறாக கூறினான். "நாங்கள் அனைவரும் உங்களையும் உங்கள் மனைவியையும் கொன்றுபோட இரவில் வந்தோம். ஆனால் உங்கள் வீட்டைச் சுற்றிலும் இரண்டு வரிசைகளில் காவலாளர்கள் பளபளக்கும் ஆயுதங்கள் ஏந்தி நின்று கொண்டிருந்தனர். நாங்கள் பல இரவுகள் இப்படி வந்து பார்த்தும் எங்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை. அதனால் பணம் கொடுத்து ஒரு கொலையாளியை அனுப்புவதற்காக அவனிடம் சொன்னோம். நீங்கள் எல்லாம் கோழைகள் என அவன் எங்களைப் பார்த்து சிரித்தான். பின்பு அந்த கொலையாளி அந்த இரவில் உங்களைக் கொல்ல வந்தபொழுது அவனும் அந்த காவலர்களைக் கண்டு பயந்து ஓடிவிட்டான்."

அப்பொழுது அந்த தேவ ஊழியர் தனது வேதாகமத்தை எடுத்து அந்த குடியின மனிதனுக்கு வசனங்களைக் காட்டி விளக்கமாக கூறினார். தேவன் எப்படியெல்லாம் தமது பிள்ளைகளை பாதுகாத்து நடத்துவதாக வாக்குத்தந்துள்ளார் என்பதை அவனுக்கு காட்டினார்!

உனக்கு எப்பொழுது பாதுகாப்பு தேவை என்பது உனக்குத் தெரியாது

இந்த வசனத்தை மனப்பாடமாக படித்துக்கொள். ஏனென்றால் உனக்கு எப்பொழுது பாதுகாப்பு தேவை என்பது உனக்குத் தெரியாது. நீ அறியாய் என்று அந்த கல்லூரி முதல்வர் அவளுக்கு கூறினார்.

அந்த வசனம் சங்.34:7 "கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்."[1] அந்த கல்வி நிறுவனம் பசிபிக் யூனியன் கல்லூரி, அது காலிபோர்னியா நகரின் ஆங்க்வின் என்ற பகுதியில் இருந்தது. ஏறக்குறைய இரண்டாயிரத்து எழுநூறு மாணவர்கள் அங்கே பயின்றனர்.

அவ்விதமாக அந்த வேதவசனத்தை மனனம் செய்தவர்களில் ஒரு மாணவியின் பெயர் சார்லட், பத்தொன்பது வயதுள்ளவள். அவள் கல்லூரி வளாகத்துக்கு வெளியே சென்று ஒரு வீட்டில் உதவியாளராக வேலை செய்தாள். அவளது கல்லூரி கட்டணம் செலுத்த அது தேவையாக இருந்தது. அந்த வேலை செய்யுமிடத்துக்கு பேருந்து வண்டியில் பயணம் செய்யவேண்டும். அவளது வாழ்க்கை களைப்பூட்டுவதாக இருந்தது. வகுப்புகளுக்கு செல்லுதல், பின்பு பேருந்தில் அந்த நீண்ட பயணம் – பல மணிநேர வேலைகள். பின்பு பேருந்தில் கல்லூரிக்கு திரும்பி வருதல் ஆகியவை. சில நேரங்களில் நீண்டநேரம் வேலைசெய்தபின் சற்றும் சிந்தியாமல் பேருந்தில் ஏறுவதுண்டு.

அப்படித்தான் ஒரு நாள் இரவில் நேரிட்டது. சார்லட் சன்னல் வழியாக இறுதியில் பேருந்து நின்ற இடத்தை பார்த்தபொழுது அவளுக்கு தான் எந்த இடத்தில் இருக்கிறேன் என அறிய முடியவில்லை, மிகவும் தாமதமாக ஆகி விட்டது. அந்த பேருந்து இறுதியாக நின்ற இடம் சான் பிரான்சிஸ்கோ என தெரிந்ததும் தான் மிகுந்த ஆபத்தில் இருப்பதை சார்லட் உணர முடிந்தது.

சான்பிரான்சிஸ்கோ அவளது சிறிய ஆங்வின் நகரத்திலிருந்து எழுபத்தைந்து மைல்கள் தூரத்தில் இருந்தது. அவள் தனது கிறிஸ்தவ கல்லூரியில் இருந்து வெகு தொலைவில் இருந்தாள். அங்கு நின்றிருந்த மாலுமிகள் அவளை உற்று பார்த்தனர். குடிபோதையில் இருந்த ஒருவன் வந்து அவளிடம் பேச முயன்றான்.

சார்லட் தனக்கு யாராவது உதவுபவர்கள் உண்டா என தேடினாள். காவல் துறையினர் யாரும் அங்கு இல்லை. அந்த பேருந்து நிலையத்தில் உள்ள 'தகவல் அறிவிக்கும் இடம்' இரவு நேரமானதால் மூடப்பட்டுவிட்டது. சாலையின் நடையோர பகுதிகளில் வேறு பெண்களே இல்லை.

இதுதான் சங்கீத புத்தகத்திலுள்ள அந்த வசனத்திற்கான மிக தேவையுள்ள நேரம் என சார்லட்டின் மனதில் நினைவு வந்தது. அந்த கல்லூரி முதல்வர் நீ உனக்கு எப்பொழுது தேவை என்பதை அறிய இயலாது என கூறியிருந்தார். ஆம் அந்த உதவி இப்பொழுதுதான் தேவை என உணர்ந்தாள்.

சார்லட் அங்கிருந்த பெண்கள் அறைக்குள் சென்று கதவை தாளிட்டு முழங்கால் படியிட்டு ஜெபம் செய்தாள். "தேவனே, நான் வழி தப்பிவிட்டேன். எனக்கு பயமாக இருக்கின்றது. நான் வீடுபோய் சேர தயவுசெய்து உதவி செய்யும். என்னை பாதுகாப்பதாக வாக்களித்திருக்கின்றீர். அப்படியே செய்யும்" என ஜெபித்தாள்.

கதவை திறந்து மறுபடியுமாக பேருந்து நிலையத்தில் வந்தாள். அங்கே வாலிபன் அவளுக்கு முன்பாக சென்றான். அவரது கையில் ஒரு பெரிய கருப்பு நிற வேதாகமம் இருந்தது. அவளுக்கு அவனை நிறுத்தி எதுவும் கேட்க அச்சமாக இருந்ததால் அவர் பின்னாலே நடந்து சென்றாள். ஒருவேளை அவனும் பசிபிக் யூனியன் கல்லூரியை சேர்ந்த மாணவனாக இருக்குமோ? அவரும் கல்லூரிக்கு திரும்ப செய்கிறாரோ? என சிந்தித்தாள்.

அந்த பேருந்து பல நடைபாதைகளை கடந்து அந்த வாலிபன் சென்றார். பின்பு படிக்கட்டுகள் உள்ள பகுதியை கடந்து வந்தபொழுது பின்தொடர்ந்து வந்த சார்லட் அந்த நிலையத்தின் மறுபுறத்துக்கு வந்து விட்டதை கண்டாள். அங்கே ஒரு பேருந்து புறப்படுவதற்கு தயாராக இருந்தது அதன் முன் பலகையில் 'ஆங்க்வின்' என இடப்பெயர் இருந்தது. அந்த பேருந்துதான் அந்த இரவில் இறுதியாக சான் பிரான்சிஸ்மோவிற்கு போகும் வண்டி.

அந்த வாலிபன் பேருந்துக்குள் வந்து அங்கிருந்த ஒரு இருக்கையை

அவளுக்கு காண்பித்து அமரச் செய்தார். பின்பு திரும்பி பேருந்தின் படிகளில் இறங்கி சென்றுவிட்டார். அவள் சன்னல் வழியாக அவர் செல்வதை பார்த்துக்கொண்டிருந்தாள். அவர் சில அடிகள் வரை நடந்து சென்று மறைந்துவிட்டார். அங்கே நல்ல வெளிச்சம் இருந்தது. ஆனால் அவளால் அவரைக் காண இயலவில்லை. அவர் கும்பலாக இருந்த மனிதர்களுக்குள் போய்விட்டார் என சொல்லவும் முடியாது. ஏனெனில் அங்கே வேறு யாருமே இல்லை– அவர் கண்களால் காணமுடியாதபடி மறைந்து விட்டதாக சார்லட் உணர்ந்தாள்.

சார்லட் இந்த நிகழ்ச்சியை கண்டு திகைப்படைந்தாள். பின்பு சங்கீதம் 34ல் உள்ள அந்த வசனம் நினைவில் வந்தது. "கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்" அந்த கல்லூரியில் முதல்வர் கூறியது முற்றிலும் சரியானது. இந்த வேதவசனம் தான் அவளுக்கு தேவையான ஒன்று.

மேகங்கள் நடுவில் பாடல்கள்

"விசுவாசத்தைக் கொண்டு பாடும் பாக்கியத்தைத் தாரும்"

இருபத்தைந்து வயதுள்ள அந்த மனிதருக்குள் எழுந்த அபூர்வமான ஜெபம். "தேவனே, எனக்கு போதிய விசுவாசத்தை தாரும். என் அம்பறாப் பையைப் பாடல்களால் நிரப்பும். அதைக் கொண்டு ஆக்கா இன மக்கள் மத்தியில் நான் பாட விரும்புகிறேன்" ஆம், அது ஒரு அசாதாரணமான ஜெபம். ஆனால் ஜிம் எலியட் ஒரு அசாதாரணமான வாலிபர், 1952ம் ஆண்டில் ஈக்வடார் பகுதியிலுள்ள ஆக்கா பழங்குடியினர் மத்தியில் பணிபுரிய வந்தவுடன் இந்தவிதமாக ஜெபம் செய்தார். 1956ம் ஆண்டு துவங்கிய பொழுது ஜிம் எலியட் மற்றும் அவருடன் பணிபுரிய வந்திருந்த நான்கு இளம் ஊழியர்கள். ஆக்கா மக்கள் அருகே சென்று நண்பர்களாக விரும்பி பேச முயன்றபொழுது கொல்லப்பட்டனர். ஈக்வடார் பகுதியின் கராரே நதிக் கரையினில் அவர்கள் மரித்தனர். அந்த ஐந்து பேர்களும் தாங்கள் மிக விரும்பிய மனனம் செய்திருந்த ஒரு பாடலை அப்பொழுதுதான் பாடி முடித்திருந்தனர்.

'எங்கள் கேடகமும் பாதுகாப்புமானவரே, உம்மில் இளைப்பாறுகிறோம்.
யுத்தம் உம்முடையது, துதியும் உம்முடையது.
முத்துக்களால் அமைந்த வாசல்களில் கடந்திருக்கையில்
வெற்றி, நித்தியமாக உம்முடன் இளைப்பாறுகிறோம்.'

அமெரிக்காவின் எல்லா தினசரி பத்திரிக்கையிலும் இந்த சோக செய்தியானது முன்பக்கத்தில் அறிவிக்கப்பட்டு வெளியாகிற்று. தேசங்களின் பத்திரிக்கைகள் தங்கள் முன்புற அட்டையில் வெளியிட்டு விவரமாக பிரசுரித்தனர். ஜிம் எலியட்டின் மனைவி, எலிசபெத் எலியட் இந்த விவரங் களையெல்லாம் ஒரு புத்தகமாக எழுதினார். "*மகிமையின் வாசல்களை கடந்து செல்கையில்*" என்ற அந்த புத்தகம் மிக அதிகமாக விற்பனையா யிற்று. அந்த இரத்த சாட்சிகளில் ஒருவரது சகோதரி ஆக்கா பழங்குடியினர் மத்தியில் சென்று ஊழியத்தை தொடர்ந்து செய்தார். அநேகர் தேவனண்டைக்கு திரும்பினர்.

மரித்த அந்த ஊழியர்களில் ஒருவரது மனைவி, ஆலிவ் பிலமிங் லைபீல்டு சில ஆண்டுகளுக்குப் பின் ஆக்கா மக்களை சந்திக்க வந்தார். அவர்களில் சிலர் அவளது கணவரை கொலை செய்தவர்கள். அவர்கள் எப்படி அந்த ஐந்து ஊழியர்களும் கொல்லப்பட்டு மரித்தனர் என்ற விவரங்களை கூறினார்கள். பின்பு அவர்கள் பாடல் ஓசையை கேட்டதாக கூறினர்.

"யார் பாடினாாக்ள்" என ஆலிவ் கேட்டார் "அந்த ஐந்து ஊழியரா?"

"இல்லை," என ஒரு அக்கா மனிதன் கூறினான். அவர்களுடைய உயிரற்ற உடல்கள் நதிக்கரையில் கிடந்தன" என்றான்.

அப்பொழுது அவர்களுக்கு மொழிபெயர்த்து சொன்னவர் மறுபடியும் அந்த ஆக்கா மனிதனின் பதிலை மறுபடியும் கூறினார்.

"அந்த ஊழியர்கள் கொல்லப்பட்டபின் மரங்கள் நடுவிலிருந்த தாவா என்பவனும் கரையில் நின்றிருந்த கிமோ என்பவனும் பாடல்கள் பாடும் ஓசையை கேட்டார்கள். அவர்கள் மரங்களுக்கு மேலே பார்த்தபொழுது திரளான கூட்டமான மனிதர்கள் பாடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நூற்றுக் கணக்கான மின்னும் வெளிச்சங்கள்போல காணப்பட்டனர்" என்றார்.

ஆலிவ் மறுபடியும் கேட்டபொழுது "*மின்னும் வெளிச்சங்கள்*" என்ற ஒரு வார்த்தைதான் 'பிரகாசமான ஒளி' என்பதற்கு அவர்கள் கூறுவார்கள் என மொழிபெயர்ப்பாளர் கூறினர்.

"பின்பு திடீரென அந்த வெளிச்சம் மறைந்துவிட்டது" என்றும் அவர்கள் கூறினர்.

முதலில் ஆலிவ், அந்த ஆக்கா மக்கள் தன்னை பிரியப்படுத்த அவ்விதமாக ஒரு கதையை கூறுகின்றனர் என நினைத்தார். ஆனால் மொழிபெயர்ப்பாளர், பல ஆண்டுகளாக அந்த மக்கள் சில சம்பவங்களை கூறுவதையும் அது ஆச்சரியமாக சரியான உண்மைதான் என்றும் கூறினார். அப்படி இல்லாதிருந்தால் தாவாவும் கிமோவும் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள் எனவும் கூறினர்.

மேலும் அந்த மொழிபெயர்ப்பாளர் நீண்ட காலமாகவே அந்த மக்களிடம் அந்த மரணங்கள் எப்படி சம்பவித்தன என்று கேட்டதேயில்லை எனவும், இப்பொழுது ஆலிவ் தனது கணவரைப்பற்றி கேட்க வந்ததினால் முதல் முறையாக அவர்கள் உண்மையில் நடந்தவற்றை கூறியிருக்கின்றனர் எனவும் கூறினார்.

ஆக்கா மனிதர்கள் தாவாவும் கிமோவும் தூதர்கள் பாடலை கேட்டனரா? "முத்துக்களால் அமைந்த மகிமையின் வாசலில்" அந்த ஐந்து பேர்களையும் பாடலுடன் நடத்தி அழைத்து வரவேற்று சென்றனரா?

பல ஆண்டுகளுக்கு முன் ஜிம் எலியட் செய்த ஜெபம் பற்றி அந்த ஆக்காமக்கள் அறிவார்களா? "தேவனே எனக்கு போதிய விசுவாசத்தை தாரும்... ஆக்கா மக்கள் மத்தியில் நான் பாட விரும்புகிறேன்"

தேவதூதர்களுக்கு ஒப்பான சரியான தூதர்கள் அல்ல இவர்கள்...

இவர்கள் நீங்கள் விரும்பும் உருவத்தில் வந்த தேவதூதர்கள் அல்ல. போதைமருந்தான அபினியை கடத்தும் ஒருவர். சீனாவில் உள்ள ஒரு கொள்ளைக்காரர் மற்றும் ஒரு ஜப்பானிய ராணுவ அதிகாரி. ஆனாலும் டிக், மார்கரேட் ஹில்லிஸ் இருவரும் அவர்களுடைய உதவியை ஏற்றுக்கொண்டார்கள். டிக்கும் மார்கரேட்டும் சீன தேசத்தில் பணியாற்றிய ஊழியர்கள்.

டிக் ஹில்லிஸ் குடல்வால் நோயினால் பாதிக்கப்பட்டார். அதில்தான் இந்த சம்பவங்கள் துவங்கின. அவர் ஷாங்காயிலுள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக செல்வேண்டியிருந்தது. அந்த பயணம் எளிதானதல்ல.

இச்சம்பவம் 1930ம் ஆண்டில் நடந்தது. அப்பொழுது சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே போர் நடந்து கொண்டிருந்தது. ஹாங்காய் செல்வதற்கு டிக்கும் மார்கரெட்டும் அவர்களது இரண்டு பிள்ளைகளும் (ஒன்று சிறு குழந்தை) சீன இராணுவத்தின் வரிசைகளை கடந்து செல்ல வேண்டும். பின்பு யாருக்கும் சொந்தமில்லாத இடத்தைக் கடந்து செல்ல வேண்டும். அங்கே கொள்ளைக்காரர்கள் இருந்தனர். பின்பு ஜப்பானிய வீரர்கள் வரிசையையும் தாண்டிச் செல்ல வேண்டும். மேலும் கடினமானதாக அது குளிர் காலமாக இருந்தது.

அவர்கள் தங்கள் இல்லத்திலிருந்து புறப்படும் பொழுது மார்கரேட் "தேவனே, உமது வாக்குத்தத்தின் உண்மையை நாங்கள் கற்றுக்கொள்ள உதவும், 'கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்' சங்.34:7" என்று நடைமுறையில் மிகவும் முடியாதது போல தோன்றினாலும் ஜெபித்தாள். மேலும் தங்கள் குழந்தைக்கு வழியில் பால் கிடைக்கச் செய்யும்படியாகவும் வேண்டினாள்.

இரண்டு நாட்கள் கழித்து அவர்கள் சீன இராணுவத்தின் கடந்துசெல்ல அனுமதி கேட்டார்கள். அவர்களுடைய பயண திட்டங்களை கேட்டறிந்த இராணுவ அதிககாரி "நீங்கள் சரியான பைத்தியக்காரர்கள்" என்று திட்டினான். நிச்சயமாக மரணம்தான் நேரிடும் என மிக தயக்கத்துடன் அனுமதி தந்து விட்டான். பின்பு அவர்கள் 'மணல் ஆறு' என்பதனை கடந்து செல்கையில் தனியாக செல்ல நேரிடும். அவர்கள் அந்த இராணுவ அதிகாரியிடம் பேசிவிட்டு போகும்பொழுது ஒரு வாலிபன் அங்கு வந்தான். அவன் சீனாவிலிருந்த ஒரு போதகரின் மகன், ஆனால் அவன் கிறிஸ்தவத்தை மறுத்துவிட்டான். போதை மருந்து கடத்துபவனாக தொழில் செய்தான். ஆனால் வியத்தகும் வண்ணமாக அவன் மிகவும் அன்புடன் "நான் உங்களுக்கு ஏதாகிலும் உதவி செய்ய வேண்டுமா?" எனக் கேட்டான். அன்றிரவு அவர்கள் தங்குவதற்கு இடமும் வழியில் ஆற்றைக் கடக்க ஒரு படகும் ஏற்பாடு செய்தான்.

அடுத்த இரவு அவர்கள் அந்த 'பொது நில பரப்பை' கடந்து செல்கையில் யாருமற்ற ஒரு வீட்டைக்கண்டு அதில் தங்க நினைத்தனர். அவர்கள் உள்ளே சென்றதும் கொள்ளைக்காரர்கள் திடீரென வந்துவிட்டனர். எல்லா பணத்தையும் தரும்படியாக மிரட்டினர். நிதானமாக டிக் ஹில்லிஸ் தனது பாக்கெட்டிலிருந்து தனது பெயர்கொண்ட அடையாள அட்டையை எடுத்து தந்து அந்த கொள்ளையனுடைய பெயர் என்னவென கேட்டார்.

சீன மொழியில் ஹில்லிஸ் என்ற பெயர் அந்த கொள்ளைக்காரனுக்கும் இருந்தது. "அன்புள்ள ஐயா, நாம் ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்கள்" என ஹில்லிஸ் கூறினார். அந்த கொள்ளையர் தலைவன் ஒப்புக்கொண்டான். அவன் 'ஹில்லிஸ் தனது மூத்த சகோதரர்' என கூறினான். தங்கள் இன வேறுபாட்டை கருதவில்லை. அன்றிரவு ஹில்லிஸ் குடும்பத்தினரும் அந்த கொள்ளையர்களும் சமாதானமாக அந்த வீட்டில் ஓய்வெடுத்தனர்.

"தேவனே, நீர் எங்களுக்காக இன்னும் உம்முடைய தூதர்களை அனுப்புவீரா?" என ஹில்லிஸ் கேட்டார். அவர்கள் அப்பொழுது பெரிய சுவருக்கு வெளியே ஜப்பானிய இராணுவம் இருந்தது. ஜப்பானிய போர் வீரர்கள் உடனே ஹில்லிசை பிடித்து கைது செய்தனர். அவருடைய முதுகில் கத்தியை வைத்தனர். ஹில்லிஸ் தம்பதியினருக்கு ஜப்பானிய மொழி தெரியாததால் ஒன்றும் சொல்ல இயலாமல் அந்த போர்வீரர்களிடம் இருந்தனர்.

திடீரென மூன்று ஜப்பானிய அதிகாரிகள் குதிரைகளில் அங்கு வந்தனர். அவர்களில் ஒருவர் நல்ல ஆங்கிலத்தில், "நீங்கள் எல்லாம் எப்படி இங்கே வந்தீர்கள்?" எனக் கேட்டார்.

ஹில்லிஸ் தனது பயண விவரத்தைக் கூறினார். பின்பு நீங்கள் எப்படி ஆங்கில மொழியை இவ்வளவு நன்றாக பேசுகின்றீர்கள்?" எனக்கேட்டார்.

அந்த ஜப்பானிய அதிகாரி தான் வாஷிங்டன் கல்லூரியில் 1936ம், ஆண்டு படித்ததாக கூறினார். ஹில்லிஸ் வியப்படைந்தார். "அப்படியானால் உங்களுடன் கல்லூரியில் பயின்ற ஒரு மாணவியை சந்தியுங்கள்" எனக்கூறி தனது மனைவியை அந்த அதிகாரிக்கு அறிமுகப்படுத்தினார். "மார்கரெட்டும் வாஷிங்டன் கல்லூரியில் 1936ம் ஆண்டில் பயின்றார்."

பின்பு அந்த அதிகாரி தான் "ஏதாகிலும் உதவி செய்ய வேண்டுமா?" எனக் கேட்டார். மார்கரேட் "குழந்தைக்கு பால் தேவையாக உள்ளது" என அறிவிக்கவே, அவர் அந்த இராணுவ வரிசைகளை கடந்து செல்ல அனுமதி சீட்டு வழங்கினார். பின்பு அங்குள்ள ஒரு ஆலயத்திற்கு வழிகாட்டி நடத்திச் சென்றார். "அங்கே தங்கியுள்ள ஊழியரிடம் ஒரு பசுமாடு உள்ளது. அங்கே பால் கிடைக்கும்" எனக் கூறினார்.

அவர்கள் அந்த ஆலயத்திற்கு வந்தபொழுது குழந்தைக்கு நல்ல பால் கிடைத்தது. அவர்கள் அங்கே நன்கு தூங்கி ஓய்வெடுத்தனர். அடுத்த நாள் ஹாங்காயிலுள்ள மருத்துவமனைக்கு சென்றனர்.

டிக்கும் மார்கரேட்டும் பின்பு இவற்றைப்பற்றி நினைத்து போகையில் மகிழ்ச்சியால் நகைத்தனர். எதிர்பாராத வகையிலே தேவதூதர்களைப்போல வந்து உதவியவர்களைப் அனுப்பி தேவனே மார்கரேட்டின் ஜெபத்திற்கு பதில் அளித்தார் என்பதில் சந்தேகமேயில்லை.

அதிக ஆழமுள்ள மலை ஆற்றோடை

வடக்கு அரிசோனாவில் இருந்த தனது சகோதரருடைய குடும்பத்துடன் விடுமுறை நாட்களை செலவிட பதின் வயதிலான ஜேனி வந்திருந்தாள். மிக அருகான வனத்தில் அவர்களை விட்டு மலைச்சிகரத்தில் நின்று படம் எடுப்பதற்காக சென்றாள். மிகவும் உயரமான மலைசிகரத்தின் ஓரத்திற்கே சென்றுவிட்டாள்.

அப்படி மிகுந்த உயரத்தில் மலை விளிம்பில் நிற்கும்பொழுது கருப்பான சாம்பல் போன்ற ஒன்றின்மேல் கால் வைக்க நேர்ந்தது. உடனே ஜேனி வழுக்கி கீழே விழத் துவங்கினாள். பயத்துடன் அவள் எதையாகினும் பற்றி பிடித்துக்கொள்ள முயன்றபொழுது ஒன்றுமே கைக்கு கிட்டவில்லை. அவளைச் சுற்றிலும் கருப்பான மலைப்பாறை சுவர்போல நின்றது. கீழே பார்த்தபொழுதும் இருட்டாகவே தெரிந்தது. அந்த மலை பள்ளத்தாக்கு அதிக ஆழமுள்ளதாக இருந்தது.

திடீரென அவள் விழுவது நின்றுவிட்டது. அது எதுவோ அல்லது யாரோ அவளை கையால் தாங்கி பிடித்து நிறுத்தியதுபோல இருந்தது. அவள் தன் கையை நீட்டிய பொழுது வழுவழுப்பான பாறைகளை தொட முடிந்தது. சிறிது உடலை அசைத்தபொழுது மறுபடியும் கீழே விழுவதுபோல தோன்றிற்று.

அதனால் உதவி பெற்றிருந்தும் உதவியற்றவளாக இருந்தாள். அவளால் மறுபடியும் மலை உச்சிக்கு ஏற முடியாது. முயற்சி செய்தால் மீண்டும் விழ நேரிடும். ஜேனிக்கு அது மிக பயங்கரமான அனுபவமாக இருந்தது. ஆயினும் இனம் அறியாத ஒன்றினால் தான் சூழப்பட்டிருப்பதாகவும் தாங்கிப் பிடிக்கப்பட்டிருப்பதாகவும் உணர்ந்தாள்.

திடீரென தான் மறுபடியும் மலைச்சிகரத்தின் உச்சியில் இருப்பதை உணர்ந்தாள். அவள் எப்படி அங்கே வர முடிந்தது என அவளுக்கு தெரிய

வில்லை. தானே அங்கே ஏறி வரவுமில்லை என அவள் அறிவாள். அவள் சிந்தித்த ஒரே விளக்கம் என்னவென்றால் ஒரு தேவதூதன் அவளை கீழே விழாமல் தாங்கி பிடித்து மறுபடியும் சிகரத்தில் மேல் கொண்டுவந்து சேர்த்திருக்கின்றார் என்பதே.

அன்று மாலை ஜேனி தொலைபேசியில் தன் அம்மாவுடன் பேசியபொழுது தனக்கு நேரவிருந்த ஆபத்தைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. அம்மா கவலைப் படுவார்கள் என நினைத்தாள். அவளது அம்மாவும் தனக்கு அன்றைய தினம் ஏற்பட்ட விசித்திரமான அனுபவத்தைப்பற்றி கூறவில்லை.

மேரிலின் மற்றும் பில் வெபர் என்பவர்கள் "*தேவ தூதர்களின் நடைகள் எழுப்பும் ஓசை*" என்ற புத்தகத்தில் இந்த உண்மை நிகழ்வைப் பற்றி அந்த அம்மா கூறியதையும் மகள் கூறியதையும் பற்றி விவரித்துள்ளனர். அந்த நாளின் காலையில் ஜேனியின் அம்மா ஷர்லி 91ம் சங்கீதத்தை வாசித்துக் கொண்டிருந்தார்கள். "... உன்னைக் காக்கும்படி உனக்காக தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார்... அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்" வசனம் 11–12 ஆகியவற்றை வாசிக்கும் பொழுது திடீரென தனது மகள் ஏதோ ஆபத்தில் இருப்பதுபோல உணர்வு ஏற்பட்டு கலங்கி கண்ணீர் வடித்தார்கள். உடனே ஜெபம் செய்ய துவங்கி னார்கள். *எபிஸ்கோப்பல் ஜெப புத்தகத்திலுள்ள* சில சொற்கள் இவ்வாறு உள்ளன. "நான் நேசிக்கிற யாவரையும் ஒருபோதும் கைவிடாத பாதுகாப்புக்கும் அன்புக்கும் உம்மிடம் ஒப்படைக்கிறேன்" என சொல்லி சங்கீதம் 34ல் காணப்படும் வாக்குத்தத்தத்தை சொந்தமாக்கி ஜெபித்தார்கள். "நான் கர்த்தரை தேடினேன், அவர் எனக்கு செவி கொடுத்து என்னுடைய எல்லா பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்" (சங்.34:4). திடீரென அவர்கள் முன்பு கண்ணீர் விட்டதுபோல மீண்டும் சமாதானம் தன்னை சூழ்வதாக உணர்ந்தனர்.

ஜேனி வீட்டிற்கு திரும்பியதும் தன் சகோதரனிடமும், மற்ற சகோதரி யினிடமும் தனது பயணத்தில் எடுத்த புகைப்படங்களை காட்டினாள். மற்றும் இங்கே இந்த இடத்தில் எனச் சொல்லி ஒரு புகைப்படத்தை தன் அம்மாவிடம் காண்பித்து "இங்கே தான் நான் விழுந்துவிட்டேன்" எனவும் அறிவித்து முழுக் கதையையும் விவரித்தாள்.

சரியாக எந்த நேரத்தில் இது நிகழ்ந்தது? என அம்மா கேட்டார்கள்.

ஆம், அப்பா ஷர்லி ஜெபத்தில் ஊக்கமாக தரித்திருந்த அந்த நேரந்தான் ஜேனிக்கு மிகவும் உதவி தேவையான நேரமாக இருந்தது.

13

எஜமானுடைய கரத்தின் தொடுதல்

தேவன் அற்புத சுகமளிக்கும்போது....

"இதோ நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?"
(எரே.32:27).

லாசரு இரண்டாம் முறையும் மரித்தான். ஆனால் எங்கு எப்படி மரித்தான் என்று நமக்குத் தெரியாது. ஆனால் சில காலம் கழித்து நோய் வாய்ப்பட்டு அவன் மரித்திருக்கலாம். மரியாளும், மார்த்தாளும் அச்சமயத்திலும் ஒருவேளை அப்பொழுது ஜெபித்திருக்கலாம். ஆனாலும் அவன் மரித்தான். அதற்காக அவர்களைக் குறைகூற முற்படக்கூடாது. ஒருவருக்காக ஜெபிக்கும் பொழுதெல்லாம் அற்புத சுகம் கிடைக்காது என்பதுதான் உண்மை. சில சமயங்களில் தேவன் குணமாக்குகிறார், சில சமயங்களில் குணமாக்குவது இல்லை.

இப்புத்தகத்தில் நாம் வாசித்த எல்லாக் கருத்துக்களிலும் சரீர சுகம் பெறுதல் என்பது தனிப்பட்ட நபரைப் பொறுத்தாயும் மிகவும் தெளிவாக விளக்கிக்கொள்ள இயலாமல் திகைக்க வைப்பதாகவும் காணப்படுகிறது. ஜெபத்திற்கு சுகம் அளிக்கும் வல்லமை உண்டா? உண்டு. அது முற்றிலும் உண்மை யாக்.5:16ல் யாக்கோபு மிகவும் தைரியமாக இப்படிக் கூறுகிறார். "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாய் இருக்கிறது" (யாக்.5:16) என்று பல நூற்றாண்டுகளாக கிறிஸ்தவ வரலாறும் இதை உறுதிப்படுத்துகிறது. இந்த அத்தியாயத்தில் நாம் காணும் கதைகள் கடலில் மிக ஆழத்தில் அமிழ்ந்து கிடக்கும் பெரிய பனிக்கட்டியின் ஓர் நுனிப்

பாசமிக இந்த விந்தையான உலகத்தில் பொத்தானை அழுத்தினால் அடுத்தடுத்து வரும் நிகழ்ச்சிகள்போல் நாம் இவற்றைக் கருதிவிடக்கூடாது. ஜெபம் என்பது விருப்பமான பதிலைப் பெறுவதற்கு தூரத்திலேயே இருந்து அழுத்தி செயல்பட வைக்கும் பொத்தான் அல்ல. ஆம், ஜெபம் ஓர் விதத்தில் தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்துகிறது. ஆனால் அந்த வல்லமை தேவனுடைய சித்தத்தின்படிதான் செயல்படும். தேவனுக்கென்று நோக்கங்கள் உண்டு. இயேசுவும் வல்லமையை வெளிப்படுத்த லாசருவை முதல் முறை அவனை உயிர்பெறச் செய்யவேண்டியது இருந்தது. ஆனால் அதன்பின்னர் அடுத்து அவன் மரித்தபொழுது அவனைப் பரதீசில் ஏற்றுக்கொள்ளக்கூடிய காலமாய் இருந்தது.

ஆவிக்குரிய காரியங்களில், உணர்ச்சிபூர்வமான காரியங்களில், உறவுகளின் காரியங்களில், சரீர பிரகாரமான காரியங்களில் என்று பலவிதமான காரியங்களில் தேவன் மக்களை சுகமாக்குகிறார் என்பதை நாம் எப்பொழுதும் நினைவுகூரவேண்டும். பார்பரா குழுங்கியின் அற்புதமான சரீர சுகம் பெற்ற நிகழ்ச்சியை நீங்கள் வாசித்து பேராச்சரியம் கொள்ளும்பொழுது அவள் வாழ்க்கையில் அவள் ஏற்கனவே பெற்றிருந்த ஆத்மீக சுகத்தை மறந்துவிடக்கூடாது. சுகவீனமாக இருக்கும் ஓர் நண்பனின் சுகத்திற்காக ஜெபிக்கும் பொழுது இப்படிப்பட்ட பிறகாரியங்களையும் நீங்கள் மறந்துவிடக்கூடாது.

தேவ வல்லமை என்னைக் காத்துக்கொள்ளட்டும்
தேவ ஞானம் என்னைப் போதிக்கட்டும்,
தேவனுடைய கரம் என்னை பாதுகாக்கட்டும்
தேவனுடைய வழி என்னை வழி நடத்தட்டும்
தேவனுடைய கேடகம் என்னை எதிரியின்
தாக்குதலினின்று காத்துக்கொள்ளட்டும்."

தூய. பெட்ரிக் அயர்லாந்து

விலைமாதர்களுக்காக ஜெபிப்பதில் முனைப்பு

சில சமயங்களில் சில சிக்கலான பிரச்சனைகள் நமக்கு ஏற்படும்பொழுது அதற்காக எப்படி ஜெபிப்பது என்று கூட தெரியாத நிலைக்கு நாம் தள்ளப் படுகிறோம். ஆனாலும் நாம் அதற்காக ஜெபித்து தேவன் அதற்கு பதில் கொடுக்கும்பொழுது அவர் செய்ததையும், எப்படிச் செய்தார் என்றும் நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்கள். பாஸ்டர்.டான் டோஹாண்டோகோ இப்படிப்பட்ட ஓர் சூழ்நிலையில்தான் காணப்பட்டார். "*முன்னணிக் கதைகளிலிருந்து*" என்ற தன் நூலில் ஜேன் ரம்ஃப் இதைப்பற்றிக் கூறுகிறார்.

இந்தோநேஷியாவில் உள்ள செமராங் என்னும் இடத்தில் உள்ள "இந்தோ நேஷிய கிறிஸ்த ஐக்கிய இயேசு உண்மையான மேய்ப்பர்" என்ற ஆலயத்தில் பாஸ்டர் ஹாண்டோகோ இப்படிப்பட்ட ஓர் பிரச்சனையைச் சந்தித்தார். சில சபை விசுவாசிகளின் வீடுகள் விபச்சார விடுதிகளுக்கு ஊடே இருந்தன. சேமராஸ் பகுதிக்கு அருகாமையில் உள்ள குங்கோரோ விபச்சாரத்தின் மையமாகத் திகழ்ந்தது. இப்பிரசனை அதிகரித்துக் கொண்டே போனதால் பாஸ்டர் ஹான்டோகோ இக்காரியத்தில் ஏதாவது செய்யவேண்டும் என்று நினைத்தார்.

விசுவாசிகள் ஓர் விசேஷித்த விதமான ஜெபத்தை ஏறெடுத்தார்கள். நள்ளிரவில் விபச்சார விடுதிகளின் செயல்பாடுகள் மிகவும் தீவிரமாக நடந்து கொண்டு இருக்கும்பொழுது சபையின் அங்கத்தினர்கள் தங்கள் வாகனங் களில் உட்கார்ந்து ஜெபித்துக்கொண்டே அங்கிருந்த விபச்சார விடுதிகளை நோக்கி அடுத்தடுத்து வரிசையாகச் சென்றார்கள். ஒவ்வொரு இடத்திலும் குடிகொண்டிருக்கும் சாத்தானின் வல்லமையை அழிக்கும்படி இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தைக் கொண்டு ஜெபித்தார்கள்.

மாதமாதம் தொடர்ந்து இவ்வாறு ஜெபித்துக்கொண்டே வாகனத்தை ஓட்டிச் சென்றனர். எந்தவித மாற்றத்தையும் காணவில்லை. மாற்றமும் நடை பெறவில்லை.

ஒரு நாள் ஹன்டோகோவின் உடன் பணிபுரியும் ஒருவரிடம் ஓர் ஆள் வந்தார். நீண்டகாலமாக காச நோயினாலும் ஆறு ஆண்டுகள் கைகால்கள் செயலிழந்த நிலையிலும் காணப்படும் தன் தந்தைக்காக ஜெபிக்கும்படி அழைத்தான். விபச்சாரத்தால் சீர் கேடடைந்து காணப்படும் பகுதியின் மத்தியில் அவன் வாழ்ந்து வந்தான்.

காஸ்பர் மான்ங்கி என்ன அந்த உடன் ஊழியக்காரர் அங்கு சென்று இயேசுவின் நாமத்தில் அந்த மனிதனின் அற்புத சுகத்திற்காக ஜெபித்தார்.

[illegible]

[illegible]

அந்த பகுதியில் இரண்டு ஆண்டுகளுக்குள் 50 பேருக்கு பாஸ்டர் ஷான் டேவிட் [illegible] தொடர்ந்தார். அவர்களில் ஒரு சிலர் [illegible] இருந்தார்கள்.

ஷான்டேவிட்டின் ஆலயம், அருகே அருகாமையில் ஓர் மருத்துவ மனையை நிறுவியது. தொடர்ந்து அந்த மருத்துவமனை ஓர் பிரசங்க [illegible] ஜெபத்திற்கு ஆச்சரியமாக பதில் அளிக்கும் வகையில் அதிசயமான ஆத்துமாக்கள் [illegible] இன்று அந்த திருச்சபை வளர்ந்து கொண்டே வருகிறது. [illegible]

ஒருசில புதிய விசுவாசிகள் வருவார்கள் என்றோ, அந்த திருச்சபை பக்கம் ஓர் மருத்துவமனையை திறப்பார்கள் என்றோ, [illegible] பகுதியில் ஓர் பிரசங்க மையம் அமையும் என்றோ ஷான்டேவிட் கற்பனை செய்து கூட பார்க்கவில்லை. இல்லை, சில சமயங்களில் தேவன் எவ்விதத்தில் ஜெபத்திற்கு பதில் அளிக்கப்போகிறார் என்று உங்களுக்குத் தெரியாது. 'ஜெபம்' இவ்வாறு நம்மை உணர்ச்சி வசப்பட வைக்கிறது.

குணப்படுத்தும் நீதிபதி

பிராட்ஃபோர்ட் நாள் முழுவதும் தன் நீதிமன்ற அறையில் வழக்குகளை விசாரித்துக்கொண்டே இருப்பார். நீதி தவறாது உத்தரவும் உண்மையுமாய் தன் வழக்குகளை நடத்துவார். ஆனால் தான் சட்டக் கல்லூரியில் கற்றதாலும்

அப்பாற்பட்ட உதவிகள் சிலருக்கு தேவை என்பதை உணர்ந்தார். சிலருக்கு ஜெபம் தேவைப்பட்டது.

நீதிபதி பிராட்ஃபோர்ட் ஓர் ஜெபவீரன் என்பது யாவரும் அறிந்தது. அவர் ஜெபிக்கும் ஜெபத்திற்கெல்லாம் அடுத்தடுத்து தேவன் பதில் கொடுப்பதை மக்கள் கண்டுகொண்டார்கள். அவர் தன்னை பிரபலப்படுத்த முயற்சித்தது இல்லை. ஆனால் அவர் ஓர் ஜெபவீரன் என்பது பரவலாயிற்று. "எல்லாம் தோல்வியில் முடிகிறதா? நீதிபதி பிராட்ஃபோர்டி டம்போவிடம் போங்கள்" என்று மக்கள் பேசலாயினர்.

ஜார்ஜியாவில் உள்ள வேசிராங் என்ற இடத்தில் உள்ள பெண்மணி ஒருத்தி நீதிபதி நீதிமன்ற அறைக்குள் நுழையும் சமயம் அவள் அவரைத் தொலைபேசியில் அழைத்தாள்.

"நீதிபதி அவர்களே! மூளைக்கட்டியினால் பாதிக்கப்பட்டு என் மகள் மரிக்கும் தருவாயில் இருக்கிறாள். எங்கள் நகரில் உள்ள பெண்மணி நீங்கள் மக்களுக்காக ஜெபிப்பீர்கள் என்று கூறினாள். என்னுடைய குழந்தையின் மூளையில் உள்ள கட்டியை அறுவை சிகிச்சை செய்து எடுக்க அட்லாண்டா வில் உள்ள எசிஸ்ஸ்ட்டக் மருத்துவமனைக்கு நான் வந்து கொண்டு இருக்கிறேன். ஆனால் அதற்குமுன் நான் உங்களைப் பார்க்க இயலுமா?" என் கேட்டாள்.

நீதிபதி அவர்களுக்கு அன்று வேலைப்பழு அதிகம் எதிர்நோக்கி இருந் தாலும், "ஆம் வா" எவ்வளவு விரைவில் குழந்தையைக் கொண்டு வர முடியுமோ அவ்வளவு விரைவாக நீதிமன்ற அறைக்கு வந்தால் நாம் ஜெபிக் கலாம் என்று உடனே பதில் கூறினார்.

உப்பு மூடையைத் தோளில் தொங்கப்போட்டிருப்பதுபோல் தன் 18மாதக் குழந்தையை தோளில் போட்டுக்கொண்டு வந்து சேர்ந்ததை பிராட்ஃபோர்ட் கண்ணுற்றார். வியாதியின் கூரினால் குழந்தையின் முகம் பச்சை நிறமாக மாறி, அதன் தலை பெருத்திருந்தது. ஏற்கனவே இருமுறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. மூன்றாவது முறை அறுவை சிகிச்சை ஒருவேளை மரணத்தில் முடியும் என்று படபடவென்று கூறினாள்.

தேவன் சுகமளிப்பவர் என்றும், சில சமயங்களில் மக்களின் மூலமாக சுகமளிக்க அவர்களைத் தெரிந்தெடுக்கிறார் என்றும் விளக்கிக்கூறினார். பின்னால் அவரிடம் இதுபற்றி கேட்டபொழுது "நான் என் கைகளை அக்

குழந்தையின் தலைமீது வைத்து, அந்த வியாதியிலிருந்து அதற்கு விடுதலை தரவேண்டும்'' என்று ஜெபித்ததாகக் கூறினார்.

அந்தப் பெண் சென்றபின் அதை மறந்தவராய் தன்னுடைய நீதிமன்றக் காரியங்களில் கவனம் செலுத்தத் துவங்கினார். அடுத்தநாள் காலையில் தொலைபேசியின் மணி ஒலித்தது. அவள் தன் குழந்தைக்கு என்ன நடந்தது என்பதை கூற விரும்பினாள்.

நான் மருத்துவமனைக்கு பறந்து சென்றேன். மரிக்கும் தருவாயில் இருந்த என் மகளை மருத்துவர்கள் அவசர அவசரமாக அறுவை சிகிச்சை செய்யும் அறைக்குக் கொண்டு சென்றனர். அவர்கள் என்ன கூறப்போகிறார்கள் என்பதை அறிய காத்திருந்தேன். 1 மணி, 2 மணி, 3 மணிநேரம் கடந்தது. நான் தரையையே நோக்கி நின்றுகொண்டு இருந்தேன்'' என்று கூறினாள்.

மிக மோசமான காரியம் நடத்திருக்கவேண்டும். ஒரு வேளை குழந்தை அறுவை சிகிச்சை அறையிலேயே மரித்திருக்கலாம் என்று கூட அத்தாய் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். முக முடியையும், கையுறையும் தரித்த வராய் மருத்துவர் வெளியே வந்தார்.

மருத்துவரைப் பார்த்து ''ஐயா குழந்தை மரித்துவிட்டது என்று மட்டும் சொல்லிவிடாதீர்கள்'' என்று கெஞ்சினாள்.

''இல்லை அவள் மரிக்கவில்லை'' என்று உறுதிபடக் கூறினார். அவர்கள் மூன்று மணிநேரம் பரிசோதித்துப் பார்த்ததைப் பற்றி விளக்கினார். முந்திய முறை எடுத்த எக்ஸ்ரேயில் மூளையில் கட்டியிருப்பதைப் பார்த்தார்கள். பின் மற்றுமொருமுறை எடுத்துப் பார்த்ததில் கட்டி இல்லை. அது மறைந்துவிட்டது. இதில் தவறு நடந்துவிட்டது எனது மறுமுறையும் குழந்தையை எக்ஸ்ரே எடுக்க அனுப்பினார்கள். அதிலும் கட்டி இல்லை! முடிவாக மூன்று எக்ஸ்ரே அவர்கள் முன் இருந்தது. தண்டுவடத்தில் தட்டிப்பார்த்தால் அதிலும் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. பின் அங்கிருந்த அனைத்து மருத்துவ ஊழியர் களும் கூட, குழந்தையின் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை தட்டிப் பார்த்தார்கள். இவ்வாறு மூன்று மணிநேரம் அவள் மூளையைத் தொடு வதற்கு முன்னால் முயற்சிகள் பல செய்து பார்த்தோம். ஆனால் அந்தக் கட்டி மறைந்துவிட்டது. நீர் கோர்த்து பருத்து இருந்த தலையும் சுருங்க ஆரம்பித்தது. என்ன நடந்தது என்று எங்களுக்குத் தெரியவில்லை. நாங்கள் எல்லோரும் அறிந்துகொண்டது என்னவென்றால் ''குழந்தை குணமாகி உள்ளது'' என்று தொடர்ந்து கூறினார்.

குழந்தையை மீண்டும் பரிசோதிக்க 4 மாதங்கள் கொண்டுவரச் சொல்லி அனுப்பினார்கள். அடுத்த 4 ஆண்டுகள் அந்தத் தாய் குழந்தையை 4 மாதத்திற்கு ஒரு முறை பரிசோதனைக்காக அழைத்துச் சென்றாள். குழந்தை குணமடைந்திருந்தாள்.

குழந்தையின் தந்தை ஜார்ஜியாவில் உள்ள வேசிராய் பத்திரிக்கையின் பதிப்பாசிரியராகப் பணிபுரிந்தபடியினால் ஜெபத்திற்கு அற்புத சுகம் கிடைத்த இந்த நிகழ்ச்சியை முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் இவ்வாறு பிரசுரித்தார். "நீதிபதி என் மகளுக்காக ஜெபித்தார். அவருடைய அறையில் அவள் அற்புதசுகம் பெற்றாள்" என்று தலைப்பிட்டு விவரித்திருந்தார்.

குதிரைக்காக நீங்கள் ஜெபிப்பீர்களா?

இது முட்டாள் தனமான கேள்வியாகக் காணப்படுகிறது இல்லையா? ஓர் குதிரைக்காக நீங்கள் ஜெபிக்க முடியுமா? மெதடிஸ்ட் திருச்சபையைத் தோற்றுவித்த ஜான் வெஸ்லிக்கு இது சரியா தவறா என்று தெரியவில்லை. ஆனாலும் அவர் முயற்சி செய்தார்.

வெஸ்லியின் ஊழியத்திற்கு குதிரைகள் மிகவும் அத்தியாவசியாகக் காணப்பட்டது. 1700ல் ஆண்டுகளில் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகள் முழுவதும் பிரசங்கம் செய்வதற்கு 225,000 மைல்கள் குதிரையின் மீதே பயணம் செய்தார். "நான் சுகதேசியாக இருக்க வேண்டுமானால் என் ஆயுள் முழுவதும் குதிரையின் மீதே பயணம் செய்யவேண்டும்" என்று ஒரு முறை தன் நண்பனுக்கு கடிதம் எழுதினார்.

அவர் குதிரையில் சவாரி செய்யும்பொழுது கடிவாள வாரை குதிரையில் கழுத்தின் முன் பக்கமாகப் போட்டு வாசித்துக்கொண்டே போவார். குதிரையும் ஒரே சீராக அடி எடுத்து தனக்குரிய "நான் அவ்வாறு கடிவாள வரை தளர விட்டு சவாரி செய்யும்பொழுது வேகத்தில் செல்லும் எந்தக் குதிரையும், விழுந்ததாகவோ, சிறிதேனும் தடுமாறியதாகவோ எனக்கு ஞாபகம் இல்லை."

அவர் தனது எழுபதாவது வயதிற்குப் பிறகு பொதுவாக வண்டியிலேயே பிரயாணம் செய்தார். ஆனால் உடல்நிலை அனுமதிக்கும்பொழுது குதிரை மீதே உட்கார்ந்து பயணம் செய்தார்.

தன் குதிரைகளிலும் எவ்வாறு கண்டிப்பாக இருந்தாரோ அதேபோன்று தானும் ஓர் கடினமான வேலைத் திட்டத்தைக் கடைப்பிடித்தார் நாள்தோறும் அதிகாலை 4 மணிக்கே எழுந்துவிடுவார். 1746 ஆம் ஆண்டு மார்ச் 17ம் நாள் இங்கிலாந்தின் வடகோடியில் உள்ள நியூகாசில் என்னும் இடத்தில் பிரசங்கத்தை முடித்துவிட்டு தன் இரு நண்பர்களுடன் திரும்பிக் கொண்டிருந்தார். அவர்கள் கிரேட் ஸ்மிட்டன் என்ற நகர் வரை சென்றுவிட்டார்கள். அப்பொழுது அவரின் நண்பர்களில் ஒருவர் களைப்படைந்து, அங்கு தங்க நேர்ந்தது. ஆனால் வெஸ்லி தன் பயணத்தைத் தொடர்ந்தார். ஆனாலும் அவருடைய குதிரை நொண்டியாக இருந்ததாலும், அவருக்கும் உடல்நிலை சரியாக இல்லாததாலும் அடுத்து நான் பிரசங்கம் செய்யவேண்டிய இடத்திற்கு போக முடியுமோ, முடியாதோ என்று யோசித்தார். குதிரையை இன்னும் கொஞ்சம் வேகமாக ஓட்டலாம். ஆனால் குதிரை அவரை கீழே தள்ளிவிட்டால் என்ன செய்யமுடியும்?

மார்ச் 17ம் தேதி திங்கள் கிழமை தன் நாள் குறிப்பேட்டில் இவ்வாறு எழுதினார்: என் குதிரை மிகவும் நொண்டி நடக்க ஆரம்பித்தது அதற்குத் தரையில் கால் ஊன்றக் கூட முடியாத நிலை. இவ்வாறு ஏழு மைல்கள் ஓட்டி வந்ததால் நானும் முற்றிலும் களைப்படைந்துவிட்டேன். சில மாதங்களுக்கு முன் எனக்கு ஏற்பட்ட தலை வலியைவிட இப்பொழுது அதிகமாக வலித்தது.''

அச்சமயத்தில் தான் வெஸ்லி தன் குதிரைக்காக ஜெபிக்க தீர்மானித்தார். இது ஓர் முட்டாள் தனமான காரியத்தான். ஆனாலும் வெஸ்லி அதற்காக ஜெபிக்க வேண்டும் என நினைத்தார். தன் நாள்குறிப்பேட்டில் அதற்காக மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். ''நான் உறுதிபடக்கூறுவது அப்பழுக்கற்ற உண்மை. அது நலம் என்று கண்டால் கணக்கு ஒப்புவிக் கட்டும்.'' தேவன் எவ்வளவு தூரத்திற்கு இதைச் செய்வார் என்று யோசித்தார். எந்த வகையைக் கொண்டாவது தேவன் ஓர் மனிதனையோ அல்லது ஓர் மிருகத்தையோ சுகப்படுத்த முடியாதா? மனித இனத்திற்கு மாத்திரம் அவர் தேவன் அல்ல. சுவாசமுள்ள யாவற்றையும் தேவன் சிருஷ்டித் திருக்கிறார். குதிரைகளையும் கூட எனவே வெஸ்லி தன் குதிரையின் சுகத்திற்காகவும், தன் சொந்த சுகத்திற்காகவும் ஜெபித்தார்.'' உடனே என் களைப்பும், தலைவலியும் நின்று விட்டதுடன், என் குதிரையின் நொண்டும் தன்மையும் அந்நிமிடமே சரியாகி விட்டது. அப்போதிருந்து குதிரை நொண்டி நடக்கவில்லை. இது ஒரு வெகு விநோதமான நிகழ்ச்சி.''

மெதடிஸ்ட் திருச்சபையை தோற்றுவித்தவருக்கு தேவனுக்கு சுகமாக்க முடியும் என்று நம்புவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் தன் குதிரை சுகமடையவதற்காக முதல் முறையாக ஜெபித்ததே எதிர்பாராத ஒன்றாகக் காணப்படுகிறது.

தன் குரலை இழந்த பாஸ்டர்

நீங்கள் ஒருவரின் சுகத்திற்காக ஜெபிக்கும்பொழுது, ஜெபிப்பதை இடையில் நிறுத்திவிடாதீர்கள். ஏனென்றால் எந்த நிமிடத்தில் அவர்களுக்கு சுகம் கிடைக்கும் என்பது உங்களுக்குத் தெரியாது. எனவே ஜெபத்தை விட்டு விடாதீர்கள்.

தன் அனுபவத்தில் இருந்து டான் மில்லர் இன்று மக்களுக்கு இதைத் தான் கூறுகிறார்.

1990ல் டெக்சாய் நகரில் உள்ள பிரன்ஹாம் என்னும் இடத்தில் உள்ள முதல் பாப்த்திஸ்ட் திருசபையின் மூத்த பாஸ்டர் ஒருவருக்கு பாடுவதிலும், பிரசங்கம் செல்வதிலும் மிகவும் விருப்பம் உடையவராக இருந்தார். அவருக்கு அருமையான மனைவி ஜாஸ்லின், கல்லூரிக்குச் செல்லும் வயதில் உள்ள 2 மகள்களும் கொண்ட அருமையான குடும்பம் இருந்தது.

அந்த ஆண்டின் துவகத்தில் ஓர் ஞாயிறு மில்லர் தலைபாரம், மேல்வலி, தொண்டை வலி போன்ற சரீர பெலவீனத்தால் பாதிக்கப்பட்டார். ஆலயத்திற்குச் சென்றபொழுது இரண்டு காலை ஆராதனைகளையும் நடத்தி முடிக்க இயலாத நிலையில் காணப்பட்டார். படுக்க வீட்டிற்குச் திரும்பினார். ஃப்ளு சுரம் என்று முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் பின்னால் அவர் குரல்வளை பயங்கரமாகப் பாதிக்கப்பட்டு வீக்கம் கண்டிருப்பதாகக் காணப்பட்டது. சீக்கிரமே சுகமடையாததால் அதற்கான சிறப்பு மருத்துவரை நாடினார். அங்கு அவர் ஓர் கவலைக்கிடமான செய்தியைக் கேள்விப்பட்டார். ஃப்ளு ஜுரத்திற்காக கிருமி குரல் நாண்களைச் சுற்றி உள்ள மையிலின் என்றும் பாதுகாப்பு உறையை ஊடுருவிச் சென்று குரல் நாண்களை சிதைத்துவிட்டது. எனவே பாஸ்டர் மீண்டும் தன் குரலை பெறுவது கடினம் என்று கூறினார்.

மில்லர் வேறுசில சிறப்பு மருத்துவர்களைப் பார்த்துபின் ஹுஸ்ட்டரில் உள்ள பேபோர் மருத்துவக் கல்லூரியில் உள்ள மருத்துவக் குழுவிடமும்

சென்றார். இவருக்கு ஏற்பட்டிருக்கும் வியாதி மன அழுத்தத்தைச் சார்ந்ததாகக் காணப்படுகிறது. எனவே அவர் திருச்சபைப் பணியிலிருந்து ஆறுமாத காலம் விடுப்புப் பெற்று கொண்டு முற்றிலும் ஓர் அமைதலான சூழ்நிலையில் வாழ்வது நல்லது என்று ஒருவர் கூறினார்.

மில்லரும் அவர் சபையும் இவ்வியாதியிலிருந்து முற்றிலும் விடுதலைபெற ஜெபித்தார்கள். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. அடுத்த ஆறுமாதங்களில் அவருடைய உடல்நிலை மிகவும் மோசமாக மாறியது. மங்கலான பார்வை, சமநிலையில் தடுமாற்றம் போன்ற அறிகுறிகள் காணப்பட்டது. இதனால் வைத்தியர்கள் அவருக்கு நரம்பு சம்பந்தமான பல வியாதிகள் இணைந்தோ அல்லது காக்காய் வலிப்போன்ற வியாதிகளாக இருக்கலாம் என்று கருதினார்கள். ஆனால் ஒன்று நிச்சயம் அவர் ஒரு ஆண்டுக்குள் அல்லது வெகு விரைவில் பாஸ்டர் மில்லர் முற்றிலும் பேச முடியாத ஊமையாகி விடுவார் என்று கூறினார்கள்.

இப்படிப்பட்ட அச்சுறுத்தத்தக்க கண்டுபிடிப்பின் விளைவுகளால் பாஸ்டர் மில்லர் திருச்சபைக்குச் சென்று தன் மூத்த பாஸ்டர் நிலையிலான பணியை ராஜினாமா செய்தார். தன் மெல்லிய குரலில் சபையினரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு தான் முன்பு பணி புரிந்த ஹுஸ்ட்டன் முதல் பாப்டிஸ்ட் திருச்சபைக்குத் திரும்பவும் வந்தார். இங்கு இவருக்காக ஊக்கமாக ஜெபிக்க அதிக நண்பர்கள் இருந்தார்கள்.

பேசுவதற்குத் தேவைப்படாத ஓர் பணியை அவர் தேடவேண்டும். இறுதியாக "சட்டப் பூர்வமாக பத்திரங்களை ஆராய்ச்சி செய்யும் கூட்டமைப்பின் பிரதி நிதியாக" வேலை கிடைத்தது. **(Title Rececrch for a federal agency's legal Department)** ஆனால் சில மாதங்களில் பணியிலிருந்து நீக்கப்பட்டார். அனைத்தும் அவருக்கு எதிராக நிகழ்வதாகவே காணப்பட்டது. மில்லரின் மருத்துவக் காப்பீட்டுக் கழகம் வழங்கிய பாதுகாப்புத் திட்டத்தையும் நிறுத்திக் கொண்ட படியால் மருத்துவர்கள் அவருக்கு சிகிச்சையைத் தொடர்வதை யோசிக்க ஆரம்பித்துவிட்டனர். ஏனென்றால் அவருக்கு வியாதியிலிருந்து விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். பின் அவர் முற்றிலும் இயலாதவராகக் காணப்படாததால் இயலாதோருக்கான உதவித் தொகையும் நிறுத்தப்பட்டது. மாதங்கள் கடந்தன. வருடங்களும் கடந்தன. டான் மில்லர் உளரீதியாக பாதிக்கப்பட்டதுடன், ஆவிக்குரிய வாழ்க்கையிலும் தடுமாறினார். ஆனால், விடாது மக்கள் ஜெபித்துக்கொண்டே இருந்தனர்.

ஒரு நாள் காலை அவர் முன்பு பணிபுரிந்த ஒய்வுநாள் பாடசாலையிலிருந்து அவர்களுக்கு வகுப்பு எடுக்க அழைப்பு வந்தது. அது ஒரு கேலிக் கூத்தான அழைப்பு, அவரால் எப்படிபோக முடியும்? அவருக்கு தாங்கள் ஒரு சிறிய மைக்ரோபோன் கொடுப்பதாகவும், அதை அவர் உதட்டில் வைத்து அழுத்தி பேசினால் அவர் பேசுவது கேட்கும் என்று கூறினார்கள். நண்பர்கள் கொடுத்த ஊக்கத்தைக் கொண்டு, நான் முயற்சி செய்கிறேன்" என்று கூறினார்.

அது 200 பேர் கொண்ட பெரிய வகுப்பு தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தும் பகுதியாகிய சங்.68ஐயும், பின் 103ம் சங்கீதம் "என் ஆத்துமாவை கர்த்தரை ஸ்தோத்தரி அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே அவர் உன் அக்கிரமக்ளை எல்லாம் மன்னித்து, உன் நோய்களை யெல்லாம் குணமாக்கி" (வசனம்2.3) இந்தக் கடைசி பகுதியை வாசிக்கும் பொழுது சற்று நிறுத்தினார். பின் தொடர்ந்து வாசித்தார். "உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு" மீண்டும் நிறுத்தினார். "அழிவுக்கு" (Destruction) என்ற சொல் சில ஆங்கில மொழிபெயர்ப்பில் (NASB) "குழிக்கு" (Pit) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பின் "இந்த வசனம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்று கூறினார். குழிக்குள் இருக்கும் அனுபவம் எனக்கு இருந்தது. இப்படி நாம் அனைவருக்குமே சில வேளைகளில் குழிக்குள் இருக்கும் அனுபவத்தை உணருகிறோம்." ஆனால் நம்மைக் குழியிலிருந்து மீட்கும் கிருபை நிறைந்த தேவன் இருக்கிறார்.

அவர் அந்த "குழி" என்ற வார்த்தையை உச்சரித்தபொழுது அவரது தொண்டையில் ஏதோ இருப்பதுபோல தோன்றியது. மக்கள் அவரை நோக்கிப் பார்த்தார்கள். அவருடைய குரல் சற்று சீரானது போல் காணப் பட்டது. அதை அவரால் நம்ப முடியவில்லை. "என்ன நடக்கிறது என்று எனக்குப் புரியவில்லை... நான் இந்த நிமிடம் சற்று உணர்ச்சிவசப்பட்டு விட்டேன்... என்ன சொல்லுவது என்று எனக்குப் புரியவில்லை."

வகுப்பு முழுவதும் கரகோஷத்தாலும் பின் சிரிப்பொலியாலும் நிறைந்தது. வகுப்பில் உள்ளவர்கள் முன்னுக்கு வந்து அவரைக் கட்டிப்பிடிக்க முற்பட்டனர். அற்புதம் ஒன்று நிகழ்ந்துவிட்டது.

வைத்தியர்களாலும் இது எப்படி நிகழ்ந்தது என்று விவரிக்க முடியவில்லை. டான் மில்லர் தொண்டையில் சதை வளர்ந்து அதன் தழும்பு உயர்ந்து காணப்

பட்டது. அதை வைத்தியர்கள் அவர் ஒவ்வொரு முறை வைத்தியத்திற்குச் சென்றபொழுது படம் எடுத்திருந்தார்கள். ஆனால் அடுத்தமுறை அவர் சென்றபொழுது அந்த தழும்புடன் காணப்பட்டது அதுவும் முற்றிலும் காணப்படாமல் போயிற்று. அவரது கொண்டை முன்பு இருந்ததுபோல் எவ்வித நோயின்றி ஆரோக்கியமாக காணப்பட்டது.

குணமாக்க தயக்கத்தோடு ஜெபித்தவர்

எந்த ஒரு வேத மொழி பெயர்ப்பாளருக்கும் அவர் மொழி பெயர்க்கும் மொழியின் நுணுக்கமான கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வதற்கும், சில சொற்றொடர்களை ஆராய்வதற்கும் அந்த மொழி பேசும் உள்ளூர் உதவியாளர் தேவைப்படுவர். டான் ஷாவுக்கு ஹோகுவானோவையாயோ இருந்தார்.

விக்ளிஃப் வேதாகம மொழிப் பெயர்ப்பாளர்களின் குழுவில் ஒரு உறுப்பினரான ஷா ஓர் பலமொழி வித்தகர். இவர் சாமோ மொழியில் வேதத்தை மொழி பெயர்க்க பாப்புவா நியூ கினியாவுக்குச் சென்றிருந்தார். அவரும் அவர் மனைவியும் தூரமான இடத்தில் உள்ள க்வோபி என்ற கிராமத்திற்குச் சென்று அங்குள்ள வயதான ஆதிவாசியுடன் நட்புக்கொண்டார்கள். ஹோகுவானோபயாயோவுக்கு ஐம்பது வயது இருக்கும். ஆனால் சாமோ இனத்தவரை வைத்து கணக்கிடும்பொழுது அவர் மிக வயதானவராகக் கணிக்கப்பட்டார். அவருக்கு கிறிஸ்தவனாக வேண்டும் என்ற விருப்பம் இல்லாவிட்டாலும் ஷா தம்பதியினரை அவருக்கு பிடித்திருந்ததினால் டான் ஷாவைத் தன் சொந்த சிறிய சகோதரரில் ஒருவராக சுவிகாரம் செய்து கொண்டார். சாமோ மொழியை திறம்படக் கற்றுக்கொள்ள அவருக்கு உதவியும் செய்தார்.

டான் தன் சொந்த நாட்டிற்கு விடுமுறைக்குச் சென்று பின் மீண்டும் இரண்டாம் முறையாக பாப்புவாவுக்கு வந்தபொழுது ஹாக்குவோனோ பையாயோ மிகவும் வியாதிப்பட்டு இருப்பதாகக் கேள்விப்பட்டார். தன் நன்பனுடைய சுகவீனத்தைக் குறித்து கவலைப்பட்டதோடு அவரில்லாமல் குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் மொழி பெயர்ப்பை முடிக்க பிரச்சனை ஏற்படும் என்றும் வருத்தப்பட்டார்.

டான் வெளிநாடு சென்றிருந்தபொழுது ஹாக்குவானோபயாயோ தான்

சுகமடைய பல வழிகளில் முயற்சி செய்தார். அவர் குடும்பத்தினர் முழு இரவு பூசை செய்து ஆவி உலகுடன் தொடர்பு கொண்டு தங்கள் மூதாதையரின் ஆவிகள் மூலம் என்ன செய்யலாம் என்ற வழிமுறைகளை அதிக முயற்சி செய்தனர். ஆனால் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. "நான் இந்த சுக வீனமான நிலையில் எப்பொழுதும் படுத்திருக்கும் இடத்திலேயே படுத்திருந் தால், ஆவிகளுக்கு அந்த இடம் நன்றாகத் தெரியும். எனவே நான் தூங்கிக் கொண்டு இருக்கும்பொழுது அவை என்னைத் தாக்கக்கூடும்" என்று நினைத்து தன் படுக்கையை வெவ்வேறு இடங்களுக்கு அவர் மாற்றிக் கொண்டு இருந்தார். ஆவிகளை வசீகரிக்க எண்ணி, அந்த கிராமத்தார் அனைவரும் இராமுழுவதும் குடித்துக் களியாட்டம் ஆடினர். எவ்வித பலனும் இல்லை.

மிஷனரி ஷா மீண்டும் அக்கிராமத்திற்கு திரும்பி வந்தபொழுது தான் வைத்திருந்த வழக்கமாக பயன்படுத்தும் மேற்கத்திய மருந்துகளை அவருக்குக் கொடுத்தார். அதிலும் ஒரு பலனும் இல்லை. கிராம மக்கள் ஹோக்வானோபையாயோ பற்றி பேசும்பொழுது கடந்த காலத்தில் வாழ்ந்த ஒருவர் எனக் கருதியே பேசினார்கள். நம்பிக்கையில்லாதவர்களாக அவன் சமுதாய சம்பிரதாயப்படி அவரை இறந்து போனவராகவே கருதினர்.

டான் ஷா வேத பகுதிகளை மொழிபெயர்க்கும் பணியை அவருடைய உதவியுடன் தொடர்ந்து செய்துகொண்டு இருந்தார். ஹோன்வானோபயா யோவும் இம்மொழி பெயர்பிற்கு தன் சாமோ மொழியில் காணப்படும் அனைத்து நுணுக்கமான அர்த்தங்களையும் மொழிபெயர்க்க உதவி செய்தார். யோவா. 5:1–15ல் வாசிக்கும் பெதஸ்தா குளத்தின் அருகாமையில் படுத்திருந்த வியாதியஸ்தனை சுகமாக்கும் கதையை மொழிபெயர்த்துக் கொண்டிருக்கும் பொழுது அவனுடைய உதவி தேவைப்பட்டது. வியாதியினால் மரித்துக் கொண்டிருக்கும் அந்த சாமோ ஆதிவாசியிடம் அந்தக் கதையை வாசித்து அவருடைய உதவியை நாடினார். திடீரென ஹோக்வானோபயாயோ "அந்த மனிதன் நான்தான், நான்தான்" என்று சத்தமிட்டார்.

மிஷனரி "என்ன சொல்லுகிறாய்" என்று கேட்டார். வியாதிப்பட்டிருந்த அந்த ஆதிவாசி "அந்த மனிதன் தன் வியாதி நீங்க பலவிதங்களில் முயற்சி செய்து பார்த்தான். அவன் நீண்ட நாட்கள் வியாதியஸ்தனாய் இருந்தான். அதற்குமேல் ஒன்றும் செய்ய இயலாதவனாக இருந்தான். அதை நீர் அதை

வைக்கிறீரா?" என்று கூறினான். பின் சிறிது நேர நிசப்தத்திற்குப்பின் "இயேசு என்னை குணமாக்க முடியும் என்று நீர் நினைக்கிறீரா" என்று கேட்டான்.

டான் ஒரு பல்மொழி வல்லுனர், கவி அறிஞர் அல்ல. அந்தக் கேள்வி அவரை சங்கடத்திற்குள்ளாக்கியது. "ஆம் இயேசுவால் உன்னை குணமாக்க முடியும். அவரால் முடியும். அவர் செய்வார்" என்று பொதுவாக பதில் சொன்னார். சிறிது இடைவெளிக்குப்பின் அந்த ஆதிவாசி "என்னை குணமாக்க வேண்டும் என்று நீ இயேசுவிடம் ஜெபி" என்றான். டானுக்கு மிக சங்கடமாகிவிட்டது. ஹோருக் வாலோபபோயியைப் பார்த்து ஒர் சாவேஜ கிறிஸ்தவனை அழைத்து வந்து ஜெபிப்போமா என்று டான் கேட்டார்.

"இல்லை நீ தான் என் சிறிய சகோதரன். நீ தான் இயேசுவிடம் என்னை குணமாக்க அவரிடம் ஜெபிக்க வேண்டும்" என்று சட்டென்று பதில் வந்தது.

இது சங்கடமான, பழக்கமில்லாத ஜெபமாக இருந்தாலும் டான் ஜெபித்தார்.

"அன்பின் பிதாவே, இதோ என் சகோதரன் நீர் அவனை குணமாக்க வேண்டும் என்று விரும்புகிறான். பெதஸ்தா குளத்தில் இருந்த அந்த வியாதி யஸ்தனை நீர் குணமாக்கியதுபோல உம்மால் அவனை குணமாக்க முடியும் என்று விசுவாசிக்கிறான். இப்பொழுதே நீர் அவனை குணமாக்க வேண்டும் என்று ஜெபிக்கிறோம்" என்று ஜெபித்தார்.

பின் டான் தன் வீட்டிற்குச் சென்றுவிட்டார். ஹோருகுவாலோபபோயி யின் உடல்நிலையில் உடனே எந்தவித மாற்றமும் ஏற்படாததால் தன் நண்பனுக்காக தவறாக ஜெபித்துவிட்டோமோ என்று எண்ணினார். பின் இரண்டு மூன்று நாட்கள் கழித்து அந்த கிராமத்து சிறுவர்கள் சிலர் டான் வீட்டிற்கு ஓடிவந்து "வந்து பாருங்கள்" என்று ஆச்சரியப்பட்டுக் கூறினார்கள். ஹோருகுவாலோபபோயி எழுந்து சுற்றிலும் நடக்கிறார்! நீங்கள் ஜெபித்தீர்கள் இயேசு அவரை குணமாக்கினார் என்று எல்லோரிடமும் கூறிக்கொண்டு இருக்கிறார்" என்று சொன்னார்கள்.

அந்த மாதத்தில் முதல் தடவையாக அந்த மனிதன் நடப்பதை ஹோருகு வாலோபபோயியின் வீட்டிற்கு சென்றபோது பார்த்தார்.

"நீ சுகமடைந்தது நீ கடைசி முறையாக எடுத்த மருந்தின் விளைவு இல்லை என்று நிச்சயமாக நம்புகிறாயா" என்று அந்த விஞ்ஞான அறிவு படைத்த டான் அவனிடம் கேட்டார்.

ஹோகுவானோயோயி ஓர் நடை குச்சியை எடுத்து அதை டானின் விலாவிற்கு இடையே நிறுத்தி "நீ ... விசுவாசிக்க ... வில்லையா" என்று மெதுவாகக் கேட்டார்.

அந்த மிஷனரி தன் சந்தேகத் தன்மையை உணர்ந்தவராய் வெட்கமடைந்து கண்களில் நீர் மல்க "ஆம் விசுவாசிக்கிறேன்" என்று கூறினார்.

அந்த இளைஞனான மொழிபெயர்ப்பாளரை அந்த வயதான சாமோ ஆதிவாசியிடம் "நீர் ஜெபிக்குமுன்னால் நான் வியாதிப்பட்டவனாய் இருந்தேன். ஆனால் நீர் ஜெபித்தபின் இயேசு என்னை குணமாக்கினார் என்றான்."

உன்னால் முடியாது என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவள் செய்தாள்

அவள் உயர்நிலை பள்ளியில் படித்துக்கொண்டு இருக்கும்பொழுது அவளுடைய உடல் நிலை படிப்படியாக குறையத் துவங்கியது. பார்பராகும்முங்க்கி மிகவும் சுறுசுறுப்பான இளம்பெண். உயர்நிலைப்பள்ளியின் பாடகரின் வாத்தியக் குழுவிலும், திருச்சபையின் வாலிபர் இயக்கத்திலும், பள்ளியின் உடற்பயிற்சிக் குழுவிலும் மிகவும் உற்சாகத்துடன் பங்கேற்றாள்.

ஆனால் திடீரென "என்ன நடக்கிறது என்று விளங்கிக் கொள்ளாத சில நிகழ்வுகள் என் வாழ்க்கையில் நிகழ்ந்தது" என்று அவள் கூறுகிறாள். படிக்கட்டுகளில் இறங்கும்பொழுது தவறாக இடறினதாலோ, அல்லது பறந்து கொண்டிருக்கும் பறக்கும் வளையங்களை ஜிம் வகுப்பில் தவறவிட்டதாலும் அவை நிகழவில்லை. கண்பார்வை வெகுவிரைவில் பாதிக்கப்பட்டு பொருட்கள் எல்லாம் இரட்டை, இரட்டையாகத் தோன்ற ஆரம்பித்தது. வெகு விரைவில் பிடித்து நடப்பதற்கான கால் பிடிப்பு சாதனங்களையும், கைகள் பிரண்டு, வளையாமல் இருக்க கைபிடிப்பு சாதனங்களும் அவளுக்குத் தேவைப்பட்டது. என்ன வியாதி அவளைப் பாதித்துள்ளது என்பதைக் கண்டறிய தொடர்ந்து பல சோதனைகள் நடத்தப்பட்டது. இறுதியில் வைத்தியர்கள் அவளை நோக்கி "பார்பரா நீ வெகுவிரைவில் பரவக்கூடிய நரம்பு வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கிறாய். வைத்தியம் ஒன்றும் செய்யமுடியாது" என்று

கூறினார். "வயது ஆக ஆக கை, கால்களை உபயோகிக்க முடியாத அளவிற்கு நாய்கள் பாதிக்கப்படும்" என்றும் கூறினார்.

டாக்டர்கள் முன்னறிவித்தபடியே வியாதி அதிகரித்தது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இருமுறை அவளை மரிக்கும் நிலையில் மருத்துவமனைக்கு அவசர அவசரமாக அழைத்துச் செல்ல நேர்ந்தது. சில சமங்களில் வியாதி அதிகரிக்காமல் ஸ்திர நிலையில் இருக்கும். ஆனால் திடீரென்று தீவிரமாக அதிகரிக்கும். முடவர்கள் நடக்க உபயோகிக்கும் ஊன்றுகோலை உபயோகிக்கத் துவங்கினாள். மூச்சு விடுவதற்கும் சிரமப்பட்டாள். சீக்கிரத்தில் அவளுக்கு சிறுநீரை வெளியேற்றும் குழாயும், குடலறுவை சிகிச்சையும் தேவைப்பட்டது. உடலின் வேதனை அதிகரித்ததால் வலியைக் குறைக்கும் கவசத்தையும் அளித்திருந்தாள். அந்த கவசம் மார்பு பகுதியில் மாட்டப்பட்டு, திடீரென வலி அதிகரிக்கும்பொழுது அதைத் தாங்கிக் கொள்ள உதவி செய்யும்.

பார்பாரவுக்கு இருபத்து எட்டு வயதான நிலையில் சக்கர நாற்காலியும், தொடர்ந்து மூச்சுவிடுவதற்கு பிராணவாயுவும் தேவைப்பட்டது. அவருடைய உதரவிதானம் பாதிக்கப்பட்டதால் வியாதியை தடுத்து கட்டுப்படுத்த அளவு மாயும் ஆகையால் "மேயோ மருத்துவமனை" இனி தங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று கைவிரித்துவிட்டனர். அவர்கள் கூறிய ஆலோசனை என்ன? இப்படி நிலைமை மோசமாகிக் கொண்டே போகும் நிலையில் அது தொடர்ந்து பரவாமல் இருக்க அவள் ஜெபிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறினார்கள்.

"ஜெபிக்கவா" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள். அவள் சிறு பிராயத்தி லிருந்தே ஓர் நல்ல கிறிஸ்தவளாகத்தான் இருந்தாள். ஆனால் ஜெபிப்பதை விட்டுவிட்டாள். சில சமயங்களில் ஏன் எனக்கு இந்த கஷ்டம் என்று ஆண்டவரிடம் கேள்விகள் கேட்பாள். "துவக்கத்தில் கோபப்படுபவளாகவும், எதிர்க்கும் மனப்பான்மை உடையவளாகவும் இருந்தேன்" என்று அவள் ஒத்துக்கொண்டாள்.

ஆனால் இப்பொழுது அவள் ஜெபிக்க ஆரம்பித்தாள். தயவுசெய்து, தயவு செய்து தேவனே! "உம்முடைய வசனங்களை என்னால் வாசிக்கக்கூட முடியவில்லை. நான் ஏதாவது செய்தாகவேண்டும்" என்று கூறினாள். "ஆம் நீ ஏதாவது செய்ய முடியும் மற்றவர்களுக்காக ஜெபி" என்று தேவன் கூறுவதுபோல இருந்தது.

எனவே பார்பரா பிறருக்காக ஜெபிக்க ஆரம்பித்தாள். இப்பொழுதும் அவளால் செய்யக்கூடியது இது ஒன்றுதான். சிநேகிதிகள் அவளைப் பார்க்கவரும்பொழுது என்னோடுகூட ஜெபியுங்கள் என்று கேட்டுக் கொள்வாள். அவளும் அவர்களுக்காக ஜெபிப்பாள்.

தொடர்ந்து அவள் நிலை மோசமாகிக்கொண்டே வந்தது. அவளுக்கு முப்பது வயதாகியபொழுது மருத்துவ ரீதியாக அவள் தன் பார்வையை இழந்தாள். சுவாசக்குழாயில் அதிக அளவு பிராணவாயு செல்லுவதற்கு மூச்சுக்குழல் அறுவை சிகிச்சை அவளுக்குத் தேவைப்பட்டது. அவளுடைய முக்கிய உறுப்புகள் அனைத்தும் சரிவர இயங்க உபசாதனங்கள் தேவைப்பட்டது. "நான் செத்துக்கொண்டிருக்கிறேன்" என்று எல்லோருக்கும் தெரியும் மருத்துவரும் அதை உறுதிப்படுத்தினார்கள் என்று பார்பரா கூறினாள்.

இவ்வாறு பார்பரா சரீரப்பிரகாரமாக மோசமான நிலையை அடைந்து கொண்டிருந்தபொழுது அவளுடைய உள்ளான ஆவிக்குறிய நிலையில் பலமுள்ளவளாக வளர்ந்தாள். மருத்துவமனையில் உள்ள மருத்துவர்களும், செவிலியர்களும என்னைப் பார்த்து "என்னுடைய பாரங்கள் எல்லாவற்றையும் ஆண்டவர் மேல் வைத்து விடமுடிகிறது" என்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்.

இந்நிலையில், அடுத்த ஆண்டு சிகாகோவில் உள்ள வானொலி நிலையத்தின் சிறப்பு நிகழ்ச்சியின்பொழுது நேயர்களைப் பார்த்து பார்பராவுக்காக ஜெபிக்கவும், கடிதம் எழுதவும். ஓர் வேண்டுகோள் விடுத்தனர். மக்கள் அவருக்காக ஜெபிக்கிறார்கள் என்று சுமார் 450 கடிதங்கள் அவள் வரம்பெற்றாள்.

1981ம் ஆண்டு ஜுன் மாதம் 7ம் நாள் ஓர் ஞாயிறு அன்று அவளுடைய இரு சிநேகிதிகள் நேயர்களிடம் இருந்து வந்த கடிதத்தை அவளுக்கு வாசித்துக் காண்பித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது "பார்பரா எழுந்து நட" என்று கூறும் ஓர் அமைதலான மெல்லிய சத்தம் அவளுக்குக் கேட்டது.

அவள் தன் சிநேகிதிகளைப் பார்த்து: "இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் தேவன் இப்பொழுது தான் என்னிடம் எழுந்த நட" என்று கூறினார் என்றாள்.

ஆனால் அந்த சத்தத்தை அவர்கள் கேட்கவில்லை. என்ன மதிமயங்கி விட்டாளா? என்று நினைத்தார்கள்.

"என் பெற்றோரை அழைத்து வாருங்கள்" என்று பார்பரா அவர்களைத் துரிதப்படுத்தினாள்.

அவளுடைய பெற்றோர் அறைக்குள் நுளைவதற்குமுன் பார்பரா தனக்கு சுவாசிப்பதற்கு சென்று கொண்டிருந்த பிராணவாயு குழாயின் இணைப்பை களற்றி எறிந்துவிட்டு, மூடியிருந்த எல்லா போர்வைகளையும் தூக்கி எறிந்துவிட்டு "நான் நீண்ட பெருமூச்சுவிட்டேன். நான் என் பாதங்களை முன்னால் அடி எடுத்து வைத்து... பின் நடந்தேன்" என்று கூறினாள்.

பார்பரா தன் பெற்றோரை முன் அறையிலே சந்தித்துவிட்டாள். என்ன மாபெரும் கொண்டாட்டம், "படுக்கையிலிருந்து குதித்தெழுந்தது அற்புதம்" என்று தன் கடந்த காலத்தை நினைத்துக்கூறினாள். நான் குதித்து எழுந்ததை இன்னும் ஓர் படி மேலான காரியத்தையே செய்தேன். பாலே என்னும் குழு நடனத்திற்கான அடிகளை எடுத்து வைத்தேன். மற்ற எல்லோரும் அப்படி அடியெடுத்து வைக்க முயற்சித்தார்கள்.

ஓர் கைதேர்ந்த மருத்துவத் தொழில் புரிந்த அவள் சிநேகிதி ஒரு முறை கூறினார். "பார்ப் உன்னால் முடியாது" என்று பார்பரா சுகமானபின் அவளைப் பார்த்து "நான் மருத்துவக் கல்லூரியில் கற்ற அனைத்தையும் நீ தகர்த்து எறிந்துவிட்டாய். இப்பொழுது நீ முற்றிலும் சுகமாகிவிட்டாய்" என்று கூறினாள்.

அடுத்தநாள் அவள் தன் மருத்துவரின் அலுவலகத்திற்குச் சென்றாள். "அவள் நடந்து அறைக்குள் வருவதைப் பார்த்து, பார்பரா போன்ற தோற்ற முடையவர் அவளைப் போல் உடை அணிந்து வருகிறாள் என்று வேடிக்கை யாக நினைத்துக்கொண்டேன் என்னால் நம்பமுடியவில்லை என்று அந்த வைத்தியர் சில நாட்கள் கழித்துக் கூறினார். அவள் நுரையீரல்கள் சரியான நிலையில் இருக்கிறது என்று எக்ஸ்ரே காண்பித்தது. கழுத்தில் இருந்த குழாயையும், சிறுநீர் செல்லும் குழாயையும் அகற்றிவிட்டார். கொடிய நரம்பு பாதிப்பு நோயிக்கான அறிகுறிகள் ஒன்றுமில்லை. அதை உறுதிப்படுத்த பிற மருத்துவர்களையும் அழைத்து அதை உறுதிப்படுத்தினார்."

"கொடிய நரம்பு பாதிப்பு நோயை எந்தவித மருத்துவ ரீதியாக எவ்விதத் திலும் குணமாக்கமுடியாது. ஆனால் இந்த நோயாளிக்கு அந்த பயங்கரமான

நரம்பு சம்பந்தமான நோய் இல்லை. சாதாரணமாக நடக்கிறாள், பேசுகிறாள். வெளிப்படையாக அனைவரும் அறிந்துள்ளபடி ஜெபத்திற்கு கிடைத்தபதில், தேவனின் அன்புக்கரம் அவள் வாழ்க்கையில் இடர்ப்பட்டதால் அவள் குடும்பத்தினர் எவ்வாறு மகிழ்ச்சி அடைந்தார்களோ அதேபோன்று அவளும் மகிழ்ச்சியாய் இருக்கிறாள்" என்று அவளுடைய அறுவை சிகிச்சை வைத்தியர் சுருங்கக் கூறினார்.

1980களில் இந்த அற்புதம் நிகழ்ந்தது. இரண்டு ஆண்டுகளுக்குப்பின் அறுவை சிகிச்சை தொழில் நுறப்க் கலையில் பட்டம் பெற்று இன்று ஓர் பாஸ்டரின் மனைவியாக வெர்ஜீனியாவில் வசித்து வருகிறாள்.

மரித்த கெவ் சோஎன் உயிரோடு எழுந்த நிகழ்ச்சி

மூன்று ஆண்டுகள் நோய்வாய்ப்பட்டு இருந்த கெவ் சோஎன் நாற்பது வயது நிரம்பியவராக இருந்தாலும் வியாதியின் கொடுமையாய் 70 வயது மதிக்கத்தக்கவராய் தளர்ந்து காணப்பட்டார். அவரைப் பாதித்துள்ள நோய் என்னவென்று தெரியாத நிலையில் மிக மோசமான நிலைக்குப் போய்க் கொண்டிருந்தார். காலப்போக்கில் படுத்தப்படுக்கையாகி, உறுப்புகள் அனைத்தும் செயலிழந்த நிலைக்குச் சென்றார்.

அவர் மனைவி ஜன் மோன் தன் கணவன் சீக்கிரமாய் இறந்துவிடுவார் என்று நன்கு அறிந்திருந்தாள். எனவே 1993 நவம்பர் மாதக் கடைசியில் அவர் இறந்தது எதிர்பார்த்த காரியம் என்பது அவளுக்குத் தெரியும். தன்னால் முடிந்த அளவிற்கு அவனைக் காப்பாற்ற முயற்சி செய்தாள். மூலிகை மருத்துவம், மாந்திரீகம் மூலம் வைத்தியம் செய்தும் அவன் கணவரைக் காப்பாற்ற முடியவில்லை.

துக்கம் தொண்டையடைக்க ஜன்மோன் கண்ணீர்விட்டு அழுதாள் ஃனோம் பென் கம்ரோடியாவில் உள்ள ஓர் மாவட்டம், அதின் விரிவாக்கப் பகுதியில் உள்ள சேரிப் பகுதியிலிருந்து வீடுகளில் கூடி ஆராதிக்கும் திருச்சபையிலிருந்து ஓர் குழுவினர், அருகாமையுள்ளவர்கள் மூலமான இருவாரங்களுக்கு முன் அவளை சந்தித்தனர், அவள் வாழ்க்கையில் நம்பிக்கையில் ஒளி ஏற்பட்டிருந்தது. அவர்கள் நற்செய்தியை அவளிடம் பகிர்ந்திருந்தார்கள். அவர்கள் கூறிய நற்செய்தியின் மூலமாக இயேசு

கிறிஸ்துவின் மூலமாய் கிடைக்கும் நித்திய ஜீவனின் மீது நம்பிக்கை உடையவர்களாய் அவளும், அவள் சகோதரியும் ஆவலுடன் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

இப்பொழுது அவள் கணவன் இறந்துவிட்டான். புத்தமத தலைவர், இரு புத்த துறவிகளுடன் அவள் வீட்டிற்கு வந்தார். இறந்த அந்த சரீரத்தை கவனமாக ஆராய்ச்சி செய்தார். அவர் இறந்த பல சடலங்களைப் பார்த்த அனுபவம் இருந்தபடியால், அதற்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்துவிட்டு, "சவத்தை எரிப்பதற்காகவும், சவப்பெட்டி செய்வதற்காகவும் பலகைகள் தேவை என்று தரையில் போட்டிருந்த பலகைகளை எடுக்கிறோம்" என்று எடுத்துச்சென்றார்கள்.

புத்த துறவிகள் வெளியே போனபின் ஜுன்மோனைப் பார்க்க வேறு சிலர் வந்தார்கள். அதாவது இரு வாரங்களுக்குமுன் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறிய குழுவிலிருந்த ஒரு பெண் வந்திருந்தாள். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறார். மரணத்தின்மீது இயேசு கிறிஸ்துவுக்கு அதிகாரம் உண்டு என்றும் கூறினாள்.

அந்தப் பெண் கூறிய அந்தப் பகுதியை அவளும் அவள் சகோதரியும் இரவில் மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் வாசித்தார்கள். லாசருவை உயிரோடு எழுப்பிய கதையில் இப்பகுதி வருகிறது. ஜுன்மோன், விறைத்திருந்த தன் கணவனின் சடலத்திற்கு அருகே முழங்கால் படியிட்டு "இயேசுவே என் நம்பிக்கை இப்பொழுது உம்மீது இருக்கிறது உம்மையன்றி எனக்கு வேறே நம்பிக்கை இல்லை. என் கணவன் இறந்துவிட்டார். நீர் என் கணவனுக்கு உயிர் கொடுத்தால் எஞ்சியுள்ள என் வாழ்நாள் முழுவதும் உமக்காக உழைப்பேன்" என்று ஜெபிக்க ஆரம்பித்தாள்.

மூன்று மணி நேரம் அவளும், அவள் சகோதரியும் ஜெபித்தார்கள். அப்பொழுது அதிகாலை 3 மணி அளவில் கெவ்சோஎன் எழுந்து நேராக உட்கார்ந்து கொண்டு, உரத்த சத்தமாய் "நான் உயிரோடு இருக்கிறேன்" என்று கத்தினார். இரு பெண்களையும் பயம்பிடித்துக்கொண்டது.

எனக்கு பசிக்கிறது என்று அவன் கூறியவுடன் ஜுன்மோனின் சகோதரி ஒரு அரிசிக் கஞ்சியைக் கொண்டுவந்து கொடுக்க அவன் அதைச் சாப்பிட்டான். "நான் இங்கிருப்பது எனக்கு எப்பொழுதும் சந்தோஷம்" என்று கூறினான்.

ஜன் மோன் வெளியே ஓடி அதிகாலை 3 மணிதான் ஆகிறது என்பதையும் பொருட்படுத்தாமல் அருகாமையில் உள்ள கதவுகளைத் தட்டி "என் கணவன் உயிரோடு இருக்கிறார். அல்லேலூயா" என்று கூச்சலிட்டாள்.

உயிரோடிருக்கும் கெவ் வைப் பார்ப்பதற்கு காலை 6 மணி அளவில் அருகாமையில் உள்ளவர்கள் கூடினார்கள். சுத்தமான காற்றைச் சுவாசிக்க, அவன் வெளியே சென்றான். அப்பொழுது அருகாமையில் உள்ளவர்கள் "அவன் ஆவி நம்மைப் பிடிக்க வருகிறது" என்று பயந்து ஓடினார்கள்.

இயேசு கிறிஸ்துவைப் பற்றி முதல் முறை கூறிய அந்த கிறிஸ்தவப் பெண் மீண்டும் மறுநாள் காலையில் வந்து நற்செய்தியை ஜன்மோன் கணவனிடம் பகிர்ந்து கொண்டாள். உடனே அவன் தன் வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தான்.

ஓர் சிறிய திருச்சபைக் கூடுகை அவர்கள் வீட்டில் கூட ஆரம்பித்தது. ஜன்மோன், கெவ் சோஎன் ஆகிய இருவரின் நற்சாட்சியினால், சில மாதங்களில் அருகாமையில் உள்ள முப்பத்து இரண்டுபேர் ஆராதனையில் கலந்து கொண்டனர். திட காத்திரமும், தேக ஆரோக்கியமும் உடைய கெவ் சோஎன் தொடர்ந்து தேவனுடைய கிருபைக்கும், வல்லமைக்கும் ஓர் நடமாடும் சாட்சியாக ஜீவித்தான்.

எங்களால் உன்னை விட்டுக்கொடுக்க முடியாது

மார்டின் லூதர் தன்னுடைய தீவிரச்செயல்களால் உலகையே மாற்றியமைத்தார் எனக் கூறலாம். இவ்வாறு ஏற்பட்ட புராட்டஸ்டெண்ட் சமய சீர்திருத்தம் மக்களிடையே நம்பிக்கைக்கு ஓர் புதிய விளக்கத்தையும், மக்களிடையே புத்தெழுச்சியையும் கொடுத்ததோடு, ஐரோப்பிய வரைபடத்தையும் மாற்றி அமைத்தது. அவளுடைய நண்பரும், வேறு ஒரு சபையைச் சேர்ந்தவருமான ஃபிலிப் மெலங்கத்தோனின் உதவியின்றி இவ்வளவு பெரிய மாற்றத்தை லூதரால் சாதித்திருக்கமுடியாது.

இருவரும் துரதிஷ்டவசமாக எதிரும் புதிருமான ஜோடி. லூதர் தைரியசாலியாகவும், விரும்பத்தக்க பழக்கங்கள் அற்றவராகவும், சைனாக் கடையில் வைக்கப்பட்டுள்ள ஓர் முரட்டுக் காளை போலும் காணப்பட்டார். தன் கருத்துக்களை முழக்கமிட்டுக்கூறுவார். ஆனால் மெலஸ்க்த்தோன்

சமாதானத்திற்கானவைகளை பலவிதங்களில் முயற்சி செய்பவருமாகக் காணப்பட்டார். மேலும் மெலஸ்த்தோன் நொறுங்கி சிதறிக்கிடக்கும் சிறு சிறு துண்டுகளைப் பொறுக்கி அவற்றை பசைவைத்து ஒட்டி பழைய உருவத்திற்குக் கொண்டுவர முயற்சிப்பார். "நான் முரடன், புயல்போல் சீற்றம் கொள்பவன், சண்டைபோடும் தன்னை உடையவர், கணக்கற்ற கொடிய மிருகங்களுடனும், பேய்களுடனும் இங்கு நான் போராடுவதற்காக இருக்கிறேன். ஆனால் மாஸ்டர் ஃபிலிப்பஸ் மென்மையாகவும், அமைதலாகவும், பண்புடனும் விதை விதைத்து, தண்ணீர் பாய்ச்சுவார்" என்று லூதர் ஒரு முறை கூறியிருக்கிறார்.

லூதரைப் போன்ற புராட்டஸ்டெண்ட் சமய இயக்கத்தை சிரத்துமுறையில் உருவாக்குவதற்கு பலமுறைகளில் செயல்பட்டிருக்கிறார். லூதர் தன் சொற்பொழிவைக் கேட்பவர்களிடம் சவால் விடுவார். ஆனால் மெலன்கத்தோன் அவர்களை கட்டாயம் ஏற்றுக்கொள்ளும்படி செய்வார். லூதரின் போதனைகளில் காணப்பட்ட குறைகளை நிவிர்த்தி செய்து, அதை அதிக அளவில் சீர்ப்படுத்தி ஆக்ஸ்பர்க் அறிக்கையை எழுதியவர் மெலன்கத்தோன் தான்.

சமய சீர்திருத்தத்தின் துவக்க நாட்களில் குறைந்த நண்பர்களே அவருக்கு இருந்தனர். அவருடைய சூழ்நிலைகளும் இக்கட்டாகக் காணப்பட்டன. இந்த பெலவீன நேரத்தில் தனக்கு உதவிசெய்யும்படி பல மணி நேரங்கள் ஜெபித்தார். அவர் தன் அறையிலிருந்து வெளிவரும்பொழுது "நாம் வெற்றி பெற்றுவிட்டோம். நாம் வெற்றி வெற்றுவிட்டோம் என்று தன் இரு கரங்களையும் உயர்த்திக் கூறினார்."

இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் இதுவரை எந்தவித நம்பிக்கையான விடுதலைச் செய்தி வெளிவரவில்லை. ஆனால் வெகு விரைவில் பேரரசர் ஐந்தாம் சார்லஸ் சமயச் சகிப்புத்தன்மை அறிக்கையை ஜெர்மனியில் வெளியிட்டார். இது லூதர் தரப்பினருக்கு ஓர் மாபெரும் வெற்றியைத் தந்தது.

அதன்பின் சமய சீர்திருத்தம் சூடுபிடித்து வளர்ந்துகொண்டு இருக்கும் நிலையில் மெலன்கத்தோன் மரிக்கும் தருவாயில் இருக்கிறார் என்று லூதர் கேள்விப்பட்டு தன் நண்பனோடு தங்கும்படி விரைந்து சென்றார். அங்கு அவர் மிக மோசமான நிலையில், எந்த நிமிடமும் மரணம் அவரைச் சந்திக்கலாம் என்ற நிலையில் இருந்தார்.

மெலங்கத்தோன் கண் விழித்து தன்னைப் பார்க்க வந்திருப்பவரின் முகத்தைப் பார்த்தார். "ஓ! லூதர், நீயா? நான் சமாதானத்துடன் இவ்வுலகை விட்டுச் செல்ல ஏன் என்னை அனுமதிக்கக்கூடாது?" என்று மெல்லிய குரலில் கேட்டார்.

"ஏனென்றால் இன்னும் எங்களால் உன்னை விட்டுக் கொடுக்கமுடியாது" என்று உறுதியாகக் கூறி முழங்கால் படியிட்டு தன் நண்பனின் சுகத்திற்காக சுமார் ஒரு மணிநேரம் ஜெபித்தார். பின் அவர் படுக்கையில் உட்கார்ந்து தன் கையோடு அவர் கையைக் கோர்த்துக்கொண்டார்.

என் அன்பான லூதரே, நான் இந்த உலகைவிட்டு சமாதானத்துடன் செல்ல ஏன் விடமாட்டேன் என்கிறாய்" என்று மீண்டும் மெலங்கத்தோன் கூறினார்.

"இல்லை, இலை இன்னும் எங்களால் உன்னை விட்டுக் கொடுக்க முடியாது" என்று லூதர் மீண்டும் கூறினார். பின் சூப் கொண்டுவரும்படி கூறி, அது வந்தவுடன் அதை அவருக்குக் கொடுக்க ஆரம்பித்தார். மெலங்கத்தோன் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தார். "லூதர் ஏன்? என்னை என் வீட்டிற்குப் போய், அங்கு ஓய்வு எடுக்க ஏன் விடமாட்டேன் என்கிறாய்" என்று மெல்லிய குரலில் மீண்டும் கேட்டார்.

ஏனென்றால், உன்னை இன்னும் எங்களால் விட்டுக்கொடுக்கமுடியாது. ஃபிலிப் "இந்த சூப்பைக் கூடி, இல்லாவிட்டால், இல்லாவிட்டால்..." என்று லூதர் மிகவும் ஆணித்தரமாகக் கூறினார். "நீ குடிக்காவிட்டால் உன்னை திருச்சபையிலிருந்து விலக்கி வைத்துவிடுவேன்" என்று லூதர் வேடிக்கை யாகக் கூறினார்.

தன் பழைய நண்பன் தன் வேதனையிலிருந்து வெளிவர இவ்வித வேடிக்கையாகக் கூறினார் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் அது கிரியை செய்தது. மெலன்க்த்தோன் சூப்பைக் குடித்தார். வெகுவிரைவில் பெனடைந்தார். லூதர் தன் வீட்டிற்குச் சென்று தன் மனைவியிடம் "தேவன் என் ஜெபத்தைக் கேட்டு என் சகோதரனை எனக்குத் தந்தார்" என்று கூறினார்.

1546ம் ஆண்டு லூதர் மரித்தபின், ஃபிலிப் மெலன்க்த்தோன் சமய சீர்திருத்த இயக்கதின் தலைவரானார். லூதர் மரித்து 14 வருடங்களுக்குப் பின் தன் 63வது வயதில் ஃபிலிப் மெலன்க்த்தோன் மரித்தார்.

"ஐ ஹெச் ஓ பி" க்குப் போ

அன்றைய தினம் கனெக்டிகட் நெடுஞ்சாலையில் இர்வின் கிங் என்ற காரோட்டி மாத்திரம் சோர்வுற்று காணப்படவில்லை. நிச்சயமாக அநேக காரோட்டிகளில் அவரும் ஒருவராகத் தான் இருந்திருப்பார்.

தான் ஓர் சாதாரணக் காரியத்திற்காகத் தான் போகிறோம் என்று நினைத்தார். சில மாதங்களுக்கு முன் அவருக்கு 50 டாலர் மதிப்புகள் ஓர் பரிசுக் கூப்பன் என்ஃபீல்ட், கனெக்டிக்கட்டில் உள்ள ஓர் விளையாட்டுப் பொருட்கள் விற்கப்படும் கடைக்குக் கொடுக்கப்பட்டது. எனவே இரு மாநிலங்களுக்கு இடையேயான சாலை 91ன் வழியாக தன்வீடு இருக்கும் மாநிலமான மாசாசூசெட்டிலிருந்து பரிசுச் சீட்டு காலாவதியாவதற்குமுன் மென்மையாக உள்ள பூட்ஸ் வாங்கும் நோக்கத்துடன் தன் காரை ஓட்டிச் சென்றார்.

இதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. அப்படித்தானே? இர்விங்கும் அப்படித் தான் நினைத்தார். கடந்த சில காலத்திற்கு முன்பு தான் அவர் அப்பகுதிக்கு சென்றிருந்தார். எந்த பாதையில் வெளியே போகும்வழி இருக்கிறது என்று தெரியவில்லை. 47,48,49 என்ற எண்கள் கொண்ட வெளியே போகும் வழிகள் ஒன்றோடொன்று நெருக்கமாக இருந்தன. ஒவ்வொரு வழியிலும் உள்ள சரிவு வழியாக மாறி மாறி சென்று ஒன்றிலும் அந்த கடையை அவர் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் மிகவும் சோர்வடைந்து போனார். இவ்வாறு தான் சோர்வடைந்தால் அந்த வழியே காரோட்டி வந்தவர்களும் சோர்ந்திருப்பார்கள் என்று அவர் நிச்சயமாக நம்பினார். இவ்வாறு அவர் மறுபடியும் வெளிவரும் பாதைக்கு வரும்பொழுது திடீரென "ஐ ஹெச் ஓ பி" க்குப் போ என்ற சத்தம் கேட்டதை உணர்ந்தார்.

இர்விங் கிங் ஓர் சுவிசேஷகர் ஆனதால் இப்படிப்பட்ட தேவன் பேசும் சத்தத்திற்கு அவர் பழக்கப்பட்டவராக இருக்கக்கூடும் என்று நாம் நினைக்க லாம். ஆனால் ஐ ஹெச் ஓ பி இல் பூட்ஸ் விற்காது என்று கிங் நன்கு அறிந்திருந்ததால் இப்பொழுது தான் கேட்டது, குறிப்பிட்ட செய்தி தேவனிடம் இருந்து வந்திருக்காது என்று நினைத்தார். இந்த ஐ ஹெச் ஓ பி பன்னாட்டு உணவகம் என்று பொருள்படும். இது தவிர வேறு எதாவது நிறுவனமாக இருக்குமோ எனவும் சந்தேகித்தார். அப்படி ஓர் நிறுவனமாக இருந்தால் அது எதுவாக இருக்கும் என்றும் அவருக்குத் தெரியவில்லை.

அந்தப்பகுதியில் இருந்த ஒரே உணவு நிறவனமாக ஐ ஹெச் ஓ பி, மேற்கு ஸ்பிரிங்ஃபீல்ட், மாசாச்சூ செட்டில் தான் இருக்கிறது என்பது கிங்கிற்கு நன்கு தெரியும். எனவே பூட்ஸ் வாங்காமலேயே மேற்கு ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வடக்காக வெளியேறும் பாதை வழியாக பத்து மைல் தூரம் காரை ஓட்டி அந்த உணவகத்திற்கு வந்து சேர்ந்தார்.

அந்த உணவு விடுதியில் ஓர் அறையில் வயது முதிர்ந்த ஓர் பெண் மணிக்கும், வாலிபப்பெண்ணும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு எதிர்புறமாக உள்ள இருக்கையில் இர்விங் கிங் உட்கார்ந்தார். ஒரு வேளை அவர்கள் இருவரும் பாட்டியும், பேத்தியுமாக இருப்பார்கள் என்று எண்ணி னார். மிகவும் இக்கட்டான ஒரு பிரச்சனையில் மாட்டிக்கொண்டு மிகவும் வேதனையில் தவித்துக்கொண்டு இருப்பவள் போல் காணப்பட்டாள். அந்த பெண்மணியை ஏற்கனவே பார்த்ததுபோலவும் அவர் முகம் அறிமுகமான முகம் மாதிரியும் காணப்பட்டது.

இர்விங் அவளைப் பார்த்து நீங்கள் ஓர் கிறிஸ்தவரா என்று கேட்டார். அவரும் ஆம், நான் ஓர் கிறிஸ்தவள் என்று கூறினாள். இதற்கு முன் நாம் ஒருவரை ஒருவர் பார்த்திருக்கிறோமா என்று கேட்டதற்கு ஆம், நீங்கள் ஸ்பிரிங் ஃபீல்டில் பிரசங்கம் செய்த கூட்டத்திற்கு நான் வந்திருக்கிறேன் என்றும், கூட்டமுடிவில் தனக்காக அவர் ஜெபித்ததாகவும் கூறினாள். ஸ்பிரிங் ஃபீல்ட் தேவாலயத்தில் அவளுக்காக தான் ஜெபித்ததாக ஓர் அறைகுறையான ஞாபகம் வந்தது.

இப்பொழுது நீங்கள் மிகவும் கவலையுடன் காணப்படுகிறீர்கள். ஏதேனும் கஷ்டமா? ஏன் இவ்வாறு நிலைதடுமாறி இருக்கிறீர்கள் என்று கேட்டார்.

பின் அவள் தன் மகள் அதாவது தன் பேத்தியில் தாய் பெருங்குடல் புற்று நோயால் பாதிக்கப்பட்டு இருப்பதாகக் கூறினாள். நாற்பது பவுண்டு எடை குறைந்து மிகவும் பெலவீனமாகக் காணப்படுவதாகக் கூறி வருத்தப்பட்டாள்.

இர்விங் தனக்குள்ளே சிரித்துக்கொண்டு இதற்காகவே தேவன் இத்திட்டத்தை திட்டமிட்டு செயல்படுத்தியிருப்பாரோ என்று எண்ணினார். "ஓர் வேடிக்கையைப் பாருங்கள். நான் பூட்ஸ் வாங்குவதற்காக ஓர் இடத்தைத் தேடிச் சென்றேன். ஆனால் அந்த இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்கு பதிலாக தேவன் என்னை இந்த இடத்திற்கு நடத்தி வந்திருக்கிறார். நான் ஒருவர் சுகம் பெறுவதற்காக ஜெபிக்கும்பொழுது,

அவள் மீது எண்ணெய் பூசி அபிஷேகித்து ஜெபிப்பேன். ஆனால் நான் என் அன்றாட வேலைகளைக் கவனிக்கச் செல்லும்பொழுது என்னுடன் எண்ணெய்க் குப்பியை எடுத்துச் செல்வது இல்லை. ஆனால் இன்று அதைக் கொண்டு வந்திருந்தேன்" என்று அந்தப் பெண்ணிடம் கூறினார்.

அந்தப் பெண்ணும் அதைத்தான் விளங்கிக்கொண்டது போல் தலையை அசைத்தாள். "இது ஆச்சரியத்தான். நான் இருநாட்களுக்குமுன் என் மகளுக்காக ஜெபித்துக்கொண்டிருக்கும்பொழுது, என் மகளுக்கு எண்ணெய் பூசி ஜெபிக்கும் ஒருவரை நீ சந்திப்பாய் என்று கூறுவது போல் நான் உணர்ந்தேன்" என்றாள்.

அந்தப் பெண்ணைத் தொடர்ந்து சென்று என் காரில் அவள் வீட்டிற்குச் சென்றேன். உண்மையில் அவள் மகள் வலியினால் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். சுற்றிலும் நடமாடக்கூட அவளால் இயலவில்லை. முதலாவதாக தேவனோடு நமக்கு இருக்க வேண்டிய தனிப்பட்ட உறவைக் குறித்தும் அதன் அவசியத்தைக் குறித்தும் அவளுக்குச் சொன்னார். அதற்குப் பின் அவர் அவளுக்காக ஜெபித்தார். அவள் இயேசுவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டாள். அதற்குப்பின் அவளுடைய சுகத்திற்காக எண்ணைபூசி ஜெபித்தார். அவ்வாறு அவர் ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவரும் அவளுக்காக ஜெபிப்பதை என் ஆவியில் உணர்ந்தேன். அவள் அப்பொழுதே குணமானாள். பெருங்குடல் புற்று நோய்க்கான அறிகுறியை காணப்படவில்லை என்று கூறினாள். தான் சந்திக்கும் யாவரிடமும் தேவன் தனக்குக் கொடுத்த அற்புத சுகத்தைப்பற்றி கூறுகிறாள் என்று அந்தப் பெண்மணி கூறினாள்.

இர்விங் கிங்கைப் பொறுத்தவரையில் "ஐ ஹெச் ஓ பிக்கும் போ" என்று தேவன் சொன்னத் தன் வாழ்க்கையில் மறக்கவே முடியாது என்று கூறினார். ஆனால் ஷூ வாங்குவதற்கு அந்த விளையாட்டு சாதனங்கள் விற்கும் கடையை அவர் கண்டுபிடித்து வாங்கினாரோ இல்லையோ நமக்குத் தெரியாது.

14

சாலையின் வழிகாட்டும் வரை படம் கூட குழப்பமாக இருக்கும்பொழுது

உனக்குமுன் பார்க்கும் இடமெல்லாம் மதில்கள் போன்ற தடைகள் இருந்த பொழுது தேவன் எப்படி வாசல்களைத் திறந்தார்

உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன்முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதை களை செவ்வைப்படுத்துவார்" (நீதி.3:5,6).

"இன்று நீ எங்கே போக விரும்புகிறாய்".

ஓர் கம்யூட்டர் கம்பெனி தாங்கள் உற்பத்திசெய்யும் பொருட்களின் எல்லையற்ற திறனை விளக்கும் பொருட்டு அந்தக் கேள்வியை பயன் படுத்தியது. ஓர் சிறந்த கம்யூட்டர் சரியான இணைப்புகளைக் கொடுத்தால் அது நம்மை எங்கெல்லாமோ கொண்டு சென்றுவிடும்.

ஒவ்வொருநாள் காலையிலும் இதே கேள்வியை ஒரு சில மாற்றங்களுடன் நாம் தேவனுடன் பகிர்ந்து கொள்ளலாம். இன்று நான் எங்கே போக சித்தமாயிருக்கிறீர்? நான் உம் வசனத்தை எங்கே எடுத்துச் செல்லலாம்? நீர் என்னை எங்கே அழைத்துக்கொண்டு போகப்போகிறீர்? இயேசுவுடன் நம்முடைய வாழ்க்கை எண்ணற்ற தன்மையுடையது. காலைதோறும் கர்த்தருடைய கிருபை புதியனவாகக் காணப்படுகிறது. அடுத்து அவர் என்ன செய்யப்போகிறார் என்று நமக்குத் தெரியாது. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது "உட்கார்ந்து இருத்தலோ அல்லது, படுத்து ஓய்வெடுத்தாலோ அல்ல அது ஓர் கிறிஸ்துவுடன் நடக்கும் வாழ்க்கை" என்று வேதம் கூறுகிறது. நாம் முன்னேறிச் சென்று கொண்டே இருக்கவேண்டும். ஒவ்வொரு அடியாக

எடுத்து வைத்து நாம் இயேசுவுடன் நடக்கும்பொழுது, மிகப் பெரிய காரியங்கள் நிகழும், அவருடன் நடக்கும்பொழுது அவரோடு பேசுவோம், பின் அவர் நமக்குப் போதித்து, வழி காட்டுவார் இவ்வாறு அவரைப் போல் மாற மேலும், மேலும் வளர உதவி செய்வார்.

இவ்வத்தியாயத்தில் நீங்கள் வாசிக்கும் ஜெபத்திற்கு பதில் கிடைத்த நிகழ்ச்சிகளில், ஜெபிக்காததுபோல் காணப்படும். "தேவனே! இன்று எங்கே போகச் சித்தமாயிருக்கிறீர்" என்ற கேள்வியோடு அதை இணைந்து செல்வது போல் காணப்படும். இந்த ஜெபத்திற்கு அவர் நமக்குத் தேவையானவற்றைக் கொடுக்காமல் அவர் நாம் எங்கு செல்லச் சித்தமாக இருக்கிறாரோ அங்கு நம்மை வழி நடத்துவதைக் காணலாம். நம் வாழ்வு செழிப்புள்ளதாக மாறுகிறது.

அமைதி நேரம்

ஓ! தேவனே! என்னால் முடியாது
என்னால் முடியும் என்று நீர் ஒருபோதும் சொல்லவில்லை.
ஓ! தேவனே! உம்மால் முடியும்
என்னால் முடியும் என்று நீர் எப்பொழுதும் சொல்கிறீர்.

– யரோ

ஒரு சிறிய பெண்ணிற்குப் பெரிய கட்டளை

ஊழியக்காரியாக மாறுவேன் என்று அவள் ஒருபோதும் நினைத்துப் பார்ப்பதற்குக் கூட சந்தர்ப்பம் இல்லை. ஐந்து அடி உயரமே உள்ள கிளாடிஸ் ஏய்ல்வார்ட் கடையில் வேலைசெய்யும் பணிப்பெண், குழந்தையைப் பரா மரிப்பவள், ஓர் சமையல்காரி, தபால்காரரின் மகளான அவள் இங்கிலாந்தில் லண்டன் பட்டணத்திற்கு அருகாமையில் வளர்ந்தாள். அவளாய் அடிப்படைக் கல்வியையே கற்க முடிந்தது. அந்நிய நாட்டு மொழிகளைக் கற்றுக்கொண்டு ஓர் வெளி நாட்டு ஊழியக்காரியாகும் அளவிற்கு அவள் தகுதி பெற்றவள் அல்ல. உலகின் பாதி தூரத்தைக் கடந்த செல்லும் அளவு தூரத்தில் உள்ள சீனாவுக்கு செல்லக்கூடிய ஓர் ஊழியக்காரிக்குறிய தகுதி சிறிதேனும் நிச்சயமாக அவளிடம் இல்லை.

ஒரு நாள் அவள் பேருந்தில் பயணித்துக்கொண்டு இருக்கும்பொழுது சீனாவைப் பற்றியும், அங்கு ஊழியக்காரர்களின் தேவைப்பற்றியதான ஓர் கதையை வாசித்துக்கொண்டு சென்றாள். இயேசு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராகத் தன் பதினெட்டாவது வயதில் ஏற்றுக்கொண்டவள். இப் பொழுது பத்து ஆண்டுகள் கடந்துவிட்டது. சீனாவுக்குச் சென்று ஊழியத்தில் பங்குகொள்ள தேவன் அழைப்பதை உணர்ந்தாள். சீனாவின் உள்நாட்டு பணித்தளத்திற்கு மனுச் செய்தாள். கல்வித்தகுதி இல்லை என்ற தன் அடிப்படையில் அவள் மனு நிராகரிக்கப்பட்டது.

மனமுடைந்தவளாய் அவள் தான் பணிபுரியும் பணிபெண் அறைக்குச் சென்று தன் வேதபுத்தகத்தின் மீது தான் காசு வைத்திருக்கும் சிறுபையைத் திறந்து கொட்டினாள். இரண்டு பென்னிகள் அதிலிருந்து விழுந்தது" ஓ! தேவனே, இதோ என் வேதாகமம், இதோ என் பணம், இதோ நான்" என்று ஜெபித்தாள்.

அது ஒரு விநோதமான ஜெபமாக இருந்தாலும், அது ஓர் சவால் நிறைந்த தாகக் காணப்பட்டது. அது தேவனின் வல்லமையின்மீது உள்ள விசு வாசத்தைக் காண்பித்தது. அது அவளுக்கு ஒரு முடியாத காரியமாகக் காணப்பட்டாலும் எப்படியும் தேவன் தான் சீனாவுக்குச் செல்ல வழிநடத்து வார் என்ற அசையாத நம்பிக்கை உடையவளாகக் காணப்பட்டாள்.

வட சீனாவில் தனித்து செயல்படும் ஓர் சிறிய பணித்தளத்திற்கு ஊழியக் காரர்கள் தேவை என்று கேள்விப்பட்டாள். அங்கு எப்படியும் ஊழியக்காரி

யாகச் செல்லவேண்டும் என்று தீர்மானித்தாள். ஆனால் அது எப்படி என்று தான் தெரியவில்லை.

தன்னால் முடிந்த அளவிற்கு ஒவ்வொரு பென்னியையும் சேமித்தாள். கப்பலில் பயணம் செய்ய பணம் அதிகம் செலவாகும். எனவே தரை மார்க்கமாக டிரான்ஸ் சைபீரிய ரயில் தடம் மூலம் ஐரோப்பா, ஆசிய கண்டங்களில் குறுக்காகக் கடந்து போர் நடக்கும் பகுதியின் மஞ்சூரியாவின் எல்லையில் தான் சேரவேண்டிய இடத்திற்குக் கடந்து செல்ல திட்டமிட்டாள்.

தன் முப்பதாவது வயதில் கிளாடிஸ் ரயில் வார்ட் 1932ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் நாள் லண்டனில் உள்ள லிவர்பூல் வீதி ரயில் நிலையத்தை வந்தடைந்து தன் பயணத்தைத் தொடர்ந்தாள். அவள் சிநேகிதிகளின் சிறு கூட்டம் ஒன்று அவளை வழியனுப்பி வைத்தது. பயணம் நீண்டதாகவும், கடினமாகவும் இருந்தால் அவள் உயிரே போனது போலாயிற்று. ஒரு வழியாக தூரமான ஓர் இடத்திலுள்ள யெங்செங் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தாள். அங்குள்ள ஓர் வயதான ஊழியக்காரர் அவளை வரவேற்று, அவளை அங்கு வைத்து எப்படிப் பராமரிப்பது என்று அறியாது தவித்தார். அந்த ஊழியக்காரர் ஓர் ஆண்டில் மரித்துப்போனார். ஆனால் அதற்குமுன் அவர்கள் அங்கு கோவேறு கழுதைகளை ஒட்டுபவர்களுக்கு என்று ஓர் விடுதியை துவங்கினார்கள்.

கிளாடிஸ் தானாகவே சீனமொழியைக் கற்றுக்கொள்ள வேண்டியது இருந்தது. எனவே அந்த சீன கோவேறு கழுதைகளை ஒட்டுபவர்கள் பேசிக் கொள்வதைக் கவனமாகக் கேட்டு சீன மொழியைக் கற்றுக்கொள்ள ஆரம் பித்தாள். பின் அந்தக் கோவேறு கழுதை ஒட்டுபவர்கள் அவள் பேசுவதைக் கேட்க ஆரம்பித்தார்கள். அவள் அவர்களுக்கு வேதாகமக் கதைகளைச் சொன்னாள். அவளது கதை சொல்லும் திறமையினால் அவள் இருந்த விடுதி “ஆறாவது சந்தோஷ விடுதி” பிரபலமடைய ஆரம்பித்தது. தனக்குத் தேவை யான பணத்தைச் சம்பாதிக்க, உள்ளூர் அதிகாரி ஒருவரிடம் பாதங்களை ஆய்வு செய்பவராகப் பணிபுரிந்தார். பண்டைய கால சீனப் பழக்கத்தின்படி பெண் பிள்ளைகளின் பாதங்களை இறுக்கக்கட்டும் பழக்கங்களுக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார். இந்தப் பிரச்சாரத்தில் அவளும் ஈடுபட்டு அவளுக்கு உதவி செய்தது அவளுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

1940ஆம் ஆண்டில் ஜப்பானியப் படை ஷாங்கையை படையெடுத்துத் தாக்கியபொழுது 100 குழந்தைகளை நீண்ட பயணம் செய்து, பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்று அவர்களைக் காப்பாற்றினாள். இந்தத் தீரச்

செயலை நாடக வடிவில் புகழ்பெற்ற சினிமாப் படமான "ஆறாவது சந்தோஷ விடுதி" யில் கதையாக விவரிக்கப்பட்டது.

அவள் வியாதியினால் பாதிக்கப்பட்டபொழுது, கட்டாயமாக லண்டனுக்குத் திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அங்கு அவள் மேட்டுக்குடியினரான பிரபுக்களோடும், எலிசபெத் மகாராணியுடனும், விருந்துண்டாள். லண்டனில் உள்ள மிகப்பெரிய ஆலயங்களிலும் அவள் செய்தி கொடுத்தாள்.

கிளாடிஸ் ஏய்ல்வார்ட் தன்னுடைய குறைகளை நன்கு அறிந்திருந்தாள். "நான் சீனாவில் செய்த ஊழியத்தின் அடிப்படையில் நான் தேவனால் முதல் தரமானவளாகத் தெரிந்தெடுக்கப்பட்டவள் அல்ல" என்று கருதினாள். தேவனின் முதல் தரமான தெரிந்தெடுப்பு வேறு யாரோ ஒருவர்... அது யார் என்று எனக்குத் தெரியாது. ஒருவேளை அந்த முதல் தரமானவர் மரித்தும் இருக்கலாம். ஒருவேளை அவர் விருப்பப்படாமலும் இருக்கலாம். தேவன் கீழே நோக்கிப் பார்த்தார்... கிளாடிஸ் ஏய்ல்வார்டைக் கண்டார்."

இவ்வாறுதான் அவள் தன்னைப்பற்றி எண்ணினாள். ஆனால் கிளாடிஸ் ஏய்ல்வார்ட் தான் தேவனின் முதல் தரமான தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று பெரும்பாலான மக்கள் கருதினார்கள்.

பெற்றி கிரீனும் அவள் பறக்கும் இயந்திரமும்

இயேசுவுக்காக பறப்பதா? இது ஒரு விநோதமான எண்ணம். இந்த எண்ணத்தை எப்படி செயல்படுத்துவது என்று பெற்றிக்கு விளங்கவில்லை. இளம் பிராயத்தில் விமானங்கள் அவளை மிகவும் கவர்ந்தது. இந்த பேராவலை எப்படி நிறைவேற்ற முடியும் என ஆச்சரியப்பட்டாள்.

தன் இருபதாவது வயதில் ஆண்டவருக்கு சிறந்தமுறையில் எப்படி எந்த வகையில் ஊழியம் செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தாள். "சுவிசேஷத்தை எடுத்துச்செல்ல விமானம் மூலம் பறந்து சென்று அறிவித்தார்கள் என்று நான் இதுவரை கேள்விப்படவில்லை. ஆனால் உமக்காக அப்படி நான் பறந்து சென்று சுவிசேஷத்தை அறிவிக்க நீர் விரும்பினால் அந்த வழியை எனக்கும் காட்டும்" என்று இறுதியாக ஜெபிக்க ஆரம்பித்தாள்.

இப்படி ஜெபிப்பதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்தான் முதல் முறையாக

விமானத்தில் பயணம் செய்திருக்கிறாள். அவளது பதினாராவது வயதில் அவள் பிறந்தநாள் பரிசாக இந்த பயணம் கொடுக்கப்பட்டது. பிறந்தநாள் பரிசாக அவள் மாமா அவளுக்கு நூறு டாலர்கள் கொடுத்தபொழுது அதை விமானம் ஓட்டப் பழகுவதற்காக செலவளித்தாள். வெகுவிரைவில் அவள் தனிமையாக விமானத்தை ஓட்டினாள்.

கல்லூரிப் பட்டப்படிப்பை அவள் முடிக்கும் தருவாயில் விமானத்தில் பறப்பதைவிட எந்த ஒரு தொழிலிலும் அவளுக்கு ஈடுபாடு இல்லை. ஆனால் அந்த எண்ணத்தை வைத்துக்கொண்டு அவள் என்னசெய்ய இயலும்? தன் நெருங்கிய சிநேகிதியிடம் தன் மனபாரத்தை இரகசியமாகக் கூறினாள். "தேவன் தன் எண்ணத்தை உன் உள்ளத்தில் விதைத்திருக்கிறார். அதை நாம் செயல்படுத்த விரும்புகிறார்" என்று அவள் கூறினாள்.

எனவே பெற்றி தன் பிரச்சனைகள் அனைத்தையும் ஆண்டவரிடம் ஊற்றி னாள். இந்த இவருடைய எண்ணம் விநோதமானது என்று நன்கு அவள் அறிந்திருந்தாள். ஆண்டவருக்காக நீ எப்படி பறக்கமுடியும்? அப்படியே அது முடிந்தாலும், அது ஆண்கள் செய்யக்கூடிய பணியே தவிர பெண்களுக்கு அது உகந்ததாகாது.

2ம் உலகப்போர் துவங்கியபொழுது இராணுவ்ம் ஓர் சிறு பெண் விமான ஓட்டுனர் குழுவை ஏற்படுத்தியது. ஆண் விமான ஓட்டுனர்கள். போர் காரியங்களில் ஈடுபட வேண்டியது இருந்ததால் அவர்களை விடுவித்து, விமானத்தை ஓர் இடத்திற்கு போவதும், வருவதுமான பணி இப்பெண் விமான ஓட்டுனருக்குக் கொடுக்கப்பட்டது, வெகுவிரைவில் பெற்றி 'வாஸ்ப்' என்னும் (பெண் விமானப்படை விமான ஓட்டிகள்) குழுவில் உறுப்பினரா னாள். 'வாஸ்ப்' உறுப்பினர் என்ற முறையில் அவள் பல ரக இராணுவ விமானங்களை ஓட்டினாள். முன்னேற்றப் பணிக்கு பயன்படும் நான்கு இயந்திரங்கள் கொண்ட **B-17** பறக்கும் கோட்டை என்ற உயர்ரக விமானத்தையும் ஓட்டிச்சென்றாள்.

'வாஸ்ப்ஸ்' என்ற இந்த குழு கலைக்கப்பட்டபொழுது, சில கிறிஸ்தவர்கள் சேர்ந்து ஓர் புதிய நிறுவனத்தை நிறுவ நினைப்பதாகக் கேள்விப்பட்டாள். அந்த நிறுவனத்திற்கு பணியாட்களோ, பண முதலீடோ இல்லை. ஆனால் பெயர் மாத்திரம் "கிறிஸ்தவ விமானிகளின் ஐக்கிய நிறுவனம்" என்ற பெயரிட்டு இருந்தது. பின்னர் அது "விமானம் ஓட்டுனர்களின் சேவை நிறுவன ஐக்கியம்" என்று அழைக்கப்பட்டது. (ஆண் விமான ஓட்டிகள் இன்னும் 2வது

திற்குச் சென்றார்கள். ரோமிலிருந்து ஏத்தென்ஸ் வழியாக வரும் விமானம் இன்னும் ரோமை விட்டே புறப்படவில்லை என்ற கேள்விப்பட்டார்கள். இச்செய்தி அவர்களை மிகவும் சோர்வடையச் செய்தது. மதிய வேளையாகியும் ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. கெய்ரோவிற்குச் சென்று 'விசா' வாங்குவதற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு செல்ல இயலாது என்று அறிந்துகொண்டார். இவ்வளவு தூரம் வந்துவிட்டு பின் திரும்பிச் செல்ல வேண்டும் என்பது அவர்களை மிகவும் ஏமாற்றத்திற்குள்ளாக்கியது. அதே வேளையில் அந்த விமானத்தைப் பிடிக்க, இன்னும் ஓர் வாரம் காத்திருக்கவும் அவர்களால் முடியாத சூழ்நிலை எத்தியோப்பிய அரசரிடம் இருந்து வந்த அந்த அழைப்பைத் தவறுதலாக நாம் ஏற்றுக்கொண்டோமோ என்று கூட சிந்திக்க ஆரம்பித்தார். இந்தக் காரியம் தேவனின் சித்தத்திற்கு விரோதமாக இருப்பதால் தேவன் இதைத் தடை செய்கிறாரோ என்றும் எண்ணினார்கள். "உள்ளத்தின் ஆழத்தில் அமைதியான, தெளிவான ஓர் எண்ணம் தோன்றியது: அது என்னவென்றால் நீங்கள் எவ்வளவு தூரம் போக முடியுமோ அவ்வளவு தூரம் போங்கள்" என்று கூறியது போல் இருந்தது என்று எட்மான் கூறினார்.

இது அவர்கள் சரியான பாதையில் தான் செல்லுகிறார்கள் என்பதை உறுதி செய்தது. எனவே பிரயாணத்தின் அடுத்த அடி எடுத்து வைக்க தேவனின் மீது தங்கள் நம்பிக்கையை வைத்திருந்தார்கள். "தேவனின் சித்தத்தின்படி தான் தாங்கள் நடக்கிறோம் என்பதை இவ்வாறு உறுதி செய்து கொண்டார்கள்."

அவர்கள் இவ்வாறு ஜெபித்து முடித்தவுடன், விமானம் சிறிது நேரத்தில் ரோமில் இருந்து வந்து சேரும் என்றும், உடனே அது கெய்ரோவுக்குப் புறப்பட்டுச் செல்லும் என்றும் அறிவிக்கப்பட்டது. கெய்ரோ செல்லும் விமானத்தில் ஏறிய பின்னும் ஏத்தியோப்பியாவில் தாங்கள் நிறைவேற்ற வேண்டிய பணிக்குத் தக்க சமயத்தில் போய் சேர முடியுமா என்ற சந்தேகம் இருந்தது. அவர்கள் பயணம் செய்த மிகப் பெரிய விமானமாகிய டிரான்ஸ் வொர்ல்ட் ஏர்லைன்ஸ் நேராக அங்கு நின்றிருந்த சிங்க சின்னம் பொறிக்கப்பட்டிருந்த ஓர் சிறிய விமானத்தின் அருகில் தரை இரங்கியது. சிங்கச் சின்னம் எத்தியோப்பிய நாட்டின் சின்னம்.

அந்த சிறிய எத்தியோப்பிய விமானத்தைப் பார்க்க மகிழ்ச்சியாயிருந்தது. ஆனால் அவர்களிடம் இன்னும் அந்நாட்டிற்குள் செல்வதற்கான 'விசா' கிடைக்கவில்லை.

தங்களுடைய பாஸ்போர்ட் முத்திரையிடப்பட வரிசையில் நிற்கும்பொழுது "டிரான்ஸ் வொர்ல்ட் ஏர் லைன்ஸ்" விமானத்தின் பிரதிநிதி ஒருவர் அவர்களின் பிரயாணத் திட்டத்தைப் பற்றி கேட்டார். அவரிடம் தங்களின் நிலைமையைக் குறித்து கூறியபொழுது, அவர் தானே முன் வந்து, அவர்கள் பிரயாணத்திற்காக கொண்டுவந்த பைகள், பெட்டிகளை எத்தியோப்பிய விமானத்திற்கு மாற்றி வைத்து, அவர்களையும் அடுத்த நாள் காலை 4 மணிக்குப் புறப்படும் அந்த விமானத்தில் அனுப்பி வைப்பதாகும் கூறினார். "உங்களுக்கு 'விசா' தேவை இல்லை என்று அவர் கூறினார் இதுதான் நடந்தது."

"எங்களால் போக முடியுமட்டும் போனோம் அதன்பின் எஞ்சிய பிரயாணத்தைக் கடக்க தேவன் வழிகளைத் திறந்தார் என்று எட்மான் கூறினார்."

திருவாளர் சிருஷ்டி கர்த்தாவே! நிலக்கடலையை சிருஷ்டித்தது யார்?

புல் பசுமையாகக் காணப்படுவது ஏன்?

ஏன் விட்டில் பூச்சி தாவித் தாவி செல்கிறது.

இளம் ஜார்ஜ் வாஷிங்ட்டன் கார்வர் மனதில் இதே போன்று பல கேள்விகள் மனதில் எழுந்து கொண்டு இருந்தன. ஒரு முறை அந்தப் பகுதியில் மிகச் சிறந்த திராட்சைத் தோட்டத்தை வைத்திருந்த ஒருவரின் தோட்டத்திற்கு பத்து வயது சிறுவனாகிய ஜார்ஜ் தன் வளர்ப்புப் பெற்றோருடன் சென்றிருந்த பொழுது "இந்த திராட்சைப் பழங்கள் ஏன் கரும் ஊதா நிறத்தில் இருக்கிறது?" என்று கேட்டான்.

திரு, சிருஷ்டி கர்த்தாவே! நிலக்கடலையை உண்டாக்கியது யார்?

வளர்ப்புப் தகப்பன் "எனக்குத் தெரியாது யாருக்கும் தெரியாது" என்று அந்த சிறுவன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

"ஆம் அவருக்குத் தெரியும்" என்று பதில் வந்தது.

அப்படியானால் நான் ஆண்டவரிடம் கேட்கிறேன் என்று கூறி அந்த அறையை விட்டு வெளியேறினான்.

அந்த சிறுவனின் இப்படிப்பட்ட மனப்பாங்கு அவனுடைய வளர்ப்புத் தகப்பனுக்கு கவலையைக் கொடுத்தது. தன் மனைவியிடம் "அவன் இப்படி பேசக்கூடாது. இந்த வீட்டைச் சுற்றி எங்கோ இறைவனைச் சந்திக்கப் போவது போல பேசுகிறானே" என்று கோபமாகச் சொன்னார்.

"ஒருவேளை அவன் சந்திக்கலாம்" என்று அந்த விவசாயின் மனைவி மிக அமைதலாகச் சொன்னாள்.

இப்படி தொடர்ந்து பல கேள்விகளைச் கேட்டு, இறைவனிடம் உறவாடிய அந்தச் சிறுவன் பிற்காலத்தில் உலகப்புகழ்பெற்ற தாவரவியல் வல்லுனராக மாறினான். நிலக்கடலை பற்றியும், சீனிக்கிழங்கு பற்றியும் ஆராய்வதில் புகழ்பெற்றவரானார். அவற்றிலிருந்து நானூறுக்கும் மேற்பட்ட கூட்டுப் பொருட்களான சாயம், போப் பால்கட்டி, பாலுக்குப் பதிலாக பயன்படுத்தக் கூடிய பால் போன்ற பொருட்களையும் தயாரித்தார்.

இருபதாம் நூற்றாண்டின் துவக்க காலத்தல் தென் மாநிலங்களில் நிலக் கடலை முக்கியமான பயிராக அல்ல இரண்டாம் தர பயிராகவே காணப் பட்டது. ஆனால் 1923ம் ஆண்டுகளில் ஜார்ஜ் வாஷிங்டன் கார்வரின் கண்டு பிடிப்புகள் வெளியிடப்பட்டபின் ஆண்டுதோறும் ஐம்பத்து மூன்று மில்லியன் புஷல்கள் விளைவிக்கப்பட்டது.

ஒரு முறை இந்த ஆப்பிரிக்க அமெரிக்க விஞ்ஞானிகள் கருத்தரங்கில் தேவனோடு தான் உறவாடிய பொழுது கிடைக்கப்பெற்ற வெளிப்பாட்டினால் இவ்வாறு நிலக்கடலையைப் பற்றி ஆராய்ச்சி செய்ய தான் துவங்கினேன் என்று விளக்கினார்.

"அன்பின் சிருஷ்டிகரே! இந்த அண்ட சராசரமும் எதனால் உருவாக்கப் பட்டது என்று எனக்குச் சொல்லும்" என்று கேட்டார்.

அப்பொழுது சிருஷ்டி கர்த்தா "உன்னுடைய சிறிய மூளை கிரகித்துக் கொள்ளமுடியாத பெரிய காரியங்களைக் கேட்கிறாய். உன் உருவத்தின அளவிற்கு சற்று அதிகமான காரியத்தை கேள் என்று கூறினார்.

அன்பின் சிருஷ்டி கர்த்தாவே! மனிதன் எதனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கி றான்" என்று மறுபடியும் கேட்டேன். மறுபடியும் சிருஷ்டி கர்த்தா "சிறுவனே! நீ இன்னும் உன் வயதிற்கு அதிகமான காரியத்தைக் கேட்கிறாய். உன் விண்ணப்பத்தை ஏற்றவாறு சுருக்கி உன் எண்ணத்தை விரிவாக்கு" என்று பதில் கூறினார்.

“நிலக்கடலை ஏன் உருவாக்கப்பட்டுள்ளது என்று தயவு செய்து சிருஷ்டி கர்த்தரே கூறுங்கள்”என்று நான் கேட்டேன்.

“பரவாயில்லை இது உனக்கு ஏற்ற கேள்விதான் ஆயினும் அதற்கான பதிலுக்கு முடிவே இல்லை” என்று சிருஷ்டிகர் கூறினார்.

“திரு சிருஷ்டி கர்த்தரே! நிலக்கடலையிலிருந்து நான் பாலை உற்பத்தி செய்யமுடியுமா?”

“உனக்கு எந்த வகையான பால் தேவை, ஜெர்சி இனமாடு கொடுக்கும் உயர்தரமான பாலா? அல்லது வீட்டில் வளர்க்கும் சாதாரண மாட்டுப் பாலா? எது வேண்டும்?”

பின் சிருஷ்டி கர்த்தா நிலக்கடலையை தனியாக எப்படி பிரிக்க வேண்டும் என்றும் அதை மறுபடியும் எவ்வாறு சேர்க்க வேண்டும் என்றும் எனக்குக் கற்றுக் கொடுத்தார்.

அமெரிக்காவின் முன்னணி வேளாண் விஞ்ஞானியான ஜார்ஜ் வாஷிங்டன் கார்வெர் தன் வெற்றிக்கான இரகசியத்தை எந்த ஒரு ஒழிவு மறைவுமின்றி வெளிப்படையாகப் பகிர்ந்து கொண்டார். “சர்வத்தையும் படைத்த சிருஷ்டி கர்த்தாவுக்கும் தனக்கும் இடையே உள்ள தனிப்பட்ட உறவே தன் மாபெரும் வெற்றி வாழ்க்கைக்கு அஸ்திபாரம்” என்று கூறினார். “தேவனோடு நடந்து கொண்டே அவருடன் பேசுங்கள், நீங்கள் நடக்கவேண்டி பாதைக்கு அவர் வழிகாட்ட விட்டுக்கொடுங்கள்” என்று மேலும் கூறினார்.

இவை எல்லாவற்றையும் விட்டு விலகவேண்டும்

கிறிஸ்டைன் உட் விலகி ஓடிக்கொண்டு இருந்தாள். வாழ்க்கை முழுவதும் பிரச்சனைகள் நிறைந்ததாகவும், கேள்விக்குறியாகவும் இருந்தது. அவள் வாழ்ந்து வந்த அந்த சிறிய இங்கிலாந்து நகரத்தில் அவள் கேள்விகளுக்கு பதில் பெற முடியவில்லை.

தேவன் மீது சிறிதேனும் அக்கரை கொண்டிருக்கிறாரா இல்லையா என்று நிச்சயமாக அவளால் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. ஜெபிக்கும் அளவுக்கு அவள் ஜெபித்துவிட்டாள். ஆனால் தேவன் தன் ஜெபத்தைக்

கேட்டாரா என்றும் தெரியவில்லை. ஒருவேளை அவளுடைய பிரச்சனைகள் அவரால் தீர்க்க முடியாதனவாக இருக்கலாமோ?

சுவிச்சர்லாந்தில் உள்ள ஜெனிவா ஏரியின் கரையை அடைந்து அங்கு சற்று ஓய்வு எடுக்க கிறிஸ்டைன் தீர்மானித்தாள். "அந்த ஏரிக்கு அருகாமையில் பல மணி நேரங்களை செலவிட்டேன்", அந்த அமைதலான சூழ்நிலையில் மூழ்கிக்குளித்தேன். ஏரியின் அடுத்த பக்கமுள்ள கரையில் உயர்ந்து நின்ற மலைகளின் மிடுக்கான வனப்பு மிக்கத் தோற்றத்தைக் கண்டு அவற்றால் புத்துணர்வு பெற்றேன்" என்று "தீர்மானம்" என்ற பத்திரிகையில் தான் அனுபவித்த இன்பத்தைபற்றி ஓர் கட்டுரையில் எழுதினாள். தேவன் தன்னை வெளிப்படுத்த அங்கேயும் காத்து நின்றார். வெகுவிரைவில் அந்த உலகத்தில் ஓர் நிம்மதியை அங்கு உணர்ந்தாள்.

புயல் உருவாகி, வானத்தில் மின்னல் வெட்டியபொழுது, தேவன் தன் வல்லமையை வெளிப்படுத்துவதாக உணர்ந்தாள். ஏரியின் மறுகோடியில் வானவில்லைப் பார்த்தபொழுது தேவன் தன்னை கண்காணிக்கிறார், என்ற வாக்குத்தத்தத்தை உறுதி செய்து கொண்டாள்.

பின் பிரச்சனைகள் நிறைந்த தன் வீட்டிற்குத் திரும்பினாள். பிரச்சனைகள் தீரவில்லை. ஒருவரோடு ஒருவர் இடைவிடாது சண்டை போட்டுக்கொண்டிருக்கும் தன் பெற்றோரோடு அவள் வாழ வேண்டியதாயிருந்தது. இப்பிரச்சனைகள் எல்லாவற்றிற்கும் தான் தான் காரணம் என்று தன் மீதே பழிபோட்டுக் கொண்டாள்.

தன் குடும்ப சூழ்நிலையில் இனி ஒரு நிமிடம் கூட வாழ முடியாது என்ற நிலைளில் வெளியே எங்காவது போக எண்ணினாலும் போவதற்கு இடம் ஒன்றும் கிடைக்கவில்லை. குறைந்த வருவாய், வீடு கிடைப்பதோ அரிதான ஒன்றாகவும், அதிக வாடகையை உடையதாகவும் இருந்தது. அவள் உடல் நிலை மோசமடைந்து கொண்டு வந்ததால் மருத்துவமனையில் ஓர் சிறப்பு மருத்துவரிடம் ஆலோசனைக்காகச் சென்றாள். அவர், அவள் வீட்டைவிட்டு வெளியேறாவிட்டால் அவள் உடலும், உள்ளமும் மிகவும் பாதிக்கப்படும் என்று கூறினார்.

"தயவு கூர்ந்து தேவனே நீர் எனக்கு கட்டாயம் உதவி செய்யவேண்டும்" என்று அன்று இரவு மிகுந்த வேதனையோடு ஜெபித்தாள். தான் ஜெனிவா ஏரியில் அனுபவித்த இன்பக் காட்சிகளைத் தன் நினைவிற்குக் கொண்டு

வந்தாள். மின்னலில் தனது வல்லமையையும், வானவில்லில் அவரது பாதுகாப்பையும் உணர்ந்ததை நினைவுகூர்ந்தாள். அவை அனைத்தும் தனக்கு எட்டாத கடந்த கால நிகழ்வுகள் என்று நினைத்தாள்.

எப்படி தேவன் அவள் தங்குவதற்கான விட்டைக் காட்டமுடியும்? தேவன் வானத்திலிருந்து பாராசூட் மூலமாக ஓர் வீட்டை தரையில் இறக்க முடியுமா? அந்த எண்ணமே ஓர் அர்த்தமற்றதாகக் காணப்பட்டது. முன்பை விட இப்பொழுது அதிகமாக அமைதியற்ற சூழ்நிலையை அடைந்தாள்.

அன்று இரவு அவள் தன் சிநேகிதி ஒருத்தியிடம் பேசினாள், "நீ வெளியேற வேண்டும் என்று நினைப்பதால், தேவன் உன்னை வேறு ஒரு வீட்டிற்கு வெளியேறிச் செல்ல அனுமதிக்க மாட்டார்... ஆனால் உண்மையிலேயே அது உனக்குத் தேவைப்படும்பொழுது உன்னை வெளியே கொண்டு வருவார்" என்று அவள் கூறினாள்.

"ஆனால் நான் இப்பொழுது போக வேண்டும், மருத்துவரும் அவ்வாறு தான் கூறினார்" என்று கிறிஸ்டைன் பதில் சொன்னாள்.

"ஒரு வேளை தேவன் உன்னை அவ்விடத்திலிருந்து வெளியே கொண்டு வரமாட்டார்" என்று அவள் சிநேகிதி கூறியதோடு, அவள் எதிரிடும் கஷ்டங்கள் அவளைப் பலப்படுத்தும் என்றும் ஆறுதல் கூறினாள்.

அவள் கூறிய அந்த ஆலோசனையை கிறிஸ்டின் செவி மடுக்க விரும்பவில்லை. மீண்டும் தன் நிலைவில் ஜெனீவா ஏரிக்கரையில் தான் அனுபவித்த இன்ப நினைவுகளுக்குச் சென்றார். அந்த ஏரிக்கரையில் அடித்த புயலைத் தாங்கிக்கொண்டாள். ஏனெனில் அதில் அவர் தேவனுடைய வல்லமையை உணர்ந்தாள். இப்பொழுது அவள் தனிப்பட்ட வாழ்க்கையில் அடிக்கும் புயலைத் தாங்கிக்கொண்டால், மறுபடியும் தேவன் தம் வல்லமையை அவளுக்கு வெளிப்படுத்துவார், என்று தனக்குள் சிந்தித்தாள்.

பலமாதங்களாக சரிவரத் தூங்காமல் இருந்தவள் அன்று இரவு சற்று அதிக நேரம் தூங்கினாள்.

சில நாட்கள் கழித்து தான் முன்பு பணிபுரிந்த அதிகாரியிடமிருந்து தொலை பேசி அழைப்பு வந்தது. "இன்னும் வீடு தேடுகிறாயா? என்னுடைய வீடு ஒன்று எதிர்பாராத வகையில் காலியாகி இருக்கிறது" என்று அவர் கூறினார்.

உடனே அதைப் பார்ப்பதற்கு வேகமாகப் புறப்பட்டுச் சென்றாள். பார்த்த

உடனேயே அது அவளுக்குப் பிடித்திருந்தது. "ஓர் குட்டிப் பரலோகமே எனக்காக பூமிக்கு வந்து விட்டதாக உணர்ந்தேன்" என்று கூறினாள்.

"ஆம் தேவன் என்னை நேசித்தார், ஆம்! தேவன் என் மீது கரிசனை கொண்டுள்ளார், புயல் வீசியபொழுது என் கூட இருந்தார். நான் இன்றும் அதிகம் வேண்டும் என்று கேட்காமல் நான் எவ்வளவு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை அவர் அறிவார்" என்று கூறினாள்.

"ரோஸியின் உயர்வு"

ரோஸ் ஹாத்தான் லாத்ரோப் தன் தந்தையைப்போலவே இலக்கிய உலகில் ஓர் புகழ்பெற்ற எழுத்தாளராக காணப்பட்டார். ரோசின் தந்தை நத்தானியேல் ஹாத்தான் 19ம் நூற்றாண்டின் புகழ் பெற்ற அமெரிக்க நாவலாசிரியராகத் திகழ்ந்தார். அவர் எழுதிய *"சிவப்புக்கடிதம்", "ஏழு முக்கோண சுவர்கள் கொண்ட வீடு"* என்ற கதைகள் அவருக்குப் புகழ் சேர்த்தன. இப்பொழுது அவரது மகள் ரோசும் இலக்கிய வட்டாரத்தில், அவள் எழுதிய கதைகள் *"அட்லாண்டிக் மாத இதழ்"* என்ற பத்திரிக்கையிலும் பிற தேசீய பத்திரிக்கையில் வெளி வந்ததாய் புகழேணியில் ஏற ஆரம்பித்தார். அவள் எழுதிய கவிதைத் தொகுப்பை, இலக்கிய விமர்சகர்கள் மிகவும் போற்றி வரவேற்றனர்.

ஆனால் அவள் வாழ்க்கையில் நடந்த பல காரியங்கள் வாழ்க்கையைக் கசப்பாக்கியது. அவள் கணவன் ஓர் குடிகாரன். அவர்களின் ஒரே குழந்தை ஐந்து வயதில் இறந்துவிட்டது. அவள் நெருங்கிய சிநேகிதி எம்மா லாசரஸ் புற்று நோயினால் மரித்துக்கொண்டு இருந்தாள். அவள் எழுதிய கவிதையின் வரிகள் சில "சுதந்திர சிலை"யின் கற்களில் பொறிக்கப்பட்டது.

"உங்கள் சோர்வை என்னிடம் தாருங்கள், உங்கள் வறுமையை என்னிடம் தாருங்கள், உங்கள் குழப்பங்களை என்னிடம் தாருங்கள்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது.

ரோஸ் இவ்வாறு கவலைப்பட்டு, மனம் நொந்தவளாய் இருந்தாலும், தன்னைவிட அதிகம் கஷ்டப்படும் மக்களைப்பற்றி வருத்தப்பட்டாள். அத்தருணத்தில் அவளுடைய போதகர் ஒருவர் கூறிய கதை அவளால் மறக்கவே முடியாது.

நல்ல பண்பாடு கொண்ட, எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடிய புற்று நோயால் பாதிக்கப்பட்டு தையல் தைக்கும் இளம் பெண் ஒருத்தியின் கதை அது. புற்றுநோய் என்பது ஓர் புதிரான சுகப்படுத்தமுடியாத, தொற்றக் கூடிய ஓர் நோயாக அக்காலத்தில் கருதப்பட்டது. எனவே அந்த தையல் தைக்கும் பெண் தன் அறையிலிருந்து வெளியேற்றப்பட்டாள். தான் ஆயுள் முழுவதும் சேமித்த பணத்தை நோய் குணமடைய செலவழித்தாள். அவள் ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தாள். பின் அவள் அங்கிருந்த நகர்புற மருத்துவமனைக்கு மாற்றப்பட்டாள். அங்கு அவள் சேமித்து வைத்திருந்த பணம் அனைத்தும் செலவிழித்துபோயிற்று, பின் அங்கிருந்து அவள் பிளாக் வெல் தீவில் உள்ள ஓர் ஏழைகள் இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டாள். அங்கு அவள் நண்பர்கள் ஒருவரும் இல்லாமல் தனித்து விடப்பட்டவளாய் கொலைகாரர்களோடும், விபச்சாரக்காரரோடும் வாழ்ந்தாள். மனவேதனை யுடன் அவள் மரித்தாள். அநாதைகளில் கல்லறையில் அவள் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இக்கதை ரோசின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது. “நான் அவர்களுக்கு உதவிசெய்ய எனக்கு உதவி செய்யும்,” என்று திரும்பத் திரும்பச் சொல்லி ஜெபிக்க ஆரம்பித்தாள்.

புற்று நோயால் பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகிறவர்களுக்கு அவளால் உதவி செய்ய முடியாது என்று கருதினாள். அவள் ஓர் மருத்துவரும் இல்லை, தாதியும் இல்லை; கையில் சிறிது பணம்தான் இருந்தது. எனவே அவள் ஜெபிக்கும் ஜெபமாகிய “அவர்களுக்கு உதவி செய்ய எனக்கு உதவி செய்யும்” என்ற ஜெபத்திற்கு தேவனால் பதில் கொடுக்க இயலாதததுபோல் காணப்பட்டது.

இப்படி அவள் ஜெபித்துக் கொண்டிருந்தபொழுது அவளுக்கு ஓர் எண்ணம் தோன்றியது.

நகரத்தில் மிகவும் வறுமையில் வாழும் மக்கள் வசிக்கும் பகுதியில் சில அறைகளை வாடகைக்கு எடுத்து, வீடு வாசல் இன்றி வறுமையில் வாடும் பெண்களுக்கு இலவச மருத்துவ உதவி செய்ய விரும்பினாள். அவளுக்கு செவிலியர் செய்யும் மருத்துவ உதவி செய்யவோ, புற்று நோயுக்கு கொடுக்கப்படும் சிகிச்சை பற்றியோ ஒன்றும் தெரியாது. எனவே ஓர் மருத்துவமனையில் தன்னார்வத் தொண்டராகச் சேர்ந்து தன்னால் கற்க

முடிந்ததைக் கற்றுக்கொள்ள முயற்சித்தாள். முதலில் புற்றுநோய் நோயாளிகள் படும் வேதனையை பார்த்து அவளால் சகிக்கமுடியவில்லை. ஆனால் வெகுவிரைவில் அவளிடம் வரும் புற்றுநோய் நோயாளிகளை கவனிக்க தைரியம் பெற்றாள்.

சேரிப் பகுதியில் ஓர் வீட்டை வாடகை எடுத்து, அதற்காகும் செலவை ஈடுசெய்ய மறுபடியும் ரோஸ் எழுத ஆரம்பித்தாள். "*கிறிஸ்துவின் ஏழைகள்*" என்ற நூலை பிரசுரித்தாள். அவளுடைய முதல் "புற்று நோய் மருத்துவ வீடு குதிரை லாயங்களுக்கு இடையே மூன்று அறைகளைக் கொண்ட வீடாக சேரிப்பகுதியில் அமைந்திருந்தது."

1900ல் அவளும் அவள் சிநேகிதியும் சேர்ந்து "சுகப்படுத்த இயலாத புற்று நோய் நோயாளிகளுக்கு ஆறுதல் அளிக்கும் தொண்டர்கள்" என்ற நிறுவனத்தை நிறுவினார்கள். இப்பணி வளர்ந்து, அதிக வசதிகளுடன் கூடிய பெரிய இடங்களுக்கு பலமுறை மாறியது. அவளால் பராமரிக்க முடியாத அளவுக்கு அதிகமான புற்றுநோயாளிகள் எப்பொழுதும் அவளிடம் வந்தார்கள். பெரிய விசாலமான இடத்திற்காக ஜெபித்தாள். நியூயார்க் நகரத்திற்கு சற்று வெளிப்புறமாக ஒன்பது ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள ஓர் பழைய உணவு விடுதி அவளுக்குக் கொடுக்கப்பட்டது. "தேவனே அவர்களுக்கு உதவி செய்ய எனக்கு உதவும்" என்று ஜெபித்த பெண் துவங்கிய பணி இன்று ஆறு மாநிலங்களில் ஏழு விடுதிகளில் சுகம்பெற முடியாத புற்றுநோயாளிகளுக்கு எவ்விதப் பாகுபாடுமின்றி எல்லா இனத்தவருக்கும், பிரிவினருக்கும் உதவிக்கரம் நீட்டி இயங்கி வருகிறது.

1926ம் ஆண்டு ரோஸ் மரித்தபொழுது அடக்க ஆராதனையில் ரோஸை நான் மிகைப்படுத்திக் கூறுகிறேன் என்று நினைக்கவேண்டாம். ரோஸ் அமெரிக்க இலக்கிய வரலாற்றில் ஓர் சிறந்த இடத்தைப் பெற்றிருக்க முடியும். ஆனால் அவள் அதை விடமேலான பங்கைத் தெரிந்து கொண்டாள். அவள் எண்ணம் ஆண்டவரை நோக்கி சிறகடித்துப் பறந்தது. அதை அவள் அவருக்குக் கொடுத்தாள். தன்னை அவளுடைய காரியத்திற்காக ஒப்புக் கொடுத்தாள். அதை அவர் ஏற்றுக்கொண்டார். அவள் தேவனைத் தன் முழு ஆத்துமாவோடும் மனதோடும் நேசித்தாள் என்று கூறினார்.

மலைகள் உயிரோட்டமுள்ளவை

இசை ஒலியினால் எப்பொழுது மலைகள் உயிரோட்டமுள்ளவைகளாக இருப்பதில்லை. 'இசை ஒலி' என்ற இசைக் குழு ஜெபத்திற்கு ஓர் பதிலாக தோன்றியிருக்காவிட்டால், உண்மையில் அக்குழு தோன்றியிருப்பதற்கே வாய்ப்பு இல்லை.

மரியா வான் டிராப் ஆஸ்திரேலியாவில் உள் பெனடிக்டைன் ஒழுங்கைச் சேர்ந்த கன்னி மாடத்தில் ஓர் இளம் கன்னியாஸ்திரியாக கற்றுக்கொண்டு இருக்கும்பொழுது, கன்னிமாடத்தலைவியிடம் "வாழ்க்கையின் மிக முக்கியமான காரியம் என்னவென்றால் தேவனுடைய சித்தத்தை அறிந்து அதன்படி நடப்பதே" என்றாள்.

அப்பொழுது கன்னிமாடத் தலைவலி "அதுவும் கடினமாக இருந்தால் என்னசெய்வது" என்று அவளிடம் கேட்டார்.

"ஆமாம், அது மிகவும் கடினமாக இருந்தாலும் தேவ சித்தப்படி தான் செய்ய வேண்டும்" என்று உடனடியாகப் பதில் கூறினாள்.

கடற்படைத் தலைவன் பாரன் ஜார்ஜ் வான் திராப்பின் ஏழு பிள்ளை களுக்கு ஆசிரியையாக மரியா தேர்ந்தெடுக்கப்பட்டாள். அந்த பாரனின் பிள்ளைகளுக்கு தேவனுடைய சித்தத்தை எவ்வாறு அறிந்துகொள்வது என்றும் அதை எவ்வாறு நிறைவேற்றுவது என்றும் கற்றுக்கொடுத்தாள். அவர்களுடைய வாழ்வில் தேவனுடைய சித்தம் செய்தல் அவர்கள் வாழ்வில் இயல்பான பண்பாகவே மாறிவிட்டது என்று மரியா கூறினாள். மரியா பிள்ளைகளை மிகவும் நேசித்தாள். பின்னர் பாரான் வான் திராப்பையும் காதலித்து, அவரைத் திருமணம் செய்து கொண்டாள்.

ஹிட்லர் ஆஸ்ட்ரியாவைத் தாக்கியபொழுது ஹிட்லரின் நாசிப் படைகளின் ஆக்ரமிப்பு தங்களைப் பாதிக்காது என்று வான் திராப் நம்பினார். சிறுவர்கள் பிற சிறுவர்களைப் பற்றி உளவு பார்க்க பணிக்கப்பட்டனர். படிக்கும் புத்தகங்கள் கண்காணிக்கப்பட்டன. இவ்வாறு நாசிகள் அதிகம் அதிகமாய் அவர்களின் வாழ்க்கையில் இடைப்பட ஆரம்பித்தார்கள். "தேவன் தங்களை எங்கு அழைத்துச் செல்ல சித்தமாயிருக்கிறார் என்பது தெரியவில்லை. ஆனால் ஆஸ்திரியாவில் தங்கமுடியாது என்பதை மாத்திரம் அறிந்திருந் தோம்" என்று மரியா கூறினார். எனவே நாங்கள் ஆஸ்திரியாவிலிருந்து

ஆல்ப்ஸ் மலையை காங்கல்பாதை வழியாகக் கடந்து இத்தாலியை வந்தடைந்தோம்.

இப்பொழுது அந்நிய தேசத்தில் குடும்பமாக எவ்வாறு உயிர் வாழ முடியும்? வான் திராப் ஆஸ்திரிய நாட்டின் ஓர் உயர் குடிமகன், கப்பற்படைத் தலைவனாக ஆண்டுகளைக் கழித்தபடியால் உழைத்து சம்பாதித்து தன் குடும்பத்தைக் காப்பாற்ற எவ்வித திறமையும் இல்லாதவராக இருந்தார்.

மரியாவும் பிள்ளைகளும் தேவனுடைய வழி நடத்துதலுக்காக ஜெபித்தார்கள். நமது குடும்ப பொழுதுபோக்கான பாடல் பாடுவது ஒன்றைத் தான் நாம் அனைவரும் இணைந்து செய்யமுடியும் என்று மரியா கூறினாள். மேடைகளுக்குச் சென்று தன் குடும்பம் பாட்டுப் பாடுவதை விரும்பவில்லை. ஆனால் அதுதான் தேவனுடைய சித்தம் என்று அனைவரும் அறிந்து கொண்டார்கள். அதைப் பரிசீலித்துப் பார்க்கவும் செய்தார்கள். துவக்கத்தில் சிறிய விருந்து சாலைகளில் தங்களுடைய நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். ஆனால் அந்த வருவாய் அவர்கள் சாப்பாட்டிற்கு போதாததாக இருந்தது. பின் அவர்கள் கச்சேரிகளை நடத்தினார்கள். பின் அவர்கள் ஃபிளாரன்ஸ், மிலான், ரோம் போன்ற நகரங்களில் இசை நாடகம் நடத்தும் நிகழ்ச்சிகளில் பாடல்கள் பாடினார்கள்.

"தங்களால் ஆன வேறு சில தொழில்களைச் செய்ய அவர்கள் பிரயாசப்பட்டாலும் தேவன் அவை எல்லாவற்றையும் அடைத்துப்போட்டார்" என்று மரியா கூறினார். தேவனுடைய சித்தம் இன்னதென்று அறிய முடியாத நிலையில் சாத்தியமாகக் காணப்படும் ஒவ்வொரு காரியத்தையும் ஒன்றைத் தவிர பிறவற்றை ஒவ்வொன்றாக நீக்கிவிட்டால், தேவன் தாம் செய்ய விரும்பும் சித்தம் மாத்திரம் மீந்திருக்கும் அது உணவிற்குப் போதுமானதாக இல்லாதிருந்தாலும் அதையே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மரியா கூறினாள். உங்களுக்கு பிடிக்காவிட்டாலும், பல்லைக் கடித்துக்கொண்டு பெருமூச்சு விட்டுக்கொண்டும் அதை செய்யுங்கள். நீங்கள் தேர்ந்தெடுத்த காரியம் உண்மையாகவே தேவனுடைய சித்தமாக இருப்பதால் அது சமாதானம், பாதுகாப்பு, சந்தோஷம் உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் சஞ்சலமும், தவிப்பும் ஒடிப்போம்.

வான் திராப் குடும்பம் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஐரோப்பா முழுவதும் கச்சேரிகள் நடத்தியே தங்கள் வாழ்க்கையை நடத்தி இறுதியாக

அமெரிக்காவிற்கு இடம் பெயர்த்து சென்றார்கள். புகழ்பெற்ற பாடகர் குழுவாக அது திழைந்தது. 'இசை ஒலி' 'சவுண்ட் ஆஃப் மியூசிக்' என்பது தொன்றுதொட்டு அனைவரும் விரும்பும் ஓர் பாடகர் குழுவாகவும், அவர் களின் வாழ்க்கையின் அடிப்படையாக அமைந்த திரைப்பட கதைவசன மாகவும் விளங்கியது. விடுமுறை நாட்களைக் கழிக்க வருபவர்களுக்கு தொடர்ந்து ஆண்டு முழுவதும் அவர்களை மகிழ்விக்கும் விதத்தில் 'ஸ்டோ,' 'வெர்மாண்ட்' ஆகிய இடங்களில் நிறுவிய வான் டிராப் குடும்ப வாசஸ்தலம் செயல்பட்டது.

ஒவ்வொரு நாள் காலையிலும் தொடர்ந்து தேவனுடைய வழி நடத்துதலுக் காக காத்திருந்து ஜெபிப்பதே இவ்வித ஆசீர்வாதங்களுக்குத் திறவுகோல் ஆகும் என்று மரியா கூறுகிறார். "ஓர் நாளில் நிகழும் காரியங்கள் எல்லா வற்றையும் அவர் பாதத்தில் வைத்து அவர் வழிநடத்துதலைக் கேட்கும் பொழுது அவருடைய சித்தம் செய்யத் தேவையான புதுபெலனைப் பெற்றுக் கொள்கிறேன்" என்று மரியா கூறுகிறார்.

[illegible]

[illegible]

[illegible]

— [illegible]

"ஜெபங்களுக்குப் பதிலைப் பெற்றுக்கொண்ட இம்மனிதர்கள் மிகப்பெரிய தத்துவங்களை எழுதவில்லை. நடைமுறையில் [illegible] பதில்களை தேவனிடமிருந்து [illegible] பெற்றுக்கொண்டதை எழுதியிருக்கிறார்கள். ஜெபத்தின் வல்லமையினால் தேவனைப் பெற்றிருக்கிறார்கள், சுகத்தைப் பெற்றிருக்கிறார்கள், நம்பிக்கையே அற்ற சூழ்நிலை மத்தியிலும் இயற்கைக்கும் அப்பாற்பட்ட வகையில் தேவனைப் பெற்றிருக்கிறார்கள்".

—[illegible], மிகச் சிறந்த நூலாசிரியர்

நம்முடைய தேவன் மகா பெரிய தேவனும் இராஜாவுமாயிருக்கிறார் என்பதற்கு "[illegible] ஜெபத்திற்கான வியத்தகு பதில்கள்" என்ற இந்நூல் நமக்கு வல்லமையான நினைப்பூட்டுதலாய் இருக்கிறது. மேலும் அவருடைய பிள்ளைகளாகிய நம்முடைய விண்ணப்பங்களுக்கு நாம் எதிர்பார்ப்பிற்கும் மேலாக, எந்தக் குறைவுமின்றி நம்மை வியக்க வைக்கும் வகையில் பதிலளிக்கிறார்.

—பில் பிரைட், கேம்பஸ் குருசேட் ஃபார் கிரைஸ்ட், தலைவர்.

Chennai, India